Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லட்சுமி சூடாமணி நாவல்கள்

[சமூகவியல் ஒப்பாய்வு அடிப்படையில் ஆராய்ச்சி]





டாக்டர்

சித்ரலேகா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri
D 6745

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லட்சுமி சூடாமணி நாவல்கள்

(சமூகவியல் ஒப்பாய்வு அடிப்படையில் ஆராய்ச்சி)
[டாக்டர் பட்ட ஆய்வேடு]

Forwarded free of cost and with the compliments of the dept. of education Govt. of India, New Delhi.

DONATION

டாக்டர் இர. சித்ரலேகா M.A., Ph.D.,
தலைவர், தமிழ்த்துறை
பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம் - 627 802

6745

पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय

நூல் கிடைக்குமிடம் :
முத்துப்பதிப்பகம்
மாதவி
ஆழ்வார் நகர்
நாகமலை, மதுரை - 625 019

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூல் வெளியீடு : ஆசிரியர்

© Dr. R. சித்ரலேகா M.A., PhD.

இந்நூல் தமிழ் வளர்ச்சிக்கழகத்தின் நிதி உதவியுடன் வெளியிடப்படுகிறது.

முதற்பதிப்பு, ஜூன் 1989

விலை ரு 45-00

அச்சிட்டோர் : பரணி அச்சகம்

78-ஏ, தானப்பமுதலி தெரு, மதுரை-1

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காணிக்கை

என் அறிவு வளர்ச்சிக்கு

உறுதுணையாக நின்ற

என் அன்புப்

பெற்றோர்க்கு . . . . .

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

முனைவர் முத்துச்சண்முகம்பிள்ளை,
முதன்மைப் பதிப்பாசிரியர்,
பெருஞ்சொல் அகராதித்துறை.
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் – 613 005

ஆய்வுத்தலைப்பினைத் தேர்ந்தெடுப்பது எளிது. எந்த இலக்கிய வகையும், இலக்கிய ஆசிரியர் படைப்புக்களும் ஆராய்ச்சிக்கு உரியனவே. மற்றொருவர் எடுத்துக்கொண்ட தலைப்பையே எடுத்துக்கொள்ளலாம். ஆனால், ஆராய்ச்சி அணுகுமுறையைப் புதிய கோணத்தில் உருவாக்கிச் செயற்படுத்துவது கடினம். தமிழில் இதுவரை வெளிவந்துள்ள ஒப்பியல் ஆய்வுகள் எல்லாம் பெரும்பாலும் ஒரே போக்கில் அமைந்துள்ளன. அணுகுமுறையில் வேறுபாடுகளைக் காண்பது அரிதாக இருக்கிறது. முனைவர் சித்ரலேகா எடுத்துக்கொண்ட லக்ஷ்மி, சூடாமணி இவர்களின் படைப்புக்களை இதுவரை எவரும் ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளவில்லை. இந்த இரண்டு பெண் எழுத்தாளர்கள் காட்டும் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களை ஒப்பிட்டுக்காண்பதே ஆய்வின் அடிப்படை நோக்கம். ஆனால், அதற்கு அவர் புதிய அணுகு முறையினை மேற்கொண்டிருக்கிறார். டாக்டர் பட்ட ஆய்வேடுகள் பட்டியல்களாகக் காட்சியளிக்கும் இந்நாளில், இலக்கியங்களைப் பலகோணங்களில், பலதுறைகளோடு ஒப்பிட்டுக் கோட்பாடுகளை உருவாக்க முயன்ற இவ்வாராய்ச்சி, என் மேற்பார்வையில் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்ட ஆய்வேடுகளில் முதல் தரமான ஒன்று எனக் கருதுகிறேன்.

பொதுவாகத் தமிழில் இக்கால இலக்கியங்கள் பற்றி வருகின்ற ஆய்வேடுகள் தரமாக அமையவில்லை என்று அமரர் கைலாசபதி அடிக்கடி என்னிடம் கூறுவார். ஆனால் இந்த ஆய்வேட்டை மதிப்பீடு செய்து பரிந்துரைத்த அவர், இதனை மிக மிகப் பாராட்டினார். ''ஒப்பிலக்கிய ஆராய்ச்சியில் தமிழில் இது ஒரு புதிய முயற்சி; புதிய அணுகுமுறை; தமிழகத்தில் மதுரை காமராசர் பல்கலைக்கழகந்தான் இவ்வாறு புதிய முயற்சிகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஈடுபட முடியும். இவ்வாய்வேடு விரைவில் அச்சாகி வெளிவர வேண்டும்'' என்று தனது பரிந்துரையில் கூறி இருந்தார். ஆனால் பத்தாண்டுகளுக்குப் பிறகு இப்பொழுதுதான் இது அச்சாகி வெளிவருகிறது. தமிழகத்தின் நிலை இதுதான்.

முதற்படியாக லக்ஷ்மி, சூடாமணி இவர்களுடைய நாவல்களில் கூறப்படும் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களை ஒப்பிடுகின்றார். இவர்களிடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகள், அவற்றிற்குரிய காரணங்கள் இவைகள் இங்கு விரிவாகக் கூறப்படுகின்றன. இதுவே பொதுவான பெருவாரியான இலக்கிய ஒப்பாய்வின் போக்கு.

இரண்டாவது, தொடர்புடைய மற்றொரு துறையோடு ஒப்பீடு-சமூகவியலார் கண்டு கூறிய பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களோடு ஒப்பிடுகின்றார். சமுதாய நாவல்களில் எழுதுகின்ற ஆசிரியனும் சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களையே அலசுகின்றான். சமூகவியலானும் சமுதாயச் சிக்கல்களையே ஆராய்கின்றான். இருவருடையநோக்கமும் ஒன்றுதான்-சமுதாயச்சிக்கல்களை ஆராய்தல். ஆனால், நாவலாசிரியனைச் சமூகவியலான் என்று கருதுவதில்லை. சமூகவியலானை, நாவலாசிரியன் என்று கருதுவதில்லை. ஏன்? இருவருக்கும் நோக்கம் ஒன்றுதான் என்றாலும், சிக்கல்களை விளக்குவதில், அணுகுமுறையில் வேறுபடுகின்றனர். நாவலாசிரியனுக்கு இருக்கும் சுதந்திரம் சமூகவியலானுக்குக் கிடையாது. சமூகவியலான் சமூகத்தில் பெரும்பான்மை மக்களைத் தாக்கும் பிரச்சினைகளையே ஆய்வுப்பொருளாக எடுத்துக்கொள்கிறான். நாவலாசிரியன் சமூகத்தில் சிறுபான்மையினரைப் பாதிக்கும் சிக்கல்களையே பெரும்பாலும் எடுத்துக் கொள்கிறான். நாவலாசிரியனுக்குக் கூர்மையான பார்வையும், உள்ளுணர்வும், கற்பனையுமே கருவிகள். சமூகவியலானுக்குத் திரட்டப்பட்ட தரவுகளே கருவிகள். அவைகளை விட்டு அவன் வெளியே செல்லமுடியாது. இதனால் இருவருடைய முடிவுகளும், காரணங்களும், தீர்வுகளும் வேறுபடுகின்றன. சில சிக்கல்களைப் பற்றிச் சமூகவியலார் கூறாத, கூற முடியாத நுட்பமான கருத்துக்களை நாவலாசிரியர்கள் கூறுகின்றனர். இருவரும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, ஒருவர் கூறுவதை மற்றவர் அறிந்து கொண்டால் சமூகவியல் ஆராய்ச்சியும் சமூக நாவல்களும் பயன் பெறமுடியும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மூன்றாவது நிலையில் கள ஆய்வு. நாவலாசிரியர்கள்பெண்களின் சிக்கல்களைப் பற்றிக்கூறும் கருத்துக்கள் நடைமுறையில் உண்மையா? உண்மையாயின் எவ்வளவு தூரம் உண்மை, பொருந்தாதாயின் ஏன், என்பனபோன்ற வினாக்களுக்குப் பெண்களிடமிருந்தே வினாப்பட்டி மூலம் (பின்னிணைப்பு 2) செய்திகளைத் திரட்டி அம்முடிவுகளை முன்புள்ளோர் கருத்துக்களோடு ஒப்பிட்டுக் காண்கிறார். ஆக இவ்வாய்வு பன்முனை ஒப்பாய்வாக மலருகிறது. இதனைக் கீழே உள்ள படம் காட்டும்.



ல - லக்ஷ்மி

சூ - சூடாமணி

ச - சமூகவியலர்

க - களஆய்வு

இத்தகைய ஒரு நான்முனைப் போக்கில் பெண்களின் சிக்கல்களைக் (1) காதல், (2) திருமணம் (3) கணவன்-மனைவி உறவு, (4) தாய்மனம் (5) மாமியார் மருமகள் உறவு (6) பெண்களும் குடும்ப உறவுகளும் (7) உழைக்கும் பெண்கள் (8) விதவையர் நிலை (9) விலைமகளிர் என்ற தலைப்புக்களில் ஆராய்கின்றார். இதைப்போன்று பல ஆய்வுகள் வருதல் வேண்டும்.

அம்மையார் முயற்சியைப் பாராட்டுகிறேன். அம்மையார் இத்தகைய அணுகுமுறைக்கு முன்னோடியாக விளங்குகிறார். அவர்களுக்கு எனது வாழ்த்துக்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அணிந்துரை

சோ. பாகீரதி, எம்.ஏ., எம்.லிட்.,
முதல்வர்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி
குற்றாலம்

தமிழ்மொழியில் எண்ணற்ற கோணங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவேண்டும். ஒரு காலத்தில் இலக்கியம், இலக்கணங்களில் மட்டுமே தன்னைச் சிறைப்படுத்திக் கொண்டு அக்குறுகிய வட்டத்திற்குள்ளேயே வளைய வளைய வந்து கொண்டிருந்த தமிழ் ஆய்வு, இன்று காலத்தின் கட்டாயத்தினால் விரிந்து அகன்று, கல்வெட்டுக்களிலும் மொழியியற் துறையிலும் ஒப்பிலக்கிய நோக்கிலும் நுழைந்து, அரிய பெரிய சாதனைகளை படைத்துக் கொண்டிருக்கிறது. தமிழ் ஆய்வுத் துறையில் ஏற்பட்டுள்ள இம்மாற்றம், செந்தமிழைச் செழுந்தமிழ் ஆக்குவதுடன் தமிழ் இனத்தின் சிந்தனையையும் வளமாக்கும் என்பதில் ஐயமில்லை.

பெண்ணினத்தினிடையே அவர்தம் பெருமை பற்றியும் உரிமை குறித்தும் ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை இவ்விருபதாம் நூற்றாண்டிற்கே உரியதாகும். பெண் விடுதலை முழக்கம் இன்று புவியெங்கும் ஒலிக்கக் காண்கின்றோம். சமுதாயத்தில் இன்றைய பெண்களின் நிலை பற்றியும், அச்சமுதாயம் தன் அறியாமையால் அவர்களுக்கு இழைத்து வரும் எண்ணற்ற கொடுமைகள் குறித்தும், நாளும் பலராலும் பலவிடங்களிலும் பேசப்பட்டும், எழுதப்பட்டும் வருகின்ற இன்றைய சூழ்நிலையில் 'லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்" என்ற பொருள் பற்றி ஆய்வு செய்து, மதுரைக் காமராஜர் பல்கலைக்கழகத்தினால் அவ்வாய்விற்கு முனைவர் (பி கைச்.டி) பட்டம் பெற்றுள்ளார் இந்நூல் ஆசிரியர் திருமதி. சித்ரலேகா அவர்கள். முனைவர் பட்டம் பெற உதவிய இவ்வாய்வினைத் தமிழ்ச் சமுதாயத்திற்கு நல்லதொரு விருந்தாகப் படைக்க எண்ணி, இன்று அதனை நூலாக வெளியிட முன்வந்துள்ளார்.

இந்நூல் ஆசிரியர் பேராசிரியர் திருமதி. சித்ரலேகா அவர்கள் தமிழ் மொழிப் பற்றும் தமிழ்ச் சமுதாயம் வாழ்வாங்கு வாழ வேண்டும் என்ற உணர்வும் ஒருங்கே பெற்றவர். இன்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வளர்ந்து வரும் சமூக இயற்கோட்பாடுகளைக் கொண்டு, இன்றைய இலக்கியங்களை எடையிட்டு, அவற்றின் ஏற்றத்தைத் திட்டமிட்டுக் கூறுகின்ற சிறந்த நூல்கள் நமதருமைத் தமிழ் மொழியில் வளரவில்லையே என்ற ஏக்கத்தை நீக்கும் வழியில், இந்நூலினைப் படைத்துள்ளார். ஒப்பிலக்கிய ஆய்வு பற்றிய கொள்கைகள் இன்னும் தெளிவாகவும் திட்டமாகவும் வரையறுக்கப்படாத நிலையில் இருக்கும் இக்காலக் கட்டத்தில், வாழ்ந்து கொண்டிருக்கின்ற இரு பெரும் பெண் நாவலாசிரியர்களின் நாவல்களை ஒப்பிட்டும், அவற்றை இன்றைய சமூக இயல்கோட்பாடுகளுடன் ஒப்பிட்டும் பல்வேறு கருத்துக்களை தம் ஆய்வின் வழித் தந்துள்ள டாக்டர். சித்ரலேகா அவர்களின் உழைப்பினையும் தெளிந்த உயர்ந்த சிந்தனைகளையும் போற்றுகின்றேன்.

பொழுதுபோக்கிற்காக வீடுகளில் பெண்களால் படிக்கப்பட்டு வந்த தமிழ் நாவல்கள், தம் நிலையில் உயர்ந்து, கல்லூரிகளிலும். பல்கலைக்கழகங்களிலும், நுழைந்து ''இன்றைய இலக்கியம்'' என்ற பாடப்பிரிவில் ஓர் இணையற்ற இடத்தை தமக்கு உரியதாக்கிக் கொண்டுள்ளன. தமிழ் முதுகலை மாணவியருக்குப் பல்லாண்டுகள் நாவல் இலக்கியம் கற்பித்த கனிந்த நல் அனுபவத்துடன் இவ்வாய்வினை மேற்கொண்டார் எங்கள் கல்லூரித் தமிழ் பேராசிரியர் திருமதி. டாக்டர். சித்ரலேகா. இருபெரும்பெண் படைப்பாளிகள் படைத்த நாவல்களில் சித்திரிக்கப்படுகின்ற பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களை தன்னுடைய ஆய்வு நோக்கில் அலசிப் பார்த்து பல்வேறு கருத்துக்களைப் படங்கள் வழியாகவும் அட்டவணைகள் உதவி கொண்டும் வெளியிட்டுள்ள இந்நூலாசிரியரின் திறமையைக் கண்டு பெரிதும் வியக்கின்றேன்.

இக்காலத்தில் ஆய்விற்கு இன்றியமையாத உத்தியாகக் கொள்ளப்படும் ''கள ஆய்வு'' உத்தியையும் ஏற்று வினாப்பட்டியல் வழித் தகவலாளிகள் மூலம் கிடைத்த கருத்துக்களையும் தொகுத்தும் வகுத்தும் அவற்றையும் நாவல் ஆசிரியர்களின் கருத்துக்களோடு ஒப்பிட்டு அறுதியிட்டு முடிவு காட்டும் இந்நூலாசிரியர் போன்றோர் பலர் இந்நாட்டிற்கு இன்றைக்குத் தேவை என்பதைக் கூறுவதில் பெருமைப்படுகின்றேன்.

நாவல்களில் காணப்படுகின்ற பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களை ஒன்பது பிரிவுகளில் அடக்கி ஆய்ந்துள்ள முறையும் அழகாகக் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூக நாவல் படைப்பாளிகளாகிய லெக்ஷ்மி, சூடாமணி ஆகியவர்களின் நாவல்களில் ''மாமியார் மருமகள்'' உறவில் ஏற்படும் சிக்கல்களுக்குக் கூறப்படும் காரணங்கள் அறிந்து போற்றுதற்குரியனவாகும். வாழ்க்கையை இன்பக்கேணியாக்குவதும் துன்பக்கடல் ஆக்குவதும் பெண்களிடந்தான் உள்ளது. எனவே சிக்கல்கள் தோன்றுவதற்குரிய அடிப்படைக் காரணங்களையும் உணர்ச்சிப் போராட்டங்களையும் பெண்கள் புரிந்து கொண்டு விடுவார்களேயானால், அப்போராட்டங்களை அவர்களால் தடுத்து நிறுத்த முடியும். சமூக நாவல்கள் படைப்பாளிகள், படிப்போர் உள்ளத்தில் ஆழப்பதியும் வண்ணம் தம் கருத்துக்களைக் கதைப்போக்கில் கூறும் திறன், சமூகவியலாரையும் மிஞ்சி நிற்கிறது என்பதைப் பலவிடங்களிலும் இந்நூலாசிரியர் புலப்படுத்திச் செல்கின்றார்.

'உழைக்கும் பெண்கள்' நிலை பற்றிய ஆய்வும் தரத்தில் உயர்ந்து காணப்படுகின்றது. விலைமகளிர் பற்றிய ஆய்வும் சிறப்பாக அமைந்துள்ளது. விலை மகளிர் என்ற சொல்லே இல்லாமல் தமிழ்ச் சமுதாயத்திலிருந்து அது விரட்டப்பட வேண்டும். இக்கருத்தினை வலியுறுத்தும் வகையில் நாவல்களும், ஆய்வுகளும் தமிழ் நாட்டில் விரைவில் தோன்றிட வேண்டும். அன்றுதான் தமிழ்ச் சமுதாயத்தின் பண்பாடும், உடல்நலமும் உளவளமும் சிறக்கும் நாளாகும்.

இவ்வாய்வு ஆசிரியர் டாக்டர். சித்ரலேகா அவர்கள் இறுதியில் குறிப்பிடுகின்ற கருத்தினை நான் இங்கு வலியுறுத்த விழைகின்றேன்.

''படைப்பாளிகள் சமூகவியலையும் கற்றுத் தம் படைப்புக்களை உருவாக்கினால் இவர் தம் படைப்புக்கள் யதார்த்தம் நிறைந்து விளங்கலாம். சமூக ஆவணங்களின் சிறப்பையும் அடையலாம்''.

''சமூகவியலாரும் சமூக நாவல்களைப் படித்துணர்ந்தால் அவர்கள் அணுகாத பல புதிய சிக்கல்களைப் படைப்பாளிகள் அணுகியுள்ளதை அறியலாம்". எனவே சமூக இயல் பல கோணங்களில் வளரவும், சமூக நாவல்கள் உண்மை நிலை உரைப்பனவாகத் திகழவும் இரண்டும் ஒன்றை ஒன்று தழுவி வாழ்ந்திடல் வேண்டும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வையத்தில் வளர்ந்து வரும் அறிவுலகத்திற்கு ஈடுகொடுக்க, தமிழ் நாவல்கள் யதார்த்த நிலை காட்டுவனவாகவும், தான்-தோன்றிய சமுதாயத்தின் உணர்ச்சியையும் உணர்வுகளையும் பிரதிபலிப்பனவாகவும் தோன்றிட வேண்டும்.

இவ்வாய்வு நூல், லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருபெண் நாவல் ஆசிரியர்களும் தமிழ் நாவல் உலகத்தில், சமூக இயல் கோட்பாடுகள் கொண்டு எடை போட்ட நேரத்தில் ஒப்பற்ற இடத்தைப் பெற்றுப் பொலிகின்றனர் என்ற உண்மையைத் தெள்ளென விளக்குகின்றது.

இவ்வாய்வு நூல், தமிழ் ஆராய்ச்சி உலகிற்கு ஏற்றமிகு ஒரு வழிகாட்டி. உலகின் பல்வேறு நாடுகளில் வளர்ந்துள்ள பல்வகைப்பட்ட கருத்துக்களையும் அள்ளிக் கொண்டு வந்து தமிழ-கத்தில் கொட்டிக் குவிக்க வேண்டும் என்ற கொள்கைக்கு உயிர் ஊட்டுகின்றார் பேராசிரியர் டாக்டர். சித்ரலேகா அவர்கள்.

குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் தமிழ்த் துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வரும் இவ்வாசிரியர் இதுபோன்ற இன்னும் பல நூற்களை வெளியிட முன் வர வேண்டும். தமிழ்ப்-பற்றும் தமிழ்ச் சமுதாயத்தில் பாசமும் உள்ள தமிழ் மக்கள் அத்தனைபேரும் கட்டாயம் வாங்கிப் படிக்க வேண்டிய ஒரு சிறந்த நூலினை, எங்கள் கல்லூரிப் பேராசிரியர் வெளியிடுகின்றார் என்பதைக் காணும் போது எல்லையற்ற மகிழ்ச்சியடைகின்றேன். டாக்டர். சித்ரலேகா அவர்களின் தமிழ்த் தொண்டு சிறக்க, அவர்தம் உழைப்பும் ஊக்கமும் நாளும் வளர வையமளந்த தமிழால் வாழ்த்துகின்றேன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நூலுக்கு ஓர் அறிமுகம்

1975-ஆம் ஆண்டு எமது கல்லூரிக்கு வருகை புரிந்த டாக்டர் மு. வ. அவர்களைச் சந்திக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ''மதுரைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டே பகுதி நேர ஆய்வு செய்ய அனுமதி வழங்கப்பட்டு விட்டதே! நீங்களும் ஆய்வினைத் தொடங்கலாமே'' என்ற அவரது சொற்கள் என்னுள் பொறி வீசிக் கொண்டிருந்த ஆய்வுத் தீயை விசிறி விட்டன. அவ்வாண்டே பல்கலைக்கழகம் சென்று பதிவு செய்தேன். எமது கல்லூரி தன்னாட்சி உரிமை பெற முயன்று கொண்டிருந்தமையால் பதிவு செய்ததோடு ஆய்வுப் பணியை நான் மறக்க வேண்டியதாயிற்று. 1977-இல் கல்லூரியும் தன்னாட்சி பெற்றது. பின்னர் புதிய விதிமுறைகளைப் பழக்கிக் கொள்ள ஓர் ஆண்டு .... ஆக அப்படியும் இப்படியுமாக என் ஆய்வுப் பணி 1978-ல் மீண்டும் மலரத் தொடங்கியது.

'தமிழ் நாவல்கள்' எனக்குப் பிடித்த துறை. எனவே பெண் நாவல் எழுத்தாளர்களின் படைப்புக்களையே ஆய்வு செய்யலாம் என முடிவெடுத்திருந்தேன். ஆனால் எடுத்த தலைப்பு காலம் மிக எடுக்கக் கூடியது. பெண் எழுத்தாளர்களில் இருவரின் படைப்புக்களை ஆய்வு செய்யலாம் என எண்ணி, லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரைத் தேர்ந்தெடுத்தேன். அகப் போராட்டங்களாகிய மனப்போராட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கும் ஆர். சூடாமணியும் புறப் போராட்டங்களாகிய குடும்பச் சிக்கல்களைத் தத்ரூபமாகக் காட்டும் லக்ஷ்மியும் என் மனம் கவர்ந்தனர். ஒப்பியல் ஆய்வு வளர்ந்து வரும் ஆய்வுலகில் தனி எழுத்தாளரின் படைப்புக்களை ஆய்வு செய்வதைவிட இரு எழுத்தாளர்களின் படைப்புக்களை ஒப்பு நோக்கி ஆய்வு செய்தால் என்ன என்ற எண்ணம் தோன்றியது. என் ஆய்வுத் தலைப்பு லக்ஷ்மி-சூடாமணி நாவல்களில் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்' என மாறியது. என் விருப்பத்தை ஏற்று எனக்கு வழிகாட்ட இசைந்தார் மதுரைப் பல்கலைக்கழகத் தமிழியல் துறைப் பேராசிரியர். டாக்டர். முத்துச் சண்முகம் பிள்ளை அவர்கள்.

ஆய்வு மலர் சிறிது சிறிதாக மலரத் தொடங்கியது. சமூக சிக்கல்களை அறிவதற்காகச் சமூகவியல் நூல்களைப் படிக்கும் பொழுது ''சமூக நாவல்களில் புலப்படும் சிக்கல்களைச் சமூகவிய-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லோடு ஒப்பிட்டுப் பார்த்தால் என்ன'' என்ற எண்ணம் எழுந்தது. புதிய சிந்தனைகள் தோன்றும் பொழுதெல்லாம் என்னை உற்சாகப் படுத்திய என் ஆய்வு மேலாளர் டாக்டர். முத்துச் சண்முகனார் இதனை வரவேற்றார். ஆய்விற்கு வலிமை சேர்க்க நடப்பியல் உண்மைகளைத் திரட்டும் பொழுது சிக்கல்களை நடப்பியலோடும் பொருத்திக் காணலாம் என்ற புதிய கருத்து எங்களிடம் தோன்றியது. ஆக, இவ்வாய்வு சமூக நாவல்களைச் சமூகவியலோடும் நடப்பியலோடும் ஒப்பிட்டுக் காணும் புதியதொரு ஆய்வாக, ஆய்வுலகின் புது முயற்சியாக மலர்ந்தது.

என் ஆய்வினை நெறிப்படுத்தி ஊக்கப்படுத்தி, பல புதிய கருத்துக்கள் வரவேண்டும் என்று முழு முயற்சியுடன் எனக்குப் பேராதரவு கொடுத்த என் ஆய்வு வழிகாட்டி டாக்டர். முத்துச் சண்முகம் அவர்கள் என்றென்றும் என் இதய நன்றிக்கு உரியவர்கள்.

ஆய்விற்கு வேண்டும் துணை நூல்களையும், குறிப்புக்களையும் தந்துதவியவர்களில் டாக்டர். சு. வேங்கடராமன், டாக்டர் தி. சு. நடராஜன், டாக்டர். தாராபாய், டாக்டர் சாந்தா, பேராசிரியர் பெ. நா. கமலா, உளவியல் துறை அறிஞர் டாக்டர் ராலின் சின்னையா ஆகியோருக்கு நான் என்றென்றும் கடப்பாடு உடையேன்.

பேட்டி அளித்தும் நாவல்கள் கொடுத்தும் உதவிய படைப்பாளிகள் 'லக்ஷ்மி', ஆர். சூடாமணி ஆகியோர் என் மனங் னிந்த நன்றிக்கு உரியவர்கள்.

1982-ஆம் ஆண்டில் இவ்வாய்வுரைக்காக மதுரைப்பல்கலைக்கழகம் எனக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியது. எனது ஆய்வு மேலாளரும் ஆய்வுத் தேர்வாளர்களும் உடனே ஆய்வேடு நூலாக வெளிவர வேண்டும் என்று என்னை உற்சாகப்படுத்தினர். ஏழு ஆண்டுகள் கடந்தன. ஆய்வேடு புத்தகமாக இன்று மலர்ந்துள்ளது.

அச்சுப் பணியைச் செவ்வனே நடத்தித் தர முன் வந்தனர் மதுரை பரணி அச்சகத்தார். படிகளைத் திருத்தும் பொறுப்பை மனமுவந்து தம்பி முத்துத் திருநாவுக்கரசுவும், டாக்டர். திருமலையும் ஏற்றுக் கொண்டனர். இவர்களுக்கு 'நன்றி' என்ற மூன்றெழுத்து போதாது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் முக்கியப் பொறுப்பில் இருந்தும் நூலுக்கு மனமகிழ்ச்சியுடன், டாக்டர். முத்துச் சண்முகனார் அணிந்துரை வழங்கியுள்ளார்கள்.

ஆய்வு தீபத்தை என்னுள் ஏற்றி, 'எதிலும் ஒரு புதுக் கண்ணோட்டம் வேண்டும்' என்ற எண்ணத்தை என்னுள் விதைத்து, என்னை உருவாக்கிய என் கல்லூரி முதல்வர் செல்வி. சோ. பாகீரதி அவர்கள் ஆய்வுக் காலத்தில் என்னை ஊக்கப்படுத்தியதோடு, இந்நூலுக்கு அணிந்துரையும் எழுதி வாழ்த்தியுள்ளார்கள்.

அச்சிடத் தகுந்த நல்லதொரு ஆய்வேடு என்று என் ஆய்வேட்டினைத் தேர்ந்தெடுத்து ஓரளவு பண உதவியும் செய்தது தமிழக அரசு.

அழகிய அட்டைப் படத்திற்குக் காரணமானவர் டாக்டர். இராமசாமி அவர்கள்.

மேற்கண்ட அனைத்துப் பெருமக்கட்கும், அச்சகத்தார்க்கும் நூல் வெளியிடும் இது போது என் உளங்கனிந்த நன்றியைப் புலப்படுத்துகின்றேன்.

இர. சித்ரலேகா

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ளே ... ...

1.	ஆய்வு அறிமுகம்	9
2.	ஆசிரியர் அறிமுகம்	26
3.1	காதல்	32
3.2	திருமணம்	61
3.3	கணவன்–மனைவி உறவு	100
3.4	தாய்மனம்	124
3.5	மாமியார் மருமகள் உறவு	152
3.6	பெண்களும் குடும்ப உறவுகளும்	174
3.7	உழைக்கும் பெண்கள்	215
3.8	விதவையர் நிலை	233
3.9	விலைமகளிர்	254
4.	ஆய்வு முடிவுரை	270

பின்னிணைப்பு – 1

(அ) ஆய்வாளர் லக்ஷ்மிக்கு அனுப்பிய வினாப்பட்டி 291
(ஆ) ஆய்வாளர் சூடாமணிக்கு அனுப்பிய வினாப்பட்டி 298

பின்னிணைப்பு – 2

பிற தகவலாளர்களுக்கு ஆய்வாளர் விடுத்த வினாப்பட்டி 304

பின்னிணைப்பு – 3

துணை நூற்பட்டியல் 333

நாவல் அகரநிரல் 355

ஆசிரியர் அகரநிரல் 357

பொருள் அகரநிரல் 359

கலைச்சொற்கள் 362

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிழை திருத்தம்

பக்க எண்	வரி	பிழை	திருத்தம்
13	6	படைப்பாளிர்	படைப்பாளி
,,	6	அவகள்	அவர்கள்
23	14	சித்திரிக்கவில்லமை	சித்திரிக்கவில்லை
31	4	Standerd	Standard
35	10	3.1.1.1.1	3.1.1.1.1.1
48	4	லட்சுமி	லக்ஷ்மி
59	5, 16	லஷ்மி	லக்ஷ்மி
60	11, 25, 28, 32	லஷ்மி	லக்ஷ்மி
62	38	,,	,,
64	38, 39	,,	,,
66	25, 29	,,	,,
67	15, 31	,,	,,
68	26	லட்சுமி	லக்ஷ்மி
69	34	லஷ்மி	லக்ஷ்மி
71	32	சகுணம்	சகுனம்
124	2, 8, 10, 12	தாயார்	தாயர்
125	22	Krishnala	Krishnalal
,,	27	வழிபாடும்	வழிபடும்
129	23, 25	சத்துரு	சந்துரு
189	26	வீசு	விசு
225	35	போர்மனன	போர்மனை
238	10	அபசகுணம்	அபசகுனம்
239	20	அவருடைய	அவளுடைய
243	1	இளம்விவை-யருடைய	இளம்விதவை-யருடைய
243	31	அடுத்துவீடு	அடுத்தவீடு
248	27	இதிறு	இறுதி
250	முதல்வரியை கடைசியில் சேர்த்துக் கொள்ளவும்		
252	கடைசிவரி	சாத்தியக்கூறுகள்	சாத்தியக் கூறுகளை
260	33	ஏமாருவதற்கு	ஏமாறுவதற்கு
272	2	ஆய்விலிந்து	ஆய்விலிருந்து
273	10	காதலிக்குத்	காதலுக்குத்
273	31	சமையத்தார்	சமயத்தார்
292	36	இக்கேள்விக்கும்	இக் கேள்விக்கும்
333		பின்னிணைப்பு-4	பின்னிணைப்பு-3

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. ஆய்வு அறிமுகம்

ஆய்வுப் பொருள்

'லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்' எனும் இவ்வாய்வின்கண் பெண் எழுத்தாளர்களான லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவருடைய நாவல்களையும் அடிப்படையாகக் கொண்டு பெண்களின் வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்கள் ஒப்பீட்டு முறையில் ஆய்வு செய்யப்படுகின்றன.

இராஜம் கிருஷ்ணன் தம் 'மலையருவி' நாவலின் முன்னுரையில், ''குறிப்பிட்டதொரு வட்டத்துக்குள்ளேயே சுழன்று வரும் வாழ்வையுடைய பெண்ணொருத்தி நாவல் எழுதப் புகுவது என்பது அவ்வளவு இலகுவான செயல் அன்று. சமுதாயத்தில் பல்வேறு நிலைகளில் பல்வேறு படிகளில் காணும் மக்களைக் கண்டு நெருங்கிப் பழகும் வாய்ப்புக்களோ, உலக அரங்கில் அகலக் கால் வைத்துப் பல வண்ணங்களில் நிகழும் வாழ்க்கை நாடகங்களைப் பற்றி அறியும் வாய்ப்புக்களோ, தான் புழங்கும் வீடும் குடும்பமுமே உலக அனுபவமாகக் கொண்ட பெண்ணுக்கு இல்லை.'' எனப் பெண்கள் நாவல் எழுதுவதற்கான சூழலைக் குறிப்பிடுகின்றார் (1960). பெண் எழுத்தாளர்கள் நன்கு அறிந்து, புரிந்து கொண்ட குடும்பச் சூழலையே தாம் எழுதும் நாவலுக்குக் கதைப் பொருளாகக் கொள்வதால் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் அவர்களுடைய நாவல்களில் இயல்பாகச் சித்திரிக்கப்படுகின்றன. இக்காரணம் பற்றியே பெண் எழுத்தாளர்களான லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரது நாவல்களும் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

ஆய்வுநோக்கும் அணுகுமுறையும்

தமிழில் இலக்கிய ஒப்பாய்வுத்துறை இந்த நூற்றாண்டில் தோன்றி மிக அண்மைக் காலத்தில்தான் வளரத்தொடங்கியுள்ளது. அதன் அடிப்படையில் ஒரு மொழியின் இரு படைப்பாளிகளுக்கிடையே நிகழும் ஒப்பாய்வு என்ற வகையில் இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய சமூக நாவலாசிரியர்களான லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரது சமூக நாவல்களைச் சமூகவியலார் கூறும் கோட்பாடுகளோடு ஒப்பிட்டு ஆய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இதுகாறும் தமிழ் நாவல்கள், சிறுகதைகள் ஆகியவற்றைப் பற்றி எழுந்த டாக்டர் பட்டத்திற்குரிய ஆய்வுகளை இரண்டாகப் பிரிக்கலாம். ஒருவகை புதுமைப்பித்தன், கல்கி, அகிலன், நா. பார்த்தசாரதி, கு.ப. ராஜகோபாலன் போன்ற ஆசிரியர்களில் ஒருவரை எடுத்துக்கொண்டு அவர்தம் படைப்புக்கள் முழுவதை-யும் அடிப்படையாகக் கொண்டு கதை அமைப்பு, கதைமாந்தர், ஆசிரியர் கொள்கைகள் ஆகிய பல தலைப்புக்களில் முழுமையாக ஆராயும் முயற்சி; இதனை ஆசிரியர் படைப்பாய்வு என்று கூற-லாம். இரண்டாவது வகை தனிப்பட்ட ஒரு ஆசிரியருடைய குறிப்பிட்ட ஒரு நிகழ்ச்சி பற்றிய கருத்துக்களை அவர் படைப்-புக்களின் அடிப்படையில் ஆராய்கின்ற முயற்சி. சான்றாக, 'மு வ. நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள்' (சிவக்கண்ணன், 1978) என்பது போன்ற ஆய்வு இவ்வகையில் அடங்கும். இவ்வகை ஆய்வினை ஆசிரியர் கருத்தாய்வு என்று குறிப்பிடலாம்.

ஆனால் இந்த ஆய்வு ஒரே காலத்தில் எழுதிய இரண்டு ஆசிரியர்களுடைய படைப்புக்களை அடிப்படையாகக்கொண்டு, அவர்கள் இச்சமூகத்தைப் பற்றிக் கூறுகின்ற கருத்துக்களைச் சமூகவியலார் (Sociologists) தங்களது ஆய்வின் அடிப்படையில் கூறியிருக்கின்ற கருத்துக்களோடு ஒப்பிட்டு ஆராய்கின்ற மூன்-றாவது வகையாக விளங்குகின்றது. இதனை ஒப்பாய்வு என்று கூறலாம். இந்த ஒப்பாய்வு இரண்டு இலக்கிய ஆசிரியர்களை-யும் (லக்ஷ்மி, சூடாமணி), இரண்டு துறைகளையும் (Diciplines - இலக்கியமும் சமூகவியலும்) ஒப்பிட்டு ஆராய்கின்றது. இப்-போக்கில் தமிழுக்கு இது முதல் முயற்சி எனலாம்.

புள்ளி விவரம், வரைபடம் இவற்றின் துணைகொண்டு ஆய்வுக் கருத்துக்கள், ஒப்பீடுகள், ஆய்வு முடிவுகள் முதலியன விளக்கப்படுகின்றன.

இரு படைப்பாளிகளின் நாவல்களில் நடப்பியல் சித்தி-ரிப்பை அறிவதற்காகக் களஆய்வுப் பணியும் மேற்கொள்ளப் பட்டது.

ஆய்வு அடிப்படைகள்

இவ்வாய்விற்கான தரவுகள் இருவகைகளில் அமைகின்றன. அவை பின்வருமாறு :

1. முதன்மைத் தரவுகள் (Primary sources)
2. துணைத்தரவுகள் (Secondary sources)

1. முதன்மைத் தரவுகள்

ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட லக்ஷ்மி, சூடாமணி நாவல்கள் முதன்மைத் தரவுகளாகும். 1940-லிருந்து 1974 வரை லக்ஷ்மி எழுதிய சமூகநாவல்களும், 1952-லிருந்து 1974 வரை சூடா-மணி எழுதிய சமூக நாவல்களும், சூடாமணியின் குறுநாவல்-களும் இவ்வாய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லக்ஷ்மியின் நாவல்கள்

1. பவானி (1953)
2. சூர்யகாந்தம் (1958)
3. அரக்குமாளிகை (1960)
4. காஞ்சனையின் கனவு (1967)
5. லட்சியவாதி (1967)
6. பெண்மனம் (1968)
7. ஸ்ரீமதி மைதிலி (1968)
8. மரகதம் (1968)
9. மிதிலா விலாஸ் (1969)
10. பண்ணையார் மகள் (1974)
11. நாயக்கர் மக்கள் (1977)
12. மாயமான் (1977)
13. அடுத்தவீடு (1979)

இங்கு அடைப்புக்குறிக்குள் இடப்பட்டுள்ள ஆண்டுகள் நாவல்கள் அச்சில் வெளிவந்த ஆண்டுகளைக் குறிக்கின்றன. 'அரக்கு மாளிகை' எனும் நாவல் இதுவரை அச்சில் வெளிவராததால் ஆனந்தவிகடன் வார இதழில் தொடர்கதையாக வெளிவந்த ஆண்டை அடைப்புக்குறிக்குள் உள்ள ஆண்டு குறிக்கின்றது.

'மாயமான்' நாவல் 1950-லும், 'நாயக்கர் மக்கள்', 'அடுத்த வீடு' ஆகிய நாவல்கள் 1952-லும் எழுதப்பட்டன. 'மாயமான்' நாவலின் இரண்டாம் பதிப்பு 1977-இல் வெளியிடப்பட்டது. ஆனந்த விகடன் இதழில் தொடர்கதைகளாக வெளிவந்த 'நாயக்கர் மக்கள்' 1977-லும், 'அடுத்த வீடு' 1979-லும் புத்தகங்களாக வெளிவந்தன.

சூடாமணியின் நாவல்கள்

1. மனத்துக்கினியவள் (1960)
2. புன்னகைப் பூங்கொத்து (1965)
3. நீயே என் உலகம் (1967)
4. தீயினில் தூசு (1967)
5. தந்தை வடிவம் (1967)
6. மானிட அம்சம் (1974)

*சூடாமணியின் குறுநாவல்கள் **

1. விடிவை நோக்கி (1959)
2. ஆழ்கடல் (1964)
3. செந்தாழை (1964)
4. பிஞ்சுமுகம் (1964)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. சோதனையின் முடிவு (1967)
6. உயர்வு உள்ளத்திலே (1967)
7. வாழ்த்துவோம் (1971)
8. உள்ளக்கடல் (1972)
9. இரவுச்சுடர் (1974)

அடைப்புக்குறிக்குள் இடப்பட்டுள்ள ஆண்டுகள் நாவல்கள் அச்சில் வெளிவந்த ஆண்டுகளைக் குறிக்கின்றன. சூடாமணியின் குறுநாவல்களில் 'ஆழ்கடல்' என்ற தொகுப்பு, 'மகளின் கைகள்' என்ற குறுநாவலையும் கொண்டுள்ளது. 'பிஞ்சுமுகம்' என்ற குறுநாவல் ஒன்பது சிறுகதைகளையும் கொண்ட தொகுப்பாகக் காணப்படுகின்றது. 'சோதனையின் முடிவு' என்ற குறுநாவல் 'அஞ்சன விழிகள்' என்ற மற்றொரு குறுநாவலையும் கொண்ட தொகுப்பாக வெளிவந்துள்ளது; 'உயர்வு உள்ளத்திலே' எனும் குறுநாவல் ஆறு சிறுகதைகளையும் கொண்ட தொகுப்பாகக் காணப்படுகிறது; 'வாழ்த்துவோம்' என்ற குறுநாவல் 'மங்கை' என்ற குறுநாவலையும் உள்ளடக்கி வெளிவந்துள்ளது.

2. துணைத்தரவுகள்

இவ்வாய்விற்கான துணைத்தரவுகள் இருவகைகளில் அமைகின்றன. அவை பின்வருமாறு :

1. வெளியீட்டுத் தரவுகள் (Published sources)
2. நேர்முகத் தரவுகள் (Personal sources)

1. வெளியீட்டு தரவுகள்

லக்ஷ்மி, சூடாமணி இருவரது படைப்புக்களைப்பற்றி வெளியான பேட்டிகளும், சூடாமணியின் நாவல்களைப்பற்றி வெளிவந்த மதிப்பாய்வுரைகளும் (Reviews) இவ்வாய்வுக்குத் துணையாக அமைகின்ற வெளியீட்டுத் தரவுகளாகும். லக்ஷ்மியின் நாவல்களைப்பற்றி வெளிவந்த மதிப்பாய்வுரைகள் கிடைக்கவில்லையாதலால் அவை இவ்வாய்விற்குப் பயன்படுத்தப்படவில்லை.

2. நேர்முகத் தரவுகள்

இவ்வாய்வின் பொருட்டு படைப்பாளிகளுடன் ஆய்வாளர் நடத்திய கடிதத் தொடர்புகளின் வாயிலாகக் கிடைத்த செய்திகள், ஆய்வாளர் படைப்பாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டி, ஆய்வாளர் படைப்பாளிகளுக்கு விடுத்த வினாப்பட்டி ஆகியவற்றின் வாயிலாகக் கிடைத்த செய்திகள் முதலியன இவ்வாய்விற்குத் துணையாக அமைகின்ற நேர்முகத் தரவுகளாகும்.

---

* குறுநாவல்கள் சிலவற்றைப் படைப்பாளி நாவல்கள் என்றே குறிப்பிடுவதாலும், நாவலுக்கும் குறுநாவலுக்கும் உள்ள வேறுபாட்டை ஆய்வாளர் இங்கு ஆய்விற்கு எடுத்துக் கொள்ளாததாலும் குறுநாவல்கள் ஆய்வில் நாவல்கள் என்றே குறிப்பிடப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வுப் பகுப்பு

இவ்வாய்வேடு ஆய்வு அறிமுகம், ஆசிரியர் அறிமுகம், பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள், முடிவுரை எனும் நான்கு பகுதிகளாகப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது.

1. ஆய்வு அறிமுகம்

இப்பகுதியில் ஆய்வுமுறை, வரையறை ஆகியவை விளக்கப்படுகின்றன. ஆய்வின் முடிவுகள் தொகுத்துத் தரப்படுகின்றன.

2. ஆசிரியர் அறிமுகம்

இப்பகுதியில் லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிர்களின் வாழ்க்கை வரலாறு, அவர்களுடைய படைப்புக்கள், அவகள் பெற்ற பரிசுகள் ஆகியவை கூறப்படுகின்றன. இப்படைப்பாளிகளுடைய வாழ்க்கைச் சூழல் இவர்களது படைப்புக்களைப் பாதித்திருக்கின்ற பாங்கும் இப்பகுதியில் விளக்கப்படுகின்றது.

3. பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்

இப்பகுதி ஒன்பது இயல்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை பின்வருமாறு :

3. 1. காதல்
3 2. திருமணம்
3. 3. கணவன்—மனைவி உறவு
3. 4. தாய்மனம்
3. 5. மாமியார்—மருமகள் உறவு
3. 6 பெண்களும் குடும்ப உறவுகளும்
3. 7. உழைக்கும் பெண்கள்
3. 8. விதவையர் நிலை
3. 9. விலைமகளிர்

ஒவ்வொரு இயலின் இறுதியிலும் இரு படைப்பாளிகளின் கருத்துக்களும் சமூகவியலார் கருத்துக்களோடு ஒப்பிட்டு மதிப்பிடப்படுகின்றன.

3. 1. காதல்

இவ்வியலின்கண் காதலின் வகை, காதல் நிறைவேறுவதற்குரிய காரணங்கள் முதலியன சமூகவியற் பின்னணியுடன் ஆராயப்படுகின்றன.

காதல் இருமனக் கால், ஒருமனக் காதல் என இருவகைப்படுத்தப்படுகின்றது; இருமனக்காதல் இயல்புக் காதல், உயர்காதல் எனப் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகின்றது. ஒரே வீட்டில் வளரும் உறவினரிடையே காதல் தோன்றுவது இயல்பாகக் காணப்படுகின்றது. ஆணின் நற்பண்பு பெண்ணை முதலில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சவர்ந்த பின்னரே அவன் அழகு பெண்ணிடத்துக் காதலை வளர்க்கத் துணை புரிகின்றது என்பதை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். பெண்ணின் அழகே ஆணின் மனதில் காதலைத் தோற்றுவிக்கின்றது; பெண்ணின் அழகோடு அவளது நற்பண்பும் இணையும் பொழுதுதான் காதல் வாழ்வு சிறப்புப் பெறுகின்றது என்பதை இரு படைப்பாளிகளும் தத்தம் நாவல்களில் வலியுறுத்துகின்றனர்.

காதல் நிறைவேறுவதற்குத் தடைகள் பல தோன்றினால் காதலர்களின் மன உறுதி அவற்றை மீறி அவர்களை ஒன்றுசேர்க்கின்றது. ஆண்களை விடப் பெண்களே காதலில் உறுதி கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். காதல் நிறைவேறாமைக்குக் குடும்ப அவப்பெயர், செல்வ வேறுபாடு, சாதி வேறுபாடு, விதவைக் காதல், போலிக் காதல் முதலியன காரணங்களாக விளங்குகின்றன. இவ்வனைத்துக் காரணங்களையும் லக்ஷ்மி, சித்திரிக்க, சூடாமணி போலிக் காதலை மட்டுமே காதல் நிறைவேறாததற்குரிய தடையாகச் சித்திரிக்கின்றார். இவ்வேறுபாட்டிற்கு இரு படைப்பாளிகளுடைய வாழ்க்கைப் பின்னணி காரணமாகின்றது என்ற முடிவும் இவ்வியலில் பெறப்படுகின்றது.

வேறு இனக் காதலாகிய கலப்புக் காதலை இரு சாதிகளுக்கிடையே ஏற்படும் காதலாக லக்ஷ்மி சித்தரிக்க, சூடாமணி சாதி, மொழி, பண்பாடு என்ற மூன்றையும் கடந்த நிலையில் சித்தரிக்கின்றார். கலப்புக் காதலை நகரச்சூழலில் வாழும் பெற்றோர் ஆதரிக்க, கிராமச்சூழலில் வாழும் பெற்றோர் எதிர்க்கின்றனர். கலப்புக் காதலின் வெற்றிக்குக் காதலர்கள் சந்திக்கும் வாய்ப்பு, பெண்களின் கல்வி, காதலர்கள் வாழும் நகரச்சூழல் ஆகியவை காரணங்களாகின்றன எனச் சூடாமணி தம் நாவல்களில் காட்டுகின்றார். கலப்புக் காதலில் ஆடவரின் மனஉறுதியை லக்ஷ்மி சித்திரிக்க, பெண்களின் மனஉறுதியைச் சூடாமணி சித்திரிக்கின்றார்.

உடல் தூய்மை குன்றாது உள்ளத்தூய்மை குன்றிய பெண்களைக் காதலிக்கும் ஆடவரது உயர்காதலை லக்ஷ்மியும், உடல் தூய்மை குன்றினாலும் உள்ளத்தூய்மை குன்றாத பெண்களைக் காதலிக்கும் ஆடவரது உயர்காதலைச் சூடாமணியும் சித்திரிக்கின்றனர். ஒருதலைக் காதலில், காதல் தோல்வி பழிவாங்கும் உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது என்ற கருத்தினை லக்ஷ்மியின் நாவல்கள் சித்திரிக்கின்றன.

இரு படைப்பாளிகளும் நிறைவேறும் காதலையே மிகுதியாகப் படைப்பது நடப்பியலோடு முரண்படுகின்றது. எனவே, இரு படைப்பாளிகளிடமும் காதல் சித்திரிப்பில் குறிக்கோள் போக்குக் காணப்படுகின்றது எனும் இத்தகைய முடிவுகள் இவ்வியலில் பெறப்படுகின்றன.

3. 2. திருமணம்

இவ்வியலில் திருமணம், மரபுத் திருமணம், மரபு மீறிய திருமணம், எனப் பாகுபடுத்தப்பட்டுள்ளது. மரபுத் திருமணத்திற்கு மணமகன் தகுதி, பொருளாதார அடிப்படைக் காரணங்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களாக அமைகின்றன. மணமகன்/மணமகள் இசைவின்றி நடைபெறும் மரபுத் திருமணத்தில் மணமகனை அல்லது மணமகளை வற்புறுத்துபவர் தந்தையாகவே காணப்படுகின்றார். மரபுத்-திருமணத்திற்கு வரதட்சிணை, சீர்வரிசை, பெற்றோர் முயற்சி இன்மை, பெண்ணின் உடற்குறை, குடும்ப அவப்பெயர், மனதிற்குப் பிடிக்காத பெண் அல்லது ஆண் ஆகியவை தடைகளாகக் காணப்படுகின்றன வரதட்சிணைக் கொடுமையை மட்டும் லக்ஷ்மி சித்திரிக்க. அதற்கான தீர்வைச் சூடாமணி தம் நாவலில் புலப்படுத்துகின்ருர்.

மனைவி இறந்தபின்னர் குழந்தை வளர்ப்புக்காகவும், இல்லற இன்பத்திற்காகவும் ஆடவர் மறுமணம் செய்துகொள்கின்றனர்; பெண்கள் தம் வறுமை நிலையினாலும், பகட்டான வாழ்வில் கொண்டுள்ள விருப்பத்தினாலும் ஓர் ஆடவனுக்கு இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட இசைகின்றனர்; மறுமணம் புரிந்து கொண்டவர் வாழ்க்கையில் அமைதியின்மையே மிகுதியாகக் காணப்படுகின்றது; மறுமணத்திற்குத் தேவையும், ஈர்ப்பும் அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன. மறுமணத்தால் விளையும் சிக்கல்களைப் படைப்பிலக்கியங்கள் சித்திரிப்பது போன்று சமூகவியலார் விரிவாகப் புலப்படுத்தவில்லை.

மரபு மீறிய திருமணமாகிய கலப்புத் திருமணத்தை லக்ஷ்மியைவிடச் சூடாமணியே மிகுதியாகச் சித்திரிக்கின்றார்; கலப்புத் திருமண சித்திரிப்பில் படைப்பாளிகளின் கலப்புத் திருமணம்பற்றிய கொள்கைகளும் புலப்படுகின்றன.

விதவைத் திருமணத்தை சூடாமணி தம் நாவல்கள் வழி ஆதரிக்கின்ருர். லக்ஷ்மி விதவைத் திருமணத்தைப்பற்றிக் குறிப்பிடுகின்ருரேயன்றி வலியுறுத்தவில்லை

இரு படைப்பாளிகளும் மரபுத் திருமணத்தைவிட மரபு மீறிய திருமணத்தையே மிகுதியாகச் சித்திரிக்கின்றனர் என்ற முடிவுகள் இவ்வியலின்கண் பெறப்படுகின்றன.

3. 3. கணவன் – மனைவி உறவு

இவ்வியல் கணவன்-மனைவி உறவுக்கு இடையே தோன்றும் சிக்கல்களையும் அவற்றிற்கான காரணங்களையும் ஆராய்கின்றது.

கணவன்-மனைவிக்கு இடையே ஏற்படும் சிக்கல்கள் தீரும் சிக்கல்கள் என்றும் தீராச் சிக்கல்கள் என்றும் இருவகைப்படுத்தப்படுகின்றன. தீரும் சிக்கலுக்குக் கணவனோ, மனைவியோ, கணவன், மனைவி ஆகிய இருவருமோ, அல்லது மற்றவரோ காரணங்களாகக் காணப்படுகின்றனர்.

கணவனால் ஏற்படும் சிக்கல்களில், கணவன் தீயநடத்தையுடையவனாக இருந்து, திருமணத்திற்குப்பின் திருந்தியவனாகக் காணப்பட்டால் அவனது முந்தைய நடத்தை மனைவியால் மன்னிக்கப்பட வேண்டும் என்று இரு படைப்பாளிகளும் வலியுறுத்தினர்; திருமணத்திற்குப் பின்னர் ஏற்படும் கணவனின்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தீயநடத்தையும் அழகற்ற மனைவிக்கு அழகு நிறைந்த கணவன் தேவை என்பதால் மன்னிக்கப்படுகின்றது; கணவனது பண்பில் ஏற்படும் மாற்றமும் காலப்போக்கில் கணவன் திருந்தும் பொழுது மன்னிக்கப்படுகின்றது; எனவே. இச்சிக்கல்கள் தீரும் சிக்கல்க-ளாகக் காணப்படுகின்றன.

கணவனிடம் கொள்ளும் ஐயம், மனைவியின் தன்முனைப்பு, திருமணத்திற்குமுன் மனைவி மற்றொருவனிடம் கொண்டிருந்த காதல் முதலியன மனைவியால் ஏற்படும் சிக்கல்களாகக் காணப்படுகின்றன. கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நம்ப வேண்டும்; கணவனைப் பிரிந்துவந்த மனைவியை மற்றவர் மதிக்கமாட்டார்கள் என்ற அறிவுரைகளின்வழி இவற்றைத் தீரும் சிக்கல்களாகப் படைப்பாளிகள் சித்திரிக்கின்றனர்.

மணமகன் / மணமகள் இசைவின்றிப் பெற்றோரால் நடத்-தப்படும் திருமணம், குடும்பச் செய்திகளைக் கணவன் தன் மனைவியிடம் மறைப்பது ஆகியவை கணவன் - மனைவி என்ற இருவரால் ஏற்படும் சிக்கல்களுக்குக் காரணங்களாகின்றன. திரு-மணத்திற்குப் பின் கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்வது, இருவருக்குமிடையே நிலவும் மறைப்பற்ற நிலையும் இச்சிக்கல்களைப் போக்குகின்றன. லக்ஷ்மி சித்திரிக்கும் இச்சிக்கல்களைச் சூடாமணி தம் நாவல்களில் சித்திரிக்க-வில்லை.

மற்றவர் குறுக்கீட்டினால் ஏற்படும் கணவன் - மனைவி உறவுச் சிக்கலில் மற்றவர் குறுக்கீட்டினைக் கணவனும் மனை-வியும் உணர்ந்த பொழுதும், சிக்கலுக்குக் காரணமான மற்றவர் விலகும் பொழுதும் சிக்கல் தீர்ந்து விடுகின்றது.

ஏமாற்றமும் வறுமையும், கணவனின் மறுமணம், கண-வனின் தீயநடத்தை ஆகியவை கணவனால் ஏற்படும் தீராச் சிக்-கல்களுக்குக் காரணங்களாகின்றன. மனைவியின் இறப்பு, மனை-வியின் பிரிவு என்பன இச்சிக்கல்களின் விளைவுகளாகின்றன.

ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படும் போது ஏற்படுகின்ற சிக்கல், மனைவியின் பாலுறவுச் சிக்கல் என்-பன மனைவியால் ஏற்படும் தீராச் சிக்கல்களுக்குக் காரணங்களா-கின்றன. அமைதியற்ற வாழ்க்கையும், கணவன்—மனைவி பிரி-வும் சிக்கல்களுக்கு முடிவாகச் சித்திரிக்கப்படுகின்றன இவற்றுள் இரண்டாம் மனைவி நிலையில் ஏற்படும் சிக்கலை லக்ஷ்மி சித்-திரிக்கின்றார். சூடாமணி இச்சிக்கலைச் சித்திரிக்கவில்லை; பாலு-றவுச் சிக்கலைச் சூடாமணி சித்திரிக்க லக்ஷ்மி சித்திரிக்கவில்லை. இவ்வேறுபாடு படைப்பாளிகளின் கலைக் கொள்கைகளைக் காரணம் காட்டி நிறுவப்படுகின்றது.

3. 4. தாய்மனம்

இவ்வியலில் பெற்றதாய், வளர்ப்புத்தாய், மாற்றாந்தாய் எனும் மூவகைத் தாயாரின் மனநிலைகள் ஆராயப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்ற தாயின் மனத்தே சிக்கல் தோன்ற மாமியார், கணவன், குழந்தை, மருமகள், தான் ஆகியவர்களின் செயல்கள் காரணமாகின்றன. திருமணத்திற்குப்பின் மருமகளிடம் மாமியார் கொள்ளும் பொறாமை உணர்ச்சியும், கணவனது இறப்பும், கணவனது கொடுமையும் அவளின் மனநிலையைப் பாதிக்கின்றன; கணவனை இழந்த அவள் மிகுதியான உடைமை உணர்ச்சியுடையவளாகக் காணப்படுகின்றாள்; கணவனது கொடுமையால் அவனைப் பிரியத் துணிந்த தாய் குழந்தையைப் பிரிந்துசெல்லத் துணியவில்லை என்ற உண்மைகள் ஆராயப்படுகின்றன. குழந்தை இறந்துவிட்டால் தாய் தன் மணவாழ்க்கையை வெறுக்கவும் துணிந்துவிடுகின்றாள். உடற்குறையுற்ற குழந்தையை அதன் துன்பம் கருதித் தாய் கொல்லவும் துணிகின்றாள். வறுமை குழந்தைக்கும் தாய்க்கும் இடையே மனவேறுபாட்டினைத் தோற்றுவித்து விடுகின்றது; தாயின் முறையற்ற ஒழுக்கம் தாய்க்கும் மகனுக்குமிடையே மனவேறுபாட்டை ஏற்படுத்துகின்றது; தாயின் எல்லையற்ற அன்பு மகன் மனதில் ஐயத்தைத் தோற்றுவித்துத் தாய்—மகன் உறவைப் பாதிக்கின்றது; தாயின் தீய ஒழுக்கமும், தாய் பாலுறவில் கொள்ளும் வெறுப்பும் தாயின் மனதில் சிக்கலைத் தோற்றுவிக்கின்றன. பொதுவாகத் தாயின் குடும்ப வாழ்க்கையில் காணப்படும் ஒரு குறை அவளுள்ளத்தில் சிக்கலை எழுப்ப இன்றியமையாக் காரணமாகின்றது; குறையற்ற வாழ்வினை உடைய தாயின் உள்ளத்தில் சிக்கல் எழுவதில்லை என்ற முடிவுகள் இப்பிரிவில் பெறப்படுகின்றன.

வளர்ப்புத் தாயார் தன்னால் வளர்க்கப்படும் குழந்தைகளுக்காகத் தம் வாழ்க்கையையே தியாகம் செய்யத் துணிகின்றனர் என்பதை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர்.

மாற்றாந்தாயார் தம் மூத்தாள் குழந்தைகளை வெறுக்கும் கொடுமைக்காரியாகக் காணப்படுகின்றனர் என்பது லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவருடைய கருத்தாகக் காணப்படுகின்றது.

இரு படைப்பாளிகளுடைய நாவல்களிலும் தாயார் வீட்டை விட்டு வெளியேறும் பொது இயல்பு காணப்படுகின்றது என்ற முடிவுகள் இவ்வியலில் புலப்படுத்தப்படுகின்றன.

3. 5. *மாமியார்-மருமகள் உறவு*

இவ்வியல் மாமியார்-மருமகள் உறவில் ஏற்படும் சிக்கலுக்கான காரணங்களை ஆராய்கின்றது.

கூட்டுக் குடும்பத்தில் ஏற்படும் மாமியார்-மருமகள் உறவுச் சிக்கல் மாமியார், மருமகள் எனும் இருவர் காரணமாகவும் எழுகின்றது. மாமியார் குடும்பத்திற்கும் மருமகள் குடும்பத்திற்கும் இடையேயுள்ள செல்வ வேறுபாடு இருவரிடையே உறவுச் சிக்கலைத் தோற்றுவிக்கின்றது; இந்நிலையில் மாமியார் மருமகளை வெறுக்கின்றாள். மாமனார் மருமகளை வெறுக்கவில்லை; மருமகளிடத்தில் அன்பு செலுத்துகின்றார். மருமகளின் பொறுமை மாமியாரின் மனதை மாற்றி விடுகின்றது என லக்ஷ்மி இச்சிக்கலுக்கானத் தீர்வைத் தருகின்றார். சூடாமணி இச்சிக்கலைச் சித்தி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரிக்கவில்லை. மாமியார் தன் மகன் மீது கொள்ளும் மிகுதியான பற்றும் மாமியார் மருமகள் உறவில் சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. மாமியார் ஒரு மருமகளிடம் செலுத்தும் அன்பு மற்றொரு மருமகளிடத்தில் பொருமையைத் தோற்றுவிக்கின்றது; மருமகள் மீது ஏற்படும் பழிச்சொல்லும் மாமியார்-மருமகள் உறவில் சிக்கலை ஏற்படுத்துகின்றது. கூட்டுக்குடும்பத்தில் சிக்கலுக்குக் காரணமாக மாமியார் விளங்குகின்றாள் என்று லக்ஷ்மி சித்திரிக்கின்றார். சூடாமணி கூட்டுக்குடும்பச் சிக்கலைச் சித்திரிக்கவில்லை. கூட்டுக்குடும்பத்தில் மாமியார்-மருமகள் உறவுநிலையைக் காணும் பொழுது, தந்தையின் ஆதிக்கம் குறைந்து தாயின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் குடும்பத்திலும், தந்தை இறந்த பின்னரும் மகன் குடும்பத்தலைமையை ஏற்காது தாயின் பொறுப்பிலேயே வாழ்ந்து வரும் குடும்பத்திலுமே மாமியார் கொடுமை காணப்படுகின்றது என்ற முடிவு பெறப்படுகின்றது.

தனிக்குடும்ப அமைப்பில் மாமியார்-மருமகள் உறவு பாதிப்பதற்கு இருவருமே காரணமாக விளங்குகின்றனர். மகனின் கலப்புத் திருமணம், மூத்தாள் மகன் மேல் கொண்ட வெறுப்பு முதலியன மருமகள் மேல் மாமியாருக்கு வெறுப்பைத் தூண்டுகின்றது. மருமகளின் நாகரிகப் போக்கு மாமியாரை வெறுக்கச் செய்கின்றது

கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் எனும் இருவகைக் குடும்பங்களிலும் உள்ள மாமியார்-மருமகள் உறவுநிலையை ஒப்பிட்டுக் காணும்பொழுது கூட்டுக்குடும்பங்களில் தாம் இச்சிக்கல் மிகுதியாகக் காணப்படுகின்றது எனப் புலப்படுகின்றது. மாமியார்-மருமகள் உறவுச்சிக்கலை லக்ஷ்மி சித்திரிக்க, தனிக்குடும்பத்தில் நிலவும் மாமியார்-மருமகள் ஒற்றுமையைச் சூடாமணி சித்திரிக்கின்றார். இரு படைப்பாளிகளிடமும் காணப்படும் இச்சிக்கல் பற்றிய வேறுபாட்டிற்கு இருவரும் கதை எழுதிய காலத்திலுள்ள குடும்ப அமைப்பு மாற்றமும், இருவரது வாழ்க்கைப் பின்னணியும் காரணங்களாகின்றன என்ற முடிவு இவ்வியலில் பெறப்படுகின்றது.

3. 6. பெண்களும் குடும்ப உறவுகளும்

இவ்வியலில் பெண்களின் குடும்ப உறவுகள் சமூகவியல் அடிப்படையில் ஆராயப்படுகின்றன.

பெண்ணின் உறவுகள் பிறந்த வீட்டார் உறவு என்றும், புகுந்த வீட்டார் உறவு என்றும் இருவகையாகப் பிரிக்கப்பட்டு ஆராயப்படுகின்றன. பெண்ணின் பிறந்த வீட்டார் உறவு தந்தை உறவு, உடன்பிறந்தார் உறவு, தாயின் உடன்பிறந்தார் உறவு, தந்தையின் உடன்பிறந்தார் உறவு, பாட்டன்; பாட்டி உறவு, எனப் பிரிக்கப்படுகின்றது.

குழந்தைப் பருவத்தில் தந்தை-மகள் உறவு குடும்பவறுமை, தந்தையின் இரண்டாம் திருமணம், தந்தையின் ஒழுக்கக்கேடு, தந்தையின் பொறுப்பற்றநிலை முதலியவற்றால் பாதிக்கப்படுகின்றது. இவற்றுள் குடும்பவறுமை, தந்தையின் இரண்டாம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமணம், தந்தையின் ஒழுக்கக்கேடு ஆகிய மூன்று காரணங்களை லக்ஷ்மி சித்திரிக்க, தந்தையின் இரண்டாம் திருமணம், தந்தையின் பொறுப்பற்றநிலை ஆகிய இரண்டு சிக்கல்களைச் சூடாமணி சித்திரிக்கின்றார். தந்தையின் வறுமை, தந்தையின் பொறுப்பற்றநிலை,தந்தையின் பணத்தாசை முதலியன மணப்பருவத்தில் தந்தை-மகள் உறவைப் பாதிக்கின்றன. திருமணம் முடிந்த நிலையில் மகளின் நல்வாழ்விற்கு அறிவுரை கூறும் ஆசானாகவும், மகளின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முயற்சி செய்பவராகவும் தந்தை காணப்படுகின்றார். தந்தை - மகள் உறவைப் பாசமிக்க உறவாக லக்ஷ்மியைவிடச் சூடாமணி சித்திரித்துள்ளார். இவ்வேறுபாட்டிற்கு இப்படைப்பாளிகளது குடும்பப் பின்னணி ஒப்பிடப்பட்டு முடிவு பெறப்படுகின்றது.

உடன்பிறந்தார் உறவு, அக்காள்-தம்பி உறவு, அண்ணன்-தங்கை உறவு, அக்காள்-தங்கை உறவு என மூன்றாகப் பகுக்கப்பட்டு ஆராயப்படுகின்றது. கணவனை இழந்த அக்காளைத் தம்பி காப்பாற்றுவதையும், தாயற்ற தம்பியை அக்காள் வளர்ப்பதையும் லக்ஷ்மி சித்திரிக்கின்றார். லக்ஷ்மி இவ்வுறவு நிலையை விரிவாகச் சித்திரிப்பது போன்று சூடாமணி சித்திரிக்கவில்லை. தாய்-மகன் உறவு நிலைக்கு அடுத்த படியாக அண்ணன்-தம்பி உறவு காணப்படுகின்றது என்பது சமூகவியலார் கருத்தோடு ஒப்பிடப்பட்டு ஆராயப்படுகின்றது தன் தங்கையின் வாழ்க்கைக்காகப் பாடுபடும் சகோதரர்களை மிகுதியாக லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இவ்விரு படைப்பாளிகளும் படைத்துள்ளனர்; அண்ணனை வெறுக்கும் தங்கையரை இருவரும் படைக்கவில்லை; அண்ணன் மனைவியால் அண்ணன்-தங்கை உறவு பாதிக்கப்படுவதை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; சூடாமணியின் நாவல்களில் அண்ணனின் மனைவியும் அன்புடையவளாகக் காணப்படுகின்றாள். தங்கையின் விதவை மறுமணத்திற்கு ஆதரவு தரும் அண்ணனைச் சூடாமணி மட்டுமே சித்திரிக்கின்றார்; காலத்தால் லக்ஷ்மிக்குப் பிந்தியவரான சூடாமணியின் நாவல்களில் புதுமைக் கருத்துக்கள் காணப்படுவதற்குக் கால வேறுபாடு காரணம் என்ற முடிவு பெறப்படுகின்றது.

லக்ஷ்மி, சூடாமணி இருவருமே அக்காள்-தங்கை பாத்திரப் படைப்பில் முரண் எனும் உத்தியைக் கையாள்கின்றனர். நல்ல பண்பு, தீய பண்பு என்னும் இரண்டிற்கும் இடையே ஏற்படும் மோதலை லக்ஷ்மி தம் நாவல்களில் பாத்திரங்கள் வழி சித்திரிக்கின்றார்; இதனால் இரு பாத்திரங்களுக்கு இடையே ஏற்படும் உறவு பாதிக்கப்படுவதாகச் சித்திரிக்கின்றார். நல்ல பண்பு, தீயபண்பு என்றில்லாது, நல்ல பண்புகளையுடையவர்களாயினும் கருத்தில் வேறுபட்டவராகக் காணப்படும் அக்காள்-தங்கையரைச் சூடாமணி சித்திரிக்கின்றார். சூடாமணியின் நாவல்களில் அக்காள்-தங்கையரிடத்து மோதல் காணப்படவில்லை. அக்காள்-தங்கை உறவு இந்திய இலக்கியத்திலும் சமூகவியலிலும் மிகக் குறைவாகவே காணப்படுகின்றது என்ற சமூகவியலார் கருத்து இவ்விரு படைப்பாளிகளின் நாவல்கள் சித்திரிப்போடு பொருந்தி வருகின்றது என்ற முடிவு பெறப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாயின் உடன்பிறந்தோர் உறவுகளில் தங்கை உயிருடன் இருக்கும்பொழுது தங்கை குடும்பத்துடன் நெருங்கிய உறவு இல்லாத தமக்கை, தங்கை இறந்தபின் அவள் குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கிறாள். லக்ஷ்மியின் நாவல்களில் காணப்படும் இவ்வுறவுநிலை சூடாமணியின் நாவல்களில் சித்திரிக்கப்படவில்லை. தாய்மாமன் - மருமகள் உறவு நிலையில், தாய்மாமன் மருமகளின் பாதுகாவலனாக விளங்குகிறான்; தனக்கு மகன் இருப்பின் திருமண உறவின்வழி மருமகளைத் தன் குடும்பத்தவளாக்குவதில் ஆர்வம் கொண்டவனாக காணப்படுகிறான் என்ற உண்மை இவ்விரு படைப்பாளிகளின் நாவல்கள்வழி பெறப்படுகின்றது. லக்ஷ்மியின் நாவல்களில் தாய்மாமன்மார் அன்புகொண்டவராகக் காணப்பட, மாமன்மனைவியர் மருமகளைக் கொடுமைப்படுத்துபவராகப் படைக்கப்பட்டிருக்கின்றனர். சூடாமணியின் நாவல்களில் தாய்மாமனும் அவன் மனைவியும் அன்பு கொண்டவராகப் படைக்கப்பட்டிருக்கின்றனர்.

தந்தையின் உடன்பிறந்தோர் உறவில் தந்தையின் அண்ணன், தம்பியுடன் மகள் கொள்ளும் குடும்ப உறவு லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் மிகுதியாகச் சித்திரிக்கப்படவில்லை என்ற கருத்து சமூகவியலார் கருத்தோடு ஒப்பிட்டு முடிவு பெறப்படுகின்றது. தந்தையுடன் பிறந்த அத்தை மருமகளிடத்தில் பாசம் காட்டுகிறாள்; அண்ணன் மனைவி இறந்தபொழுது அண்ணனின் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை அவன் உடன்பிறந்தாள் ஏற்றுக்கொள்கிறாள் என்ற முடிவு இரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் பெறப்படுகின்றது. இருவரது நாவல்களிலும் சித்திரிக்கப்படும் அத்தையர் விதவையராகக் காணப்படுவதும் மருமகளைத் தன் பிறந்த வீட்டுப் பெண்ணாக எண்ணுவதும் இந்நெருங்கிய உறவிற்குக் காரணம் என்ற முடிவு பெறப்படுகின்றது.

பேத்திக்கும், பாட்டன் - பாட்டிக்கும் இடையே நெருங்கிய உறவு இருப்பதை இரு படைப்பாளிகளும் தத்தம் நாவல்களில் சித்திரித்துள்ளனர். பேத்தியின் கலப்புமணத்தை ஆதரிக்கும் முற்போக்குக் கொள்கையுடைய பாட்டியைச் சூடாமணி சித்திரிக்கின்றார். லக்ஷ்மியின் நாவல்களில் இப்பண்பு சித்திரிக்கப்படவில்லை.

பெண்ணின் புகுந்தவீட்டார் உறவு, மாமனார் - மருமகள் உறவு, நாத்தனார் உறவு, கணவனின் அண்ணன், தம்பி மனைவியருடன் உறவு, கணவனின் அண்ணன் தம்பியருடன் உறவு, நாத்தனார் கணவருடன் உறவு என்று பகுக்கப்பட்டு ஆராயப்படுகின்றது. மாமனார் - மருமகள் உறவு மரியாதைக்குகந்த உறவாகக் காணப்படுகின்றது மாமனார் - மருமகளுக்கிடையே காணப்படும் நெருங்கிய உறவு சமுதாயத்தில் தவறாக மதிப்பிடப்படுகின்றது. நாத்தனார் உறவு நிலையில், தம்பியரைத் தானே எடுத்து வளர்க்கும் தமக்கை, தம்பிமனைவியரிடம் நாத்தனார் என்ற உறவில் பழகுவதில்லை; அன்பு கொண்டவளாகக் காணப்படுகின்றாள். அண்ணன் மனைவியைவிட நாத்தனார் வயதில் மிகவும் சிறியவளாக இருந்தால் அங்கு நாத்தனார்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறவுச் சிக்கல் காணப்படவில்லை; அண்ணன் தன் தங்கையிடமும், தன் மனைவியிடமும் ஒரே அளவான அன்பைக் காட்டும் பொழுது அங்கு நாத்தனாரால் உறவுச் சிக்கல் எழுவதில்லை; அண்ணன் தன் தங்கையைவிட மனைவியிடம் மிகுதியான அன்பு செலுத்தும்பொழுது நாத்தனாரால் உறவுச் சிக்கல் எழுகின்றது என்ற முடிவுகள் பெறப்படுகின்றன. இவற்றில் சிக்கல் மிக்க உறவு, சிக்கலில்லாத உறவு என்ற இருவகை உறவுகளையும் லக்ஷ்மி சித்திரிக்க, சூடாமணி சிக்கலில்லாத உறவையே சித்திரிக்கின்றார்.

6745

மருமகள்களுக்கிடையேயுள்ள செல்வவேறுபாடு, மாமியார் மருமகள்களிடத்துக் காட்டும் அன்பில் வேறுபாடு ஆகியவை அண்ணன், தம்பி மனைவியரிடையே உள்ள உறவை பாதிக்கும் காரணங்களாகக் காணப்படுகின்றன. கூட்டுக்குடும்பங்களில் தான் அண்ணன் தம்பி மனைவியரிடைச் சிக்கல் எழ வாய்ப்பு ஏற்படுவதால், கூட்டுக்குடும்ப வாழ்க்கையைச் சித்திரிக்கும் லக்ஷ்மியின் நாவல்களில் காணப்படும் இச்சிக்கல் தனிக்குடும்ப வாழ்வைச் சித்திரிக்கும் சூடாமணியின் நாவல்களில் காணப்படவில்லை. கணவனின் அண்ணன் கணவனைவிட சிறிதே வயதில் பெரியவனாக இருந்தால் அவனுடன் தம்பி மனைவி பேசும் பழக்கம் இல்லை; கணவனின் தம்பி கணவனைவிட வயதில் சிறிது குறைந்தவனாக இருந்தாலும் அண்ணன் மனைவி அவனிடம் பேசும் பழக்கம் இல்லை; கணவனின் தம்பி கணவனைவிட மிகவும் வயதில் குறைந்தவனாக இருந்தால் அண்ணன் மனைவி அவனிடம் பேசும் பழக்கம் காணப்படுகின்றது என்ற முடிவுகள் இங்கு பெறப்படுகின்றன. ஒரு பெண் தன் நாத்தனார் கணவருடன் பழகுவது சமுதாயத்தில் தவறாகக் கருதப்படுகின்றது என்ற முடிவு லக்ஷ்மியின் நாவல் வழிப் பெறப்படுகின்றது. அவ்வுறவுச் சிக்கலைச் சூடாமணி தம் நாவல்களில் காட்டவில்லை.

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரது படைப்புக்களின் வழி பெண்களின் குடும்ப உறவு பற்றிய சில பொதுவான கருத்துக்கள் புலப்படுகின்றன; ஓர் ஆணோ பெண்ணோ தம் பிறந்த வீட்டில் இருக்கும் பொழுது எதிரெதிர் பாலாருடன் (Opposite Sex) பழகுவதில் விருப்பம் உடையவராக இருக்கின்றனர்; திருமணம் செய்துகொண்ட வீட்டில் தன்பாலாருடன் பழகுவதில் விருப்பம் உடையவராகக் காணப்படுகின்றனர். திருமணம் செய்துகொண்ட வீட்டில் எதிர்பாலாரிடம் பழகுவது சமுதாயத்தால் தவறாகக் கருதப்படுகின்றது.

3. 7. உழைக்கும் பெண்கள்

இவ்வியலில் உழைக்கும் பெண்கள் அலுவலகப் பணியில் ஈடுபடுவோர், வீட்டுப்பணிகளில் ஈடுபடுவோர், சமூகப்பணிகளில் ஈடுபடுவோர் என்ற மூவகைப் பாகுபாடுகளின்கீழ் ஆராயப்படுகின்றனர்.

குடும்பத்தலைவர் இறப்பு, கணவனின் பிரிவு, உயர்கல்வியில் ஆசை, காப்பவர் இன்மை, குடும்பத்தலைவர் வருவாய் போதாமை எனுமிவை ஒரு பெண் அலுவலை மேற்கொள்ளக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணங்களாகக் காணப்படுகின்றன. பெண்கள் அலுவலை மேற்கொள்ளக் குடும்பக் கவலையும் காரணமாகக் காணப்படுகின்றது; செல்வக்குடிப் பெண்கள் பொழுதுபோக்குக்காக அலுவலை மேற்கொள்கின்றனர்; திருமணத்திற்குப் பின்னர் சில அலுவல் மகளிர் வேலையை விட்டுவிடுகின்றனர்; உடற்குறையையுடைய பெண்களுக்கு அலுவல் அவர்களது தாழ்வு மனப்பான்மையைப் போக்கிக்கொள்ள ஒரு கருவியாகின்றது; சில பெண்களுக்குப் பொருளாதாரத் தேவை இல்லாவிடினும், குறிப்பிட்ட தொழில் மேல் கொண்டுள்ள பற்று அவர்களை அலுவல் மகளிராக்கி விடுகின்றது.

அலுவல் மகளிருக்குக் கடமைக்கூறு மோதல், ஆடவருடன் அலுவல் எனும் இருவகைச் சமுதாயச் சிக்கல்கள் காணப்படுகின்றன. குடும்பப்பெண் என்ற முழுமைக் கடமைக்கூறு நிலை, அலுவல்மகள் எனும் செம்பாதிக் கடமைக்கூறு நிலை என்ற இருவேறு கடமைக்கூறு நிலைகளில் வாழ்வதால் ஏற்படும் சிக்கலில் தோல்வியடைந்த அலுவல்மகளை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; சூடாமணி இருவேறு கடமைக்கூறு நிலைகளில் வாழும் அலுவல்மகளைச் சித்திரிக்கவில்லை. ஒரு பெண்ணிடம் அலுவல் மகள் தகுதியைவிடப் பெண்மை என்ற தகுதிநிலையையே சமுதாயம் எதிர்பார்ப்பது, ஆடவருடன் பணிபுரியும் பெண்களுக்குச் சிக்கல் எழக் காரணமாகின்றது. தன் வாழ்வினை ஆராய்ந்து அமைத்துக்கொள்ளும் மனப்பான்மை அலுவல் மகளிருக்கு ஏற்படுவதற்கு அவர்கள் அலுவலின் அனுபவமும், கல்வியும் காரணங்களாகின்றன என்ற கருத்துக்களும் இரு படைப்பாளிகளின் நாவல்களினின்று பெறப்படுகின்றன.

சமூகவியலார் திருமணமான அலுவல் மகளிருடைய வாழ்வுச் சிக்கலையே மிகுதியாகக் காட்டுகின்றனர். திருமணமாகாத அலுவல் மகளிர் வாழ்வில் ஏற்படும் சிக்கல்களைச் சமூகவியலார் மிகுதியாகக் காட்டவில்லை; ஆனால் இவ்விரு படைப்பாளிகளும் திருமணமாகாத அலுவல் மகளிரது வாழ்வுச் சிக்கலைத்தான் படைக்கின்றனர்; திருமணமான பெண்கள், திருமணத்திற்குமுன் தாம் பார்த்துவந்த அலுவலை விடுபவராகப் படைக்கப்படுகின்றனர். இருவரது அலுவல் மகளிர் சித்திரிப்பை ஒப்புநோக்கும் பொழுது பள்ளி ஆசிரியை பற்றிய சித்திரிப்பே மிகுதியாகக் காணப்படுகின்றது. இத்தொழிலின்மீது இரு படைப்பாளிகளுக்குமுள்ள பற்று இதற்குக் காரணம் என்று அறியப்படுகின்றது.

கல்வி அறிவற்ற பெண்கள் தம் பொருளாதாரத் தேவைக்காகப் பிற வீடுகளில் பணிப்பெண்ணாகப் பணிபுரிய, வேலையில்லாத் திண்டாட்டத்தினால் படித்த பெண்களும் தம்மைக் காப்பாற்றிக்கொள்ள பிறர் வீடுகளில் பணிப்பெண்ணாகப் பணியாற்றும் நிலை சமுதாயத்தில் காணப்படுகின்றது. வீட்டுப்பணி புரிகின்ற பெண்கள் பற்றிய சித்திரிப்பு லக்ஷ்மியின் நாவல்களில் மட்டும் காணப்பட, சூடாமணி இச்சித்திரிப்பினைத் தம் நாவல்களில் காட்டவில்லை.

கணவனின் ஆதரவு பெற்ற திருமணமான பெண்களும், கணவனைப் பிரிந்து வாழ்கின்ற பெண்ணும், கணவனை இழந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்ணும் சமூக சேவையில் ஈடுபடுவதாக இரு படைப்பாளிகளும் படைக்கின்றனர். திருமணமாகாத பெண்கள் யாரும் சமூக சேவையில் ஈடுபட்டதாக இருவரும் காட்டவில்லை. சமூகப்பணியில் ஈடுபடும் பெண்களுக்குக் குடும்ப ஆதரவும், நல்ல செல்வ நிலையும் தேவை என்ற முடிவுகள் இவ்வியலில் பெறப்படுகின்றன.

3. 8. விதவையர் நிலை

இவ்வியல் இளம் விதவையர், முதிய விதவையர் நிலைகள் பற்றி ஆராய்கின்றது.

இளம் விதவையின் மறுமணத்திற்கான காரணங்கள் சமூகவியல் கருத்துக்களோடு ஒப்பிடப்பட்டு ஆராயப்படுகின்றன. விதவை மறுமணத்தடைக்கு ஆணின் உடமை உணர்ச்சியும், பழமையைப் போற்றும் மரபும் காரணங்களாகக் காணப்படுகின்றன. மறுமணம் செய்துகொள்ளும் விதவையரைச் சூடாமணி தம் நாவல்களில் சித்திரிக்கின்றார். லக்ஷ்மி இதனைச் சித்திரிக்கவில்லை. கணவனை இழந்த இளம் விதவையர் வாழ்வில் ஒரு 'திசைமாற்றம்' ஏற்படவில்லையெனில் அவர்களது வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது. ஒரு பெண் துணையினால் வாழ்க்கையின் இனிமையை நன்கு அறிந்த, நுகர்ந்த அண்ணன்மார் தம் தங்கையர் அவ்வினிமையை இழந்தபொழுது அதன் கொடுமையை உணர்ந்து அவ்வினிமையை மீட்டுத்தர முனைகின்றனர்; இளம் விதவையின் மறுமணத்திற்கு அவர்களது குழந்தையும் காரணமாகின்றது பெண் குழந்தையையுடைய இளம் விதவை, தன் எதிர்காலம் பற்றிய அச்சம் காரணமாக மறுமணம் செய்து கொள்கின்றாள் என்றும், ஆண் குழந்தையையுடைய இளம் விதவைக்கு எதிர்காலம் பற்றிய அச்சம் இல்லை என்பதால் அவள் மறுமணம் செய்து கொள்ளாமல் இருந்திருக்கலாம் என்றும் கருத்துக்கள் பெறப்படுகின்றன; இளம் விதவையர் மறுமணம் செய்து கொள்ள முனைவதற்கு அவர்கள் வாழும் இடங்களும் கல்வியும் காரணங்களாகின்றன.

இளம்விதவைச் சித்தரிப்பில் லக்ஷ்மியின் நாவல்கள் சமுதாய மரபைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன; சூடாமணியின் நாவல்கள் மரபு மீறிய நிலையைச் சார்ந்தவையாகக் காணப்படுகின்றன.

முதுமையில் விதவைநிலை ஒரு மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. குழந்தையுடைய விதவை, தன் குழந்தையைச் சார்ந்தே வாழ்கின்றாள்; குழந்தை இல்லாத விதவை துன்பப்படும் நிலை காணப்படுகின்றது; ஒருவிதவைத்தாய் திருமணமான மகளுடன் போய் வாழ்வதை எந்த நாவலும் சித்திரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது என்ற முடிவுகள் இவ்வியலில் விளக்கப்படுகின்றன.

3. 9. விலைமகளிர்

இவ்வியலில் விலைமகளிர் விடுதி, விலை மகளிர் பண்பு, பெண்கள் விலைமகளிராதற்குரிய காரணங்கள், பரத்தைமையில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆடவர் பங்கு என்பன சமூகவியல் கோட்பாடுகளின் பின்னணியில் ஆராயப்படுகின்றன.

விலைமகள் விடுதி வெளிப்பார்வைக்குக் கலைக்கூடமாகவும், உள்ளே அருவெறுக்கத்தக்க வாழ்க்கையையும் கொண்டுள்ளது; விலைமகள் விடுதிக்குள் அகப்பட்டுக்கொண்ட பெண்கள் எளிதில் தப்பமுடியாது. விலைமகள் விடுதித் தலைவி ஒரு பெண்ணைத் தன் தொழிலுக்கு இழுக்க எவ்விதக் கொடுமைகளையும் செய்யத் துணிவாள் என்ற கருத்துக்கள் இரு படைப்பாளிகளின் நாவல்களின்வழிப் பெறப்படுகின்றன.

பெண்கள் விலைமகளிராதற்குரிய காரணங்கள் சமூகவியலார் கூறும் காரணங்களுடன் ஒப்பிட்டு ஆராயப்படுகின்றன. பொருளாதாரச் சிக்கல், தந்தை இழப்பு, கீழான ஒழுக்க நிலை, அறியாமை, ஏமாற்றப்படுதல், கற்புநெறி தவறிய பெண்மைக்கு எதிரான சமுதாய மதிப்புக்கள் ஆகியவற்றை பெண்கள் விலை மகளிராகக் காரணங்களாக லக்ஷ்மி சித்திரிக்கின்றார். பெற்றோர் இறப்பு, கட்டுப்பாடற்ற பாலுணர்வில் ஆர்வம், பழிவாங்குவதில் விருப்பம், திருமணத்தில் வெறுப்பு, தீயோர் தொடர்பு, புதிய அனுபவங்களில் ஆசை, கீழான ஒழுக்கநிலை, அறியாமை, ஏமாற்றப்படுதல் எனும் ஒன்பதும் பெண்கள் விலைமகளிராகக் காரணங்கள் எனச் சூடாமணி சித்திரிக்கின்றார்.

லக்ஷ்மியின் நாவல்களில் படைக்கப்பட்டிருக்கும் தேவதாசிகள் ஒரு ஆடவனுக்கு மனைவியராகவே வாழ்கின்றனர்; தேவதாசிக்குலப் பெண் தன்குலச் சிறுமையைப் போக்கி உயர்நிலையடைய கல்வியின் துணையை நாடுகின்றாள் எனச் சூடாமணி சித்திரிக்கின்றார். எனவே, தேவதாசி அமைப்பு பரத்தமை வளர்ச்சிக்குக் காரணம் என்ற சமூகவியலார் கருத்து இவ்விரு படைப்பாளிகளாலும் மறுக்கப்படும் உண்மை பெறப்படுகின்றது.

ஆடவர் திருமணமாவதற்கு முந்திய நிலை, திருமணமான நிலை, மனைவியை இழந்த நிலை என்ற மூன்று நிலைகளிலும் தம் உடல் தேவைகளுக்காகப் பெண்களை நாடுவதால் பரத்தையர் தொழிலின் வளர்ச்சிக்கு ஆடவரும் காரணமாகின்றனர் என்ற கருத்து இரு படைப்பாளிகளின் நாவல்கள் வழி பெறப்படுகின்றது.

சமூகவியலார் பெண்கள் விலைமகளிராகப் பல காரணங்களைக் காட்டுகின்றனர்; இவ்விரு படைப்பாளிகளும் அக்காரணங்கள் தோற்றுகின்ற வாழ்க்கைச் சூழலைத் தம் நாவல்களில் படைக்கின்றனர்; ஆயினும் அவைதாம் பெண்கள் விலைமகளிராகக் காரணங்கள் என்று படைக்கவில்லை இத்தகு வாழ்க்கைச் சூழலிலும் பல பெண்கள் கற்போடு வாழ்கின்றனர். பெண்ணின் மனநிலைதான் அவள் விலைமகளாவதற்குக் காரணம் என்ற கருத்தினைப் படைப்பாளிகள் தம் நாவல்களின்வழி புலப்படுத்துகின்றனர் என்ற கருத்து பெறப்படுகின்றது; இப்படைப்பாளிகளின் படைப்பிலக்கியங்கள் காட்டும் கருத்தைச் சமூகவியலார் காட்டவில்லை என்ற வேறுபாடும் இவ்வியலில் பெறப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. முடிவுரை

சமூகவியலார் கோட்பாடுகளோடு சமூக நாவல்களை ஒப்பிட்டுக் காண்கையில் ஏற்படும் சிக்கல்கள் குறிப்பிடப்படுகின்றன. சமுதாயத்தைப்பற்றி, சமூகவியலார் ஆய்ந்து கூறும் கருத்துக்களைப் படிக்காமல் சமூக நாவல்களை உருவாக்கும் நாவலாசிரியர்கள், சமூகவியலைப் படித்தால் அவர்கள் எழுதும் நாவலின் போக்கு மாறுமா என்ற வினாவிற்கு விடை காண முயலுகின்றது. சமூக ஆராய்ச்சியாளர்களாய்ச் சமூகத்தைச் சித்திரிக்கும் சமூக நாவலாசிரியர்களுக்குச் சமூகவியல் அறிவு தேவை; சமூகவியலாரும் சமூக நாவல்களைப் படித்து அறிந்தால், சமுதாயத்தை மேலும் புதிய முறையில் ஆராய இயலும் என்ற கருத்துக்கள் விளக்கப்படுகின்றன.

பின்னிணைப்பு

ஆய்வேட்டின் இறுதியில் கீழே சுட்டப்படும் செய்திகள் பின்னிணைப்புக்களாக (Appendices) அமைகின்றன.

1. படைப்பாளிகளுக்கு ஆய்வாளர் விடுத்த வினாப்பட்டிகள்
2. பிற தகவலாளர்களுக்கு ஆய்வாளர் விடுத்த வினாப்பட்டி
3. சமூகவியலார் காட்டும் புள்ளிவிவரப் பட்டியல்கள்
4. துணை நூற்பட்டியல்

மேற்கோள் விளக்கம்

ஒவ்வொரு இயலின் தொடக்கத்திலும், அவ்வியலில் கூறப்படும் செய்திகள் சுருக்கமாகக் காட்டப்பட்டுள்ளன.

இயல்கள்தோறும் அந்தந்த நாவல்களின் மேற்கோள்கள், செய்திகள் ஆகியவற்றைக் குறிப்பிடும்பொழுது, நாவல்களின் பெயர், மேற்கோள் அல்லது பத்திகளின் தொடக்கத்திலும் அதற்குரிய பக்க எண்கள் மேற்கோள் அல்லது செய்திகளின் இறுதியில் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன. பிற ஆசிரியர்களது நூல்கள் ஆய்விற்குத் துணையாக அமையும் பொழுது கருத்தின் முடிவில் ஆசிரியர் பெயர், நூல் வெளியான ஆண்டு, பக்க எண் என்ற முறையில் அடைப்புக்குறிக்குள் கொடுக்கப்பட்டுள்ளன

லக்ஷ்மியின் 'அரக்குமாளிகை' என்ற நாவல் நூலாக இதுவரை வெளிவரவில்லையாதலால், அந்நாவலை மேற்கோளாகக் காட்டும் பொழுது பக்களண்கள் கொடுக்கப்படாமல் ஆனந்த விகடன் வார இதழின் தொகுப்பில் வெளிவந்த அத்தியாய எண் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. ஆசிரியர் அறிமுகம்

2. 1. லக்ஷ்மி

குழந்தைப் பருவத்தில் தம்மை வளர்த்த பாட்டியின் பெயராகிய லக்ஷ்மி என்பதைத் தமது புனைப்பெயராகக் கொண்டுள்ள டாக்டர் திரிபுரசுந்தரி 23.3.1921-இல் பிறந்தார். இவரது சொந்த ஊர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த முசிறி. தந்தை மருத்துவராகப் பணியாற்றியதால் சிறுவயது முதற்கொண்டே லக்ஷ்மியும் மருத்துவராக வேண்டும் என்று விரும்பினார். இளம் வயதிலேயே தாயை இழந்த இவருக்கு உடன்பிறந்தோர் மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரனுமாவார்.

லக்ஷ்மியின் தந்தை தொண்டியம் கிராமத்தில் பணியாற்றிய காலத்து அவ்வூர் ஜமீன்தார் குடும்பத்திற்கும் இவர் குடும்பத்திற்கும் இடையே பழக்கம் ஏற்பட்டது. ஜமீன்தாரின் பெரிய நூலகத்தில் இருந்த பல தமிழ், ஆங்கில நூல்கள் இவரது இலக்கிய அறிவை வளர்த்தன.*

1940-இல் மருத்துவ மாணவியாக இருக்கும்பொழுதே லக்ஷ்மி எழுதத் தொடங்கினார். தந்தையின் உடல்நலக் குறைவின் காரணமாகக் குடும்பத்தில் வறுமை நிலவியது. உழைத்து முன்னேறவேண்டும் என்ற எண்ணத்தினால் லக்ஷ்மி ஆனந்த விகடன் ஆசிரியர் வாசனைச் சந்தித்தார். வாசன் பண உதவி செய்ய முன்வந்த பொழுது அதனை மறுத்து எழுத வாய்ப்பு கேட்டார். எழுத்தினால் தம் வருவாயைப் பெருக்கிக் கொண்ட லக்ஷ்மி தம்முடைய கதைகளில் தன்னைப் போலவே ஒருபெண் உழைத்து முன்னேற வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகின்றார்.[T] ஆனந்தவிகடன் இதழில் வெளிவந்த 'தகுந்த தண்டனை' என்ற இவரது முதல் கதையைப் படித்த கல்கி, ''என்னையும் மிஞ்சிவிடுவே'' என்று பாராட்டியதை லக்ஷ்மி இன்றளவும் நினைவு கூர்கின்றார்.

---

* லக்ஷ்மி. ''கெட்டுப்போகிற பெண்களைப்பற்றி நான் எழுதமாட்டேன்.'' (கல்கி, 23.11.'80)

T லக்ஷ்மி, ''சம்பாதிக்க மட்டுமே நினைத்தால் கடத்தல் வியாபாரம் செய்துகூட சம்பாதிக்கலாம்.'' (துக்ளக், 1.10.'80).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1944-இல் இவரது முதல் நாவலான 'பவானி' வெளி வந்தது. அதே ஆண்டிலேயே 'பெண் மனம்' நாவலையும் லக்ஷ்மி எழுதினார். 1946-இல் மருத்துவப் பட்டம் பெற்ற பின்னர் தமக்கு அறிமுகமான ஜமீன்தார் குடும்பத்தைப் பின்னணியாகக் கொண்டு கற்பனையையும் கலந்து 'காஞ்சனையின் கனவு' நாவலை எழுதி-னார். ஆனந்தவிகடன் இதழில் தொடர்கதையாக வெளிவந்த லக்ஷ்மியின் நாவல்களுக்கு வாசகர்களிடையே மிகுந்த வரவேற்பு இருந்தது. எனவே தொடர்ந்து ஆனந்தவிகடன் இதழ் இவரது நாவல்களைத் தொடர்கதைகளாக வெளியிட்டது. 1948-இல் 'லட்சியவாதி', 1949-இல் 'மிதிலா விலாஸ்', 1951-இல் 'சூர்ய காந்தம்', 1952-இல் 'நாயக்கர் மக்கள்', 'அடுத்த வீடு', 1953-இல் 'ஸ்ரீமதி மைதிலி', 1955-இல் 'பண்ணையார் மகள்' ஆகிய நாவல்கள் தொடர்கதைகளாக ஆனந்த விகடன் இதழில் வெளி வந்தன.

1955-இல் இவருடைய திருமணம் நடைபெற்றது. தென் ஆப்பிரிக்காவில் பணியாற்றிய கணவருடன் அங்குச் சென்றார். அங்கிருந்து கொண்டே 'அரக்கு மாளிகை' நாவலை 1959-இல் எழுதினார், தென்னாப்பிரிக்காவிலும் தம் கணவர் நடத்திவந்த 'கிராஃபிக்' (Graphic) என்ற பத்திரிகையின் பெண்கள் பகுதியின் பொறுப்பாளராகப் பணியாற்றினார்.

1950-இல் லக்ஷ்மியின் 'மரகதம்' என்ற நாவல் இன்ப நிலையத்தாரால் நூலாக வெளியிடப்பட்டது. 1950-இல் திருச்சி வானொலி நிலையத்தாரால் ஒலிபரப்பப்பட்ட 'கானல்நீர்' என்ற தொடர் சித்திரம் அதே ஆண்டு அல்லையன்ஸ் கம்பெனியாரால் 'மாயமான்' என்ற நாவலாக வெளியிடப்பட்டது.

ஆனந்தவிகடன் இதழுடன் லக்ஷ்மிக்கு இருபத்தேழு ஆண்டுத்தொடர்பு உண்டு. ஆண்டுதோறும் கலைமகள் தீபாவளி மலரிலும் இவருடைய கதை வெளிவருவது வழக்கமாகக் காணப்-பட்டது.

மலேஷியாவில் பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்களில் ஒன்றாக வைக்கப்பட்டிருக்கும் 'வீரத்தேவன் கோட்டை' லக்ஷ்மியின் முதல் வரலாற்று நாவலாகும். ஆனால் அந்நாவல் இவருக்கு மனநிறைவு தராததால் வரலாற்று நாவல் எழுதும் முயற்சியைக் கைவிட்டு-விட்டார்.

நாவல் எழுதும்போழுது தமக்கு இருக்கும் உற்சாகமும், மனஒன்றிப்பும் சிறுகதை எழுதும்பொழுது இல்லை எனக்கூறும் லக்ஷ்மி ஏறத்தாழ முந்நூறு சிறுகதைகளை எழுதியவர். 'நீலப்-புடவை', 'விசித்திரப் பெண்கள்', 'படித்த மனைவி' என்ற மூன்று சிறுகதைத் தொகுப்புக்கள் நூல்வடிவில் வெளிவந்திருக்-கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

டாக்டர் என்ற முறையில் பல நோயாளிகளிடம் பழகும் போது கேள்விப்படும் பல அனுபவங்கள் சிறிதளவு கற்பனையுடன் கதைகளாக மாறி விடுகின்றன என்று தம் கதைகளைப் பற்றிக் கூறும் லக்ஷ்மி, ஜேன் ஆஸ்டினைப் போன்று தமக்குத் தெரிந்த வட்டாரங்களையே தம் நாவல்களின் பின்னணியாகக் கொண்டிருக்கின்றார். இவரது 'மிதிலா விலாஸ்' நாவலில் படைக்கப்பட்டுள்ள தர்மாம்பாள், 'ஸ்ரீமதிமைதிலி' நாவலில் படைக்கப்பட்டுள்ள சாம்புத் தாத்தா ஆகியோர் இன்றளவும் சென்னையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களேயாவர் எனத் தம் நாவலின் யதார்த்த பாத்திரப் படைப்புக்களைப் பற்றி லக்ஷ்மி குறிப்பிடுகின்றார்.

நாவலை எழுதும்பொழுது நாவலுடன் மனம் ஒன்றிப்போகும் பண்புடைய லக்ஷ்மி, 'காஞ்சனையின் கனவு' இறுதி வரிகளை இரவில் மருத்துவ வார்டில் எழுதிமுடித்த பின்னர், ''காலையில் வீட்டிற்குச் செல்ல மருத்துவமனை வாயிலில் நின்று கொண்டிருக்கும் பொழுது என்னையறியாமலேயே அழுதேன்'' என்று கூறுகின்றார். *

எளிமை, அன்பு இவற்றையே தமது பண்புகளாகக் கொண்டிருக்கும் லக்ஷ்மி பெண்கள் இன்றளவும் அடிமைபோல் நடத்தப்படுவதை வெறுக்கின்றார். பெண்களின் உயர்வைச் சித்திரிப்பதற்காகவே தம் கதைகளில் பெண்களை உயர்த்திக் கூறும் குறிக்கோளைக் கொண்டுள்ள லக்ஷ்மி, கதை என்றால் அது ஒரு நீதியைக் கட்டாயம் கூறவேண்டும் என்று வலியுறுத்துகின்றார். மிக உன்னதமான உணர்வாகிய பாலுணர்வுகளை மனிதாபிமானத்தின் உயர்வுக்காகப் பிரதிபலிக்கச் செய்யவேண்டுமேயன்றி, கீழ்மட்டத்திலுள்ள பாலுணர்வை மட்டும் மிகைப்படுத்திக் கதை எழுதுவது வரவேற்கத்தக்கதல்ல* என்று இன்று புற்றீசல்போல் வெளிவருகின்ற 'நியூவேவ்' கதைகளை லக்ஷ்மி வெறுக்கின்றார்; வியாபார நோக்கத்துடன் பத்திரிகைகள் செயல்பட்டாலும் அதற்கும் சில நியாய வரம்புகள் தேவை என்று வியாபாரக் குறிக்கோளுடன் பாலுணர்வுக் கதைகளை மிகுதியாக வெளியிடும் பத்திரிகைகளைச் சாடுகின்றார்.

நாவலாசிரியராக மட்டுமல்லாது மருத்துவராகவும் பணியாற்றும் லக்ஷ்மி 'தாய்மை', 'பத்துமாதம்', குழந்தை வளர்ப்பு, 'குழந்தை வைத்தியம்', 'ரகசியநோய்கள்' எனும் மருத்துவநூல்களையும் எழுதியுள்ளார். தமிழ்க்கலைக் களஞ்சியத்திற்காகக் குழந்தை நோய்களைப்பற்றித் தொகுத்து உதவியுள்ளார்.

லக்ஷ்மி, தம்முடைய தென் ஆப்பிரிக்க வாழ்க்கையைப்பற்றி 1963-64-இல் 'இருண்ட கண்டத்தில் எட்டு ஆண்டுகள்' என்று பன்னிரண்டு கட்டுரைகளாக ஆனந்தவிகடன் இதழில் எழுதி-

---

* 13. 1. 79-இல் ஆய்வாளர் லக்ஷ்மியுடன் நடத்திய பேட்டி.

* சரஸ்வதி ராம்நாத், 'பெண் எழுத்தாளர் பேட்டி - லட்சுமி', மங்கை, 1. 7. '76.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யிருக்கின்றார். இவரது 'நாவல் எழுதுவது எப்படி'? என்ற கட்டுரை 1952-இல் அகில இந்திய வானொலி நிலையத்தாரால்-டெல்லியில் ஒலிபரப்பப்பட்டது.

1976-இல் கணவனின் இறப்பிற்குப் பின்னர் இந்தியாவிற்குத் திரும்பியிருக்கின்றார். 1966-லிருந்து 1970 வரை இந்தியத் தமிழ்ப்பத்திரிகைகளுக்கு லக்ஷ்மி கதை ஏதும் எழுதவில்லை.

மொழி பெயர்ப்பு

லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவல் இந்தி, ரஷ்ய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'நாயக்கர் மக்கள்' என்ற நாவல் சோமசுந்தரம் என்பவரால் ரஷ்ய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. 'அரக்கு மாளிகை' நாவல் திருமதி. கிருஷ்ணமூர்த்தியால் தெலுங்கிலும், ஜெயலக்ஷ்மி ஸ்ரீனிவாசனால் கன்னடத்திலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பெற்ற பரிசுகள்

1951-இல் லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு' பட்சிராஜா படத்தயாரிப்பாளர்களால் தமிழ், தெலுங்கு, மலையாளம் என்ற மூன்று மொழிகளிலும் திரைப்படமாக்கப்பட்டது. படத்தின் வெற்றியைக் கண்ட திரைப்பட இதழான பேசும்படம் இதற்கெனத் தனிச் சிறப்பிதழ் வெளியிட்டு அவ்வாண்டின் சிறந்த திரைக்கதை ஆசிரியர் என்ற சிறப்பினை லக்ஷ்மிக்கு வழங்கியது.

லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவலைப் பிரசாத் புரொடக்ஷன் நிறுவனத்தார் 'இருவர் உள்ளம்' என்ற பெயரில் திரைப்படமாக்கினர். 1963-இல் சினிமா ரசிகர் மன்றம் இவரை அவ்வாண்டின் சிறந்த எழுத்தாளர் என்ற விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது.

1948-இல் லக்ஷ்மியின் 'தாய்மை' எனும் மருத்துவநூல் இலங்கையில் நடைபெற்ற தமிழ் மகாநாட்டில் சிறந்த மருத்துவ நூலுக்கான பரிசைப் பெற்றது. 'தாய்மை', 'குழந்தை வைத்தியம், ஆகிய இரு மருத்துவநூல்களும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசுகளைப் பெற்றன.

1948-இல் லக்ஷ்மியின் 'பெண்மனம்' என்ற நாவலும், 1949-இல் 'மிதிலா விலாஸ்' நாவலும் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசுகளைப் பெற்றன.

2. 2. சூடாமணி

1936-இல் பிறந்த சூடாமணி சென்னையைத் தம் பிறப்பிடமாகக் கொண்டவர். தந்தை ஐ.சி.எஸ். அதிகாரி. பெற்றோரின் மூன்றாவது மகளான இவர் தம் உடல்நலக்குறைவின் காரணமாக வீட்டிலேயே ஆசிரியர்கள் துணையுடன் ஆங்கிலமும் தமிழும் பயின்றார். இலக்கியத்திலும் கலைகளிலும் ஈடுபாடு கொண்டிருந்தவர்களின் பழக்கம் காரணமாகச் சூடாமணிக்கு அவற்றை ரசிப்பதில் ஈடுபாடும், அவற்றை மதிக்கும் மனப்பான்மையும் ஏற்பட வாய்ப்பு கிட்டியது. இலக்கியம், ஓவியம், இசை இம்மூன்றையும் ரசிப்பதில் இவருக்குமிக விருப்பம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1954 முதல் சூடாமணி தமிழில் கதையெழுதத் தொடங்கினார். நாவல்களைவிட, சிறுகதைகளிலேயே இவருக்கு ஆர்வம் இருந்ததால் சிறுகதைகளையே மிகுதியாக எழுதினார். 1955-ல் தாயை இழந்தார். தந்தையின் முயற்சியாலேயே சிறந்த எழுத்தாளராக உருவாகியுள்ள சூடாமணியின் கதைகளில் தாய்ப்பாசமும், தந்தைப் பாசமும் மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டிருக்கும் நிலையைக் காணமுடிகின்றது.

1959 - இல் கலைமகள் இதழில் இவரது 'மனத்துக்கினியவள்' நாவல் வெளிவந்தது. 1964-இல் ஆனந்தவிகடன் இதழில் 'புன்னகைப் பூங்கொத்து' என்ற நாவல் வெளியாகியது. 1966-இல் தீபம் இதழில் 'தீயினில் தூசு' நாவல் வெளியாகியது. 1967-இல் 'நீயே என் உலகம்', 'தந்தை வடிவம்' நாவல்கள் எந்த இதழ்களிலும் வெளிவராது நாவல்களாகவே வெளிவந்தன. 'மானிட அம்சம்' என்ற நாவல் 1974-ல் வெளிவந்தது.

1959-இல் சூடாமணியின் முதல் குறுநாவலான 'விடிவை நோக்கி' வெளியாகியது. 1960-இல் 'ஆழ்கடல்', 'மகளின் கைகள்' என்ற இரு குறுநாவல்களும், 1963-இல் 'மங்கை', 'பிஞ்சுமுகம்' என்ற இரு குறுநாவல்களும், 1966-இல் 'சோதனையின் முடிவு', 'அஞ்சனவிழிகள்' என்ற இரு குறுநாவல்களும், 1967-இல் 'உயர்வு உள்ளத்திலே' என்ற குறுநாவலும், 1969-இல் 'வாழ்த்துவோம்' என்ற குறுநாவலும், 1972-இல் 'உள்ளக்கடல்' என்ற குறுநாவலும், 1974-இல் 'இரவுச்சுடர்' என்ற குறுநாவலும் வெளியிடப்பட்டன.

சூடாமணி ஏறத்தாழ முந்நூறு சிறுகதைகள் எழுதியுள்ளார். அவை பதின்மூன்று தொகுப்புகளாகப் புத்தக வடிவில் வெளிவந்துள்ளன; மூன்று நாடகங்களும் எழுதியுள்ளார்.

உடல்நலக் குறைவுடைய சூடாமணியின் கதைகளில் அப்பாதிப்பினைக் காணமுடிகின்றது அவரது பெரும்பாலான கதைகளில் உடற்குறையுடைய ஒரு பாத்திரப்படைப்பு, அப்பாத்திரத்தின் உணர்ச்சிப் போராட்டங்கள் ஆகியவை சித்திரிக்கப்பட்டிருக்கும். ''நான் நினைத்து அவ்வாறு எழுதவில்லை; என்னுடைய அடிமனதிலிருந்து என்னையறியாமலே இவ்வாறு எழுதுகிறேனோ என்பதும் எனக்குத் தெரியவில்லை. ஆனால் என்னுடைய 1974-க்குப் பின் வந்த கதைகள் மாறுபட்டிருக்கும்'' என்று சூடாமணி தம் கதைகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். வெளிஉலகப் பழக்கம் மிகுதியும் இல்லாத சூடாமணியின் படைப்புக்களில் கற்பனையின் அடிப்படையில் அமைந்த குறிக்கோள் போக்கு மிகுதியாகக் காணப்படுவதற்கு அவரது வாழ்க்கைப் பின்னணி காரணம் எனத் தெரிகின்றது. ஐ.சி.எஸ். அதிகாரியின் மகளான சூடாமணிகு மேல் மட்ட மனிதர்களிடையே பழகும் வாய்ப்பு இருந்தமை, அவர் தமது கதைகளில் பல முற்போக்குக் கருத்துக்களை வலியுறுத்தத் துணை செய்தது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆங்கிலத்தில், சூடாமணி ராகவன் என்ற பெயரில் 1962-லிருந்து சூடாமணி கதைகள் எழுதி வருகின்றார். Eves Weekly-Mirror, Mail, The Hindu, Statesmen, Femina, Women's Era, Caravan, Sunday Standerd எனும் இதழ்களில் ஏறத்தாழ நூற்று எண்பது சிறுகதைகள் வெளிவந்துள்ளன.

பெற்ற பரிசுகள்

1957-இல் கலைமகள் வெள்ளிவிழாச் சிறுகதைப் போட்டியில் 'காவேரி' என்ற சிறுகதை பரிசு பெற்றது.

1957-இல் கல்கி மாதப் பரிசுப் போட்டியில் 'நட்சத்திரம்' என்ற சிறுகதை பரிசு பெற்றது.

1959-இல் கலைமகள் 'நீலக்கடல்' போட்டியில் 'கடலின் குழந்தை' என்ற சிறுகதை பரிசு பெற்றது.

1959-இல் கலைமகள் ஸ்ரீ நாராயணசுவாமி அய்யர் நாவல் போட்டியில் 'மனத்துக்கினியவள்' நாவல் முதல் பரிசு பெற்றது.

1961-இல் 'இருவர் கண்டனர்' நாடகம் ஆனந்தவிகடன் இதழ் நடத்திய நாடகப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது.

1965-இல் 'அன்புடன் மரகதம்' நாடகம் தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் புதுநாடக உதவி மானியத்தைப் பெற்றது.

1966-இல் 'அருணோதயம்' நாடகம் பம்பாய்த் தமிழ்ச் சங்கம் நடத்திய வெள்ளிவிழா நாடகப் போட்டியில் முதல் பரிசு பெற்றது.

1966-இல் 'மனத்துக்கினியவள்' நாவல் தமிழ்நாடு அரசாங்கம் தமிழ் வளர்ச்சி ஆராய்ச்சி மன்றத்தாரால் பரிசுக்குரியதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

'இலக்கியச் சிந்தனை அமைப்பின்' சார்பில் சிறுகதைகளுக்குக் கிடைத்த பரிசுகள்:

'நாம் என்ன செய்வது?' (அக்டோபர், 1970)
'அரும்பு உலகம்' (மே, 1971)
'நான்காம் ஆசிரமம்' (பிப்ரவரி, 1972)
'நான்காம் ஆசிரமம்' (ஆண்டுப் பரிசு, 1973)
'வாசலில் ஒருத்தி' (மார்ச், 1978)
'நெருப்பு' (ஜுன், 1978)

மொழிபெயர்ப்பு

சூடாமணியின் 'பிஞ்சுமுகம்', 'விடிவை நோக்கி' என்ற குறுநாவல்கள் இந்தியில் வெளிவரும் தர்மயுக் இதழில் மொழி பெயர்க்கப்பட்டு வெளிவந்தன 'மகளின் கைகள்' என்ற குறுநாவலின் கன்னட மொழி பெயர்ப்பு புத்தகமாக வெளிவந்துள்ளது. இவரது முப்பது சிறுகதைகள் இந்தியில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. குஜராத்தி, மராத்தி, மொழிகளிலும் இவரது கதைகள் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 1 காதல்

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

இவ்வியல் காதலின் வகைகளை ஆராய்கின்றது. காதல் இருமனக் காதல், ஒருமனக் காதல் எனும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றது. இருமனக் காதல் இயல்புக் காதல், உயர் காதல் என இருவகைப் படுத்தப்படுகின்றது. ஒரே வீட்டில் வளரும் உறவினரிடையே காதல் தோன்றி வளர வாய்ப்பு ஏற்படுகிறது. முன்பின் அறியாதவரிடையே தோன்றும் காதல் ஒரே இனத்தில் தோன்றுவது, வேறு இனத்தில் தோன்றுவது என வகைப்படுத்தப்படுகின்றது. காதல் வெற்றி பெறும் நிலையில் நிறைவேறும் காதல் என்றும் தோல்வியுறும் நிலையில் நிறைவேறாக் காதல் என்றும் குறிக்கப்படுகின்றன. ஓர் ஆணுக்குப் பெண்ணிடம் காதல் தோன்றுவதற்குரிய காரணங்கள், பெண்ணிற்கு ஆணிடம் காதல் தோன்றுவதற்குரிய காரணங்கள் முதலியன ஆராயப்படுகின்றன; வேறுஇனக் காதலாகிய கலப்புக் காதலில் பெற்றோரின் பங்கு, கலப்புக் காதல் தோன்றுவதற்கான சூழல்கள், படைப்பாளிகள் காட்டும் கலப்புக் காதல் பற்றிய கொள்கைகள் முதலியன ஒப்பிடப் பட்டு மதிப்பிடப்படுகின்றன; காதலின் உயர்நிலை ஆராயப்படுகின்றது; ஆணிடத்தில் தோன்றிப் பெண்ணிடத்துத் தோன்றா ஒருமனக் காதல், பெண்ணிடத்துத் தோன்றி ஆணிடத்துத் தோன்றா ஒருமனக் காதல் முதலியன ஆராயப்படுகின்றன. இறுதியில் இரு படைப்பாளிகளின் காதல் சித்திரிப்புகள் அட்டவணைவழி ஒப்பிடப்பட்டு மதிப்பிடப்படுகின்றன.

3. 1. காதல்

3. 1. 0. 1. காதல் அனுபவம் அழகானது; அது தொடும் அனைத்தையும் அழகாக்க வல்லது; ஆர்வமும் உயர்ந்த உரிமையும் உடையது; அச்சத்திற்கு மாற்றாக உள்ளது; உற்பத்தித் திறனுடையது; உண்மையான மன அமைதி, மிக உயர்ந்த மகிழ்ச்சி முதலியவற்றிற்குக் காரணமாவது; வெறுப்பு, பித்து, துன்பம், இறப்பு, அழிவு முதலியவற்றுக்கெல்லாம் மிகச் சிறந்த மருந்தாக அமைவது; அனைத்துக்கும் மேலாக 'தான்' எனும் அகந்தையை எல்லையற்ற பெருந்தன்மையாக மாற்றவல்லது (P. Sorokin, 1950, pp. 5-6). அடிப்படையில் காதல் (love) என்பது ஒருவரை மற்றொருவரிடம் உண்மையாகவும் நேர்மையாகவும் ஈடுபாடு கொள்ளச் செய்யும் கட்டுப்பாடற்ற உணர்ச்சி ஆகும் (Mariasusai Dhavamony, 1971, p. 14).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆண்-பெண் உறவிற்கு இன்றியமையாத காதல் உணர்வின் தோற்றத்திற்குக் காரணம் யாது என்பதை வரையறுத்துக் 'கூற இயலாது. இயற்கையின் நியதியால் தோன்றும் காதலைப் 'பாலது ஆணை' எனத் தொல்காப்பியம் (தொல், கள, 2) கூறும், காதல் உணர்ச்சியால் கலந்த இரு நெஞ்சங்களைச் 'செம்புலப் பெயல் நீர் போல் கலந்தது' எனக் குறுந்தொகை உவமைப்படுத்தும் (குறுந். 40). இவ்வுணர்ச்சியின் சிறப்பை 'மகிழ்ச்சியான பரஸ்பரக் காதலினால் விளையும் ஆழ்ந்த நெருக்க உணர்ச்சியையும், தோழமை உணர்ச்சியையும் அறியாதார், வாழ்க்கை அளிக்கும் மிகச் சிறந்தவற்றை அடையும் பேறு பெறாமற் போனவர்களே யாவர்' என்பார் ரஸ்ஸல் (Bertrand Russel, 1959, p. 62), மேலும் இவர், 'காதல் என்ற சொல் ஆண்-பெண் இருபாலாரிடையே காணும் ஏதாவது உறவையோ அல்லது ஒவ்வோர் உறவினையோ குறிக்காது, மிக்க மனவெழுச்சியூட்டுவதுடன் மன உறவும் உடல் உறவும் கொள்ளும் ஒன்றையே குறிக்கும்' என்பார் (1959, p. 59). பெற்றோர்க்கும் குழந்தைகளுக்குமிடையே, அரசனுக்கும் குடிகளுக்குமிடையே ஏற்படும் பாலுணர்ச்சியில் உந்துதல் (libido) இல்லாத காதல் அன்பு; கணவன் மனைவியாக உரிமை பெற்ற (conjugal right) ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் பாலுறவுத் தொடர்பான காதல் 'காதல்' என்று மரியசூசை தவமணி, அன்பு. காதல் என்ற இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டைக் காட்டுகின்றார். (Mariasusai Dhavamony, 1971, pp. 25, 27).

3.1.0.2. காதலை மணத்திற்கு முந்திய காதல், மணத்திற்குப் பிந்திய காதல் என இருவகையாக வேங்கடராமன் பகுத்துள்ளார்; மேலும் இவர் மணத்திற்கு முந்திய காதலை உயிர்க் காதல், உடற் காதல், முழுமைக் காதலென வகைப்படுத்துகிறார் (சு. வேங்கடராமன், 1977, ப. 109). இவர் ''உயிர்க்குயிராகப் பழகி அன்பு செலுத்தும் ஆணும் பெண்ணும் உடலுறவு கொள்ளாத நிலையில் பழகுவது உயிர்க் காதலாகும். உடலுறவை மட்டும் அடிப்படையாகக் கொண்டு எழும் காதல் உடற்காதலாகும். ஓர் உயிரை மற்றொரு உயிர் நேசிக்கும் பண்பு, உடலுறவு பற்றிய எண்ணம், உடலுறவற்ற உயிர் ஒன்றிப்பு என்பவைகளில் ஒன்றோ பலவோ கலந்து வருவது முழுமைக் காதலாகும்,'' என்று மணத்திற்கு முந்திய காதலின் வகைகளுக்குப் பொருள் காண்கிறார்.

சிறுபிள்ளைக் காதல், வயது ஏற்றத்தாழ்வு மிக்க காதல் என்று காதலை மோகன் இருவகைப்படுத்தியுள்ளார் (இரா.மோகன் 1978, பக். 138-143). பத்து வயது முதல் பதினைந்து வயது வரை உள்ள இளம் உள்ளங்களில் ஏற்படும் காதலைச் சிறுபிள்ளைக் காதல் என்றும், வயது ஏற்றத் தாழ்வு மிகுதியாக உள்ள ஆண்-பெண் இருவரின் உள்ளத்து எழும் காதலை வயது ஏற்றத் தாழ்வு மிக்க காதல் என்றும் வகைப்படுத்துகின்றார்.

3.1.0.3. காதலைப் பற்றி அறிஞர்கள் தரும் கருத்துக்களை நோக்குகையில் காதல் என்பது மன ஒன்றிப்பில் தொடங்கி, உடல் ஒன்றிப்பில் முடிவடைகின்றது என்பது புலனாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதலில் முழுமை உடல் உறவில்தான் நிறைவுறுகின்றது. எனவே, வேங்கடராமனின் பாகுபாடு இங்கு மேற்கொள்ளப்படவில்லை.

மோகன், சிறு குழந்தைகளுக்கு இடையே தோன்றும் காதல், மிக்க வயது வேறுபாடு உடையவர்களிடையே தோன்றும் காதல் ஆகியவற்றையன்றி, இவ்விரண்டிற்கும் இடைப்பட்ட, ஒத்த வயதினரிடையே தோன்றும் காதலைச் சித்திரிக்கவில்லை.

எனவே, இவ்வாய்வில் காதல் வகைகள் இவற்றினின்றும் வேறுபட்டு ஆராயப்படுகின்றன.

3.1.0.4. காதலைப் பற்றிய சித்திரிப்பு லக்ஷ்மியின் (1) அரக்கு மாளிகை, (2) அடுத்தவீடு, (3) காஞ்சனையின் கனவு, (4) சூர்யகாந்தம், (5) நாயக்கர் மக்கள், (6) பண்ணையார் மகள், (7) பவானி, (8) பெண் மனம், (9) மாயமான், (10) மிதிலா விலாஸ், (11) மரகதம், (12) லட்சியவாதி ஆகிய பன்னிரண்டு நாவல்களிலும், சூடாமணியின் (1) அஞ்சனவிழிகள், (2) இரவுச்சுடர், (3) ஆழ்கடல், (4) உயர்வு உள்ளத்திலே (5) தந்தை வடிவம், (6) தீயினில் தூசு, (7) நீயே என் உலகம், (8) பிஞ்சுமுகம், (9) புன்னகைப் பூங்கொத்து, (10) மகளின் கைகள், (11) மனத்துக்கினியவள், (12) மானிட அம்சம் ஆகிய பன்னிரண்டு நாவல்களிலும் காணப்படுகின்றது.

3.1.1. *காதலின் வகை*

அன்பைச் செலுத்துவதாலும், அதனை மீண்டும் பெறுவதாலும் விளைகின்ற உறவு தனிமனிதனைக் குடும்ப வாழ்விற்கும் சமுதாய வாழ்விற்கும் ஏற்றவனாக உருவாக்குகிறது. மனிதனை மனிதனாக்கும் காதலின் பல்வேறு வகைகளை லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளின் நாவல்கள் சித்திரிக்கின்றன மனித இனத்தின் இன்பத்திற்கு அடிப்படையாக விளங்கும் காதலை இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களைக்கொண்டு இருமனக் காதல், ஒருமனக் காதல் என வகைப்படுத்தலாம்

தன்னை மறந்த நிலையினில் இரு உள்ளங்களிலும் தோன்றும் உணர்வே இருமனக் காதல் எனப்படுகின்றது. இக்காதல் ஒன்றித்த இரு மனங்களின் கூட்டுறவினால் விளைவது உறவு முறை உள்ளவரிடமும் இக்காதல் தோன்றுகின்றது; உறவுமுறை இல்லாதவரிடமும் தோன்றுகின்றது.

ஒருமனக் காதல் என்பது ஆணிடத்துத் தோன்றிப் பெண்ணிடத்துக் காதல் தோன்றாமலும், பெண்ணிடத்துக் காதல் தோன்றி ஆணிடத்துத் தோன்றாமலும் இருப்பது. இரு மனங்களின் ஒன்றிப்பு இங்கு இல்லை.

3. 1. 1. 1. *இருமனக் காதல்*

ஓர் ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் விரும்புகின்றனர்; அவ்விருப்பம் திருமண உறவில் சென்று முடிவது இருமனக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதலாகும். இதற்கு எல்லாவித எதிர்ப்புக்களையும் முறியடிக்கும் வலிமை உண்டு. மன உறவும் உடல் உறவும் கொள்ளவேண்டும் என்ற நிலையில் அமையும் இருமனக் காதலை இயல்புக் காதல் என்றும், உடல் உறவைப்பற்றி எண்ணாது மன உறவின் அடிப்படையில் அமையும் இருமனக் காதலை உயர்காதல் என்றும் இருமனக் காதலை இரு வகைப்படுத்தலாம். இவற்றுள் உயர்காதல் இயல்புக் காதலாகவும் மாறலாம். இயல்புக் காதல் உறவினரிடையே தோன்றும் காதல், உறவு இல்லாதவரிடையே தோன்றும் காதல் என்ற இரு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு இவண் ஆராயப்படுகின்றது.

3. 1. 1. 1. 1. *இயல்புக் காதல்*

3. 1. 1. 1. 1. *உறவினரிடையே தோன்றும் இயல்புக் காதல்*

ஓர் ஆணும் பெண்ணும் சிறு வயது முதற்கொண்டு ஒன்றாக ஒரே வீட்டில் வளர்கின்றனர். 'இவனுக்கு இவள்' என்று மற்றவர்கள் சுட்டிக்காட்டக்கூடிய நிலையில் உள்ள உறவுநிலை இருவரிடையே காதலைத் தோற்றுவிக்கின்றது. உறவுமுறைக் காதல் அனைத்தும் நிறைவேறும் எனக் கூறவியலாது. எனவே, இக்காதலை நிறைவேறும் காதல், நிறைவேறாக் காதல் என இருவகைப்படுத்தலாம்.

உறவினரிடையே தோன்றும் காதலை லக்ஷ்மியின் 'சூர்ய காந்தம்', 'மிதிலா விலாஸ்', 'நாயக்கர் மக்கள்' ஆகிய மூன்று நாவல்களும், சூடாமணியின் 'மனத்துக்கினியவள்' எனும் நாவலும் சித்திரிக்கின்றன.

3 1 1. 1. 1, 1 1. *நிறைவேறும் காதல்*

ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே மன ஒன்றிப்பில் தோன்றும் காதல் திருமணத்தில் முடிவது நிறைவேறும் காதல் எனப்படுகின்றது.

'சூர்யகாந்தம்' நாவலில் சிற்றன்னையின் கொடுமைக்குத் தப்பி அத்தையிடம் வளரும் தியாகராஜனும் அந்த அத்தையாலேயே வளர்க்கப்படும் தமயந்தியும் மாமன்மகன்-அத்தைமகள் உறவினராகச் சித்திரிக்கப்படுகின்றனர். தாயற்ற இருவரும் இளமையிலேயே ஒருவர்மீது ஒருவர் கொண்ட இரக்கம் உரிய வயதில் அவர்களிடையில் காதலாக மாறியது (ப 50) என உறவு முறைக்காதலுக்கான தோற்றத்தை லக்ஷ்மி விளக்குகின்றார்: மாமன்மகன்-அத்தைமகள் காதலை 'மிதிலா விலாஸ்' நாவலிலும் லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; இந்நாவலில் அத்தைமகன்-மாமன்மகள் காதலும் சித்திரிக்கப்படுகின்றது

சூடாமணியின் நாவலான 'மனத்துக்கினியவளி'லும் உறவினரிடையே தோன்றும் காதல் காணப்படுகின்றது. உடற்குறையுடைய லட்சுமி தன் மாமன்மகன் வாசுவைக் காதலித்தாலும், அதனை வெளியிடவில்லை. லட்சுமியின் உடற்குறை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யால் அவளைக் காதலிக்காத வாசுவும், நாளடைவில் லட்சுமி-யின் மாசற்ற அன்பை உணர்ந்து அவள் காதலை ஏற்க முன் வருகிறான். ''உனக்கு நான் அன்பால் கொடுக்கும் பரிசு குறை-யுள்ளதாக இருக்கக்கூடாது வாசு. குறைவுபடுத்தி என் உடலைத் தெய்வம் எடுத்துக்கொண்டது. குறைவில்லாத என் உள்ளத்தை உனக்குக் கொடுக்கிறேன்,'' (ப. 280) என்று அன்பை மட்டும் தர முன்வந்த லட்சுமி திருமணத்திற்கு மறுத்து விடுகின்றாள்.

லக்ஷ்மி, தம்முடைய நாவல்களில் உறவினரிடையே தோன்-றும் காதல், திருமணத்தில் முடிவதாகக் காட்டுகின்றார். சூடா-மணியின் நாவலில் உறவினரிடையே தோன்றும் காதல் திரு-மணத்தில் முடிவதாகக் காட்டப்படவில்லையெனினும் லட்சுமி வாசுவின் மனதுக்கினிய மாமன் மகளாகவே இருந்து விடுகின்-றாள். இருவரும் ஒருவர் மீது ஒருவர் கொண்டிருந்த காதலை உணர்ந்ததனால், காதல் திருமணத்தில் முடியாவிடினும் இதனை நிறைவேறும் காதல் என்றே கூறலாம்.

3. 1. 1. 1. 1. 1. 2. *நிறைவேறாக் காதல்*

காதல் தோன்றுவதற்கும் வளர்வதற்கும் உறவு ஒரு காரண-ணமாக இருப்பினும் காதலர்களின் போக்கில் ஏற்படும் மாறுதல் ஏதேனும் சிக்கலை ஏற்படுத்தியது எனில் அந்நிலையில் உறவு முறைக் காதல் திருமணமாக முடிவதில்லை; இத்தகைய காதல் நிறைவேறாக் காதல் எனப்படுகின்றது. லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' நாவலில், மாமன்மகள் திலகவதியும் அத்தைமகன் வசந்த-குமாரனும் காதலர்களாகச் சித்திரிக்கப்படுகின்றனர். வசந்த குமாரன் திலகவதியின் தோழியான ரேவதியைக் காதலித்து, மணந்துகொள்ளவும் துணிகின்றான்; இத்திருமணத்தால் ஏற்பட-விருக்கும் தன் பிற்கால வாழ்க்கையின் பாதிப்பினை எண்ணிப்-பார்த்துத் திருமணத்தைக் கைவிட்டு, மீண்டும் திலகவதியை மணக்க வருகின்றான். வசந்தகுமாரனின் நிலையற்ற உள்ளமும், உறுதியற்ற காதலும் திலகவதிக்கு வெறுப்பூட்ட அவள் அவனை மணக்க மறுத்து விடுகின்றாள் என லட்சுமி உறவினரிடையே தோன்றும் காதல் நிறைவேறாததைச் சித்திரிக்கின்றார்.

3 1. 1. 1. 1. 1. 3. உறவினரிடையே தோன்றும் காதலை லட்சுமி மூன்று நாவல்களில் காட்டுகின்றார். இவரது நாவல்-களில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை பெரும்பான்மையாக இடம் பெறுவதால் அங்கு உறவினரிடையே தோன்றும் காதலுக்கு இடம் உண்டு. சமுதாயத்தில் காணப்படும் அத்தைமகன் / மகள்-மாமன்மகள் / மகன் திருமண முறையும் இவ்வகைக் காதலைச் சித்திரிக்க லட்சுமிக்குத் துணைபுரிந்திருக்கிறது.

சூடாமணி ஒரு நாவலில் மட்டுமே உறவினரிடையே தோன்றும் காதலைக் காட்டுகின்றார். இவருடைய நாவல்களில் பெரும்பாலும் தனிக்குடும்பச் சித்திரிப்புக் காணப்படுவதால் இவ்-வகைக் காதலுக்கு இங்கு இடமில்லை என்று கருதமுடிகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 1. 1. 1. 1. 2. *உறவு இல்லாதவரிடையே தோன்றும் இயல்புக் காதல்*

உறவுமுறை ஏதுமின்றி, முன்பின் அறியாத ஓர் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே காதல் தோன்றி வளரலாம். இரு குடும்பங்களுக்கு இடையில் ஏற்படும் நட்பு, இருவரும் ஒரே இடத்தில் பணிபுரிவது, இருவருக்கும் இடையே உள்ள ஆசிரியர்-மாணவி உறவு ஆகியவை காதல் தோன்றுவதற்குரிய சூழலாகக் காணப்படுகின்றன. இச்சூழல் இன்றித் தாமேயும் சூழல்களை ஏற்படுத்திக்கொண்டு காதலர்கள் சந்திப்பதனாலும் காதல் வளர்கின்றது. இக்காதலுக்கு வயது வேறுபாடு, இனம் முதலியவை தடையாகக் காணப்படுவதில்லை. காதல் நிறைவேறலாம்; நிறைவேறாமலும் இருக்கலாம். இன அடிப்படையில் இக்காதலை ஓரினக் காதல், கலப்புக் காதல் என்று இருவகைப்படுத்தலாம்.

3. 1. 1. 1. 1. 2 1. *ஓரினக் காதல்*

ஒரே இனத்தைச் சேர்ந்த ஆணும் பெண்ணும் ஒருவரை ஒருவர் காதலிக்கும்பொழுது, இனம் அவர்களுடைய காதலுக்குத் தடையாகக் காணப்படுவதில்லை. குடும்பச் சூழல் குடும்பத்தின் எதிர்பார்ப்புகள் முதலியன காதலைத் தடை செய்கின்றன. தடைகள் நீங்கிக் காதல் வெற்றி அடையலாம்; தடைகள் நீங்காது நின்று காதலைத் தோல்வியுறச் செய்யலாம். ஓரினக் காதலில் வெற்றி பெறுபவை நிறைவேறும் காதல் என்றும், தோல்வி அடைபவை நிறைவேறாக் காதல் என்றும் இருவகைப்படுத்தப்படுகின்றன.

3. 1. 1. 1. 1. 2 1. 1. *நிறைவேறும் காதல்*

ஒரே இனத்து ஆணும் பெண்ணும் காதலிக்கும் பொழுது அக்காதல் தடையின்றி நிறைவேறுவதற்கு வாய்ப்புக்களும் உள்ளன; சமுதாய அமைப்பின் காரணமாகச் சில தடைகள் ஏற்பட்டுப் பின்னர் அவை விலகிக் காதல் நிறைவேறுவதும் உண்டு. எனவே இக்காதலைத் தடையின்றி நிறைவேறும் காதல், தடைபட்டு நிறைவேறும் காதல் என இருவகைப்படுத்தலாம்.

3 1. 1. 1. 1. 2. 1. 1. 1. *தடையின்றி நிறைவேறும் காதல்*

லக்ஷ்மியின் 'அரக்கு மாளிகை', 'பவானி', 'பண்ணையார் மகள்', 'காஞ்சனையின் கனவு', 'லட்சியவாதி' ஆகிய ஐந்து நாவல்களும், சூடாமணியின் 'புன்னகைப் பூங்கொத்து', 'ஆழ்கடல்' ஆகிய இரண்டு நாவல்களும் இதனைச் சித்திரிக்கின்றன.

லக்ஷ்மி, 'அரக்குமாளிகை' நாவலில் வீட்டுப்பணிப்பெண் மஞ்சுளாவை, அவ்வீட்டுத்தலைவன் கிரிதரன் காதலிப்பதாகச் சித்திரிக்கின்றார். அன்பையே உணர்ந்திராத மஞ்சுளாவுக்குக் கிரிதரன் அவளிடம் காட்டும் கனிவு அவள் உள்ளத்தில் காதலைத் தோற்றுவிக்கின்றது. செல்வம் இருந்தும் வாழ்க்கையில் அமைதி கிடைக்காத கிரிதரனுக்கு மஞ்சுளாவின் அழகு, பொறுமை, தன் நொண்டித் தங்கையிடம் அவள் காட்டும் அன்பு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதலியன காதலைத் தோற்றுவிக்கின்றன. ஒரே இல்லத்திலேயே இருவரும் வாழ்வது அவர்கள் காதல் வளர வழிசெய்கின்றது. இருவருக்கிடையேயும் உள்ள செல்வ வேறுபாடு அவர்கள் காதலுக்குத் தடையாயில்லை என லக்ஷ்மி இந்நாவலில் காட்டு கின்றார்.

'பண்ணையார் மகள்' நாவலில் ''அவமானத்தின் காரண-மாகவோ, வறுமை காரணமாகவோ என் தாய் என்னைப் புறக்-கணித்துவிட்டார்கள்,'' (ப 73) என்று தன் பிறப்பைப்பற்றிக் கூறும் துணிவுடைய சமூகத் தொண்டன் சிவகுமாரனைப் பண்-ணையார் மகள் உமா காதலிக்கின்றாள். செல்வமிருந்தும் செருக்கு இன்றி, தன்னிடம் உண்மையான அன்பைக் காட்டுபவர் யாரு-மின்றி இருந்த உமாவின் அழகும் நற்பண்பும் சிவகுமாரனைக் கவர்கின்றன. செல்வ வேறுபாடு காதலுக்குத் தடையாயில்லை என லக்ஷ்மி இந்நாவலிலும் காட்டுகின்றார்.

'காஞ்சனையின் கனவு' நாவலில் பண்ணைக் கணக்குப் பிள்ளையினுடைய பேத்தி காஞ்சனையின் அழகில் மயங்கிய ஜமீன்தார் புஷ்பநாதன் அவளை மணக்க முன்வருவதையும், அவன் அழகிலும் செல்வத்திலும் மயங்கிய காஞ்சனை திருமணத்-திற்கு இசைவு தருவதையும் லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

லக்ஷ்மியின் 'லட்சியவாதி' நாவல் நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்த கீதாவின் அழகில் மயங்கிய பணக்காரனான நாகராஜன் அவளைக் காதலித்து மணப்பதைச் சித்திரிக்கின்றது.

'ஆழ்கடல்' நாவலில் சூடாமணி, துணை நடிகையான அமலாவின் அழகில் மயங்கி அவளைப்பற்றி ஏதும் அறியாமலே அவளைக் காதலித்து மணக்கும் படத்தயாரிப்பாளர் செல்வக் குமாரைப் படைக்கின்றார்

எனவே, செல்வ வேறுபாடு காதலுக்குத் தடையில்லை என்ற கருத்தை இரு படைப்பாளிகளும் வலியுறுத்துகின்றனர் என்பது இங்குப் புலப்படுகின்றது.

இருமனமொத்த காதலில் வயது வேறுபாடு காதலுக்குத் தடையாவதில்லை என்ற கருத்தை லக்ஷ்மியின் 'பவானி' நாவல் சித்திரிக்கின்றது. இருபது வயதுடைய பவானி, காலொடிந்த தனக்கு மருத்துவம் பார்த்த மருத்துவர் சுந்தரவதனத்தைக் காத-லிக்கின்றாள். முப்பத்தைந்து வயதான சுந்தரவதனம் மனைவியை இழந்தவர்; ஒன்பது வயதுக் குழந்தைக்குத் தந்தை; அழகான தோற்றம் உடையவர். அறிவு முதிர்ச்சியற்ற இளைஞனை மணப்-பதைவிட அறிவில் முதிர்ச்சி பெற்ற ஆடவன் சற்று வயதான-வனாயினும் அவனை மணப்பது நல்லது என்ற பவானியின் காதற்-கொள்கையும், சுந்தரவதனத்தின் நற்பண்பும் அழகும் (ப. 14) பவானிக்குச் சுந்தரவதனத்திடம் காதலைத் தோற்றுவிக்கின்றது.

ஒத்த செல்வநிலையில் தோன்றி நிறைவேறும் காதலைச் சூடாமணியின் 'புன்னகைப் பூங்கொத்து' நாவல் காட்டுகின்றது. சைலஜாவின் அழகு மதுசூதனனைக் கவர்கின்றது; அவனுடைய

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கம்பீரமான ஆண்மையழகு, பேச்சின் சீரிய பண்பு, நடந்து கொள்ளும் முறையில் நாகரிகம், தன் அழகைப் பாராட்டும் பண்பு முதலியன சைலஜாவின் மனதைக் கவர்கின்றன (ப. 23) ''நான் வாழ்வில் சந்தோஷமாக இருக்க விரும்புவதால் என் உணர்ச்சிகளின் ஜாபிதாவிலிருந்து கோபத்தை எடுத்துவிட்டேன்,'' (ப. 69) எனக் கூறும் அழகும் உயரிய பண்பும் உடைய வாணி ஆனந்தனைக் கவர்வதையும், ஆனந்தனின் நற்பண்பு வாணியைக் கவர்வதையும் இந்நாவல் காட்டுகின்றது.

காதல் ஏற்படுவதற்கான காரணங்களைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப்படுத்திக் காணும் பொழுது சில உண்மைகள் புலப்படுகின்றன:

நாவலின் பெயர்	ஆணின் இயல்பு (பெண் விரும்புவது)	பெண்ணின் இயல்பு (ஆண் விரும்புவது)
லக்ஷ்மி		
1. அரக்குமாளிகை	நற்பண்பு	அழகு, நற்பண்பு
2. பண்ணையார் மகள்	நற்பண்பு	அழகு, நற்பண்பு
3. காஞ்சனையின் கனவு	அழகு, செல்வம்	அழகு
4. லட்சியவாதி	அழகு, செல்வம்	அழகு
5. பவானி	அழகு, நற்பண்பு	அழகு
சூடாமணி		
1. புன்னகைப் பூங்கொத்து	(அ) அழகு, நற்பண்பு	அழகு
	(ஆ) நற்பண்பு	அழகு, நற்பண்பு
2. ஆழ்கடல்	நற்பண்பு	அழகு

மேற்கூறிய அட்டவணையினின்று ஆணுக்குப் பெண்ணிடம் காதல் தோன்ற அவளின் அழகு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது; அழகிற்குப் பின்னரே அவள் நற்பண்பு ஆணின் மனதைக் கவர்கின்றது. பெண்ணுக்கு ஆணிடம் காதல் தோன்ற அவனது நற்பண்பு காரணமாகின்றது. இதன் பின்னர்தான் அவனது அழகு பெண்ணின் உள்ளத்தில் காதலைத் தோற்றுவிக்கின்றது என்பது தெளிவாகின்றது. ஆய்வாளர் கள ஆய்வும் இக்கருத்தை அரண் செய்கின்றது.*

* ஆய்வாளர் தகவலாளிகளுக்கு அளித்த வினாப்பட்டியின் வாயிலாகப் பெண்களில் 75.79 விழுக்காட்டினர் ஆடவரின் நற்பண்புகளை விரும்புவது தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்ணினுடைய செல்வம் ஆண் மனதில் காதலைத் தோற்றுவிப்பதில்லை என்ற உண்மையும், ஆணினுடைய செல்வமும் ஒரோவழிதான் பெண்மனதில் காதலைத் தோற்றுவிக்கின்றது என்ற உண்மையும் இங்குப் புலப்படுகின்றன. நற்பண்பும் அழகும் நிறைந்த ஆடவன் பெண் மனதில் காதல் தோன்றக் காரணமாகின்றான் என்பதும் தெரியவருகின்றது.

ஆணோ பெண்ணோ ஒருவர் பண்புகளை மற்றவர் எண்ணிப்பாராது அழகின் அடிப்படையில் மட்டுமே காதல் கொண்டிருந்தால் அவர்களது இல்லற வாழ்க்கை சிறப்பாக அமைவதில்லை என்ற உண்மையையும் இந்நாவல்கள் காட்டுகின்றன.

'காஞ்சனையின் கனவு' நாவல் காஞ்சனையின் அழகுக்காக அவளைக் காதலித்து மணந்த புஷ்பநாதனும், அவனது அழகுக்காகவும் செல்வத்துக்காகவுமே அவனை விரும்பி மணந்த காஞ்சனையும் மகிழ்ச்சியாக வாழாத நிலையைக் காட்டுகின்றது. திருமணத்திற்குப் பின்னரே ஒருவர் பண்புகளை மற்றவர் புரிந்து கொள்வதால் அவர்களுடைய இல்லறவாழ்க்கை சிக்கல் மிகுந்ததாகக் காணப்படுகின்றது.

'லட்சியவாதி' நாவல், அழகினாலேயே கவரப்பட்டு ஒருவரை ஒருவர் விரும்பி மணந்து கொண்ட கீதா - நாகராஜன் வாழ்விலும் அமைதி இல்லை என்பதைக் காட்டுகின்றது. நாகராஜனின் எளிமை பிடிவாதம் முதலிய பண்புகளைக் கீதா வெறுக்க, கீதாவின் சினம், பொறுமையின்மை முதலியவற்றை நாகராஜன் வெறுக்க அவர்களுடைய இல்லற வாழ்க்கை சிக்கலாகின்றது.

'பவானி' நாவலில் பவானியின் அழகுக்காகவே அவளை மணந்த சுந்தரவதனமும் அவளால் துன்பமடைகின்றார் என்பதை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்,

சூடாமணி 'புன்னகைப் பூங்கொத்து' நாவலில் அழகினாலேயே மதுசூதனனைக் கவர்ந்த சைலஜா திருமணத்திற்குப் பின்னரும் அவன் தன் அழகைப் பாராட்ட வேண்டும் என்ற எண்ணமுடையவளாக இருப்பது அவள் வாழ்வின் அமைதியைக் கெடுக்கின்றது என்பதைச் சித்திரிக்கின்றார். இவரது மற்றொரு நாவலான 'ஆழ்கடலி'லும் இச்சிக்கல் காணப்படுகின்றது.

அழகும் நற்பண்பும் அல்லது நற்பண்பு மட்டுமோ பெற்றுள்ள பெண்களின் வாழ்வில் போராட்டம் காணப்படவில்லை. காதல் நிறைவேறி வாழ்க்கை மகிழ்ச்சியாக அமைய பெண்களின் அழகு மட்டும் தனித்துநின்று துணைபுரிவதில்லை; அழகோடு நற்பண்பும் மிகத்தேவையாக இருக்கின்றது என்ற உண்மை இதன்வழி பெறப்படுகின்றது. ஆய்வாளருடைய களஆய்வும் இதனைத் தெளிவாக்குகின்றது.*

---

* ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாக ஆடவரில் 35 விழுக்காட்டினர் தாங்கள் மணக்க விரும்பும் பெண்களின் நற்பண்பையும், 1. 76 விழுக்காட்டினர் பெண்களுடைய அழகினையும் விரும்பும் கருத்துத் தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அழகும் நற்பண்பும் அல்லது நற்பண்பு மட்டுமோ பெற்றுள்ள ஆடவர் தம் வாழ்க்கையில் போராட்டங்களைத் தவிர்த்து அமைதியான இல்வாழ்க்கையை அமைத்துக் கொள்கின்றனர் என்பதும் புலப்படுகின்றது.

3. 1. 1. 1. 1. 2. 1. 1. 2. *தடைப்பட்டு நிறைவேறும் காதல்*

ஒரே இனத்தில் தோன்றும் இயல்புக் காதல் நிறைவேறுவதற்குத் தடைகளும் தோன்றுகின்றன. இத்தடைகளை, இவ்விரு படைப்பாளிகளின் நாவல்கள்வழி செல்வவேறுபாடு, குடும்பப் பகைமை, ஐயம், காதலனின் மனமாற்றம், பெண்ணின் விதவைத்தாயின் மறுமணம் என ஐந்து வகையாகப் பகுக்கலாம். இறுதியில் இத்தடைகள் விலகிக் காதல் நிறைவேறுகின்றது.

லக்ஷ்மியின் 'அடுத்த வீடு', 'நாயக்கர் மக்கள்', 'காஞ்சனையின் கனவு' என்ற மூன்று நாவல்களும் சூடாமணியின் 'மகளின் கைகள்', 'உயர்வு உள்ளத்திலே' என்ற இரண்டு நாவல்களும் தடைப்பட்டு நிறைவேறும் காதலைச் சித்திரிக்கின்றன.

செல்வ வேறுபாடு

செல்வ நிலையில் வேறுபட்ட இரு குடும்பங்களின் ஆணோ பெண்ணோ ஒருவரை ஒருவர் காதலித்தால் அது பெற்றோரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.

சூடாமணியின் 'மகளின் கைகள்' எனும் நாவல் செல்வ வேறுபாட்டினால் காதலில் சிக்கல் தோன்றுவதைக் காட்டுகின்றது. செல்வக் குடும்பத்து மகள் ஸௌம்யா ஏழை பாலகிருஷ்ணனைக் காதலிப்பதை அறிந்து அவர்கள் திருமணத்திற்கு அவள் தந்தை இசைவு தர மறுத்துவிடுகின்றார். தன் பேச்சைக் கேளாத மகளை வீட்டைவிட்டே விரட்டிவிடுகின்றார் (ப. 63). அவர் இசைவு பெறாமலே திருமணம் நடைபெற்ற பின்னர், காலப்போக்கில் மனம் மாறுகின்றார். தந்தை பெரிதாக எண்ணும் செல்வ வேறுபாடு காதலுக்குத் தடையாயினும் பெண்ணின் மனத்துணிவு காதலை வெற்றியுறச் செய்து தந்தையின் மனவேறுபாட்டையும் போக்கிவிடுகின்றது.

குடும்பப் பகைமை

லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' நாவல், தங்கள் செல்வ நிலைக்கு இணையான குடும்பத்துப் பெண்ணை மகன் காதலித்தாலும் தங்களிரு குடும்பத்திற்கும் உள்ள பகைமையைச் சுட்டிக் காட்டிக் காதலுக்குத் தடை விதிக்கும் தந்தையைச் சித்திரிக்கின்றது.

'நாயக்கர் மக்கள்' நாவலில் தன் மகனுடைய காதலி சரோஜினி என்று அறிந்த நாயக்கர், அவள் தன் குடும்பப் பகைவன் மகள் என்பதை அறிந்து மகனிடமும் அதனைக் கூறி அவனுடைய காதலுக்குத் தடைவிதிக்கின்றார்; தந்தையை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீறாத மகன் காதல் தோல்வியால் தற்கொலைக்கு முயல அவன் தந்தையின் மனம் மாறுகின்றது. சரோஜினியின் விருப்பத்தை மதிக்காது பகைமை பாராட்டும் அவள் தந்தையையும் மீறி அவர்கள் திருமணத்தை நாயக்கர் நடத்தி வைக்கின்றார்.

ஐயம்

காதலர்களாகப் பழகித் திருமணம் செய்துகொள்ள முடி-வெடுக்கும் நிலையில் ஆணுக்கோ பெண்ணுக்கோ ஒருவர்மீது ஒருவருக்கு ஐயம் தோன்றினால் அதுவே அவர்கள் திரு-மணத்திற்குத் தடையாகி விடுன்றது என்பதை லக்ஷ்மியின் 'காஞ்-சனையின் கனவு' நாவல் காட்டுகின்றது.

தன்னுடன் பணிபுரியும் சீதாவைக் காதலிக்கும் சபேசன் தன் தங்கை அவள்மீது சுமத்தும் வீண்பழியினால் சீதாவின் காதலில் ஐயம்கொண்டு அவள் காதலைப் புறக்கணித்துவிடு-கின்றான். இறுதியில் உண்மை தெரிய, திருமணம் நடக்கிறது.

காதலனின் மனமாற்றம்

தான் காதலிக்கும் பெண்ணிடம் அவளையே மணப்பதாகக் கூறிப் பின் பெற்றோருக்கு அஞ்சித் தன் மனத்தை மாற்றிக் கொள்ளும் காதலனின் மனமாற்றமும் காதலுக்குத் தடையாவதை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் காட்டுகின்றது. இந்நாவலில் பண்ணையார் மகன் சோமசேகர் ஏழைப்பெண் இந்திராணியைக் காதலிக்கின்றான். தன் பெற்றோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணக்காரப்பெண்ணை மணப்பதற்காக இந்திராணியைக் கை-விடுகின்றான். இறுதியில் தனக்கு ஏற்பட்ட துன்பங்களினால் மனம் மாறி இந்திராணியையே மணக்கிறான்.

பெண்ணின் விதவைத்தாயின் மறுமணம்

இளம்விதவை மறுமணத்தை 'நியாயம்' என ஏற்க முன் வராத இளம்-தலைமுறையைச் சார்ந்த கண்ணன், விதவையின் மகளான தன் காதலி ராதாவை மணக்க மறுத்துவிடுவதைச் சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே' நாவல் காட்டுகின்றது; தன் தங்கைக்கு ஏற்படும் விதவை நிலையினால் மனம் வருந்தி விதவை மறுமணத்தை நியாயமான செயல் என்று ஏற்று ராதாவை மணந்து கொள்கின்றான்.

இவ்வைந்து சிக்கல்களில் நான்கு சிக்கல்களுக்குக் காரண-மாகக் காதல் கொள்ளும் ஆடவரே விளங்குகின்றனர்; ஒரு சிக்-கலுக்குக் காதலியின் தந்தை காரணமாக விளங்குகின்றார்.

குடும்பப் பகைமை எனும் சிக்கலில் மோகனரங்கனின் துணிவின்மை சரோஜினிக்குத் துயரைத் தருகின்றது. சரோஜினி தன் திருமணம் நிச்சயிக்கப்படும் பொழுது, நிச்சயிக்கப்பட்டவ-னிடமே தன் விருப்பமின்மையைத் துணிந்து கூறித் திரும-ணத்தை நிறுத்திவிடுகின்றாள். ஆனால் மோகனரங்கன் தந்தையை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எதிர்க்க மனமின்றிக் காதல் தோல்வியால் தற்கொலைக்குத் துணிகிறான். சரோஜினியின் துணிவு மோகனரங்கத்திடம் காணப் படவில்லை (நாயக்கர் மக்கள்).

ஐயம் என்ற சிக்கலிலும் சீதாவின் நடத்தையில் சபேசன் ஐயம் கொள்ளத் தகுந்த காரணங்கள் காணப்படவில்லை. தன் உயிரினும் மேலாகக் காதலிக்கும் சீதாவைத் தன் தங்கையின் கடிதத்தை நம்பிக் கைவிடுகிறான் (காஞ்சனையின் கனவு).

காதலனின் மனமாற்றம் என்ற சிக்கலில் சோமசேகர், காதலித்த பெண்ணைப் பணத்துக்காக மணக்க மறுக்கிறான் (அடுத்த வீடு) .

பெண்ணின் விதவைத் தாயின் மறுமணம் என்ற சிக்கலில் கண்ணன் புதிய மரபுகளை ஏற்கத் துணியாது தன் காதலை மறக்கத் துணிகிறான் (உயர்வு உள்ளத்திலே).

லக்ஷ்மி, குடும்பப் பகைமை, ஐயம், காதலனின் மனமாற்றம் எனும் மூன்று சிக்கல்களிலும் ஆண்களின் உறுதியற்ற உள்ளத்தையே சித்திரிக்கின்றார்.

சூடாமணியும் பெண்ணின் விதவைத்தாயின் மறுமணம் என்ற சிக்கலில் ஆணின் உறுதியற்ற உள்ளத்தையே சித்திரிக்கின்றார்.

காதலித்தவனை விட்டு மற்றொருவனை மணக்க விரும்பாது திருமணத்தைத் தடுத்து நிறுத்தும் சரோஜினி, காதலனின் ஐயத்தைப் போக்க முயற்சி செய்யும் சீதா, தந்தையின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாது தான் விரும்பியவனை மணக்கத் துணியும் ஸௌம்யா, காதலனுக்காக வீட்டைவிட்டே ஓடிவரத் துணிவுள்ள இந்திராணி, காதலன் தன்னைக் கைவிட்டாலும் அவனைத் தவிர யாரையும் மணக்க விரும்பாத ராதா என இவ்விரு படைப்பாளிகளும் இச்சிக்கல்களில் தொடர்பான பெண்பாத்திரப்படைப்புகளைச் சித்திரிப்பதைக் காணும்பொழுது காதலில் உறுதியான உள்ளம் உடையவர்கள் பெண்கள் என்ற கருத்தை இருவரும் புலப்படுத்த விரும்புகின்றனர் என்ற கருத்து தோன்றுகின்றது.

3. 1. 1. 1. 1. 2. 1. 2. *நிறைவேறாக் காதல்*

ஆண் - பெண்ணிடையே தோன்றும் இயல்பான காதல் நிறைவேறாமல் போவதற்கு இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களின்வழி நான்கு காரணங்களைக் காண முடிகின்றது. அவை பின்வருமாறு :

1. குடும்ப அவப்பெயர்
2. செல்வ வேறுபாடு
3. விதவைக் காதல்
4. போலிக் காதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1) குடும்ப அவப்பெயர்

காதலர் இருவரில் ஒருவரது குடும்பத்திற்கு அவப்பெயர் ஏற்பட்டால் அது காதலின் தோல்விக்குக் காரணமாவதை லக்ஷ்மி-யின் 'அடுத்த வீடு' நாவல் காட்டுகின்றது. அருணாவின் அக்கா காதலுக்காக வீட்டைவிட்டு ஓடிப்போனதால் அருணாவின் குடும்-பத்திற்கு ஏற்பட்ட அவப்பெயர் அவள் காதலனுடன் அவளுக்கு நிச்சயித்திருந்த திருமணத்தையே நிறுத்திவிடுகின்றது. காதலன் தன் பெற்றோரை மீற முடியாது அருணாவை மணந்துகொள்ள மறுத்துவிடுகின்றான். அருணாவின் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவப்பெயர், அவள் காதல் தோல்வியடையக் காரணமாகின்றது.

2) செல்வ வேறுபாடு

சமுதாயத்தில் காதலர்க்கிடையேயுள்ள செல்வ வேறுபாடு அவர்கள் காதலுக்குத் தடையாவது இயல்பு. இதனை லக்ஷ்மி-யின் 'நாயக்கர் மக்கள்' நாவல் சித்திரிக்கின்றது.

செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த சூடாமணியை மளிகைக் கடையில் வேலை பார்க்கும் ராமசாமி காதலிக்கின்றான்; சூடா-மணியும் தன்னைக் காதலிப்பதை அறிந்து, அவளை மணந்து கொள்ள முயல்கின்றான்; இரு குடும்பத்திற்கும் உள்ள செல்வ வேறுபாட்டைக் காட்டிச் சூடாமணியின் அண்ணன் காதலுக்குத் தடை விதிக்கின்றான்.

3) விதவைக் காதல்

இளவயதிலேயே விதவையான பெண்கள், இளவயதில் வாழ்வை இழந்து, மறுவாழ்வு பெறச் சமுதாயத்தால் தடை-செய்யப் பெற்றிருப்பவர்கள். இப்பெண்களுக்குத் தோன்றும் காதல் வெற்றி பெறாத நிலையை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு', 'பண்ணையார் மகள்', 'நாயக்கர் மக்கள்' ஆகிய நாவல்கள் காட்டுகின்றன (காண்க 3. 8. 1. 3. 2).

4) போலிக் காதல்

பருவ காலத்தில் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே தோன்றும் உணர்ச்சி காதலைப் போன்று இருப்பினும் அது ஆழமான உணர்ச்சியாகக் காணப்படுவதில்லை. காலப்போக்கில் அவ்வுணர்ச்சி மறைந்துவிட, காதலிக்கப்பட்டவரும் மறக்கப்பட்டு விடுகின்றனர். இதனைக் காதல் மயக்கம் (Infatuation) எனலாம். காதல் மயக்கம் உறுதியற்றது; உடல் கவர்ச்சிக்கும், அதன்வழி ஏற்படும் உணர்வுகளுக்கும்தான் சிறப்பிடம் கொடுப்பது; ஒரு-வருடைய தோற்றம், பழக்கம் முதலியன கண்டு திடீரென தோன்றி மறையக்கூடியது; தோன்றும் நேரத்து ஏற்படும் மகிழ்ச்-சியை மட்டுமே எண்ணுவது எனக்கூறுவர் (P. Sorokin 1950, p. 46). 'போலச் செய்வது போலி' என்ற வழக்காற்றினைப் போல், காதல் போன்ற உணர்ச்சியைத்தரும் இம்மயக்கத்தினையும் 'போலிக் காதல்' எனக் குறிப்பிடலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காதல் மயக்கத்தினால் தோன்றும் போலிக் காதல் இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களில் அழகு, செல்வம், அறியாமை முதலியவற்றை அடிப்படைகளாகக் கொண்டு சித்திரிக்கப்பட்டுள்ளது.

அழகு, செல்வம் இவற்றின் அடிப்படையில் தோன்றும் போலிக் காதலை லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்', 'சூர்யகாந்தம்' ஆகிய நாவல்கள் காட்டுகின்றன.

'மிதிலா விலாஸ்' நாவலில் கிரிஜாவின் அழகைக் கண்டு மயங்கி அவளை ஈஸ்வரன் காதலிக்கின்றான். வறுமையால் துன்புறும் கிரிஜாவுக்கு மிதிலா விலாஸத்து வாழ்க்கை மிக்க பிரமிப்பைக் கொடுத்ததோடு மட்டுமல்லாது ஒருவித ஏக்கத்தையும் அவள் உள்ளத்திலே உண்டாக்குகின்றது (ப 71). எனவே, ஈஸ்வரனின் அழகிய தோற்றமும், அவனால் அடையக்கூடிய செல்வ நிலையும் அவளைக் கவர்கின்றன. நாளடைவில் கிரிஜாவின் வெறுக்கத்தக்க பண்புகள் ஈஸ்வரனுக்கு அவள்மேல் கொண்டிருந்த காதல் உணர்ச்சியை மறைக்கத் தொடங்கின. பணத்தினால் விளையும் குழப்பங்களைக் கண்ட கிரிஜாவின் மனதிலும் ஈஸ்வரன்மேல் கொண்ட காதல் மாறத் தொடங்கியது.

இருவரிடையேயும் உள்ள அன்பு உண்மையானதாக, ஆழமானதாக அமையவில்லை. எனவே, ஈஸ்வரனும் கிரிஜாவும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்துகொண்ட பொழுது காதல் மயக்கத்திலிருந்து விடுபடுகின்றனர். இப்போலிக் காதலினால், இருவரும் பிரிந்தபொழுதும் வருந்தவில்லை. தமக்குப் பிடித்தமானவர்களை மணந்து வாழத் தொடங்குகின்றனர்.

'சூர்யகாந்தம்' நாவல் மாயாவின் அழகில் மயங்கும் தியாகராஜனையும் அவன் செல்வத்தைக் கண்டு மயங்கும் மாயாவையும் சித்திரிக்கின்றது. நாளடைவில் மாயாவின் தீயபண்புகள் வெளிப்பட தியாகராஜனின் காதல் உணர்வுகள் மறைந்து விடுகின்றன என லக்ஷ்மி காட்டுகின்றார். இங்கும் இருவரிடையேயும் உண்மையான அன்பு இல்லை.

அறியாப் பருவத்தில் எழும் போலிக் காதல்

மனவளர்ச்சி அடையாத இளம் பருவத்தில் இருக்கும் ஓர் ஆணோ அன்றிப் பெண்ணோ தன் எதிர்பாலாரைக் (opposite sex) காணும்பொழுது, தன் உள்ளத்தில் ஏற்படும் சலனத்தைக் காதல் என எண்ணி ஏமாறுவது அறியாப் பருவத்தில் எழும் போலிக் காதலின் தன்மையாகும். உந்துதல் உணர்ச்சி மறைந்த பின் காதலும் மறைந்துவிடுகின்றது; இதனைச் சூடாமணியின் 'மனத்துக்கினியவள்' நாவல் சித்திரிக்கின்றது.

'மனத்துக்கினியவள்' நாவலில் சிறுபெண்ணான இந்து தன் அழகில் தானே மயங்குவதும், பல ஆடவர் தன் அழகிற்காகச் சுற்றுவதைக் கண்டு பெருமைப்படுவதும் ஆகிய பண்புகளை உடையவள். ஓர் ஆடவனிடம் மயக்கம் கொள்ளும் அவள்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

''இந்த உலகத்தில் சீதாராமன் என்பதைவிட அழகான பெயர் இருக்குமா?'' (ப. 150) என மயங்கி அவனோடு வீட்டைவிட்டு ஓடிவிடுகின்றாள். 'ஓர் அற்புதக் காரியம்' நிகழ்த்தியதாகத் தோன்றிய இந்துவுக்குத் திருமணநிலையில் அச்சம் ஏற்படுகின்றது. காவலரின் துணையுடன் வீடு வந்து சேரும் இந்து, ''எனக்கு வீடு வந்து சேருவோமா என்று ஆகிவிட்டது. அந்த மனிதனைப் பார்த்தாலே பயமாக இருந்தது ...... காதலாவது கத்திரிக்காயாவது.'' (ப. 176) என்று மயக்கத்திலிருந்து விடுபடுகின்றாள். பருவ மயக்கத்தைக் காதல் என எண்ணி ஏமாந்த இந்து இம்மயக்கம் தீர்ந்தவுடன் உண்மையை உணர்கின்றாள்.

இவ்வாறு நிலையற்ற தன்மை உடைய அழகும் செல்வமும் போலிக் காதலுக்கான காரணங்கள் என்று லக்ஷ்மி சித்திரிக்க, அறியாமையே போலிக் காதலுக்குக் காரணம் எனச் சூடாமணி சித்திரிக்கின்றார்.

3. 1. 1. 1. 1. 2. 1. 3.

லக்ஷ்மி கூறும் நிறைவேறாக் காதலுக்கான காரணங்களினின்று சூடாமணி கூறும் காரணங்கள் வேறுபடுகின்றன.

குடும்ப அவப்பெயரினால் காதல் நிறைவேறாமல் போவதை லக்ஷ்மி காட்ட, தான் காதலிக்கும் பெண்ணுக்கே அவப்பெயர் ஏற்படினும் அவளது அன்பில் நம்பிக்கை வைத்து மணந்து கொள்ளும் ஆடவரைச் சூடாமணி தம் நாவல்களில் காட்டுகின்றார் (ஆழ்கடல், மனத்துக்கினியவள்).

செல்வ வேறுபாடு காதலுக்குத் தடையில்லை என லக்ஷ்மி சித்திரித்தாலும் செல்வ வேறுபாடு காதலுக்குத் தடையாகும் நிலையும் உண்டு எனும் உண்மையை இங்குச் சித்திரிக்கின்றார். செல்வ வேறுபாடு காதல் நிறைவேறாமைக்குக் காரணமாகச் சூடாமணி நாவல்களில் காணப்படவில்லை. செல்வ வேறுபாடு இருந்தும் காதல் நிறைவேறுவதையே சூடாமணி காட்டுகின்றார் (மகளின் கைகள்).

விதவையர் கொள்ளும் காதல் நிறைவேறாமல் போவதை லக்ஷ்மி தம் நாவல்களில் கூறுகின்றார். விதவைகளின் காதல், திருமணத்தில் முடிவதைச் சூடாமணியின் நாவல் காட்டுகின்றது (உயர்வு உள்ளத்திலே).

காதல் நிறைவேறாமைக்குக் கூறப்படும் நான்கு காரணங்களுள் மூன்றில் லக்ஷ்மியுடன் சூடாமணி வேறுபடுகின்றார். எனவே அக்காரணங்கள் காதலின் வெற்றிக்குத் தடையில்லை என்பது சூடாமணியின் கருத்தாகக் காணப்படுகின்றது. எஞ்சிய ஒரு காரணமாகிய போலிக் காதல், காதல் வெற்றிக்குத் தடை என்பதில் இரு படைப்பாளிகளும் ஒன்றுபடுகின்றனர்.

லக்ஷ்மி சமுதாயத்துடன் கலந்து பழகும் வாய்ப்பு பெற்றமையால் சமுதாயத்தில் பெரும்பான்மையாகக் காணப்படும் காதலுக்கான தடைகளைத் தம் நாவல்களில் படைத்துக் காட்டுகின்றார். இதனால் இவரது நாவல்களில் நடப்பியல் போக்கு காணப்படுகின்றது எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உடல்நிலை காரணமாகச் சமுதாயத்தில் கலந்து பழகும் வாய்ப்பு மிகுதியும் அற்ற சூடாமணி, லக்ஷ்மி காட்டும் காதல் நிறைவேறாமைக்கான காரணங்களைக் காட்டாது பெண்களின் பருவகாலத்தில் (adolescence) எழும் உணர்ச்சியான காதல் மயக்கத்தை மட்டும் இதற்கான காரணமாகக் காட்டுகின்றார். இதனால் இவரது நாவல்களில் கற்பனையின் அடிப்படையில் அமைந்த குறிக்கோள் போக்கு காணப்படுகின்றது எனலாம்.

3. 1. 1. 1. 1. 2. 2. *கலப்புக் காதல்*

சாதிப்பற்று என்பது சமுதாயத்தில் வேரோடியிருக்கும் ஒரு பண்பு. தன் சாதியைச் சேர்ந்தவளல்லாத ஒரு பெண்ணை ஒருவன் காதலிப்பது என்பது அச்சாதியாரால் ஏற்றுக்கொள்ளப்படாததாகக் காணப்படுகின்றது; அக் காதலுக்கு அவன் சாதியாரால் பல எதிர்ப்புக்கள் தோன்றுகின்றன. எதிர்ப்புக்களை வென்று ஒருவன் காதலில் வெற்றி பெறுவதும் உண்டு; எதிர்ப்புக்களுக்கு அஞ்சி, காதலித்தவளைக் கைவிடுவதும் உண்டு. எனவே, இவ்வகைக் காதலை நிறைவேறும் காதல், நிறைவேறாக் காதல் என இருவகைப்படுத்தலாம்; இருவேறு இனத்தாரிடைத் தோன்றும் இக்காதலைக் கலப்புக் காதல் எனலாம்.

3. 1. 1. 1. 1. 2. 2. 1. *நிறைவேறும் காதல்*

வெவ்வேறு இனத்தாரிடைத் தோன்றும் காதல் நிறைவேறுவதை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு', 'பெண்மனம்' எனும் இரு நாவல்களும், சூடாமணியின் 'மானிட அம்சம்', 'இரவுச்சுடர்', 'பிஞ்சுமுகம்' எனும் மூன்று நாவல்களும் காட்டுகின்றன.

கவுண்டர் இனத்தைச் சேர்ந்தவர் சிதம்பரத்தின் தந்தை; அவர் வேலைக்குச் சென்ற இடத்தில் அதே வீட்டில் பணிபுரியும் ஓர் அரிசனப்பெண்ணைக் காதலிப்பதை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் காட்டுகின்றது.

மேல் சாதியினனான நாகலிங்கம் கீழ்ச்சாதியில் பிறந்த ஹேமலதாவைக் காதலித்து மணப்பதை லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவல் காட்டுகின்றது.

அந்தண குலப்பெண்ணான கீதா குஜராத்திக்காரனைக் காதலித்து வெற்றி பெறுவதை 'இரவுச்சுடர்' நாவலிலும், அந்தணகுல நப்பின்னை நாயர்குல இராமகிருஷ்ணனைக் காதலித்து வெற்றி பெறுவதைப் 'பிஞ்சுமுகம்' நாவலிலும் கவுண்டர்குலப்பெண்ணான அபிராமி அமெரிக்கனான வில்லியம் மாரிஸனைக் காதலித்து வெற்றி பெறுவதை 'மானிட அம்சம்' நாவலிலும் சூடாமணி சித்திரித்துள்ளார்.

கலப்புக் காதலும் பெற்றோரும்

இந்தியச் சமூகத்தில் வெவ்வேறு சாதியைச் சேர்ந்த இருவர் மணம் செய்துகொள்வது கடியப்பட்டே வருகின்றது என்பார் சமூகவியலார் (Aileen D. Ross, 1973, p. 272). இம்மரபு ஆழப்படிந்திருக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் நாட்டில் பெற்றோர் தம் பிள்ளைகளின் கலப்புக் காதலை வரவேற்பதில்லை. தம்மை மீறிக் கலப்புமணம் செய்யத் துணியும் மகனைக் குடும்பத்திலிருந்தே ஒதுக்கிவிடுகின்றனர் என்பதை லட்சுமியின் 'அடுத்த வீடு' (ப.200), 'பெண் மனம்' (ப.193) ஆகிய இரு நாவல்களும் காட்டுகின்றன.

'இரவுச்சுடர்' நாவலில் வேறுபட்ட மொழி பேசும் குஜராத்திக்காரனைக் காதலிக்கும் கீதாவிற்கு அவள் பெற்றோரிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பவில்லை. ''ஆண்களும் பெண்களும் கலந்து பழகும் சமுதாயத்தில் இதெல்லாம் சகஜம்.'' (ப.96) என்று பெற்றோர் இக்காதலை வரவேற்கின்றனர். தன் மகளைத் தனியாக அவள் தோழியுடன் சுற்றுலாவிற்கு அனுப்புதல், பிற ஆடவருடன் கலந்து பழக இசைவு தருதல் போன்ற நாகரிகப் பழக்கவழக்கங்களை அவள் பெற்றோர் மேற்கொண்டிருப்பது இதற்குக் காரணம் எனலாம். திருமணத்தையே வெறுத்து, திருமணத்தால் பைத்தியமாகித் தற்கொலை செய்துகொண்ட கீதாவின் தாயின் முடிவும், திருமணம் செய்துகொள்ள விரும்பும் கீதாவின் காதலுக்கு வரவேற்பளித்திருக்கலாம்.

'பிஞ்சுமுகம்' நாவலில் நப்பின்னை - இராமகிருஷ்ணன் காதலை நப்பின்னையின் தாய் எதிர்க்கின்றாள். தாயின் இசைவு பெறாமலேயே தன் காதலனையே மணந்து கொள்கின்றாள் நப்பின்னை. மகளின் உறவினையே மறந்திருந்த அவள் தாய், மகளுக்குக் குழந்தை பிறந்து இறந்ததைக் கேள்விப்பட்டவுடன் பகைமையை மறந்து தன் மகளைக் காண ஓடிவருகின்றாள். வேறு இனத்தில் காதல் திருமணம் செய்து கொண்ட பெண்களை அவர் தம் பெற்றோர் முதலில் எதிர்த்தாலும், அப்பெண்களுக்குக் குழந்தை பிறந்தவுடன் பெண்களுடன் சேர்ந்து கொள்கின்றனர் (Aileen D Ross, 1973, p. 272) என்ற கருத்து இங்குப் பொருத்தமாகக் காணப்படுகின்றது.

வேறு நாட்டவனை மணக்கவிருக்கும் அபிராமியை அவள் தந்தை எதிர்ப்பதை 'மானிடஅம்சம்' நாவல் கூறுகின்றது. தந்தையின் எதிர்ப்பிற்கு அஞ்சாமல் தன் காதலனை அபிராமி மணந்து கொள்ளும் நாளில் அவள் தந்தை கைநிறையப் பரிசுகளோடும் வாய்நிறைய வாழ்த்துக்களோடும் வந்துவிடுகின்றார்.

கீதாவின் பெற்றோர், நப்பின்னையின் தாய், அபிராமியின் தந்தை முதலியோர் நகரச் சூழலில் வாழ்பவர்கள்; ஆனால் சிதம்பரத்தின் தாய், நாகலிங்கத்தின் பெற்றோர் ஆகியோர் கிராமச்சூழலில் வாழ்பவர்கள். எனவே, கலப்புக் காதலுக்கு எதிர்ப்போ இசைவோ தர காதலர் பெற்றோர் வாழும் பின்னணியும் காரணமாகின்றது எனலாம்.

வேறு இனக் காதலில் தம் மக்களின் காதலை பெற்றோர் எதிர்ப்பதை லக்ஷ்மியின் நாவல்கள் சித்திரிக்கின்றன. பெற்றோர் முதலில் எதிர்த்தாலும் இறுதியில் தம் மக்களின் காதலை அவர்கள் ஏற்றுக்கொள்வதைச் சூடாமணியின் நாவல்கள் சித்திரிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இக்காதலின் வெற்றிக்கு, "மனித அடிப்படையில் இணைஞ்சு வாழறத்துக்குத் தேவையான அன்பு உண்மையாயும், வலிமையாயும் இருந்துவிட்டால் எல்லா வித்தியாசங்களையும் கடந்துவிட முடியும்," (ப.83) என்பதே 'மானிட அம்சம்' நாவலில் சூடாமணி கூறும் காரணமாகக் காணப்படுகின்றது.

கலப்புக் காதல் தோன்றுவதற்கான சூழல்கள்

வெவ்வேறு இனத்தார் ஒருவரோடு ஒருவர் காதல் கொள்வதற்கு அவர்கள் சந்திக்கும் சூழல் துணைபுரிகின்றது.

'அடுத்த வீடு' நாவலில் சிதம்பரத்தின் தந்தையும் அவர் காதலியும் ஒரே இடத்தில் டிரைவராகவும் தோட்டப்பணியாளாகவும் பணியாற்றுகின்றனர். எனவே, ஒரே இடத்தில் பணிபுரிவது அவர்களிடையே காதல் தோன்றக் காரணமாகின்றது. 'பெண்மனம்' நாவலில் வரும் ஹேமலதா ஆசிரியையாகப் பணிபுரியும் பள்ளியின் சிறப்பு நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்க வந்த நாகலிங்கத்திடம் மனதை இழக்கின்றாள்; அதன்வழி ஏற்பட்ட பழக்கம் காதலை வளர்க்கின்றது. 'இரவுச்சுடர்' நாவலில் கீதாவின் தோழி வீட்டாருக்கு நண்பனான குஜராத்திக்காரன், அவ்வீட்டாரால் கீதாவிற்கு அறிமுகப்படுத்தப்படுகின்றான். தோழி வீட்டாருடன் அவள் சென்ற சுற்றுலாவிற்கு அவனும் வருவது இருவருக்குமிடையே காதலை வளர்க்க உதவியது. 'பிஞ்சுமுகம்' நாவலில் சென்னையில் பணிபுரியும் இராமகிருஷ்ணனை, அங்கு மருத்துவக் கல்லூரியில் பயிலும் நப்பின்னை அடிக்கடி சந்திக்க வாய்ப்பு ஏற்படுவது இருவருக்கிடையே காதலைத் தோற்றுவிக்கக் காரணமாகின்றது. 'மானிட அம்சம்' நாவலில் லக்னோவில் ஒரு கம்பெனியில் பணியாற்றும் அபிராமிக்குத் தன் மேலாளரான வில்லியம் மாரிஸனைக் காதலிக்க வாய்ப்பு ஏற்படுகின்றது.

கலப்புக் காதல் நிறைவேறப் பெண்களின் கல்வி மற்றொரு காரணமாகின்றது. கலப்புக் காதலை விரும்பும் பெண்கள் ஐவருள் நால்வர் கற்றவர்கள். ஹேமலதா பள்ளி ஆசிரியை; கீதா கல்லூரி மாணவி; நப்பின்னை மருத்துவ மாணவி; அபிராமியும் கல்லூரிப் படிப்பை முடித்துத் தட்டெழுத்து, சுருக்கெழுத்து பயின்று பணிபுரிகின்றவள். எனவே, கல்வியின் காரணமாக ஏற்படும் மனத்துணிவும் இவர்களுடைய கலப்புக் காதலுக்குத் தூண்டுகோலாக இருக்கலாம் என்று கருதமுடிகின்றது.

கலப்புக் காதல் தோன்றுவதற்கும், வெற்றி பெறுவதற்கும் அவரவர் வாழும் இடப்பின்னணியும் காரணமாகின்றது எனலாம்.

கலப்புக் காதலை விரும்பும் காதலர்கள் அனைவரும் நகரச் சூழலில் வாழ்பவர்கள். மற்றவர்களைப்பற்றிக் கவலைப்படாத போக்கு நகரத்தில் காணப்படுவது இக்காதலின் வெற்றிக்குத் துணைசெய்கின்றது எனலாம். பழைய சமுதாயக் கருத்துக்கள் மாற்றம் பெற்றுப் புதிய சமுதாயம் உருவாகும் நகரப் பகுதிகளில் கலப்புத் திருமணம் நடைபெறுகின்றது என்றும், பழைய கொள்கைகள் மிகுதியாக மதிக்கப்பட்டு வரும் சிறிய கிராமப் பகுதிகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வகைத் திருமணம் நடைபெறுவது மிகக் கடினமாகக் காணப்படுகின்றது என்றும் கூறுவார் சமூகவியலறிஞர் மான்சிங்தாஸ் (Man Singh Das, 1978, p. 94).

கலப்புக் காதல் சித்திரிப்பில் ஆடவரின் மன உறுதியை லக்ஷ்மி காட்டுகின்றார். தம் வீட்டார் குடும்பத்தினின்று தன்னைத் தள்ளி வைத்த நிலையிலும் காதலில் உறுதியுடன் இருக்கும் ஆடவரை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; கலப்புக் காதலை விரும்பும் பெண்களை இவர் விரிவாகச் சித்திரிக்கவில்லை; இவருடைய கதைகள் வெளிவந்த 'காலத்தில் (1940-1952) கலப்புக் காதலுக்குச் சமுதாயத்தில் இருந்த எதிர்ப்பு இதற்குக் காரணமாகும் என்பது படைப்பாளியின் கருத்து.*

சூடாமணியின் நாவல்கள் கலப்புக்காதலை விரும்பும் பெண்களின் மனஉறுதியை மிகுதியாகச் சித்திரிக்கின்றன. தன் காதலை ஆணித்தரமாக வெளியிடும் கீதா, காதலுக்காகப் போராடும் நப்பின்னை, அபிராமி முதலியோரைச் சூடாமணி படைக்கின்றார்; இவருடைய நாவல்களில் கலப்புக் காதலை விரும்பும் ஆண்களின் மனநிலை சித்திரிக்கப்படவில்லை. கலப்புக் காதலை ஆண்வீட்டாரைவிடப் பெண்வீட்டாரே மிகுதியாக எதிர்க்கின்றனர் என்ற படைப்பாளியின் கருத்து, கலப்புக் காதலை விரும்பும் பெண்களை இவர் மிகுதியாகச் சித்திரிப்பதற்கு அடிப்படைக் காரணம் எனலாம்†. ஆய்வாளரின் களஆய்வும் இதற்கு அரணாகின்றது.π

லக்ஷ்மி இருவேறு சாதிகளிடைத் தோன்றும் காதலை மட்டும் காட்டுகின்றார். சூடாமணி கலப்புக் காதலைச் சித்திரிக்கும் மூன்று நாவல்களிலும் வெவ்வேறு நிலைகளிலுள்ள கலப்புக் காதலைச் சித்திரிக்கின்றார்; இந்நாவல்களில் சாதி, மொழி, பண்பாடு என முற்றிலும் வேறுபட்டவரிடைத் தோன்றும் காதலைக் குறிப்பிடுகின்றார். இச்சித்திரிப்புக்குச் சூடாமணியின் குடும்பப் பின்னணி காரணம் எனலாம். இவரது குடும்ப உறவினர்கள் குஜராத், பஞ்சாப் ஆகிய மாநிலங்களைச் சார்ந்த பெண்களையும் ஆண்களையும் மணந்துகொண்டிருக்கின்றனர்; இவரது சகோதரர் அமெரிக்கப் பெண்ணை மணந்துகொண்டிருக்கின்றார். அனைவரது இல்வாழ்க்கையும் மகிழ்ச்சியாக இருப்பதால் கலப்புக்காதல் வெற்றி பெறும் என்பது சூடாமணியின் கருத்தாகக் காணப்படுகின்றது.ππ

இவ்விரு படைப்பாளிகள் காட்டும் கலப்புக்காதலின் வேறுபாடு கீழ்க்கண்ட வரைபடத்தின்வழி விளக்கப்படுகின்றது.

---

* 13-1-79 அன்று ஆய்வாளர் படைப்பாளியுடன் நடத்திய பேட்டியில் படைப்பாளி வெளியிட்ட கருத்து.

† 14-1-79 அன்று ஆய்வாளர் சூடாமணியுடன் நடத்திய பேட்டியில் அவர் கூறிய கருத்து.

π ஆய்வாளருடைய களஆய்வில் கலப்புக் காதலை ஆடவரில் 29.75 விழுக்காட்டினரும், பெண்களில் 10.01 விழுக்காட்டினரும் விரும்புவதாகத் தெரிய வருகின்றது.

ππ 13. 1 .79 அன்று ஆய்வாளர் சூடாமணியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



இவ் வரைபடத்தின்வழி புலனாகும் உண்மைகள் :

1. லக்ஷ்மியின் நாவல்களில் கலப்புக் காதல் சாதி என்ற வட்டத்தை மட்டும் தொட்டு நிற்கின்றது; அதனைக் கடந்து வெளியே வரவில்லை.

2 சூடாமணியின் நாவல்களில் கலப்புக் காதல் சாதி எனும் வட்டத்தைத் தாண்டி, மொழி என்ற வட்டத்தையும் கடந்து பண்பாடு என்னும் வட்டத்தைத் தொட்டு நிற்கின்றது.

எனவே, கலப்புக் காதலை லக்ஷ்மி குறுகிய எல்லைக்குள் படைத்துக் காட்ட, சூடாமணி அதனைப் பரந்த எல்லைக்குக் கொண்டு சென்றிருக்கின்றார் என்பது தெளிவாகின்றது. கலப்புக் காதலுக்குச் சாதியோ, மொழியோ, பண்பாடோ தடையில்லை என்பது சூடாமணியின் கருத்து என்பதும் புலப்படுகின்றது.

3. 1. 1. 1. 1. 2. 2. 2. *நிறைவேறாக் காதல்*

வெவ்வேறு சாதியினருக்கிடையே நடைபெறும் திருமணம் சமுதாயத்தால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை (Margaret Cormack, 1961, p. 167). சாதி என்பது நமது குருதியில் ஊறிய ஒன்றாக இருப்பதால் காதலின் வெற்றிக்குச் சாதி வேறுபாடு ஒரு முக்கியத் தடையாகக் காணப்படுகின்றது. சாதியை எண்ணாது தான் காதலித்த பெண்ணை மணக்க ஓர் ஆண்மகனுக்குத் துணிவு தேவை; இத்துணிவு இன்றெனில் அவன் காதல் தோல்வியுறும் என்பதை லக்ஷ்மியின் 'லட்சிய வாதி', 'பெண் மனம்' ஆகிய இரு நாவல்களும் சித்திரிக்கின்றன.

'லட்சியவாதி' நாவலில் அந்தணகுலச் சங்கரன், மலைச்சாதிப் பெண் பொன்னியைக் காதலித்து, பெற்றோருக்குத் தெரியாமல் அவளை அழைத்து வந்துவிடுகிறான். காலப்போக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கில் சங்கரனுக்குப் பொன்னிமேல் இருந்த காதல் குறைகின்றது. தங்கள் காதலைச் சமுதாயம் அனுமதிக்காது என உணர்ந்து பொன்னியை வற்புறுத்தித் துரத்திவிடுகிறான்

இதே நிலையைப் 'பெண் மனம்' நாவலும் சித்திரிக்கின்றது. பெருநகரமான பம்பாயில் உயர்குல ராமநாதன் ஒருவருக்கும் தெரியாமல் கீழ்க்குலப் பெண்ணைக் காதலித்துப் பின் சமுதாயத்திற்கு அஞ்சி அவளை விட்டு ஓடிவந்துவிடுகிறான்.

சங்கரனால் துரத்தப்பட்ட பொன்னி அவன் நினைவிலேயே காலம் கழிக்கிறாள்; காதலனால் கைவிடப்பட்ட கீழ்ச்சாதிப் பெண் வசந்தா உயிர் துறக்கின்றாள்.

ஆடவருக்குப் பருவகாலத்தின் உணர்ச்சிக் குமுறலாகக் காதல் தோன்றுகின்றது; ஆனால் நடப்பியலை எண்ணிப் பார்க்கும் பொழுது சமுதாயத்தைக் கண்டு அச்சம் தோன்றுகின்றது; அச்சத்தின் விளைவாக ஆடவர் காதலை மறந்துவிடத் துணிகின்றனர் என்ற கருத்து இவ்விரு நாவல்கள் வழி புலப்படுகின்றது.

3. 1. 1. 1. 1. 2. 2. 3. கலப்புக் காதலைப் பற்றிய இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களை ஒப்பிட்டுக் காணும்பொழுது கலப்புக் காதலின் வெற்றி, தோல்வி ஆகிய இரண்டினையுமே லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; கலப்புக் காதலின் வெற்றியை மட்டும் சூடாமணி சித்திரிக்கின்றார் என்ற வேறுபாடு தெளிவாகின்றது. லக்ஷ்மி 'பெண் மனம்' நாவலில் வசந்தா-ராமநாதனின் கலப்புக் காதலின் தோல்வியையும் ஹேமலதா-நாகலிங்கம் காதலின் வெற்றியையும் சித்திரிக்கின்றார். வசந்தா மனத்துணிவற்றவள்; காதலன் கைவிட்டுச் சென்றவுடன் உடல்நலம் குன்றி இறந்துவிடுகின்றாள். வசந்தாவின் தங்கை ஹேமலதா தன் அக்காளை ஏமாற்றிய காதலனைத் தேடிவந்து அச்சுறுத்துகின்றாள்; தன்னை விரும்பும் மேல்சாதிக்காரனான நாகலிங்கத்தை மணந்து கொள்கின்றாள். எனவே, கலப்புக் காதலின் தோல்விக்குப் பெண்ணின் துணிவின்மையும் ஒரு காரணம் எனும் கருத்து இந்நாவலின்வழி புலப்படுகின்றது. கலப்புக் காதலில் தோல்வியுறும் 'லட்சியவாதி' நாவல் சித்திரிக்கும் பொன்னியும் மனத்துணிவின்மையாலேயே சங்கரன் அவளைத் துரத்தியதும் எதிர்த்துப் போராடாமல் தன் ஊருக்குத் திரும்பிச் சென்று விடுகின்றாள் என்பதும் இக்கருத்துக்கு அரணாகின்றது.

3. 1. 1. 2 உயர்காதல்

உயர்காதல் இயல்புக் காதலினின்று வேறுபட்டது. உடல் உறவைப் பற்றி எண்ணாது மன உறவையே பெரிதாக எண்ணும் அளவிற்கு உயர்வு கொண்டதாகக் காணப்படுவதால் இவ்வகைக் காதல் உயர்காதல் என இங்குக் குறிக்கப்படுகின்றது. காதலர்கள் ஒருவரை ஒருவர் சூழலால் பிரிந்து வாழவேண்டிய நிலையிலும், சூழலினால் கண்ணெதிரிலேயே தம் காதலர் மற்றவரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணம்புரிய வேண்டிய நிலையிலும் இக்காதல் மாறாமலே காணப்-
படுகின்றது. இக்காதலுக்குத் திருமணமானவர், திருமணமாகா-
தவர் என்ற வேறுபாடு இல்லை.

லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்', 'அடுத்த வீடு' ஆகிய
இரு நாவல்களும் சூடாமணியின் 'தீயினில் தூசு', 'மனத்துக்-
கினியவள்', 'மானிட அம்சம்', 'தந்தை வடிவம்' ஆகிய நான்கு
நாவல்களும் உயர்காதலைச் சித்திரிக்கின்றன.

'மிதிலா விலாஸ்' நாவலில் ரங்கூனில் வாழ்ந்த காலத்துக்
காதலர்களாயிருந்த கிரிஜாவும், கோபாலனும் அங்கு நடை
பெற்ற போர்நேரத்தில் தனித்தனியாக இந்தியாவிற்கு வருகின்-
றனர். ஒருவரைப்பற்றி ஒருவர் அறியாமலே சென்றுவிட்ட
ஒன்பது ஆண்டுகளுக்குப்பின்னர் கோபாலன் கிரிஜாவைத் தன்
நண்பன் ஈஸ்வரனுக்கென நிச்சயிக்கப்பட்ட பெண்ணாகக் காண்-
கின்றான். கிரிஜா பணமே வாழ்க்கைக்கு இன்றியமையாதது
என்பதை உணர்ந்து, பணக்காரனான தன் அத்தை மகன் ஈஸ்-
வரனைக் காதலிப்பதாக நடிக்கின்றாள். இதனை அறிந்த
கோபாலன் அவள் நலனை மட்டும் கருத்தில்கொண்டு. "செல்வ-
மெல்லாம் இழந்து ஏழ்மையான நிலையிலிருக்கும் என்னை
மணப்பதைவிட ஈஸ்வரனை மணந்தால் நீ சந்தோஷமாக இருக்-
கக்கூடும் என்று எண்ணி நான் ஆறுதல் அடைந்திருக்கிறேன்,"
(ப 332) என்று கூறும் உயர்ந்த உள்ளம் கொண்டவனாக
விளங்குகின்றான். மனக்கசப்பினால் ஈஸ்வரனை மணக்காது
தன் ஊருக்குத் திரும்பும் கிரிஜாவிடம் கோபாலன் "என் மனதில்
உன்பால் கொண்ட அன்பு குறையவில்லை; மாறவில்லை;
மாறப்போவதுமில்லை," (ப. 333) எனத் தன் அன்பின் நிலை-
யைக் கூறி அவளை மணக்க முன்வருகின்றான். காலத்தின் சூழ-
லால் கிரிஜாவின் உள்ளத்தில் மாற்றம் ஏற்படினும் கோபாலன்
மனதில் மாற்றம் காணப்படவில்லை.

'அடுத்த வீடு' நாவலில் அருணாவை விரும்பும் சிதம்பரம்,
அவள் தன்னை எண்ணாது செல்வந்தனான சுரேஷ்குமாரனை
மணக்க விரும்புவதை அறிந்தும் அவளை வாழ்த்துகின்றான்.
ஆனால் அவன் எண்ணியவாறே சுரேஷ்குமாரன் அருணாவைக்
கைவிட்ட பின்னர் சிதம்பரம் அருணாவை மணக்க முன்வருகின்-
றான். சிதம்பரத்தின் மனதில் பொறாமை இல்லை; தன் காதலி-
யின் நல்வாழ்விலேயே நாட்டம் கொள்ளும் உயர்ந்த உள்ளம் அவ-
னிடம் காணப்படுகின்றது.

சூடாமணியின் 'தீயினில் தூசு' நாவல் உயர்காதலைச் சித்-
திரிக்கின்றது.

தன் உறவினளின் முறைகேடான ஒழுக்கத்தால் பெற்ற
குழந்தையை வாசுகி தனதாக வளர்க்கின்றாள்; அவளை ஊராரும்
அவள் காதலன் கோபாலனும் மணமாகாத தாய் என்றே எண்ணு-
கின்றனர். அந்நிலையிலும் வாசுகியைக் காதலிக்கும் கோபால்
அவளை விரும்புகின்றான் (ப. 38). அவளைக் குழந்தையுடனேயே
ஏற்று வாழ இசைகின்றான் (ப. 131). உயர்காதல் காதலியை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முழுமையாக நம்பும் வலிமை கொண்டது; தன்மீது அவள் செலுத்தும் அன்பை முழுமையாக ஏற்றுக்கொள்ளும் தன்மை இக்காதலுக்கு உண்டு என்பதற்குக் கோபால் விளக்கமாகின்றான். வாசுகியும் காதலுக்காகத் தன் வளர்ப்புக் குழந்தையையும் கைவிடவில்லை; முதலில் குழந்தையோடு தன்னை ஏற்கத் தயங்கிய கோபாலின் மனதையும் மாற்றி வெற்றி பெறுகின்றாள்.

'மனத்துக்கினியவள்' நாவலில் சூழலின் காரணமாகக் கற்பைப் பறி கொடுத்த வித்யாவைக் காதலிக்கின்றான் டாக்டர் நீலகண்டன்; உண்மையை அறிந்த பின்னரும் ''நான் வைத்தியன். உடல் அங்கங்களெல்லாம் எனக்குத் தெரியும். அவற்றின் பலவீனத்தைப் பார்ப்பதே என் தொழில். அவை சிறியவை, பரிதாபகரமானவை, அழியக்கூடியவை, அவற்றுக்கு அர்த்தம் கொடுப்பது ஆத்மாதான் என்பதை வைத்தியர்கள்தாம் எல்லோரையும்விட நன்றாக அறிவார்கள். அந்த ஆத்மா உன்னிடம் சுத்தமாக இருப்பதை நான் பார்க்கும் பொழுது உன் உடலைப்பற்றி எனக்கு என்ன கவலை?'' (ப. 229) என்று அவளை ஏற்றுக்கொள்கின்றான்.

'மானிட அம்சம்' நாவலில் சூழலினால் கற்பைக் குடிகார மாமன்மகனிடம் பறிகொடுத்து அதன் விளைவாகக் கணவனாலும் தந்தையாலும் ஒதுக்கப்படுகின்றாள் சாரதா. அந்நிலையிலும் அவளைக் காதலிக்கின்றான் திவாகரன். ''உண்மையான அன்பு எந்த க்ன்ஸிடரேஷனையும் பார்க்காது,'' (ப.146) என்பதைத் திவாகரன் தனது கொள்கையாகக் கொண்டவன். 'ஒருவருக்கொருவர் எல்லாத் திரைகளையும் அகற்றாமலே, தான் உண்மையாக அன்பு செலுத்தும் ஒருவரை அவரது எல்லாமோடும் - ரகசியங்கள் உட்பட ஏற்றுக் கொள்ள முடியுமென்று' (ப. 330) காட்டும் உயர்ந்த அன்பு உடையவன். சாரதாவை அவன் அணைக்கும் தீண்டலில் உடலின் வேட்கை இல்லை; உள்ளத்தைப் புரிந்து இரக்கம் காட்டும் அன்பே தலைதூக்கி நிற்கின்றது.

'தந்தை வடிவம்' நாவலில் தந்தையின் இறப்பு காரணமாகப் பாதிக்கப்பட்ட உள்ளமுடைய அபர்ணா, ராஜுவை விரும்பாது தந்தையைப் போன்ற தோற்றமுடைய ஒருவரைக் காதலிக்கின்றாள்; அந்நிலையிலும் தன் காதல் உள்ளத்தை மாற்றிக் கொள்ளாதவனாகக் காணப்படுகின்றான் ராஜு. அவளாக மனம் மாறி வரும் வரை காத்திருந்து அவளை ஏற்றுக் கொள்ளும் உயர்ந்த உள்ளம் கொண்ட ராஜுவைச் சூடாமணி இந்நாவலில் சித்திரிக்கின்றார்.

பெரும்பான்மையான ஆடவர் திருமணமாகாத பெண்களை மணக்கவே விரும்புகின்றனர் சமுதாயத்தில் பல மாற்றங்கள் தோன்றினும் இன்றுவரை ஓர் ஆடவன் ஒரு விதவையை மணம் புரிவது மிக அரிதாகவே காணப்படுகின்றது.* ஒரு விதவையை

---

* ஆய்வாளருடைய களஆய்வில் 80.50 விழுக்காடு ஆண்கள் திருமணமாகாத பெண்களை மணக்கவே விரும்புவதாகக் குறிப்பிடுகின்றனர் விதவைப் பெண்களை மணக்க விரும்புவதாக ஒருவரும் குறிப்பிடவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஓர் ஆடவன் காதலித்து மணப்பது இயல்புநிலையினின்று வேறு-படுவதால் அவனது காதலை உயர்காதலாக கருதலாம். இவ்-வகை உயர்காதலை 'உயர்வு உள்ளத்திலே' நாவலில் சூடாமணி சித்திரித்துள்ளார்.

ஒரு குழந்தையுடன் இளவயதில் விதவையான கௌரியைக் காதலித்து மணக்கின்றான் இராமாமிருதம். தன் காதலியின் முந்திய மணவாழ்வோ, அவள் குழந்தையோ அவன் காதலுக்-குத் தடையாகக் காணப்படவில்லை. விதவை பரிமளாவை ராஜு காதலித்து மணப்பதையும் இந்நாவல் காட்டுகின்றது. இராமா-மிருதமும் ராஜுவும் தம் பெற்றோரின் எதிர்ப்பை மீறியே திரு-மணம் புரிந்துகொள்கின்றனர். எனவே, உயர்காதலுக்குப் பெண்-ணின் விதவை நிலை தடையில்லை என்பது சூடாமணியின் நாவல்வழிப் புலப்படுகின்றது.

உயர்காதலை விரும்பும் ஆடவர் அனைவருமே உடலுற-வுக்கோ, காதலியருடைய அழகிற்கோ சிறப்பிடம் கொடுக்காது உள்ளம் ஒன்றிய காதலுக்கே சிறப்பிடம் கொடுப்பதால் இவர்க-ளுடைய காதல் உயர்காதலாகின்றது.

லக்ஷ்மியின் நாவல்கள் சூழ்நிலையினாலும், உலகக் கவர்ச்-சியினாலும் மனம் மாறிய காதலியரிடத்தும் அன்புசெலுத்தும் காதலர்களைச் சித்திரிக்கின்றன. இவரது நாவல்களில் உடல் தூய்மை குன்றாது உள்ளத்தூய்மை குன்றிய பெண்கள் சித்தி-ரிக்கப்படுகின்றனர். சூடாமணியின் நாவல்களில் உடல் தூய்மை குன்றியிருந்தாலும் உள்ளத்தூய்மை குன்றாத பெண்களைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு வாழ்வு கொடுக்க முன்வரும் ஆடவரைக் காணமுடிகின்றது உயர்காதலுக்கு இரு படைப்பாளி-களின் நாவல்களும் வகுக்கும் வரையறை ஒன்றுக்கொன்று முரண்-பாடாகக் காணப்படுகின்றதெனினும் இருவருடைய நாவல்-களுமே உயர்ந்த உள்ளத்தின் காதலைக் காட்டுகின்றன.

3. 1. 1. 2. 0. ஒருமனக் காதல்

ஒருமனக் காதல் என்பது காதலிப்பதற்குரிய இருவர் உள்-ளங்களில் ஒருவர் உள்ளத்தில் காதல் தோன்றி மற்றவர் உள்-ளத்தில் காதல் தோன்றாமல் இருப்பது ஆகும். இக்காதலை இரு வகைப்படுத்தலாம். அவை பின்வருமாறு :

1. ஆணின் ஒருதலைக் காதல்
2. பெண்ணின் ஒருதலைக் காதல்

3. 1. 1 2. 1. ஆணின் ஒருதலைக் காதல்

ஆண்மனதில் தோன்றும் காதல் உணர்வு அவனால் காத-லிக்கப்படும் பெண் மனதில் தோன்றாநிலை இங்குக் காணப்படு-கின்றது. இதனை 'லட்சியவாதி' எனும் லக்ஷ்மியின் நாவல் சித்-திரிக்கின்றது.

'லட்சியவாதி' நாவலில் தன் தங்கையின் தோழி கீதாவைக் காதலிக்கின்றான் சிவராமன். ஆனால் கீதா அவனைக் காதலிக்க வில்லை. தன் கணவனின் தொழிற்சாலை தீப்பிடித்ததன் கார-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ணத்தை அறிய விரும்பிய கீதா சிவராமனுக்குக் கடிதம் எழுதுகின்றாள் (ப. 271). தன்னை மணக்க மறுத்த கீதாவின் வாழ்வினை அழிக்க எண்ணிய சிவராமன் கீதாவின் கணவனிடம் "தைரியமிருந்தால் அவள் ஒப்புக்கொள்ளட்டும் இந்தக் கடிதத்தை எழுதி என்னை வரவழைக்கவில்லையென்று," (ப 319) என்று கீதா எழுதிய கடிதச் செய்திகளை மாற்றிக் கூறி அவள் கணவன் நெஞ்சில் ஐயத்தை உருவாக்க முனைகின்றான். தன் உள்ளத்தில் மட்டும் காதலை வளர்த்துக்கொண்ட சிவராமன் தனக்குக் கிட்டாமல் போன கீதாவின் வாழ்க்கையைக் காதல் தோல்வியினால் அழிக்கத் துணிகின்றான்.

ஆணின் ஒருதலைக் காதலை இதனின்று மாறுபட்ட நிலையிலும் லக்ஷ்மி இந்நாவலில் காட்டுகின்றார் தன்னால் காதலிக்கப்பட்ட தன் முறைப்பெண் வேறு இனத்தானுடன் ஓடிப்போய், காதலனால் கைவிடப்பட்டு மீண்டும் உற்றாரைத் தேடி அவள் வரும் நிலையில் அவளைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்க முன் வருகின்றான் காளிசாமி (ப. 299). இங்குக் காளிசாமியிடம் காதல் தோல்வியினால் பழிவாங்கும் உணர்ச்சி ஏற்படவில்லை, தன்காதலியின் மனதைப் புரிந்துகொண்டவனாகக் காணப்படுகின்றான்.

ஒருதலைக் காதலைச் சூடாமணி 'அஞ்சன விழிகள்' நாவலில் காட்டுகின்றார். ஹேமாவிடம் ஒருதலைக் காதல் கொள்ளும் மூர்த்தி ஹேமாவிடம், "உனக்கு என்றாவது என்னை விரும்ப முடியும்னு தோன்றினால் அப்போ நாம் கல்யாணம் செய்துக்கலாம்; நான் உயிரோடு இருந்தால், அப்படி உன் மனம் இடம் கொடுக்கலேன்னா இந்த மாதிரியே வாழ்ந்து முடிச்சுடலாம்" (ப. 174) எனத் தன் விருப்பத்தைப் புலப்படுத்துகின்றானே அன்றிப் பழிவாங்கும் உணர்ச்சி அவனிடம் காணப்பட வில்லை.

3. 1. 1. 2. 2. பெண்ணின் ஒருதலைக் காதல்

இது பெண் மனதில் காதல் தோன்றி ஆண் மனதில் காதல் தோன்றா நிலையைக் குறிப்பிடுகின்றது. இக்காதலை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' நாவலும் சூடாமணியின் 'அஞ்சன விழிகள்' நாவலும் சித்திரிக்கின்றன.

'நாயக்கர் மக்கள்' நாவலில் கல்லூரி வாழ்வில் தன்னுடன் பயிலும் பாஸ்கரனைக் காதலிக்கின்றாள் ரேவதி. ஆனால் பாஸ்கரன், அவள் காதலை ஏற்றுக்கொள்ளவில்லை. தன்னை ஏற்க மறுக்கும் பாஸ்கரனைப் பழிவாங்க, தன்னிடம் தவறாக நடந்து கொண்டான் என்று ரேவதி அவன்மீது பழி சுமத்தி அவன் கல்லூரியைவிட்டு வெளியேறக் காரணமாகின்றாள். அவளது திருமணத்திற்குப் பின்னரும் அவளது பழிவாங்கும் உணர்ச்சி மாறவில்லை. தன் உறவினர் மகளை மணக்கவிருக்கும் பாஸ்கரனின் திருமணத்தை நிறுத்த முயலுகின்றாள். ஆனால் திருமணம் நடந்துவிட கணவன்-மனைவியர்க்கிடையே அவரவர் ஒழுக்கம்பற்றிய ஐயத்தைக் கிளப்பிவிடுகின்றாள். இறுதியில் உண்மை வெளிப்பட ரேவதி தற்கொலை செய்து கொள்கின்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வகை ஒருமனக் காதலைக் காட்டுவதில் லஷ்மியிடமிருந்து மாறுபடுகின்றார் சூடாமணி. தன்னைக் காதலிக்க மறுத்த தேவநாதனைப் பழிவாங்க எண்ணாது அவனது காதலுக்காகக் காத்திருக்கும் ஹேமாவை 'அஞ்சன விழிகள்' நாவலில் சூடாமணி படைக்கின்றார்.

லஷ்மியின் நாவல்களில் காணப்படும் ஒருமனக் காதலில் காதல் தோல்வியுற்றவர்க்கு அத்தோல்வி பழிவாங்கும் உணர்ச்சியாக மாறிவிடுகின்றது என்று காணப்படுகிறது. பழிவாங்கும் உணர்ச்சியுடையோர் இறுதியில் துன்பப்படுவதாகவே லஷ்மி சித்திரிக்கின்றார்.

சூடாமணியின் நாவல்களில் ஒருமனக் காதலில் தோல்வியுற்றவரிடம் தன்னால் காதலிக்கப்பட்ட பெண்ணின் வாழ்வுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவமோ, ஒருமனக் காதல் இருமனக் காதலாக மாறும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கும் எதிர்பார்ப்போ காணப்படுகின்றன; பழிவாங்கும் உணர்ச்சி எவரிடமும் காணப்படவில்லை. ஒருமனக் காதல் இருமனக் காதலாக மாறியதாக இருவரும் சித்திரிக்கவில்லை.

3.1.2 இவ்விரு படைப்பாளிகள் படைத்துள்ள காதல் வகைகளைக் கீழ்க்கண்ட அட்டவணைவழிக் காணலாம்.

இருமனமொத்த காதலில் நிறைவேறும் காதல்

காதலின் வகை	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
நிறைவேறும் காதல்						
1. உறவுமுறைக் காதல்	3	20.00	1	6.67	4	13.33
2. உறவு இன்றிக் காதல் :						
அ) ஒரே இனம்	8	53.33	5	33.33	13	43.33
ஆ) வேறு இனம்	2	13.33	3	20.00	5	16.67
இ) உயர்காதல்	2	13.34	6	40.00	8	26.67
மொத்தம்	15	100.00	15	100.00	30	100.00

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காரணங்கள்	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
1. காதலனின் மனமாற்றம்	1	7.69	—	—	1	6.25
2. குடும்ப அவப்பெயர்	1	7.69	—	—	1	6.25
3. செல்வ வேறு-பாடு	1	7.69	—	—	1	6.25
4. விதவைக் காதல்	3	23.08	—	—	3	18.75
5. போலிக்காதல்	2	15.38	1	33.33	3	18.75
6. சாதி வேறுபாடு	2	15.38	—	—	2	12.50
7. ஒருமனக் காதல்	3	23.09	2	66.67	5	31.25
மொத்தம்	13	100.00	3	100.00	16	100.00

இவ்விரு அட்டவணைகளையும் ஒப்பிட்டு நோக்குகையில் இரு படைப்பாளிகளும் நிறைவேறும் காதலையே மிகுதியாகக் காட்டியுள்ளனர் என்பது தெரிகின்றது. நிறைவேறும் காதலை ஒரே அளவு காட்டும் இரு படைப்பாளிகளும் நிறைவேறாக் காதலைப் படைப்பதில் வேறுபட்டுக் காணப்படுகின்றனர்.

சூடாமணியின் நாவல்களில் காணப்படும் பதினெட்டுக் காதல் சித்திரிப்புக்களில் பதினைந்து சித்திரிப்புக்கள் நிறைவேறும் காதலையே காட்டுகின்றன. புரட்சிக் கருத்துக்களையுடைய கலப்புக் காதல், உயர்காதல், விதவைக் காதல் முதலியவற்றினையும் சூடாமணி தம் நாவல்களில் சித்திரித்துள்ளார்.

காதல் நிறைவேறாமைக்கு லக்ஷ்மி கூறும் பல்வேறு காரணங்களைச் சூடாமணி காட்டவில்லை.

இருவரது நாவல்களிலும் காதலின் வெற்றியே மிகுதியாகப் படைக்கப்பட்டுள்ளதைக் காணும்பொழுது அதில் இருவருக்கும் உள்ள உடன்பாடு வெளிப்படுகின்றது.

லக்ஷ்மிக்கு ஆய்வாளர் கொடுத்த வினாப்பட்டியில் இது பற்றி வினவிய பொழுது ''நான் என் இளவயதிலேயே, அதாவது என் கல்லூரிப் பருவத்திலேயே கதை எழுதத் தொடங்கியதால் எனது அக்காலக் கதைகளில் காதல் உணர்ச்சி மிகுந்து காணப்படும். என் இளம் பருவத்தின் வெளிப்பாடு அது எனக் கூறலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆனால் இன்றையக் கதைகளில் என் கதைப்போக்கு மாறிவிட்டது. மேலும் கதைகளுக்கு இன்ப முடிவினைத்தருவதையே நான் பெரும்பாலும் விரும்புவேன். எனவே, உண்மையான காதல் வெற்றியே பெறும் என்ற முறையில் என் கதை முடிவுகள் அமைந்திருக்கும்,'' என லக்ஷ்மி கூறிய விளக்கம் ஈண்டுக் கருதத்தக்கது.* சூடாமணி, ''நல்ல காதலில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஒருவரை நன்கு அறிந்து கொண்டு பழகிய பின்னர் காதலில் தோல்வி ஏன் ஏற்படுகின்றது? உண்மைக் காதல் எந்தத்தடையையும் மீறி வெற்றி பெற்றுவிடும் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு,''* எனக் காதலைப்பற்றிக் கூறுவதும் ஈண்டுக் கருதத்தக்கது.

3. 1. 3. *படைப்பாளிகளின் காதல் கொள்கை*

''அன்பு என்பது அந்தஸ்திற்காகவோ அழகிற்காகவோ ஏற்படக் கூடாது, தானாக எவ்வித முகாந்திரமும் இன்றி அது இயற்கையாகப் பெருகிப் பொங்கி வரவேண்டும். பலவித நலனை உத்தேசித்து, செயற்கையாகத் தூண்டப்பட்ட அன்பு நிரந்தரமற்றது,'' (ப. 243) என்று 'சூர்யகாந்தம்' நாவலில் காதலின் உண்மைத் தன்மையை லக்ஷ்மி எடுத்துரைக்கின்றார். 'அரக்கு மாளிகை' நாவலில், ''நோய், வறுமை, வயோதிகம் இவற்றைக் கண்டு பறந்தோடி விடும் பலஹீனமான உணர்ச்சி அல்ல காதல். இவற்றிற்கு அப்பால் மரணத்தையும் கண்டு அஞ்சாதது காதல்,'' (அத். 68) என்று காதலின் உறுதியை வலியுறுத்துகின்றார் லக்ஷ்மி. காதலில் காதலர்களுக்கிடையே எவ்வித ஒளிவு மறைவும் இருக்கக்கூடாது என்பதை இருபடைப்பாளிகளும் வலியுறுத்துகின்றனர். மணத்திற்கு முன் தோன்றும் காதலைவிட, மணத்திற்குப்பின் தோன்றும் காதலே நீடித்திருக்கும் என்பது லக்ஷ்மியின் கருத்து (அடுத்த வீடு, ப.536). காதலைப் பற்றிய தன் கொள்கைகளை லக்ஷ்மிபோல் சூடாமணி தனித்துக் கூறாவிடினும் எந்தத் தடையையும் மீறிக்கொண்டு இருவர் உள்ளங்களில் தோன்றுவதே காதல் என்பதைத் தம் நாவல்களில் படைத்துக்காட்டுவதன்வழி விளக்குகின்றார்.

3. 1. 4. லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் காதல்பற்றிக் கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்படுகின்றன.

காதல் ஒருமனக் காதல், இருமனக் காதல் என இரு வகைப்படும். இருமனக் காதல் இயல்புக் காதல், உயர்காதல் என்ற பாகுபாட்டிற்குள் அடங்கும். ஒரே வீட்டில் வளரும் உறவினரிடையே காதல் தோன்றுவது இயல்பாகக் காணப்படுகின்றது. ஆணின் நற்பண்பு பெண்ணை முதலில் கவர்ந்த பின்னரே அவன் அழகு பெண்ணிடத்துக் காதலை வளர்க்கத் துணை புரிகின்றது என்பதை இருபடைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். பெண்ணின் அழகே ஆணின் மனதில் காதலைத் தோற்றுவிக்-

---

* ஆய்வாளர் படைப்பாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டிகளின் வாயிலாக அறிந்த கருத்துக்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றது. பெண்ணின் அழகோடு அவளது நற்பண்பும் இணையும் பொழுதுதான் காதல் வாழ்வு சிறப்புப் பெறுகின்றது என்பதை இருபடைப்பாளிகளும் வலியுறுத்துகின்றனர்.

காதல் நிறைவேறுவதற்குத் தடைகள் பல தோன்றினும் காதலர்களின் மனஉறுதி அவற்றை மீறி அவர்களை ஒன்று சேர்க்கின்றது. ஆண்களை விடப் பெண்களே காதலில் உறுதி கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர். காதல் நிறைவேறாமைக்குக் குடும்ப அவப்பெயர், செல்வ வேறுபாடு, சாதிவேறுபாடு, விதவைக்காதல், போலிக்காதல் ஆகியவை காரணமாக விளங்குகின்றன.

இவ்வனைத்துக் காரணங்களையும் லஷ்மி சித்திரிக்க, சூடாமணி போலிக் காதல் ஒன்றினையே காதல் நிறைவேறா மைக்குரிய காரணமாகக் காட்டுகின்றார். இவ்வேறுபாட்டிற்கு இரு படைப்பாளிகளுடைய வாழ்க்கைப் பின்னணி காரணமாகின்றது.

வேறு இனக் காதலாகிய கலப்புக்காதலை, இருசாதிகளுக்கிடையே ஏற்படும் காதலாக லக்ஷ்மி சித்திரிக்க, சூடாமணி சாதி, மொழி, பண்பாடு என்ற மூன்றையும் கடந்த நிலையில் சித்திரிக்கின்றார். கலப்புக் காதலை நகரச் சூழலில் வாழும் பெற்றோர் ஆதரிக்க, கிராமச் சூழலில் வாழும் பெற்றோர் எதிர்க்கின்றனர் என இருவரும் சுட்டுகின்றனர். கலப்புக் காதலின் வெற்றிக்குக் காதலர்கள் சந்திக்கும் வாய்ப்பு, பெண்களின் கல்வி, காதலர்கள் வாழும் நகரச் சூழல் ஆகியவை காரணங்களாகின்றன எனச் சூடாமணி தம் நாவல்களில் காட்டுகின்றார். கலப்புக் காதலில் ஆடவரின் மனஉறுதியை லஷ்மி சித்திரிக்க, பெண்களின் மனஉறுதியைச் சூடாமணி சித்திரிக்கின்றார்.

உடல் தூய்மை குன்றாது உள்ளத்தூய்மை குன்றிய பெண்களைக் காதலிக்கும் ஆடவரது உயர்காதலை லஷ்மியும், உடல் தூய்மை குன்றி, உள்ளத் தூய்மை குன்றாத பெண்களைக் காதலிக்கும் ஆடவரது உயர்காதலைச் சூடாமணியும் சித்திரிக்கின்றனர். ஒருதலைக் காதல், காதல் தோல்வியினால் பழிவாங்கும் உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது எனும் சித்திரிப்பில் லஷ்மியிடமிருந்து சூடாமணி வேறுபடுகின்றார்.

இரு படைப்பாளிகளும் நிறைவேறும் காதலையே மிகுதியாகப் படைப்பது நடப்பியலோடு முரண்படுகின்றது * எனவே, இரு படைப்பாளிகளிடமும் காதல் சித்திரிப்பில் 'குறிக்கோள் போக்கு' காணப்படுகின்றது.

---

* ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டி வாயிலாகக் காதல் நிறைவேறும் என்ற கருத்தை ஆடவரில் 77 விழுக்காட்டினர் மறுத்திருக்கின்றனர்; பெண்களில் 75. 95 விழுக்காட்டினர் மறுத்திருக்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 2. திருமணம்

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

இவ்வியலில் திருமணம் மரபுத் திருமணம், மரபு மீறிய திருமணம் என்று பாகுபடுத்தப்பட்டு ஆராயப்படுகின்றது. மரபுத் திருமணம் முதல் மணம், மறுமணம் என வகைப்படுத்தப்படுகின்றது. முதல் மணத்திற்கு மணமகன் தகுதி. பொருளாதார அடிப்படை, மணமகள் தகுதி, உறவுமுறை ஆகியவை அடிப்படைக் காரணங்களாக அமைகின்ற தன்மை இரு படைப்பாளிகளின் நாவல்கள்வழி ஆராயப்படுகின்றது. முதல் மணம் நிறைவேறாததற்குரிய காரணங்களும், அவற்றைச் சித்திரிப்பதில் இரு படைப் பாளிகளுக்கிடையேயுள்ள வேறுபாடுகளும் விளக்கப்படுகின்றன. மறுமணம் என்ற பகுப்பில் முதல் மனைவி இறந்தபின் ஆடவர் மறுமணம் செய்து கொள்வதற்குரிய காரணங்களும், முதல்மனைவி இருக்கும் பொழுதே ஆடவர் மறுமணம் செய்து கொள்வதற்குரிய காரணங்களும் ஆராய்ந்து காணப்படுகின்றன நாவல்களின் மறுமணச் சித்திரிப்பு சமூகவியலுடன் ஒப்பிடப்படுகின்றது. மறுமணத்தால் திருமண வாழ்வில் விளையும் சிக்கல்கள் விளக்கப்படுகின்றன

மரபு மீறிய திருமணத்தை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கும் முறை பகுப்பாராய்வின்வழி விளக்கப்படுகின்றது. கலப்புத் திருமணச் சித்திரிப்பில் இரு படைப்பாளிகளின் கலப்புத் திருமணம் பற்றிய கொள்கைகளும் ஆராயப்படுகின்றன. இரு படைப்பாளிகளும் மரபுத் திருமணத்தைவிட மரபு மீறிய திருமணத்தையே மிகுதியாகச் சித்திரிக்கின்றனர் என்ற முடிவு ஒப்பீடு வாயிலாகத் தெளிவுபடுத்தப்படுகின்றது.

3. 2. *திருமணம்*

3 2. 0. 1. இந்துக்களின் திருமணம் புனிதமானது; அறம், இனவிருத்தி, மகிழ்ச்சி முதலியவற்றை நிறைவு செய்வதன் அடிப்படையில் நிகழ்வது (Kapadia 1966, p. 167 Altekar, 1973, pp. 32-34) இக்கருத்து, திருமணம் என்பது ஒருவரது மகிழ்ச்சிக்கும், மன நிறைவுக்கும் காரணமான சமுதாய ஒப்பந்தம் என்று இன்று மாறிவிட்டது. சமய, சமுதாயத் தேவைகளுக்கோ, மரபு, பண்பாட்டு, கடமைகளுக்கோ, பொருளாதார, சமுதாய எதிர்பார்ப்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புக்களுக்கோ மட்டுமல்லாது, உடல் உணர்வு, சமுதாய மதிப்பு, தனிப்பட்ட வசதிகள், நன்மைகள் முதலியவற்றிற்கு மிகத்-தேவையான ஒன்றாகத் திருமணம் கருதப்படுகின்றது. (Promilla Kapur, 1978, p. 122).

3. 2. 0. 2. பண்டைய இந்திய சமுதாயத்தில் திருமணம் இரு இளவயதினருக்கிடையே ஏற்படும் உறவு என்பதைவிட, இரு-குடும்பங்களுக்கிடையே ஏற்படும் உறவு நிகழ்ச்சியாகவே கருதப்-பட்டது. மரபு வழிகளைப் பின்பற்றி வரும் இந்தியக் குடும்பங்-களில் திருமணம் செய்துகொள்ளப்போகின்றவர்களின் விருப்-பத்தைக் கேட்டோ, கேட்காமலோ, பெற்றோர் அவர்களின் திருமணத்தை நிச்சயித்தனர். தனிப்பட்டவர்களின் விருப்பத்திற்கு மதிப்பு இன்மையால் பிள்ளைகளும் பெற்றோரால் நிச்சயிக்கப்-பட்ட திருமணத்திற்கு இசைந்தனர். தம் வாழ்க்கைத் துணை-யைத் தேடிக்கொள்ள இருவருக்கிடையே காதல் ஏற்பட வேண்-டிய தேவை அன்று இல்லை; திருமணத்திற்கு முன் காதல் தோன்றுவதைவிடத் திருமணத்திற்குப்பின் கணவன் மனைவிக்கு இடையே தோன்றும் காதலே வரவேற்கப்பட்டது. (Promilla Kapur, 1978, p. 123).

3. 2. 0. 3. காலம் மாறுதலில் இப்போக்கு மாறியது. படித்-தவர்களிடையே திருமண முறையிலும், வாழ்க்கைத் துணை-யைத் தேர்ந்தெடுக்கும் முறையிலும் மாற்றம் ஏற்படத் தொடங்-கியது. காதல் திருமணங்களும், வாழ்க்கைத்துணையைத் தாங்-களே தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற எண்ணமும் பெருகத் தொடங்கின. திருமணத்திற்கு முன்னரே திருமணத்-திற்குரிய ஆணையும் பெண்ணையும் கலந்து கொண்டு திருமணம் முடிவு செய்யப்படுவது மிகத் தேவையானது என்ற கருத்து கல்வித் தகுதி மிகுதியாக உடையவர்களிடம் காணப்படுகின்-றது என்பார் கோர் (M. S. Gore. 1968, pp. 207-209)

3. 2. 0. 4. இவ்விருவகைப் போக்குகளையும் காணும் பொழுது சமுதாயத்தில் நடைபெறும் திருமணங்களை இரு வகைப்படுத்த முடிகின்றது.

1. பெற்றோரே பிள்ளைகளின் திருமணத்தை நிச்சயிக்-கும் முறை. மரபுவழிப்படி நடைபெறும் இத்திருமணத்தை மரபுத் திருமணம் எனலாம்.

2. ஆடவனும் பெண்ணும் காதலித்துத் திருமணம் செய்து கொள்ளும் முறை. இத்திருமணம் பெற்றோரின் இசைவு பெற்றோ, பெறாமலோ நடைபெறலாம். மரபுவழியை மீறி நடக்கும் இத்-திருமணத்தை மரபு மீறிய திருமணம் எனலாம்.

3. 2 0. 5. லஷ்மி, சூடாமணி ஆகிய இருவரின் நாவல்-களில் இவ்விருவகைத் திருமணங்களும் காணப்படுகின்றன. அவர்தம் நாவல்களைக்கொண்டு திருமணமுறையைக் கீழ்க்-கண்டவாறு விளக்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

- திருமணம்
  - மரபுத் திருமணம்
    - முதல் திருமணம்
    - மறுமணம்
  - மரபு மீறிய திருமணம்
    - முதல் திருமணம்
    - மறுமணம்

3. 2. 1. 0. *மரபுத் திருமணம்*

திருமணம் இன்றி ஓர் ஆணோ பெண்ணோ இறக்கக்கூடாது என்று எண்ணுமளவு சமுதாயத்தில் திருமணம் புனிதமாகக் கருதப்படுவதால், பெற்றோர் தம் குழந்தைகளுக்குத் திருமணம் செய்வதைத் தமது தலையாய கடமையாகக் கருதுகின்றனர் எனத் திருமணத்தின் இன்றியமையாமையைச் சமூகவியலறிஞர் கூறுகின்றார் (Aileen D. Ross, 1973, p 235). குடும்பத்தின் மூத்தவர்களால் நிச்சயிக்கப்படும் மரபுத் திருமணத்தை இருவகைப்படுத்தலாம்.

1) முதல் திருமணம், 2) மறுமணம்

பெற்றோராலோ அல்லது குடும்பத்தின் மூத்தவராலோ திருமணம் நிச்சயிக்கப்பட்டு, இதுவரை எந்தப் பெண்ணையோ அன்றி ஆணையோ திருமணம் செய்துகொண்டிராத ஓர் ஆடவனும் பெண்ணும் முதன்முதலாக மணந்து கொள்வதே முதல் திருமணம் எனப்படுகின்றது.

தன் முதல் மனைவியை இழந்த ஆடவன் மற்றொரு பெண்ணை மணப்பதோ; மனைவி உயிருடன் இருக்கும்பொழுதே மற்றொரு பெண்ணை மணப்பதோ மறுமணம் எனப்படுகின்றது. ஒரு பெண்ணும் தன் கணவன் இறந்துவிட்டால் மற்றொரு ஆடவனை மணக்கும் வழக்கமும் சமுதாயத்தில் காணப்படுகின்றது. எனினும் அது மரபு மீறிய செயலாகக் கருதப்படுவதால் அது மரபுத் திருமணத்தில் குறிக்கப்படவில்லை.

3. 2. 1. 1. *முதல் திருமணம்*

லக்ஷ்மியின் (1) நாயக்கர் மக்கள், (2) லட்சியவாதி, (3) மாயமான், (4) ஸ்ரீமதி மைதிலி, (5) மிதிலா விலாஸ், (6) சூர்யகாந்தம், (7) அடுத்த வீடு, (8) பண்ணையார் மகள், (9) பெண்மனம் ஆகிய நாவல்களும், சூடாமணியின் (1) செந்தாழை, (2) மானிட அம்சம், (3) தீயினில் தூசு, (4) விடிவை நோக்கி ஆகிய நாவல்களும் முதல் திருமணத்தைச் சித்திரிக்கின்றன.

மரபுத் திருமணம் மணமக்களின் இசைவுடனும் நடைபெறுகின்றது; மணமக்களின் இசைவு பெறாமலே பெற்றோரின் வற்புறுத்தலாலும் நடைபெறுகின்றது; திருமணம் நிச்சயிக்கப்படும் பொழுது சில சிக்கல்கள் தோன்றித் திருமணம் நடைபெறாமலும் இருப்பதுண்டு. எனவே, இத்திருமணத்தை நிறைவேறும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமணம் என்றும், நிறைவேறாத் திருமணம் என்றும் இரு வகைப்படுத்தலாம்.

3.2.1.1.1. *நிறைவேறும் திருமணம்*

3.2.1.1.1.1 *மணமக்களின் இசைவு பெற்ற திருமணம்*

மணமக்களின் இசைவு பெற்று நடைபெறும் திருமணம் நான்கு வகை அடிப்படைகளில் நிகழ்கின்றது.

1) மணமகனின் தகுதி
2) பொருளாதார அடிப்படை
3) மணமகளின் தகுதி
4) உறவுமுறை

3.2.1.1.1.1.1. *மணமகனின் தகுதி*

மணமகளின் பெற்றோர் திருமணத்தை நிச்சயிக்கும் பொழுது மணமகனின் தகுதியைக் குறிப்பாகப்பார்க்கின்றனர். மணமகனின் படிப்பு, வேலை, அழகு மற்றவரிடம் பழகும் முறை இவற்றை ஆராய்ந்து பார்த்தே பெற்றோர் தம் மகளை மணமுடித்துக் கொடுக்க எண்ணுகின்றனர் என்பதை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' நாவல் காட்டுகின்றது (பக். 13, 77). இங்கு மணமகனின் குடும்பச் சொத்து பெரிதாக மதிக்கப்படவில்லை. ஆனால் மணமகனின் சொத்தும் அவன் தகுதியை அறிய உதவுகின்றது என்பதை 'லட்சியவாதி' நாவலில், "படித்திருக்கின்றான்; ஏகப்பட்ட சொத்துள்ள பிரம்மச்சாரி", (ப. 60) என்று மணமகனைக் குறித்து மணமகள் வீட்டார் பேசுவதினின்று அறிந்துகொள்ள முடிகிறது. இக்கருத்து 'மாயமான்' நாவலிலும் காணப்படுகிறது. (ப 50). திருமணம் நடைபெற மணமகன் தகுதி ஒரு காரணமாகின்றது என்ற கருத்தைச் சமூகவியல் அறிஞரும் ஏற்கின்றார்(David G. Mandelbaum, 1972, p.105).

3.2 1.1.1.1.2. *பொருளாதார அடிப்படை*

திருமணம் நிச்சயிக்கப்படுவதற்கு மணகள் வீட்டாரின் பொருளாதார நிலை ஒரு முக்கிய காரணமாகக் காணப்படுகின்றது. மணமகன் வீட்டார், பெண் வீட்டாரின் செல்வ நிலை, தமக்கு அவர்கள் செய்யக்கூடிய சீர்வரிசை முதலியவற்றை நோக்கியே திருமணத்தை நிச்சயிக்கின்றனர். பெண்ணின் அழகோ, பண்போ இதற்குப் பின்னர்தான் கவனிக்கப்படுகின்றது. வரதட்சிணை, சீர்வரிசை, பெண்ணுக்கு நகைகள், திருமணச் செலவு இவற்றையெல்லாம் குறித்துப் பேசிய பின்னரும், "இதற்கு மேற்கொண்டு ஏதேனும் செய்ய விரும்பினால் அது பெண்வீட்டாரின் இஷ்டத்தைப் பொறுத்தது," (ப. 18) எனப் பேசும் மணமகன் வீட்டாரை லஷ்மி 'ஸ்ரீமதி மைதிலி' நாவலில் சித்திரிக்கின்றார். லஷ்மியின் 'மிதிலா விலாஸ்', 'சூர்யகாந்தம்'

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆகிய நாவல்களும், சூடாமணியின் 'செந்தாமரை' நாவலும் பொருளாதார அடிப்படையில் திருமணம் நிச்சயிக்கப்படுவதைச் சித்திரிக்கின்றன.

மணமகனும் இதில் காட்டும் ஆர்வத்தை 'அடுத்தவீடு' நாவல் காட்டுகிறது. இந்நாவலில் வரும் சதாசிவம் பணக்காரக் குடும்பத்துப் பெண்ணை மணப்பதினால் தன் பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளலாம் என்று பங்கஜத்தை மணந்து கொள்கிறான். சூடாமணியின் 'விடிவை நோக்கி' என்ற நாவலிலும் பணத்திற்காகவே பவானியை மணந்து கொள்ளும் ஹரிஹரனைக் காணமுடிகின்றது.

3. 2. 1. 1. 1 1 3. *மணமகளின் தகுதி*

பெண்கொண்டுவரும் சீர்வரிசைகளைப் பெரிதாக மதிக்கும் திருமண முறையில் பெண்ணை அவள் அழகு, பண்பு, இவற்றுக்காகவே மணந்துகொள்ளும் ஆடவரும் காணப்படுகின்றனர். இங்குப் பொருளாதாரச் சிக்கல் எழுவதில்லை. "பெண்ணை எனக்குப் பிடித்திருக்கிறது. வரதட்சிணை, சீர்வரிசை என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை," (ப. 70) என்று கூறும் மணமகன் நாகராஜனை 'லட்சியவாதி' நாவலும், மைதிலியைப் பெண் பார்க்கச் சென்றபொழுது இவளை மணந்தால் வாழ்வு அமைதியாக இருக்கும் என்ற எண்ணத்தில் வரதட்சிணை எதுவும் வாங்காது அவளை மணந்துகொண்ட நீலகண்டனை 'ஸ்ரீமதி மைதிலி' (ப. 28) நாவலும், சித்ராவைப் பார்த்த பின் "அவள் கிராமத்துச் சூழ்நிலையில் மிகவும் கண்ணியமாக வளர்க்கப்பட்ட பெண். மாமியாருக்கும் கணவனுக்கும் அடங்கிக் குடும்பத்தைத் திறமையுடன் நடத்துவாள்" (ப. 153) என எண்ணி அவளை மணந்துகொண்ட பாஸ்கரனை 'நாயக்கர் மக்கள்' நாவலும் காட்டுகின்றன. இங்குப் பெண்ணின் அழகு, நற்பண்பு, குடும்பத்தை நடத்திச் செல்லும் பாங்கு இவைதாம் மதிக்கப்படுகின்றன. ஆய்வாளருடைய களஆய்வும் இக்கருத்தினை அரண் செய்கின்றது.*

3. 2. 1. 1. 1. 1. 4. *உறவு முறை*

தென்னகத்தில் அத்தைமகள் / மகன், மாமன்மகன் / மகள் திருமணம் இயல்பாக நடைபெறுவதாகும். தம் குடும்ப உறவுத் தொடர்பினை விட்டுவிடக்கூடாது என்ற நோக்கத்திற்காகவே இவ்வுறவுமுறைத் திருமணம் பண்டைக்காலந்தொட்டு நடைபெற்றுவருகின்றது! (David G. Mandelbaum 1972, p. 70).

---

* ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாக ஆடவரில் 35 விழுக்காட்டினர் பெண்ணின் நல்ல பண்புகளையும், 12. 06 விழுக்காட்டினர் அழகினையும், 1. 76 விழுக்காட்டினர் கணவருடைய குடும்பத்துடன் இணைந்து குடும்பத்தை நடத்திச் செல்லும் பாங்கினையும், 3. 56 விழுக்காட்டினர் உயர்கல்வியையும், 1. 76 விழுக்காட்டினர் நல்ல வேலையையும், 2. 86 விழுக்காட்டினர் அனைத்துப்பண்புகளையும் விரும்புகின்றனர் என்று தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறவுமுறை அடிப்படையில் திருமணம் நிச்சயிக்கப்படுவதை லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்', 'சூர்யகாந்தம்', 'நாயக்கர் மக்கள்' ஆகிய நாவல்கள் சித்திரிக்கின்றன. இத்திருமணத்தில் இரு குடும்பங்களுக்கிடையே பொருளாதார வேறுபாடு இருப்பினும் அது ஒரு பொருட்டாகக் கருதப்படுவதில்லை. மணமகனின் தகுதி மணமகளின் தகுதி ஆகியவை சிறப்பிடம் பெறுவதில்லை.

திருமணத்தின் விளைவுகள்

மணமகனின் தகுதி, பொருளாதார அடிப்படை, மணமகளின் தகுதி, உறவுமுறை ஆகிய நான்கு அடிப்படைகளில் நிச்சயிக்கப்படும் திருமணங்களில் மணமகன், மணமகள் தகுதி அடிப்படையில் நிச்சயிக்கப்படும் திருமண வாழ்க்கை அமைதியாகக் காணப்படுகின்றது (ஸ்ரீமதி மைதிலி, லட்சியவாதி, நாயக்கர் மக்கள்).

பொருளாதார நிலையைப் பெரிதாகக் கருதி நிச்சயிக்கப்படும் திருமணம் பின்னர் சிக்கலைத் தோற்றுவிப்பதாக அமைகின்றது. மிகுதியான சீர்வரிசைகளோடு வந்த மைதிலியும், ரேவதியும் தத்தம் கணவரைக் கைப்பாவையாக ஆட்டி வைக்கின்றனர். புகுந்த வீட்டாரை மதிக்காத போக்கும், குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் போக்கும் இவர்களிடம் காணப்படுகின்றன. (ஸ்ரீமதி மைதிலி, மிதிலா விலாஸ்). தன் வாழ்வின் வளத்துக்காக செல்வக் குடும்பப் பெண் பங்கஜத்தை மணந்து கொண்ட சதாசிவம் மாமனாரின் வறுமையைப் பின்னர் அறிந்து ஏமாற்றமடைகின்றான்; இந்த ஏமாற்றமே அவனுக்கு மனைவியிடம் வெறுப்பாக மாறுகிறது (அடுத்தவீடு). உறவுமுறைத் திருமணத்தில் குடும்பவாழ்வு சித்திரிக்கப்படவில்லை.

இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் திருமண அடிப்படைகளைக் கீழ்க்கண்டவாறு ஒப்பிட்டுக் காணலாம்.

காரணங்கள்	லக்ஷ்மி	சூடாமணி
1. மணமகனின் தகுதி	3	—
2. பொருளாதார அடிப்படை	4	2
3. மணமகளின் தகுதி	3	—
4. உறவுமுறை	3	—
மொத்தம்	13	2

திருமணத்திற்கான அடிப்படைகளை லஷ்மி மிகுதியாகத் தம் நாவல்களில் சித்திரித்துள்ளார். லஷ்மியின் நாவல்களில் ஏனைய காரணங்களைவிட, பொருளாதார அடிப்படையே திருமணத்தில் முக்கிய இடத்தை பெறுகிறது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணமகன் தகுதி, மணமகள் தகுதி ஆகிய இரண்டும் ஒத்த அளவில் சித்திரிக்கப்படுவதினின்று, இவ்விரு தகுதிகளும் திருமண வாழ்வில் இன்றியமையாதனவாகக் கருதப்படுகின்றன என்பது தெளிவாகின்றது. திருமணத்திற்கான அடிப்படைகளில் பொருளாதார அடிப்படை ஒன்றினை மட்டுமே சூடாமணி காட்டுகின்றார்.

உறவுமுறைத் திருமணம் இன்றி நடக்கும் ஏனைய திருமணங்களில் செம்பாகம் பொருளாதார அடிப்படையிலே நடைபெறுகின்றது என்பதை இவ்விரு படைப்பாளிகளின் மொத்தச் சித்திரிப்பினின்று அறிய முடிகின்றது. இன்றையச் சமூக அமைப்பில் பொருளாதார அடிப்படைதான் திருமணத்தில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது என்பது இதனின்றும் புலப்படுகின்றது. இருவருடைய நாவல்களிலும் மணமக்கள் இசைவு வெளிப்படையாகக் குறிப்பிடப்படவில்லை.

திருமணத்திற்கான காரணங்களைச் சுட்டாது முதல் திருமணம் நடைபெற்றதை மட்டும் லஷ்மியின் 'பண்ணையார் மகள்', 'பெண்மனம்' ஆகிய இரண்டு நாவல்களும், சூடாமணியின் 'மானிட அம்சம்', 'தீயினில் தூசு' ஆகிய இரண்டு நாவல்களும் சுட்டுகின்றன.

3. 2. 1. 1. 1. 2. *மணமக்கள் இசைவு பெறாத திருமணம்*

பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் ஆணோ அல்லது பெண்ணோ அத்திருமணத்தை விரும்பாது எதிர்ப்பதும் உண்டு. ஆனால் பெற்றோரின் வற்புறுத்தலை மீற முடியாதநிலையில் திருமணம் நடைபெறுகின்றது. இத்திருமணத்திற்கு ஒருவர் இசைவுதர மற்றவர் மறுக்கும் நிலை காணப்படுகின்றது. இருவருக்குமே இசைவின்றிப் பெற்றோரின் நிர்ப்பந்தத்தினால் மட்டுமே திருமணமும் நடக்கலாம்; ஆனால் இத்தகைய திருமணத்தை இரு படைப்பாளிகளும் படைக்கவில்லை. மணமக்கள் இசைவின்றி நடைபெறும் இத்திருமணத்தைக் கட்டாயத் திருமணம் என்று கூறலாம்

தன் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட பெண்ணை விரும்பாது எதிர்க்கும் ஆடவனை லஷ்மியின் 'பவானி' நாவலும், மணமகனை விரும்பாது எதிர்க்கும் பெண்ணை அவருடைய 'பெண்மனம்' நாவலும் காட்டுகின்றன.

'பவானி' நாவலில், ஷண்முகம் மற்றொரு பெண்ணிடம் கொண்டிருந்த காதலினால் தந்தை நிச்சயித்த அத்தைமகளை மணந்து கொள்ள மறுக்கிறான். காதலில் தோல்வியடைந்தாலும் அவன் மனம் அத்தைமகளை நாடவில்லை. எனவே, மற்றொரு பெண்மீது ஷண்முகம் கொண்டிருந்த காதல் அவனுடைய திருமணத்துக்கு எதிர்ப்பாக விளங்கியது. திருமணத்தை எதிர்த்த ஷண்முகத்திடம் அவன் தந்தை. ''உன் இஷ்டத்தையெல்லாம் பார்த்துக் கொண்டுதான் நான் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்யணுமாக்கும் !... ... ... என் ஏற்பாட்டின்படி நீ வனஜாவைக் கட்டிக்கொண்டால் என் பிள்ளை; இல்லாட்டி நாயே. நட

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வீட்டை விட்டு! எனக்குப் பிறந்த மகன் செத்துட்டான்னு நினச்சுக்கிறேன்,'' (ப. 62) என்று பலர் முன்னிலையிலும் அவனை ஏசித் தான் நினைத்தபடித் திருமணத்தை நடத்திவிடுகின்றார்.

'பெண்மனம்' நாவலில் நற்பண்புகளை உடைய ஆடவனை மணக்க விரும்பும் சந்திராவிற்குத் தீய பண்புகளின் இருப்பிடமான ஜகநாதனை அவள் பெற்றோர் மணமகனாக நிச்சயிக்கின்றனர். அவனுடைய தீயநடத்தை சந்திராவின் மனதில் வெறுப்பை வளர்த்தது. ஜகநாதனுடன் பேசியதால் தன் மகளுக்கு ஏற்பட்ட பழிச்சொல்லைத் திருமணத்தின் வாயிலாகப் போக்கிவிடலாம் என்றிருந்த சந்திராவின் தந்தை அவளுடைய எதிர்ப்பைக் கண்டு, ''இது விஷயத்தில் உன் இஷ்டத்தை நான் கேட்கப் போவது கிடையாது; வாயை மூடிக்கொண்டு நான் சொல்வதைக் கேட்டால் நீ என் பெண். இல்லாவிட்டால் வீட்டைவிட்டு இப்போதே வெளியே போய்விடு,'' (ப. 82) என்று கூறி மகளைத் திருமணத்திற்கு இசைய வைத்துவிடுகிறார்.

தன் மகனுக்கு விருப்பமில்லாத திருமணத்தை நடத்துவதில் தாய்க்கு உடன்பாடு இல்லை. ஷண்முகத்தின் தாய் மகனுக்காகப் பரிந்து பேசுகின்றாள். சந்திராவிற்கு மாற்றாந்தாய்தான் இருப்பதால் அவள் பரிவு கிடைக்கவில்லை. இரண்டு நாவல்களிலும் கட்டாயப்படுத்துபவர் தந்தையாகவே காணப்படுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

லக்ஷ்மி காட்டும் மணமக்கள் இசைவு பெறாத திருமணத்தைச் சூடாமணி காட்டவில்லை. சூடாமணியின் கதைகளில் பெரும்பான்மையாக இருமனம் ஒன்றிய திருமணமே காணப்படுவதால் இவ்வகைத் திருமணத்தை இவர் ஆதரிக்கவில்லை எனலாம். திருமணப் போக்குச் சித்திரிப்பில் லட்சுமி தாம் கண்டு, கேட்டு அறிந்த உண்மைகளைக் கதையாக்குகின்றார்.* குறிக்கோள் நெறி சூடாமணியிடம் காணப்படுவதற்கு அவருடைய சமுதாயப் பழக்க குறைவு காரணம் எனலாம்.†

3. 2. 1. 1. 2. *நிறைவேறாத் திருமணம்*

மரபுவழித் திருமணத்தில், திருமணத்திற்குத் தடையாகக் கீழ்க்கண்ட காரணங்கள் காணப்படுகின்றன.

1) வரதட்சிணையும் சீர்வரிசையும்
2) பெற்றோர் முயற்சி செய்யாமை
3) பெண்ணின் உடற்குறை
4) குடும்ப அவப்பெயர்
5) மனதிற்குப் பிடிக்காத பெண் அல்லது ஆண்

---

* 13-1-'79 — ஆய்வாளர் லக்ஷ்மியுடன் நடத்திய பேட்டி

† 12-1-'79 — ஆய்வாளர் சூடாமணியுடன் நடத்திய பேட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 2. 1. 1. 2. 1. *வரதட்சிணையும் சீர்வரிசையும்*

பெண்களின் திருமணத்திற்குப் பெண்வீட்டார் மார்ப்பிள்ளை வீட்டாருக்குக் கொடுக்கவேண்டிய வரதட்சிணையும், சீர்வரிசை-யுமே மிகப்பெரிய தடையாகக் காணப்படுகின்றன.

வேத காலத்தில் வரதட்சிணை கொடுக்கும் பழக்கம் காணப்-படவில்லை. வேதகாலத்திற்குப் பிற்பட்ட காலத்தில் குழந்தைத் திருமணம் (child marriage) நடைபெற்றது; பெண்ணைப் பெற்ற-வர் ஏராளமான பணத்தையும் பொருள்களையும் கொடுப்பதாகக் கூறித் தம் பெண்களை மணக்குமாறு ஆடவரைத் தூண்டினர் (Aileen D. Ross, 1973, p.260). ஆனால் இப்பழக்கம் வரதட்சிணை என்றும், சீர்வரிசை என்றும் பிரிந்து காணப்படுகின்றது. திருமணத்-தின்போது மணமகனுக்குப் பணமாகக் கொடுக்கும் தொகையை வரதட்சிணை என்பர் (William Thomas walls, 1973, p. 619). நகை-கள், வீட்டுக்குத் தேவையான வெள்ளி, பித்தளைப் பாத்திரங்கள், திருமணத்திற்குப் பின்னர் ஒவ்வொரு சிறப்பு நாட்களிலும் மக-ளுக்குச் செய்யக்கூடிய பொன், பொருள் முதலியவற்றைச் சீர்-வரிசை என்பர்.

இச் சிக்கலை வரதட்சிணை, சீர்வரிசை கொடுப்பதிலும் வாங்குவதிலும் பங்குபெறும் மணமகளின் பெற்றோர், மணமகனின் பெற்றோர், மணமகள், மணமகன் என்ற நால்வர் நிலையினின்று ஆராயலாம்.

மணமகளின் பெற்றோர் நிலை

'ஐந்து பெண்கள் பிறந்தால் அரசனும் ஆண்டியாவான்' என்ற பொது வழக்கை உருச்செய்யும் அளவிற்கு வளர்ந்துள்ள வரதட்சிணைப் பழக்கம், படித்து முன்னேறி நாகரிக வாழ்வு வாழும் இக்காலத்திலும் தொடர்கின்றது.

எவ்வாறாயினும் தம் பெண்களின் திருமணத்தை முடிப்பதில் கருத்தாக இருக்கும் பெண்களின் பெற்றோர் அதனால் தங்களுக்கு வரும் எத்தகைய துன்பங்களையும் ஏற்றுக்கொள்ளத் துணிகின்ற-னர்.

லக்ஷ்மியின் 'ஸ்ரீமதி மைதிலி' நாவலில், தீராத வயிற்று-வலியால் துன்புற்று இருந்த மைதிலியின் தந்தை, தனக்குத் தேவையான மருத்துவ வசதியையும் புறக்கணித்துவிட்டுத் தன் செல்வம் முழுவதையும் தன் மகளின் திருமணத்தில் செலவழித்து-விட்டு, மருத்துவக் கவனிப்பின்றி உயிர்விடுகின்றார் (ப. 17) எனத் தன் உயிரைக் காட்டிலும் மகளின் திருமணச் செலவை முக்கியமாகக் கருதிய தந்தையை லக்ஷ்மி படைத்திருக்கின்றார்.

செல்வ நிலையில் வாழும் பெண்ணின் பெற்றோர் மண-மகனுக்கு ஏராளமான வரதட்சிணை கொடுக்க முன்வருகின்றனர். உறவினர், சாதியினர், ஊரார், நண்பர் இவர்களுக்கிடையே தம் குடும்பத்தின் செல்வ நிலையையும், மதிப்பையும் பறைசாற்றும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு சடங்காகவே திருமணம் நிகழ்கின்றது (David G. Mandelbaum 1972, p. 116). இத்தகைய திருமணம் வறியவர்களின் நெஞ்சில் ஏக்கத்தையும், பொறாமையையும், மனிதனுக்கு மனிதன் மாறுபட்டிருக்கும் அளவின் விரிவை எண்ணுகின்ற கசப்பையும் தோற்றுவிக்கும் ஒரு நிகழ்ச்சியாக அமைந்துவிடுகின்றது. ''நாலு பேர் மதிக்க வேணாமா?'' ''ரிஸப்ஷன் இல்லாம என்னப்பா கல்யாணம்?'', ''கச்சேரி இல்லேன்னா கல்யாணம் நிறக்காது'' ''விருந்தில்லாமல் கல்யாணம் செஞ்சால் மதிப்பாயிருக்குமா?'' (பக். 28-30) என்ற எண்ணம் திருமணத்திற்குத் தம்முடைய தகுதிக்கு மீறிச் செலவு செய்யப் பெற்றோரைத் தூண்டுகின்றது; செலவின் விளைவு, கடன் தொல்லை தாங்காது பெற்றோரைத் தற்கொலைக்கு உள்ளாக்குகின்றது; திருமணத்திற்கான ஆடம்பரச் செலவினால் உயிர்துறக்கும் பெண்ணின் தந்தையைச் சூடாமணியின் 'வாழ்த்துவோம்' நாவல் காட்டுகின்றது.

வரதட்சிணை மிகுதியாகத் தரவேண்டும் என்ற ஆவலிருந்தும் வழியே இல்லை என்ற நிலையிலுள்ள பரம ஏழைகளுக்குச் சிக்கலில்லை. இதனால் பாதிக்கப்படுகின்றவர்கள் நடுத்தரக் குடும்பத்தவரே. சூடாமணியின் 'வாழ்த்துவோம்' நாவல் நடுத்தர குடும்பத்தவர் தங்களுடைய எளியநிலையை ஒப்புக்கொள்ள முன்வராது, பணக்காரர்கள் காட்டும் வழியைப் பின்பற்றி வீண்செலவு செய்வதைச் சித்திரிக்கின்றது (ப. 30).

சூடாமணியின் 'வாழ்த்துவோம்' நாவலில், வரதட்சிணை வாங்காமலே பெண்ணை மணந்துகொள்ள விரும்பும் ஓர் ஆடவனிடம் குறைகள் ஏதும் இருக்குமோ என்று அஞ்சுகிற பெற்றோர் படைக்கப்பட்டிருக்கின்றனர். (ப. 20). வரதட்சிணை கொடுத்துத் தம் மகளுக்குத் திருமணம் செய்விப்பதையே அப் பெற்றோர் விரும்புகின்றனர்.

வரதட்சிணை கொடுக்க மறுக்கும் வீட்டில் யாரும் பெண் எடுக்க மறுத்து விடுவார் என்பதை வரதட்சிணை கொடுக்க மறுத்த சுப்பிரமணியத்தின் மகளை ஒருவரும் மணக்க முன்வராததன் வாயிலாகச் சூடாமணி 'வாழ்த்துவோம்' நாவலில் புலப்படுத்துகின்றார். ஆய்வாளருடைய களஆய்வும் இக்கருத்தை வலியுறுத்துகின்றது.*

சமுதாயத்தில் வரதட்சிணை பெறும் இடத்தைச் சமூகவியலாரும் சுட்டிக்காட்டுகின்றனர். ''திருமண வயதுடைய மகளுக்குத் தக்க வரதட்சிணை கொடுப்பது குடும்பங்களின் பொதுச்சிக்கலாகவே காணப்படுகின்றது அது மிகவும் கடினமான சுமையாக இருப்பினும், அக்குடும்பத்திற்கோ, சாதிக்கோ தவிர்க்க முடியாததாகவே உள்ளது. வரதட்சிணை கொடுப்பதில்

---

* ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாகப் பெண்களில் 52.91 விழுக்காட்டினரும் ஆண்களில் 29.75 விழுக்காட்டினரும் இக்கருத்தை ஏற்கின்றனர் என்பது தெரியவருகிறது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிக்கனமாக இருப்பது என்பது பெற்றோர் தம் பெண்ணிற்குத் தாமே தீமையினை விளைவிப்பதோடு மட்டுமின்றி, அக்குடும்பத்தின் மதிப்பையும் அவர்கள் குறைப்பதாக கருதப்படுகின்றது. சமுதாயச் சீர்திருத்தவாதிகள் வரதட்சிணையாகப் பெரும் பணம் கொடுப்பதை எதிர்த்தாலும், சட்ட அமைப்பாளர்கள் இப்பழக்கத்தைக் குறைக்க முயற்சித்தாலும், இச்சிக்கலை நேரடியாகச் சந்திக்கும் தந்தைக்கு இக்கொள்கையை ஏற்பதைவிடத் தன் மகளின் நலனே பொருட்படுத்தக்கூடியதாகி விடுகின்றது. அவருக்கு சட்டத்தைப் பின்பற்ற வலிமையிருப்பினும், மனைவியின் வற்புறுத்துதலுக்கு முன் அச்சட்டம் பயனற்றதாகிவிடுகின்றது'' என்று வரதட்சிணை கொடுக்க விரும்பாவிடினும் சமுதாய நிலை பெண்ணைப் பெற்றோரை வலியுறுத்துவதை சமூகவியலறிஞர் குறிப்பிடுகின்றார் (David G. Mandelbaum, 1972) p. 109)

மணமகனின் பெற்றோர் நிலை

தன் குடும்பத்தின் மதிப்பை உயர்த்திக் கொள்ள மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாரிடம் வரதட்சிணை வாங்குகின்றனர். வரதட்சிணையைப் பெண் வீட்டாரிடம் 'பேரம் பேசி' வாங்குகின்ற வழக்கம் காணப்படுகின்றது.

மணமகனுடைய கல்வியும், பதவியும் உயர உயரத் திருமணச் சந்தையில் அவனுடைய நிலை உயர்ந்துகொண்டே போகிறது. சூடாமணியின் 'செந்தாழை' நாவலில் 'ஐ ஏ எஸ். என்றால் ஐம்பதாயிரம்' (ப. 28) என்று ஒரு தாய் தன் மகனுக்கு விலை குறிக்கின்றாள். திருமணச் சந்தையில் பையனின் படிப்பிற்கென்றே விலை குறிக்கப்படுவதை வாரப்பத்திரிகை ஒன்று அட்டைப்படமாகவே வெளியிட்டிருப்பது (ஆனந்தவிகடன், 23-12-'79) திருமணச் சந்தையில் பையனின் கல்வி பெறும் இன்றியமையாமையைப் புலப்படுத்துகின்றது.

லக்ஷ்மியின் 'ஸ்ரீமதி மைதிலி' நாவல் வரதட்சிணை, சீர்வரிசை, நகை, வரவேற்பு எல்லாமே மணமகனின் தாயாரால் பெண்வீட்டாரிடம் பேரம் பேசப்படுவதைச்சித்திரிக்கின்றது (ப.18)

மணமகன் வீட்டார் தாம் பேசும் பேரம் வெற்றி பெறவில்லை என்றால் ஜாதகம் பொருந்தவில்லை (அத். 1) என்று கூறுவதை லக்ஷ்மியின் 'அரக்கு மாளிகை' நாவலும், சகுணம் சரியில்லை (ப. 28) எனக் கூறி பெண்ணை மறுப்பதைச் சூடாமணியின் 'செந்தாழை' நாவலும் விளக்குகின்றன.

வரதட்சிணை வாங்கும் பழி தம்மீது விழுந்துவிடக்கூடாது என்பதில் மணமகன் வீட்டார் கவனமாக இருக்கின்றனர். ''எங்க பெரிய பையனுக்கு வாங்கின மாதிரி இவனுக்கும் வாங்கலேன்னா அண்ணனைவிட நான் மட்டமான்னு சின்னவன் வருத்தப்படமாட்டானா?'' (ப 48) என்று தன் மகன்மீதும், மற்றவர் மீதும் பழி சுமத்தித் தான் தப்பித்துக் கொள்வதைச் சூடாமணியின் 'வாழ்த்துவோம்' நாவல் சித்திரிக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லக்ஷ்மி. சூடாமணி ஆகிய இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களிலும் மணமகனின் தந்தை வரதட்சிணை, சீர்வரிசை பற்றிப் பேசுவதாகக் காணப்படவில்லை; தாயே இப்பொறுப்பை ஏற்கின்றாள் என்பது குறிப்பிடத்தக்கது. இதிலிருந்து வரதட்சிணைவழி தன் குடும்பப் பெருமையை வெளிக்காட்டுவதில் பையனின் தாயே விருப்பமுடையவளாயிருக்கின்றாள் என்பது புலனாகின்றது.

மணமகள் நிலை

திருமணச் சந்தையில் ஒரு பெண்ணின் அழகு, அடக்கம், அறிவு, கல்வி ஆகியவை முதன்மையாகக் கருதப்படவில்லை; அவள் கொண்டு வரும் வரதட்சிணைப் பணமும் சீர்வரிசையுமே பெரிதாக மதிக்கப்படுகின்றன.

லக்ஷ்மியின் 'அரக்கு மாளிகை' நாவல் ஏழைப்பெண் மஞ்சுளாவிற்குப் பணமும் பக்கபலமும் இல்லாததனால் அவளது உயர்ந்த பண்புகளைக் கூறிக்கொண்டு (அத். 1) யாரும் அவளை மணக்க முன்வரவில்லை, அவளைப் பொருத்தவரையில் திருமணச்சந்தையே மூடப்பட்டதுபோல நிலைமை காணப்படுகின்றது. வரதட்சிணை கொடுத்துத் திருமணம் செய்துகொள்ள முடியாத நிலை மஞ்சுளாவின் திருமணத்தை மரபு மீறிய திருமணமாக மாற்றிவிடுகின்றது என வரதட்சிணைக் கொடுமை சித்திரிக்கப்படுகின்றது.

பெண்கள் கல்வி கற்று உயர்ந்த நிலையில் இருக்கும் ஆடவரையே மணக்க விரும்புவதால் வரதட்சிணை கொடுத்தாவது திருமணம் செய்து கொள்ள விரும்புகின்றனர். சூடாமணியின், வாழ்த்துவோம், நாவலில் தந்தை தன் தகுதிக்கு மீறியே திருமணச் செலவு செய்வதை அறிந்தும் அதனைத் தடுக்காத ரஞ்சனியைக் காணமுடிகின்றது. இதே நாவல் வரதட்சிணை தருவதில்லை என்ற கொள்கையுடைய சுப்பிரமணியத்தின் மகள் சகுந்தலா திருமணம் ஏக்கம் கொண்டு, முன்பின் அறியாத ஒருவனுடன் ஓடிவிடுவதைச் சித்திரிக்கின்றது.

லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல், வரதட்சிணை தருவதை எதிர்த்துப் "பணத்தை இப்படி வாரி இறைப்பதைவிட்டு, கல்யாணத்தை மிகவும் எளிய முறையில் செய்து விட்டு, செலவழிக்க உத்தேசித்த பணத்தைக்கொண்டு ஒரு கலாசாலை கட்டுவித்தாலும் பிரயோசனம் உண்டு" (ப. 417) என்று எண்ணுகின்ற தற்காலப் பெண்களில் சிலரைச் சித்திரிக்கின்றது.

லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவல், மூன்று நான்கு குழந்தைகளும், நாற்பது ரூபாய் சம்பளமும் உள்ள, முதல் மனைவியை இழந்தவர்களும் (ப. 8), முதல் மனைவியைத் தள்ளிவைத்துவிட்டு அவள் விட்டுப்போன குழந்தைகளை வளர்ப்பதற்கு ஒரு மனைவியைத் தேடும் நாற்பத்தைந்து வயதுக்காரர்களும் தாம் (ப. 26) வரதட்சிணை கொடுக்க இயலாத பெண்ணை மணக்க முன்வரு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றனர் என்பதைச் சித்திரிக்கின்றது. வரதட்சிணையின் விளைவாக இளம்பெண்கள் தங்கள் தந்தைக்கு நிகரான வயதானவர்களை மணந்துகொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது; அவர்களுக்குக் குழந்தைகளும் இருந்தால் அப்பெண்களின் நிலை இரங்கத்தக்கதாகிவிடுகின்றது எனச் சமூகவியலறிஞர் (Aileen D. Ross, 1973, p 263) கூறுவது லக்ஷ்மியின் நாவல்களில் பொருந்திவருகின்றது.

வரதட்சிணைக் கொடுமை பெண்களை அவர்கள் திருமணத்திற்குப் பின்னரும் பாதிக்கின்றது. லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்' நாவல் வரதட்சிணை கொண்டுவராத மருமகளைக் கொடுமைப்படுத்தி, வரதட்சிணை கொண்டுவரும் மருமகளைப் பெருமைப்படுத்தும் பழக்கம் மாமியாரிடம் காணப்படுவதைச் சுட்டுகின்றது. இந்நாவல் மகனின் தீயநடத்தை காரணமாக அவனுக்குப் பெண் தர யாரும் முன்வராததால் வேறு வழியின்றி ஏழைப்பெண் சியாமளாவை மூத்த மருமகளாக்கிக்கொள்ளும் தர்மாம்பாள், சியாமளாவைக் கொடுமைப்படுத்துவதையும், பணக்காரக் குடும்பப் பெண்ணான இரண்டாவது மருமகளிடம் அன்பு செலுத்துவதையும் சித்திரிக்கின்றது (பக். 117, 230). லக்ஷ்மி 'காஞ்சனையின் கனவு' நாவலில் ஏழை மருமகள் காஞ்சனையைப் பிறந்த வீட்டுத்தொடர்பையே துண்டித்துவிட வேண்டும் எனக் கட்டளையிடும் மாமியாரைப் படைக்கின்றார்.

ஒரு குடும்பத்தில் பெண் பிறப்பதைவிட ஆண்மகன் பிறப்பது பெருமையாகவும் வரவேற்கப்படுவதாகவும் சமுதாயத்தில் காணப்படுவதற்கு (Aileen D. Ross, 1973, p. 261) வரதட்சிணைக் கொடுமையும் ஒரு காரணமாகும்.

மணமகனின் நிலை

சூடாமணியின் 'வாழ்த்துவோம்' நாவல், வரதட்சிணை வாங்குவது என்பது மணமகனுக்கு மதிப்புக் குறியீடாகக் கருதப்படுவதையும், ''எனக்குப் பணம் காசு வாங்கவே இஷ்டமில்லை ஸார். கல்யாணமும் ஸிம்பிளாய்த்தான் பிடிக்கும். ஆனால் என் அப்பா அம்மா பழங்காலம், அவர்களுக்காகத்தான் ... ... ,'' (ப. 48) என மணமகன் பெற்றோரை மீறத் துணிவில்லாமலோ அல்லது தன் பேராசையை மறைக்கப் பெற்றோரைப் பயன்படுத்தியோ பேசுவதையும் சுட்டுகின்றது.

லக்ஷ்மி, சூடாமணி எனும் இரு படைப்பாளிகளின் நாவல்களில் மூன்று நாவல்களில்தாம் (ஸ்ரீமதி மைதிலி, லட்சியவ்ாதி, வாழ்த்துவோம்) ஆண்கள் வரதட்சிணையைப் பெரிதாக மதிக்காது பெண்ணைப் பெண்ணுக்காகவே மணந்து கொள்வதைக் காணமுடிகின்றது. ஏனைய நாவல்களில் மணமகளின் பெற்றோரோ, மணமகனோ வரதட்சிணைப்பற்றிக் குறிப்பிடும் நிலை காணப்படுகின்றது. எந்த நாவலிலும் மணமகன் நேரடியாகத் தானே வரதட்சிணை கேட்பதாகக் காணப்படவில்லை. ஆய்வாளருடைய களஆய்வும் இதனை வலியுறுத்துகின்றது. *

---

*ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாக ஆண்களில் 54.50 விழுக்காட்டினர் வரதட்சிணை வாங்க விரும்பாதது தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிக்கலுக்குத் தீர்வு

ஒரு சிக்கலுக்கு இருவகையில் தீர்வு கூறலாம். சிக்கலைக் காட்டி அதனால் விளையும் கொடுமைகளையும் மீறி, அதனைச் சிக்கலற்ற நிலையுடன் ஒப்பிட்டுக்காட்டி அதன்வழி சிக்கலுக்குத் தீர்வு கூறுவது ஒருவகை; சிக்கலைக் காட்டி, அதற்கு இதுதான் தீர்வு எனப் படைப்பாளியே கூறுவது மற்றொரு வகை. முந்தையதில் படைப்பாளி, தான் பேசாமல் நாவல் பாத்திரங்கள்வழியும், நிகழ்ச்சிகள் வழியும் சிக்கலின் தீர்வைக் குறிப்பிடுவார். பிந்தியதில் சிக்கலை நிகழ்ச்சிகள்வழி புலப்படுத்திச் சிக்கலுக்கான தீர்வைப் படைப்பாளியே கூறுவார்.

லக்ஷ்மி, சூடாமணி எனும் இரு படைப்பாளிகளில் லக்ஷ்மி தம் நாவல்களில் வரதட்சிணைச் சிக்கலைக் கூறுகின்றார்; அதன் கொடுமைகளையும் சுட்டுகின்றார்; வரதட்சிணை வாங்காது பெண்ணை அவளுடைய உயர்பண்புகளுக்காக மணம் செய்துகொள்வோரது வாழ்க்கையில் நிலவும் அமைதியையும், பெண்ணின் உயர்பண்புகளை நோக்காது வரதட்சிணைக்காக மட்டும் அவளை மணந்துகொள்வோருடைய நிம்மதியற்ற வாழ்க்கையையும் காட்டி, அதன்வழி 'வரதட்சிணை வாங்காது பெண்ணின் உயர்பண்புகளுக்காக அவளை மணப்பதே நன்மையைத்தரும்' என அறிவுரை கூறுவதுபோல் இச்சிக்கலுக்குத் தீர்வினைத் தருவதில் முந்தைய வகையைச் சார்கின்றார்.

சூடாமணி 'செந்தாழை' நாவலில் வரதட்சிணைச் சிக்கலைச் சுட்டிக்காட்டிச் செல்கின்றார்; இச்சிக்கலையே கருவாக வைத்து 'வாழ்த்துவோம்' என்ற நாவலை எழுதியுள்ளார்; வரதட்சிணையின் கொடுமை, பாதிக்கப்பட்ட பெற்றோர் நிலை, பெண்ணின் நிலை முதலியவற்றை எடுத்துக்கூறும் இந்நாவல் 'வரதட்சிணை எதிர்ப்புப் பிரச்சார நாவல்' என்று கூறும்படி காணப்படுகின்றது. எனவே, வரதட்சிணைக் கொடுமை எனும் சிக்கலுக்கான தீர்வைத் தருவதில் பிந்திய வகையைச் சார்கின்றார். மேலும் இந்நாவலில் சூடாமணி சமுதாயத்தில் புரையோடிப் போன வரதட்சிணைப் பழக்கத்தை மாற்ற பிள்ளைகளின் பெற்றோர் மனம் வைக்கவேண்டும்; ஆனால் அவர்கள் இந்தச் சமூகத்தீமையில் நன்மை அடையும் கட்சி; அவர்கள் அக்கறை காட்டுவது அரிது; ஆகவே, அதில் உறுதிகாட்ட வேண்டியவர் பெண்ணின் பெற்றோர்தாம் என்று வலியுறுத்துகின்றார் (ப. 59).

வரதட்சிணை தருவதில்லை என்ற கொள்கையுடைய பெற்றோர் ஒரு சங்கம் அமைத்துக்கொண்டு, பணம், காசு வாங்காமல் எளிய திருமணத்திற்கு உடன்படுகின்ற பிள்ளைகளுக்குத்தான் தம் பெண்களைத் திருமணம் செய்து கொடுக்க முன்வரவேண்டும். வரதட்சிணைச் சிக்கலுக்குச் சூடாமணி, ''ஒரு நிறுவனம்னு ஏற்படறபோது வலு இருக்கும், அதன் நியாயம் மற்றவர்களுக்குப் புரியும், உங்க சங்கத்திலே ஆள், சேரச் சேர பிள்ளை வீட்டுக்காரர்களின் பக்கம் பலகீனமாய்த்தானே போகும்? கடைசியில் கணிசமான பேர் சேர்ந்துடறதாய் வச்சிப்போம், அப்புறம் என்ன

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கவலை? பெண்களைப் பெற்றவர்கள் பெண்தரலேன்னா ஆண் பிள்ளையை மட்டும் வச்சிண்டு கல்யாணம் செஞ்சுடமுடியுமா?'' (பக். 59-60) என்று தீர்வு கூறுவது இன்றையச் சமுதாயத்திற்குப் பொருந்துமா என்பது ஐயத்திற்குரியது. *

சமுதாயத்தில் ஆழமாக வேரோடியிருக்கின்ற இச்சிக்கலை ஒழிக்க நம்முடைய திருமணமுறை முழுவதுமே மாற்றப்பட்டால்தான் இயலும் எனக்கூறும் சமூகவியலறிஞர் ஆலன் டி ராஸும் (Aileen D. Ross, 1973, p 264) திருமணமுறையை எப்படி மாற்றலாம் எனக் கூறவில்லை.

3. 2. 1. 1. 2. 2. *பெற்றோர் முயற்சி இன்மை*

பெற்றோர் தம் மகளுக்குப் பூப்பு எய்தும் பருவத்திற்கு (puberty) முன்னரேயே திருமணம் செய்துவைத்த பழக்கம் (M. S. Gore, 1968, p. 19) காலப்போக்கில் மாறியது: திருமணம் செய்து கொள்ளாமலேயே பெண்கள் வாழக்கூடிய சூழலும் சமுதாயத்தில் தோன்றத் தொடங்கியது. இம்மாற்றம் சில பெற்றோரைத் தம் பெண்களுக்கு மணமகனைத் தேடும் முயற்சியைக் கைவிடத் தூண்டியது. பெற்றோரின் முயற்சி இன்மை பெண்களின் திருமணத்தைத் தடை செய்தது.

பெற்றோரின் முயற்சி இன்மையால் பெண்ணின் திருமணம் தடைபடுவதைச் சூடாமணியின் 'புன்னகைப் பூங்கொத்து' நாவல் விளக்கிக் காட்டுகின்றது. இருபத்தேழு வயதான தன் பெண் மாலாவின் திருமண முயற்சியில் எந்தப் பங்கும் ஏற்காது, ''கல்யாணம் செய்து கொண்டவர்களும், செய்து கொள்ளாதவர்களும் என்ன வித்தியாசமாய் இருக்கிறார்கள்?'' (ப. 116) என்று வினா எழுப்பிக்கொண்டிருக்கும் உடற்கூற்று நிபுணர் சௌரியை இந்நாவல் படைக்கின்றது.

சௌரியின் மேனாட்டு நாகரிக வாழ்க்கை முறை அவரது மனப்போக்குக்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். சௌரி இலக்கியத்திலும் கலையிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்; ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாட்டை வெறுப்பவர். மாலாவிற்காகத் தம் மகள் எடுக்கும் திருமண முயற்சியிலும் ஈடுபடாது பெண் பார்க்க வருபவர்களிடம், ''என்னைப் பொறுத்தவரை யார் எந்தவிதமாய் வாழ்க்கை நடத்தினாலும் பரவாயில்லை. அவள் தன் இஷ்டம்போல் இருக்கட்டும் ஒன்றும் குடிமுழுகிப் போய் விடவில்லை.'' (ப 86) என்று தம் நாகரிகக் கருத்தைக் கூறி அவர்களை விரட்டிவிடுகின்றார். சௌரியின் வாழ்க்கைமுறையும் கொள்கைகளும் முயற்சி இன்மையும் அவர் மகள் திருமணத்தைத் தடை செய்கின்றன.

---

* ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டி வாயிலாக ஆடவரில் 49 விழுக்காட்டினர் இத்தீர்வு ஒத்துவராது என்றும், பெண்களில் 40. 60 விழுக்காட்டினர் இத்தீர்வு காலப்போக்கில் பொருந்தும் என்றும் கூறுவது தெரிய வருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 2. 1. 1. 2. 3. பெண்ணின் உடற்குறை

உடற்குறை ஒரு பெண்ணின் உடலோடு மட்டும் நின்று-விடுவதில்லை; அவள் மனதுக்குள், உயிருக்குள், வாழ்வுக்குள் புரையோடி விடுகின்றது (ப. 252) என உடற்குறை தரும் துன்-பத்தைச் சூடாமணி 'புன்னகைப் பூங்கொத்து' நாவலில் கூறு-கின்றார்.

உடற்குறை திருமணத்திற்குத் தடையாகும்பொழுது தாழ்வு மனப்பான்மை, ஏக்கம், கிடைக்காததை வலியப்பெறும் முயற்சி இவை ஏற்படுகின்றன (ப. 252) என்றும் இந்நாவலில் சூடாமணி கூறுகின்றார்.

உடற்குறை ஒரு பெண்ணின் திருமணத்திற்குத் தடையா-வதைப் 'புன்னகைப் பூங்கொத்து', 'மனத்துக்கினியவள்' எனும் சூடாமணியின் இரு நாவல்கள் காட்டுகின்றன.

'புன்னகைப் பூங்கொத்து' நாவலில் வரும் மாலாவின் அழகில் குறை கூறும் வண்ணம் அவளது கழுத்தின் வலப்பக்கம் ஒரு பெரிய கறுப்புமறு முழுவதுமாகக் காணப்படுகின்றது. பெண்-பார்க்க வருபவர்கள் அதைக்கண்டு அருவெறுத்து அவளை மணக்க மறுத்துவிடுகின்றனர் (ப. 251).

'மனத்துக்கினியவள்' நாவலில் வரும் லட்சுமி பதினாறு வயதில் முதுகெலும்பு முறிந்து படுத்த படுக்கையாய் இருக்கிறாள். ஏராளமான செல்வம் இருந்தும் அவளை மணக்க யாரும் முன்-வரவில்லை (ப 53).

திருமண வாழ்வில் உடற்குறையுற்ற பெண்களுக்கு ஏற்-படும் நிராகரிப்பு அவர்கள் மனதில் மாறுதலை ஏற்படுத்து-கின்றது. தன்னை மணந்துகொள்ள மறுக்கும் ஆணினத்தையே பழிவாங்கும் உணர்ச்சி கொண்ட மாலா, ஆண்களைக் கவர்ந்-திழுக்கக்கூடிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி பெறத்தொடங்கு-கின்றாள் (ப 91) எனப் 'புன்னகைப் பூங்கொத்து' நாவல் காட்டு-கின்றது.

'மனத்துக்கினியவள்' நாவல் தான் குறையுள்ளவள் என்ற உணர்வு லட்சுமியை அழுத்தியதால் நிறைவிற்காக அவள் உயிர் ஒவ்வொரு கணமும் போராடியதைச் சித்திரிக்கின்றது. தனக்கென ஒரு பற்றுக்கோட்டினை வேண்டி தன் பணத்துக்காகவே தன்னை விரும்புவதாக நடிக்கும் வாசுவையும் லட்சுமி மணக்கத் துணி-கின்றாள். ஆனால் நாளடைவில் மனம்மாறி திருமண ஆசையை மறந்து அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்துபவளாக மாறுகின்றாள். வாசுவே அவளை உள்ளன்புடன் மணக்க விரும்பியபொழுதும் அதை மறுத்து விடுகின்றாள்

திருமணச் சந்தையில் உடற்குறையுள்ள பெண்களுக்கு இடமில்லை என்று சூடாமணி கூறுவதுபோல் லக்ஷ்மி இச்சிக்-கலை விரிவாகச் சித்திரிக்கவில்லை; எனினும் அவருடைய 'சூர்ய-காந்தம்' நாவலில் இதுபற்றிய குறிப்பு காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறவு முறையினால் காதல் வளர்ந்து திருமணத்தில் முடியப்போகும் வேளையிலும் தமயந்தியின் கால் ஊனம் அவளை மணக்கவிருக்கும் தியாகுவின் மனதை நெருடிக்கொண்டிருந்தது (ப. 270) எனப் பெண்களின் உடல் ஊனம் திருமணத்திற்குத் தடையாவதைச் 'சூர்ய காந்தம்' நாவல்வழி லக்ஷ்மி காட்டுகின்றார்.

பெண்களுடைய உடற்குறையைப்போல் ஆண்களது உடற்குறையைத் திருமணத்திற்குத் தடையாகச் சமுதாயம் எண்ணுவதில்லை. லக்ஷ்மியின் 'மரகதம்' நாவல் இவ்வுண்மையைப் புலப்படுத்துகின்றது. இரண்டு கால்களும் நொண்டியான வேலாயுதத்திற்குத் தன்னுடைய செல்லப் பெண்ணை மணமுடிக்க மரகதத்தின் தந்தை இசைகின்றார். அவனிடம் உள்ள பணம் அவனுடைய உடற்குறையை மறைத்து விடுகின்றது என இந்நாவல் கூறுகின்றது. ஆய்வாளருடைய களஆய்வும் இக் கருத்திற்கு அரணாகின்றது *

சூடாமணி காட்டும் மாலாவும் (புன்னகைப் பூங்கொத்து), லட்சுமியும் (மனத்துக்கினியவள்) செல்வந்தர் வீட்டுப் பெண்களே. ஆனால் அவர்களிடம் உள்ள செல்வத்தைவிட அவர்களுடைய உடற்குறைதான் அவர்களை மணக்க முன்வருகின்றவர்களுக்குப் பெரிதாகத் தோற்றமளிக்கின்றது. ஆய்வாளருடைய களஆய்வும் இதனை உறுதிசெய்கின்றது †

உடற்குறை என்பது பொதுத்தன்மையுடையதாக இருப்பினும், அதுவே ஆண், பெண் என்ற இருபாலாரிடமும் வெவ்வேறு நிலைகளில் செயல்படுகின்றது என்பதை இவ்வொப்பீடு புலப்படுத்துகின்றது. ஆணுக்கும் பெண்ணுக்கும் சமுதாயம் காட்டும் ஒருதலைக் கண்ணோட்டம் (partiality) இங்குத் தெளிவாகின்றது.

3. 2. 1. 1. 2. 4. *குடும்ப அவப்பெயர்*

சமுதாயத்தால் ஒத்துக்கொள்ளப்படாத சில செயல்கள் ஒரு குடும்பத்தில் நிகழ்ந்தால் அக்குடும்பம் சமுதாயத்தால் புறக்கணிக்கப்படுகின்றது; அத்தகைய புறக்கணிப்பே இங்கு அவப்பெயர் என்று குறிக்கப்படுகின்றது. குடும்பத்திற்கு ஏற்படும் அவப்பெயரால் அக்குடும்பத்தைச் சார்ந்த பெண்ணின் திருமணம் பாதிக்கப்படுகின்றது. இதனை 'அடுத்த வீடு' என்ற லக்ஷ்மியின் நாவலும், 'உயர்வு உள்ளத்திலே' என்ற சூடாமணியின் நாவலும் சித்திரிக்கின்றன.

'அடுத்த வீடு' என்ற நாவலில் அருணாவின் திருமணம் அவள் அக்கா இந்திராணி காதலனைத் தேடி ஓடியதாலும்,

---

* ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டியில் 70 விழுக்காட்டினர் இதனை ஏற்றிருக்கின்றனர்.

† ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டியில் 60. 06 விழுக்காட்டினர் பெண்களின் உடற்குறை திருமணத்திற்குத் தடையாகும் என்ற கருத்தை ஏற்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவளை ஏமாற்றிய காதலனை அவள் அண்ணன் தாக்கிவிட்டுச் சிறைக்குச் சென்றதனாலும் ஏற்பட்ட குடும்ப அவப்பெயரால் தடைபடுகிறது (ப. 426) என்று லக்ஷ்மி காட்டுகின்றார்.

'உயர்வு உள்ளத்திலே' நாவலில் ராதையின் விதவைத் தாயின் மறுமணம், ராதைக்கும் கண்ணனுக்கும் இடையில் தோன்றியிருந்த காதலை மறக்கச்செய்து திருமணத்தை நிறுத்திவிடுகின்றது (ப. 118) எனச் சூடாமணி காட்டுகின்றார்.

பெண்ணின் குடும்பத்திற்கு ஏற்பட்ட அவப்பெயர் பெண்ணின் திருமணத்தைத் தடைசெய்வதனை இவ்விரு படைப்பாளிகளும் படைத்துள்ளனர். ஆடவனின் குடும்ப அவப்பெயர் அவன் திருமணத்தை நிறுத்தியதாக எந்த நாவலிலும் இவர்கள் குறிப்பிடவில்லை.

இவ்விரு நாவல்களிலும் பெண்ணின் குடும்பத்திற்குத்தான் அவப்பெயர் ஏற்பட்டதேயன்றி அப்பெண்களுக்கு ஏற்படவில்லை. பெண்கள் நல்லொழுக்கம் வாய்ந்தவராகவே காணப்படுகின்றனர். ஆனால் ஆடவன் ஒழுக்கம் குன்றியவனாயினும் அவனுடைய திருமணத்திற்குத் தடை ஏதும் காணப்படவில்லை. நல்லொழுக்க மற்ற ஜெயராமனும் (மிதிலா விலாஸ்), ஜகந்நாதனும் (பெண்மனம்) நற்குடும்பத்துப் பெண்களை மணப்பதாக லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

பெண்கள் நல்லொழுக்கம் உடையவராயினும், அவர்களுடைய குடும்பத்தில் நடக்கும் மரபு மீறிய செயலால் குடும்பப் பெயர்கெட்டு அது அவர்கள் வாழ்வினையே பாதித்து விடுகின்றது. ஆடவருடைய தீய ஒழுக்கத்தினால் அவர்களுடைய குடும்பத்திற்கு எந்த அவப்பெயரும் ஏற்படுவதில்லை; நல்ல பெண்களை மணக்கும்பேறும் அவர்களுக்குக் கிட்டுகின்றது என்பதும் சமுதாயத்தின் ஒருதலைக் கண்ணோட்டத்தைத் தெளிவாக்குகின்றது.

3.2.1.1.2.5. *மனத்திற்குப் பிடிக்காத பெண் அல்லது ஆண்*

பெற்றோர் தம் பிள்ளைகளுக்கு அவர்களின் விருப்பத்தை மீறித் திருமணம் நிச்சயிப்பதும் திருமணத்திற்கு ஒரு தடையாகின்றது. இதனை லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்', 'நாயக்கர் மக்கள்', 'மரகதம்' என்ற மூன்று நாவல்களும், சூடாமணியின் 'நீயே என் உலகம்' என்ற நாவலும் சித்திரிக்கின்றன.

மனத்திற்குப் பிடிக்காத பெண்

'மிதிலா விலாஸ்' நாவல் தன் மனத்திற்குப் பிடிக்காத கிரிஜாவைத் தனக்குத் திருமணம் செய்யத் தன் தாய் நிச்சயித்திருப்பதை எதிர்த்துநிற்கும் ஈஸ்வரனைச் (ப 323) சித்திரிக்கின்றது.

மனத்திற்குப் பிடிக்காத ஆண்

'மரகதம்' நாவல் தன் தந்தையால் தனக்கென நிச்சயிக்கப்படும் ஆடவனை மணக்க மறுத்து வெற்றி காணமுடியாமல் வீட்டை விட்டு ஓடிவிடும் மரகதத்தைச் சித்திரிக்கின்றது. தனக்குப் பிடிக்காத மைனர் மதனகோபாலனை மணாளனாகத் தந்தை நிச்சயித்திருப்பதை அறிந்து, தந்தையை எதிர்க்கத் துணிவின்றி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவனிடமே தன் மறுப்பைத் தெரிவித்துத் திருமணத்தை நிறுத்தி-விடும் சரோஜினியை 'நாயக்கர் மக்கள்' சித்திரிக்கின்றது. இதற்கு மதனகோபாலனின் தீய ஒழுக்கமும், சரோஜினி மற்றொருவன் மீது கொண்டிருந்த காதலும் காரணங்களாகின்றன. இந்நாவலில் காதலனின் நிலையற்ற உள்ளத்தினால் வெறுப்புக் கொண்டு அவனை மணக்க மறுத்துவிடும் திலகவதியின் சித்திரிப்பும் காணப்படுகின்றது.

'நீயே என் உலகம்' நாவல் சந்துருவைக் காதலிக்கும் நீலா, தன் பெற்றோரால் நிச்சயிக்கப்பட்டிருந்த கஸ்தூரியை மணக்க மறுத்துவிடுவதைக் காட்டுகின்றது.

சரோஜினி, திலகவதி, நீலா மூவரும் கல்வி கற்றவர்கள்; நகரத்தில் வாழ்பவர்கள். தங்களுக்குப் பிடிக்காத திருமணம் நிச்சயிக்கப்படும்பொழுது அதனை எதிர்ப்பதற்கும், நிச்சயிக்கப்பட்டவனிடமே தங்கள் மறுப்பையும், அதற்கான காரணத்தையும் துணிவாகக் கூறுவதற்கும் அவர்கள் பயின்ற கல்வி துணை புரிகின்றது. தமக்குப் பிடித்த மணமகனைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் போக்கு படித்த பெண்களிடம் காணப்படுகின்றது. கல்வியறிவில்லாத கிராமத்துப் பெண்ணான மரகதம் இத்துணிவின்றி ஓடிவிடுகின்றாள்.

ஆடவன் திருமணத்தை நிறுத்துவது ஒரு நாவலிலும் (மிதிலா விலாஸ்) பெண்கள் திருமணத்தை நிறுத்துவது மூன்று நாவல்களிலும் (நாயக்கர் மக்கள், மரகதம், நீயே என் உலகம்) காணப்படுகின்றன. இந்த ஒப்பீட்டிலிருந்து மனத்திற்குப் பிடிக்காத திருமணம் ஆணைவிடப் பெண்ணுக்குத்தான் மிகுந்த அளவில் நிச்சயிக்கப்படுகின்றது என்ற கருத்து புலப்படுகின்றது.

லக்ஷ்மி மூன்று நாவல்களில் இச்சிக்கலைச் சித்திரிக்கின்றார். ஈஸ்வரன், மரகதம் ஆகிய தலைமைமாந்தரின் வாழ்க்கையில் நிகழ்வதாக இரண்டினையும், சரோஜினி, திலகவதி ஆகிய துணைமாந்தர் வாழ்க்கையில் நிகழ்வதாக இரண்டினையும் சித்திரிக்கின்றார்.

சூடாமணி ஒரு நாவலில் மட்டும் (நீயே என் உலகம்) ஒரு சிறு நிகழ்ச்சியாக நீலா என்ற துணைமாந்தர் வாழ்வில் நிகழ்வதாக இச்சிக்கலைக் குறிப்பிடுகின்றாரேயன்றி சிக்கல் பற்றிய சித்திரிப்பு நாவலில் காணப்படவில்லை. மனமொத்த திருமணத்தையே சூடாமணியின் நாவல்கள் சித்திரிப்பதால் இவர் இச்சிக்கலை மிகுதியாகக் காட்டவில்லை.

3. 2. 1. 1. 2. 6. இவ்விரு படைப்பாளிகளுடைய நாவல்களில் காணப்படும் திருமணம் தடைபடுவதற்கான சிக்கல்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம் :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமணம் தடைபடுவதற்கான காரணங்கள்	நாவல்களின் எண்ணிக்கை		
	லக்ஷ்மி	சூடாமணி	மொத்தம்
வரதட்சிணையும் சீர்வரிசையும்	6	2	8
பெற்றோர் முயற்சியின்மை	-	1	1
பெண்ணின் உடற்குறை	-	2	2
குடும்ப அவப்பெயர்	1	1	2
மனத்திற்குப் பிடிக்காத பெண் அல்லது ஆண்	3	1	4
மொத்தம்	10	7	17

இவ்வட்டணையினின்று இரு படைப்பாளிகளும் வரதட்சிணையும் சீர்வரிசையும் காரணமாகக்கொண்டு திருமணம் தடைபடுவதையே மிகுதியாகச் சித்திரித்துள்ளனர் என்பது தெரிகின்றது. சூடாமணியைவிட லக்ஷ்மி இச்சிக்கலை மிகுதியாகக் காட்டுகின்றார் என்பதும் புலப்படுகின்றது.

இதனை அடுத்து மனத்திற்குப் பிடிக்காத பெண் அல்லது ஆணைத் திருமணத்திற்காக நிச்சயித்தல் என்ற சிக்கல் இடம் பெறுகின்றது.

சூடாமணி தம் நாவல்களில் குறிப்பிடும் பெற்றோர் முயற்சி இன்மை, பெண்ணின் உடற்குறை முதலிய தடைகளை லக்ஷ்மி சித்திரிக்கவில்லை.

3. 2. 1. 2. *மறுமணம்*

ஓர் ஆடவன் தன் மனைவியை இழந்துவிட்டால் மீண்டும் ஒரு பெண்ணை மணந்துகொள்கின்றான். அவனுடைய இரண்டாம் திருமணமே இங்கு மறுமணம் எனக் குறிப்பிடப்படுகின்றது. மறுமணம் என்கிற உறவை லக்ஷ்மியின் (1) அரக்கு மாளிகை, (2) நாயக்கர் மக்கள், (3) சூர்ய காந்தம், (4) மரகதம், (5) பெண்மனம், (6) மிதிலா விலாஸ் ஆகிய ஆறு நாவல்களும், சூடாமணியின் (1) தீயினில் தூசு, (2) இரவுச்சுடர், (3) விடிவை நோக்கி ஆகிய மூன்று நாவல்களும் சித்திரிக்கின்றன. இவ்வொன்பது நாவல்களுள் எந்தக் கதையிலும் கதைத்தலைவன் மறுமணம் செய்துகொண்டதாகவோ, கதைத்தலைவி இரண்டாம் மனைவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யானதாகவோ காணப்படவில்லை; கதைகளில் வரும் துணைப் பாத்திரங்களே மறுமணம் செய்துகொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

மறுமணத்திற்குரிய காரணங்களைப் பின்வரும் மூன்று நிலைகளில் ஆராய்ந்து காணலாம்:

1) மறுமணம் செய்துகொள்ளும் ஆடவர் நிலை
2) இரண்டாம் மனைவியாகும் பெண்கள் நிலை
3) தந்தை நிலை

எந்தக் கதையிலும் தாயின் பங்கின்மை குறிப்பிடத்தக்கது.

3. 2. 1. 2. 1. *மறுமணம் செய்துகொள்ளும் ஆடவர் நிலை*

ஆடவர் தம் முதல் மனைவி இறந்தபின்னரோ, அல்லது முதல் மனைவி உயிருடன் இருக்கும்பொழுதோ மற்றொரு பெண்ணை மணந்துகொள்கின்றனர். இதற்கான காரணங்களைக் கீழ்க்காணும் அட்டவணை வழியாக விளக்கலாம் :

முதல் மனைவி இறந்தபின் மறுமணம்

நாவலின் பெயர்	ஆணின் மறுமணத்திற்குக் காரணம்	பெண் இரண்டாம் மனைவியாகக் காரணம்
லக்ஷ்மி		
1. அரக்கு மாளிகை	பெண்ணின் அழகு	பகட்டான வாழ்வில் ஆசை
2. நாயக்கர் மக்கள்	அ) பெண்ணின் அழகு	குடும்ப வறுமை
	ஆ) காரணம் கூறப் படவில்லை	பெண்ணின் அண்ணனின் பேராசை
3. சூர்யகாந்தம்	காரணம் கூறப்படவில்லை	குடும்ப வறுமை
4. மரகதம்	”	காரணம் கூறப்படவில்லை
5. பெண்மனம்	”	”
6. மிதிலா விலாஸ்	”	குடும்ப வறுமை
சூடாமணி		
1. தீயினில் தூசு	”	காரணம் கூறப்படவில்லை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வட்டவணையின் துணைகொண்டு ஆண்கள் மறுமணம் செய்துகொள்வதற்கான காரணங்களையும் பெண்கள் இரண்டாம் மனைவியாக இசைவதற்குரிய காரணங்களையும் அறியமுடி-கின்றது.

ஆடவர் மறுமணம் செய்துகொள்வதற்கு உரிய காரண-மாகப் பெண்ணின் அழகு காணப்படுகின்றது. பெண்ணின் அழகுக்காகவே தம் முதுமையையும் எண்ணாது மறுமணம் செய்து கொள்ளும் நாராயணனை 'அரக்கு மாளிகை' நாவலும், பாலசுந்தரத்தை 'நாயக்கர் மக்கள்' நாவலும் சித்திரிக்கின்றன.

பெண்ணின் அழகுக்காக மறுமணம் செய்துகொள்ளும் இருவரும் பெரும் செல்வந்தர்களாகக் காணப்படுகின்றனர். இவ்-வடிப்படையில் நிகழும் மறுமணத்தைச் சூடாமணி காட்டவில்லை.

அட்டவணையில் காட்டியுள்ளபடி லக்ஷ்மியின் 'சூர்ய காந்தம்', 'மரகதம்', 'பெண்மனம்', 'மிதிலா விலாஸ்' ஆகிய நான்கு நாவல்களிலும் சூடாமணியின் 'தீயினில் தூசு' எனும் நாவலிலும் ஆடவரின் மறுமணத்திற்குரிய காரணம் சுட்டப்-பெறவில்லை. முதல் மனைவியை இழந்த ஆடவருடைய வாழ்க்-கைப் பின்னணியை ஆராய்வதன்வழி இவர்தம் மறுமணத்திற்-கான காரணத்தை அறிய முயற்சி செய்யலாம்.

இந்நாவல்களில் காணப்படும் மனைவியை இழந்த ஆடவர் அனைவருக்கும் குழந்தைகள் உண்டு. நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த இவர்களுக்குக் குழந்தை வளர்ப்புக்கென ஆள் வைத்துக்-கொள்ளப் பொருளாதார நிலைமை இடம் அளிக்கவில்லை; வீட்டிலும் பொறுப்பாகக் குழந்தைகளை வளர்க்க யாரும் கிடை-யாது. எனவே, குழந்தையைப் பொறுப்பாக வளர்க்க ஒருவர் தேவை என்ற சூழ்நிலையே இவர்களை மறுமணத்திற்குத் தூண்-டியது என்று கருதமுடிகின்றது. ''குழந்தைகளுககுப் பெண்நாதி வேணாமா?'' (ப. 155) என்று மனைவியை இழந்த கணவனைப் பார்த்துச் சமுதாயம் கேட்பதைச் சூடாமணி 'அஞ்சன விழிகள்' நாவலில் காட்டுகின்றார். இதிலிருந்து சமுதாயத்தில் குழந்தை வளர்ப்புக்காக மறுமணம் செய்துகொள்ளும் வழக்கம் ஆடவரி-டையே காணப்படுகின்றது என்ற உண்மை சூடாமணியின் நாவல்வழி பெறப்படுகின்றது.

மறுமணம் செய்துகொள்ளும் ஆடவருடன், மனைவியை இழந்தும் மறுமணம் செய்யாதிருப்பவர் நிலையினை ஒப்பிட்டுக் காணும்பொழுது இவ்வுண்மை நன்கு தெளிவாகின்றது. லக்ஷ்மியின் 'பவானி' நாவலிலும், சூடாமணியின் 'மானிட அம்சம்' 'அஞ்சன விழிகள்' நாவல்களிலும் மனைவியை இழந்த ஆடவர் திருமணம் செய்துகொள்ளாதவர்களாகக் காணப்படுகின்றனர். அவர்களு-டைய குழந்தைகளை வளர்ப்பதற்குப் பொறுப்பான உறவினர்கள் இருக்கின்றனர் என்பது குறிக்கத்தக்கது. எனவே, குழந்தை-களை வளர்ப்பதற்கென்று மறுமணம் செய்துகொள்ள வேண்டிய நிலை இவர்களுக்கு ஏற்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆடவரின் மறுமணத்திற்காகக் காரணம் கூறப்படாத நாவல்களில் குழந்தை வளர்ப்பு இவ்வாடவரின் மறுமணத்திற்குக் காரணமாயிருந்திருக்கலாம் என்று கருதமுடிகின்றது.

முதல் மனைவி உயிருடன் இருக்க மறுமணம்

நாவலின் பெயர்	ஆண் மறுமணத்திற்குக் காரணம்	பெண் இரண்டாம் மனைவியாகக் காரணம்
லக்ஷ்மி		
1. சூர்யகாந்தம்	முதல் மனைவிக்கு மகப்பேறின்மை	காரணம் கூறப்படவில்லை
2. பெண்மனம்	மனைவியுடன் மனவேறுபாடு	வறுமை
சூடாமணி		
1. இரவுச்சுடர்	முதல் மனைவியின் மனநோய்	காரணம் கூறப்படவில்லை
2. விடிவை நோக்கி	மனைவியின் உடல் நோய்	இரக்கம்

'சூர்யகாந்தம்' நாவல் மகப்பேறின்மைக்கு மனைவியைக் காரணமாகக் காட்டித் தன்வீட்டு விருந்தாளிப் பெண்ணை மணக்கும் சுந்தரமூர்த்தியைச் சித்திரிக்கின்றது.

'பெண்மனம்' நாவல் மனைவியுடன் கொண்ட மனவேறுபாட்டினால் மறுமணத்திற்குப் பெண் தேடும் ஆடவனைச் சுட்டுகின்றது. நாவலில் திருமணம் நடந்ததற்கான குறிப்பு இல்லை.

முதல் மனைவியின் மனநோயினால் அவளுடன் வாழ இயலாது அவளுடைய பெற்றோர் இசைவு பெற்று மற்றொரு பெண்ணை மணக்கும் ஆடவனை 'இரவுச்சுடர்' நாவல் காட்டுகின்றது.

மனைவியினுடைய உடல் நோயைக் காரணம் காட்டி அவளிடமிருந்து விலகி, தன் நிலை கண்டு இரங்கும் மற்றொரு பெண்ணை மணக்கவிரும்பும் ஹரிஹரனை 'விடிவை நோக்கி' நாவல் காட்டுகின்றது. நாவலில் மறுமணம் நடந்ததாகக் குறிப்புக் காணப்படவில்லை.

எந்நிலையிலும் ஆடவர் விதவையரை மணந்துகொண்டதாகக் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 2. 1. 2. 2. இரண்டாம் மனைவியாகும் பெண்கள் நிலை

முதல் அட்டவணையினின்று முதல் மனைவி இறந்த பின்னர் மறுமணம் செய்து கொள்ள விரும்பும் ஆடவரைப் பெண்கள் மணக்க முன்வருவதற்கு, பின்வரும் இரண்டு காரணங்கள் புலப்படுகின்றன:

1. பகட்டான வாழ்வில் ஆசை
2. வறுமை

தான் வறுமையில் வாடாவிடினும் ''பெரிய வியாபாரி, அரண்மனை போல் வீடு, பணம் இருக்கிறது, சௌகரியம் போல் இருப்போம்'', (அத்.27) என்ற நினைப்புடன் முதுமையிலிருக்கும் நாராயணனைத் துணிந்து மணக்கும் சௌதாமினியை லக்ஷ்மியின் 'அரக்கு மாளிகை' நாவல் சித்திரிக்கின்றது. பகட்டான வாழ்வில் அவள் கொண்டுள்ள ஆசை அவளை நாராயணனுக்கு மூன்றாம் மனைவியாக்கிவிடுகின்றது.

வறுமையில் வாடும் பெண்கள் ஏராளமான வரதட்சிணை கொடுத்துத் தம் பெற்றோரால் தங்களைத் திருமணம் செய்து கொடுக்க இயலாது என்பதை உணர்கின்றார்கள். தம்மைவிட உயர்ந்த நிலையில் இருப்பவர்கள் தம்மை மணந்துகொள்ள முன்வரும்பொழுது தமது வறுமையிலிருந்து விடுபட்டுச் செல்வத்தை அனுபவிக்க ஆசை கொண்டு இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட இசைகின்றனர். இத்தகைய பெண்களை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்', 'மிதிலா விலாஸ்' முதலிய நாவல்களில் காணமுடிகின்றது.

லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்' நாவலில் பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படுவதற்கு இசைய அண்ணன் காரணமாகின்றான். பணக்காரனான அண்ணன் ஒரு பணக்காரனுக்குத் தன் தங்கையை மணமுடித்துக் கொடுத்தால் மேலும் பணக்காரனாகலாம் என்ற ஆசையில் அவளை ஒரு கிழவனுக்கு மணமுடித்துக் கொடுக்கின்றான். நோயாளியான கிழவன் விரைவில் இறந்து தங்கை விதவையாகிவிடுவாள் எனத் தெரிந்தும், வாரிசில்லாத தங்கையின் சொத்து தனக்கே வந்துசேரும் என்ற பேராசையில் இத்திருமணத்தை நடத்திவைக்கின்றான்; தங்கையின் விருப்பத்தை மீறியே திருமணம் நடைபெறுகின்றது.

லக்ஷ்மியின் 'மரகதம்', 'பெண்மனம்' ஆகிய இரண்டு நாவல்களிலும், 'தீயினில் தூசு' எனும் சூடாமணியின் நாவலிலும் பெண்கள் இரண்டாம் மனைவியாகக் காரணம் காணப்படவில்லை.

'பெண்மனம்' நாவலில் முதல்மனைவி உயிருடன் இருக்கும்பொழுதே மறுமணம் செய்துகொள்ள விரும்பும் ஆடவரை மணக்கப் பெண்கள் முன்வருவதற்குப் பெண்ணின் குடும்பத்தில் நிலவும் வறுமை காரணமாவதாக லக்ஷ்மி குறிப்பிடுகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நோயாளி மனைவியால் வருந்தி நிற்கும் ஆடவனை அவன் மேல் கொண்டுள்ள இரக்கத்தின் காரணமாக மணக்க முன்வரும் பெண்ணைச் சூடாமணியின் 'விடிவை நோக்கி' நாவலில் காண-முடிகின்றது.

லக்ஷ்மியின் 'சூர்ய காந்தம்' நாவலில் முதல் மனைவிக்கு மகப்பேறின்மையால் தன்னை மணந்துகொள்ள முன்வரும் ஆட-வனைக் களகம் மணந்து கொள்வதற்குரிய காரணம் கதையில் வெளிப்படையாகக் கூறப்படவில்லை. ஆனால் அவள் சிறுமி எனச் சுட்டப்படுகின்றாள் (ப. 38); எனவே, அவளுடைய இள-வயது இத்திருமணத்தால் விளையும் பாதிப்புக்களை எண்ணிப்-பாராது அவளைத் திருமணத்திற்கு இசைய வைத்திருக்கிறது என்பதை இந்நாவல்வழி உணரமுடிகின்றது.

ஆடவர் நிலை, பெண்கள் நிலை என்ற இரண்டையும் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம் :

முதல் மனைவி இறந்தபின் மறுமணம்

ஆடவர்		பெண்கள்		
பெண்ணின் அழகு	குழந்தை வளர்ப்பு	வறுமை	அண்ணனின் பேராசை	பகட்டான வாழ்வில்ஆசை
(2)	(5)	(3)	(1)	(1)

முதல் மனைவி உயிருடன் இருக்க மறுமணம்

ஆடவர்				பெண்கள்		
குழந்தை இன்மை	மனைவி யுடன்மன வேறுபாடு	மனைவி யின்உடல் நோய்	மனைவி யின் மன நோய்	பெண் ணின் இளவயது	வறுமை	இரக்கம்
(1)	(1)	(1)	(1)	(1)	(1)	(1) *

ஆடவர், பெண்டிர் இருவருடைய நிலைகளையும் ஒப்பிட்டுக் காணும் பொழுது முதல் மனைவி இறந்தபின்னர் ஆடவரின் மறு-மணம் நிகழ்வதே மிகுதியாகக் காணப்படுகின்றது. குழந்தை வளர்ப்புக்காக மறுமணம் செய்துகொள்வது பெரும்பான்மையான காரணமாகக் காணப்படுகின்றது. பெண்கள் இரண்டாம் மனைவி-யாக அவர்களுடைய வறுமையே பெரும்பான்மைக் காரணமாகக் காணப்படுகின்றது. எனவே, ஆண்கள் மறுமணம் செய்துகொள்-வதற்குக் குழந்தை வளர்ப்பும், பெண்கள் இரண்டாம் மனைவிய-ராக வாழ்க்கைப்படுவதற்கு இசைய அவர்களுடைய குடும்பத்தில்

* அடைப்புக்குள் காணப்படும் எண்கள் நாவல்களின் எண்ணிக்கையினைக் குறிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிலவும் வறுமையும் முக்கிய காரணங்களாகக் காணப்படுகின்றன என்ற உண்மை இங்குத் தெளிவாகின்றது. ஆய்வாளருடைய களஆய்வும் இக்கருத்தினை வலியுறுத்துகின்றது.*

3. 2. 1. 2. 3. தந்தை நிலை

ஒரு தந்தை, தன் மகள் தன் குடும்பத்தைவிட செல்வ-நிலையில் உயர்ந்த குடும்பத்தில் வாழ்க்கைப்படவேண்டுமென விரும்புவது இயற்கை. இதற்காக செல்வக்குடும்பத்தில் தன் மகளை இரண்டாம் தாரமாகவோ அல்லது மூன்றாம் தாரமாக-வோகூட மணமுடித்து வைக்கத் துணிகின்றார் இந்நிலையை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் காட்டுகின்றது.

3. 2. 1. 2. 4. இம்மூன்று நிலைகளிலும் மறுமணம் செய்து கொள்ளும் ஆடவர் நிலையை லக்ஷ்மி மிகுதியாகச் சித்திரிக்கின்-றார். அவருடைய ஆறு நாவல்களில் மறுமணம் பற்றிய ஒன்பது சித்திரிப்புக்கள் காணப்படுகின்றன. அவற்றுள் மறுமணம் புரி-வதற்கு ஆடவர்க்குரிய காரணங்களாக நான்கனையும், பெண்-களுக்குரிய காரணங்களாக ஆறனையும் காட்டுகின்றார். பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படுவதற்கு அண்ணனின் பணப்பேராசை காரணமாகின்றது என்ற கருத்தையும் லக்ஷ்மி காட்டுகின்றார். தந்தை குடும்ப நிலைமை காரணமாகத் தன் மகளை இரண்டாம் மனைவியாகத் திருமணம் செய்து கொடுக்-கின்றார் என்ற கருத்தும் இவருடைய நாவல்களினின்று பெறப் படுகின்றது.

மறுமணம் பற்றிய சித்திரிப்பு சூடாமணியின் நாவல்களில் குறைவாகக் காணப்படுகின்றது. இவருடைய மூன்று நாவல்களில்-தாம் மறுமணச் சித்திரிப்புக் காணப்படுகின்றது மனைவியை-இழந்த ஆடவர் மறுமணம் செய்துகொள்வதற்கான காரணத் தைச் சூடாமணி தெளிவாகக் காட்டவில்லை. முதல் மனைவி இருக்கும் பொழுது மறுமணம் செய்துகொள்வதற்கு லக்ஷ்மி சித்-திரிக்காத இரு காரணங்களை இவர் சித்திரிக்கின்றார். தந்தை நிலை இவருடைய நாவல்களில் காணப்படவில்லை, மறுமணம் செய்துகொள்ளும் ஆடவரைவிட மனைவியை இழந்தும் மறுமணம் செய்து கொள்ளாத ஆடவர் நிலையையே சூடாமணி தம் நாவல் களில் மிகுதியாகச் சித்திரிக்கின்றார். ஆடவர் குழந்தை வளர்ப்புக்-கென மறுமணம் செய்துகொள்ள முயலுவது ஒரு கண்துடைப்பு தான்; உண்மையில் இல்லற நாட்டத்திற்காகத்தான் அவர்களின்

---

* ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டி வாயிலாக ஆடவரின் மறுமணத்திற்கு குழந்தை வளர்ப்பு காரணம் என்ற கருத்தை ஆடவரில் 45.50 விழுக்காட்டினரும், பெண்களில் 41.47 விழுக்காட்டினரும் பெண்கள் இரண்டாம் மனைவியராக வாழ்க்கைப்பட இசைவதற்குக் குடும்பத்தில் நிலவும் வறுமை காரணம் என்ற கருத்தை ஆடவரில் 49 விழுக்காட்டினரும் பெண்களில் 57.14 விழுக்காட்டினரும் ஏற்றுக்கொள்கின்றனர் என்ற கருத்து புலனாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மறுமணம் நடைபெறுகின்றது என்பது இவர் கருத்து. ஆடவரின் மறுமணத்தைச் சூடாமணி மிகுதியாக ஆதரிக்கவில்லை.*

3. 2. 1. 2. 5. *மறுமணம் புரிந்தவரின் வாழ்க்கைநிலை*

லக்ஷ்மி, சூடாமணி ஆகியோருடைய நாவல்களில் இடம் பெறும் மறுமணம் செய்துகொண்டவர் வாழ்க்கை மகிழ்ச்சியாகக் காணப்படவில்லை. சூடாமணியின் 'இரவுச் சுடர்' நாவலில் மட்டும்தான் மறுமணம் செய்துகொண்டவரின் வாழ்க்கை அமைதி-யாகக் காணப்படுகின்றது.

தம் அழகினால் இரண்டாம் மனைவியானவர்கள், தம் கண-வரைவிட அவர்களுடைய செல்வத்துக்கே மதிப்பு கொடுக்கின்-றனர். தம் அழகில் மயங்கிக் கிடக்கும் தம் கணவரை அப்-பெண்கள் கைப்பாவையாக ஆட்டிவைக்கின்றனர். தன் கணவ-னைப் பொருட்படுத்தாது பல ஆடவர்களுடன் சுற்றித்திரியும் இரண்டாம் மனைவி ரேவதியை (பக். 126-127) லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' சித்திரிக்கின்றது.

தன் கணவன் சொத்துக்களைத் தானே அடையவேண்டும் என்ற எண்ணத்தால் மூத்தாள் குடும்பத்தை அழிக்க முயன்ற பேராசை உள்ளம் கொண்ட சௌதாமினியை லக்ஷ்மியின் 'அரக்கு மாளிகை' நாவல் காட்டுகின்றது.

அழகின் அடிப்படையில் மறுமணம் செய்து கொண்டவர்-களின் வாழ்வில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே இடை-விடாத போராட்டம் நடைபெறுகின்றது.

A ——————→ ——— ←————— B,

வறுமையின் காரணமாக இரண்டாம் மனைவியாகின்ற-வர்கள் தம் மூத்தாள் குழந்தைகளை வெறுக்கின்றனர். கண-வனின் சொத்து, அன்பு முதலியன தனக்கும், தனக்குப் பிறந்த குழந்தைகளுக்கும் மட்டுமே கிடைக்க வேண்டும் என்ற எண்-ணத்தின் வெளிப்பாடு மூத்தாள் குழந்தைகளை வீட்டைவிட்டுத் துரத்தும் அளவு இரண்டாம் மனைவியரைக் கொடியவர்களாக்கு-



*25-8-80 அன்று ஆய்வாளர் படைப்பாளியுடன் நடத்திய பேட்டி-யில் வெளியான கருத்து.

*A கணவனையும், B_1 இரண்டாம் மனைவியையும், C மூத்த மனைவியின் குழந்தையையும் >< — இக்குறியீடு போராட்டத்-தையும் குறிப்பிடுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றது என லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்', 'மரகதம்', 'பெண்மனம்' ஆகிய நாவல்களும், சூடாமணியின் 'தீயினில் தூசு' எனும் நாவலும் சித்திரிக்கின்றன. கணவன், குடும்பத்தில் அமைதி நிலவ வேண்டும் என்பதற்காக மனைவியை எதிர்க்க அஞ்சு-கின்றான்.

கணவனுக்கும் இரண்டாம் மனைவிக்கும் இடையேயும், இரண்டாம் மனைவிக்கும் மூத்தாள் குழந்தைக்கும் இடையேயும் போராட்டம் ஏற்படுகின்றது. கணவன் தன் இரண்டாம் மனை-வியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு மூத்த மனைவியின் மகனைக் கொடுமைப்படுத்துவதால் தந்தைக்கும் மகனுக்கும் இடையேயும் போராட்டம் விளைகின்றது. மாற்றாந்தாயின் கொடுமையாலும், தந்தையின் புறக்கணிப்பாலும் மகனோ மகளோ வீட்டைவிட்டு வெளியேறும் நிலை ஏற்படுகின்றது.

இதற்கு மாறாகக் கணவன் இறந்தபின்னர் மூத்தாள் குழந்தைகளின் கொடுமையால் இளையமனைவி, வீட்டைவிட்டு வெளியேறும் நிலையை 'மிதிலா விலாஸ்' காட்டுகின்றது. மற்ற நாவல்களில் கணவன் இரண்டாம் மனைவிக்கு அடங்கியவனாக இருப்பது அவளுடைய ஆதிக்கத்திற்குக் காரணமாகின்றது. இந்நாவலில் இரண்டாம் மனைவி கணவனுக்கு அடங்கி நடப்பதால் அவளுக்கு இத்தகைய நிலை ஏற்படுகின்றது.

$$[A + B_1 + C + C_1] - \boxed{A} = [B_1 + C + C_1] - [B_1 + C_1]^*$$

$A + B_1 + C + C_1$ என்பது கணவன், இளைய மனைவி, மூத்தாள் குழந்தை, இளைய மனைவியின் குழந்தை ஆகியோர் சேர்ந்து வாழும் குடும்பத்தைக் குறிக்கின்றது. $-\boxed{A}$ கணவ-னின் இறப்பைக் குறிக்கின்றது. கணவன் இறந்தபின்னர் இளையமனைவி தன் மூத்தாள் குழந்தைகளுடனும், தன் குழந்-தைகளுடனும் வாழ்கின்றாள். மூத்தாள் குழந்தைகளின் கொடுமை இளையமனைவியையும் அவளுடைய குழந்தையையும் வீட்டை-விட்டு விரட்டிவிடத் தனியே அவர்கள் பிரிந்து வருவதை $- B_1 + C_1$ என்பது குறிக்கும்.

மகப்பேறின்மையின் காரணமாகக் கணவனின் மறுமணம் குறித்து அவனை விட்டு வெளியேறும் மனைவியினால் குடும்-பத்தின் அமைதி பாதிக்கப்படுகின்றது.

$$A + B + B_1 - - - - = A + B_1 - B$$

---

*A கணவனையும். B முதல் மனைவியையும், C கணவனுக்கும் முதல் மனைவிக்கும் பிறந்த குழந்தையையும், B_1 இரண்டாவது மனைவியையும், C_1 கணவனுக்கும் இரண்டாவது மனைவிக்-கும் பிறந்த குழந்தையையும், [ ] குடும்ப அமைப்பையும் குறிக்கும். + சேர்ந்து வாழ்வதையும், — □ இறப்பினையும், — பிரிவினையயும் குறிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

B_1இன் வரவு Bயைக் கணவனிடமிருந்து பிரிக்க அவள் தனியே வாழ்வதை -B குறிப்பிடுகின்றது. $A + B_1$ இன் குடும்ப வாழ்வு பற்றிய சித்திரிப்பு 'சூர்யகாந்தம்' நாவலில் இடம் பெறவில்லை.

மறுமணம் செய்துகொண்டவர் வாழ்க்கையின் வேறு சூழ-லையும், அவற்றைப் படைப்பாளிகள் கருப்பொருளாகக் கூறாத நிலையையும் கீழ்க்கண்டவாறு காணலாம். இங்குக் கூறப்படும் குடும்ப அமைப்பு உலகக் கண்ணோட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்படுகின்றது.

(அ) $[A + B + C + B_1 + C_1]$

கணவன், முதல் மனைவி, அவள் குழந்தைகள், இரண்-டாவது மனைவி, அவள் குழந்தைகளுடனும் வாழலாம்.

(ஆ) $C \longrightarrow \longleftarrow C_1$

பெற்றோர் இறப்புக்குப் பின்னர் Cக்கும் C_1க்கும் இடையே தந்தை சொத்து பற்றியோ குடும்பம் பற்றியோ பிணக்கு ஏற்பட-லாம்.

(இ) $[C + C_1]$

இல்லையெனில் அன்புகொண்ட சூழலும் அவர்களிடையில் காணப்படலாம்

(ஈ) $[A + C + B_1 + C_1]$

கணவன், முதல் மனைவியின் குழந்தை, இரண்டாம் மனைவி, இரண்டாம் மனைவியின் குழந்தை என்றும் குடும்ப அமைப்பு அமையலாம்.

(உ) $[A + B + B_1]$

மூத்த மனைவிக்கு மகப்பேறின்மையால் மறுமணம் செய்து-கொள்ளும் கணவன், இரண்டு மனைவிகளுடனும் ஒற்றுமையாக வாழலாம்.

இச்சூழ்நிலைகளில் சில நம்முடைய சமுதாயத்தில் நிகழ்-வது அரிதாகக் காணப்படலாம். எனினும், இத்தகு குடும்ப அமைப்புக்களும் காணப்படலாம் என்றும் கூறலாம். ஆனால் இரு படைப்பாளிகளின் நாவல்களில் $[A + B + C]$ என்ற நிலை-யோ, $[A + B_1 + C_1]$ என்ற நிலையோ தான் காணப்படுகின்றது.

3. 2. 1. 2. 6. மறுமணத்தினை ஆடவர், பெண்டிர் நிலை-களைக்கொண்டு கீழ்க்கண்டவாறு இணைத்துக் காணலாம்:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முதல் நிலை



A முன்பே திருமணமானவன். மூத்த மனைவியின் குழந்தைகளுக்குத் தந்தையாக இருக்கின்றான். B_1 அவனுக்கு இரண்டாம் மனைவியாகின்றாள். A, B_1 ஐ மணப்பதற்கு அவனுடைய குடும்பப் பொறுப்பு காரணமாகின்றது. B_1, Aயை மணக்க அவளுடைய வறுமை காரணமாகின்றது. இருவரும் மணந்து கொண்டு A + B_1 ஆகின்றனர்.

குடும்பப் பொறுப்புக்காக ஒரு பெண்ணை மறுமணம் செய்துகொள்பவனுக்குப் பெண்ணுடைய அழகோ, பணமோ தேவையில்லை. அப்பெண்ணுக்கும் தன் குடும்பத்தில் நிலவும் வறுமையிலிருந்து விடுதலை பெறவேண்டும் என்ற எண்ணமே இருப்பதால் ஆடவனின் வயதோ, அழகின்மையோ பொருட்டாகத் தெரியவில்லை.

எனவே, ஆடவனுக்குக் குடும்பப் பொறுப்பை ஏற்றுத் தன் குழந்தைகளுக்குத் தாயாக இருக்க ஒரு பெண் தேவை. பெண்ணுக்கு வறுமையிலிருந்து விடுபட, திருமணம் தேவை. இங்கு மறுமணம் 'தேவை' (necessity) என்ற அடிப்படையில் நடைபெறுகின்றது என்பது புலப்படுகின்றது.

இரண்டாம் நிலை



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நிலையில் மறுமணம் செய்து கொள்ளும் ஆடவனுக்குக் குடும்பப் பொறுப்பு இல்லை. ஏராளமான செல்வம் இருக்கின்றது. குடும்பப் பொறுப்பையும் குழந்தைகளையும் கவனித்துக்கொள்ள ஆட்கள் இருக்கின்றனர். எனவே, இல்வாழ்க்கையை அனுபவிக்க ஒரு பெண்துணையை ஆடவன் தேடுகின்றான். பெண்ணும் செல்வந்தனை மணந்தால் வாழ்க்கையை நன்கு அனுபவிக்கலாம் என்ற எண்ணத்தில் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட இசைகின்றாள்.

எனவே, ஆணைப் பெண்ணின் அழகு ஈர்க்கின்றது; பெண்ணை ஆணின் செல்வம் ஈர்க்கின்றது. இத்திருமணம் நிகழ 'ஈர்ப்புச்சக்தி' (attraction) காரணமாகின்றது.

இவ்விரண்டு நிலைகளின் வழி மறுமணத்திற்குத் 'தேவையும்', 'ஈர்ப்பும்' அடிப்படைக் காரணங்களாக அமைகின்றன என்பது புலனாகின்றது.

3 2. 1. 2. 7. ஆய்வாளருடைய உலகியல் அறிவின் துணை கொண்டு நடைமுறை வாழ்க்கையில் ஆண் மறுமணம் செய்து கொள்வதற்கும், பெண் இரண்டாம் மனைவியாக இசைவதற்கும் கீழ்க்கண்ட காரணங்களைக் கூற முடிகின்றது.

ஆண்	பெண்
1. பெண்ணின் அழகு	1. குடும்ப வறுமை
2. மூத்த மனைவிக்குக் குழந்தை இன்மை	2. அதிக வயதாகியும் மணமகன் கிட்டாமை
3. குழந்தை வளர்ப்பு	3. பகட்டான வாழ்வில் ஆசை
4. மூத்த மனைவியின் நோய்	4. மூத்த மனைவி தன் தமக்கையாயிருந்தால் அவள் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பிற்காக மணம் செய்துகொள்ளல்
5. மூத்த மனைவியிடம் வெறுப்பு	
6. இல்லற வாழ்வில் நாட்டம்	
7. தன் உடல்வலிமையைக் காட்டும் எண்ணம்	
8 முறைப்பெண்ணை மாற்றான் மணக்க விடாது தானே மணப்பது	

இவற்றுள் ஆணுக்கு உள்ள காரணங்களுள் பெண்ணின் அழகு, இல்லற வாழ்க்கையில் நாட்டம், மகப்பேறின்மை, மனைவியிடம் வெறுப்பு, குழந்தை வளர்ப்பு, மனைவியின்நோய் முதலியன லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரது படைப்புகளிலும் காணப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆடவர் தம் உடல் வலிமையைக் காட்டுவதற்கும் முறைப் பெண் என்ற உறவை நிலைநாட்டுவதற்கும் மறுமணம் செய்வது இருவர் நாவல்களிலும் காணப்படவில்லை. இவை சமுதாயத்தில் பெருவழக்கின்மையாதலால் இவ்விரு படைப்பாளிகளும் இவற்றைச் சித்திரிக்கவில்லை என எண்ணத் தோன்றுகின்றது,

பெண்கள் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படுவதற்குரிய காரணங்களுள் வறுமை, பகட்டான வாழ்வில் ஆசை எனும் இரண்டு மட்டுமே லக்ஷ்மியின் நாவல்களில் காணப்படுகின்றன. சூடாமணியின் நாவல்களில் பெண்கள் மறுமணம் செய்துகொள்வதற்கு வெளிப்படையான காரணங்கள் கூறப்படவில்லை. அதிக வயதால் மணமகன் கிட்டாமை, தன் தமக்கை குழந்தைகளின் வளர்ப்புக்காகத் தமக்கையின் கணவனையே மணந்துகொள்ளல் எனும் காரணங்கள் இருவருடைய நாவல்களிலும் காணப்படவில்லை. ஆனால் சமுதாயத்தில் இவ்விருவகை வழக்குகளும் காணப்படுகின்றன.*

ஆண்களுக்கென உலக வழக்கில் காணப்படுகின்ற எட்டுக் காரணங்களுள் ஐந்து காரணங்களை லக்ஷ்மி தம் நாவல்களில் சித்திரிக்கின்றார். பெண்களுக்கான நான்கு காரணங்களுள் இரண்டினைக் காட்டுகின்றார். எனவே, இவருடைய நாவல்கள் உலக வழக்கை ஒட்டிச் செல்கின்றன என்று கூறலாம். சூடாமணி ஆண்களுக்கான காரணங்களுள் மூன்றினைக் கூறுகின்றார். பெண்களுக்கான காரணங்கள் எதனையும் கூறவில்லை. எனவே, இவருடைய நாவல்கள் உலக வழக்கை ஓரளவுதான் ஒட்டி அமைந்திருக்கின்றன என்று கூறலாம்.

திருமண முறைகளை விளக்கமாகக் கூறும் சமூகவியலார் மறுமணத்தைப் பற்றி விரிவாகப் பேசவில்லை. மறுமணத்தால் குடும்பங்களில் எழும் சிக்கல்களைப் பற்றிய ஆய்வினையும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை நாவல்கள் கூறும் சிக்கல்கள் நடப்பியலில் காணப்படுபவையே. எனவே, இவ்வாய்வினைச் சமூகவியலார் மேற்கொண்டால் மேலும் பல உண்மைகள் புலப்படலாம்.

3. 2. 2. 0. *மரபு மீறிய திருமணம்*

பெற்றோரால் நிச்சயிக்கப்படாது, தமக்குரிய இணையைத் தாமே தேர்ந்தெடுத்து மணப்பது இந்திய சமுதாயத்தில் மரபு மீறிய செயலாகக் கருதப்படுகின்றது. இது ஒரே இனத்தில்

* ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாக அதிக வயதால் மணமகன் கிட்டாமை என்ற கருத்தினை ஆடவரில் 3. 50 விழுக்காட்டினரும், பெண்களில் 7. 14 விழுக்காட்டினரும், தன் தமக்கை குழந்தைகளின் வளர்ப்புக்காக மணந்துகொள்ளுதல் என்ற கருத்தினை ஆடவரில் 15. 75 விழுக்காட்டினரும், பெண்களில் 10 விழுக்காட்டினரும் ஏற்றுக் கொள்வதினின்று புலப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ள இருவருடைய காதல் திருமணமாக அமையலாம், வெவ்வேறு இனத்தவருடைய காதல் திருமணமாகவும் அமையலாம், விதவைகளுடைய மறுமணமாகவும் அமையலாம்.

மரபு மீறிய திருமணத்தை இருவகையாகப் பிரித்துக் காணலாம் :

1) முதல் திருமணம்
2) மறுமணம்

3. 2. 2. 1. *முதல் திருமணம்*

பெற்றோரின் துணையின்றி அன்புடை இரு நெஞ்சங்கள் தாமே கலந்து பெற்றோரின் இசைவு பெற்றோ, பெறாமலோ முதன் முதலாக மணந்து கொள்வதே இங்கு முதல் திருமணம் என்று குறிப்பிடப்படுகின்றது. காதல் அடிப்படையில் நிகழும் காதல் திருமணம் இதுவெனக் கூறலாம். ஒரே இனத்தாரிடையோ அல்லது வெவ்வேறு இனத்தாரிடையோ இத்திருமணம் நடைபெறுவதுண்டு.

3. 2. 2. 1. 1. ஓரினத் திருமணம் (காண்க, 3. 1. 1. 1. 1. 2. 1)
3. 2. 2. 1. 2 கலப்புத் திருமணம் (காண்க, 3. 1 1. 1. 1. 2. 2)

3. 2. 2. 1. 2. 1. கலப்புத் திருமணம் பற்றிச் சமூகவியலறிஞர் ஆலன் டி. ராஸ் இந்தியாவில் நடத்திய களஆய்விலிருந்து, சாதி முறை ஒழிவதற்கும், சமுதாயம் தடுக்கும் காதல் திருமணங்கள் பெருகுவதற்கும் கலப்புத் திருமணத்தைப் பெரும்பான்மையோர் வரவேற்கின்றனர். சாதி, சமயம், நாடு ஆகியவை கலப்புத் திருமணத்திற்குத் தடையில்லை என்பது ஆடவரில் பெரும்பான்மையோருடைய கருத்தாகக் காணப்படுகின்றது. சமய-சாதி நம்பிக்கைகள் நம்மிடத்தில் வேரோடி இருப்பதினால் வேறுபட்ட குறிக்கோள்கள், பழக்கவழக்கங்களில் வளர்க்கப்பட்டவர்கள் இணைந்து வாழ்வது மிகக் கடினமாகிறது; திருமணம் தோல்வி அடைந்துவிட்டால் அப்பெண்ணுக்குத் தன் குடும்பத்தின் பாதுகாப்பு கிடைக்காது முதலிய காரணங்களினால் பெண்கள் ஆடவரைவிட கலப்புத் திருமணத்தை மிகக் குறைவாகவே ஆதரிக்கின்றனர் என்ற கருத்துக்கள் பெறப்படுகின்றன (Aileen D. Ross, 1973, p. 271)

கேரள மாநிலத்தில் மெர்லின் ஃபெர்னாண்டஸ் தாம் நடத்திய கள ஆய்வின் வாயிலாக இரு சமயத்தாரிடை நடக்கும் திருமணத்தை 80 விழுக்காடு தாய்மார்கள் எதிர்ப்பதை ஆராய்ந்து கூறியிருக்கின்றார். வெவ்வேறு சமயச் சூழலில் வளர்ந்த ஆணும் பெண்ணும் இல்லறவாழ்வில் ஒன்றிப்போக இயலாது என்பதையும் அவர் தம் ஆய்வில் கண்ட காரணங்களில் ஒன்றாகக் குறிப்பிடுகின்றார். ஆயினும் எதிர்க்கும் தாய்மார்களின் பெண்களில் 55 விழுக்காட்டினர் உலக ஒற்றுமைக்கு இத்தகைய திருமணமே வழிகாட்டும் என்பதால் ஆதரிக்கின்றனர் என்றும் தெரியவருகின்றது எனக் குறிப்பிடுகின்றார் (Marilyn Fernandez, 1975, p. 29).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 2. 2. 1. 2. 2 ஆலன் டி. ராஸ், மெர்லின் பெர்னாண்டஸ் இருவருடைய கருத்துக்களுடன் லக்ஷ்மி, சூடாமணி இருவரது கருத்துக்களையும் ஒப்பிட்டுக் காணலாம். வளர்க்கப்படும் சூழல், பழக்க வழக்கங்களின் வேறுபாடு இவற்றால் கலப்புத் திருமணம் வெற்றி பெறுவதில்லை; சமுதாயத்தில் இதற்கு எதிர்ப்பும் காணப்படுகின்றது என லக்ஷ்மி தம் நாவல்களில் காட்டுகின்றார். அவரது சொந்தக் கருத்தும் இதுவாகவே காணப்படுகின்றது. சூடாமணி இத்தகைய திருமணங்கள்தாம் ஒற்றுமைக்கு வழி என்பதைத் தம் நாவல்களில் வற்புறுத்துகின்றார்; இவரும் முழுமனதுடன் இவ்வகைத் திருமணத்தை ஆதரிக்கின்றார். பெண்கள் இத்திருமணத்தை எதிர்க்கின்றனர் என்ற கருத்தினை இரு படைப்பாளிகளுமே ஏற்கவில்லை. சூடாமணியின் நாவல்களில் பெண்களே இத்திருமணத்திற்கு ஆதரவு அளிப்பதைக் காணமுடிகின்றது.*

சமூகவியலார் கருத்துக்களுடன் சூடாமணியின் கருத்துக்கள் ஒத்துப் போவதைக் காணமுடிகின்றது. சமுதாயத்தில் மாறிவரும் திருமணமுறையைச் சூடாமணி படைத்துக் காட்டுகின்றார். லக்ஷ்மி கலப்புத் திருமணத்தைச் சிக்கல் நிறைந்தது என்பதால் மிகுதியாகச் சித்திரிக்கவில்லை என உணரமுடிகின்றது.

3. 2. 2. 2 *மறுமணம்*

ஓர் ஆடவன் தன் மனைவியை இழந்தபிறகு மற்றொரு பெண்ணை மணப்பதும், ஒரு பெண் தன் கணவனை இழந்த பின் மற்றொரு ஆணை மணப்பதும் இங்கு மறுமணம் என்று குறிப்பிடப்படுகின்றது. இத்திருமணங்களும் காதல் அடிப்படையில் நிகழ்வதால் மரபு மீறியனவாகக் கருதப்படுகின்றன.

3. 2. 2. 2 1. *ஆடவனின் மறுமணம்*

மனைவியை இழந்த ஓர் ஆடவன் மற்றொரு பெண்ணைக் காதலித்துத் திருமணம் செய்துகொள்கின்றான். இது ஆணுக்கு மறுமணமாகவும், பெண்ணுக்கு முதல் மணமாகவும் காணப்படுகின்றது. காதலினால் நடைபெறுகின்ற சுந்தரவதனத்தின் மறுமணத்தை லக்ஷ்மியின் 'பவானி' நாவல் காட்டுகின்றது. (காண்க, 3. 1. 1. 1. 1. 2. 1. 1. 1). ஆடவரின் மறுமணம் காதல் அடிப்படையில் நடைபெற்றாலும், சுந்தரவதனத்தின் மணவாழ்க்கை அமைதியாகச் செல்லவில்லை; பவானி சுந்தரவதனத்தின் மூத்த மனைவியின் குழந்தையைத் துன்புறுத்துகின்றாள். அக்குழந்தையிடம் கணவன் தன் மூத்தாளைக் காண்கின்றானோ என்ற ஐயம் பவானியைக் கொடுமை நிறைந்த மாற்றாந்தாயாக்குகின்றது என லக்ஷ்மி படைக்கின்றார். எனவே மரபுவழி அமைந்த மறுமணமாயினும் (காண்க, 3. 2. 1. 2. 5.), மரபு மீறிய மறுமணமாயினும் இல்லறவாழ்வின் அமைதியின்மைக்கு மனைவியே காரணமாகின்றாள் என்பது புலப்படுகின்றது.

---

* ஆய்வாளர் படைப்பாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாகக் கிடைத்த செய்தி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 2. 2 2. 2. *பெண்ணின் மறுமணம்*

கணவனை இழந்த இளம் விதவையர் மற்றோர் ஆடவனை மணப்பது, பெண்ணின் மறுமணம் என்று குறிப்பிடப்படுகின்றது. இவ்வகை மறுமணத்தைச் சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே' நாவல் சித்திரிக்கின்றது. (காண்க, 3.8).

3. 2. 2 2.3. மரபு மீறிய திருமணத்தில் ஆடவனின் மறுமணத்தை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; சூடாமணி இதனைச் சித்திரிக்கவில்லை. சூடாமணி பெண்ணின் மறுமணத்தைச் சித்திரிக்கின்றார்; லக்ஷ்மி இதனைச் சித்திரிக்கவில்லை.

மரபு மீறிய திருமணத்தில் நடைபெறும் இருவகை மறுமணங்களையும் ஒப்பிடும்பொழுது சில உண்மைகள் புலப்படுகின்றன. ஆடவனின் மறுமணத்தில் திருமணவாழ்வு அமைதியாகக் காணப்படவில்லை; மனைவி கணவனை வெறுப்பதற்கு அவனுடைய மூத்த மனைவியின் குழந்தை காரணமாகின்றது. பெண்ணின் மறுமணத்தில் திருமணவாழ்வு அமைதியாகக் காணப்படுகின்றது (உயர்வு உள்ளத்திலே). மறுமணம் செய்துகொள்ளும் கௌரிக்குக் குழந்தை இருக்கின்றது. அவள் கணவன் இராமாமிருதம் திருமணமாகாதவர். குழந்தையினால் சிக்கல் ஏற்படலாம் என அஞ்சி கௌரியின் அண்ணன் அக்குழந்தையைத் தானே வளர்த்துவந்தபோதிலும், அதனிடம் அன்புடையவராகவே இராமாமிருதம் காணப்படுகின்றார். கௌரியின் உறவால் தனக்குக் குழந்தை பிறந்தபின்னரும் தன் குழந்தையைப் போன்றே கௌரியின் முதல் குழந்தையிடம் அன்புகாட்டுகின்றார். 'உயர்வு உள்ளத்திலே' நாவலில் பரிமளா-ராஜுவின் திருமணவாழ்வு சித்திரிக்கப்படவில்லை. எனவே, பெண்ணின் உள்ளத்தில் தோன்றும் பொறாமை உணர்ச்சி அவள் வாழ்வை அமைதியற்றதாக்கி விடுகின்றது; ஒரே நிலையில் காணப்படும் ஆண், பெண் இருவருள்ளும் பெண்ணுக்குத்தான் பொறாமை உணர்ச்சி இருக்கின்றது என்ற உண்மைகள் புலப்படுகின்றன.

3. 2 3. 0. லக்ஷ்மி, சூடாமணி எனும் இரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் மரபுவழித் திருமணம், மரபு மீறிய திருமணம் இரண்டினையும் ஒப்பிட்டுக் காணலாம்.

மரபுத் திருமணம்

திருமண வகைகள்	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
முதல் திருமணம்	12	60	6	75	18	64. 29
மறுமணம்	8	40	2	25	10	35. 71
	20	100	8	100	28	100

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மரபு மீறிய திருமணம்

திருமண வகைகள்	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
முதல் திருமணம்						
ஒரே இனம்	7	70	6	54.54	13	61.90
வேறு இனம்	2	20	3	27.28	5	23.84
மறுமணம்						
ஆடவனின் மறுமணம்	1	10	—	—	1	4.76
பெண்ணின் மறுமணம்	—	—	2	18.18	2	9.50
மொத்தம்	10	100	11	100.00	21	100.00

ஒப்பீடு

மரபுத் திருமணம்	18*	46.2	விழுக்காடு
மரபு மீறிய திருமணம்	21	53.8	விழுக்காடு

மரபுத் திருமணத்தைவிட மரபு மீறிய திருமணத்தையே இரு படைப்பாளிகளும் மிகுதியாகச் சித்திரித்துள்ளனர். சிக்கல்கள்தாம் கதைக்குக் கருவாக முடியும். மரபு மீறிய திருமணங்களில் தாம் சிக்கல்கள் மிகுதியாகத் தோன்றமுடியும்; மரபு மீறிய திருமணத்தை இருபடைப்பாளிகளும் மிகுதியாகச் சித்திரிப்பதற்கு இதுவும் காரணம் எனலாம்.

லக்ஷ்மி மரபு மீறிய திருமணத்தைத் தம் நாவல்களில் மிகுதியாகக் காட்டினாலும் அக்கொள்கையில் இவருக்கு ஈடுபாடு இல்லை. தன் இளவயதில் இந்நாவல்கள் எழுதப்பட்டதால் கற்பனையின் துணையிலேயே இத்திருமணங்களைப் படைத்ததாகக் கூறுகின்றார். கதைகளின் முடிவு இன்பமாக

* மரபுத் திருமணத்தில் மறுமணம் கதைத்தலைவன் அல்லது கதைத்தலைவிக்கு நடைபெற்றதாகச் சித்திரிக்கப்படாததால் இங்கு அதன் எண்ணிக்கை கணக்கிடப்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லக்ஷ்மி நாவல்களில் திருமண வகைகள்



சூடாமணி நாவல்களில் திருமண வகைகள்



I. மரபுவழி முதல் திருமணம்
II. மரபுவழி மறுமணம்
III. மரபுமீறிய ஒரே இன முதல்மணம்
IV. மரபுமீறிய வேறு இன முதல் திருமணம்
V. மரபுமீறிய திருமணத்தில் ஆடவனின் மறுமணம்
VI. மரபுமீறிய திருமணத்தில் பெண்ணின் மறுமணம்

லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் திருமண வகை ஒப்பீடு



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடிய வேண்டும் என்ற குறிக்கோளும் அவருக்கு இருப்பதால் தடையில்லாத காதல் திருமணத்தை மிகுதியாகப் படைத்ததாகக் கூறுகின்றார். *

சூடாமணி மரபு மீறிய திருமணத்தை மிகுதியாகப் படைப்பதற்கு அக்கொள்கையில் அவருக்குள்ள ஈடுபாடு காரணம் எனலாம். ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு பின்னர் முடித்துக் கொள்ளும் திருமணமே வெற்றிபெறும் என்பது இவர் கருத்தாகக் காணப்படுகின்றது. T

இருவருடைய நாவல்களிலும் மரபுத் திருமணத்தில் திருமணவாழ்வு மிகுதியாகச் சித்திரிக்கப்படுகின்றது. மரபு மீறிய திருமணத்தில் திருமணமுறை தான் சித்திரிக்கப்படுகின்றதேயன்றி திருமணவாழ்வு சித்திரிக்கப்படவில்லை.

3. 2 4. 0. லக்ஷ்மி, சூடாமணி எனும் இரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் திருமண உறவுகளை ஆராயுங்கால் கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்படுகின்றன.

திருமணம் மரபுத் திருமணம், மரபு மீறிய திருமணம் என்று இருவகைப்படுத்தப்படுகின்றது. மரபுத் திருமணத்திற்கு மணமகன் தகுதி, பொருளாதார அடிப்படை, மணமகள் தகுதி, உறவு முறை ஆகியவை அடிப்படைக் காரணங்களாகின்றன மணமகன் அல்லது மணமகள் இசைவின்றிப் பெற்றோரின் வற்புறுத்தலினால் மரபுத் திருமணம் நடைபெறுவதை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; இத்திருமணத்தைத் தந்தையே வற்புறுத்துகின்றார். இவ்வகைத் திருமணத்தைச் சூடாமணி சித்திரிக்கவில்லை.

திருமணத்திற்கு முக்கியத் தடைகளாக வரதட்சிணையும் சீர்வரிசையும் காணப்படுகின்றன. மணமகன் வரதட்சிணைபற்றி நேரடியாகப் பேசுவதாக இரு படைப்பாளிகளின் நாவல்களும் சித்திரிக்கவில்லை. மணமகனின் தாயே வரதட்சிணைக்குச் சிறப்பிடம் கொடுக்கின்றாள். வரதட்சிணை கொண்டுவராத மருமகளைக் கொடுமைப்படுத்தும் மாமியாரை லக்ஷ்மி படைத்திருக்கின்றார். வரதட்சிணைக் கொடுமையை மட்டும் லக்ஷ்மி சித்திரிக்க, வரதட்சிணைக் கொடுமைச் சிக்கலுக்கான தீர்வையும் சூடாமணி காட்டுகின்றார். பெண்ணின் உடற்குறை பெற்றோர் முயற்சியின்மை, குடும்பத்தின் அவப்பெயர் முதலியன பெண்ணின் திருமணத்திற்குத் தடைகளாகக் காணப்படுகின்றன.

மனைவியை இழந்த ஆடவர் குழந்தை வளர்ப்புக்காகவும், மனைவி உயிருடன் இருக்கும் ஆடவர் மனைவிக்கு மகப்பேறின்மை, மனைவியின் உடல்நோய், மனைவியுடன் மனவேறுபாடு முதலிய காரணங்களுக்காகவும் மறுமணம் செய்து கொள்-

---

* 24.8.80 அன்று ஆய்வாளர் படைப்பாளியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

T 25.8.80 அன்று ஆய்வாளர் படைப்பாளியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றனர்; பெண்கள் வறுமை, பகட்டான வாழ்வில் ஆசை, இரக்கம் ஆகிய காரணங்களுக்காக இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட இசைகின்றனர். மறுமணத்திற்குத் 'தேவையும்', 'ஈர்ப்பும்' ஆண், பெண் ஆகிய இருவருக்கும் பொதுவான காரணங்களாகக் காணப்படுகின்றன. மறுமண வாழ்க்கையில் அமைதி இல்லை என்பதை இரு படைப்பாளிகளும் ஏற்கின்றனர். மாற்றாந்தாயின் கொடுமை மூத்த மனைவியின் பிள்ளைகளை வீட்டைவிட்டுத் துரத்தக் காரணமாகின்றது.

சமூகவியலார் எழுத்தாளர்களைப் போன்று மறுமணத்தால் விளையக்கூடிய விளைவுகளை விரிவாகப் பேசவில்லை.

மரபு மீறிய திருமணத்தில் ஓரினத் திருமணத்தை இரு படைப்பாளிகளும் ஆதரிக்கின்றனர். கலப்புத் திருமணத்தை லக்ஷ்மியைவிடச் சூடாமணி மிகுதியாகச் சித்திரிக்கின்றார். இரு படைப்பாளிகளும் மரபுத் திருமணத்தைவிட மரபு மீறிய திருமணத்தையே மிகுதியாகச் சித்திரிக்கின்றனர். லக்ஷ்மியைவிட, சூடாமணி மரபு மீறிய திருமணத்தை மிகுதியாகச் சித்திரிக்கின்றார். இவ்வேறுபாட்டிற்கு இரு படைப்பாளிகளின் கலைக்கொள்கைகள் காரணமாகக் காணப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Forwarded free of cost with
the compliments of ... of
education Govt. of India,
New Delhi.

3. 3. கணவன்-மனைவி உறவு

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

இவ்வியல் கணவன்-மனைவி உறவினைச் சிக்கல்கள் அடிப்படையில் ஆராய்கின்றது. தீர்ந்துவிடும் சிக்கல்கள், தீராச் சிக்கல்கள் என சிக்கல்கள் இருவகைப்படுத்தப்படுகின்றன. தீர்ந்துவிடும் சிக்கல்களுக்குக் கணவன், மனைவி, கணவனும மனைவியும், மற்றவர், கணவனும் மற்றவரும் ஆகியோர் காரணங்களாகக் காணப்படுகின்றனர்; கணவன், மனைவி ஆகியோர் தீராச் சிக்கல்களுக்குக் காரணமாகின்றனர் என்பதும் இங்கு ஆராயப்படுகின்றது. இரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் சிக்கல்களின் சித்திரிப்பின் வேறுபாட்டிற்குப் படைப்பாளிகளின் கலைக்கொள்கைகள் காரணமாக விளங்குவது இறுதியில் சுட்டப்படுகின்றது

3. 3. *கணவன்-மனைவி உறவு*

3. 3. 0. 1. தமிழ்ச் சமுதாயம் பெண்மக்களுக்கெனச் சில சமுதாயக் கட்டுப்பாடுகளை விதித்துள்ளது. அவர்களுடைய கடமைகள் (duties), உரிமைகள் (rights), எதிர்பார்ப்புகள் (expectations) ஆகியவற்றை வரையறை செய்துள்ளது (Theodore R. Sarbin, 1968, p. 498). திருமணமான பெண்கள் தம் வீட்டையே உலகமாக்கிக்கொண்டு தன் கணவன், தன் குழந்தைகள், தன் உறவினர் முதலிய அனைவருடைய நலன்களைப்பேணுவதைக் கடமையாகக் கொள்ள, ஆடவன் குடும்பத்தின் தேவைகளுக்கும், பாதுகாப்பிற்கும் பொறுப்பானவனாக இருப்பது இந்திய மரபுவழிச் சமுதாய அமைப்பாகும் (Promilla Kapur, 1978, p. 297).

இந்திய சமுதாய அமைப்பில் ஆணுக்குள்ள சொத்துரிமையும், சமுதாய மரபும் அவனை எப்பொழுதும் தலைமைத் தன்மை உடையவனாக வைத்திருக்கின்றது (M.S. Gore, 1968 p. 156) ; கணவன் குடும்பத்தலைவனாகவும், மனைவி அவனைச் சார்ந்து அவனுக்குக் கீழ்ப்படிந்து வாழ்கின்றவளாகவும் உள்ள குடும்ப அமைப்பே சமுதாயத்தில் காணப்படுகின்றது (Aileen D. Ross, 1973, p. 106). காலப்போக்கில் பெண்களுக்கு உயர்வளிக்கும் வகையில் சமுதாய, சட்ட, அரசியல் கொள்கைகளில் மாறுதல்கள் ஏற்பட்டன. எனினும் அவர்களுக்கென உறுதியளிக்கப்பட்டுள்ள

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உரிமைகள், சலுகைகள் (Privileges) ஆகியவற்றுக்கும் அவர்களது நடைமுறை வாழ்விற்கும் இடையே பெரிய இடைவெளி காணப்படுகின்றது. இன்றளவும் சமுதாயத்தில் ஆடவனே தலைமைத் தன்மை உடையவனாகவும் அத்தகுதிக்கு விரும்பப்படுகின்றவனாகவும் காணப்படுகின்றான். சமுதாயக் குறைபாடுகள், ஆடவனுடன் இணையாகக் கருதப்படாமை ஆகியவற்றால் ஒரு பெண் பல துன்பங்களை அனுபவிக்கின்றாள் (Promilla Kapur, 1978, pp 135-136).

நடைமுறை வாழ்க்கையில் பெண்களுக்கும் ஆண்களுக்கும் பொதுவாக விதிக்கப்பட்டுள்ள சமுதாய, ஒழுக்க விதிகள் பெண்களை இழிவுபடுத்துவதாகக் காணப்படுகின்றனவேயன்றி அவை ஆண்களை எவ்விதத்திலும் பாதிக்கவில்லை. எனவே, பெண்கள் ஆணின் தேவைகளையும், விருப்பங்களையும் நிறைவு செய்யக் கடமைப்பட்டவர்களாகவே இன்றளவும் கருதப்படுகின்றனர்.

குடும்ப அமைப்பில் கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் சமமாகவும் ஒருவருக்கொருவர் மதிப்பு கொடுப்பவராகவும் விளங்கவேண்டும். இத்தகு கணவனும் மனைவியும் இணைந்துவாழும் குடும்ப வாழ்க்கையே வெற்றிபெற்ற வாழ்க்கையாகக் கருதப்படுகின்றது.

3. 3. 0. 2. தான், தனிமனிதர் என்ற பாகுபாட்டிற்குள் இந்தியர் அடங்காதது இந்தியத் திருமணங்களின் மகிழ்ச்சியான வாழ்விற்கு ஒரு இன்றியமையாத காரணமாகும் (Margaret Cormack, 1961. p. 127). கணவன், மனைவி உறவில் ஒருமை (oneness) குறைந்துவிட்டால் அவர்களுக்கிடையே உள்ள உறவில் சிக்கல் ஏற்படுகின்றது.

3. 3. 0. 3. திருமணமானபின் ஓர் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே ஏற்படும் உறவு முறையே இங்குக் கணவன் மனைவி உறவு எனப் பேசப்படுகின்றது. திருமணமாகாமல் இணைந்து வாழும் ஆண்-பெண்-உறவுநிலை இங்குப் பேசப்படவில்லை.

3 3. 0. 4 கணவனின் தலைமைத்தன்மையை ஏற்றுக் கொள்ளும் குடும்பத்திலும், மனைவியின் ஆளுமையை ஏற்றுக் கொள்ளும் குடும்பத்திலும், இருவரும் ஒருவருக்கொருவர் இணையான உரிமை கொடுத்து வாழும் குடும்பத்திலும் கணவன்-மனைவி உறவில் சிக்கல் எழுவதில்லை; இந்நிலை மாறுபட்டால் கணவன்-மனைவி உறவில் சிக்கல் எழுகின்றது. இச்சிக்கல் காலப்போக்கில் மறைந்துவிடுகின்றது அல்லது மறையாது நின்று கணவன், மனைவி பிரிவிற்கு காரணமாக அமைகின்றது. கணவனோ, மனைவியோ அல்லது இருவருமோ இச்சிக்கலுக்குக் காரணமாகக் காணப்படுகின்றனர்; மற்றவர் தலையீடும் சிக்கலுக்குக் காரணமாகின்றது.

3 3. 1 0. லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவருடைய நாவல்கள் வழி கணவன்-மனைவி உறவினைச் சிக்கல்கள் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு இருவகைப்படுத்தலாம்:

1) தீர்ந்துவிடும் சிக்கல்கள்
2) தீராச் சிக்கல்கள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 3. 1. 1. *தீர்ந்துவிடும் சிக்கல்கள்*

தீர்ந்துவிடும் சிக்கல், குடும்பத்தில் கணவனாலோ மனைவியாலோ அல்லது மற்றவராலோ ஏற்பட்டுப் பின் மறைந்துவிடுகின்றது. இச்சிக்கலுக்குக் கணவன், மனைவி, கணவனும் மனைவியும், மற்றவர், கணவனும் மற்றவரும் காரணங்களாக அமைகின்றனர்.

3. 3. 1 1. 1. *கணவன் காரணம்*

குடும்பத்தை நடத்திச் செல்லுவதில் மனைவியுடன் இணைபங்கு உடைய கணவன் குடும்பச் சிக்கல்களுக்குக் காரணமாகின்றான். கணவனின் தீய நடத்தை, பண்பில் மாற்றம் முதலியன சிக்கலுக்குக் காரணங்களாகின்றன.

திருமணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ கணவனின் தீய நடத்தை சிக்கலுக்குக் காரணமாவதை இரு படைப்பாளிகளின் நாவல்களும் சித்திரிக்கின்றன. தீயநடத்தை என்பது பிற பெண்களுடன் அவன் கொண்டிருந்த, கொள்ளும் தொடர்பைக் குறிக்கின்றது.

3. 3 1. 1. 1. 1. *திருமணத்திற்கு முன்னர் தீய நடத்தை*

ஓர் ஆடவன் தன் திருமணத்திற்கு முன்பு ஒரு பெண்ணிடம் கொண்டிருந்த தொடர்பு திருமணத்திற்குப் பின்னர் மனைவிக்குத் தெரியவரும்பொழுது கணவன் - மனைவி உறவில் சிக்கல் தோன்றுகின்றது. லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவலும் சூடாமணியின் 'தீயினில் தூசு' நாவலும் இச்சிக்கலைக் குறிப்பிடுகின்றன.

'பெண்மனம்' நாவலில், திருமணத்திற்முன் இராமநாதன் மற்றொரு பெண்ணுடன் உறவு கொண்டிருந்தான் என்ற செய்தி அவன் மனைவி அம்புஜத்தைத் தாக்கியது; கணவனுடன் மன வேறுபாடு கொண்டு அம்புஜம் பிறந்த வீட்டிற்குச் சென்றுவிடுவதாக லக்ஷ்மி சித்திரிக்கின்றார் (ப. 224).

'தீயினில் தூசு' நாவலிலும் பழமையின் உறைவிடமான சுஜாதா தன் கணவனின் திருமணத்திற்கு முந்தைய நடத்தையை அறிந்ததும் அவன் நிழலே பாவத்தால் கறுத்திருப்பதாக எண்ணி (ப 89) கணவனைப் பிரிந்து தன் பிறந்த வீட்டிற்குச் சென்றுவிடுவதைச் சூடாமணி சித்திரிக்கின்றார்.

சிக்கலின் விளைவு

திருமணத்திற்கு முந்தைய உறவைத் தங்கள் மனைவியரிடம் மறைத்த இராமநாதனும் (பெண்மனம், ப 85), கார்த்திகேயனும் (தீயினில் தூசு, ப. 76) அதற்காக மனைவியரிடம் மன்னிப்பை வேண்டுகின்றனர். திருமணத்திற்குப் பின் மனைவியை அன்றி யாரையும் மனதாலும் எண்ணாத தம் கணவரைப் பிரிந்து சென்ற அம்புஜமும் சுஜாதாவும் அவர்களுடைய தோழியரின் அறிவுரையினால் மனம் திருந்தித் தத்தம் கணவரை மன்னிக்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமணத்திற்கு முன்னர் கணவன் தவறிழைத்திருந்தாலும், திருமணத்திற்குப் பின்னர் தன் மனைவியிடம் அவன் அன்பும் உண்மையும் கொண்டவனாக இருந்தால் அவனது முந்தைய நடத்தை மனைவியால் மன்னிக்கப்படவேண்டும் என்ற கருத்தை லக்ஷ்மி 'பெண்மனம்' நாவலில் (ப. 227) கூறுகின்றார். ''குற்றத்தோடு ஒருவரை ஏற்பதுதான், பிழைகளையும் சேர்த்துத் தாங்கிக் கொள்வதுதான் உண்மையான அன்பு அன்பின் வடிவமே மன்னிப்பு.'' எனச் சூடாமணி 'தீயினில் தூசு' நாவலில் (ப 94) சிக்கலின் தீர்வுக்கு வழி கூறுகின்றார்.

கணவன் திருமணத்திற்குப்பின் நன்னடத்தை உடையவனாக இருப்பதை மனைவியர் உணர்ந்திருந்ததனால் கணவன் மனைவி உறவில் தோன்றிய சிக்கல் மறைந்துவிடுகின்றது என்ற கருத்தை இரு படைப்பாளிகளும் தம் நாவல்களில் வலியுறுத்துகின்றனர்.

3. 3. 1. 1 1. 2. *திருமணத்திற்குப்பின் தீய நடத்தை*

திருமணத்திற்குப்பின் ஓர் ஆடவன் ஒரு பெண்ணிடம் கொள்ளும் தொடர்பும் கணவன்-மனைவி உறவில் சிக்கலை விளைவிக்கின்றது. இச்சிக்கலை 'அரக்கு மாளிகை' நாவலில் லக்ஷ்மி சித்திரிக்கின்றார். இந்நாவலில் தான் மணக்கவிருக்கும் யசோதா அழகற்றவள் எனத் தெரிந்தும் கைலாசம் பணத்திற்காக அவளை மணந்துகொள்கின்றான். அவன் தன் வீட்டுப் பணிப்பெண்ணிடம் தவறாக நடக்க முயற்சிப்பது அவனுக்கும் யசோதாவிற்குமிடையே சிக்கலைத் தோற்றுவிக்கின்றது

சிக்கலின் விளைவு

கைலாசம், தன் தவறான நடத்தையை நேரிடையாகக் கண்டுவிட்ட யசோதாவிடம் தன் நடிப்புத் திறனைக் காட்டிப் பணிப்பெண்ணின்மீது பழியைப் போடுகின்றான். அவனது நடிப்பை உணர்ந்துகொண்டும் கணவனைக் கண்டிக்காது அவன மனைவி பணிப்பெண்ணைத் துரத்திவிடுகின்றாள்.

வேலையற்ற கைலாசத்திற்கு மனைவியை விட்டால் வேறு வழியில்லை; அழகற்ற யசோதாவிற்கும் அழகான கைலாசத்தின் அன்பு மிகத் தேவை. எனவே, இருவருக்குமிடையே உள்ள 'தேவை உணர்வு' சிக்கலைத் தீர்த்துவிடுகின்றது

3. 3 1. 1. 1. 3. *கணவனது பண்பில் மாற்றம்*

மனைவியின் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்றவாறு நடந்து கொள்ளும் கணவனுடைய பண்பில் திடீரென மாற்றம் காணப்படுகின்றது. மனைவியை மதிக்காதவனாக அவன் மாறுகின்ற பொழுது மாற்றத்தை ஏற்கமுடியாத மனைவிக்கும் கணவனுக்கும் இடையே மன வேறுபாடு தோன்றுகின்றது. லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்' கணவனுடைய பண்பில் ஏற்படும் மாற்றத்தால் கணவனுக்கும் அவன் மனைவிக்குமிடையே ஏற்படும் சிக்கலைச் சித்திரிக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மிதிலா விலாஸ்' நாவலில் தன் மனைவி மைதிலியின் அழகில் மயங்கி அவளுக்கு அடிமையாக வாழ்ந்துவந்த சந்திர-சேகரன் கூட்டுக்குடும்பத்தைவிட்டுத் தனிக்குடும்பத்திற்குச் சென்றபின்னர் மாறிவிடுகிறான் தன் விருப்பம்போல சந்திர-சேகரனை ஆட்டிவந்த மைதிலிக்கு இது அதிர்ச்சியைக் கொடுக்க இருவருக்குமிடையே பூசல் ஏற்படுகின்றது (ப. 351).

சிக்கலின் விளைவு

கூட்டுக்குடும்பத்தில் குடும்பப் பெரியவர்களுடன் இணைந்து, தன் தொழிலைக் கவனித்துக்கொண்டிருந்த சந்திரசேகரனுக்குத் தனித்த வாழ்வும், தனியாகத் தொழிலைப் பார்க்கவேண்டிய நிலையும், தொழிலில் ஏற்பட்ட பொருள் இழப்பும் அவன் பண்பை மாற்றப் போதுமான காரணங்களாகக் காணப்படுகின்றன. சந்திர-சேகரன் மனைவி தன் உரிமையில் தலையிடுவதை வெறுக்கின்-றான். ''பொறுமை ஒன்றுதான் இதற்குத் தேவை. எத்தனை நாள் இப்படித் துள்ளிக் குதிக்கப் போறான்? ஆத்திரப்படாமல் அவன் போன போக்கில் கொஞ்சம்நாள் விட்டுப்பிடி. சரியாகி விடுவான்,'' (ப 353) என இச்சிக்கலுக்கான தீர்வை மைதிலி-யின் மாமியார்வழி புலப்படுத்துகின்றார் லக்ஷ்மி. நாளடைவில் சிக்கல் தீர்ந்து மீண்டும் இருவரிடையேயும் ஒற்றுமை நிலவு-கின்றது.

3. 3. 1. 1. 4. தோன்றி மறையும் சிக்கலுக்குக் கணவனு-டைய திருமணத்திற்கு முந்தைய நடத்தை, கணவனுடைய திருமணத்திற்குப் பிந்தைய நடத்தை, கணவனுடைய பண்பில் மாற்றம் முதலிய காரணங்களுள், கணவனுடைய திருமணத்-திற்கு முந்தைய நடத்தையால் ஏற்படும் சிக்கலை மட்டுமே சூடாமணி சித்திரிக்கின்றார். லக்ஷ்மி மூன்று காரணங்களை-யுமே தம் நாவல்களில் காட்டுகின்றார்.

3. 3 1. 1. 2. 0. *மனைவி காரணம்*

ஒரு மனைவி தன் கணவனின் மறுபாதியாகவும், அவன் நண்பர்களில் சிறந்தவளாகவும், அவனுடைய செல்வம், மகிழ்ச்சி, நன்மை அனைத்திற்குக் காரணமாகவும், குடும்பத்தின் நிலை-பேறுக்குக் காரணமாகவும் விளங்கவேண்டும். கணவனுக்கு வாழ்-வில் வெறுப்பு ஏற்படுகையில் அறிவுரை கூறுவதில் தந்தையாக-வும், துன்பம் ஏற்படுகையில் ஆறுதல் கூறுவதில் தாயாகவும் மனைவி விளங்குவதாலேயே அவள் மனிதனின் வாழ்வில் சிறந்த இடத்தைப் பெறுகின்றாள் (Margaret Cormarek, 1961, p. 127). மனைவிக்கெனச் சமுதாயம் விதித்துள்ள இந்நிலையினின்று அவள் பிறழும்பொழுது கணவன்-மனைவி உறவில் சிக்கல் எழுகின்றது; சிக்கலுக்குக் காரணமாக மனைவி அமைகின்றாள். மனைவியால் எழும் சிக்கல்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1) கணவனிடம் கொள்ளும் ஐயம்
2) மனைவியின் தன்முனைப்பு
3) திருமணத்திற்குமுன் மனைவி மற்றொருவனிடம் கொண்டிருந்த காதல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 3. 1. 1. 2. 1. *கணவனிடம் கொள்ளும் ஐயம்*

அன்பாக இணைந்துவாழும் கணவன் மனைவியரிடையே கணவனின் மீது மனைவிக்கு ஐயம் தோன்றுகிறது. இந்த ஐயம் கணவன் மனைவி உறவைப் பாதிக்கின்ற முறையை லக்ஷ்மியின் 'பவானி' நாவல் காட்டுகின்றது

'பவானி' நாவலில் டிப்டி சூப்பிரண்டண்டு, சிவஞானம் பிள்ளை ஒரு கொள்ளைக்காரனைப் பிடிப்பதற்காக அடிக்கடி தாசி வீட்டிற்குச் செல்கின்றார். கொள்ளைக்காரனின் நினைவாகவே சிவஞானம்பிள்ளை இருப்பது அவர் மனைவி நீலயதாட்சிக்கு கணவன் தாசிமீது நினைவாக இருப்பதுபோல் தோன்றியது. கணவனுக்கும் தாசிக்குமிடையே தொடர்பு இருப்பதாக எண்ணி அவள் கொள்ளும் ஐயம் இருவரிடையேயும் சிக்கலைத் தோற்றுவிக்கிறது.

'பவானி' நாவலில் சிவஞானம்பிள்ளை மகள் பவானியும் தன் கணவன் டாக்டர் சுந்தரவதனத்தின் நடத்தையில் ஐயம் கொள்கின்றாள். சுந்தரவதனம் மருத்துவமனையிலேயே தாதியின் துணையுடன் நடத்தும் மருத்துவ ஆராய்ச்சியும் அதன் விளைவாகச் சுந்தரவதனம் நேரம் கழித்து வருவதும் பவானியின் மனதில் ஐயத்தைத் தோற்றுவிக்கின்றன. இந்நாவலில் நீலயதாட்சியும், பவானியும் தத்தம் கணவன்மாரிடம் கொள்ளும் ஐயம் காரணமற்றதாகக் காணப்படுகின்றது; இருவரும் கணவன்மார் தத்தம் கடமையில் ஆழ்ந்திருப்பதை உணராது அவர்களைத் தவறாகக் கருதுகின்றனர்.

சிக்கலின் விளைவுகள்

சிவஞானம்பிள்ளையின் மனைவி கணவன் மீது கொண்ட ஐயத்தினால் அவருடன் வாழப்பிடிக்காது தற்கொலை செய்து கொள்கின்றாள். பவானி கணவனுடன் மனவேறுபாடு கொண்டு பிறந்த வீட்டிற்கு வந்துவிடுகின்றாள். தன் இறந்துவிட்ட மகனையே கணவன் மறந்துவிட்டான் என வருந்திய பவானி மகன் இறந்த நாளன்று மகனின் சமாதியருகே தன் கணவனைக் காண்கின்றாள். கணவன் கூறும் காரணங்களையும், கணவனுடன் வந்த மருத்துவதாதியின் முதுமையையும் கண்டபின் அவள் ஐயம் விலகுகின்றது. ''வாழ்க்கையில் நாம் ஒருவரை ஒருவர் நம்பித்தான் ஆக வேண்டும் எதற்கும் சந்தேகமென்றால் உயிர்வாழ்வது சாத்தியமா?'' (ப.190) என்று நம்பிக்கைதான் சந்தேகத்திற்கு மருந்து என லக்ஷ்மி பவானியின் தந்தை வழி விளக்குகின்றார்.

3. 3. 1. 1. 2 2. *மனைவியின் தன்முனைப்பு* (Ego)

தன் பணத்தாலும், அழகாலும், பிடிவாதத்தாலும் பெண்கள் தன்முனைப்புப் பெறுகின்றனர். பெண்களுக்கு இயற்கையாக உள்ள தற்காதல், (Narcissism) பணம், அழகு இவற்றால் மிகுதியாகித் தன்முனைப்பாக மாறுகின்றது எனலாம் பெண்களின் தன்முனைப்பு அவர்கள் இல்வாழ்க்கையைச் சிதைக்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லக்ஷ்மியின் 'மரகதம்', 'ஸ்ரீமதி மைதிலி' ஆகிய நாவல்களும், சூடாமணியின் 'புன்னகைப் பூங்கொத்து' நாவலும் பெண்களின் தன்முனைப்பினால் கணவன்-மனைவி உறவில் சிக்கல் எழுவதைக் காட்டுகின்றன.

'மரகதம்' நாவலின் கதைத்தலைவி மரகதம், பெற்றோர் நிச்சயித்த கட்டாயத் திருமணத்திலிருந்து தன்னை மீட்ட சிவராஜனை மணந்துகொள்கின்றாள். மிகச் செல்லமாக வளர்க்கப்பட்ட மரகதத்தின் பிடிவாதம் கணவனின் அன்பைப் புரிந்துகொள்ளத் தடைசெய்கின்றது. அவளுடைய தன்முனைப்பு அவளைக் கணவனிடமிருந்து பிரித்துவிடுகின்றது.

'ஸ்ரீமதி மைதிலி' நாவலில் பணக்காரவீட்டுப் பெண்ணான பத்மினி படித்தவள்; கணவன் வீட்டாரால் உயர்வாக வைத்துக்கொள்ளப்படுகின்றாள்; கணவனைத் தன் விருப்பம்போல் ஆட்டிவைக்கின்றாள். கணவனின் குடும்பத்தில் நிலவும் வறுமையும், கணவனின் உடல்நலக் குறைவும், அதன் காரணமாக ஏற்பட்ட குடும்பப்பொறுப்பும் பத்மினியின் மனநிலையைப் பாதிக்கின்றன. அந்நிலையிலேயே கணவனை விட்டுவிட்டு, பத்மினி பிறந்த வீட்டிற்கு வந்துவிடுகின்றாள். மனைவியின் உண்மைப்பண்புகளை உணர்ந்துகொண்ட கணவன் அவளை வெறுக்கின்றான்.

'புன்னகைப் பூங்கொத்து' நாவல் காட்டும் சைலஜா நல்ல அழகி; தந்தையின் செல்லப்பெண். குடும்பத்தாரால் முதலிடம் கொடுத்து வளர்க்கப்படுகின்றாள்; அவளது திருமணம் அவள் விருப்பப்படியே காதல் திருமணமாக முடிகின்றது. சைலஜாவின் அழகில் மயங்கி மணந்துகொண்ட மதுசூதனன் திருமணத்திற்குப் பின்னர் அவள் தன்னுடையவள் என்ற மன அமைதியில் புறவாழ்க்கையில் ஈடுபடுகின்றான். காதல் வாழ்க்கையில் தன்னைப் புகழ்ந்துகொண்டிருந்த மதுசூதனன், திருமணத்திற்குப் பின்னர் புகழாமல் இருந்தது சைலஜாவின் தன்முனைப்பைப் பாதிக்கின்றது; அவளை மனநோயாளியாகவும் மாற்றுகின்றது. சைலஜாவின் தன்முனைப்பால் அவளது இல்லற வாழ்வு பாதிக்கப்படுவதைச் சூடாமணி இந்நாவலில் சித்திரிக்கின்றார்.

சிக்கலின் விளைவுகள்

'மரகதம்' என்ற நாவலில் கணவனைவிட்டு ஓடிவந்த மரகதத்தைப் பிறந்த வீட்டாரும் மதிக்கவில்லை; புகுந்தவீட்டாரும் மதிக்கவில்லை; இந்நிலையில்தான் மரகதம் கணவனின் அன்பை உணர்கின்றாள் (ப. 88). ''ஒரு பெண்ணிற்கு வேண்டியது கணவனின் அன்பு,'' (ப. 99) என்பதை மரகதம் உணர்ந்து கொண்டதால் சிக்கல் விலகிவிடுகின்றது என லக்ஷ்மி காட்டுகின்றார்.

'ஸ்ரீமதி மைதிலி' நாவலில் கணவனின் உடல்நிலை கண்டு சிறிதும் இரக்கப்படாது அவனை விட்டுவிட்டு ஓடிவந்த பத்மினிக்கு உலகம் கணவனை விட்டுப் பிரிந்துவந்த தன்னை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நடத்தும் முறையைக் கண்டு அறிவு வருகின்றது (ப. 308). தன் தவறை உணர்ந்த பத்மினி கணவன் வீட்டிற்குத் திரும்பிச் செல்கின்றாள்.

பெண்களின் தன்முனைப்பினால் எழும் கணவன்-மனைவி உறவுச் சிக்கலில் பெண்களின் தன்முனைப்பு அழிவதற்கு அவர்கள் உலகில் படும் துன்பங்களைக் காட்டி, அவற்றின்வழிப் பெண்கள் தங்கள் நிலையையும், அதற்கான காரணத்தையும் உணரும்படிக் கதைப்போக்கினை அமைத்துக்காட்டுகின்றார் லக்ஷ்மி. இத்தகைய கதைப்போக்கினை ஓர் உத்தியாக லக்ஷ்மி பயன்படுத்துகின்றார். 'ஸ்ரீமதி மைதிலி' நாவல்வழி லக்ஷ்மி, ''தாம்பத்திய வாழ்க்கையில் ஈடுபட்டபின்னர் சுகம், துக்கம் இரண்டையும் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளத் தயாராக இருக்கவேண்டும். கொள் என்றபோது வாயைத் திறந்துவிட்டு, கடிவாளம் என்றதும் வாயை மூடிக்கொள்ள முடியுமா?'' (ப. 304) என்று கணவனை விட்டு ஓடிவந்து விடும் பெண்களுக்கு அறிவுரை கூறுகின்றார்.

சூடாமணி பெண்களின் தன்முனைப்புச் சிக்கலை உளவியல் நோக்கிலேயே சித்திரிக்கின்றார். கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து கொண்டுவிட்டால் இச்சிக்கல் எழ வாய்ப்பில்லை என்ற கருத்தைப் 'புன்னகைப் பூங்கொத்து' நாவலில் அறிவுறுத்துகின்றார். கணவன் தன்னைவிட்டு மற்றொருத்தியை நாடிச்செல்ல முடியும் என்ற உண்மையை உணரும்பொழுது மனைவியின் தன்முனைப்பு அழிகின்றது.

பெண்களின் தன்முனைப்புக்கு அவர்கள் வளர்க்கப்படும் முறை காரணமாகின்றது எனலாம். மரகதம் அவளுடைய பெற்றோர்க்கு ஒரே மகள்; நினைத்ததை அடைந்துவிடுபவள்; தாய் தந்தையின் செல்லமகள். இவை அவளைத் தன்முனைப்பு உடையவளாக்குகின்றன. தாய் தந்தையற்ற பத்மினி அவளுடைய அண்ணனுக்குச் செல்லத்தங்கை; செல்வ வளமும், அண்ணன் அளிக்கும் சலுகைகளும் அவளைத் தன்முனைப்பு உடையவளாக்குகின்றன. சைலஜா அவளுடைய பெற்றோரின் மூத்த மகள்; நல்ல அழகி; தந்தையின் செல்லமகள்; வீட்டில் எல்லாவற்றிலும் முதலிடம் பெறுபவள்; நினைத்ததை அடைபவள்; இவையே இவளுடைய தன்முனைப்புக்குக் காரணமாகின்றன. எனவே மரகதம் பத்மினி, சைலஜா ஆகியோரின் வளர்ப்புச் சூழல், தன்முனைப்புக்குக் காரணமாகியது என்பது புலப்படுகின்றது.

3. 3. 1. 1. 2 3. *திருமணத்திற்கு முன் மனைவி மற்றொருவனிடம் கொண்டிருந்த காதல்*

ஒரு பெண் தனது திருமணத்திற்குமுன் ஒருவனை விரும்பி, அவனை மணந்து கொள்ள இயலாது மற்றொருவனை மணந்துகொள்கின்றாள்; அந்நிலையில் அவளுடைய முந்தையக் காதல் அவளுடைய இல்லறவாழ்வில் சிக்கலை எழுப்புகின்றது. லக்ஷ்மியின் 'மாயமான்' என்ற நாவலும், சூடாமணியின் 'ஆழ்கடல்' என்ற நாவலும் இவ்வகைச் சிக்கலைச் சித்திரிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மாயமான்' நாவலில் தன் அத்தைமகனை மணக்க விரும்பிய வசந்தா சூழலால் ஸ்ரீதரனை மணக்க நேரிடுகின்றது; அத்திருமணத்தை அத்தைமகனுக்குத் தான் இழைக்கும் துரோகமாகவே கருதுகின்றாள். தனது காதல் ஒருதலைக் காதல் என்பதை உணராத வசந்தா தன கணவன் ஸ்ரீதரனிடம் அன்பு பாராட்டாமலேயே இருப்பது இருவரிடையே சிக்கலைத் தோற்றுவிக்கின்றது.

சூடாமணியின் 'ஆழ்கடல்' நாவலில், படத்தயாரிப்பாளர் நந்தகுமாரை மணந்துகொள்கின்றாள் நடிகை அமலா அவள் நடிகையாவதற்குமுன் கிராமத்துப் பொன்னம்மாவாக இருக்கும் பொழுது கவர்ச்சியைக் காதல் என எண்ணி வாழ்ந்தாள். அவளது முந்தைய வரலாறு தெரிந்த ஒருவன் அவள் முன்பு தன் காதலனுக்கு எழுதிய கடிதங்களைக் காட்டிப் பணம் பறிக்க முயல்கின்றான். இச்சூழ்ச்சியைத் தெரிந்துகொண்ட நந்தகுமாருக்கும் அமலாவிற்கும் இடையே மனவேறுபாடு தோன்றுகினறது.

சிக்கலின் விளைவுகள்

மனைவியின் முந்தைய காதல்பற்றி அறிந்திராத ஸ்ரீதரன் அவள் கடமை உணர்ச்சியுடன் தான் தன்னை மணந்து கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்து அவள் விருப்பப்படியே விலகி வாழ்கின்றான். வசந்தாவிற்கும ஸ்ரீதரனைத் தான் மணந்தது நியாயமே என்று அவளுடைய மனம் சமாதானமடையும்வரை அவளுடைய மனதில் ஸ்ரீதரன்பால் அன்பு கனிய வழி இல்லை (ப.82). தன் அத்தை மகனை அவன் மனைவியுடன் கண்டபிறகே வசந்தா தன்னுடைய காதலை ஒருதலைக் காதல் என்று உணர்கின்றாள். ''ஒருபெண்ணை அவளுக்காக மதித்து மணந்து கொள்வதை விட்டு அவளுடைய சொத்தையும் அந்தஸ்தையும் மதித்து ஒரு மனிதன் மணந்து கொள்வது அந்தப் பெண்ணிற்கு எத்தனை துர்பாக்கியம்'' என்று அத்தைமகனின் செயல் குறித்து அருவெறுப்பு அடைந்த வசந்தா, தன்னைத் தனக்காகவே மணந்துகொண்ட ஸ்ரீதரனின் அன்பைப் புரிந்துகொள்கின்றாள் என்று 'மாயமான்' நாவலில் லக்ஷ்மிகாட்டுகின்றார் (ப. 87).

'ஆழ்கடல்' நாவலில் தன்னை மணந்துகொண்ட பின்னர் அமலாவின் முழுமை அன்பை நந்தகுமார் நன்கு புரிந்துகொண்டதால் ''நான் மணந்து கொண்டது, அமலாவை, பொன்னம்மாளை அல்ல,'' (ப. 58) என்று கூறி நந்தகுமாரே சிக்கலைத் தீர்த்துவிடுகின்றார்.

'மாயமான்', 'ஆழ்கடல்' ஆகிய இரு நாவல்களிலும் தமது முந்தைய காதல் நடவடிக்கைகள் கணவனுக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ என மனைவியர் அஞ்சுகின்றனர்; நாவல்களில் அவர்களுடைய அகப்போராட்டம் (internal conflict) மிகுதியாகச் சித்திரிக்கப்படுகின்றது. வசந்தாவின் (மாயமான்) கணவனுக்கு அவளது முந்தைய காதல் தெரியாது; அமலாவின் (ஆழ்கடல்) கணவனுக்கு மனைவியின் முந்தைய காதல் தெரிந்திருந்தும் அவர் அதனைப் பெரிதாகக் கருதவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மாயமான்' நாவலில் மனைவியின் காதலைத் தெரிந்து கொள்ளாதிருக்கும் கணவனால் சிக்கல் எழுவதில்லை; தன் காதலை எண்ணிய மனைவியே சிக்கலுக்குக் காரணமாகின்றாள் என லக்ஷ்மி இச்சிக்கலை விளக்குகின்றார்.

தன் மனைவி திருமணத்திற்குப்பின் தன்னிடம் காட்டும் உண்மையான அன்பின் மேல் நம்பிக்கை வைத்து, அவளது முதற்காதலைத் தவறாகக் கருதாத கணவனைச் சூடாமணி 'ஆழ்கடல்' நாவலில் காட்டுகின்றார். இந்நாவலில் மனைவியின் உள்ளத்தில் எழும் அகப்போராட்டம் மிகுதியாகச் சித்திரிக்கப்படுகின்றது; தன் கணவன் தன்னை விலக்கிவிடுவானோ என எண்ணும் மனைவியே சிக்கலுக்குக் காரணமாகின்றாள்.

ஒருவனை ஆழமாகக் காதலிப்பதற்குமுன் ஒரு பெண்ணின் உடலோ உள்ளமோ மாசுபட்டிருந்தால் தவறில்லை; காதலனிடம் உண்மையான அன்பு கொண்டவளாயிருந்தால் போதும் என்ற கருத்தினைச் சூடாமணி வலியுறுத்துவதை அவரது 'மானிட அம்சம்', 'மனத்துக்கினியவள்' ஆகிய நாவல்களும் புலப்படுத்துகின்றன (காண்க : 3. 1. 1. 1. 2).

ஆடவன், பெண் எனும் இருவரது திருமணத்திற்கு முந்தைய காதலை ஒப்பிட்டுக் காணும்பொழுது, கணவனது முந்தைய காதலை உணர்ந்த பெண் கணவனை வெறுத்துப் பிறந்தவீடு செல்கின்றாள். ஆனால் மனைவியின் முந்தைய காதலை அறிந்த கணவன் அவளது தற்போதைய காதலை மட்டும் புரிந்து கொண்டு முந்தைய காதலை மறந்து விடுகின்றான். எனவே, ஆடவன் பெண்ணிடம் காட்டும் அன்பை உயர்ந்த நிலையில் வைத்து சூடாமணி காட்ட விரும்புகின்றார் என்பது புலப்படுகின்றது.

3. 3. 1. 1. 3. 0. *கணவன்-மனைவி இருவருமே காரணம்*

கணவன் மனைவிக்கிடையே ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ளாத தன்மை, விட்டுக்கொடுக்காத மனப்பான்மை முதலியன இருவரிடையே சிக்கல் எழக் காரணமாகின்றன. லக்ஷ்மியின் 'பவானி', 'பெண்மனம்', 'மிதிலா விலாஸ்', 'லட்சியவாதி' ஆகிய நாவல்கள் இச்சிக்கலைச் சித்திரிக்கின்றன. மணமகன் / மணமகள் இசைவின்றிப் பெற்றோரால் நடத்தப்படும் திருமணம், கணவன் தன் குடும்பச் செய்திகளை மனைவியிடம் மறைப்பது ஆகியவை சிக்கல் எழக் காரணமாகின்றன.

3. 3. 1. 1. 3. 1. *மணமகன் / மணமகள் இசைவின்றிப் பெற்றோரால் நடத்தப்பெறும் திருமணம்*

இருமனம் இயைந்து நடைபெற வேண்டிய இல்லறமாகிய நல்லறம் பெற்றோரால் சீர்குலைகின்றது. தன் மக்களின் நல்வாழ்வை விரும்ப வேண்டிய தந்தை அவர்களின் இசைவு பெறாமலேயே திருமணத்தை நிச்சயிக்கின்றார்; இதனால் இன்பத்தைத் தரவேண்டிய இல்லற வாழ்க்கை மணமக்களுக்குத் துன்பத்தைத் தருகின்றது. மனம் இசைந்து போகாத இருவர் நடத்தும் இல்வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லக்ஷ்மி, 'பவானி' நாவலில் ஷண்முகத்தின் விருப்பத்திற்கு மாறாக நடத்தப்பட்ட அவனது திருமணம் இல்லறவாழ்க்கைக் குலைவிற்குக் காரணமாவதைச் சித்திரிக்கின்றார். அத்திருமணத்தை வெறுத்த ஷண்முகம் திருமண நாளன்றே வீட்டைவிட்டு ஓடிவிடுகின்றான்.

இந்நாவலில் சிக்கலுக்கு அடிப்படைக் காரணம் அவனுடைய பெற்றோராகக் காணப்படுகின்றனர். எனினும், ஷண்முகத்திற்குத் திருமணத்தை நிறுத்தத் துணிவு இல்லை; ஷண்முகம் தன்னை விரும்பவில்லை என்பதை உணர்ந்திருக்கும் வனஜா அவனை மணக்கத் துணிவதும் அவள் செய்த தவறு எனலாம் கணவன்-மனைவி இருவரிடையே இல்லாத மனத்துணிவு சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. ஷண்முகம் திருமணத்திற்கு முன்னரேயே ஓடியிருந்தால் சிக்கல் எழக் காரணமில்லை.

'பெண்மனம்' நாவலிலும் இச்சிக்கல் காணப்படுகின்றது. தீயவனான ஜகந்நாதனை மன விருப்பமின்றித் தந்தையின் வற்புறுத்துதலால் மணக்கிறாள் சந்திரா. அவள் தன்னை விரும்பவில்லை என்பதைத் தெரிந்து கொண்டே அவளை மணக்கும் ஜகந்நாதன், பின்னர் நல்லவனாகியும் மனைவியின் எண்ணத்தை மாற்ற முடியாதவனாகக் காணப்படுகிறான். கணவனின் நற்பண்புகளைப் புரிந்து கொண்ட பின்னரும் சந்திரா ஜகந்நாதன் மேல் கொண்டிருந்த காதலை வெளியே காட்டிக் கொள்ளாமல் இருப்பது சிக்கலை வளர்க்கின்றது.

'பவானி', 'பெண்மனம்' ஆகிய நாவல்களில் காணப்படும் இச்சிக்கலைச் சிறிதளவு மாற்றத்துடன் லக்ஷ்மி 'மிதிலா விலாஸ்' நாவலில் சித்திரிக்கின்றார். தீய நடத்தையின் காரணமாக யாருமே பெண் தர அச்சப்படும் ஜெயராமனுக்குத் தன் வறுமையின் காரணமாகச் சியாமளா மனைவியாகின்றாள். ஜெயராமனுக்கு மனைவியிடத்து அன்பில்லை. சியாமளா கணவனின் வெறுப்பையும், முரட்டுக் குணத்தையும் கண்டு அஞ்சி ஒதுங்கிவிடுகின்றாளேயன்றி அவனைத் திருத்த முயற்சி செய்யவில்லை. ''பிடிக்காத புருஷனுக்கு வாழ்க்கைப்படுவதைவிட பாழுங்கிணற்றில் போய் விழுந்துவிடலாம்'' (ப. 144) என்ற சியாமளாவின் கூற்றின் வழியாகக் கணவன்-மனைவி உறவுச் சிக்கலை அறிந்து கொள்ள முடிகின்றது.

காலப்போக்கில் வனஜாவின் நல்ல பண்புகளையும் தன் தவறையும் உணர்ந்து ஷண்முகம் திருந்துகிறான் (பவானி). ஜகந்நாதன் தன்னிடம் செலுத்தும் உண்மையான அன்பைப் புரிந்து அவனிடம் அன்புசெலுத்துகின்றாள் சந்திரா (பெண்மனம்). தந்தையின் இறப்பினால் குடும்பப் பொறுப்பினைத் தாங்க வேண்டிய ஜெயராமன் தனக்குப் பக்கத்துணையாக நிற்கும் சியாமளாவின் அன்பைப் புரிந்து கொள்கின்றான். (மிதிலா விலாஸ்); கணவனும் மனைவியும் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டதால் சிக்கல் விலகுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 3. 1. 1. 3. 2. *கணவன் தன் குடும்பச் செய்திகளை மனைவியிடம் மறைப்பது*

கணவனும் மனைவியும் ஒருவருக்கொருவர் உண்மையுடன் நடந்து கொள்ள வேண்டிய இல்லறவாழ்வில் (Aileen D. Ross, - 1973, p. 155) குடும்ப நிகழ்ச்சிகளை ஒருவரிடம் இருந்து ஒருவர் மறைப்பதனால் கணவனுக்கு மனைவியிடமும் மனைவிக்குக் கணவனிடமும் ஐயம் எழ வாய்ப்பு ஏற்படுகின்றது. 'லட்சியவாதி' நாவலில் லக்ஷ்மி இச்சிக்கலைச் சித்திரிக்கின்றார். இந்நாவலில் தன் அண்ணன் ஒரு மலைஜாதிப் பெண்ணைக் காதலித்து ஒரு குழந்தைக்குத் தந்தையானதையும், அண்ணனின் இறப்பிற்குப் பின்னர் அவர்கள் தங்கள் பாதுகாப்பில் இருப்பதையும் நாகராஜன் தன் மனைவி கீதாவிடம் மறைப்பது கணவன்-மனைவி உறவில் சிக்கலை எழுப்புகின்றது.

சிக்கலின் விளைவுகள்

நாகராஜன் தன் குடும்பச் செய்தியை மறைப்பது கீதாவிற்கு அவனுடைய ஒழுக்கத்தின்மீது ஐயத்தைத் தோற்றுவிக்கின்றது. அவனும் கீதா தன்மீது ஐயம் கொண்டபொழுதே அதனைத் தீர்த்திருந்தானெனில் சிக்கல் எழுந்திராது. அதனால் தன் குடும்ப கௌரவம் பாதிக்கப்படுமோ என்ற அவனுடைய அச்சம் உண்மையை மனைவியிடம் மறைக்கத் தூண்டுகின்றது. கீதாவும் பொறுமையாக இதுபற்றி எண்ணியிருந்தால் சிக்கல் தோன்றியிராது. கணவனது ஒழுக்கத்தில் தான் கொண்ட ஐயத்தை மற்றவரிடம் வெளிப்படுத்திச் சிக்கலைக் கீதா வளர்க்கின்றாள். நாகராஜனின் அண்ணன் காதலி வழியாகக் கீதா உண்மையை உணரும்பொழுது சிக்கல் விலகுகின்றது.

கணவன், மனைவி இருவரும் வெளிப்பார்வைக்கு வேறுபட்டவர்கள்; மனதால் ஒன்றுபட்ட அவர்களுக்கிடையே ரகசியம் ஏதும் இருக்கக்கூடாது; வாழ்க்கையின் உண்மை லட்சியமே இதுதான் (ப. 327) எனக் கணவன் மனைவியருக்கு இடையே இருக்க வேண்டிய மன இடைவெளியின்மையை 'லட்சியவாதி' நாவலின் வழியாக லக்ஷ்மி விளக்குகின்றார்.

3. 3. 1. 1. 4. 0. *மற்றவர் காரணம்*

கணவன் மனைவி உறவுச் சிக்கல்களுக்கு மற்றவர் குறிக்கீடும் காரணமாகின்றது. ஒற்றுமையான கணவன் மனைவி உறவில் மற்றவர் நுழைவு சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்', 'சூர்யகாந்தம்' ஆகிய நாவல்கள் மற்றவர் குறுக்கீடினால் கணவன் மனைவி உறவில் சிக்கல் தோன்றுவதை விளக்குகின்றன.

'நாயக்கர் மக்கள்' நாவலில் ரேவதி தான் முன்பு காதலித்த பாஸ்கரனைத் தன் உறவுப் பெண் சித்ரா மணப்பதை வெறுத்து, அவனைப் பழிவாங்குவதற்காக அவனைப்பற்றிப் பலவாறு கூறிச் சித்ராவின் மனதைக் குழப்புகின்றாள். தன்னை வெறுக்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கும் சித்ராவின் மனதை, பாஸ்கரன் வேறுவிதமாகப் புரிந்து கொள்கின்றான். பாஸ்கரனும் சித்ராவும் ஒருவர்மீது ஒருவர் ஐயம்கொண்டு பிரிந்து வாழ்வதற்கு ரேவதி காரணமாகின்றாள்.

சிக்கலின் விளைவு

ரேவதியே இறுதியில் தன் தவறை உணர்ந்து, பாஸ்கரனிடமும் சித்ராவிடமும் உண்மையைக் கூறிவிடுவதால் சிக்கல் விலகுகின்றது என 'நாயக்கர் மக்கள்' காட்டுகின்றது.

3. 3. 1. 1. 5. 0. *கணவனும் பிறரும் காரணம்*

இன்பத்திலும் துன்பத்திலும் மனைவியைக் காக்கவேண்டிய கணவனே பிறருடன் சேர்ந்து கணவன் மனைவி உறவுச் சிக்கலுக்குக் காரணமாவதை லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு' நாவல் காட்டுகின்றது.

'காஞ்சனையின் கனவு' நாவலில் காஞ்சனையை விரும்பியே மணந்து கொண்ட புஷ்பநாதன் தன் தாயுடன் சேர்ந்துகொண்டு மனைவியைக் கொடுமைப் படுத்துகின்றான். கணவனது சினமும், மாமியாரின் கொடுமையும் காஞ்சனையை அவ்வீட்டையே வெறுக்கச் செய்கின்றன.

சிக்கலின் விளைவு

சிக்கலின் விளைவாக வீட்டையே வெறுத்த காஞ்சனை வீட்டைவிட்டு வெளியேறிவிடுகிறாள். அவளது அருமையை உணர்ந்துகொண்ட கணவனும் மாமியாரும் இறுதியில் தம் தவற்றை உணர்ந்து அவளிடம் மன்னிப்பு கேட்பதால் சிக்கல் தீர்கின்றது.

3. 3. 1. 2. 0 *தீராச் சிக்கல்கள்*

இல்லறவாழ்வில் கணவன்-மனைவி உறவில் தோன்றும் சிக்கல்கள் சின்னேரங்களில் நிலைத்து நின்று விடுகின்றன; இறுதிவரை சிக்கல் தீராத நிலை காணப்படுகின்றது. சிக்கலுக்குக் காரணமாகக் கணவனோ மனைவியோ காணப்படுகின்றனர். இச்சிக்கலைப் பின்வருமாறு இருவகைப்படுத்தலாம்;

1) கணவன் காரணமாக எழும் சிக்கல்கள்
2) மனைவி காரணமாக எழும் சிக்கல்கள்

3. 3. 1. 2. 1. *கணவன் காரணமாக எழும் சிக்கல்கள்*

கணவனுடைய செயல்கள், குடும்பச்சூழலின் காரணமாகக் கணவனிடம் ஏற்படும் மாற்றங்கள் முதலியவற்றால் கணவனுக்கும் மனைவிக்கும் இடையே மனவேறுபாடு ஏற்படுகின்றது. இம்மன வேறுபாடுகளுக்குக் காரணங்களாகக் கீழ்க்கண்டவை காணப்படுகின்றன;

1) ஏமாற்றமும் வறுமையும்
2) கணவனின் மறுமணம்
3) கணவனின் தீயநடத்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 3. 1. 2. 1. 1. *ஏமாற்றமும் வறுமையும்*

ஒரு குடும்பத்திற்கு வேண்டிய பொருளாதாரத் தேவைகளை அக்குடும்பத்தலைவனே நிறைவு செய்துகொள்ள வேண்டும் என்பது மரபு. இம்மரபினைக் குடும்பத்தலைவன் மீறும் பொழுது அங்குக் கணவன்-மனைவி உறவில் சிக்கல் எழுகின்றது. லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் இதனைச் சித்திரிக்கின்றது.

'அடுத்த வீடு' நாவலில் ஏழையான சதாசிவம் தன் குடும்பப் பொருளாதார நிலையினை உயர்த்திக்கொள்வதற்காகவே பணக்காரப் பெண்ணை மணந்து கொள்கிறான்; மனைவியின் குடும்பம் கடனில் மூழ்கி இருப்பதை அறிந்தபின் மிகுந்த ஏமாற்றம் அடைகின்றான். குடும்பத்தில் தொடர்ந்து நிலவிய வறுமை அவனைக் கோபக்காரனாகவும், மனைவியிடம் அன்பற்றவனாகவும் மாற்றிவிடுகின்றது.

சிக்கலின் விளைவு

தன் மனைவி, தன் குடும்பம் என்ற பாசமில்லாது வாழும் சதாசிவம் தன் மனைவியிடம் வெறுப்பு கொண்டவனாகவே காணப்படுகின்றான். இறுதிவரை அவனது பண்பு மாறவேயில்லை. கணவனது வெறுப்பினாலும், கவனிப்பின்மையாலும் நோய்வாய்ப்பட்ட அவன் மனைவியின் இறப்பே சிக்கலின் தீர்வாகக் காணப்படுகின்றது.

3. 3. 1. 2. 1 2. *கணவனின் மறுமணம்*

மனைவி இறந்தபின்னர் ஓர் ஆடவன் மீண்டும் மறுமணம் செய்துகொள்வது உலக இயல்பு. மனைவி உயிருடன் இருக்கும் பொழுதே மற்றொரு பெண்ணைக் காதலித்து மணப்பது சட்டப்படிக் குற்றமாகக் கருதப்படுகின்றது. மூத்த மனைவிக்கு 'மகப்பேறின்மை' என்ற குறை இருப்பது கணவன் தன் வீட்டைவிட்டு அவளை விரட்டுவதற்குக் காரணமாகின்றது. தனது அனுமதி பெறாது திருட்டுத்தனமாகக் கணவன் செய்துகொள்ளும் மறுமணம் கணவன்-மனைவி உறவைப் பாதிக்கின்றது. 'சூர்யகாந்தம்' நாவலில் இச்சிக்கலை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

சிக்கலின் விளைவு

கணவனது செயலை எதிர்த்த மனைவி அவனுடன் சேர்ந்து வாழ விரும்பாது தன் பிறந்த வீட்டிற்கு வந்துவிடுகின்றாள். கணவனும் மனைவியை மீண்டும் அழைத்துக் கொள்ளவில்லை; இவர்களுக்கிடையே உள்ள சிக்கல் இறுதிவரை தீரவில்லை.

3. 3. 1. 2. 1. 3. *கணவனின் தீய நடத்தை*

திருமணமான பின்னும் ஓர் ஆடவன் மற்ற பெண்களுடன் கொள்ளும் தொடர்பு இங்குத் தீய நடத்தை என்று குறிக்கப்படுகின்றது. கணவனின் தீய நடத்தையை லக்ஷ்மியின் 'பண்ணையார் மகள்' நாவலும், சூடாமணியின் 'மானிட அம்சம்', 'விடிவை நோக்கி' ஆகிய நாவல்களும் சித்திரிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பண்ணையார் மகள்' நாவலில் திருமணமாவதற்கு முன்னரேயே ஒரு விதவையுடன் தொடர்புகொண்டிருந்த பண்ணையார் ஏகாம்பரம், வைதேகியை மணந்துகொண்ட பின்னும் விதவையுடன் கொண்டிருந்த தொடர்பை நீடிக்கின்றார். ஏகாம்பரத்தினுடைய இப்பண்பு வைதேகியை வெறுப்படையச் செய்கின்றது. கணவனைத் திருத்த முயன்றும் முடியாமல், விதவைப்பெண் தன்மீது கூறும் அடாப்பழியையும் ஏற்றுக் கொள்ளமுடியாமல் வீட்டைவிட்டு வெளியேறிவிடுகின்றாள் (ப. 318). பண்ணையாரும், வைதேகியும் தனித்தனியாகப் பிரிந்திருந்து இறக்கின்றனர்; இறுதிவரை அவர்களுக்கிடையே ஏற்பட்ட சிக்கல் தீரவில்லை.

'மானிட அம்சம்' நாவலில், தன் மனைவி பிற ஆடவருடன் பேசினாலே ஐயப்படும் பண்பு உடையவனாகவும், குழந்தைப்பேறின்மைக்காகத் தன் மனைவியை மலடி எனப் பேசுவதில் மகிழ்ச்சியடையும் பண்பினைக் கொண்டவனாகவும் சிதம்பரம் சித்திரிக்கப்படுகின்றான். கணவனைத் தெய்வமாகத் தொழும் அவன் மனைவி சாரதா சூழலால் கற்பழிக்கப்பட்டபொழுது, அவளிடம் சிறிதும் இரக்கம் காட்டாது அவளை வீட்டைவிட்டு அவன் துரத்திவிடுகின்றான். ஒழுக்கத்தைப் பெரிதாக மதிக்கும் தன் கணவனின் செயலை முறையானது என்று ஏற்றுக்கொண்ட சாரதா கணவனைவிட்டுப் பிரிகின்றாள்; பின்னர் அவள் அவனை விலைமகள் விடுதியில் அதன் வாடிக்கையாளனாகக் காணும் பொழுது கணவன்-மனைவி உறவில் சிக்கல் எழுகின்றது.

'விடிவை நோக்கி' நாவல் மனைவியின் நோயைக் காரணம்காட்டி அவளை ஒதுக்கிவைத்துவிட்டுப் பிற பெண்களின் இரக்கத்தைத் தேடும் கணவன் ஹரிஹரனை சித்திரிக்கின்றன.

சிக்கலின் விளைவுகள்

'பண்ணையார் மகளில்' விதவையின் பிடியில் அகப்பட்டுக்கொண்ட பண்ணையார் தன் மனைவி வைதேகியின் சிறந்த பண்புகளை அறிந்துகொண்டாலும் வைதேகியுடன் சேர்ந்து வாழ அவரால் முடியவில்லை (ப. 319) இறுதிவரை கணவனும் மனைவியும் சந்திக்கவில்லை; சிக்கலும் தீரவில்லை.

'மானிட அம்சம்' நாவலில் வரும் சாரதா, தன் கணவன் சிதம்பரத்தை விலைமகள் விடுதியில் கண்டு அதிர்ச்சி அடைகின்றாள்; அதுவரை தன்னால் நேசிக்கப்பட்ட கணவனை வெறுக்கின்றாள். "ஒருதலைப்பட்சமான உறவாக, மனைவியின் பக்தியும், கணவனின் துரோகமுமாய் உள்ள உறவாக இருக்கும் ஒன்றைப் புனிதம் என்று ஏற்றுக்கொண்டால் பிறகு புனிதம் என்பதற்குத்தான் என்ன பொருள்?" (ப.305) எனச் சிந்தித்து இறுதியில், "மனிதத்தன்மை அற்ற ஒரு கணவன் நியாய அநியாயங்களைப் புறக்கணித்து என்னைத் துறப்பானானால் அந்தக் கணவன் எனக்குத் தேவையில்லை," (ப. 309) என்று உணர்ந்து கணவனால் கட்டப்பட்ட புனிதச் சின்னமான மங்கலநாணையே

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கழற்றிவிடுகின்றாள். தன்னிடம் நேர்மையை எதிர்பார்க்கும் கணவனே நேர்மை தவறி அதனையும் தன்னிடம் மறைத்த பொழுது சாரதா மனைவி என்ற எல்லைக்கோட்டை மீறிவிடுகின்றாள்; அவ்வாறு மீறுவதும் தவறில்லை எனச் சாரதாவின் செயலைச் சூடாமணி நியாயப்படுத்துகின்றார்.

'விடிவை நோக்கி' நாவலில் வரும் ஹரிஹரன் தன்னைக் கொடுமைப் படுத்தும் பண்பும், பிற பெண்களிடத்து அவன் கொண்டிருந்த நாட்டமும் மனைவி பவானிக்கு வெறுப்பூட்டுகின்றன. அவனுக்குத் தெரியாமல் வீட்டைவிட்டு வெளியேறிவிடுகின்றாள்.

கணவனது தீய நடத்தையில் வெறுப்புக் கொண்ட மனைவி வீட்டைவிட்டு வெளியேறுவதை லக்ஷ்மியும் சூடாமணியும் தத்தம் நாவல்களில் சித்திரித்துள்ளனர். தனியே சென்ற மனைவி கணவனின் துணையின்றி வாழும் துணிவு கொண்டவளாக இருவருடைய நாவல்களிலும் படைக்கப்பட்டுள்ளாள். ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டியில் 86 விழுக்காடு தகவலாளர்கள் மனைவி எக்காரணத்தாலும் வீட்டைவிட்டு வெளியேறக்கூடாது என்றும், கணவனது கொடுமைகளைப் பொறுத்துக் கொண்டு அவனை எப்படியாவது திருத்த முயலவேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளனர். படைப்பாளிகளின் சித்திரிப்பு இவ்வகையில் நடப்பியல் கருத்தோடு முரண்படுகின்றது. இரு படைப்பாளிகளும் கணவனின் கொடுமைகளைப் பொறுத்துக்கொண்டு மனைவி அவனுடன் வாழவேண்டியதில்லை; இவ்வுலகில் கணவனின் துணையின்றியே அவளால் வாழமுடியும் என்ற கருத்தைக் கொண்டவராகக் காணப்படுகின்றனர்.*

திருமணத்திற்கு முன்னர் ஆடவன் ஒரு பெண்ணிடம் கொள்ளும் தொடர்பு திருமணத்திற்குப் பின்னர் தொடரவில்லையெனில், கணவனுடைய முந்தைய தொடர்பு மனைவிக்குத் தெரியவந்தாலும், கணவன்-மனைவி உறவில் எழும் சிக்கல் விரைவில் நீங்கிவிடுகின்றது; ஆனால் அத்தொடர்பு திருமணத்திற்குப் பின்னர் தொடர்ந்தாலோ அல்லது திருமணத்திற்குப் பின்னர் வேறொரு பெண்ணின் தொடர்பு கணவனுக்கு ஏற்பட்டாலோ எழும் கணவன் மனைவி உறவுச் சிக்கல் தீர்வதில்லை என்ற உண்மையை இரு படைப்பாளிகளும் கூறுகின்றனர்.

3. 3. 1. 2. 2. *மனைவி காரணமாக எழும் சிக்கல்கள்*

ஒரு பெண் இரண்டாம் மனைவியாக ஓர் ஆடவனுக்கு வாழ்க்கைப்படும் பொழுது ஏற்படுகின்ற பாதிப்புக்களினால் விளையும் சிக்கல்கள், மனைவியின் பாலுறவுச் சிக்கல் முதலியன கணவன்-மனைவி உறவில் மனைவியால் தோன்றும் சிக்கல்களுக்குக் காரணங்களாகின்றன. எனவே, இக்காரணங்களை

1) இரண்டாம் மனைவி நிலை
2) பாலுறவுச் சிக்கல்

என இருவகையாகப் பாகுபடுத்தலாம்.

---

* படைப்பாளிகளுக்கு ஆய்வாளர் அளித்த வினாப்பட்டியினின்றும் புலப்பட்ட கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 3. 1. 2. 2. 1. இரண்டாம் மனைவி நிலை

ஒரு பெண் ஓர் ஆடவனுக்கு முதல் மனைவியாக வாழ்க்கைப்படும்பொழுது வாழ்க்கை என்பது இருவருக்கும் புதிதாகையால் அங்கு தோன்றும் சிக்கல்கள் குறைவாகக் காணப்படுகின்றன. ஒரு பெண் இரண்டாம்மனைவியாக வாழ்க்கைப்படும்பொழுது வாழ்க்கை அனுபவங்கள் மனைவிக்குப் புதியனவாகவும், கணவனுக்குப் பழகியனவாகவும் காணப்படுவதால்; இருமனம் ஒன்றி நடத்தும் வாழ்க்கைமுறை பெரும்பான்மையாகக் காணப்படுவதில்லை. குடும்பச் சூழலின் காரணமாக ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படும் நிலையில். அவளது எதிர்பார்ப்புக்களை ஏமாற்றமடையச் செய்யும் சூழலும், வயதில் மிகவும் மூத்தவனான கணவனின் தாழ்வு மனப்பான்மையும் கணவன்-மனைவி உறவில் சிக்கலைத் தோற்றுவிக்கின்றன. இச்சிக்கலை லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்', 'அரக்கு மாளிகை', 'நாயக்கர் மக்கள்' எனும் மூன்று நாவல்கள் சித்திரிக்கின்றன.

'சூர்யகாந்தம்' நாவல் வறுமைக் குடும்பத்தைச் சேர்ந்த அமிர்தம், சிவானந்தத்தின் செல்வத்திற்காகவே அவனுக்கு இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட இசைவதை ச்சித்திரிக்கின்றது. திருமணத்திற்குப் பின்னரே தன் கணவனுக்கு ஏற்கனவே ஒருமகன் இருப்பதும், தான் நினைத்தபடி அவன் செல்வந்தனில்லை என்பதும் அமிர்தத்திற்குத் தெரியவருகின்றன அமிர்தத்தின் ஏமாற்றம் அவள் தன் கணவனை வெறுக்கக் காரணமாகின்றது (ப. 16)

'அரக்கு மாளிகை' நாவல் தன் முன்னாள் காதலனின் மனைவியின் கொலைக்குத் துணையாக நின்ற மல்லிகா, மூன்றாண்டு சிறைவாசத்திற்குப் பின்னர் சௌமினி எனத் தன் பெயரை மாற்றிக்கொண்டு, பெரும் தொழிலதிபர் நாராயணனுக்கு மூன்றாம் மனைவியாக வாழ்வதைச் சித்திரிக்கின்றது. கணவனின் எல்லாச் சொத்தும் தன்னுடையதாக வேண்டும், மூத்தவள் குழந்தைகள் அனைவரும் அழியவேண்டும் என்பது அவளுடைய ஆசை (அத். 27) சொத்துக்களைக் கவர்வதற்காக அவள் போட்ட திட்டம் நடைபெறாமல் போனபொழுது (அத். 63) அவளது உண்மைப் பண்பினைக் கணவன் புரிந்துகொள்ள சிக்கல் தொடர்கின்றது.

'நாயக்கர் மக்கள்' நாவல் ஏழைக் குடும்பத்து ரேவதி செல்வனான பாலசுந்தரத்திற்கு இரண்டாம் மனைவியாக வாழ்வதைச் சித்திரிக்கின்றது. ரேவதிக்கு பாலசுந்தரத்தின் பணத்தின்மீதும், அந்தஸ்தின்மீதும் ஏற்பட்டிருந்த ஆசையில் கால்பகுதிகூட அவர்மீது இல்லை (ப.54). ரேவதியின் பண்பும், நடத்தையும். விசித்திரமான மனப்போக்கும் பாலசுந்தரத்தின் பழக்கவழக்கங்களுக்கும், கொள்கைக்கும் முற்றிலும் முரண்பாடாக இருந்தமை (ப 51) இருவருக்குமிடையேயும் சிக்கல் எழக் காரணமாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிக்கலின் விளைவுகள்

'சூர்யகாந்தம்'' நாவலில் அமிர்தம் திருமணமான புதிதில் தன் துயரத்தை வெளிக்காட்டாது மிகவும் அமைதியாக நடந்து கொள்வதாகச் சித்திரிக்கப்படுகின்றாள். ஆனால் கணவன் தன்னிடம் காட்டும் அளவிற்கு மீறிய அன்பை உணர்ந்த பின்னர், அவளது உள்ளத்திலே குமுறிக்கிடந்த ஏமாற்றம் சூழல் வாய்த்த பொழுதெல்லாம் ஆத்திரக்கனலாக வெளியே தலைநீட்டத் தொடங்குகின்றது (ப 17). அதன் விளைவாக கணவன் மனைவிக்கு இடையே அடிக்கடி பூசல் எழத் தொடங்குகின்றது(ப 17). இப்பூசல் வயதுவந்த காலத்தில் சிவானந்தத்திற்கு அவன செய்திருந்த இரண்டாம் திருமணமாகிய பயங்கரமான தவற்றை நினைவூட்டி, அவனுடைய வாழ்க்கையை வேம்பாக்கியது எனச் சிவானந்தத்தினுடைய சிக்கல் மிகுந்த இல்வாழ்க்கையை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

'அரக்கு மாளிகை' நாவலில் தன் கணவனை அவனது செல்வத்திற்காக மட்டுமே விரும்பிய சௌமினியை லக்ஷ்மி சித்திரிக்கின்றார் (அத். 63). சௌமினி தன் கணவனின் சொத்திற்கு உரிமையுடைய தன் மூத்தாள் குழந்தைகளை அழிப்பதில் ஈடுபடத் தொடங்குகின்றாள். மூத்தாள் மகளான சந்திராவை நொண்டியாக்கி அவள் இறப்புக்குக் காரணமாகின்றாள்; மூத்தாள் மகனான கிரிதரனின் காதலி மஞ்சுளாவிற்குச் சிறிது சிறிதாக நஞ்சினை அளித்து அவளைக் கொல்ல முயல்கின்றாள். தன் கணவனின் அன்பை முழுவதுமாகத் தன்மீது திருப்பிக் கொண்டுவிட்ட சௌமினி, கணவன் தன் மூத்தாள் குழந்தைகளிடம் அன்புகாட்டத் தொடங்கியதைப் பொறுக்காது தன் கணவன் உட்பட அனைவரையும் ஒழித்துவிடத் துணிந்துவிடுகின்றாள்.

'நாயக்கர் மக்கள்' நாவலில் வரும் ரேவதி வீட்டைக் கவனிக்கவும், கணவரைக் கவனிக்கவும் நேரம் இன்றி, மாதர் சங்கத்திலும் சேவகிகள் ஆசிரமத்திலும் தோழிகளின் வீட்டிலும் நேரத்தைக் கழிக்கின்ற நிலை கணவனுக்கும் மனைவிக்கும் இடையே சிக்கலைத் தோற்றுவிக்கிறது. தனது இளம்மனைவியின்மீது கொண்டிருந்த கரைகாணாக் காதலினால் பாலசுந்தரம் அவளிடம் கடுமையாக நடந்துகொள்ள எண்ணினாலும் இயலாதவராகக் காணப்படுகின்றார். ரேவதியுடன் வாழ்ந்த இரண்டாண்டு மணவாழ்க்கையில் பாலசுந்தரம் தான் அவளை மணந்து கொண்டது வாழ்நாட்களில் மிகவும் தவறாகச் செய்த செயல் (ப. 50) என்று எண்ணத் தொடங்கிவிடுகின்றார் என்று இச்சிக்கலை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

'சூர்யகாந்தம்,' 'அரக்கு மாளிகை', 'நாயக்கர் மக்கள்' ஆகிய மூன்று நாவல்களிலும் கணவன் தன் இரண்டாம் மனைவியிடம் காட்டும் அளவிற்கு மீறிய அன்பு, மனைவியரது கொடுமையான செயல்களுக்குக் காரணமாகின்றது; கணவன் தன் இரண்டாம் மனைவியிடம் காட்டும் அன்பிற்கு இருவருக்குமிடையேயுள்ள வயது வேறுபாடு ஒரு காரணமாகக் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரண்டாம் மனைவியரால் ஆட்டிவைக்கப்பட்ட கணவன்மாருள், சிவானந்தம் (சூர்யகாந்தம்), தன் தங்கையை மனைவி வீட்டைவிட்டுத் துரத்திய கொடுமை தாங்காது சித்தம் கலங்கி இறந்துவிடுகின்றான். நாராயணன் (அரக்கு மாளிகை) இரண்டாம் மனைவியினால் தூண்டப்பட்ட மகனுடைய வெறித்தனத்தால் மண்டை உடைந்து கிடக்கின்றார். சௌமினி வீட்டை விட்டு ஓடி, புகைவண்டியில் அகப்பட்டு 'இறக்கின்றாள். பாலசுந்தரம் (நாயக்கர் மக்கள்) இரண்டாம் மனைவியின் தீய நடத்தையால் அவமானமுறுகின்றார். ரேவதியும் தற்கொலை செய்து கொள்கின்றாள்.

இரண்டாம் மனைவியராகச் சித்திரிக்கப்பட்டுள்ள அமிர்தம் (சூர்ய காந்தம்), சௌமினி (அரக்கு மாளிகை), ரேவதி (நாயக்கர் மக்கள்) எனும் மூவருள் அமிர்தம் தன் கணவனைக் கொடுமைப்படுத்தினாலும், அவள் தன் நன்னடத்தையினின்று மாறவில்லை. சௌமினி திருமணத்திற்கு முன்னரே தீய நடத்தை கொண்டவள்; திருமணத்திற்குப் பின்னர் பணத்திற்காகத் தன் கணவனையே கொலை செய்யக்கூடிய கொடிய உள்ளம் கொண்டவளாகின்றாள்; ரேவதி திருமணத்திற்குப்பின் பல ஆடவர்களுடன் சுற்றும் பழக்கத்தை மேற்கொண்டு பலராலும் தூற்றப்படும் நிலைக்கு உள்ளாகின்றாள். தீய நடத்தையைக் கொண்டிருக்கும் சௌமினி, ரேவதி இருவரும் தற்கொலை செய்துகொள்வதாகச் சித்திரிக்கப்படுவதனைக் காணும் போது இதனைப் படைப்பாளி லக்ஷ்மி கெட்டுப்போன பெண்களுக்குக் கொடுக்கும் தண்டனையாகக் கருதலாம்.* இரண்டாம் மனைவி நிலையில் கணவன் மனைவி உறவில் எழும் சிக்கலைப்பற்றிச் சூடாமணி சித்திரிக்கவில்லை.

3. 3. 1. 2. 2. 2. *பாலுறவுச் சிக்கல்*

இந்தியத் திருமண வாழ்வில் பாலுறவு என்பது இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றது (Ailleen D. Ross, 1973, p. 157). கணவன் மனைவியரிடையே ஒரு பிணைப்பை ஏற்படுத்துவதற்குப் பாலுறவு துணைசெய்கின்றது. கணவனோ, மனைவியோ பாலுறவை வெறுத்தால் அவர்தம் உறவுநிலையில் சிக்கல் எழுகின்றது. பாலுறவில் வெறுப்புக்கொண்ட மனைவியால் ஏற்படும் கணவன் மனைவி உறவுச் சிக்கலைச் சூடாமணியின் 'இரவுச்சுடர்' நாவல் சித்திரிக்கின்றது.

'இரவுச்சுடர்' நாவலில் குழந்தைப் பருவ முதலே பிறருடன் கலந்து பழகாமல் தனியாக அமர்ந்திருப்பதிலேயே மகிழ்ச்சி காணும் யாமினி, திருமணத்தை ''அருவருப்பாய் இருக்கு, என்னைச் சாகச் சொல்றாப்போல் இருக்கு,'' என்று வெறுக்கின்-

---

* லக்ஷ்மி ''கெட்டுப்போன பெண்களைப்பற்றி எழுதமாட்டேன்,'' கல்கி, 23. 11. 88.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றாள் (ப.38). ''நான் தொடவும் பிடிக்கலே, மத்தவா என்னைத் தொட்டாலும் பிடிக்கலை, ''(ப.41) என்று கூறும் யாமினி கணவனுடன் வாழ மறுக்கின்றாள். கருவுறுதல் என்பது தூய்மையை இழத்தல் என்பது அவளுடைய எண்ணமாகக் காணப்படுகின்றது. தான் தூய்மையை இழக்கக் காரணமாக இருக்கும் கணவனை வெறுக்கின்றாள் (ப.54). பாலுறவில் யாமினி கொண்ட வெறுப்பு கணவன்-மனைவி உறவில் சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. யாமினியின் உடல்நிலையை உளவியலார் 'முரண்மூளைநோய்' (schizophrenia) என்பர்.* (E.R. Hilgard, R.C. Atkinson, R.L. Atbinson, 1979, p 472). முரண் மூளை நோயாளர் பாலுறவில் நாட்டமின்றித் திருமணம், தாய்மை முதலியவற்றினின்றும் விலகி வாழ்வர். அனைவரிடமிருந்தும் விலகி வாழ்வதையே விரும்புவர் என இந்நோயாளரைப்பற்றி உளவியல் அறிஞர் ராலின் சின்னையன் கூறுவார்.†

3. 3 1. 3. 0. கணவன்-மனைவி உறவுச் சிக்கலை லக்ஷ்மி, சூடாமணி இருவரும் சித்திரிப்பதை அடுத்த பக்கத்தில் உள்ளவாறு அட்டவணைப்படுத்தலாம் :

---

* முரண் மூளைநோயாளர் மெய்ம்மை உலகிலிருந்து விலகித் தன்னுள் கற்பனை செய்துகொண்ட கனவுலகிலேயே மூழ்கியிருப்பர். அவர்களது நடவடிக்கைகள் அவர்களால் உருவாக்கப்பட்ட கனவுலகிற்குப் பொருந்துமேயன்றிப் புறஉலகிற்குப் பொருந்தா.

† 15-5-80 அன்று ஆய்வாளர் டாக்டர் ராலின் சின்னையனுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிக்கலின் தன்மை	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
தீர்ந்துவிடும் சிக்கல்கள்						
அ) கணவன் காரணம்						
1) திருமணத்திற்கு முன்னர் தீய நடத்தை	1	6.67	1	33.33	2	11.11
2) திருமணத்திற்குப் பின் தீய நடத்தை	1	6.67	—	—	1	5.56
3) கணவனது பண்பில் மாற்றம்	1	6.67	—	—	1	5.56
ஆ) மனைவி காரணம்:						
1) கணவன் மீது கொள்ளும் ஐயம்	2	13.33	—	—	2	11.11
2) மனைவியின் தன்முனைப்பு	2	13.33	1	33.33	3	16.66
3) திருமணத்திற்குமுன் மனைவி மற்றொருவனிடம் கொண்டிருந்த காதல்	1	6.67	1	33.33	2	11.11
இ) கணவன்-மனைவி இருவரும்காரணம்:						
1) மணமகன்/மணமகள் இசைவின்றிப் பெற்றோரால் நடத்தப்பெறும் திருமணம்	3	20.00	—	—	3	16.66
2) குடும்பச் செய்திகளை மனைவியிடம் மறைப்பது	1	6.67	—	—	1	5.56
ஈ) மற்றவர் காரணம்:	2	13.33	—	—	2	11.11
உ) கணவனும் / மற்றவரும் காரணம்	1	6.67	—	—	1	5,56
மொத்தம்	15	100,00	3	99.99	18	100.00

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சிக்கலின் தன்மை	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
தீராச் சிக்கல்						
அ) கணவன் காரணம் :						
1. ஏமாற்றமும் வறுமையும்	1	16.67	—	—	1	11 11
2. மறுமணம்	1	16 67	—	—	1	11.11
3. திருமணத்திற்குப் பின்னர் தீய நடத்தை	1	16.67	2	66.66	3	33.33
ஆ) மனைவி காரணம் :						
1. இரண்டாம் மனைவி நிலை	3	50.00	—	—	3	33.33
2. பாலுறவுச் சிக்கல்	—	—		33.33	1	11.11
மொத்தம்	6	100.00	3	100 00	9	100.00

மேற்கண்ட அட்டவணையின் வாயிலாகக் கணவன்-மனைவி உறவில் எழும் சிக்கலைச் சூடாமணியைவிட லக்ஷ்மி மிகுதியாகச் சித்திரித்துள்ளார் என்பதை அறிய முடிகின்றது. சிக்கலின் தன்மைகளுள் மனைவியின் பாலுறவுச் சிக்கல் என்பதை மட்டுமே லக்ஷ்மி சித்திரிக்கவில்லை. குடும்ப அமைப்பில் பாலுறவு என்பது வினா எழுப்புவதற்குரிய சிக்கல் அல்ல; உண்பது உறங்குவது போன்ற இயல்பான ஒன்று என்பது பாலுறவு பற்றிய லக்ஷ்மியின் கொள்கை. * இக்கொள்கையே அவர் பாலுறவுச் சிக்கலைத் தன் கதையின் கருவாக அமைக்காமைக்குக் காரணமாகின்றது. சூடாமணி பாலுறவுச் சிக்கலை உளவியல் நோக்கில் சித்திரிக்கின்றார். சூடாமணி கணவன்-மனைவி உறவுச் சிக்கலைக் குறைந்த அளவிலேயே சித்திரித்துள்ளார்.

கணவன்-மனைவி உறவுச் சிக்கலைப் பற்றிய சித்திரிப்பில் தீர்ந்துவிடும் சிக்கல்களே மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளன. இல்லறவாழ்வில் சிக்கல்கள் தோன்றுவதும் மறைவதும் இயற்கை

* 30.3.79 அன்று ஆய்வாளர் லக்ஷ்மியுடன் நடத்திய பேட்டியில் அவர் கூறிய கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

என்ற நடப்பியல் நிலை லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் சித்திரிக்கப்படுகின்றது. சிக்கல்களுள் மனைவியரால் எழும் சிக்கல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன. இல்லற வாழ்வில் சிக்கல் எழுவதற்கு மனைவியே இன்றியமையாத காரணமாக விளங்குகின்றாள் என்ற கருத்து இரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் புலப்படுகின்றது.

3. 3. 1. 4. 0. லக்ஷ்மி, சூடாமணி நாவல்களிலிருந்து கணவன்-மனைவி உறவு பற்றிய சிக்கலில் கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்படுகின்றன :

கணவன்-மனைவி உறவில் தோன்றி, தீர்ந்துவிடும் சிக்கலுக்குக் கணவன் மனைவி, மற்றவர் ஆகியோர் காரணங்களாகக் காணப்படுகின்றனர் என்று லக்ஷ்மி சித்திரிக்கின்றார். சூடாமணி கணவன், மனைவி என்ற இருவர் மட்டும் சிக்கலுக்குக் காரணமாவதைச் சித்திரிக்கின்றார். திருமணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ கணவன் பிற பெண்களுடன் தொடர்பு கொண்டிருந்து தன் தவற்றை உணர்ந்து மனைவியிடம் மன்னிப்பு கேட்டால் சிக்கல் மறைந்துவிடுகின்றது என லக்ஷ்மியும் சூடாமணியும் தத்தம் நாவல்களில் காட்டுகின்றனர். மனைவியின் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை கணவனின் மனதை மாற்றிவிடும் என இருவரும் கருதுகின்றனர். மனைவி காரணமாக எழும் சிக்கலில் மனைவியின் தேவையற்ற ஐயம் அவள் வாழ்வைப் பாதித்துவிடும் என லக்ஷ்மி கூறுகின்றார்; இச்சிக்கலைச் சூடாமணி காட்டவில்லை. மனைவியின் தன்முனைப்பு குடும்ப வாழ்க்கையைப் பாதித்துவிடும் என இருவரும் காட்டுகின்றனர்.

மணந்துகொள்கின்றவர்களின் இசைவின்றிப் பெற்றோரின் வற்புறுத்தலினால் நடைபெறும் திருமணத்தாலும், கணவன் மனைவியிடம் குடும்ப நிகழ்ச்சிகளை மறைப்பதனாலும், குடும்பத்தைச் சார்ந்த மற்றவராலும், கணவன்-மனைவி உறவில் சிக்கல் ஏற்படுவதை லக்ஷ்மி சித்திரிக்க, சூடாமணி இச்சிக்கல்களைச் சித்திரிக்கவில்லை.

மனைவியினால் கணவன் அடையும் ஏமாற்றம், வறுமை, கணவனின் மறுமணம், கணவன் பிற பெண்களுடன் கொள்ளும் தொடர்பு முதலியவை கணவன்-மனைவி உறவில் தோன்றும் தீராச் சிக்கல்களுக்குக் காரணங்களாகின்றன என லக்ஷ்மி காட்ட, கணவன் பிற பெண்களுடன் கொள்ளும் தொடர்பினால் எழும் தீராச் சிக்கலை மட்டும் சூடாமணி சித்திரித்துள்ளார். மனைவியிடம் நேர்மையை எதிர்பார்க்கும் கணவன், நேர்மையற்ற பண்புடையவனாக இருந்தால் மனைவி கணவனைத் துறந்து செல்லலாம் என்ற கருத்தைச் சூடாமணி வலியுறுத்துகின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படும் பொழுது, கணவன்-மனைவி உறவில் சிச்கல் எழ அவளே காரணமாகின்றாள் என்று லக்ஷ்மி தம் நாவல்களில் காட்டுகின்றார். இக்கருத்தைச் சூடாமணி காட்டவில்லை. பாலுறவில் ஒரு பெண்ணுக்கு ஏற்படும் வெறுப்பு அவளுடைய இல்லற வாழ்க்கையைப் பாதிப்பதைச் சூடாமணி காட்டுகின்றார்; இச்சிக்கலை லக்ஷ்மி படைக்கவில்லை.

கணவன்-மனைவி உறவில் எழும் சிக்கலைச் சூடாமணியைவிட லக்ஷ்மி மிகுதியாகச் சித்திரித்துள்ளார். இருவரது நாவல்களிலும் கணவன்-மனைவி உறவுச் சிக்கல் பற்றிய சித்திரிப்பில் தீர்ந்துவிடும் சிக்கல்களே மிகுதியாகச் சித்திரிக்கப்படுகின்றன. சிக்கல்களுள் மனைவியால் எழும் சிக்கல்களே மிகுதியாகக் காணப்படுகின்றன என்ற உண்மை இருவருடைய நாவல்கள்வழி புலப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 4. தாய் மனம்

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

இவ்வியல்; பெற்ற தாய், வளர்ப்புத் தாய், மாற்றாந்தாய என்று தாயாரை மூவகைப்படுத்தி, அவர்களின் மனநிலையை ஆராய்கின்றது. பெற்ற தாயின் மனதில் சிக்கல் தோன்ற மாமியார், கணவன், குழந்தை, மருமகள் முதலியோருடன் தானும் காரணமாவது விளக்கப்படுகின்றது. பெற்ற தாயின் வாழ்க்கையில் ஏற்படும் ஏதேனும் ஒரு குறை தாயுள்ளத்தில் சிக்கலை எழுப்ப இன்றியமையாக் காரணமாகின்றது என்ற கருத்து இரு படைப்பாளிகளின் நாவல்கள்வழி நிறுவப்படுகின்றது. வளர்ப்புத் தாயார் தம் வளர்ப்புக் குழந்தைகளுக்காகத் தம் வாழ்க்கையைத் தியாகம் செய்யத் துணியும் நிலை ஆராயப்படுகின்றது. மாற்றாந்தாயார் தம் மூத்தாள் குழந்தைகளை வெறுக்கும் கொடுமைக்காரியராக விளங்கும் நிலை ஆராயப்படுகின்றது. இம்மூவகைத் தாயாரின் மனதில் சிக்கல் தோன்றும் நிலை உளவியல் கருத்துக்களோடு ஒப்பிடப்படுகின்றது.

3. 4. *தாய்மனம்*

3. 4. 0. 1. ''தாயன்பு என்பது தம் குழந்தையிடம் காட்டும் நேரிடையான உணர்ச்சியின் வெளிப்பாடான, என்றும் மாறாத உறவில் விளைவது. இரக்கம் என்பதே அதன் சிறப்பு ஆகும். பெண்ணின் தனித்தன்மையாகக் கருதப்படும் ஆக்கிரமிப்புப் பண்பும், பாலுறவு நாட்டமும் அழுத்தப்பட்டுத் தாய்மை என்னும் ஓரிடம் நோக்கித் திருப்பிவிடப்படுகின்றன,'' எனக் கூறுவார் உளவியல் அறிஞர் (Helene Deutsch, 1947, p. 17) தன்னிகரற்ற தாயன்பின் விளைவாகவே குடும்ப உறவுகளில் தாய்க்கும் குழந்தைக்கும் இடையே காணப்படும் உறவு நெருக்கம் மிகுந்ததாகக் காணப்படுகின்றது. இதனோடு ஒப்பிடப்படும் பொழுது தந்தைக்கும் குழந்தைக்கும் இடையே உள்ள உறவு நெருக்கம் குறைந்து காணப்படுகின்றது. தந்தை தன் வேலையின் பொருட்டு நாளின் பெரும் பகுதியை வெளியிலேயே செலவிடுகின்றார் (Margaret Cormack, 1961, p. 17). தாயே தன் குழந்தைகளுடன் மிகுதியான நேரத்தைச் செலவிடுவதால் தாய்க்கும் குழந்தைகளுக்கும் இடையே உள்ள உறவு நெருக்கமானதாகக் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஒரு குடும்பத்தின் பொருளாதாரத் தலைவனாகத் தந்தையே பெரும்பாலும் இருப்பதால் குடும்பத்தின் அதிகாரமும், ஒழுங்கும், கட்டுப்பாடும் அவனிடத்திலே தான் காணப்படுகின்றன எனவே, மகன் தந்தையிடம அன்புசெலுத்துவதைவிட மரியாதையும் அச்சமும் கொண்டவனாகவே காணப்படுகின்றான் (Margaret Cormack, 1961, p. 16).

இன்றைய நிலையில் தந்தை-குழந்தை உறவில் நட்புணர்வு மிகுந்து காணப்படுகின்றது; தந்தையிடம் மரியாதை, அச்சம் இவை இன்றியும் இருக்கலாம். தாயும் அலுவல்மகளாக இருப்பதால் தாய்க்கும் குழந்தைக்குமிடையே உள்ள நெருக்கமும் குறைந்து காணப்படுகின்றது எனலாம்.

3. 4. 0. 2 தத்துவஞானிகளும், கவிஞர்களும் தாயன்பையே தன்னலமற்ற, எல்லையற்ற உண்மையான குறிக்கோள் உடைய அன்பாகக் கருதுகின்றனர். கருவில் குழந்தை உருவாகும் காலத்திலிருந்து தான் இறக்கும்வரை குழந்தைக்காக எதையும் கொடுக்கச் சித்தமாகின்றாள் தாய். மற்ற அன்புகள் எல்லாம் கைம்மாறு கருதுபவையாகக் காணப்பட, தாயன்பு மட்டுமே கைம்மாறு கருதாததாகக் காணப்படுகின்றது (Margaret Cormack, 1961, p. 153)

இதனாலேதான் வழிபாட்டுமுறையிலும் தாய் வழிபாட்டு-முறையே முதலில் தோன்றியது என்பர். உலகின் படைப்புக்கு முதல் காரணமாகத் தாயாக விளங்குபவள் சக்தி (Krishnala Shridharani, 1941, p. 158). தமிழ்ச் சமுதாயத்தில் தாய் வழி பாடு சிறந்தது என்று இன்றளவும் பாராட்டப்படுகின்றது. பெண்ணடிமையைப் போக்குவதற்குப் பெண்ணைத் தெய்வமாக உயர்த்தினார்கள் எனலாம். எனவே, தாயைத் தெய்வமாக அவளுடைய குழந்தைகள் வழிபாடும் நிலையும் இந்திய சமுதாயத்தில் காணப்படுகின்றது.

3. 4. 0 3. ஒவ்வொரு பெண்ணிடத்திலும் காணப்படும் தற்காதற் பண்பு (Narcissism), அவள் தாயான பின்னர் மாறிவிடுகின்றது. தான் என்ற நிலை மாறி, இத்தற்காதற் பண்பு குழந்தையிடம் ஒன்றிவிடுகின்றது. தாயிடத்தில் காணப்படும் தன்னொறுப்பு மனநிலை (Masochism) குழந்தைக்காகத் தன்னையே தியாகம் செய்யவும் துணிந்துநிற்கின்றது. தன்னையே நினைந்து நிற்கும் தற்காதற்பண்புக்கு மாறாக இப்பொழுது கைம்மாறு எதனையும் கருகாத ஒரு தியாகியாகிவிடுகின்றாள் அத்தாய் என்று தாயின்மன இயல்பை விளக்குகின்றார் உளவியலார் (Helen Deutsch, 1947, pp. 17-18).

3. 4. 0. 4. தனக்கென வாழாது தன் குழந்தைக்காகவே வாழும் தாயின் மனதில் உறவினர்களாலோ, தன்னாலோ சில சிக்கல்கள் எழுகின்றன. தாய்மனச் சிக்கல்களைப்பற்றி லக்ஷ்மி (1) காஞ்சனையின் கனவு, (2) பண்ணையார் மகள், (3) பவானி, (4) மரகதம், (5) சூர்யகாந்தம், (6) அரக்கு மாளிகை (7) பெண்மனம், (8) நாயக்கர் மக்கள், (9) அடுத்த வீடு, (10) மிதிலாவிலாஸ் ஆகிய பத்து நாவல்களிலும், சூடாமணி (1) நீயே என்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உலகம், (2) தீயினில் தூசு, (3) விடிவை நோக்கி, (4) இரவுச்சுடர், (5) மங்கை, (6) உயர்வு உள்ளத்திலே, (7) பிஞ்சுமுகம் ஆகிய ஏழு நாவல்களிலும் கூறுகின்றனர். இவற்றுள் தாய் மனச்சிக்கலையே கருவாகக் கொண்டு சூடாமணியின் 'நீயே என் உலகம்' நாவல் மட்டும் காணப்படுகின்றது. எஞ்சிய நாவல்கள் தாயின் மனச்சிக்கல்களின் பல்வேறு விளைவுகளைச் சித்திரிக்கின்றன.

3. 4. 0. 5. தாய் என்பவள் குழந்தையைப் பெற்றவளாகவும் இருக்கலாம்; பெற்று வளர்த்துப் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பவளாகவும் இருக்கலாம்; தான் பெற்ற குழந்தையையே வெறுப்பவளாகவும் இருக்கலாம்; தனக்கெனக் குழந்தையின்றி மற்றொரு குழந்தையை எடுத்து வளர்ப்பவளாகவும் இருக்கலாம்; இத்தாய் திருமணமாகாதவளாகவோ அன்றித் திருமணமானவளாகவோ இருக்கலாம்; தன் குழந்தைகளோடு தன் கணவனின் மூத்த மனைவியின் குழந்தைகளையும் வளர்ப்பவளாகவும் இருக்கலாம்.

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவருடைய நாவல்களில் மேற்கூறிய அடிப்படையில் தாய்மை உறவு நிலைகள் பெற்ற தாய், வளர்ப்புத்தாய் (adoptive mother), மாற்றாந்தாய் (stepmother) என மூன்று நிலைகளில் ஆராயப்படுகின்றன.

தாயின் மனச்சிக்கலைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம் :



3. 4. 1. 0 *பெற்ற தாய்*

குழந்தையைத் தன் வயிற்றில் பத்து மாதம் சுமந்து பெற்றவளே பெற்ற தாய் எனப்படுவாள். இவள் ஓர் ஆடவனை முறைப்படி மணந்து குழந்தையைப் பெற்றவளாகவும் இருக்கலாம்; அல்லது ஒருவனை முறைப்படி மணக்காது, அவனுடன் தொடர்பு கொண்டு குழந்தையைப் பெற்றவளாகவும் இருக்கலாம். இருவருமே குழந்தையைப் பெற்றவர்களாததால் இங்குப் பெற்ற தாய் என்றே அழைக்கப்படுகின்றனர்.

3. 4 1 1. *சிக்கல் உண்மை*

பெற்ற தாயின் மனத்தே சிக்கல் தோன்றப் பின்வருபவர்களின் செயல்கள் காரணமாகின்றது:

1) மாமியார்
2) கணவன்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3) குழந்தை
4) மருமகள்
5) தான்

3. 4. 1. 1. 1. *மாமியார்*

ஒரு பெண் ஆண் மகவுக்குத் தாயானால் அவள் சமுதாயத்தில் இன்றியமையாத இடத்தையும் பாதுகாப்பையும் பெற்றிருப்பதாகக் கருதப்படுகின்றாள். அவளைக் காப்பாற்ற ஒரு மகன் இருப்பது குடும்பத்தில் அவளுடைய சிறப்பினை மிகுதியாக்குகின்றது (David. G.Mandelbaum, 1972, pp. 88-89). எனவே, தாய்க்கு மகளைவிட மகனிடத்தில் தொடர்பு மிகுதியாகக் காணப்படுகின்றது. திருமணமான மகள் தாயைவிட்டுத் தனியே பிரிந்து சென்று வாழ்கின்றாள்; ஆனால் திருமணமான மகன் தாயுடனே சேர்ந்து வாழ்கின்றான். தாயும் மகனுமாய் வாழும் குடும்பத்தில் மகனுக்குத் திருமணமானவுடன் தாய், மகன், தன்னிடம் காட்டும் அன்பில் சிறிது குறைவு இருப்பதாகக் கருதுகின்றாள் (Aileen D. Ross, 1973, p. 105). இதற்குக் காரணமான மருமகளை வெறுக்கின்றாள்; இந்நிலையில் மருமகள் தாயாகும்பொழுது மாமியார் தன் குறையைப் போக்கிக்கொள்கின்றாள். இதனை லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு' நாவல் சித்திரிக்கின்றது.

'காஞ்சனையின் கனவு' நாவலில் தன் மகனின் காதல் மனைவியாகிய தன் மருமகள் காஞ்சனையை வெறுக்கும் பண்புடைய மாமியாராகப் பொன்னம்மாள் படைக்கப்பட்டிருக்கின்றாள். குழந்தைப் பேற்றினால் மருமகள் நோய் வாய்ப்பட்ட பொழுது குழந்தையை வளர்க்கும் பொறுப்பை அவள் ஏற்றுக் கொள்கின்றாள். தன் நெஞ்சினுள் மகன்பால் பொங்கிக்கிடந்த அன்பைப் பேரன்மீது பொழியத் தொடங்கி (ப 163) மருமகளைத் தன் பேரனிடம் நெருங்கவிடாது தடுக்கின்றாள். பொன்னம்மாளின் இச்செயல் மருமகளைத் துன்புறுத்துகின்றது. கணவனின் அன்பற்ற செயல்களினால் வருந்திய அவள் இறுதியில் கணவனுக்கு மனைவியாக வாழும் உரிமையைவிடக் குழந்தைக்குத் தாயாக வாழும் உரிமையை இழந்ததையே பெரியதாக எண்ணித் தன் நிலையைக் கடிதம்வழி கணவனுக்கு விளக்கிவிட்டு (ப. 194) குழந்தையுடன் வீட்டைவிட்டு வெளியேறிவிடுகின்றாள்.

மாத்தூர் ஜமீன்தாரிணியான மருமகள் காஞ்சனை வீட்டை விட்டு வெளியேறாமல் இருந்திருந்தால் தன் மகனைச் செல்வ சுகத்தில் வளர்த்திருக்கலாம். ஆனால் தன் மகனைத் தன் மாமியார் பாலூட்டிச் சீராட்டி வளர்ப்பதை வேற்றுப் பெண்போல் தொலைவிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த அவள் நெஞ்சம் மகனின் அன்பிற்காக ஏங்கித் தவிக்கின்றது (ப. 165). யார் வீட்டிலாவது வேலை செய்தாவது குழந்தையை வளர்த்துவிடும் உறுதி (ப 193) உள்ளத்தில் எழ அத்துணிவு அவளை வீட்டை விட்டு வெளியேறச் செய்கின்றது. அவள் உள்ளத்தில் இச்சிக்கல் எழ மாமியாரின் ஆதிக்கமே காரணமாகக் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.4.1.1 2. *கணவன்*

தாயின் மனதில் எழும் சிக்கலுக்கு அவள் கணவனும் காரணமாக அமைவதை லக்ஷ்மி, சூடாமணி நாவல்கள் சித்திரிக்கின்றன. கணவன், மனைவி, குழந்தை என இனிதாக வாழும் குடும்பத்தில் கணவனின் இறப்பு மனைவியின் உள்ளத்தில் அதிர்ச்சியை விளைவிக்கின்றது; இது அவள் உள்ளத்தில் சிக்கல் எழக்காரணமாகின்றது. கணவன் மனைவிக்கு இழைக்கும் கொடுமையும் அவள் உள்ளத்தில் குழப்பத்தை விளைவிக்கின்றது. இக்கருத்துக்களின் அடிப்படையில் தாயின் மனச்சிக்கலுக்கு அவள் கணவன் காரணமாவதை (1) கணவனின் இறப்பு, (2) கணவனின் கொடுமை எனும் இருவகைப்படுத்தி ஆராய்ந்து காணலாம்

3.4.1.1.2.1. *கணவனின் இறப்பு*

கணவன், குழந்தை என்ற இருவரிடத்தும் தாய் கொண்டிருந்த அன்பு கணவனின் இறப்பிற்குப் பின்னர் முழுவதுமாகக் குழந்தையிடம் திரும்பிவிடுகின்றது. தன் குழந்தையைத் தவிர தனக்கு ஆர்வத்தை, மகிழ்ச்சியைத் தரக்கூடிய பொருள் உலகத்தில் வேறு எதுவுமே இருப்பதாக அவளுக்குத் தோன்றுவதில்லை (Aileen D. Ross 1973, p. 149). மகனிடம் தாய் காட்டும் அன்பு தாயையும் குழப்பி, மகனின் வாழ்க்கையையும் குழப்பிவிடுகின்றது. இத்தகு தாயை 'நீயே என் உலகம்' எனும் சூடாமணியின் நாவல் சித்திரிக்கின்றது.

கணவனை இழந்த தங்கத்திற்கு மகன் மற்றவரிடமோ, மகன்மீது மற்றவரோ அன்பு செலுத்துவது பிடிக்காது. 'இதயத்தின் பாசமெல்லாம் புயலாய்ச் சுருண்டெழுந்து தன் கண்கள் என்ற துவாரங்களின் வழியே சீறிச் சாடி வெளியே பீறியடிப்பதுபோல் காணப்படும் (ப.16) தங்கத்தின் அச்சம் தரும் அன்பைப் பற்றி, ''உன் அம்மா ராட்சசி, அன்பு அன்பு என்று சொல்லி உன்னை அப்படியே விழுங்கிவிடுவாள். ஜாக்கிரதையாக இருந்து உன்னைக் காப்பாற்றிக்கொள்,'' (ப. 58) என்ற சந்துருவின் தாய்மாமன் கூற்று ஈண்டுக் கருதத்தக்கது.

ஒரே மகனையன்றி வேறு குழந்தைகளும் இல்லாத விதவைத் தாயர் மகனின் அன்பு முழுவதும் தனக்கேயுரியதாய் இருக்கவேண்டும் என்று விரும்பும் (Aileen D Ross' 1973, p.148) எண்ணத்தின் பாதிப்பினை, ''உன் அம்மாவிற்கு உன்னைத் தவிர யாருமில்லை. அப்படி இருக்கும் தாய்களில் சிலர் தம் அன்பின் தீவிரத்தால் குழந்தையைத் தனக்கே தனக்கென்று மட்டும் வைத்துக் கொள்ள ஆசைப்படுவார்கள். தம் அருமை மகனோ மகளோ இன்னொருவரை விரும்பினால் அவர்களுக்குப் பொறுக்காது. தன் உரிமைப் பொருளில் யாரோ பங்குக்கு வந்துவிட்டது மாதிரி தோன்றும். உன் அம்மா அந்த ரகத்தைச் சேர்ந்த பொஸஸிவ் மதர்னு நினைக்கிறேன்,'' (ப. 65) என அவள் மகனின் நண்பன் வழி விளக்குகின்றார் சூடாமணி.

ஒரு தாய் தன் குழந்தையைச் சார்ந்திருப்பதால் அடையும் மன நிறைவிற்காகவோ அல்லது மகனின் தனித்தியங்கும் நிலை கண்டு அவளுள் எழும் கவலையாலோ, தன் குழந்தையைச் சார்ந்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருப்பதைக் கைவிடமுடியாதவளாக இருக்கிறாள். இத்தகு தாய் தன் குழந்தைக்கு மிகுதியான பாதுகாப்பைத் தருகிற தாயாகக் (over protective mother) கருதப்படுகின்றாள். இப்பாதுகாப்பு குழந்தைக்கு மிகுதியான சலுகையாக வடிவெடுப்பதால் அவனை/ அவளை வளர்ச்சியடைந்தநிலையிலும் எல்லாவற்றிலும் குழந்தைத் தன்மையுடனேயே வைத்திருக்கிறது; அல்லது தாயின் ஆக்கிரமிப்பு அவனை/அவளைத் தனித்து ஒன்றைப் புதிதாகச் செய்வதிலிருந்து அல்லது துணிவாகச் செய்வதிலிருந்து தடுத்து நிறுத்திவிடுகின்றது. (Encl , Vol. 18, p. 747). கணவன் இறப்பினால் ஏற்படும் தாயின் மனநிலையை உளவியல் அடிப்படையில் சித்திரிக்கின்றார் சூடாமணி.

ஒரு தாய் தன் மகனைத் தனது உடல் உறுப்புக்களில் ஒன்றைப் போல எண்ணுகின்றாள். தன் உடல் உறுப்பை என்றும் இழக்க விரும்பாத அவள் மனநிலைதான் மகனின் திருமணத்திற்குப் பின்னர் மாமியார் - மருமகள் போராட்டமாக உருவாகின்றது. விதவைத் தனியாக இருந்தால் தன் கணவனின் இறப்பினால் பேரிழப்பை உணர்ந்திருந்த நிலையில் மகன் திருமணத்தால் ஏற்படக்கூடிய மகனின் பிரிவு தாங்கவியலாததாகிவிடுகின்றது என்று தாய்க்கும் மகனுக்குமிடையேயுள்ள உறவின் நெருக்கத்தை உளவியல் அறிஞர் ராலின் சின்னையன் கூறுகின்றார். *

தாயின் அகப் போராட்டத்தையே சூடாமணி இந்நாவலில் காட்டுகின்றார். 'சத்துரு, என் ராஜா' என்றும், 'குழந்தை' என்றும் அன்பு ஒழுக அழைத்தும், ''உன்னைத் தவிர எனக்கு வேறு என்ன இருக்கிறது சத்துரு ?'' (பக். 15-16) என்று ஆவேசமாய்க் கூவியபடி திடீர் திடீரென்று அவனை அணைத்தும், ''உன் கண்களில் எனக்கு உலகமெல்லாம் தெரிகிறதடா கண்ணே'' என்று புன்னகைத்தும் பேசுவது தங்கத்தின் அகமனப் போராட்டத்தைப் புலப்படுத்துகின்றது. உறவு நிலையில் பாதிக்கப்பட்ட தாயின் மனப் பாதிப்புக்களைச் சூடாமணி சித்திரிக்கின்றார்.

3. 4 1. 1. 2. 2. *கணவனின் கொடுமை*

இறக்கும்வரை ஒருவர்மீது ஒருவர் நம்பிக்கை வைத்து வாழவேண்டிய இல்லற வாழ்வில் (Aileen D. Ross, 1973 p.155) தன் வாழ்விற்கும் உயிருக்கும் பாதுகாவலனாக இருக்கவேண்டிய கணவன் தன்னைக் கொடுமைப்படுத்தும்பொழுது, அவன் கொடுமையைத் தாங்க இயலாது மனைவி வீட்டைவிட்டு வெளியேறி விடுகிறாள்.

கணவனைத் துறக்கத் துணியும் அவள் உள்ளம், பெற்ற குழந்தையைத் துறக்கத் துணியவில்லை. குழந்தையுடனேயே வெளியேறி, எத்தகைய துன்பத்தை ஏற்றும் குழந்தையை வளர்க்கும் துணிவைத் தாய் பெற்று விடுகின்றாள். கணவன் கொடுமை

---

* 20 5.80 அன்று ஆய்வாளர் உளவியல் அறிஞர் டாக்டர் ராலின் சின்னையனுடன் நடத்திய பேட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அவள் இல்லற வாழ்வைச் சிதைத்தாலும், தாய்மை அன்பைச் சிதைக்கவில்லை. இச்சிக்கலை லக்ஷ்மியின் 'பண்ணையார் மகள்' எனும் நாவலும், சூடாமணியின் 'விடிவை நோக்கி' எனும் நாவலும் காட்டுகின்றன.

'பண்ணையார் மகள்' நாவலில் கணவனின் தீய ஒழுக்கத்தை அறிந்துவிட்ட தன்மீது வீண்பழி சுமத்தித் துன்புறுத்தும் கணவனை வெறுத்த வைதேகி, தன் ஒரு வயதுப் பெண்குழந்தையுடன் வீட்டைவிட்டு வெளியேறி விடுகின்றாள். தையலும், பாட்டும் பலருக்குக் கற்றுக்கொடுத்துத் தன் குழந்தையை வளர்க்கின்றாள். தன் தந்தை தீயவன் எனக் குழந்தை அறிவதைவிட அவன் இறந்துவிட்டான் என்று அவள் எண்ணுவதே மேலானது என வைதேகி எண்ணுகின்றாள். தான் இறக்கும் நேரத்திலேயே மகளிடம் உண்மையைக் கூறி, ''உன் பொருட்டு எவ்வளவோ தியாகங்கள் செய்யத் தயங்கவில்லை. ஆனால் கண்ணே உமா, உன்னைப் பிரிந்து வாழ மட்டும் என்னால் முடியவில்லை. அந்தத் தியாகத்தை உயிரோடு என்னால் செய்யவே முடியவில்லை,'' (ப.29) என்று கூறி இறக்கின்றாள். 'இத்தகு தாய்ப்பாசத்தை யாரும் சொற்களினால் விளக்கிச் சொல்லி முடியாது அவரவர் அனுபவத்தின் வழிதான் அறிந்து கொள்ளமுடியும்' என்று இந்நாவலின்வழி லக்ஷ்மி விளக்குகின்றார்.

தன் நோயைக் காரணம் காட்டித் தன்னைத் தன் மகனிடமிருந்து பிரித்தும் பல பெண்களைச் சுற்றியும் வந்த கணவனை வெறுக்கின்றாள், சூடாமணியின் 'விடிவை நோக்கி' நாவலில் வரும் பவானி. பவானியும் அவள் மகனும் தன் காவலையும் மீறி ஒருவரை ஒருவர் விரும்புவதை அறிந்து அவள் கணவன், மகனிடமிருந்து தாயைப் பிரிக்க எண்ணிய சூழ்ச்சியைப் பவானி அறிகின்றாள். தன் உடல் நோயையும் பொருட்படுத்தாது கணவனுக்குத் தெரியாமல் குழந்தையுடன் வீட்டைவிட்டு வெளியேறிவிடுகின்றாள். தாய்மை இன்பத்தை இடைவிடாது பருகவே அவள் சமூகத்தில் தன் இடத்தை இழப்பதையும், கையில் காசு இல்லாமல் அநாதையாகச் செல்வதையும்கூடப் பொருட்படுத்தாமல் வறண்ட உள்ளத்தை ஏந்திக்கொண்டு குழந்தையுடன் வெளியேறிவிடுகின்றாள் என்று அவள் உள்ள நிலையைச் சூடாமணி சித்திரிக்கின்றார் (ப. 38).

வைதேகி (பண்ணையார் மகள்), பவானி (விடிவை நோக்கி) ஆகிய இருவரின் கணவன்மாரும் செல்வந்தர்கள். மனைவியிடமோ, குழந்தையிடமோ பாசமற்றவர்கள். அதனை உணர்ந்தே வைதேகியும் பவானியும் தங்கள் குழந்தைகள் பாசமற்றப் பணக்காரத் தந்தையின் செல்வ சுகத்தில் வாழ்வதைவிட அன்பு நிறைந்த ஏழைத் தாயுடன் வறுமையில் வாழ்வது சிறப்பு என்ற எண்ணத்துடன் குழந்தையுடன் வெளியேறுகின்றனர். இருவரும் கணவனின் கொடுமையால் மனைவி என்ற இடத்திற்குரிய மதிப்பைவிடத் தாய்மைக்குரிய மதிப்பையே பெரிதாக எண்ணுகின்றனர் என்பதும் புலப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இத்தந்தையரினின்று சிறிதளவு வேறுபடுகின்றான் லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு' காட்டும் புஷ்பநாதன். தாயுடன் சேர்ந்து மனைவியைத் துச்சமாக எண்ணும் அவன் போக்கை வெறுத்து அவன் மனைவி வீட்டைவிட்டுக் குழந்தையுடன் வெளியேறிவிடுகின்றாள். புஷ்பநாதன் அவர்களை உடனே கண்டுபிடித்துக் குழந்தையை மட்டும் பறித்துக்கொண்டு வந்துவிடுகின்றான். குழந்தையிடம் அவன் மிக்க பாசம் கொண்டவனாயினும் தன் செயலால் மனைவியின் தாய்மை உள்ளத்தைப் புண்படுத்திவிடுகின்றான் (பக். 205-206).

குழந்தையிடம் பாசம் அற்றவனாயினும், பாசமுடையவனாயினும் கணவன் மனைவிக்குச் செய்யும் கொடுமை மனைவியின் தாய்மை உள்ளத்தைப் பாதிக்கின்றது. இங்குக் குழந்தையுடன் வெளியேறும் மூவரும் தம் பிறந்த வீட்டிற்கோ, உறவினர் வீட்டிற்கோ செல்லவில்லை. தனித்து நின்று உழைத்துக் குழந்தையைக் காப்பாற்ற முடியும் என்ற தன்னம்பிக்கை உடையவராகக் காணப்படுகின்றனர். இவர்களுள் காஞ்சனையின் கணவன் தன் தவறுணர்ந்து காஞ்சனையை அழைத்துக் கொள்கின்றான். மற்ற இருவரும் கணவனுடன் சேர்ந்து வாழ்வதாகச் சித்திரிக்கப்படவில்லை. வைதேகியின் குழந்தை தாயின் இறப்பிற்குப் பின்னர் தந்தையின் இருப்பிடத்திற்கு வந்துவிடுகின்றது. 'விடிவை நோக்கி' நாவலில் கணவனைவிட்டு மனைவி பிரிவதுடன் கதை முடிவு பெறுகின்றது.

3. 4. 1. 1. 3. குழந்தை

குழந்தை என்பது இங்கு ஆண்குழந்தை, பெண்குழந்தை என்ற இரு பாலினையும் பொதுவாகக் குறிக்கின்றது. குழந்தையாக இருக்கும்பொழுதும், அது வளர்ந்து பெரியவனாக/பெரியவளாக மாறும்பொழுதும் தாயைப் பொறுத்தவரை அது குழந்தையாகவே கருதப்படுகின்றது. குழந்தையால் தாய்க்கு ஏற்படும் மனச்சிக்கல் அதன் இறப்பினாலோ அன்றி வளர்ந்தபின் தாய்க்கும் மகனுக்கும் / மகளுக்கும் இடையே ஏற்படும் போராட்டத்தினாலோ ஏற்படுகின்றது. எனவே இச்சிக்கலை,

1) குழந்தையின் இறப்பு
2) மகள்-தாய் மனவேறுபாடு
3) மகன்-தாய் மனவேறுபாடு

என்று மூன்று வகைப்படுத்தி ஆராய்ந்து காணலாம்.

3. 4. 1. 1. 3. 1. குழந்தையின் இறப்பு

ஒரு பெண் மனைவியாக மட்டும் வாழும்பொழுது கணவனே உலகம் என வாழ்கின்றாள். ஆனால் அவள் தாயாகும்பொழுது கணவன் பின்னால் தள்ளப்பட்டுக் குழந்தை அவள் மனதில் முதலிடத்தைப் பெற்றுவிடுகின்றது. இவ்வாறு தாயின் உலகமாகக் காணப்படும் குழந்தை இறந்துவிட்டதெனில் அத்தாய்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்க்கையின் இன்பங்கள் எல்லாம் இறந்ததாக எண்ணுகிறாள். இத்தகைய தாயின் மனப்பாதிப்பை லக்ஷ்மியின் 'பவானி' நாவல் சித்திரிக்கின்றது.

'பவானி' நாவலில் தன்கணவனின் மூத்தமனைவியின் குழந்தையினால் கணவனுடன் மனவேறுபாடு கொண்டிருந்த பவானி தனக்கெனக் குழந்தை பிறந்ததும் கணவனை மறந்து குழந்தையையே தன் உலகமாக்கிக் கொள்கிறாள். ''எவ்வளவு தான் படித்த பெண்ணாக இருந்தாலும் தாய்மை எனும் பண்பில், படித்த பெண்ணிற்கும், படிக்காத பெண்ணிற்கும் இடையில் வேறுபாடு என்பது எதுவும் இல்லைதான்,'' (ப.138) என்று அவள் கணவன் கூற்றாகத் தாய்க்கும் குழந்தைக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றார் லக்ஷ்மி. நோய்வாய்ப்பட்டுக் குழந்தை இறக்கும் பொழுது மருத்துவரான தன் கணவனின் கவனிப்பினமையே அதற்குக் காரணம் என எண்ணி பவானி கணவனை வெறுக்கின்றாள். குழந்தை இறந்தபின்னர் கணவனுடன் மகிழ்ச்சியாக இருப்பதே அவளுக்குத் தவறாகப் படுகின்றது (ப. 155) குழந்தையின் இறப்பு கணவனை வெறுத்துப் பிரிந்து செல்லத் துணியும் அளவிற்கு அவள் மனநிலையைப் பாதித்துவிடுகின்றது.

பத்து மாசம் சுமந்து குழந்தையைப் பெற்றெடுக்கும் தாய் அது தெளிவற்ற உருவமுடையதாய் பிறக்கின்றபொழுது அடையும் துன்பத்திற்கு நிகரில்லை எனலாம். குழந்தையின் இறப்பை மனதால்கூட நினைத்துப் பார்க்காத தாய், இந்நிலையில் குழந்தை இருப்பதிலும் இறப்பதே மேல் எனக் கருதத் தொடங்குகிறாள். இத்தகைய தாயின் மனப் பாதிப்பைப் 'பிஞ்சுமுகம்' எனும் சூடாமணியின் நாவல் சித்திரிக்கின்றது.

'பிஞ்சுமுகம்' நாவலின், முகம் மட்டும் உருவாகி கையும் காலும் சதைப்பிண்டமாய் பிறந்த குழந்தையின் தாயாக நப்பின்னை சித்திரிக்கப்படுகின்றாள். ஆயுளெல்லாம் படுத்த படுக்கையாய், வாழ்வே துன்பச் சுமையாய், உயிரை நொந்து கொண்டு அமைதியின்றி நரகவேதனையில் உழன்றுகொண்டிருக்க வேண்டிய குழந்தைக்குக் (ப. 90) காச்சல் வர, மருத்துவ மாணவியான நப்பின்னை கம்பவுண்டர் மாற்றித் தந்துவிட்ட மருந்து குழந்தையைக் கொன்று விடும் எனத் தெரிந்தே குழந்தைக்கு அதைக் கொடுக்க குழந்தையும் இறந்து விடுகின்றது.

நப்பின்னையின் செயல் கேட்பதற்குக் கொடுஞ் செயலாகத் தோன்றுகின்றது. இச்செயலை, ''மாடு அடிபடுவதைக் கண்டாலும் சகியாத காருண்யம், தான் பெற்ற குழந்தைக்காக இயங்காமல் இருக்கமுடியுமா?'' (ப. 70) என்றும் 'யாருக்கு எவ்விதத்தில் நன்மை கிட்டமுடியுமோ அவ்விதத்தில்தான் அதை நாம் அவர்களுக்குத் தர இயலும் என்ற கொள்கை பரோபகாரத்தின் தன்னலமற்ற சிகரம்' (ப. 71) என்றும் நியாயப்படுத்துகின்றார் சூடாமணி. தன் குழந்தை இறந்ததைப்பற்றி யாரிடமும் பேச விரும்பாத நப்பின்னை (ப. 16), தன் இறந்த குழந்தையின் எண்ணத்தில் அதன் முகத்தைமட்டும் ஓவிய-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாக்கிக் காணத் துடிக்கின்றாள். "அவள் தாய்தான். தாயின் அன்பும் துயரமும் தியாகமும் உறுதியும் ஒருங்கே அமையப்பெற்ற பூரணவடிவம். அவள் செய்ததைச் செய்ய ஒரு தாயின் அருளால்தான் முடியும்," (ப. 71) என்பது நப்பின்னை பற்றிய சூடாமணியின் கருத்து.

ஆய்வாளர் சூடாமணியுடன் நடத்திய நேர்முகப் பேட்டியில் இக்கருத்து பற்றி வினவிய பொழுது 'இது தவறல்ல' என்றே சூடாமணி வலியுறுத்தினார். ஒரு பெண் தன் விருப்பத்தை அடக்க பழகியிருப்பாளேயானால் தன் சொந்த குழந்தையை அவள் கொல்வது கொலையாகாது. அது அவள் தன் குழந்தையிடம் கொண்டிருந்த அன்பின், பற்றின் வெளிப்பாடாகத்தான் கருதப்படும். இதனை 'நோவில்லாச் சாக்காடு' (ethanasia) என்பர் எனக் கூறும் உளவியல் அறிஞர் ராலின் சின்னையனின் கருத்தும் ஈண்டு உணரத்தக்கது.*

குழந்தை இறப்பினால் கணவன், உலகம் என அனைத்தையும் வெறுக்கும் தாயை லக்ஷ்மி படைத்துக்காட்ட, உருவமற்ற குழந்தை உலகத்தில் படவிருக்கும் துன்பத்தை எண்ணி அதன் இறப்புக்குத் தானே காரணமாகும் தாயைச் சூடாமணி காட்டுகின்றார். மிக நுண்ணிய உளவியல் அடிப்படையில் சூடாமணி இங்குத் தாயின் மனச்சிக்கலைக் காட்டுகின்றார்.

3. 4. 1. 1. 3. 2. *மகள்-தாய் மனவேறுபாடு*

குடும்பச் சூழலோ, தாயின் சில பழக்கங்களோ தாய்-மகள் உறவைப் பாதிக்கின்றன. தான் சுமந்து பெற்றெடுத்த குழந்தையே தன்னிடம் மனவேறுபாடு கொள்வது தாயின் மனதைப் பாதிக்கின்றது. இம் மனவேறுபாட்டிற்குப் பின்வரும் காரணங்கள் காணப்படுகின்றன :

1) தாயின் குலச் சிறுமை
2) தாயின் மறுமணம்
3) குடும்ப வறுமை

3. 4. 1. 1. 3. 2. 1. *தாயின் குலச் சிறுமை*

கலப்புத் திருமணத்தில் தாயின் குலம் கீழ்க்குலமாகவும், தந்தையின் குலம் மேற்குலமாகவும் இருந்தது எனில், அவர்களின் குழந்தைக்குத் தாயின் குலத்தின் மேல் வெறுப்பு ஏற்படுகின்றது; குழந்தையின் வெறுப்பு தாயைப் பாதிக்கின்றது. சூடாமணியின் 'மங்கை' எனும் நாவல் இச்சிக்கலைச் சித்திரிக்கின்றது. தேவதாசிக் குலத்தைச் சேர்ந்த தாய்க்கும் அந்தணர் குலத்தைச் சேர்ந்த தந்தைக்கும் பிறந்த மங்கை தாயின் குலத்தை வெறுக்கின்றாள். படித்தவரான தந்தையின் குலத்தைத் தான் சேர வேண்டுமாயின் தானும் படிக்க வேண்டும் என்று படிக்-

* 20 5 80 அன்று ஆய்வாளர் உளவியல் அறிஞர் டாக்டர் ராலின் சின்னையனுடன் நடத்திய பேட்டி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றாள். தன்மீது உயிரையே வைத்திருக்கும் தாயிடம் மங்கைக்கு அன்பிருந்தாலும் தாயின் குலத்திற்காக அவளை வெறுக்கின்றாள். வறுமைச் சூழலில் படிப்பைத் தொடர முடியாத மங்கை தற்கொலை செய்துகொள்ளத் துணிந்தபொழுது அதனைத் தடுத்தத் தாயிடம், ''எல்லாம் உன்னாலேதான். நீ ரொம்ப படிக்க வச்சிருவே இல்லே? படிக்காதே படிக்காதேன்னு சொன்னியே, இப்போ சந்தோஷமா? என் அப்பாதான் நல்லவரு. நான் உயிரை விட்டுவிட்டு ஒரு வழியா நிம்மதியாயிருக்கலாம்னா அதைக்கூட பாழ் செய்துட்டே நீ!'' (ப.121) என்று குமுறுகின்றாள். குடும்பத்தைக் கவனிக்காது அலையும் தந்தையிடம் அவள் கொண்டிருந்த அன்பைத் தாயிடம் அவள் காட்டவில்லை. இதற்குத் தாயின் குலச்சிறுமையே காரணமாக விளங்குகின்றது. மேல்நிலையாக்கத்தினை விரும்பும் கீழ்க்குலத்தாருடைய மனப்போராட்டமே மங்கையின் மனப்பாதிப்பிற்குக் காரணமாகின்றது என்றும் கூறலாம் (காண்க, 3. 9. 2 5) தாய், மகளை இந்நிலையிலும் வெறுக்கவில்லை. மகள் தன்னிடம் காட்டும் வெறுப்பை எண்ணியே வருந்துகின்றாள்.

3. 4. 1. 1. 3. 2. 2. *தாயின் மறுமணம்*

மனைவியை இழந்த கணவன் மறுமணம் செய்துகொள்வது இயல்பு. ஆனால் கணவனை இழந்த மனைவி மறுமணம் செய்துகொள்வதைச் சட்டம் ஏற்றுக் கொண்டாலும் சமுதாயம் முழுமையாக ஏற்றுக்கொள்ளாத நிலை காணப்படுகின்றது. விதவைத் தாயின் மறுமணம் திருமண வயதுடைய மகள்-தாய் உறவில் சிக்கலை எழுப்புவதை 'உயர்வு உள்ளத்திலே' எனும் சூடாமணியின் நாவல் காட்டுகின்றது. தனித்து வாழ இயலாமையினால் மறுமணம் செய்துகொண்ட கௌரியைத் திருமணவயது வந்த மகள் ராதா வெறுக்கின்றாள். திருமணத்தைப் புனிதமான உறவென எண்ணும் மகளின் உள்ளம் தாயின் செயலை ஏற்க மறுக்கின்றது; தாயை ஏசுகின்றாள் (ப.119). தன் செயலால் மகளின் திருமணமும் தடை பட்டதை அறிந்த கௌரி, ''எத்தனை கொடிய அநீதி அவளுக்கு இழைத்துவிட்டேன். அவள் விதியைப் பாவி நான் மாற்றிவிட்டேனே?'' (ப.127) என்று புலம்புகின்றாள். கௌரி செய்துகொண்ட மறுமணம் அவளது தாய்மை உள்ளத்தைப் பாதிப்பதாகப் பின்னால் அமைந்துவிடுகின்றது.

3. 4. 1. 1. 3. 2. 3. *குடும்ப வறுமை*

குடும்பத்தில் வறுமை ஏற்படும்போது அங்கு உறவு, பாசம் முதலியன அதற்குமுன் சக்தியற்றுப் போகின்றன. வறுமையினால் ஒரு தாய் தான் பெற்ற மகளையே அந்நியளாக எண்ணுகின்றாள். தாயின் அந்நியத்தன்மை மகள்-தாய் உறவைப் பாதிப்பதை லக்ஷ்மியின் 'மரகதம்' நாவல் காட்டுகின்றது.

'மரகதம்' நாவலில் தான்பட்ட கடனுக்காகத் தன் மகள் மரகதத்தைப் பணக்கார நொண்டிக்கு அவள் தந்தை மணமுடிக்க முயற்சிக்கும்பொழுது மரகதம் வீட்டைவிட்டு அண்டைவீட்டானோடு ஓடிவிடுகின்றாள். ஓடிய மரகதம் தன் கணவனுடன் மன-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறுபாடு கொண்டு மீண்டும் தாய்வீட்டிற்கு வருகிறாள். கடனை அடைக்கத் தந்தை நிலத்தை விற்றதன் காரணமாகக் குடும்பம் வறுமையில் வாடிக்கொண்டிருந்த வேளையில் மகளின் வரவு தாய்க்கு எரிச்சலைத் தருகின்றது. முன்னர் தன் மகள் திருமணத்திற்கு மறுப்பதை ஆதரித்த தாய் இப்பொழுது தன் வறுமை நிலைக்குக் காரணம் மகளே என எண்ணி மகளை வெறுக்கின்றாள். இதன் விளைவாக மகள்-தாய் உறவு பாதிக்கப்படுகின்றது. வறுமை, தாயின் மனதிலுள்ள பாசத்தையே அழித்து விடும் வல்லமை வாய்ந்தது என்பதை லக்ஷ்மி இந்நாவலில் சித்திரிக்கின்றார்.

3. 4. 1. 1. 3. 3. *மகன் - தாய் மனவேறுபாடு*

மகனே தனக்கு யாவும் என எண்ணி வாழும் தாயின் சில செயல்கள் மகனுக்குத் தாயிடம் உள்ள அன்பைக் குறைத்துவிடுகின்றன. மகனின் அன்பின்மை தாயின் உள்ளத்தைப் பாதிக்கின்றது. இச்சிக்கலை 'நாயக்கர் மக்கள்' எனும் லக்ஷ்மியின் நாவலும், 'நீயே என் உலகம்' எனும் சூடாமணியின் நாவலும் சித்திரிக்கின்றன.

'நாயக்கர் மக்கள்' நாவலில் ஒரு வஞ்சகனால் ஏமாற்றப்பட்ட முத்தம்மாள் ஓர் ஆண்குழந்தைக்குத் தாயாகின்றாள்; அவள் மகன் தங்கவேலன் முரடனாகவும், தாய் மீது சிறிதும் அன்பற்றவனாகவும் வளர்கின்றான்; தாய் தனக்காகப் பாடுபடுவதைச் சிறிதும் உணராதவனாகக் காணப்படுகின்றான். தன் தாயைக் காப்பாற்றிவரும் நாயக்கரிடம் தங்கவேலன், ''ஐயா, உங்களது அனுதாபம் எனது அவமானத்தின் அஸ்திவாரம் என்பதை அறிகிறீர்களா? முத்தம்மாளின் பிள்ளை தந்தையில்லாதவன் என்று பிறர் பழிக்கும் இந்த அவமான வாழ்க்கையைத் தேடிக்கொடுத்த உங்களை நான் வெறுக்கின்றேன்,'' (ப.395) என்று கூறுவதிலிருந்து அவன் உளப்போராட்டம் தெளிவாகின்றது மகனின் வெறுப்பே தாய் நோய்வாய்ப்பட்டு இறக்கவும் காரணமாகின்றது. தாயின் தவறான ஒழுக்கம் மகனின் உணர்வுகளைப் பாதிப்பதையும், தாயிடம் மகனுக்கு அன்பு வளர்வதற்கு மாறாக வெறுப்பே வளர்வதையும், மகனின் வெறுப்பு தாயை பாதிப்பதையும் லக்ஷ்மி இந்நாவலில் சித்திரிக்கின்றார்.

தாய் தன் மகனிடம் கொள்ளும் எல்லையற்ற அன்பு, தாய்-மகன் உறவைப் பாதிக்கின்றது என்பதை 'நீயே என் உலகம்' நாவலில் சூடாமணி காட்டுகின்றார். தங்கம் மகன் சந்துருவிடம் கொண்ட அன்பு அவனை அவனுடைய அன்புக்குரியவர்களிடமிருந்தெல்லாம் பிரித்துவிடுகின்றது. சந்துருவின் காதலி வேறொருவனை மணக்கவிருக்கின்றாள் என்பதை அறிந்த தங்கம், மகன் காதல்தோல்வியால் துன்புறுவான் என்பதை உணர்ந்து அவன் மனதை மாற்ற விரும்புகின்றாள். சந்துருவின் காதலி அன்புப் பரிசாக அளித்த அவனுக்குப் பிடித்த நீலநிறக் கம்பளிச் சட்டையின் நிறத்தை மாற்றிக் கூறுவதன்வழி காதலி உண்மையற்றவள் என்பதைச் சந்துருவிற்குத் தங்கம் உணர்த்துகின்றாள். நண்பனின் துணையால் கம்பளிச் சட்டையின் நீல

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நிறத்தை உணர்ந்துகொண்ட சந்துரு தாயின் எண்ணத்தை அறியாது, தாய்மீது தான் கொண்டிருக்கும் அன்பு குறைந்துவிடக் கூடாது என்பதற்காகப் பொய் கூறிக் காதலியைத் தன்னிடமிருந்து பிரிக்கத் தாய் விரும்புகின்றாள் என எண்ணித் தாயை வெறுக்கின்றான். இவ்வெறுப்பு தாயிடமிருந்து அவனைத் தனியே பிரித்து விடுகின்றது. மகன் பிரிந்து செல்வதற்கு உரிய காரணத்தை அறியாத தங்கம் மகனின் பிரிவால் துடிக்கின்றாள். இங்குத் தாய் மகன்மீது காட்டும் எல்லையற்ற அன்பு மகன் மனதில் ஐயத்தைத் தோற்றுவித்துத் தாய்-மகன் உறவைப் பாதிக்கின்றது.

3. 4. 1. 1. 4. *மருமகள்*

மகன் தன்மீது காட்டும் அன்பைப் பங்கிட வந்தவள் மருமகள் என்ற எண்ணம் தாய்க்கு ஏற்படுகின்றது. தாயின் மனச் சிக்கலுக்கு மருமகள் காரணமாகின்றாள் (காண்க, 3.5.1 1.1 2- இச்சிக்கலை லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு' நாவல் சித்) திரிக்கின்றது

3. 4. 1. 1 5. *தான் காரணம்*

தாயின் மனச்சிக்கலுக்குப் பெரும்பாலும் மற்றவர்கள் காரணமாயினும், சின்னேரங்களில் அவளே காரணமாகிவிடுவதும் உண்டு. இதற்கு.

1) தாயின் தீய ஒழுக்கம்
2) தாயின் பாலுறவு வெறுப்பு

என்பவை காரணங்களாகக் காணப்படுகின்றன.

3. 4. 1. 1. 5. 1. *தாயின் தீய ஒழுக்கம்*

தாய் குழந்தையின் நலனுக்காகத் தானே உலகத்தின் தீமைகளையெல்லாம் தாங்கிக் கொள்ளத் துணிகின்றாள்; ஆனால் அவளே நிலைதடுமாறித் தீய ஒழுக்கத்தை மேற்கொண்டால், அவள் உள்ளத்தில் சிக்கல் ஏற்படுகின்றது; அதன் விளைவாகத்தான் பெற்ற குழந்தையையே தாய் வெறுக்கின்றாள்; அல்லது குழந்தையைப் பிரிந்து வாழ்கின்றாள்; தீய ஒழுக்கத்தை மேற்கொண்ட தாய் தானும் மகிழ்ச்சியாக இருப்பதில்லை. தன் குழந்தையையும் மகிழ்ச்சியாக வாழவிடுவதில்லை. இத்தகைய தாய் மனநிலைகளை லக்ஷ்மியின் 'பண்ணையார் மகள்', சூடாமணியின் 'தீயினில் தூசு' ஆகிய நாவல்கள் சித்திரிக்கின்றன.

'பண்ணையார் மகள்' நாவல் சித்திரிக்கும் இளம் விதவை ஷண்பகவல்லி பண்ணையாருடன் கொண்டிருந்த கள்ளத் தொடர்பு ஊரார் அறியாதது; அதன் விளைவாக இரு குழந்தைகளைப் பெற்ற ஷண்பகவல்லி, குழந்தைகளின் பிறப்பு தன் ஒழுக்கத்தை ஊராருக்கு வெளிச்சமிட்டுக் காட்டிவிடும் என அஞ்சி, பண்ணையாரின் துணையோடு குழந்தைகளைப் பிறந்தவுடன் கொன்றுவிடுகின்றாள். தாய்ப்பாசம் என்பதை தன் கள்ள உறவிற்காகத் துறக்கத் துணிகின்றாள். 'தன்னைக் காப்பாற்றிக் கொள்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வதற்காக இளம் தாயர் முறைகேடான வழியில் பிறந்த தன் குழந்தைகளை எவ்வித மனப்பாதிப்பும் இன்றித் துறந்துவிடத் துணிகின்றனர்' என்ற கருத்திற்கேற்ப (Helene Deutsch, 1947, p. 42) ஷண்பகவல்லியின் தாயுள்ளம் இந்நாவலில் காணப்படுகின்றது.

ஷண்பகவல்லிக்கு நேர்மாறான அருணாவைச் சூடாமணியின் 'தீயினில் தூசு' சித்திரிக்கின்றது. விலைமகள் போன்று வாழ்ந்த அருணா தனக்கென ஒரு குழந்தை பிறந்ததும் விலைமகள் தொழிலை விட்டுவிட்டு ஒழுக்கமுள்ள தாயாக வாழ எண்ணுகின்றாள். அவளது தாயன்பைப் பின்வருமாறு காட்டுகின்றார், சூடாமணி: ''அவளிடத்து எத்தனையோ தீய பண்புகள் இருப்பினும் மகன் மோகனை நினைத்தால் மட்டும் பகட்டையும் பொய்யையும் ஜால வாழ்வையும் பிளந்து கொண்டு அடிப்படையிலிருந்து ஓர் ஆழ்ந்த அன்பு அவளுள் நிஜப்பொருளாய்த் தோன்றித் துடிக்கும்'' (ப. 60). சூழலால் சிறைக்குச் சென்ற அருணா மகனைப் பிரிந்து மீண்டும் அவனைக் கண்டபொழுது, மோகன் தன்னை 'அம்மா' என அழைக்காது வளர்த்த தாயை அழைப்பதை எண்ணிப் பொறாமை கொள்கின்றது அவளது தாயன்பு. தாயன்பினால் விளைந்த பொறாமை உணர்வு வளர்த்த தாய்க்கு எவ்விதக் கொடுமையைச் செய்யவும் துணிகின்றது.

தாயின் தீய ஒழுக்கத்தினால் ஏற்படும் தாய் மனச்சிக்கலைச் சித்திரிப்பதில் இரு படைப்பாளிகளும் மாறுபடுகின்றனர். லக்ஷ்மி படைக்கும் ஷண்பகவல்லி விதவை; பண்ணையார் ஊரின் பெரிய மனிதர். எனவே, தம் உறவினைச் சமுதாயம் ஏற்காது என்று இருவரும் அஞ்சுகின்றனர்; இவ்வச்சமே ஷண்பகவல்லியின் தாயன்பை அழித்துவிடுகின்றது எனலாம். சூடாமணி படைக்கும் அருணா திருமணமாகாதவள். இளவயது முதலே தன்னிச்சைப்படி வாழ்ந்தவள்; கட்டுப்பாடான வாழ்க்கையை வெறுப்பவள்; எனவே, அவள் சமுதாயத்தைக் கண்டு அஞ்சவில்லை. ஒழுக்கக்கேட்டின் விளைவாகத் தனக்குப் பிறந்த மகனை அருணா துணிவாக ஏற்றுக்கொள்கின்றாள்; விலைமகள் தொழிலைவிட்டுத் தாயாக வாழத் துடிக்கின்றாள்.

3 4 1. 1. 5 2 *தாயின் பாலுறவு வெறுப்பு*

ஒரு தாயின் உள்ளப் பாதிப்புக்கு, அவளுக்குப் பாலுறவில் ஏற்படும் வெறுப்பும் ஒரே வழி காரணமாக அமையும். பாலுறவில் ஈடுபாடு இல்லாதவள் தாயாகிவிட்டால், அவளுக்குக் குழந்தையிடம் அன்பு ஏற்படாமல் போகின்றது: அவளது தாய்மையே அவளுக்கு அதிர்ச்சியைத் தருகின்றது. இச்சிக்கலை சூடாமணி 'இரவுச்சுடர்' எனும் நாவலில் காட்டுகின்றார்.

சிறுவயது முதற்கொண்டு தனிமையையும் இருளையுமே விரும்பிவாழும் யாமினி இல்லற வாழ்க்கையை வெறுக்கின்றாள். பெற்றோரின் கட்டாயத்தினால் திருமணம் முடிகின்றது. யாமினி தாய்மை அடைந்த பொழுது கருவிலேயே குழந்தையைக் கொன்றுவிட முயற்சி செய்கின்றாள்; குழந்தை பிறந்த பின்னர் பைத்தியமாகின்றாள்; குழந்தையைக் கண்டால் அவளுடைய வெறி மிகுதியாகின்றது (ப 64). யாமினியின் மனநிலையை உளவியல் நோக்கில் சூடாமணி சித்திரிக்கின்றார் (காண்க. 3. 3. 1. 2 2. 2).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாய்மனச் சிக்கலைச் சூடாமணி சித்திரிப்பது போன்று லக்ஷ்மி சித்திரிக்கவில்லை. லக்ஷ்மியின் தாய்மனச்சிக்கல் சித்திரிப்பில் மென்மையான உளவியல் சிக்கல்கள்தான் காணப்படுகின்றன. சூடாமணி ஆழமான உளவியல் சிக்கலைத் தாய் மனச் சித்திரிப்பில் கையாளுகின்றார்.

3 4 1. 2, *சிக்கல் இன்மை*

தாய்-குழந்தை உறவில் சிக்கல் இல்லாத நிலைதான் பெரும்பான்மையாகக் காணப்படுவதாகும். இங்கு தாய் மகனை / மகளை வெறுப்பதோ, மகன் / மகள் தாயை வெறுப்பதோ நிகழ்வதில்லை. தாயும் குழந்தையும் மகிழ்ச்சியாகக் காணப்படுகின்றனர். லக்ஷ்மியின் (1) அடுத்தவீடு, (2) பெண்மனம், (3) மிதிலா விலாஸ், (4) ஸ்ரீமதி மைதிலி, (5) மாயமான், (6) லட்சியவாதி, (7) நாயக்கர் மக்கள் எனும் நாவல்களும், சூடாமணியின் (1) மனத்துக்கினியவள், (2) செந்தாழை, (3) பிஞ்சுமுகம், (4) ஆழ்கடல், (5) உயர்வு உள்ளத்திலே என்ற நாவல்களும் சிக்கலற்ற தாய்மையைச் சித்திரிக்கின்றன.

மகன் தீயவனாயினும் (பெண்மனம்), குடும்பப்பற்றற்றவனாயினும் (மிதிலா விலாஸ்), சிறைக்குச் சென்றவனாயினும் (நாயக்கர் மக்கள்), மனைவியை நேசித்துத் தாயிடம் பாசம் குறைந்து காணப்படுபவனாயினும் (நாயக்கர் மக்கள்) தாய் மகனை வெறுப்பதில்லை, மகனும் தாயை வெறுப்பதில்லை என லக்ஷ்மி காட்டுகின்றார்.

3. 4. 1. 3. *சிக்கல் ஒப்பீடு*

பெற்ற தாயின் சிக்கல் உண்மையையும், சிக்கலின்மையையும் ஆராய்ந்து காணுகின்றபொழுது பின்வரும் சில உண்மைகள் புலப்படுகின்றன :

ஒரு குடும்பத்தின் தலைமை தந்தை கையிலோ அல்லது மகனின் கையிலோ இருந்தது என்றால் அங்கு மாமியார் ஆதிக்கத்தால் எழும் தாயுள்ளச் சிக்கல் எழுவதில்லை. மருமகள் தாயாகின்றபோது அவள் உள்ளத்தில் மாமியார் ஆதிக்கம் சிக்கலைத் தோற்றுவிக்கின்றது. அன்புக் கணவனையுடைய தாயின் (wife-mother) மனதில் சிக்கல்கள் எழுவதில்லை. முதுமையில் கணவனை இழந்த தாய் தன் எதிர்காலத்தைப் பற்றிய அச்சம் இன்றி அன்பு நிறைந்த குடும்பத்தில் வாழும்பொழுது அவள் மனதில் சிக்கல் தோன்றுவதில்லை. இளம் வயதில் கணவனை இழந்த தாயின் மனதில் மகனின் எதிர்காலத்தைப்பற்றிய அச்சம், முதலியன தோன்றிச் சிக்கலைத் தோற்றுவிக்கின்றன.

கணவனைப் பிரிந்து வாழும் தாயின் உள்ளத்தில் சிக்கல் தோன்றுகின்றது.

பொதுவாகத் தாயின் குடும்ப வாழ்க்கையில் காணப்படும் ஏதேனும் ஒரு குறை தாயுள்ளத்தில் சிக்கலை எழுப்ப இன்றியமையாக் காரணமாகின்றது. குறையற்ற வாழ்வினை உடைய தாயின் உள்ளத்தில் சிக்கல் எழுவதில்லை என்ற கருத்து இந்த ஒப்பீட்டின்வழி புலப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3 4. 1. 3 1. பெற்ற தாயிடத்துக் காணப்படும் மனச்சிக்கல்களைப் புள்ளியியல் வழி காணலாம்.

சிக்கலின் காரணங்கள்	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
1) மாமியாரின் ஆதிக்கம்	1	12.50	—	—	1	6.25
2) கணவன்	2	25.00	2	25.00	4	25.00
3) குழந்தை	3	37.50	4	50.00	7	43.75
4) மருமகள்	1	12.50	—	—	1	6.25
5) தான்	1	12.50	2	25.00	3	18.75
மொத்தம்	8	100.00	8	100.00	16	100.00

தாயுள்ளச் சிக்கலுக்குக் குழந்தை காரணமாவதே மிகுதியாக உள்ளதை இருவர் நாவல்களிலும் காணமுடிகின்றது. குடும்பத்தில் இருக்கும் ஏனைய உறவுகளை விடத் தாய்-குழந்தை உறவுதான் அன்பு வாய்ந்ததாகக் காணப்படுகின்றது எனச்சமூகவியலறிஞர் கூறும் கருத்தும் (Aillen D. Ross, 1973, p. 137) ஈண்டு ஒப்புநோக்கத்தக்கது.*

பெற்ற குழந்தையின் துன்பத்தைக் கண்டு மனம் பொறுக்காத தாயே அதனைக் கொன்றுவிடுவது, தேவதாசிக்குலமகள் தன் தாயை வெறுப்பது, விதவைத்தாயின் மறுமணம், தாயின் பாலுறவு வெறுப்பு என்ற தாய்மைச் சிக்கல்களைச் சூடாமணி கையாள்கின்றார். இச்சிக்கல்களை லக்ஷ்மி தன் நாவல்களில் படைக்கவில்லை.

சூடாமணியின் நாவல்களில் இடம்பெறாது லக்ஷ்மியின் நாவல்களில் இடம் பெறும் தாய் மனச்சிக்கல்கள் பழமை சார்ந்தவை. ஆனால் சூடாமணி கூறும் சிக்கல்கள் புதியவை. மரபை

---

* ஆலன் டி ராஸ் இந்தியாவில் பேட்டி கண்ட 157 தகவலாளர்களிடமிருந்து கீழ்க்கண்ட முடிவுகள் தெரியவருகின்றன.

தாய்-மகன் உறவு அன்புடன் இருப்பது	—	115
தாய்-மகன் உறவு வெறுப்பு	—	5
தாய்-மகள் உறவு அன்புடன் இருப்பது	—	42
தாய்-மகள் உறவு வெறுப்பு	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மீறாது வாழ்க்கையை அமைத்துக்கொள்ளும் போக்கினை விரும்புவார் லக்ஷ்மி. காலம் மாற மாற வாழ்க்கை முறைகள் மாறி வருகின்றன; இச்சூழலில் தாய்-குழந்தை உறவில் ஆழமான உளவியல் அடிப்படையிலும், சமுதாய மாற்றங்களின் அடிப்படையிலும் இத்தகைய சிக்கல்கள் தோன்றலாம் என்பது சூடாமணியின் கருத்து.* இவர்தம் கருத்துக்களை இவர்களுடைய நாவல்கள் வெளிக்காட்டுகின்றன.

3. 4. 2. 0. *வளர்ப்புத் தாய் : சிக்கல் இன்மை*

இங்கு வளர்ப்புத் தாய் எனப்படுபவள் சங்க இலக்கியங்களில் காணப்படும் செவிலித்தாய் அல்லள்; கிராமங்களிலோ, நகரங்களிலோ குழந்தையைக் கவனித்துக்கொள்ள ஊதிய அடிப்படையில் அமர்த்தப்படும் வளர்ப்புத் தாயும் அல்லள். பத்து மாதம் சுமந்து குழந்தை பெறாமலே தாய்ப் பாசத்துடன் தாயற்ற குழந்தையை வளர்ப்பவளே வளர்ப்புத் தாய் என்று குறிப்பிடப்படுகின்றாள். பெற்ற தாயிடம் காணப்படும் பாசம், பரிவு, கருணை அனைத்தும் இவளிடமும் காணப்படும். வளர்ப்புத் தாயை லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்' நாவலும், 'தீயினில் தூசு' என்ற சூடாமணியின் நாவலும் சித்திரிக்கின்றன.

'சூர்யகாந்தம்' நாவல் காட்டும் காந்திமதி மணமாகி, மகப்பேறின்றி, கணவன் மாற்றாளுடன் தொடர்பு கொண்டுள்ளதைக் கண்டு வெறுத்து, கணவனை விட்டு வந்து அண்ணனுடன் வாழ்கின்றாள். அங்கு வளர்ந்து வரும் தாயற்ற தன் தங்கைமகள் மீதும், தன் அண்ணன்மகன் மீதும் அன்பு செலுத்துகின்றாள். அண்ணனது இளைய மனைவியால் துன்புறுத்தப்படும் குழந்தைகளின் நிலை கண்டு வெகுண்டு தங்கை குழந்தை தமயந்தியுடன் வீட்டைவிட்டு வெளியேறிப் பல துன்பங்களுக்கிடையில் அவளைப் படிக்கவைத்து முன்னேற்றுகின்றாள்; சிற்றன்னையின் கொடுமையினால் தன்னிடம் வந்துவிட்ட அண்ணன் மகனையும் வளர்க்கின்றாள். எந்தவிதமான கைம்மாறும் கருதாது குழந்தைகளை வளர்த்து ஆளாக்கும் காந்திமதியை, ''குழந்தையைப் பெற்றுவிட்டதனால் மட்டும் ஒரு பெண் தாயாகிவிடமாட்டாள்; குழந்தையை ஆசையுடன் வளர்த்து, மனிதன் ஆக்கும் பெரும் பணியைச் செய்வதனால் தான் பெண் தாய் எனும் பதவியை அடைகின்றாள்.'' (ப. 377) என்று மற்றவர்கள் புகழ்வதன் வாயிலாகத் தாய்மையின் இலக்கணத்தை லக்ஷ்மி விளக்குகின்றார்.

'தீயினில் தூசு' காட்டும் வாசுகி திருமணமாகாதவள்; தன் வாழ்க்கையையே குலைத்த அருணாவின் முறைகேடான நடத்தையால் பிறந்த குழந்தையை வளர்க்கும் பொறுப்பை மனமுவந்து ஏற்றுக்கொள்கின்றாள். வாசுகி திருமணமாகாத பெண்ணாகிய தான் ஒரு குழந்தையை வளர்ப்பதால் தனக்கு ஏற்படும் பாதிப்புக்-

---

* ஆய்வாளர் 30-1-79 அன்று படைப்பாளிகளுடன் நடத்திய நேர்முகப் பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

களைப்பற்றியோ, தன் பிற்கால வாழ்வைப்பற்றியோ சிறிதும் எண்ணாது வாழ்கின்றாள். உயிர்த் தொண்டு செய்யும் மருத்துவத் தாதிப் பணி அவளிடத்தில் இயல்பாகவே தாய்மை உணர்வைத் தந்திருந்தது. அவளது காதலன் குழந்தையோடு அவளை ஏற்கத் தயங்குகையில், ''ஊர் ஏசலுக்கு அஞ்சாமல், என் குழந்தையை வெறுக்காமல், என் அன்புக்கு மதிப்பு கொடுத்து என்னை உள்ளபடியே ஏற்கும் உன்னத மனிதனை மணக்கும் பெருமையை எனக்கு அளியுங்கள்,'' (ப. 41) என்று வேண்டுகின்றாளேயன்றிக் காதலுக்காகக் குழந்தையைப் பிரிந்துசெல்லத் துணியவில்லை.

இவ்விரு வளர்ப்புத் தாயாரில், திருமணமான காந்திமதியின் வளமற்ற வாழ்வில் வளத்தைச் சேர்க்கின்றனர் அவளது வளர்ப்புக் குழந்தைகள். அவள் உள்ளத்தில் உறங்கிக் கிடந்த தாய்மை உணர்வு, குழந்தைகளுக்கு இழைக்கப்படும் கொடுமை கண்டு துடித்து எழுகின்றது. காந்திமதி மணமானவளாதலால் சமுதாயத்திற்கு அஞ்ச வேண்டிய நிலை இல்லை; அவளால் வளர்க்கப்படும் குழந்தைகளும் அவளுடைய உறவினர் குழந்தைகளே.

வாசுகியால் வளர்க்கப்படும் குழந்தையோ வாசுகியின் தந்தையை வாசுகியிடமிருந்து பிரித்து, அவளுடைய திருமண முயற்சியைத் தடுத்து, வாசுகியை வீட்டை விட்டே விரட்டிய அருணாவின் குழந்தை. அருணா தனக்கிழைத்த கொடுமையையெல்லாம் எண்ணாது அவளுடைய குழந்தையை அன்புடன் வளர்க்கின்றாள் வாசுகி. அக்குழந்தைக்காகத் தன் வாழ்வையே தியாகம் செய்யவும் துணிகின்றாள். அருணா பின்னர் தன் மகனைக் கேட்டுவரும்பொழுது மலர்ச்சியுடன் அவனை அவளிடம் ஒப்படைக்கின்றாள்.

இவ்விரு வளர்ப்புத் தாயரில் பகைவர்க்கும் அருள் செய்யும் பண்புள்ளம் கொண்டவளாக வாசுகி காணப்படுகிறாள். தாயற்ற குழந்தைக்குத் தேவைப்படும் தாயாக இருக்க விரும்புகிறாள். திருமணமாகாத பெண் (Helene Deutsch, 1947, p. 350) என்ற கருத்துக்குச் சான்றாகின்றாள் வாசுகி. உலக வழக்கில் தாயற்ற தங்கை, அண்ணன் குழந்தைகளை அவர்தம் உடன் பிறந்தாள் எடுத்து வளர்க்கும் வழக்கம் காணப்படுகின்றது; தன் உடன்பிறந்தார் குழந்தைகளை வளர்க்கும் வளர்ப்புத் தாயாக காந்திமதி விளங்குகின்றாள்.

3. 4. 3. 0. *மாற்றாந்தாய்*

ஓர் ஆடவனின் இளைய மனைவி, கணவனுக்கு மூத்த மனைவியின் வழி குழந்தைகள் இருப்பின் அக்குழந்தைகளுக்கு மாற்றாந்தாய் ஆகிறாள். மாற்றாந்தாயை, தாயற்ற குழந்தைக்குத் தாயின் இடத்தை நிறைவு செய்யவந்த செவிலித்தாய் அல்லது வளர்ப்புத் தாய் என்பர் உளவியலார் (Helene Dustsch, 1947, p. 383).

3. 4. 3. 1. *சிக்கல் உண்மை*

கருவிலே உருவாகும் குழந்தைகளை விரும்பும் தாய், தன் மாற்றானின் குழந்தைகளை வெறுக்கின்றாள். வெறுப்பிற்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குக் காரணம் பொறாமையும், சொத்துரிமையும் ஆகும் எனலாம் (காண்க, 3. 2. 1. 2. 5.)

3. 3. 3. 2. *சிக்கல் இன்மை*

மாற்றாந்தாய் மனதில் சிக்கலற்ற நிலையைச் சூடாமணி-யின் 'இரவுச்சுடர்' குறுநாவல் சித்திரிக்கிறது. ராமேசனின் இளையமனைவியாகிய வசந்தி தன் மூத்தாள் குழந்தையான கீதாவிடம் அன்பு செலுத்துபவளாகக் காணப்படுகின்றாள். வசந்தி-யின் மனதிற் பொறாமையின்மைக்குக் கீதா தன் மாற்றாந்தா-யுடன் வசிக்காது, சிறுவயது முதலே பாட்டியிடம் வளர்வது ஒரு காரணம் எனலாம்; பெண்குழந்தையின்றி இரு ஆண்குழந்-தைகளுக்கு மட்டும் தாயாக வசந்தி விளங்குவதும் காரணம் எனலாம்.

மாற்றாந்தாய் மனதில் சிக்கலற்ற நிலையைச் சூடாமணி மட்டுமே சித்திரிக்கின்றார். லக்ஷ்மி மாற்றாந்தாய் மனதில் சிக்-கல் உண்மையை மட்டும் சித்திரிக்கின்றார்.

3. 4. 4. 0. உளவியல் அடிப்படை கொண்டு ஆராய்ந்த தாயாரை, கட்டமைப்பு (structure) என்பதனுள் அடக்கி, அதன் வழித் தாய்மையின் பல்வேறு நிலைகளைக் காணலாம்.

3. 4. 4. 1. *கட்டமைப்பு 1*

(மிதிலா விலாஸ், பெண்மனம், அடுத்தவீடு, ஸ்ரீமதி மைதிலி, மனத்துக்கினியவள், ஆழ்கடல், பிஞ்சுமுகம், உயர்வு உள்ளத்திலே)

Aயும் Bயும் Cயும் சேர்ந்து வாழும் மகிழ்ச்சியான வாழ்க்-கையை இந்நாவல்களில் காணலாம். இங்குச் சிக்கல் ஏதும் எழ-வில்லை.



3. 4. 4. 2. *கட்டமைப்பு 2*

(மாயமான், லட்சியவாதி, செந்தாழை, காஞ்சனையின் கனவு)

கணவன், மனைவி, மகன்/மகள் என வாழும் குடும்பத்தில் கணவன் இறந்தாலும் சிக்கல் இல்லை. தாயும் குழந்தையுமாக

குறியீடு விளக்கம்

A — மணம் செய்துகொண்ட கணவன், தந்தை
A_1 — விதவையை மணந்தவன்
A_2 — ஊராருக்குத் தெரியாமல் Bயுடன் கள்ளத்தொடர்பு கொண்டவன்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழும் வாழ்க்கை காட்டப்படுகின்றது. ‘மாயமான்’, ‘லட்சிய-வாதி’, ‘செந்தாழை’ ஆகிய மூன்று நாவல்களிலும் தாய்க்கும் குழந்தைக்குமிடையே உள்ள அன்பு சிக்கலற்றுக் காணப்படுகின்றது ‘காஞ்சனையின் கனவு’ என்ற நாவலில் கணவனின் இறப்பினால் தாய் மகனிடம் மிகுதியான அன்பு காட்டுவதால் தாய் மனப் பாதிப்பு ஏற்படுகின்றது.



3. 4. 4. 3. கட்டமைப்பு 3

காஞ்சனையின் கனவு

தாய், தந்தை, குழந்தை என்று ஒன்றாக வாழ்ந்த குடும்பத்தில் தந்தை கணிகையுடன் கொண்டுள்ள தொடர்பு காரணமாகத் தாய் தனியே பிரிந்து வாழ்கின்றாள். தந்தையும் குழந்தையும் தனித்து வாழ்கின்றனர். பின்னர் மூவரும் ஒன்றுகூடுகின்ற நிலையைக் காணலாம்.

B — மணம் செய்துகொண்ட மனைவி, தாய்
B_1 — மாற்றாந்தாய்
B^1 — கன்னித்தன்மை மாறாத வளர்ப்புத் தாய்
B^2 — மணமான வளர்ப்புத் தாய்
C — A க்கும் B க்கும் பிறந்த குழந்தை
C_1 — A க்கும் B_1 க்கும் பிறந்த குழந்தை
C_2 — வளர்ப்புக் குழந்தை
\+ — சேர்ந்து வாழும் நிலை
— — இறப்பினால் ஏற்படும் இழப்பு
(—) — பிரிவினால் ஏற்படும் இழப்பு
x — கணவனுக்குள்ள வேறு தொடர்பு
[x] — தாயின் தீய ஒழுக்கம், தாயே குழந்தையின் கொலைக்குக் காரணமாதல்
□ — தாய்க்குப் பாலுறவில் ஏற்படும் வெறுப்பு
Cy — குழந்தைக் கொலை
B_1y — மாற்றாந்தாயின் கொடுமை
→ ↓ — ஒரு பாத்திரம் ஒரு நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறுவது

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



3. 4. 4. 4. கட்டமைப்பு 4

(பண்ணையார் மகள், விடிவை நோக்கி)

இங்கும் கணவனின் தீய ஒழுக்கத்தினால் தாய் கணவனை விட்டுப் பிரியும் நிலை காணப்படுகின்றது. ஆனால் தாய்தனியே வெளியேறாமல் தன் குழந்தையையும் எடுத்துக்கொண்டே வெளியேறுகிறாள்.



கட்டமைப்பு 3-க்கும் 4-க்கும் உள்ள ஒற்றுமை தாயாரின் வெளிநடப்பேயாகும். கணவன் மற்றொரு பெண்ணுடன் தொடர்பு கொண்டிருப்பதே இதற்குக் காரணம் ஆகும். கணவன் தன் மனைவியைப் புறக்கணித்தாலும், குழந்தையிடம் அன்பு காட்டும்பொழுது, அவளால் குழந்தையை எடுத்துக் கொண்டு தனியே செல்ல முடியவில்லை. குழந்தையிடமும் சரிவர அன்பைக் கணவன் காட்டாதபோது, தாய் குழந்தையுடனேயே வெளியேறி விடுகின்றாள். குடும்பப்பெண்கள் வீட்டை விட்டு வெளியேறக் கூடாது என்பது தமிழர் மரபு. ஆனால் இரு படைப்பாளிகளின் நாவல்களிலும் பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறுவதாகக் காணப்படுகின்றது. கணவனோ அல்லது கணவனும் மாமியாருமோ ஒரு பெண்ணைக் கொடுமைப்படுத்தினால் அப்பெண் 'கல்லானாலும் கணவன்' என்று கொடுமையைப் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டியதில்லை; கணவனை விட்டுப்பிரிந்து தனியே வாழலாம் என்பது இரு படைப்பாளிகளும் கூறும் புதிய கோட்பாடு எனலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 4 4. 5. கட்டமைப்பு 5

(நீயே என் உலகம்)

இங்கும் முந்தைய அமைப்பைப் போன்றே கணவன் இறக்க, தாயும் மகனுமாகச் சேர்ந்து வாழும் வாழ்க்கை காணப்படுகின்றது. ஆனால் மகன்மீது தாய் காட்டும் அதிக அன்பு, வெறியாக மாறி, அவனிடம் தன்னைத் தவிர யாரும் அன்பு செலுத்துதல் கூடாது என்று எண்ணும்பொழுது, அவள் மகனாலேயே வெறுக்கப்பட்டுத் தனியாகப் பிரிந்து வாழவேண்டிய நிலைக்கு உள்ளாகின்றாள். பின்னரே தவறுணர்ந்து தாயும் மகனும் ஒன்று சேர்கின்றனர்.



3. 4. 4. 6. கட்டமைப்பு 6

(பவானி)

கணவனிடம் கொண்ட மன வேறுபாட்டினால் மனைவி குழந்தையுடன் பிறந்த வீடு சென்றுவிடுகின்றாள். அங்கு குழந்தை இறக்க, மருத்துவராயிருந்தும் கணவன் குழந்தையைக் கவனிக்கவில்லை என்று அவன்மேல் வெறுப்புக்கொண்டு மனைவி கணவன் வீட்டிற்கு வர மறுத்துவிடுகின்றாள். இறுதியில் மனைவி தன் தவறையுணர இருவரும் ஒன்று சேர்கின்றனர்.



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.4.4.7. கட்டமைப்பு 7

(தீயினில் தூசு)

இங்கு தாய் முறையற்ற நட்புகொண்டு ஒரு குழந்தைக்குத் தாயாகின்றாள். தாயாக்கியவன் ஓடிவிடுகின்றான். தாயும் குழந்தையைவிட்டுப் பிரிந்து விடுகின்றாள் தாய் ஓரிடத்திலும் குழந்தை ஓரிடத்திலும் வாழ, இறுதியில் இருவரும் இணையும் நிலை காணப்படுகின்றது.



3.4.4.8. கட்டமைப்பு 8

(நாயக்கர் மக்கள்)

தாய் ஒரு கயவனிடத்து ஏமாந்து குழந்தையைப்பெறுகின்றாள். ஊராருக்கு அஞ்சிய அவள் ஊரைவிட்டு ஓடிவந்து தனியே வாழ்கின்றாள். தாயும் மகனுமாக இணைந்து வாழ்கின்றனர்.



3.4.4.9. கட்டமைப்பு 9

(பண்ணையார் மகள்)

தாய் ஊராருக்குத் தெரியாமல் ஒருவனிடம் கொண்டுள்ள தொடர்பின் விளைவாகத் தனக்குப் பிறந்த குழந்தைகளை, வெளி உலகத்திற்குத் தெரியாமல் இருக்க, அவளே கொன்றுவிடுகின்றாள். அதன் பின்னரும் கள்ளக் காதலனுடனேயே அவள் வாழ்கின்றாள்.



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 4. 4. 10. கட்டமைப்பு 10

(இரவுச்சுடர்)

தாய்க்குப் பாலுறவில் ஏற்படும் வெறுப்பின் காரணமாகத் தான்பெற்ற குழந்தையைப் பேணாதவளாகக்காணப்பட்டு பைத்தியமாகின்றாள். தந்தை மறுமணம் புரிந்துகொள்ள, குழந்தை தன் பாட்டியிடம் வளர்கின்றது.



3. 4. 4. 11. கட்டமைப்பு 11

(உயர்வு உள்ளத்திலே)

தாய் இளவயதில் விதவையாகின்றாள்; அவள் அண்ணன் அவளுக்கு மறுமணம் முடித்து, அவள் குழந்தையைத் தானே வளர்த்து வருகின்றார். தாயும் அவள் இரண்டாம் கணவனும் ஒன்றாக வாழ, குழந்தை தனித்து வாழ்கின்றது.



3. 4 4.12. கட்டமைப்பு 12

(மரகதம்)

வறுமையின் காரணமாகப் பெற்றோருக்குக் குழந்தையின் மீது வெறுப்பு ஏற்படுகின்றது. மகள் தங்கள் பேச்சைக் கேட்காததின் விளைவுதான் வறுமையின் நுழைவு என்று மகளை வெறுக்க, மகள் பெற்றோரை வெறுத்துத் தனியே சென்றுவிடுகின்றாள்.



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 4. 4. 13 கட்டமைப்பு 13

(தீயினில் தூசு)

இவ்வமைப்பு ஒரு குழந்தையை வளர்க்கும் கன்னித்தன்மை மாறாத வளர்ப்புத் தாயைக் காட்டுகிறது. இங்குக் கணவன் இல்லை. வளர்ப்புக் குழந்தை மட்டும் தான் காணப்படுகின்றது.

$$B_1 + C_2$$

3. 4. 4. 14. கட்டமைப்பு 14

(சூர்ய காந்தம்)

தனக்கெனக் குழந்தை இல்லாத மணமான பெண் கணவனின் நடத்தை கண்டு வெளியேறிப் பின்னர் வளர்ப்புக் குழந்தையுடன் வாழ்கின்றாள்.



3. 4. 4. 15. கட்டமைப்பு 15

(பவானி, மரகதம், சூர்யகாந்தம், தீயினில் தூசு)

மாற்றாந்தாய், தந்தை, மூத்த மனைவியின் குழந்தை இளையமனைவியின் குழந்தை ஆகியோர் இணைந்து வாழ்கின்றனர். மூத்தமனைவியின் குழந்தையை மாற்றாந்தாய் கொடுமைப்படுத்துவதால் அக்குழந்தை வீட்டைவிட்டு வெளியேறி விடுகின்றது. அதன்பின்னர் தந்தை, இளையமனைவி, இளையமனைவியின் குழந்தை ஆகியோர் இணைந்து வாழ்கின்றனர்.



3. 4. 4. 16. கட்டமைப்பு 16

(பெண்மனம்)

மாற்றாந்தாய்க் கொடுமையினால் மூத்தமனைவியின் குழந்தை வெளியேறாத நிலையும் காணப்படுகின்றது.

$$A + B_1 + C + C_1$$

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 4. 4 17. *கட்டமைப்பு 17*

(அரக்கு மாளிகை)

மாற்றாந்தாய்க் கொடுமை இருந்தும், தந்தையின் அன்பு வலுவுடையதாக இருப்பதினால் மாற்றாந்தாய், தந்தை, குழந்தை மூவரும் இணைந்து வாழும் வாழ்க்கையும் காணப்படுகின்றது. இளையமனைவிக்குக் குழந்தை இல்லை.

$$A + B_1 + C$$

3. 4. 4. 18. *கட்டமைப்பு 18*

(மிதிலா விலாஸ்)

மாற்றாந்தாய்க் கொடுமையின்றி மாற்றாந்தாய், கணவன், முதல்மனைவியின் குழந்தைகள், மாற்றாந்தாயின் குழந்தைகள் என இணைந்து வாழும் குடும்பத்தில் கணவன் இறந்துவிடுகின்றான். மாற்றாந்தாயை முதல்மனைவியின் குழந்தைகள் விரட்டிவிடுகின்றனர். மாற்றாந்தாய் தன் குழந்தையோடு தனித்து வாழ்கின்ற நிலை காணப்படுகின்றது.



இவ்வாறு இருபத்திரண்டு நாவல்களையும் பதினெட்டு அமைப்பில் அடக்கிக் காணலாம்.

3. 4. 5. 0. *இரு படைப்பாளிகளின் நாவல்களிலும் காணப்படும் சில பொது இயல்புகள்*

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரின் நாவல்களையும் ஒப்பிட்டு ஆராய்கின்றபொழுது சில பொது இயல்புகள் காணப்படுகின்றன.

3.4.5.1. இருவருடைய நாவல்களிலும் குடும்பத்தை விட்டு வெளியேறும் பெண்கள் காணப்படுகின்றனர். அப்பெண்கள் கணவனைவிட்டு வெளியேறுகின்றனர்; தம்மைக் காப்பாற்றுவாரை விட்டு வெளியேறுகின்றனர்; கணவனையும் காப்பாற்றுவாரையும் விட்டு வெளியேறுகின்றனர்; அல்லது தம் பெற்றோரை விட்டு வெளியேறுகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணவனைவிட்டு வெளியேறுபவர்	—	காஞ்சனை (காஞ்சனையின் கனவு) வைதேகி (பண்ணையார் மகள்) பவானி (பவானி) பவானி(விடிவை நோக்கி)
காப்பாற்றுவாரை விட்டு வெளியேறுபவர்	—	தங்கம் (நீயே என் உலகம்)
கணவனையும் தன்னைக் காப்பாற்றுவாரையும் விட்டு வெளியேறுபவர்	—	காந்திமதி (சூர்யகாந்தம்)
பெற்றோரைவிட்டு வெளியேறுபவர்	—	மரகதம் (மரகதம்) வாசுகி (தீயினில் தூசு)

லக்ஷ்மி ஐந்து நாவல்களில் பெண்கள் வீட்டைவிட்டு வெளியேறுவதைக் காட்ட, சூடாமணி மூன்று நாவல்களில் இதனைக்காட்டுகின்றார்.

3.4 5 2. மாற்றாந்தாயின் கொடுமையினால் குழந்தைகள் வீட்டைவிட்டு வெளியேறிவிடுவதாக இருவருமே காட்டுகின்றனர். அந்த அளவு மாற்றாந்தாய்க் கொடுமை காணப்படுகின்றது என்ற கருத்தை இருவரும் ஏற்கின்றனர்.

3.4.5.3. தாயுள்ளத்தைக் காட்டும் நாவல்களில் 'பண்ணையார் மகள்', 'இரவுச்சுடர்' எனும் இரண்டினைத் தவிர ஏனையவற்றில் தாய் - மகன் உறவே இருவராலும் சித்திரிக்கப்படுகின்றது. மகள் மற்றொரு வீட்டிற்குத்தான் உரியவள் என்பதால் அவ்வுறவுச் சிக்கலை இரு படைப்பாளிகளும் காட்டவில்லை என்று உணரமுடிகின்றது. தாய் - மகள் உறவைவிட, தாய்-மகன் உறவே சமுதாயத்தில் ஆழமாகக் காணப்படுகின்றதும் இதற்குக் காரணமாகும்.

3.4.5.4. தாயன்பு பல நிலைகளைக் கொண்டாலும், பல போராட்டங்களைச் சார்ந்தாலும், மாற்றாந்தாய்க் கொடுமை, குழந்தையைக் கொலை செய்யும் தாய், உளக்குறையுடைய தாய் என்னும் நிலைகள் நீங்கலாக, அந்த அன்புக்கு நிகர் அதுதான் என்பதை இருவரும் தம் படைப்புக்களில் நிறுவுகின்றனர்.

3.4.6.0. லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரின் நாவல்களை ஒப்பிட்டு ஆராயும்பொழுது கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்படுகின்றன.

மகன் எத்தகைய பண்புடையவனாக இருப்பினும் தாய் அவனை வெறுப்பதில்லை. மாமியார் ஆதிக்கம், தாய்க்கும் குழந்தைக்குமிடையே உள்ள பாசத்தை நீக்க முயல்கின்றது என லக்ஷ்மி சித்திரிக்கின்றார். இதனைச் சூடாமணி சித்திரிக்கவில்லை. கணவனின் இறப்பிற்குப் பின்னர் மனைவி முழுமை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யான தாயாக மாறி விடுகிறாள்; மகன்மீது தாய்கொண்ட அன்பு தீவிரமாகின்றது; மகனுக்கு இன்னலைத் தரும் அன்பாகவும் அது மாறிவிடுகின்றது எனச் சூடாமணி சித்திரிக்கின்றார். இதனை லக்ஷ்மி சித்திரிக்கவில்லை. தாயின் ஆக்கிரமிப்பு அன்பு மகனின் குடும்பவாழ்க்கையைச் சிதைத்துவிடும் என்ற கருத்தை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். கணவனின் கொடுமை மனைவியை வீட்டைவிட்டு வெளியேற்றி விடுகின்றது; மனைவி வெளியேறும்பொழுது தன் குழந்தையுடன் தான் வெளியேறுகின்றாள்; குழந்தையைப் பிரிய அவள் மனம் ஒப்புவதில்லை என இருபடைப்பாளிகளும் வலியுறுத்துகின்றனர். குழந்தையின்மீது கொண்ட அன்பினால் தாய் தன் கணவனைப் புறக்கணிக்கவும் துணிகின்றாள். குழந்தை இறந்து விட்டால் அதன்பின்னர் தாய், தான் மகிழ்ச்சியாக இருப்பது தவறு எனக் கருதுகின்றாள் என்பதனை, லக்ஷ்மி சித்திரித்துக் காட்ட, சூடாமணி இதனைச் சித்திரிக்கவில்லை. தாயின் குலச்சிறுமை, விதவைத்தாயின் மறுமணம், குடும்பத்தில் நிலவும் வறுமை முதலியன தாய் - மகள் உறவைப் பாதிக்கின்றன எனச் சூடாமணி குறிப்பிடுகின்றார். தாயின் தவறான ஒழுக்கத்தினால் பிறந்த மகன் தாயை வெறுக்கின்றான் என்று லக்ஷ்மி குறிப்பிடுகின்றார்.

ஒரு பெண் தீயஒழுக்கமுடையவளாக இருப்பினும், தாயான பின்னர் தீயஒழுக்கத்தைவிட்டுத் தாயாகமட்டுமே வாழ விரும்புகிறாள் என்று சூடாமணி சித்திரிக்க, தீயஒழுக்கத்தினால் தான் பெற்ற குழந்தைகளைத் தாய் கொல்லவும் துணிகின்றாள் என லக்ஷ்மி சித்திரிக்கின்றார். தாயின் பாலுறவுச் சிக்கல் அவள் உள்ளத்தைப் பாதித்து, தாய்-மகள் உறவை அழித்து விடுகின்றது. தாயின் மறுமணம் தாயின் வாழ்விலும் குழந்தையின் வாழ்விலும் குழப்பங்களை விளைவிக்கின்றது என சூடாமணி குறிப்பிடுகின்றார்.

தன்னால் வளர்க்கப்படும் குழந்தைகளுக்காகத் தன் வாழ்வையே தியாகம் செய்யும் வளர்ப்புத் தாயரை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர்.

தன் மூத்தாள் குழந்தையிடம் சிறிதும் அன்பு காட்டாதவராகப் பெரும்பான்மையான மாற்றாந்தாயர் காணப்படுவதை இரு படைப்பாளிகளும் சுட்டுகின்றனர்.

சூடாமணியின் தாய்மைப் படைப்பில் உணர்ச்சிப் போராட்டம் மிகுதியாகக் காணப்படுகின்றது. லக்ஷ்மியின் தாய்மைப் படைப்பு இயல்பாகக் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 5. மாமியார் மருமகள் உறவு

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

மாமியார்-மருமகள் உறவில் ஏற்படும் சிக்கலுக்கான காரணங்களை இவ்வியல் ஆராய்கின்றது. கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற அடிப்படையில் மாமியார்-மருமகள் உறவு-நிலை ஆராயப்படுகின்றது. கூட்டுக் குடும்பங்களில் ஏற்படும் மாமியார்-மருமகள் உறவுச் சிக்கலுக்கு மாமியாரும், மருமகளும் காரணமாக விளங்குவது விளக்கப்படுகின்றது; சிக்கலுக்கான காரணங்கள் ஆராயப்படுகின்றன. கூட்டுக்குடும்பத்தில் காணப்-படும் இவ்உறவுச்சிக்கலை லக்ஷ்மி சித்திரிக்க, சூடாமணி சித்திரிக்-காததன் காரணம் ஆராயப்படுகின்றது. கூட்டுக் குடும்பங்களில் மாமியாரின் ஆதிக்கம் மிகுந்திருப்பதன் காரணம் நிறுவப்படுகின்-றது. தனிக்குடும்பத்தில் மாமியார்-மருமகள் உறவுச் சிக்கலை லக்ஷ்மி சித்திரிக்க, தனிக்குடும்பத்தில் நிலவும் மாமியார்-மருமகள் ஒற்றுமையைச் சூடாமணி சித்திரிக்கின்றார். இரு படைப்பாளி-களிடமும் காணப்படும் இவ்வேறுபாட்டிற்கு இருவரும் நாவல்கள் எழுதிய காலத்திய குடும்ப அமைப்பு, இருவருடைய வாழ்க்கைப்-பின்னணி ஆகியன காரணங்களாகின்றன என்ற முடிவும் ஒப்பிடப்-பட்டு நிறுவப்படுகின்றது.

3. 5. *மாமியார்-மருமகள் உறவு*

3. 5. 0. 1. மாமியார்-மருமகள் உறவு என்பது பெரும்பான்-மையான குடும்பங்களில் காணப்படும் சிக்கல் மிக்க உறவாகும். பொதுவாக மாமியார் தன் மருமகளைக் கொடுமைப்படுத்து-பவளாகவும், மருமகளிடம் கண்டிப்பு மிக்கவளாகவுமே காணப்படு-கின்றாள். வீட்டில் அரசியாக விளங்கும் மாமியாருக்குத்தன் அதி-காரத்தில் பங்குகொள்ள இன்னொரு பெண் வரும்பொழுது, அவ-ளால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அதனாலேயே மாமியார் மருமகளிடம்கண்டிப்பாக இருக்க நேரிடுகின்றது.(Aileen D Ross, 1973, p. 116). இத்தகைய மாமியார் ஆதிக்கம், குடும்பத்-தின் இன்றியமையாத இடத்தை ஏற்றிருக்கும் ஒருவரின் அடிமன-திலிருந்து வரும் எதிர்ப்பாகும் என்று கூறலாம். ஒவ்வொரு பெண்-ணிடத்தும் உடைமைப் பண்பு (possessive nature) என்பது அடிப்-படைப் பண்பாகக் காணப்படுகின்றது. தன்மகனைப் பாலூட்டிச்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சீராட்டி வளர்த்த பின்னர் அவனை அப்படியே அவன் மனைவியிடம் ஒப்படைக்கத் தாயின் உடைமை உணர்வு அனுமதிப்பதில்லை. அவனுடைய மனைவியும் தன் கணவன் தனக்கே உரியவனாக இருப்பதைத்தான் விரும்புகின்றாளேயன்றி, தன் மாமியாரின் பேச்சுக்குத் தலையசைப்பவனாக இருப்பதை விரும்புவதில்லை. இந்நிலையில் தாய்-மனைவி என்ற இருவருக்குமே ஒருவரிடம் ஒருவருக்கு ஐயம் தோன்றுகின்றது (Radha Venkataraman, 1975, p. 117). ஆடவனுக்கு தான் யாருடைய மகிழ்ச்சிக்குக் காரணமாக அமைவது என்ற புரியாத நிலை ஏற்படுகின்றது. இங்குதான் மாமியார் மருமகள் உறவில் சிக்கல் எழத் தொடங்குகின்றது.

3. 5. 0. 2. இந்திய குடும்ப அமைப்பில் தந்தையைவிட தாய்க்கு அதிக மதிப்பு உண்டு. ஒரு மகனுக்குத் தன் பெற்றோரை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதே குறிக்கோளாகக் காணப்படுகின்றது (Margaret Cormack, 1961, p. 122). தந்தை-மகனுக்கு இடையே உள்ள உறவைவிடத் தாய்-மகனுக்கு இடையே உள்ள உறவு ஆழமானதாகக் காணப்படுகின்றது. மகன் தன் தாயை முழுமையாகச் சார்ந்தே காணப்படுகிறான். தாய்க்கும் மகனுக்குமிடையே உணர்ச்சி வயப்பட்ட அன்புத்தளை இருப்பதால் மகன் வாழ்வில் தொடர்பு கொள்ளும் மருமகளிடத்தில் எதிர்ப்புணர்ச்சியுடன் தாய் பழகுகின்றாள்; தாயின் எதிர்ப்புணர்ச்சிகளுக்கு வடிகாலாக மருமகள் அமைந்து விடுகிறாள். மாமியார் தன்னுடைய வலிமை மிக்க இடத்தைப் பற்றியதுடன் முழுவதுமாக அதனைப் பயன்படுத்திக்கொண்டு விடுகிறாள் (Margaret Cormack, 1961, p. 122). இவ்வாறு மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழ இன்றியமையாத காரணமாகத்தாய்-மகன் நெருக்கமான உறவு அமைந்துவிடுகின்றது எனலாம்.

3. 5. 0. 3. மாமியார் - மருமகள் உறவை லக்ஷ்மியின் (1) மிதிலா விலாஸ், (2) அடுத்தவீடு, (3) காஞ்சனையின் கனவு, (4) பவானி, (5) மரகதம், (6) பண்ணையார் மகள் (7) நாயக்கர் மக்கள், (8) பெண்மனம், (9) லட்சியவாதி ஆகிய ஒன்பது நாவல்களும், சூடாமணியின் 'செந்தாமரை' எனும் நாவலும் காட்டுகின்றன.

இப்பத்து நாவல்களை ஆராய்ந்து காணும்பொழுது மாமியார்-மருமகள் உறவில் எழும் சிக்கல்களைக் அடுத்த பக்கத்தில் உள்ள வரைபடத்தின்வழி விளக்கலாம் :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாமியார் — மருமகள் உறவு

- கூட்டுக்குடும்பம்
  - சிக்கல் உண்மை
    - மாமியாரால் சிக்கல்
      - செல்வ வேறுபாடு (மிதிலா விலாஸ், பவானி)
      - மகன்மீது மிகுதியான பற்று (காஞ்சனையின் கனவு)
    - மருமகளால் சிக்கல்
      - மருமகளின் பொறாமை (மிதிலா விலாஸ்)
      - மருமகளின் மீதுள்ள அவதூறு (பண்ணையார் மகள்)
  - சிக்கல் இன்மை (பெண்மனம், லட்சியவாதி, பவானி)
- தனிக்குடும்பம்
  - சிக்கல் உண்மை
    - மாமியாரால் சிக்கல்
      - மகனின் கலப்புத் திருமணம் (பெண்மனம், அடுத்தவீடு)
      - மூத்தாள் மகன் மேல் வெறுப்பு (மரகதம்)
    - மருமகளால் சிக்கல்
      - மருமகளின் நடத்தை (நாயக்கர் மக்கள்)
  - சிக்கல் இன்மை (செந்தாமரை)

இவர்களிடையே சிக்கலுக்கு மகனோ தந்தையோ காரணமின்மை குறிப்பிடத்தக்கது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 5. 1. 0. கூட்டுக் குடும்பம்

இந்தியக் குடும்பங்களைக் கூட்டுக் குடும்பம் (joint family) என்றும், தனிக்குடும்பம் (nuclear family) என்றும் இரண்டாகப் பிரித்துக் காணலாம். கூட்டுக்குடும்பம் என்பது ஒரே கூரையினடியில், பொதுச் சொத்தில் ஒரே சமையலறையில் சமைத்து, ஒரே உணவு அறையில் உண்டு, ஒரே வழிபாட்டு அறையில் வழிபாடு செய்யும் உறவினர்களைக் கொண்டது (Aileen D. Ross, 1973, p. 9) இங்கு தாய், தந்தையோடு திருமணமான மகன் அல்லது மகள் தம் குடும்பத்தாரோடு சேர்ந்து வாழ்வர். பெற்றோர் இறந்த பிறகு உடன் பிறந்தார் தனித்தனியே செல்லும்,நிலையையும், பெற்றோர் இறந்த பின்னர் அந்த வீட்டிலேயே மகனும் மருமகளும் வாழும் நிலையையும் தனிக்குடும்பம் என்பர் (M. S Gore, 1968, p. 37 .) பெற்றோர் உயிருடன் இருக்கும் பொழுதே மகன் வேலை காரணமாக வெளியூரில் அல்லது ஒரே ஊரில் தன் மனைவி குழந்தைகளுடன் தனியாக வாழ்வதும் தனிக் குடும்பமாகும்.

கூட்டுக் குடும்ப அமைப்பில் மருமகள் தன் மாமியாருடனே வாழ்கின்றாள். அவ்வாழ்க்கையில் குடும்பத்தை நடத்துபவளாக மாமியாரே காணப்படுகின்றாள். தன் மருமகளைப் பொறுமையுடன் நடத்திச் செல்லும் மாமியார்களைவிடத் தன் அதிகாரத்தைக்காட்டும் மாமியார்களே மிகுதியாகக் காணப்படுகின்றனர் (Margaret Cormack, 1961, p. 122). மாமியார் மனித வடிவத்தில் இருக்கும் பேய் என்றும், கையில் பிரம்புடன் தன் மருமகளைத் துன்புறுத்துவதையே தன் மகிழ்ச்சியாகக் கொண்டிருப்பவள் என்றும் சித்திரிக்கப்படுகின்றாள் (Radha Venkataraman, 1975, p. 116).

3. 5. 1. 1. *சிக்கலுண்மை*

கூட்டுக்குடும்பங்களில் ஏற்படும் மாமியார்-மருமகள் உறவுச் சிக்கலை இப்படைப்பாளிகளின் நாவல்களின்வழி பின் வருமாறு இருவகையாகப் பிரித்துக் காணலாம்.

1) மாமியாரால் சிக்கல்
2) மருமகளால் சிக்கல்

3. 5. 1. 1. 1. *மாமியாரால் சிக்கல்*

கூட்டுக்குடும்ப வாழ்வில் மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழ மாமியாரே காரணமாகின்றாள். வீட்டிலுள்ள மற்ற உறவினரைவிட மருமகளிடத்திலே தன் செல்வாக்கை வெளிப்படையாக மாமியார் காட்டுவது மரபாகவே காணப்படுகின்றது (M.S. Gore, 1968, p. 114). மருமகளிடம் தன் செல்வாக்குடன், வெறுப்பையும் இணைத்தே மாமியார் செலுத்துகின்றாள். மருமகளிடத்து மாமியார் கொள்ளும் வெறுப்பிற்கான காரணங்களைக் கீழ்க்கண்டவாறு இருவகைப்படுத்தலாம் :

1) செல்வ வேறுபாடு
2) மகன்மீது மிகுதியாகப் பற்று

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 5. 1. 1. 1. 1. செல்வ வேறுபாடு

ஒரு செல்வக் குடும்பத்துத் தாய், தனக்கு மருமகளாக வருபவள் தங்கள் செல்வநிலைக்கு இணையான குடும்பத்திலிருந்து வருபவளாக இருக்கவேண்டும் என விரும்புகிறாள்; நடுத்தரக் குடும்பத்துத் தாயும், தங்கள் குடும்பநிலையை உயர்த்த செல்வக் குடும்பத்துப் பெண்ணே மருமகளாக வேண்டும் என விரும்புகிறாள். தாய்க்கு செல்வத்தின் மீதுள்ள ஆசை, உறவையும் பொருட்படுத்துவதில்லை. தங்கள் குடும்பத்தைவிடத் தாழ்ந்த செல்வநிலை உள்ள குடும்பத்துப் பெண் மருமகளாகும் பொழுது செல்வ வேறுபாடு மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழக் காரணமாகின்றது. இச்சிக்கலை லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்', 'பவானி' ஆகிய இரு நாவல்களும் சித்திரிக்கின்றன.

'மிதிலா விலாஸ்' நாவலில் மகனின் தீய நடத்தை காரணமாக அவனுக்குப் பெண் கொடுப்பாரில்லாமல் வேறு வழியின்றி ஏழைக் குமாஸ்தாவின் மகளான சியாமளாவை மருமகளாக்கிக்கொள்கின்றாள். 'மிதி விலாலா'ஸின் தலைவி தர்மாம்பாள். திருமணத்திற்குப் பின்னர்தான் இரு குடும்பங்களுக்கு இடையே உள்ள செல்வ வேறுபாடு அவளுக்குப் பெரிதாகத் தோன்றுகின்றது; அது மருமகள் மீது வெறுப்பாக மாறுகின்றது.''பிடிக்காத துப்புக்கெட்ட இந்தப் பெண்ணு இருக்கிற இடத்திலே நிக்கக்கூட அவனுக்குப் பிடிக்கலை'' (ப.31) எனத் திருமணத்திற்குப் பின்னரும் தன் மகன் திருந்தாததற்கு மருமகளையே மாமியார் குற்றம் சாட்டுகின்றாள். ''மூத்த நாட்டுப் பெண் வாயில்லா ஜீவன்; என்ன செய்தாலும் வாயைத் திறக்காமல் கிடக்கும்'' (ப. 99) எனப் பார்ப்பவர் எல்லாம் இரங்கத்தக்க சியாமளாவிற்காகப் பரிந்து பேசுவோர் அந்த வீட்டில் யாரும் இல்லை. அமைதியான மருமகளை அவள் ஏழை என்பதற்காகக் கொடுமைப்படுத்தும் மாமியாரை இந்நாவல் சித்திரிக்கின்றது.

'பவானி' நாவலில் நசித்துப்போன தன் குடும்பத்தை ஒரு ஜமீன்தார் அல்லது மிட்டாதாரின் ஒரே மகளை மருமகளாக்கிக் கொண்டு நிலைநிறுத்த வேண்டும் என்ற ஆசையுள்ள அபிராமி அம்மாளுக்குத் தன் கணவனின் கட்டாயத்திற்காக, தாய் தந்தையற்ற தன் ஏழை நாத்தி மகளை மருமகளாக்கிக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது. ஆசையின் ஏமாற்றம் மருமகள் மீது வெறுப்பாக மாறுகின்றது. மகனுக்கும் இது மனத்திற்குப் பிடிக்காத திருமணமாதலால் மனைவியை விட்டு விட்டு ஓடிவிட, மருமகள் மாமியாரின் அதிக வெறுப்பிற்கு ஆளாகின்றாள். மருமகளின் வருத்தத்தைக் கண்டு, ''அழுடி அம்மா அழு. உன் கழுத்திலே மாங்கல்யம் ஏறின வேளை நல்ல வேளைதான். புருஷனையே வீட்டை விட்டுத் துரத்திவிட்டே! தரித்திரமே! சதா அழுதுகொண்டேயிரு!'' (ப. 65) என்று சிறிதும் இரக்கம் இன்றி அபிராமி அம்மாள் ஏசுகின்றாள்.

'மிதிலா விலாஸ்', 'பவானி' ஆகிய இவ்விரண்டு நாவல்களிலும் மருமக்களிடத்தில் மாமனார் அன்பும் இரக்கமும் காட்டுபவராகச் சித்திரிக்கப்படுகின்றார்; கணவனோ, மாமியாரோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அன்பு காட்டவில்லை. சியாமளாவின் மாமனார் பசுபதிஅய்யர், மனைவிக்கு அடங்கிய கணவராதலால் துன்புறும் மருமகளைக் கண்டு இரக்கப்படத்தான் அவரால் முடிந்தது. வனஜாவின் மாமனார், மருமகளைக் கொடுமைப்படுத்தும் தன் மனைவியை வைதாலும் மனைவியின் கொடுமையை முழுமையாக நிறுத்த முடியவில்லை.

பசுபதி அய்யர் இறந்தபின்னர் குடும்பத்தலைவியாகும் சியாமளா மாமியாரை வெறுக்கவில்லை. தன் அன்பாலும், பண்பாலும் மாமியார் தன்னைப் புரிந்து கொள்ளும்படிச் செய்துவிடுகின்றாள் என்று லக்ஷ்மி 'மிதிலா விலாஸ்' நாவலில் சித்திரிக்கின்றார். 'பவானி' நாவல் வனஜாவின் கணவன் மனம் திருந்தி வர, மகன் மனைவியிடம் செலுத்தும் அன்பைக் கண்டு மாமியாரும் மருமகளிடம் அன்பு செலுத்துகின்றாள் என்று சித்திரிக்கின்றது.

சிறிது திறமை, புரிந்துகொள்ளும் தன்மை, அன்பு, மரியாதை எனும் பண்புகள் கொடுமையான மாமியாரையும் அன்பான மாமியாராக மாற்ற மருமகளுக்கு இருக்கவேண்டியவைகளாகும். காலமும் பொறுமையும் மருமகளுக்கு உறுதியாக நல்ல பரிசைத்தான் அளிக்கும் (Chaya Srivatsa, 1975, p. 79) என்பதற்கு விளக்கமாக சியாமளாவும் வனஜாவும் விளங்குவதால் மாமியார் மருமகள் உறவு முதலில் சிக்கலாக இருப்பினும், இறுதியில் சிக்கல் அற்ற உறவாக மாறிவிடுகின்றது.

3. 5. 1. 1. 1. 2 மகன்மீது மிகுதியான பற்று

கூட்டுக்குடும்பங்களில் மாமியார் எத்தனை காலம் உயிர் வாழ்கின்றாளோ, அத்தனை காலமும் அவளே குடும்பத்தலைவியாக விளங்குகின்றாள். இந்நடைமுறையில் தங்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தும் மாமியாரிடம் மருமகளுக்கு எதிர்ப்புணர்ச்சி தோன்றுகின்றது (M.S. Gore, 1968, p. 127). கணவன் இறந்தபின்னர், மாமியார் தன் மகனுடன் வாழவேண்டிய கட்டாய நிலை ஏற்படும்பொழுதுதான் மாமியாருக்கும் மருமகளுக்குமிடையே போராட்டம் ஏற்படுகின்றது (Aileen D. Ross, 1973-p. 118). கணவனின் இறப்புக்குப் பின்னர், தாய் தன் அன்பு முழுவதையும் மகனிடமே செலுத்துகின்றாள். மகனும் அவ்வாறே தன்னிடம் இருக்கவேண்டும் என்றும் எதிர்பார்க்கின்றாள். மகனின் நல்வாழ்வை விரும்பியே அவனுக்கு மணமுடித்து வைத்தாலும் மகன் மருமகளிடத்தில் காட்டும் அன்பு அவளுக்கு மருமகளிடத்தில் வெறுப்பைத் தோற்றுவிக்கின்றது. மகன் மீது தாய் காட்டும் மிகுதியான பற்று மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழக் காரணமாகின்றது. இச்சிக்கலை லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு' எனும் நாவல் சித்திரிக்கின்றது.

'காஞ்சனையின் கனவு' நாவலில் மாத்தூர் ஜமீன்தாரிணி பொன்னம்மாள் தன் மகன் காதலிக்கும் ஏழைப்பெண் காஞ்சனையையே அவனுக்கு மணமுடித்து வைக்கின்றாள். மகன், மனைவியின் அழகில் கட்டுண்டு கிடப்பது கண்டு பொன்னம்மாளின் மனம் பொறாமை கொள்கின்றது. தன் மனைவியைப் பிறந்த வீட்டிற்கு அனுப்புவது முதற்கொண்டு தன்னைக் கேட்காது செய-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

யாத மகன், தன்மீது அன்பு செலுத்தாமல் போய்விடுவானோ எனப் பொன்னம்மாள் அஞ்சுகின்றாள்; மருமகள் மீது உள்ள வெறுப்பின் காரணமாக அவளை வேலைக்காரியாகவே நடத்துகின்றாள். அதிக வேலை காரணமாக நிறைசூலியான காஞ்சனை மயங்கி விழும்பொழுது, "அவளுடைய பிறந்த வீட்டில் தாத்தாவைத் தவிர வேறு எவரும் கிடையாது. நாம்தான் கவனித்துக் கொள்ள வேணும். இத்தனை வேலைக்காரர்கள் இருந்தும்கூட நீ அவளைத்தான் வேலை செய்யச் சொல்கிறாய். கர்ப்பிணிப் பெண்ணுக்குக் கொஞ்சம் ஓய்வு வேண்டாமா?" (ப. 144) என்று மனைவிக்காகப் பரிந்து மகன்கேட்பது பொன்னம்மாளின் பொறாமையைத் தூண்டி விடுகின்றது. மகனைத் தன்னிடமிருந்து பிரிக்க வந்தவளாகவே பொன்னம்மாள் மருமகளை எண்ணுவதால், தன் இழப்பைப் பேரனை வளர்ப்பதன் வழி ஈடுசெய்து, அதனால் மருமகளின் முதற்பகையாக மாறுகின்றாள். தாயின் பேச்சைக் கேட்டுத் தன்னிடம் அன்பு காட்டாத கணவனின் செயலைவிட, மாமியாருடைய இச்செயல் காஞ்சனையைத் துன்புறுத்தியதால் காஞ்சனை வீட்டை விட்டு வெளியேறிவிடுகின்றாள். எம். என். சீனிவாஸ் கூறுவது போன்று மாமியார் மருமகளை வீட்டைவிட்டு விரட்டுவதன்வழி வெற்றிபெறுகின்றாள் என்பது இங்குப்பொருந்துகின்றது..(M. N. Srinivas, 1942, p.197). இறுதியில் பொன்னம்மாள் தன் தவறுணர்ந்து காஞ்சனையைத் தேடி அழைத்து வருகின்றாள்.

3. 5. 1. 1. 1. 3. மாமியாரால் ஏற்படும் சிக்கல்களில் மருமகளுக்குக் கணவன் அன்பும் கிடைப்பதில்லை; கணவன் மனைவியிடத்து அன்புடையவனாக இருப்பின் மாமியாரும் மருமகளிடத்து அன்பாக இருப்பாள் என்ற உண்மை இங்குப் புலப்படுகின்றது (பவானி). தாய் தன் மகன் தீயவனாயினும், தவறு செய்தவனாயினும் அவனை விரும்புகின்றாள். இவர்களுக்கிடையில் போராட்டம் காணப்படவில்லை. மாமியார் மருமகளுக்கிடையில்தான் போராட்டம் காணப்படுகின்றது. இதனைக் கீழ்க்கண்டவரை படங்கள் வழி விளக்கலாம்.

படம் 1 (மிதிலா விலாஸ்)



குறியீடு விளக்கம்

A கணவனையும், B மனைவியையும், C மாமியாரையும், D மாமனாரையும் குறிக்கின்றன. > < எனும் இக் குறியீடு போராட்டத்தைக் குறிக்கின்றது — எனும் குறியீடு இறப்பைக் குறிக்கின்றது. சான்றாக, D — என்பது மாமனாரின் இறப்பைக் குறிக்கும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயும், மாமியார்-மருமகளுக்கிடையேயும் போராட்டம் காணப்படுகின்றது. தாய்க்கும் மகனுக்குமிடையேயும், மாமனாருக்கும் மருமகளுக்கிடையேயும் போராட்டம் இல்லை. மகனையோ, தன் மனைவியையோ வெளிப்படையாகக் கண்டிக்க மாமனார் அஞ்சுவதால் அவர்களுடனும் அவருக்குப் போராட்டம் இல்லை.

படம் 2 (பவானி)

கணவனுக்கும் மனைவிக்கும், மாமியாருக்கும் மருமகளுக்கிடையேயும் போராட்டங்கள் ஏற்படுகின்றன. மாமியாரின் செயலையும், மகனின் செயலையும் மாமனார் வெறுப்பதால் அவர்களிடையேயும் போராட்டங்கள் காணப்படுகின்றன. ஆனால் மாமனாருக்கும் மருமகளுக்கும் இடையில் போராட்டமில்லை.



படம் 3 (காஞ்சனையின் கனவு)

கணவன், மனைவி, மாமியார் மட்டுமே உள்ள குடும்பத்தில் கணவன் மனைவிக்கும், மாமியார் மருமகளுக்கும் இடையே போராட்டம் காணப்படுகின்றது. தாய்க்கும் மகனுக்குமிடையே போராட்டம் இல்லை.



மாமனார்-மருமகளுக்கிடையேயும், தாய்-மகனுக்கிடையேயும் சிக்கல் ஏற்படுவதில்லை என்பதை இவ்வரைபடங்கள் வாயிலாக அறிய முடிகின்றது. மாமியாரால் ஏற்பட்ட சிக்கலில் இறுதியில் மாமியார் தன் தவறை உணர்ந்து திருந்துபவளாகவே காட்டப்படுகின்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 5. 1. 1. 2. *மருமகளால் சிக்கல்*

கூட்டுக்குடும்ப வாழ்வில் மாமியாரால் சிக்கல் ஏற்படுவது போன்று மருமகளாலும் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உண்டு. சில குடும்பங்களில் மருமகளின் துணிச்சலும், எதிர்க்கும் பண்பும் மாமியாரை மருமகள் அதிகாரம் செய்யும் நிலைக்குக் கொண்டு வருகின்றது. (Aileen. D. Ross, 1973. p 118). மருமகள் மீது ஏற்படும் பழிச்சொல்லும் இதற்குக் காரணமாகின்றது. இங்கு மாமியார்-மருமகள் உறவில் மருமகளால் சிக்கல் எழுவதற்குரிய காரணங்களை இருவகைப்படுத்தலாம்.

1) மருமகளின் பொறாமை

2) மருமகளின் மீதுள்ள அவதூறு

3. 5. 1. 1. 2. 1 *மருமகளின் பொறாமை*

ஒரு குடும்பத்தில் நிறைய சீர்வரிசைகளுடன் வரும் மருமகள் மதிக்கப்படுவதும், குறைந்த சீர்வரிசைகளுடன் வரும் மருமகள் அடிமையாக நடத்தப்படுவதும் இயல்பாகக் காணப்படுவதொன்றாகும் (Aileen D. Ross, 1961, p. 263). ஆய்வாளருடைய களஆய்வும் இக்கருத்தை நிறுவுகின்றது.* மதிக்கப்படுகின்ற மருமகள் தன் மாமியார் தன்னைவிடச் சிறந்தவளாக மற்றொருத்தியை எண்ணுவதையோ, புகழ்வதையோ பொறுக்காது பொறாமை கொள்கின்றாள். இதன் விளைவாக மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழுகின்றது.

லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்' நாவலில் ஏழைப்பெண்ணான மூத்த மருமகளை வெறுக்கும் தர்மாம்பாள், சீர்செனத்தியுடன் வந்த இரண்டாவது மருமகள் மைதிலியை விரும்புகின்றாள். மூன்றாவது மருமகளாக வரவிருக்கும் கிரிஜாவிடம் தர்மாம்பாளின் அன்பு மிகுதியாக, அதுகண்டு மைதிலி பொறாமை கொள்கின்றாள். ''இந்த வைரமாலையை வாங்கினீர்களா அம்மா'' என்று சாதாரணமாக நான் கேட்டுவிட்டேன். அதற்கு 'வாங்கவுமில்லை, கீங்கவுமில்லை. அட்டிகையை அழித்துப் பண்ணினேன். ஏன் அப்படி கேட்கின்றாய்' என்று எல்லார் முன்னிலையிலும் எரிந்து விழுந்தார்,'' (ப 19) என்று கணவனிடம் குறை கூறி மகனின் மனதைத் தாய்க்கு எதிராக மாற்றி, இறுதியில் கணவனை அழைத்துக்கொண்டு தனியே சென்று விடுகிறாள். குடும்பத்தலைவரான மாமனார் இறந்தபின்னர் அண்ணன்-தம்பியர் தனித்தனியே பிரிந்து சென்றுவிடுவர்; அதனால் தன் குடும்பத்திற்குத் தானே

---

*ஆய்வாளர் தகவலாளர்களுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாகப் பெண்களில் 55.77 விழுக்காட்டினரும், ஆண்களில் 45.5 விழுக்காட்டினரும் இக்கருத்தினை ஏற்பது தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தலைவி என்ற எண்ணம் மருமகளிடத்தில் தோன்றி விடுகிறது. (Aileen. D Ross. 1973, p. 117,) என்ற கூற்றுக்குப் பொருத்தமாக மைதிலி சொத்துக்களைப் பிரித்துக்கொண்டு கணவனுடன் வீட்டை விட்டு வெளியேறிவிடுகிறாள். கணவன் இறந்த பின்னர், தான் பாடுபட்டு வளர்த்த மகனைத் தன்னிடமிருந்து மருமகள் பிரித்து அழைத்துப் போவதைக் கண்டு விதவைத் தாயாரால் கண்ணீர்-தான் விடமுடிகின்றதேயன்றி மகனைத் தடுத்து நிறுத்த முடிய-வில்லை. கணவனைத் தனியே அழைத்துச் சென்றாலும், கணவன் மனைவிக்கிடையே போராட்டம் ஏற்படும் பொழுது மைதிலி மனம் திருந்தி மாமியாரின் உதவியை நாட இச்சிககல் தீர்ந்து விடுகின்கிறது.

3. 5. 1. 1. 2. 2. *மருமகளின் மீதுள்ள அவதூறு*

மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழ, மருமகள்மீது மற்றவர் சுமத்தும் பழிச்சொல்லும் காரணமாக அமைகின்றது. இப்-பழிச்சொல்லை மாமியார் நம்பிவிடுவதால் மருமகளை வெறுக்-கின்றாள். எனவே, மாமியார் மருமகள் உறவில் சிக்கல் எழு-கின்றது இச்சிக்கலை லக்ஷ்மியின் ‘பண்ணையார் மகள்’ எனும் நாவல் காட்டுகின்றது.

‘பண்ணையார் மகள்’ நாவலில் பண்ணையார் விதவை ஷண்பகவல்லியுடன் தகாத உறவு கொண்டு, பிறந்த குழந்தை-களையெல்லாம் கொன்றதை அறிந்த அவர் மனைவி வைதேகி அவரைக் கண்டிக்கின்றாள். இதனை அறிந்த ஷண்பகவல்லி, பண்ணையார் அவர் மனைவியை வெறுக்கவேண்டும் என்பதற்-காக வைதேகிக்கும், தன் குழந்தைகளைக் கருவிலேயே கலைக்க மறுத்த மருத்துவருக்குமிடையே தொடர்பிருப்பதாகக் கூறி வைதேகியின்மீது அவதூறைப் பரப்புகின்றாள். இதனை உண்-மையென நம்பிய வைதேகியின் மாமியார் வைதேகியை வெறுக்-கின்றாள். கணவனின் நடத்தையாலும் மாமியாரின் கொடுமை-யாலும் மனம் வெறுத்த வைதேகி வீட்டைவிட்டு வெளியேறிவிடு-கின்றாள். பல ஆண்டுகள் கழித்துச் சந்திக்கும் பேத்தியிடம் வைதேகியின் மாமியார், ‘‘உன்தாயார் வைதேகி இருந்தாளே, அந்த மகராசி எனக்கு ஒரு நாள்கூட கைகுவித்து நமஸ்கரிக்க-வில்லை. மாமியார் என்ற மரியாதையும் கிடையாது,’’ (ப. 18) என்று தன் வெறுப்பைக் காட்டுகின்றாள். இங்கு மருமகள்மீது ஏற்பட்ட அவதூறு, மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழக் காரணமாகின்றது. இறுதிவரை இச்சிக்கல் தீரவேயில்லை.

3. 5 1. 1. 2. 3. மருமகள் காரணமாகத் தோன்றும் சிக்கல்-களைக் கீழ்க்கண்ட வரைபடங்கள்வழி விளக்கலாம்.

படம் 1 (*மிதிலா விலாஸ்*)

கணவனுக்கும் மனைவிக்குமிடையில் போராட்டம் இல்லை. மாமியாருக்கும் மருமகளுக்குமிடையிலும், தாய்க்கும் மகனுக்கு-மிடையிலும் போராட்டம் ஏற்படுகின்றது. மாமனார் குடும்பத்-தாரின் செய்கைகளைக் கண்டிக்காதவராக விளங்குவதால் அவ-ருக்கு ஒருவருடனும் போராட்டம் ஏற்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



படம் 2 (பண்ணையார் மகள்)

இந்நாவலில் கணவனுக்கும் மனைவிக்கும் இடையேயும், மாமியாருக்கும் மருமகளுக்குமிடையேயும் போராட்டம் ஏற்படுகின்றது. தாய்க்கும் மகனுக்குமிடையில் போராட்டம் இல்லை.



மருமகளால் ஏற்படும் சிக்கல்களின் சித்திரிப்பு ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டுக் காணப்படுகின்றது. முதல் சிக்கலில் மாமியார் தன்மீது அன்பாயிருந்தும், மற்றொரு மருமகள்மீது அவள் காட்டும் அன்பு, பொறாமையைத் தூண்ட, சிக்கலுக்குக் காரணமாக மருமகளே அமைகின்றாள். இரண்டாவது சிக்கலில் இந்நிலை இல்லை. அவதூறை நம்பிய மாமியார் மருமகளைக் கொடுமைப்படுத்துகின்றாள். முந்தைய சிக்கலில் மருமகளுடைய செயலுக்குத் துணையாக அவள் கணவனும் இருக்கின்றான். பின்னையதில் கணவனே தன் மனைவி மீது சுமத்தப்படும் பழிக்குக் காரணமாகின்றான். மருமகளால் ஏற்படும் உறவுச் சிக்கலில் மருமகள் திருந்தினால் அங்கு மாமியார்-மருமகள் உறவு நலம் பெறுகிறது. ஆனால் இரண்டாவதாகக் கூறப்படும் சிக்கலில் மருமகள்மீது ஏற்பட்ட பழி தீராததால் அச்சிக்கல் இறுதிவரை நிலைபெறுகின்றது. எனவே, மருமகளால் ஏற்படும் சிக்கலுக்கு மருமகள் நேரடியாகவும், மறைமுகமாகவும் காரணமாகின்றாள் என்பது புலனாகின்றது.

3. 5. 1. 1. 3. கூட்டுக்குடும்பங்களில் காணப்படும் மாமியார்-மருமகள் உறவுச்சிக்கலில், மாமியாரால் மூன்று சிக்கல்களும், மருமகளால் இரண்டு சிக்கல்களும் ஏற்படுகின்றன. கூட்டுக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குடும்பங்களில் மாமியாரால்தான் மிகுந்த சிக்கல்கள் ஏற்படுகின்றன .இதுலக்ஷ்மியின் சொந்தக் கருத்தாகவும் காணப்படுகின்றது * இச்சிக்கல்களில் நான்கு சிக்கல்கள் இறுதியில் தீர்ந்துவிடுகின்றன. ஒரு சிக்கல்தான் (பண்ணையார் மகள்) தீர்வு காணாத சிக்கலாகக் காணப்படுகின்றது.

ஐந்து சிக்கல்களுள் மூன்றில் மருமகள்வீட்டை விட்டு வெளியேறும் நிலை காணப்படுகின்றது. இதற்கு மாமியாரும் காரணமாகின்றாள்; மருமகளும் காரணமாகின்றாள்.

மாமியாரால் சிக்கல்	*மருமகளால் சிக்கல்*
1. காஞ்சனை (காஞ்சனையின் கனவு)	1 மைதிலி (மிதிலா விலாஸ்)
	2. வைதேகி (பண்ணையார் மகள்)

இவர்களில் காஞ்சனைக்கும் வைதேகிக்கும் மாமியார் உறவுச் சிக்கலோடு கணவன் உறவிலும் சிக்கல் எழுவதால் அவ்வீட்டில் வாழ விரும்பாமல் அவர்கள் வெளியேறிவிடுகின்றனர். மைதிலி வீட்டைவிட்டு வெறியேறிவிடவேண்டும் என்ற நோக்கத்திலேயே இருந்து, சூழல் வாய்ப்பாக அமைந்தவுடன் தன் கணவனுடன் வெளியேறி விடுகின்றாள்.

3 5. 1. 2. *சிக்கல் இன்மை*

கூட்டுக்குடும்ப வாழ்வில் மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் இல்லாத நிலையும் காணப்படுகின்றது. மருமகளைத் தன் குடும்பத்தவள் என்று மாமியார் எண்ணுவதும், மாமியாரைக் குடும்பத்தில் பெரியவள் என்று மருமகள் எண்ணுவதும், இருவரிடையே சிக்கலற்ற உறவைத் தோற்றுவிக்கின்றது. இச்சிக்கலின்மையை (1) பெண்மனம், (2) பவானி, (3) லட்சியவாதி ஆகிய லக்ஷ்மியின் மூன்று நாவல்கள் சித்திரிக்கின்றன.

'பெண் மனம்' நாவலில் தன் மகன் விரும்பி மணந்து கொண்ட ஏழைப் பெண் சந்திராவைப் பணக்கார மாமியார் காமாக்ஷி அம்மாள் மருமகளாக அன்புடன் ஏற்றுக்கொள்கின்றாள். இங்கும் செல்வ வேறுபாடு காணப்படினும் அது அவர்கள் உறவில் சிக்கலைத் தோற்றுவிக்கவில்லை. ''சிலரைப் போல நான் பொண்ணு, நாட்டுப் பொண் என்று வித்தியாசம் பார்க்கமாட்டேன்'' (ப. 99) என்று ஆசையாகத் தன் ஏழை மருமகளுக்கு வைர மாலையைக் காமாக்ஷி பரிசளிக்கின்றாள்; தன் பணக்கார மருமகள் அலமேலுவையும் ஏழை மருமகள் சந்திராவையும் வேறுபாடில்லாத அன்புடனேயே நடத்துகின்றாள். பணக்கார மருமகளுக்கு மாமியாரின் செயல் எரிச்சலூட்டினாலும், மாமியாரிடம் நேரடியாக மோதவில்லை. எனவே, அவர்கள் உறவில் சிக்கல் எழவில்லை.

---

* 25. 8. 80 அன்று ஆய்வாளர் படைப்பாளி லக்ஷ்மியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'பவானி. நாவலிலும் தன் மகன் மருமகளைச் சினந்து கொள்ளும் பொழுது அவளுக்காக இரக்கப்பட்டு, ''ஏனப்பா அவளைக்கோபித்துக் கொள்கிறாய்? கர்ப்பிணியான பெண், மனது கஷ்டப்பட ஒன்றும் சொல்லாதே,' (ப. 132) என்று மருமகளுக்-காக மாமியார் பரிந்துரைப்பதைக் காணமுடிகின்றது.

'லட்சியவாதி'யிலும் மருமகள் கௌரியை அன்புடன் தன் மகள்போல் நடத்தும் மாமியாரைக் காணமுடிகின்றது. எனவே, இங்கும் இவர்கள் உறவில் சிக்கல் எழவில்லை.

3. 5. 1. 3. ஒப்பீடு

3. 5. 1. 3. 1. கூட்டுக் குடும்பத்தில் காணும் மாமியார்-மரு-மகள் உறவில் மாமியாரால் சிக்கல்ஏற்படும் குடும்பங்களில் பெண்-களின் ஆதிக்கமதான் மிகுதியாகக் காணப்படுகின்றது. தர்மாம்-பாளின் கணவர் செல்வந்தராக இருப்பினும், தர்மாம்பாளுக்கு அடங்கிய கணவர் என்று பெயர் பெற்றவர் (மிதிலா விலாஸ்). பொன்னம்மாள் விதவை. ''என் தாய் உயிருடன் இருக்கும்வரை அவள்தான் இவ்வீட்டிற்கு எஜமானி; அவள் இஷ்டப்படியேதான் எல்லாக் காரியங்களும் நடக்கும்,'' (காஞ்சனையின் கனவு, ப.165) என்று கூறுகின்ற மகன் தாய்க்கு அடங்கியவனாகவே காணப்படு-கிறான். அபிராமியம்மாள் கணவனுக்கு முழுமையாகக் கட்டுப்பட்-டவள் என்று கூற இயலாது. கணவனின் கருத்துக்களை எதிர்த்தே நிற்பவள். மகனும் தாயின் விருப்பப்படியே நடப்பவன் (பவானி), இம்மூன்று குடும்ப அமைப்பையும் காணும்பொழுது, ஒரு குடும்-பத்தின் தலைவனாகக் கருதப்படும் தந்தையின் ஆதிக்கம் குறைந்து தாயின் ஆதிக்கம் மிகுந்திருக்கும் குடும்பத்திலும், தந்தை இறந்த பின்னரும் மகன் குடும்பத்தலைமையை ஏற்காது தாயின் பொறுப்-பிலேயே வாழ்ந்து வரும் குடும்பத்திலுமே மாமியார் கொடுமை காணப்படுகின்றது என்ற உண்மை புலப்படுகின்றது.

3. 5. 1. 3. 2. மாமியார்-மருமகள் சிக்கலற்ற குடும்பங்கள் அனைத்திலும் கணவன் தலைமையிலோ (பெண்மனம்), அல்லது மகனின் தலைமையிலோ (லட்சியவாதி, பவானி) குடும்பம் நடப்-பதால் அங்குப் பெண்களின் ஆதிக்கம் காணப்படவில்லை. மகனும் மனைவி, தாய் இருவரையும் ஒரே முறையில் நடத்துகின்றான்.

3. 5. 1. 3. 3. மருமகளால் ஏற்படும் சிக்கலிலும் அவளின் துணிவே சிக்கலை ஏற்படுத்துகின்றது. மைதிலி தன் கணவனை அழகாலேயே மயக்கித் தன் விருப்பப்படி நடந்து கொள்ளும் பொழுதுதான் சிக்கல் தோன்றுகின்றது (மிதிலா விலாஸ்). வைதேகி தன் கணவனின் தவறுகளையெல்லாம் பொறுத்துக் கொண்டே வாழவேண்டும் என்ற பழமையிலிருந்து மாறியவ-ளாகத் துணிவுடன் காணப்படுவது சிக்கலைத் தோற்றுவிக்கின்-றது (பண்ணையார் மகள்).

3. 5. 1. 3. 4. இச்சிக்கல்களைக் காணுமிடத்து, நல்லதொரு குடும்பத்தலைவனின் கீழ் குடும்ப வாழ்க்கை அமையுமானால் குடும்ப உறவில் சிக்கல் எழாது, குடும்பத்தலைவன் நல்லவ-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னாக இல்லாத நிலையில் மனைவி அவனைத் திருத்த முயற்சி செய்து, இயலாவிடின் அவனைவிட்டு விலகுவதே நல்லது என்பன லக்ஷ்மியின் கருத்துக்கள் என்று உணர முடிகின்றது.*

3. 5. 2. 0 *தனிக்குடும்பம்*

பெரியதொரு கூட்டுக்குடும்பமாயிருந்து, அது தனிக் குடும்பமாகப் பிரியும்பொழுது, மாமியார் மருமகள் இருவரும் தனித்தனியே பிரிக்கப்படுவதாலும்/அவரவர் குடும்பங்களின் பொறுப்பு அவரவர்க்கு இருப்பதாலும் மாமியாரின் செல்வாக்கு குறையத் தொடங்குகின்றது (Aileen D. Ross, 1973, p.118). தனிக்குடும்பம் சிறிய குடும்பமாக இருப்பதால், அங்குக் கணவன்-மனைவி உறவு நெருக்கம் மிகுந்ததாகக் காணப்படுகின்றது. தாய் மகன் உறவினை இது பாதிப்பதாக அமைகின்றது. ஆனால் பழமையிலே ஊறி வந்த மாமியாரின் செல்வாக்கு அவ்வளவு எளிதில் மறைவதில்லை. இது மகனுக்கு ஒரு போராட்ட வாழ்வாக அமைந்து விடுகின்றது (Aileen. D. Ross, 1973, p. 171). இங்கு மாமியார் மருமகள் உறவில் நேரடியான பாதிப்பு இல்லை. சிக்கல் ஏற்பட்டாலும் கூட்டுக் குடும்பத்தைப் போன்ற பாதிப்பு இங்குக் காணப்படுவதில்லை.

3 5. 2. 1. *சிக்கல் உண்மை*

தனிக்குடும்பங்களில் சிக்கல் ஏற்படும் நிலையை

1) மாமியாரால் சிக்கல்
2) மருமகளால் சிக்கல்

என்று இருவகையாகப் பிரித்துக் காணமுடிகின்றது.

3. 5. 2. 1. 1. *மாமியாரால் சிக்கல்*

தனிக்குடும்பங்களில் மாமியார்-மருமகள் உறவில் மாமியாரால் சிக்கல் ஏற்பட்டு உறவு பாதிக்கப்படுவதற்கு இரண்டு காரணங்கள் காணப்படுகின்றன.

1) மகனின் கலப்புத் திருமணம்
2) மூத்தாள் மகன்மேல் வெறுப்பு

3. 5. 2. 1. 1. 1. *மகனின் கலப்புத் திருமணம்*

ஒரு தாய் தன் மகன் தன் இனத்திலேயே திருமணம் செய்து கொண்டு வாழவேண்டுமென்றுதான் பெரும்பாலும் எண்ணுவாள். தன் எண்ணத்திற்கு மாறாக மகன் தன் இனமல்லாத வேற்றினத்தில் மணம்செய்துகொண்டால் மகனையே வெறுத்துவிடுகின்றாள். மகன்மேல் கொண்ட வெறுப்பு மருமகளையும் தாக்குகின்றது. மகனும் மருமகளும் தனியாகவும், தாய் தனியாகவும் வாழ்கின்றனர். இந்நிலையை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' 'பெண் மனம்' என்ற இரு நாவல்கள் சித்திரிக்கின்றன.

---

* 25.8.80 அன்று ஆய்வாளர் லக்ஷ்மியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அடுத்த வீடு' நாவலில் தாயிடம் மனம் வேறுபட்டு வேறிடத்தில் பிழைக்கச் சென்ற மகன் அவ்விடத்தில் தோட்ட வேலை பார்க்கும் கீழ்ச்சாதியைச் சேர்ந்தவன் மகளை விரும்பி மணந்து கொள்கின்றாள். "என் தாயார் தாழ்ந்த வகுப்புப் பெண்மணி என்ற காரணத்தினால், என்பாட்டியாருக்கு அவர் மீது வெறுப்பு," (பக். 199-200) என்று பேரன் வருந்துவதை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

'பெண் மனம்' நாவலில் நாகலிங்கம் வேற்று இனப் பெண்ணை மணந்து கொண்டதால் அவன் பெற்றோர் அவனையும் அவன் மனைவியையும் ஒதுக்கி வைத்துவிடுகின்றனர் (ப.193) என்பதை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

இவ்விரண்டு நாவல்களிலும் நேரடியான மாமியார்-மருமகள் உறவுச்சிக்கலின் மோதல் இல்லாவிடினும் இவ்வுறவு பாதிக்கப்பட்டு இருப்பதைக் காண முடிகின்றது.

3. 5. 2. 1. 1. 2. *மூத்தாள் மகன் மேல் வெறுப்பு*

ஒரு தந்தையின் இளைய மனைவி தன் மூத்தாள் மகனை வெறுப்பது பெரும்பாலும் உலக இயல்பாகக் காணப்படுகின்றது. மூத்தாள் மகன்மீது கொண்ட வெறுப்பு அவன் மனைவியிடமும் தொடர்கின்றது. இதனை லக்ஷ்மியின் 'மரகதம்' என்ற நாவல் காட்டுகின்றது.

'மரகதம்' நாவலின் சிவராஜனின் சிற்றன்னை தாயாரம்மாள், தந்தையுடன் மனவேறுபாடு கொண்டு பிரிந்து சென்ற சிவராஜனுக்குச் சொத்தில் ஒரு பகுதியைத் தன் கணவன் எழுதி வைத்துவிடுவாரோ என்ற அச்சத்தினால் சிவராஜனை வெறுக்கின்றாள் அவ்வெறுப்பு தன்னைத் தேடி வந்த அவன் மனைவி மரகதத்திடமும் செல்கின்றது. மரகதத்தைத் தாயாரம்மாள் வேலைக்காரியாகவே நடத்துகின்றாள். மகனிடமிருந்து 'சொத்து வேண்டாம்' என்ற சொற்களைப் பெற மருமகளைப் பயன்படுத்த எண்ணி, மருமகள் அதற்கு இசையாதபோது தாயாரம்மாளின் வெறுப்பு உச்சநிலை அடைகின்றது. கணவனோடு மரகதம் தனியாக வாழ்ந்து வரும்பொழுது மாமியாரின் கொடுமை காணப்படவில்லை; சின்னாட்களுக்கு மாமியாரின் வீட்டில் அவள் தங்கியிருக்கையில் அவர்கள் உறவில் சிக்கல் எழுகின்றது. இச்சிக்கல் இறுதிவரை தீரவேயில்லை.

3. 5. 2. 1. 2. *மருமகளால் சிக்கல்*

மாமியாரும் மருமகளும் தனித்து வாழ்ந்து வந்தாலும், இருவருக்கும் ஒருவர்மீது ஒருவருக்கும் நல்லெண்ணம் இல்லை. ஆகையால் இருவரும் ஒருவரை ஒருவர் எண்ணும்பொழுதே தம் வெறுப்பை வெளிக்காட்டிக் கொள்கின்றனர். மாமியாரின் வெறுப்பிற்கு மருமகளின் நடத்தை காரணமாகின்றது.

3. 5. 2. 1. 2. 1. *மருமகளின் நடத்தை*

மருமகளின் நடத்தையால் மாமியார் - மருமகள் உறவு பாதிக்கப்படுவதை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' நாவல் சித்தி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரிக்கின்றது. இந்நாவலில் கோதையம்மாளின் மகன் பாலசுந்தரம் ரேவதியை மறுமணம் செய்துகொள்கின்றார். மகனுடனும் மருமகளுடனும் சேர்ந்து சில நாட்கள் இருக்கவேண்டும் என்று கிராமத்திலிருந்து ஆசையுடன் கோதையம்மாள் மகன்வீட்டிற்கு வருகின்றாள். மாமியார் என்று சிறிதும் தன்னை மதிக்காத மருமகள் ரேவதியின் மிடுக்கையும் மிதமிஞ்சிய நாகரிகத்தையும் பொறுத்துக்கொள்ளமுடியாமல் உடனே கோதையம்மாள் தன் கிராமத்திற்குத் திரும்பிவிடுகிறாள். "டக்டக்னு பூட்ஸ் போட்டுக் கொண்டு சமையலறையிலே குதிரையாட்டமா வந்து நிற்கிற ஒரு நாட்டுப் பொண்ணு" (ப. 78) என்று மருமகளின் நடத்தையைச் சாடும் கோதையம்மாள், அவள் தன் வீட்டிற்கு வரப்போவதை அறிந்து, "அவன் பெண்ஜாதியோட நாகரிகத்திற்கும் என்னுடைய கர்நாடக தர்பாருக்கும் சித்தகூடப் பொருந்தி வராதே," (ப. 74) என்று அலுத்துக் கொண்டு சில நாட்களே தங்கிப்போகிறவளிடம் தன் மனக்குறையைக் காட்டிக்கொள்ளக் கூடாது என்ற அளவிலேயே இருக்கின்றாள். எனவே, மருமகளின் அடக்கமின்மை, நடத்தை ஆகியவை மாமியார்-மருமகள் உறவில் சிக்கலை எழுப்புகின்றன. மனைவிக்கு அடங்கிய கணவனாகவே பாலசுந்தரம் காணப்படுவதால் மனைவியே சிக்கலுக்குக் காரணமாகின்றாள்.

3. 5. 2. 1 3. தனிக்குடும்பத்தில் காணப்படும் மாமியார்-மருமகள் உறவுச் சிக்கலைக் கீழ்க்கண்டவாறு விளக்கலாம் :

படம் 1 (அடுத்த வீடு)

கலப்புத் திருமணத்தால் மகனுக்கும் தாய்க்கும், மருமகளுக்கும் மாமியாருக்குமிடையில் போராட்டம் ஏற்படுகின்றது. கணவன்-மனைவி உறவு சிக்கலற்றதாகக் காணப்படுகின்றது.



படம் 2 (பெண்மனம்)

மகனின் கலப்புத் திருமணத்தால் மாமியாருக்கும் மருமகளுக்கும், மாமனாருக்கும் மருமகளுக்கும், மகனுக்கும் தாய்க்கும், மகனுக்கும் தந்தைக்கும் இடையே போராட்டம் காணப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri



படம் 3 மரகதம்

தனிக் குடும்பமாக வாழும் கணவனுக்கும் மனைவிக்கு-மிடையே மனவேறுபாடு ஏற்படுவதால் மனைவி மாமியார் வீட்-டிற்குச் செல்கின்றாள். மாமியாருக்கும் மருமகளுக்குமிடையேயும், தாய்க்கும் மகனுக்குமிடையேயும் போராட்டம் தோன்றுகின்றது. போராட்டத்திற்குத் தந்தையின் சொத்து காரணமாகக் காணப்-படுகின்றது.



படம் 4 நாயக்கர் மக்கள்

மருமகளின் நடத்தையால் மாமியாருக்கும் மருமகளுக்கு மிடையே போராட்டம் நிகழ்கின்றது. கணவன் மனைவிக்கும் இடையேயோ, தாய் மகனுக்கும் இடையேயோ உறவுச் சிக்கல் எழவில்லை.



CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாமியார்-மருமகள் உறவினைக் காட்டும் வரைபடங்கள் வழி கீழ்க்கண்ட உண்மைகள் புலனாகின்றன.

1) உறவு நிலைகளைக் காட்டும் ஒன்பது வரை படங்களில் ஐந்து வரைபடங்கள் தாய்க்கும் மகனுக்குமிடையே சிக்கலற்ற நிலையைக் காட்டுகின்றன.

2) தாய்க்கும் மகனுக்குமிடையே சிக்கல் தோன்ற மருமகள் ஒரு காரணமாகவும், மகனின் கலப்புத் திருமணம் மற்றொரு காரணமாகவும், மாற்றாந்தாய் மூன்றாவது காரணமாகவும் காணப்படுகின்றன.

3. 5. 2. 2. *சிக்கல் இன்மை*

மாமியாரும் மருமகளும் தனித்தனியே வாழும்பொழுது சிக்கல் இல்லாத நிலையினைச் சூடாமணியின் 'செந்தாழை' என்ற நாவல் காட்டுகின்றது.

'செந்தாழை' நாவல் சித்திரிக்கும் ஸ்ரீதரன் மனைவியுடன் தன் வேலையின் நிமித்தம் தனியே வாழ்கின்றான். அதே ஊரில் அவன் தாய் தன் மற்றொரு மகன், மகளுடன் வாழ்கின்றாள். மாமியாரும் மருமகளும் அடிக்கடி சந்தித்துக் கொள்கின்றனர். இருவரும் ஒருவரையொருவர் விரும்புகின்றனர். எனவே, எந்தச் சிக்கலும் எழவில்லை. தன் மகனையே தன் குடும்பத்திற்கும் தலைவனாக எண்ணி விதவைத் தாய் வாழ்வதால், ஆணின் ஆதிக்கமே குடும்பத்தில் காணப்படுகின்றது. மகனும் மனைவி, தாய் இருவரிடத்தும் ஒரே மாதிரியாக அன்பு பாராட்டுவதால் சிக்கல் எழவில்லை எனலாம்.

தனிக் குடும்பத்தில் சிக்கல் இன்மையை லக்ஷ்மி படைத்துக் காட்டவில்லை.

3. 5. 3. 0. இனி இவ்விரு படைப்பாளிகளும் காட்டும் மாமியார்-மருமகள் உறவினைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தலாம்.

கூட்டுக் குடும்பத்தில் மாமியார்-மருமகள் உறவு நிலை

சிக்கல் நிலை	லக்ஷ்மி		சூடாமணி	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
அ) சிக்கல் உண்மை				
1) மாமியாரால் சிக்கல்	3	37.05	—	—
2) மருமகளால் சிக்கல்	2	25.00	—	—
ஆ) சிக்கலின்மை	3	37.05	—	—
மொத்தம்	8	100.00	—	—

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தனிக்குடும்பத்தில் மாமியார்-மருமகள் உறவுநிலை

சிக்கல் நிலை	லக்ஷ்மி		சூடாமணி		மொத்தம்	
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
அ) சிக்கலுண்மை						
1. மாமியாரால் சிக்கல்	3	75	—	—	3	60
2 மருமகளால் சிக்கல்	1	25	—	—	1	20
ஆ) சிக்கல் இன்மை	—	—	1	100	1	20
மொத்தம்	4	100	1	100	5	100

கூட்டுக் குடும்பத்திலும், தனிக் குடும்பத்திலும் மாமியாரால் ஏற்படும் சிக்கல் ஒத்த அளவில் காணப்படுகின்றது; எனினும், தனிக் குடும்பத்தில் சித்திரிக்கப்படும் மாமியாரால் ஏற்படும் சிக்கலில் இரண்டு சிக்கல்கள் மகனின் கலப்புத் திருமணத்தாலும், ஒரு சிக்கல் மாற்றாந்தாய் மாமியாராக இருப்பதாலும் தோன்றுகின்றது

கூட்டுக் குடும்பத்தைவிடத் தனிக்குடும்பத்தில் மருமகளால் ஏற்படும் சிக்கல் குறைந்த அளவில் காணப்படுகின்றது.

கூட்டுக் குடும்பங்களில் ஏற்படும் மாமியார் - மருமகள் உறவை லக்ஷ்மி சித்திரிக்க, சூடாமணி கூட்டுக்குடுப்பவாழ்வையே சித்திரிக்கவில்லை; தனிக் குடும்பத்தில் காணப்படும் சிக்கலின்மையைச் சூடாமணி சித்திரிக்க, லக்ஷ்மி இச்சிக்கலைச் சித்திரிக்க வில்லை.

இருவகைக் குடும்பங்களிலும் கூறப்படும் சிக்கலுண்மை, சிக்கலின்மை எனும் சித்திரிப்புக்களில் மாமியாரால் ஏற்படும் சிக்கல் செம்பாகம் காணப்படுவதால் குடும்பங்களில் மாமியாரே சிக்கலுக்குரியவளாகக் காணப்படுகின்றாள் என்பது லக்ஷ்மியின் கருத்து என்பது புலனாகின்றது.

இவ்வேறுபாட்டிற்குக் காரணங்களாக இவ்விரு படைப்பாளிகள் நாவல்கள் எழுதிய காலம், பட்டறிவு முதலியவற்றைக் கூறலாம். லக்ஷ்மியின் நாவல்கள் 1944-1960 வரை எழுதப்பட்டவையாகும். சூடாமணியின் நாவல்கள் 1960-1974 வரை எழுதப்பட்டவை. லக்ஷ்மியின் நாவல்கள் கூட்டுக் குடும்பம் முழுமையாகத் தனிக் குடும்பமாக மாறாது, சிறிது சிறிதாக மாறிக்கொண்டிருந்த

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலத்தில் எழுந்தவை. சூடாமணியின் நாவல்கள் கூட்டுக்குடும்ப அமைப்பு குறைந்து தனிக் குடும்ப அமைப்பு பெருகிய காலத்தில் எழுந்தவை என்பதால் அவ்வக் காலத்தின் சுவடு அவர்தம் நாவல்களில் படிந்துள்ளது எனலாம்.*

மருத்துவராய் வெளிநாட்டில் பல ஆண்டுக் காலம் வாழ்ந்துள்ள லக்ஷ்மியின் அனுபவம் பரந்துபட்டது. ''நான் நேரில் பார்த்து கலந்து பழகிய மக்களையே என் கதைப் பாத்திரங்களாகப் படைக்கிறேன்.'' என்பார் லக்ஷ்மி*. அவர் சமூகத்தில் கண்ட மாமியார் - மருமகள் உறவு நிலையைத் தம் நாவலில் படைத்துக் காட்டுகின்றார். உடல் நிலை காரணமாக வெளிப் பழக்கம் குறைந்து இல்லத்துக்குள்ளேயே வாழ்பவர் சூடாமணி. ஆகவே அவரது அனுபவ எல்லை குறுகியதாகக் காணப்படுகின்றது. இவரது நாவல்கள் தனிக்குடும்ப வாழ்வையே சித்திரிப்பதால் அவற்றில் மாமியார்-மருமகள் உறவுச்சிக்கல் எழக்காரணமில்லை.

சமூகவியலார் மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் குறைந்து வருவதற்கு இரண்டு காரணங்களைக் காட்டுகின்றனர். (1) தற்காலத்தில் மருமகள் குழந்தைப் பருவமன்றிக் குமரிப் பருவத்தில் மணமுடிக்கப்படுவதால் தன்னம்பிக்கை, உலக அறிவு, பட்டறிவு முதலியன கொண்டவளாக இருப்பதால் மாமியார் அவளைத் தன் விருப்பத்திற்கிணங்க மாற்ற இயலாது. (2) இக்காலத்தில் மருமகள், தன் மாமியாரைவிடக் கல்வி அறிவு மிகுந்தவளாகக் காணப்படுவதால் மருமகள் குடும்ப ஆலோசகராகவும், அறிவின் இருப்பிடமாகவும் காணப்பட ,மாமியாரின் உயர்ந்த நிலை தாழ்ந்து வருகின்றது (Aileen D. Ross, 1973, p. 171) சமூகவியலார் கூறும் காரணங்கள் சூடாமணி கதைகளில் காணப்படும் மருமகளுக்குப் பொருந்துவதால் சூடாமணியின் நாவல்களில் மாமியார்-மருமகள் உறவுச் சிக்கல் காட்டப்படவில்லை.

ஒரு பெண் இளவயதில் தன் கணவனை இழந்து சிறு குழந்தையான மகனை முழுமையாகத் தானே வளர்த்து அவனுக்குத் திருமணம் செய்விக்கும் பொழுது உளவியல் அடிப்படையிலும் மாமியார்-மருமகள் உறவில் சிக்கல் எழலாம். கைம்மைக் கோலம் பூண்டிருக்கும் தாயின்பாலுறவு உணர்வுகள் மருமகளின் புனைவுக் கோலத்தைக் கண்டு கிளர்ந்தெழ, மருமகளிடம் பொறாமை கொண்டு மணிக்கணக்கில் மாமியார் அழும் நிலையும் உண்டு என்பதை ஆலன் டி ராஸ் தம்முடைய பேட்டியாளர்களில் ஒருவரின் வாழ்க்கை நிகழ்ச்சியாகக் காட்டுகின்றார் (Aileen D Ross, 1973, p. 170). இவ் உளவியல் போக்கில் ஏற்படும் உறவுச் சிக்கலை இரு படைப்பாளிகளுமே சித்திரிக்கவில்லை.

---

*17-1-79 அன்று ஆய்வாளர் லக்ஷ்மியுடனும், 18-1-79 அன்று ஆய்வாளர் சூடாமணியுடனும் நடத்திய பேட்டியில் வெளியான கருத்துக்கள்.

* 25-8-80 அன்று ஆய்வாளர் லக்ஷ்மியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.5.4.0. லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளின் நாவல்கள் வழி புலனாகும் மாமியார் - மருமகள் உறவு நிலையில் கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்படுகின்றன:

கூட்டுக்குடும்பங்களில் மாமியார்-மருமகள் குடும்பங்களுக்கு இடையே உள்ள செல்வ வேறுபாடு அவர்களுக்கு இடையே உள்ள உறவில் சிக்கல் எழக் காரணமாகின்றது. செல்வக் குடும்பத்து மாமியார் ஏழை மருமகளை வெறுக்கின்றாள். மாமியாருக்குப்பிடிக்காத மருமகளானாலும் சிக்கல் வளர்கின்றது. கூட்டுக் குடும்பங்களில் விதவைத் தாய் தன் மகன்மீது கொள்ளும் அளவு கடந்த அன்பு, மருமகள் வரவை வெறுக்கின்றது. மகனின் அன்பைக் கூறுபோட வந்தவளாக மருமகளை எண்ணுகின்றாள். எனவே, இவ்வெறுப்பு இவர்கள் உறவில் சிக்கல் எழக் காரணமாகின்றது. கூட்டுக் குடும்பங்களில் மாமியார் தன் மீது செலுத்தும் அன்பைக்குறைத்து, மற்றொரு மருமகள் மீது அன்பு செலுத்துவது மருமகளின் பொறாமையைத் தூண்டிவிடக் காரணமாகின்றது. இப்பொறாமை மாமியாரிடம் உறவுச் சிக்கலைத் தோற்றுவிக்க மருமகள் தன் கணவனுடன் வீட்டைவிட்டு வெளியேறி விடுகின்றாள்.

கூட்டுக் குடும்பங்களில் மருமகளின் மீதுஅவதூறு ஏற்பட்டதெனில் மாமியார் அதனை நம்பி மருமகளை வெறுக்கின்றாள், மாமியார் கொடுமையைத் தாங்காது மருமகள் வீட்டை விட்டு வெளியேறிவிடுகின்றாள். அவதூறு ஏற்படக் கணவனும் காரணமாகும்பொழுது மனைவி அக்குடும்ப வாழ்வையே வெறுத்துவிடுகின்றாள். கூட்டுக் குடும்பங்களில் நடைபெறும் மகனின் கலப்புத் திருமணம் மாமியார் - மருமகள் உறவைப் பாதிக்கின்றது. இத் திருமணத்தால் கூட்டுக் குடும்பம் தனிக் குடும்பமாக மாறுவதால் மாமியார் - மருமகளிடையே நேரடி மோதல் ஏற்படுவதில்லை. தனிக் குடும்பங்களில் மாமியார் தன் மூத்தாள் மகனிடம் கொண்ட வெறுப்பை அவன் மனைவியான தன் மருமகளிடமும் காட்டுகின்றாள். கூட்டுக் குடும்பமாக இருக்கும்பொழுது ஏற்படும் மாமியார்-மருமகள் உறவுச்சிக்கல் தனிக்குடும்பமாகப் பிரிந்ததும் மறைந்து விடுகின்றது. மருமகள் தன்கணவனுடன் தனித்து வாழும்பொழுது இச்சிக்கல் எழவில்லை. தனிக் குடும்பங்களில் மருமகளின் நாகரிகப் போக்கும், மாமியாரை மதிக்காத பண்பும் மாமியாருக்கு மனவருத்தத்தைத் தர நாளடைவில் அவ்வருத்தமே வெறுப்பாக வளர்கின்றது. இங்கும் இருவருக்கிடையே நேரடி மோதல் ஏற்பட வழியில்லை. மருமகளுக்கும் மாமியாருக்கும் சில நாட்களே ஒருவரை ஒருவர் சந்திக்கும் வாய்ப்பு இருப்பதால் மாமியார் - மருமகள் உறவு பாதிக்கப்படுவதில்லை.

கூட்டுக் குடும்பங்களில் செல்வ வேறுபாடு இருந்தும் மருமகளைத் தன் மகளாகவே எண்ணும் மாமியாரும் காணப்படுகின்றாள். அதனால் இங்கு இருவரிடையேயும் சிக்கல் இல்லாத உறவு காணப்படுகின்றது. சிக்கலற்ற கூட்டுக் குடும்பங்களைவிடச் சிக்கலுடைய கூட்டுக் குடும்பங்கள்தாம் மிகுதியாக உள்ளன. அவற்றிலும் மாமியாரால் எழும் சிக்கல்கள்தாம் மிகுதியாகக் காணப்படுகின்றன. வீட்டில் ஆணின் ஆதிக்கத்தைவிடப் பெண்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ணின் ஆதிக்கம் வலுவுடையதாக இருப்பின் அங்கு மாமியார் ஆதிக்கம் காணப்படுகின்றது. தலைமைப் பொறுப்பை ஏற்க-வேண்டிய மகன் அதனை ஏற்காது தாயைச் சார்ந்தே வாழ்-கின்ற குடும்பத்தில் மாமியாரின் ஆதிக்கம் காணப்படுகின்றது. ஒரு குடும்பம் தந்தையின் ஆதிக்கத்திலும், தந்தை இறந்தபின் மக-னின் தலைமையிலும் நடந்தது எனில் அங்கு மாமியார் கொடுமை காணப்படுவதில்லை. மாமியார் - மருமகள் உறவில் சிக்கல் ஏற்படுவதையே லக்ஷ்மி தம் நாவல்களில் சித்திரித்துள்ளார். சிக்-கலற்ற உறவை மிகக் குறைவாகக் காட்டுவதால் இவ்வுறவில் சிக்கலற்ற நிலை இருப்பது அரிது என்பது படைப்பாளியின் கருத்து எனலாம். சூடாமணி, மாமியார்-மருமகள் உறவுச் சிக்-கலை எந்த நாவலிலும் சித்திரிக்கவில்லை; சிக்கலற்ற உறவை-யும் ஒரே ஒரு நாவலில் தான் காட்டுகின்றார். சூடாமணியின் நாவல்கள் பெரும்பான்மையும் தனிக்குடும்ப வாழ்வினைச் சித்-திரிப்பதால் மாமியார்-மருமகள் உறவுநிலை பற்றிய சித்திரிப்பு இவருடைய நாவல்களில் காணப்படவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 6. பெண்களும் குடும்ப உறவுகளும்

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

இவ்வியல் லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் காணப்படும் பெண்களின் குடும்ப உறவுகளைச் சமூகவியல் பின்னணியுடன் ஆராய்கின்றது. பெண்களன் குடும்ப உறவுகள் பிறந்த வீட்டார் உறவு, புகுந்த வீட்டார் உறவு என்று இரு வகைப்படுத்தப்பட்டு ஆராயப்படுகின்றது; பிறந்த வீட்டார் உறவு தந்தை உறவு, உடன்பிறந்தார் உறவு, தாயின் உடன்பிறந்தார் உறவு, தந்தையின் உடன்பிறந்தார் உறவு, பாட்டன், பாட்டி உறவு எனப் பிரிக்கப்பட்டுவிளக்கப்படுகின்றது ஒவ்வொரு உறவுச் சூழலிலும் பெண்ணின் நிலையும், அதனைச் சித்திரிப்பதில் இரு படைப்பாளிகளுக்கிடையேயுள்ள வேறுபாடும் புலப்படுத்தப்படுகின்றன. பெண்ணின் புகுந்த வீட்டார் உறவு, மாமனார் - மருமகள் உறவு, நாத்தனார் உறவு, கணவனின் சகோதரருடன் உறவு, கணவனின் சகோதரர் மனைவியுடன் உறவு, நாத்தனார் கணவருடன் உறவு என்று பகுக்கப்பட்டு ஆராயப்படுகின்றது. இவ்வுறவுகளைப் பற்றிய சமுதாயக் கணிப்பும், இவ்வுறவில் சிக்கல் எழுவதற்குரிய காரணங்களும் ஆராயப்படுகின்றன ஓர் ஆணோ அல்லது பெண்ணோ பிறந்த வீட்டில் பழகும் உறவு முறைகளும், திருமணமான வீட்டில் பழகும் உறவு முறைகளும் வேறுபடுகின்ற தன்மையும், அதற்கான காரணமும் புலப்படுத்தப்பட்டு நிறுவப்படுகின்றன.

3. 6. பெண்களும் குடும்ப உறவுகளும்

3. 6. 0. 1. இந்திய நாட்டில் வாழும் இந்துக் குடும்பங்களிடையே தொன்று தொட்டு நிலவி வரும் ஓர் அமைப்பு முறையே கூட்டுக் குடும்பமுறை (joint family system) ஆகும் (Bottomore, 1971, p. 171). கூட்டுக் குடும்பம் எனும் தொடர் கணவன், மனைவி ஆகிய இருவரும், கணவனுடைய குடும்பத்தைச் சார்ந்தாரும், ஒருவருடைய தலைமையின்கீழ் ஒரே வீட்டில் உழைத்து, உண்டு, உறையும் வாழ்வைக் குறிப்பதாகும் (Harris, 1968, p. 83). இக்கூட்டுக் குடும்ப வாழ்க்கை குடும்ப உறவுகளை நெருக்கமாக்குகின்றது. ஒரு பெண்ணுக்கு இம்முறையில் ஏற்படும் பிறந்த வீட்டு உறவுகளும் திருமணமான பின்னர் ஏற்படும் புகுந்த வீட்டு உறவுகளும் அவள் வாழ்நாள் முழுவதும் அவளுடன் பிணைந்து காணப்படுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 6. 0 2. பிறந்த வீட்டில் தந்தை, தாய், உடன்பிறந்தார், உடன் பிறந்தாரின் கணவன், மனைவியர், தந்தையின் உடன் பிறந்தார், தாயின் உடன் பிறந்தார், பாட்டன், பாட்டி என்பவர்களுடன் உறவு கொண்டவளாக வாழும் பெண், திருமணமாகிப் புகுந்தவீடு செல்லும்பொழுது மாமனார், மாமியார், கணவனின் உடன்பிறந்தார், அவர்களின கணவர், மனைவியர் முதலியோருடன் உறவு கொண்டவளாக வாழ்கின்றாள். எனவே, பெண்ணின் உறவுகளை இவ்வடிப்படையில் பிறந்த வீட்டார் உறவு என்றும், புகுந்த வீட்டார் உறவு என்றும் இரு பிரிவுகளாகப் பிரித்துக் காணமுடிகின்றது. பெண்ணின் உறவு தன் பிறந்த வீட்டாரில் தொடங்கி இறுதியில் பிறந்த வீட்டார், புகுந்த வீட்டார் ஆகிய இரண்டு வீட்டு உறவுகளுடன் முடிகின்றது.

3. 6. 0. 3. லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் காணப்படும் இவ்வுறவுகளுள் தாய் மகன் / மகள் உறவு, மாமியார் - மருமகள் உறவு, கணவன் - மனைவி உறவு என்பன முந்தைய இயல்களில் ஆராயப்பட்டுள்ளன. எனவே, இத்தலைப்பில் ஏனைய உறவுகளே ஆராயப்படுகின்றன

3. 6. 1. 0. *பிறந்த வீட்டார் உறவுகள்*

இரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் பெண்ணின் பிறந்த வீட்டு உறவுகள் பின்வருமாறு வகைப்படுத்தப்படுகின்றன:

1) தந்தையின் உறவு
2) உடன்பிறந்தார் உறவு
3) தாயின் உடன்பிறந்தார் உறவு
4) தந்தையின் உடன்பிறந்தார் உறவு
5) பாட்டன், பாட்டி உறவு

இவற்றுள் உடன்பிறந்தார் என்பது அண்ணன், தம்பி, அக்காள், தங்கை முதலியவர்களைக் குறிக்கும். உடன்பிறந்தார் உறவிலேயே அவர் தம் மனைவியர், கணவன்மார் உறவும் இணைத்து ஆராயப்படுகின்றது.

3. 6. 1. 1. *தந்தை உறவு*

மேலை நாட்டார், ஃபிராய்டின் கொள்கையை முன்வைத்துத் தாய்க்கும் மகனுக்கும் உள்ள நெருக்கமான உறவை ஒரு பக்கமாகவும், தந்தைக்கும் மகளுக்கும் இடையேயுள்ள நெருக்கமான உறவை மற்றொரு பக்கமாகவும் வைத்துக் காண்கின்றனர். சமூகவியலறிஞர் ஆலன் டி ராஸ் இந்தியாவில் குடும்ப உறவுகள் பற்றி நூற்றைம்பத்தேழு தகவலாளர்களைப் பேட்டி கண்டிருக்கிறார். தகவலாளர்களில் நூற்றுப்பதினைந்து பேருக்கிடையில் தாய்-மகன் உறவு காணப்படுகின்றது; எழுபத்துநான்கு பேருக்கிடையில் தந்தை-மகன் உறவும், இருபத்தேழு பேருக்கிடையில் தந்தை-மகள் ஆழமான உறவும் காணப்படுகின்றது;

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே, ஃபிராய்டின் தந்தை - மகள் உறவு பற்றிய கொள்கை எல்லாச் சமுதாயத்திற்கும் பொருந்தும் எனக் கூறமுடியாது என்று தன் ஆய்வின் முடிவுகளினின்று கண்ட உண்மையைக் கூறுகின்றார் (Aileen D. Ross, 1973, p. 145).

நம் நாட்டில் ஒரு குடும்பத்தின் தலைவனாகத் தந்தையே விளங்குகின்றான். தந்தை ஒருவனே பொருள் ஈட்டுபவனாகவும் இருப்பதால் பொருளாதார அடிப்படையில் குடும்பத்தினர் அனைவரும் அவனையே சார்ந்து நிற்கின்றனர் (Margaret Cormack, 1961, p. 16). எனவே, தந்தையே குடும்பப்பொறுப்புக்கள் அனைத்தையும் ஏற்பவனாகக் காணப்படுகின்றான். மகளின் திருமணம் வரை மகளைக் காப்பாற்றுவது, தேவையான வரதட்சிணையின் வழி தகுதியான கணவனை அவளுக்குக் தேடித் தருவது ஆகியவை தந்தையின் கடமைகளாகக் கருதப்படுகின்றன (Aileen D. Ross, 1973, p. 145). இக்கடமையை அவன் சரிவர நிறைவேற்றினால் அங்குத் தந்தை-மகள் உறவு அன்புடையதாகக் காணப்படுகின்றது. தன் கடமையைத் தந்தை நிறைவேற்றத் தவறினால் அங்குத் தந்தை-மகள் உறவு பாதிக்கப்படுகின்றது.

தந்தை-மகள் உறவினை மூன்று வகையாகப் பிரித்துக் காணலாம்.

1) குழந்தைப் பருவத்தில் தந்தை-மகள் உறவு
2) மணப் பருவத்தில் தந்தை-மகள் உறவு
3) திருமணம் முடித்தபின் தந்தை-மகள் உறவு

3. 6. 1. 1. 1. குழந்தைப் பருவத்தில் மகள்-தந்தை உறவு

குழந்தைப் பருவத்தில் மகளைச்சீராட்டிப்பாராட்டி வளர்க்க வேண்டிய தந்தை அதிலிருந்து மாறுபடும் பொழுது தந்தைக்கும் மகளுக்கும் இடையே இயல்பாக வளர வேண்டிய பாசமிக்க உறவு குறைந்தோ அல்லது மறைந்தோ விடுகின்றது. இதற்குரிய காரணங்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்:

1) குடும்ப வறுமை
2) தந்தையின் இரண்டாம் திருமணம்
3) தந்தையின் ஒழுக்கக் கேடு
4) தந்தையின் பொறுப்பற்ற நிலை

3. 6. 1. 1. 1. 1. குடும்ப வறுமை

தந்தைக்கும் மகளுக்குமிடையேயுள்ள பாசமிக்க உறவைக் குறைப்பதற்குத் தந்தையின் குடும்ப வறுமை காரணமாகக் காணப்படுகிறது. இவ்வுறவுப் பாதிப்பை லக்ஷ்மியின் 'அடுத்தவீடு' என்ற நாவலும், சூடாமணியின் 'மங்கை' என்ற நாவலும் சித்திரிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'அடுத்தவீடு' நாவலில் தன் பொருளாதார மேம்பாட்டிற்காகப் பணக்கார வீட்டில் திருமணம் முடித்துக் கொள்ள விரும்பிய சதாசிவம், திருமணத்திற்குப் பின் ஏமாறுவது சித்திரிக்கப்படுகின்றது. சதாசிவத்தின் ஏமாற்றம் மனைவி, குழந்தைகளிடம் வெறுப்பாக மாறுகின்றது. தாயற்ற குழந்தைகள் மகிழ்ச்சியாக இருப்பதைக்கூட பொறுக்கவியலாத அளவுக்கு வறுமையின் கொடுமை அவனைத் தாக்குகின்றது. சதாசிவத்தின் பொருளாதாரத் தோல்விதான் அவனை இரக்கமற்ற தந்தையாக மாற்றி விட்டது எனும் உண்மையை லக்ஷ்மி இந்நாவலில் சித்திரிக்கின்றார் (ப.55).

வறுமையில் வாடும் மங்கையின் குடும்பத்திலும் தந்தையின் பாசம் மகளுக்குக் கிட்டவில்லை என்பதைச் சூடாமணி 'மங்கை' எனும் நாவலில் சுட்டுகின்றார். ''இவள் படிக்கிறதே அவருக்கு இஷ்டமில்லை. குழந்தைகளையெல்லாம் கரிச்சுக் கொட்டுவாரு,'' என நவநீதத்தால் சுட்டிக்காட்டப்படும் தந்தையிடம் (ப.73) மங்கை மிகவும் அன்பு கொண்டவளாக இருக்கிறாள். ஆயினும் மங்கைக்குத் தந்தையின் அன்பு கிடைக்கவில்லை.

வறுமையினால் தந்தை-மகள் உறவு பாதிக்கப்படுகிறது என்ற உண்மையை வறுமையின் ஆதிக்கம் இல்லாத குடும்பங்களில் காணப்படும் தந்தை-மகள் உறவினை ஒப்பிடுவதின்வழி தெளிவாக்கலாம்.

பாக்கு வியாபாரி பழனியப்பக் கவுண்டர் தன் குழந்தைகளைக் கண்ணின் கருமணி போல் நேசிப்பதை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் காட்டுகின்றது (ப. 156).

லக்ஷ்மியின் 'லட்சியவாதி' நாவலில் முன்கோபியும் சிடுமூஞ்சியுமான வேதராமய்யரைக் கண்டால் அனைவரும் நடுங்க, செல்லப்பெண்ணான விமலா அவரிடம் அச்சமின்றி உரையாடுகிறாள்; அவளுக்குத் தந்தையின் சினத்தை எதிர்த்துப் பேசும் துணிவும் இருக்கிறது. பெண்ணின் மேல் இருக்கும் பாசத்தால் வேதராமய்யர் தன் மகனுக்கு இணையாக அவளையும் கல்லூரிப்படிப்புப் படிக்க அனுமதிக்கின்றார் (பக். 39- 40)

பல திரைப்பட அரங்குகளுக்குச் சொந்தம் கொண்டாடும் மூர்த்தி, தன் பெண் சைலஜாவிற்கு எதிலும் முதலிடம் கொடுத்து மகிழ்ந்ததைச் சூடாமணியின் 'புன்னகைப் பூங்கொத்து' சித்திரிக்கின்றது (ப.20).

ஒரு குடும்பத்தில் வறுமை மிகுந்திருக்கும்பொழுது அங்குத் தந்தை -மகள் உறவு பாதிக்கப்படுகின்றது; தந்தைக்கு மகளிடத்துப் பாசம் இருந்தாலும் வறுமையினால் அவர் தனது பாசத்தை வெளிக்காட்டுவதில்லை. தன் குழந்தைகளிடம் அன்பையே காட்டாது அடித்தே வளர்த்த சதாசிவம், தான் இறக்கும் தருவாயில் ''நான் பார்வைக்கு முரடனாகத் தோன்றலாம். ஆனால் நான் பெற்ற குழந்தைகளிடம் எனக்குப் பாசம் இல்லையா?'' (ப. 425) எனக் கூறுவதினின்று அவனது பாச உணர்வு புலப்படுகின்றது. ஆனால் அந்தப் பாசத்தைத் தன் குழந்தைகளிடம்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காட்டமுடியாதபடி வறுமை அவனைத் தடுக்கின்றது. இந்நிலை வறுமை இல்லாக் குடும்பத்தில் காணப்படவில்லை. அங்கு தந்தை மகள் உறவு அன்புடையதாகக் காணப்படுகின்றது என்ற உண்மை இதன் வழி பெறப்படுகின்றது

3.6.1.1.1.2. தந்தையின் இரண்டாம் திருமணம்

ஓர் ஆடவன் தன் மனைவி இறந்ததும், குழந்தைகளை வளர்ப்பதற்காகவும் இல்லற இன்பத்திற்காகவும் மற்றொரு பெண்ணை மணக்கின்றான். தன் கணவன் தன் மூத்தாள் குழந்தைகளிடம் அன்பாக இருப்பதை இரண்டாம் மனைவி விரும்புவதில்லை மனைவிக்கு அடங்கிய கணவனும் தன் குழந்தைகளிடம் பாசம் இருப்பினும் அதை வெளிக்காட்டத் தயங்குகின்றான். இதனால் தந்தை-மகள் உறவு பாதிக்கப்படுகிறது. இதனை லக்ஷ்மியின் 'அரக்கு மாளிகை', 'பவானி', 'பெண் மனம்' எனும் மூன்று நாவல்களும், சூடாமணியின் 'தீயினில் தூசு' என்ற நாவலும் காட்டுகின்றன.

'அரக்கு மாளிகை' நாவல், முடமான மகள் சந்திராவிடம் அன்பு இருந்தும், தன் இளைய மனைவிக்கு அஞ்சி அதனை வெளிக்காட்டாது வாழும் நாராயணனைச் சித்திரிக்கின்றது. சந்திரா இறக்கும் தருவாயில்தான், நாராயணன் 'குழந்தையுடன் கூட இருப்போம்! அவளையும் கூட அழைத்துச் செல்வோம்' என்று சொல்லாமல் தன் சுய நலத்தையே பெரிதாக எண்ணி, அவரைக் குடும்பத்திலிருந்து அடிக்கடி பிரிந்திருக்கச் செய்த சூழ்ச்சிக்காரியாகத் (அத். 55) தன் இளைய மனைவியை எண்ணி வெறுக்கின்றார்.

'பவானி' நாவலில் டாக்டர் சுந்தரவதனம் தன் இளைய மனைவியின் பேச்சைக் கேட்டு, பாட்டி வீட்டிலிருந்த தன் மூத்த மனைவியின் மகள் ராதாவை அழைத்து வருவதாகப் படைக்கப்படுகின்றார். நாளடைவில் இளைய மனைவி தன் மகளைக் கொடுமைப்படுத்துவதை அறிந்து, மீண்டும் அவளைப் பாட்டி வீட்டிற்கு அனுப்பிவிடுகின்றார். குழந்தை ராதாவிற்குத் தந்தையின் அன்பு கிட்டவேயில்லை.

'பெண் மனம்' நாவல், சந்திராவின் தந்தை தன் மகளிடத்து அன்பைக் காட்டாமலிருப்பதையும், 'தீயினில்தூசு' நாவல், வாசுகியின் தந்தை தன் சொத்தினை இளைய மனைவிக்கே எழுதி வைத்து மூத்த மகளிடம் அன்பு காட்டாமல் இருப்பதையும் சித்திரிக்கின்றன.

தன் மனைவி இறந்தபின்னர் மறுமணம் செய்துகொள்ளாத தந்தையர் வாழ்வில் தந்தை-மகள் உறவு பாதிக்கப்படவில்லை. இதனை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்', 'பவானி' என்ற நாவல்களும், சூடாமணியின் ''மானிட அம்சம்', 'மகளின் கைகள்', 'அஞ்சன விழிகள்', 'தந்தை வடிவம்' எனும் நாவல்களும் சித்திரிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவி இறந்தபின் ஒரு கணவன் மனைவி மீது கொண்டிருந்த அன்பையும் மகளிடம் சேர்த்துக் காட்டி இழந்த மனைவியையே தன் மகள் வடிவத்தில் காணும்பொழுது அங்குத் தந்தை-மகள் உறவு நெருக்கமாகின்றது; அவ்வாறன்றி மற்றொரு பெண்ணை மணந்துகொண்டவன் தன் மகள் மீது கொண்ட அன்பு முன்பைவிடக் குறைகின்றது! எனும் உண்மைகள் இவ்வொப்பீட்டின் வழி புலனாகின்றன.

3. 6. 1. 1. 1. 3. *தந்தையின் ஒழுக்கக்கேடு*

தந்தையின் ஒழுக்கக்கேடு, தந்தை-மகள் உறவு பாதிக்கப்படுவதற்கு ஒரு காரணமாவதை லக்ஷ்மியின் 'பண்ணையார் மகள்' என்ற நாவல் சித்திரிக்கின்றது.

'பண்ணையார் மகள்' நாவல், பண்ணையார் ஏகாம்பரம் ஒரு விதவையுடன் கொண்டிருந்த கள்ளநட்பு அவர் குடும்ப வாழ்வைப் பாதித்து, மனைவி வெளியேறுவதற்குக் காரணமாகிவிடுவதைச் சித்திரிக்கின்றது. தன் மகள் உமாவுடன் வெளியேறிய வைதேகி, மகளிடம் தந்தை இறந்துவிட்டதாகவே கூறுகின்றாள். வைதேகி இறக்கும் நேரத்தில் மகளிடம் தந்தை உயிருடன் இருப்பதைக் கூற, அவரைத் தேடிவந்த உமா அவரது இறந்த உடலையே காண்கின்றாள். தந்தையின் ஒழுக்கக் கேட்டினால் மகளுக்குத் தந்தையின் அன்பு கிட்டாமல் போய்விடுகின்றது.

இத்தகைய தந்தை - மகள் உறவுப் பாதிப்பைச் சூடாமணி காட்டவில்லை.

3. 6. 1. 1. 1. 4. *தந்தையின் பொறுப்பற்ற நிலை*

சமுதாயத்தில் மகளின் துன்பத்தைப் போக்குவது தந்தையின் கடமையாகக் காணப்படுகின்றது; அக்கடமையைச் சந்திக்க அஞ்சி அதிலிருந்து தப்பி ஓடத் தந்தை எண்ணும் பொழுது அங்குத்தந்தை-மகள் உறவு பாதிக்கப்படும் என்பதைச் சூடாமணியின் 'மனத்துக்கினியவள்' நாவல் சித்திரிக்கின்றது.

'மனத்துக்கினியவள்' நாவலில்படுத்த படுக்கையாக, உடற்குறையுற்று வாழும் மகள் லட்சுமியுடன் வாழ அஞ்சிச் செல்வத்தால் அவளுக்கு வேண்டும் வசதிகள் செய்து கொடுத்துவிட்டு, உடற்குறையற்ற மகளுடன் பம்பாயில் வாழ்வதாக லட்சுமியின் தந்தை வரதராஜன் படைக்கப்பட்டிருக்கின்றார். தந்தையாலேயே ஒதுக்கப்பட்ட லட்சுமியின் உள்ளம் கசப்புண்டிருந்தது. உடற்குறையற்ற மற்றொரு மகள் புத்தி பேதலித்து இறந்தபின்னரே தன் தவற்றினை உணர்ந்து அவர் லட்சுமியிடம் அன்பு காட்டுகின்றார். தந்தை மகளை ஒதுக்கியதால் பாதிக்கப்பட்ட உறவு, தந்தை தன் தவற்றை உணர்ந்தபின் பாசமிக்க உறவாகிறது.

மகளின் குறையை எண்ணி அவளைவிட்டு விலகாது, அவளுக்காகத்தான் செய்யவேண்டிய கடமைகளைச் செய்யும் தந்தையிடம், மகள் கொண்ட உறவு பாதிக்கப்படவில்லை என்பதையும் சூடாமணி 'இரவுச் சுடர்' எனும் நாவலில் சுட்டுகின்றார். சார-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாதனின் மகள் யாமினி, சிறுவயதிலேயே தனிமையையும் இருளையும் விரும்புபவள். திருமணத்திற்குப்பின் மகள் பைத்தியமானதும், சாரநாதனே அவளுக்குத்துணையாக நிற்கின்றார். யாருக்கும் கட்டுப்படாத யாமினி, தந்தைக்கு மட்டுமே கட்டுப்படுகின்றாள். மகளின் விருப்பத்தை மீறி அவளுக்குத் திருமணம் செய்து வைத்ததை எண்ணி வருந்துகின்ற சாரநாதன் உலகிலிருந்து விடுதலைபெற விழைந்து, தற்கொலையை நாடிச் செல்லும் அவளுடைய விருப்பத்தை உணர்ந்து மனதை கல்லாக்கிக் கொண்டு அதனையும் நிறைவேற்றி வைக்கின்றார். இங்குத்தந்தை மகளிடம் கொண்ட உறவு, மகளின் அறிவு திறம்பிய நிலையிலும், இனியதாகக் காணப்படுகின்றது.

எனவே, மகளின் உடற்குறையால் அஞ்சி விலகும் தந்தையின் பொறுப்பற்ற நிலை தந்தை-மகள் உறவைப் பாதிக்கின்றது என்ற உண்மையையும், தந்தையின் பொறுப்புள்ள நிலை இவ்வுறவைப் பாதிப்பதில்லை என்ற உண்மையையும், இவ்விரு நாவல்களின் ஒப்பீட்டிலிருந்து அறியமுடிகின்றது.

சூடாமணி கையாளும் இச்சிக்கலை, லக்ஷ்மி தன் நாவல்களில் சித்திரிக்கவில்லை.

3. 6. 1. 1. 2. *மணப்பருவத்தில் மகள்-தந்தை உறவு*

குழந்தைப் பருவத்தில் மகள்-தந்தை உறவு பாதிக்கப்படுவதற்குக் காரணங்களாக அமைந்த சூழல்கள் மணப்பருவத்திலும் தொடர்வதுண்டு. ஆனால் குழந்தைப் பருவத்தில் தன் மகளிடம் அன்பாக இருந்து, மணப்பருவத்தில் அவளிடம் அன்பு இல்லாத நிலையில் காணப்படும் தந்தை-மகள் உறவும், குழந்தைப்பருவத்தைப்பற்றிச் சுட்டாமல், மணப்பருவத்தை மட்டுமே சுட்டிச்செல்லும் நாவல்களில் காணப்படும் தந்தை-மகள் உறவுமே இங்குக் குறிப்பிடப்படுகின்றன.

சமுதாயக் கட்டமைப்பில் பெண்ணுக்கு உரிய பருவத்தில் மணமுடித்து வைக்க வேண்டியது தந்தையின் கடமையாகக் காணப்படுகின்றது. இக்கடமையிலிருந்து தந்தை தவறும்பொழுது, தந்தை-மகள் உறவு பாதிக்கப்படுகின்றது. இவ்வுறவின் பாதிப்பிற்கான காரணங்களை இவ்விரு படைப்பாளிகளின நாவல்களின் வழி பின்வருமாறு நான்கு வகைப்படுத்தலாம்.

1) தந்தையின் வறுமை
2) தந்தையின் பொறுப்பற்ற நிலை
3) தந்தையின் பணத்தாசை
4) தந்தையின் குறிக்கோள்

3. 6. 1. 1. 2. 1. *தந்தையின் வறுமை*

வறுமையின் காரணமாகத் தன் மகளை, அவள் விரும்பாத மணமகனுக்குத் தந்தை மணமுடிக்க முற்பட்டால், தந்தை-மகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உறவுநிலை பாதிக்கப்படுகின்றது. இதனை லக்ஷ்மியின் 'மரகதம்' என்ற நாவல் சித்திரிக்கின்றது.

'மரகதம்' நாவலில் சிறுவயதில் மரகதத்திடம் பாசமிகுந்திருந்த தந்தை, வறுமையால் பட்ட கடனுக்கு, அவளுக்குப் பிடிக்காத இடத்தில் மரகதத்தை மணமுடிக்க எண்ணுவதாகச் சித்திரிக்கப்படுகின்றார். போராடியும் வெற்றி பெற இயலாத மரகதம் அண்டை வீட்டுக்காரனுடன் வீட்டைவிட்டு ஓடிவிடுகின்றாள். கடனுக்காக மரகதத்தின் தந்தை, நிலத்தை விற்று வறுமையில் வாடி இருக்கும் நிலையில், தன்னிடம் திரும்பி வந்த மகளிடம் அவருக்குப் பாசத்தைவிட வெறுப்புதான் மிகுதியாகத் தோன்றுகின்றது. "எதுக்கு வந்திருக்கிறா? இந்தக் குடும்பத்தைத் துடைச்சு அப்பனையும் ஆத்தாளையும் முழுங்கிவிடத்தானே வந்திருக்கிறாள் துடைகாலி", (ப.73) என்று மகளை ஏசும் அளவுக்குத் தந்தையின் வெறுப்பு வளர்கின்றது,

குடும்பத்தை வாட்டும் வறுமையும் அதற்குக் காரணமான மகளுடைய செயல்களும் தந்தையின் மனதில் பாச உணர்வை அழித்து விடுகின்றன என்ற கருத்து இங்குப் புலப்படுகின்றது. லக்ஷ்மி சித்திரிக்கும் இவ்வுறவுச் சிக்கலைச் சூடாமணி சித்திரிக்கவில்லை.

3. 6. 1. 1. 2. 2. *தந்தையின் பொறுப்பற்ற நிலை*

தன் வீட்டையோ, குழந்தையையோ, தன் மனைவியையோ கவனிக்காது இருப்பது ஒரு தந்தை தன் குடும்பத்திற்கு இழைக்கும் மிகப்பெருங்குற்றமாகும் (Margaret Cormack, 1961, p. 17) இக்குற்றத்தைச் செய்யும் தந்தை தன் மகள் மணப்பருவத்தை எட்டியும் அவளது திருமணத்தைப்பற்றி எண்ணாமல் இருப்பதும், தானே அதற்குக் காரணமாவதும், அவரைப் பொறுப்பற்ற தந்தையாக்கிவிடுகின்றன இத்தந்தையரை லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்' நாவலும், சூடாமணியின் 'புன்னகைப் பூங்கொத்து' நாவலும் சித்திரிக்கின்றன.

'மிதிலா விலாஸ்' நாவலில் இருபத்துநான்கு வயதாகியும் பெண்ணுக்குத் திருமணம் செய்யவேண்டும் என்ற பொறுப்பில்லாமல் இருக்கும் கிரிஜாவின் தந்தை, மனைவியினால் திருமணம் ஏற்பாடு ஆனபின்னரும், திருமணத் தொடர்பாக எவ்வித முயற்சியும் செய்யாதவராகப் படைக்கப்படுகின்றார் (ப 240). இங்கு மகளின் திருமணம் தாயின் பொறுப்பாகிவிடுகின்றது; தந்தை பொறுப்பற்றவராகக் காணப்படுகின்றார்.

தந்தையின் பொறுப்பற்ற நிலையை 'புன்னகைப் பூங்கொத்து' எனும் சூடாமணியின் நாவலும் காட்டுகின்றது. இருபத்தாறு வயதான பெண்ணுக்கு மாப்பிள்ளை தேடும் எண்ணமில்லாத டாக்டர் சௌரிராஜன், "கல்யாணம் செய்து கொள்ளவில்லையே என்று ஏங்கும் நேரத்தைப் படிப்பதில் செலவிட்டால்தான் எப்போதோ உருப்பட்டிருக்கலாமே," (ப 89) என்று மகளைக் குத்திப்பேசிப்பொழுதைக் கழிக்கின்றார். இந்நாவலில் மாலா-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விற்குத் தாய் இல்லாததால் திருமண முயற்சி மேற்கொள்ளப்படவில்லை

இவ்விரு நாவல்களிலும் தந்தை மகளை வெறுப்பதாகக் காட்டப்படவில்லை ஆனால் தந்தையின் பொறுப்பற்ற நிலை மகளை வெறுப்படையச் செய்கின்றது.

3 6. 1. 1. 2. 3. தந்தையின் பணத்தாசை

தந்தையின் பணத்தாசையும் அவரைத் தனது கடமையினின்று வழுவச் செய்துவிடுகின்றது என்பதை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' நாவலும், சூடாமணியின் 'மகளின் கைகள்' நாவலும் காட்டுகின்றன.

'நாயக்கர் மக்கள்' நாவலில் பணக்காரரான நரசிம்மம் மேலும் பணம் சேர்க்கவேண்டும் என்ற ஆசையினால் தீயவனான மதனகோபாலனுக்குத் தன் மகள் சரோஜினியை அவளுடைய எதிர்ப்பையும் மீறி மணமுடிக்க எண்ணுகின்றார். மகளின் நல்வாழ்வைக் கருதவேண்டிய தந்தையாகிய நரசிம்மம் தன்னலத்தையே பெரிதாக எண்ணுவதால் தந்தை-மகள் உறவு பாதிக்கப்படுகின்றது. ஒரே மகள், தாயற்றவள் என்றிருந்துங்கூட, உலகிலே மிகவும் புதுமையாகச் சிறிதுகூடப் பாசமின்றி இருந்த தந்தையின் மனப்போக்கை எண்ணி வருந்தும் சரோஜினியை இந்நாவல் சித்திரிக்கின்றது.

மகள்மீது மிகுதியான பாசம் கொண்டிருந்த பணக்காரத் தந்தை, மகள் சௌம்யா தன்விருப்பத்தை மீறி ஓர் ஏழையை மணக்கவிரும்பியபொழுது, தந்தை என்ற நிலையிலிருந்து இறங்கிவிடுவதைச் சூடாமணியின் 'மகளின் கைகள்' எனும் நாவல் சித்திரிக்கின்றது. மகள் காட்டும் அன்பையும் தந்தையால் ஏற்க முடியவில்லை; பணத்தாசையின்றி, தாயற்ற சௌம்யாவிற்கு, அவள் விரும்பியவாறே மணமுடித்து வைத்திருந்தால் உறவின் பாதிப்பு நிகழ்ந்திருக்காது அப்பொறுப்பை ஏற்க அவர் மறுத்ததால் உறவின் பாதிப்பு நிகழ்கின்றது இங்கு தந்தைதான் மகளை வெறுக்கின்றாரேயன்றி மகள் தந்தையை வெறுக்கவில்லை.

மகள் மேலைநாட்டானை மணக்க விரும்பியபொழுது முதலில் மறுத்த தந்தை பின்னர் திருமணத்திற்கு வந்து வாழ்த்துவதை 'மானிட அம்சம்' எனும் சூடாமணியின் நாவல் காட்டுகின்றது. இங்கு மகளின் மகிழ்ச்சியையே தந்தை பெரிதாக மதிப்பதால் உறவு பாதிக்கப்படவில்லை. ஆனால் தன் செல்வ நிலையையே பெரிதாகத் தந்தை மதிக்கும்பொழுது, உறவு பாதிக்கப்படுகின்றது என்பதை 'நாயக்கர் மக்கள்', 'மகளின் கைகள்', 'மானிட-அம்சம்' ஆகிய மூன்று நாவல்கள் சித்திரிக்கும் தந்தையரின் செயல்களை ஒப்பிடுவதன்வழி அறிய முடிகின்றது.

3. 6. 1. 1. 2. 4. தந்தையின் குறிக்கோள்

சமுதாயத்தில் புரையோடிப்போன சில பழக்கங்களைக் கண்டு மனம் வெறுத்துத் தன்னளவிலாவது அதனைச் செயல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுத்தவேண்டும் என்று விழையும் குறிக்கோளுடைய தந்தையைச் சூடாமணியின் 'வாழ்த்துவோம்' என்ற நாவல் சித்திரிக்கின்றது.

'வாழ்த்துவோம்' நாவல், இரு வாழ்வுகள் ஒன்றுக்கொன்று துணையாக இணையும் விழாவான திருமணத்திற்கு வரதட்சிணை தருவதும், ஆடம்பரமாகத் திருமணத்தை நடத்துவதும் தேவையற்றவை என எண்ணும் சுப்ரமணியம், தன் மகள் திருமணத்திற்கு வரதட்சிணை தர மறுப்பதால் நிச்சயிக்கப்பட்ட திருமணம் நடைபெறாமல் போவதைச் சித்திரிக்கின்றது. தந்தையின் போக்கை வெறுத்த மகள், ''நான் நன்னாயிருந்தால் இந்த அப்பாவுக்கு பிடிக்காது. எப்பவுமே என்னைக் கண்டால் கரிப்புதான்; இப்போ அவர் மனசு குளிர்ந்திருக்கும். பாயசம் செஞ்சு குடிக்கட்டும்,'' என்று பழிக்கிறாள் (ப 40). இறுதியில் அவள், முன்பின் அறியாத ஒருவனுடன் வீட்டைவிட்டு ஓடுவதற்கும், அவரது குறிக்கோள் காரணமாகிவிடுகின்றது. தந்தைக்கு நேர்மாறான பண்புகொண்ட மகளின் வாழ்க்கைக்கு ஓர் அறைகூவலாகத் தந்தையின் குறிக்கோள் அமைந்து, மகளின் வாழ்க்கையையே கெடுத்துவிடுகின்றது என்பதைச் சூடாமணி இந்நாவலில் காட்டுகின்றார்.

தந்தைக்கும் மகளுக்கும் இடையே உள்ள பாதிக்கப்படாத பாசமிக்க உறவைச் சூடாமணி 'மகளின் கைகள்', 'தந்தை வடிவம்' ஆகிய இரு நாவல்களில் சித்திரிக்கின்றார்.

'மகளின் கைகள்' நாவல் தந்தையின் மகிழ்ச்சிக்காகத் தன்னுடைய விருப்பு வெறுப்புக்களையெல்லாம் ஒதுக்கிவைத்துவிட்டு வாழும் மந்தாகினியைச் சித்திரிக்கின்றது. தந்தைக்குப் பிடித்த ஆடவனையே மணக்க இசைவு தந்த அவள் தந்தையின் மனநிறைவிலேயே தன்னிறைவு பெறுகின்றாள் (ப. 67). 'தந்தை வடிவம்' நாவலில் சூடாமணி, தந்தை-மகள் உறவினை உளவியல் முறையில் சித்திரிக்கின்றார். மணப்பருவத்தில் இருக்கும் அபர்ணாவிற்கு அவள் தந்தைதான் ஊனும் உதிரமும் கொண்டு இயங்கும் அன்றாடத் தெய்வமாக விளங்குகின்றார். தாயை இழந்துவிட்ட அபர்ணாவிற்குத் தந்தைதான் உலகமாகக் காணப்படுகின்றார். தந்தைமீது உள்ள பாசத்தால் அவர் தனக்கு நிச்சயித்திருக்கும் ராஜனை மணக்கவும் அவள் விரும்பவில்லை; அவரிடமிருந்து பிரிக்கும் வேறெந்த வாழ்வையும் எண்ணியும் பார்க்கமுடியாதவளாக அபர்ணா காணப்படுகின்றாள். தந்தைமீது மகள் கொள்ளும் உறவை உளவியலார் 'தந்தை மகள் காதல்' (electra complex) என்பர். மகளுக்குத் தந்தையிடம் ஏற்படும் தீர்க்க முடியாத பாலுறவு விருப்பம் என இவ்வுறவினை உளவியலார் விளக்குவர் (N Fodor and F. Gaynor, 1958, p. 114). தந்தையிடம் அதீத தொழுகையும் ஈடுபாடும் கொண்டு தன்னை இழந்துவிடும் ஒரு மகளுக்கு அந்தத் தந்தைதான் லட்சிய ஆணாக இருக்கமுடியும். இம்மாதிரியான மனப்பான்மையுள்ள பெண்கள் மணவாழ்வில் திருப்தியுடன் வாழ்வது அரிது என்று இவ்வகைப் பெண்களைப்பற்றி இந்நாவலில் விளக்குகின்றார் சூடாமணி (ப. 19).

சூடாமணி சித்திரிப்பதுபோன்று மணப்பருவத்தில் மகளுக்கும் தந்தைக்குமிடையேயுள்ள ஆழமான உறவை லக்ஷ்மி தம் நாவல்களில் சித்திரிக்கவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 6. 1. 1 3. திருமணம் முடிந்தபின் மகள்-தந்தை உறவு

திருமணம் முடிந்த பின்னர் மகளின் நல்வாழ்வுக்கு அறிவுரை கூறும் ஆசானாகவும், மகளின் வாழ்க்கையைச் செம்மைப்படுத்த முயற்சி செய்பவராகவும் தந்தை காணப்படுகின்றார். இதனை லக்ஷ்மியின் 'பவானி', 'நாயக்கர் மக்கள்' எனும் இரு நாவல்கள் விளக்குகின்றன.

'பவானி' நாவலில் தன் பிடிவாதத்தாலும் செருக்கினாலும் கணவனை விட்டுவிட்டுத் தந்தை வீட்டிற்கு வரும் பவானியை லக்ஷ்மி படைத்திருக்கின்றார். மகளுடைய வரவிற்கான காரணத்தை அறிந்திருந்தும் அறியாததைப்போலிருந்த தந்தை, மகள் அவரிடம் தான் வந்ததன் காரணத்தைக் கூறியபின்னர் மகளுக்குப் பலவாறு அறிவுரை கூறுகின்றார் (ப. 190). திருமணத்திற்குப் பின்னர் மகள் தவறு செய்கையில் தவற்றைக் கண்டிக்கும் ஆசானாகத் தந்தை விளங்குவதை இந்நாவல் சித்திரிக்கின்றது.

'நாயக்கர் மக்கள்' நாவல் ஆசையாகத் தான் திருமணம் செய்வித்த தன் மகள் சித்ராவின் மணவாழ்க்கை சிதைந்ததை அறிந்து மிகவும் மனவேதனையுற்று அவள் வாழ்க்கையைச் சீர்படுத்த முனையும் தந்தையைச் சித்திரிக்கின்றது.

மகள்மீது கொண்ட மிகுதியான அன்பினால் மகளுக்கு ஏற்படும் சின்னத் துன்பத்தைக்கூடப் பொறுக்கவியலாத தந்தையைச் சூடாமணியின் நாவல்கள் சித்திரிக்கின்றன. 'மகளின் கைகள்' நாவல் ஏழையை மணந்துகொண்டு வறுமையில் வாடும் சௌம்யாவின் துன்பத்தைக் காணமுடியாது கணவனை விட்டுவிட்டுத் தன்னிடமே வருமாறு அவளை அழைக்கும் தந்தையைச் சித்திரிக்கின்றது. 'இரவுச் சுடர்' நாவல் திருமணத்தையே வெறுத்த யாமினிக்குத் திருமணத்தை முடித்து, பின்னால் அவள் பைத்தியமான நிலை கண்டு மகளுக்குத் திருமணம் செய்ததே தவறோ எனவருந்தி நிற்கும் தந்தையைச் சித்திரிக்கின்றது. 'புன்னகைப் பூங்கொத்து' நாவல் மகள்மீது கொண்ட அன்பினால் மருமகன் தன் மகளைக் கவனிக்கவில்லை என அறிந்ததும் தன்னுடன் வருமாறு மகளை அழைக்கும் தந்தையைச் சித்திரிக்கின்றது

சூழலால் கற்பினை இழந்து கணவனால் துரத்தப்பட்டு வரும் மகளை வெறுக்கும் தந்தையைச் சூடாமணியின் 'மானிட அம்சம்' நாவல் சித்திரிக்கின்றது

3. 6. 1. 1. 4. லக்ஷ்மியின் நாவல்கள் பெரும்பான்மையாகக் கிராமவாழ்வையும், கூட்டுக் குடும்பவாழ்வையும் சித்திரிக்கின்றன. எனவே, அவற்றில் தந்தை-மகள் உறவு மிக நெருங்கிய உறவாக இன்றி, பொதுவாக ஒரு தந்தை மகளிடம் காட்டும் அன்புநிலையில் அமைந்திருக்கின்றது. கூட்டுக் குடும்பவாழ்வில் தந்தை மகளின் தோழமையை நாடுவதில்லை. (Aileen D. Ross, 1973 p. 146).

சூடாமணியின் நாவல்கள் மிகுதியும் நகர்ப்புறவாழ்க்கையையும், தனிக்குடும்ப வாழ்க்கையையும் சித்திரிக்கின்றன. தனிக்குடும்பம் சிறியதாக அமைவதால் குடும்ப உறவினர்கள் உரிமை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெற்றவராயும் ஒருவருக்கொருவர் நெருங்கிய உறவும் கொண்டவராகவும் காணப்படுவர் என்ற சமூகவியலாரின் (Aileen D. Ross, 1973, p. 146) கருத்து, சூடாமணியின் நாவல்களுக்குப் பொருந்துகின்றது. நகர்ப்புற வாழ்க்கையின் நாகரிகப் போக்கு தந்தை-மகள் உறவை நெருக்கமாக்குகின்றது என்பதனை ஆய்வாளருடைய களஆய்வும் நிறுவுகின்றது.* லக்ஷ்மியின் நாவல்களில் படைக்கப்பட்டிருக்கும் கதைமாந்தர்களுள் பவானியும் அவள் தந்தையுமே (பவானி) படித்தவர்கள்; ஏனையோர் படிக்காதவர்கள்; கிராமத்தில் வாழ்பவர்கள்.

சூடாமணியின் நாவல்களில் வரும் யாமினி (இரவுச்சுடர்), சைலஜா (புன்னகைப் பூங்கொத்து, அபர்ணா (தந்தை வடிவம்), சௌம்யா (மகளின் கைகள்) ஆகியோர் கற்றவர்கள்; இவர்களுடைய தந்தையரும் கற்றவர்கள்; இவர்களுடைய வாழ்வும் நகர்ப்புறத்தில் அமைந்திருக்கின்றது கல்வி கற்ற பெண்கள் தம் தந்தையருக்குச் சிறந்த தோழிகளாக விளங்குவர் என்ற ஆலன் டி ராஸின் கருத்து (Aileen D Ross, 1973, p 146) இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. ஆகவே சூடாமணியின் நாவல்களில் தந்தை-மகள் உறவு நெருங்கிய உறவாகக் காணப்படுகின்றது எனலாம்.

சூடாமணி தந்தைக்கும் மகளுக்குமிடையே உள்ள உறவை உணர்ச்சிமிக்க உறவாகச் சித்திரிக்கின்றார். 'இரவுச்சுடர்' நாவலில் மகளுக்குத் திருமணம் செய்துவைத்த, தன் தவற்றினை எண்ணி வருந்தும் சாரநாதன் மகளிடம் மன்னிப்பு கேட்கும் பொழுது ''எனக்கு விடுதலை கொடுங்கள். நான் மன்னிச்சுடறேன்,'' (ப 87) என்ற மகளின் தெளிவான பேச்சினால் மனம் நெகிழ்ந்து சிறுகுழந்தை முதல் தன்னிடம் எதையுமே வேண்டிராத மகளின் முதல் வேண்டுகோளுக்கு இசைகின்றார். ''முதுமையுற்ற அவருடைய நொந்த சரீரம் முழுவதும் முள் பாய்ந்து நின்றது. இதயத்தின் பாசமெல்லாம் பொங்கித் ததும்பிக் கரையுடைந்து பெருக, தன்மையான அந்தக் கருவடிவினைச் சிறிதுநேரம் கண்குளிர நோக்கினார். பார்வையின் கரைகாணா வாஞ்சை அவளைத் தீண்டி எடுத்துக் குழந்தை போல் அணைத்துக் கொண்டது. அவளும் அதனால் மருளாமல் நின்றாள். அந்த கணம் இருவரும் மிகமிக நெருங்கி வந்துவிட்டாற்போலிருந்தது'' (ப. 88) எனச் சூடாமணி சித்திரிப்பது தந்தைக்கும் மகளுக்குமிடையேயுள்ள உணர்ச்சிமிக்க உறவைப் புலப்படுத்துகின்றது. சாரநாதன் மகளின் உலக விடுதலைக்கு வழி விட்டு, பின் அவள் நினைவாலேயே வாடி அவள் விழுந்த கிணற்றிலேயே விழுந்து உயிர் விடுகின்றார்.

---

*ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாக நகர்ப்புற பெண்களில் 32.85 விழுக்காட்டினர் தந்தையிடம் தாயைவிட மிக்க பாசம் கொண்டவராகக் காணப்படுவது தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகளிடம் கொண்ட அன்பினால், அவள் ஏழையைக் காதல் மணம் புரிந்து கொண்டதும், மகளுக்குத் தன்மீது பாசம் குறைந்து விட்டதோ என்று மனம் கலங்கி உணர்ச்சிகளால் குமுறும் தந்தையை 'மகளின் கைகள்' எனும் நாவல் சித்திரிக்கின்றது.

தந்தையே தன் உலகம் என எண்ணி வாழும் அபர்ணா, தந்தை இறந்த பின்னர் தந்தைமேல் கொண்ட அன்பினால் தந்தை வடிவத்தில் உள்ள தந்தையின் நண்பரையே காதலிப்பதைத் 'தந்தை வடிவம்' என்ற நாவல் சித்திரிக்கின்றது.

இம்மூன்று நாவல்களிலும் தந்தை-மகள் உறவில் தாயின் இடம் குறைவாகவோ (இரவுச்சுடர்), அன்றித் தாயில்லாத நிலையோதான் சித்திரிக்கப்பட்டுள்ளது (மகளின் கைகள், தந்தை வடிவம்).

லக்ஷ்மியின் நாவல்களில் இத்தகு உணர்ச்சிமிக்க சித்திரிப்புக்கள் இல்லை.

இவ்விரு படைப்பாளிகளும் தம் நாவல்களில் செம்பாகம் தந்தை - மகள் உறவைப் படைத்துள்ளனர். லக்ஷ்மி தம் பன்னிரண்டு நாவல்களில் ஆறு நாவல்களிலும், சூடாமணி தம் பன்னிரண்டு நாவல்களில் ஒன்பது நாவல்களிலும் இவ்வுறவைக்காட்டுகின்றனர். லக்ஷ்மியின் நாவல்களில் தந்தை-மகள் உறவு நிகழ்ச்சிகளின் போக்கிலேயே சித்திரிக்கப்படுகின்றது. ஆனால் சூடாமணி மூன்று நாவல்களில் (இரவுச்சுடர், தந்தை வடிவம், மகளின் கைகள்) தந்தை-மகள் உறவையே கதைக் கருவாகக் கொண்டிருக்கின்றார்.

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய படைப்பாளிகளின் இவ்வேறுபாட்டிற்கு இருவருடைய குடும்பப் பின்னணி காரணம் எனலாம். லக்ஷ்மி பெரிய குடும்பத்தின் மூத்த மகள். தந்தைப் பாசத்தை அனைவருடன் பகிர்ந்துகொண்டவர். சூடாமணி ஒரு சிறு குடும்பத்தில் பிறந்தவர்; இளமையில் தாயை இழந்தவர்; தந்தையாலேயே வளர்க்கப்பட்டவர்; தந்தையிடம் மிக்க பாசம் கொண்டவர்; தந்தையாலேயே வாழ்வில் முன்னுக்கு வந்தவர். எனவே, இருவர்தம் குடும்ப வாழ்வு இருவரது தந்தை-மகள் பாத்திரப் படைப்பிற்குப் பின்னணியாக இருக்கலாம் எனக் கருத முடிகின்றது.

3. 6. 1. 2. உடன்பிறந்தார் உறவு

ஒரு பெண்ணின் உடன்பிறந்தார் உறவு மிக நெருக்கமானது. தனித்து வாழ்வதினும் உடன்பிறந்தாருடன் வாழ்வதையே ஒரு பெண் விரும்புவாள்.

1) அக்காள்-தம்பி உறவு.
2) அண்ணன்-தங்கை உறவு
3) அக்காள்-தங்கை உறவு

என்று மூன்று வகையாக இவ்வுறவு நிலைகளை லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் பிரித்துக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.6.1.2.1. *அக்காள்-தம்பி உறவு*

உடன்பிறந்தான்-உடன்பிறந்தாள் உறவு என்பது நிலையான, நீண்டகால பாசமிக்க உறவாகும். ஓர் ஆடவன் தன் உடன் பிறந்தாளைத் திறந்த மனத்தோடு எவ்வித உள்எண்ணமின்றிக் காக்கின்றான். அவளிடமிருந்து எதனையும் அவன் பெறுவதைவிட அவன் அவளுக்குத் தருவதே மிகுதியாகும் (David G. Mandelbaum, 1972, p. 67). இவ்வுறவினை லக்ஷ்மியின் 'லட்சியவாதி', 'பெண்மனம்', 'ஸ்ரீமதி மைதிலி' எனும் மூன்று நாவல்கள் சித்திரிக்கின்றன.

'லட்சியவாதி' நாவல் தமக்கை விதவையானால் அவளைக் காக்கும் பொறுப்பைத் தம்பி ஏற்கின்றான்; தனக்கெனக் குழந்தை இல்லாத தமக்கை தம்பியையே தன் குழந்தையாகப் பாவித்துத் தம்பியுடனே வாழ்கின்றாள் என்று சித்திரிக்கின்றது.

'பெண்மனம்' நாவலில் சந்திராவிற்கு ஏற்பட்ட பழிச்சொல்லுக்குக் காரணமாக ஜகந்நாதன் விளங்குகின்றான்; தீய நடத்தையுடைய ஜகந்நாதனைச் சந்திரா வெறுத்தாலும், அவனை மணப்பதனால் தன் தம்பியின் வாழ்வு வளமுறும் என உணர்ந்தபோது ஜகந்நாதனை மணக்கத் துணிகின்றாள். தம்பிக்காகத்தன் வாழ்வையே தியாகம் செய்யத் துணியும் அக்காளாகச் சந்திரா இந்நாவலில் படைக்கப்பட்டிருக்கின்றாள்.

'ஸ்ரீமதி மைதிலி' நாவலில் தாயற்ற தன் தம்பியரைத் தன் குழந்தைகளாக வளர்க்கும் மங்களம் சித்திரிக்கப்படுகின்றாள். சிறிதளவே படித்த மூத்த தம்பியைவிட மிகுதியாகப் படித்த இளைய தம்பியின்மீது அவளுக்கு அன்பு மிகுதியாகக் காணப்படுகின்றது. சுற்றியிருப்போர் பேச்சைக் கேட்டு மூத்த தம்பியின் மனைவி மீது மங்களம் பழிதூற்ற, அதனால் அக்காள்-தம்பி உறவு பாதிக்கப்படுகின்றது. இளைய தம்பியும் அவன் மனைவியும் அவளுக்கு நெருங்கியவராகின்றனர். காலப்போக்கில் மங்களம் தன் கணவனை இழந்து சொத்தினையும் இழந்து இளைய தம்பியின் மனைவியால் வெறுக்கப்படும்பொழுது இளைய தம்பி-அக்காள் உறவு பாதிக்கப்படுகின்றது. தன் வறுமைநிலையில் தன்னைக் காப்பாற்ற முன்வந்த மூத்த தம்பியின் அன்பை மங்களம் பின்னரே உணர்கின்றாள்.

லக்ஷ்மி சித்திரிப்பது போன்று அக்காள்-தம்பி உறவைச் சூடாமணி விரிவாகச் சித்திரிக்கவில்லை. தோழமையுடன் பழகும் அக்காள்-தம்பியரை 'உயர்வு உள்ளத்திலே' எனும் நாவலில் காட்டுகின்றாரே அன்றி இவ்வுறவினை விரிவாகச் சித்திரிக்கவில்லை.

3.6.1.2.2. *அண்ணன்-தங்கை உறவு*

உடன்பிறந்தார் உறவுகளுள் இவ்வுறவே மிகுதியாக நாவல்களில் குறிப்பிடப்படுகின்றது. லக்ஷ்மியின் (1) அடுத்த வீடு, (2) அரக்கு மாளிகை, (3) நாயக்கர் மக்கள், (4) மிதிலா விலாஸ், (5) ஸ்ரீமதி மைதிலி, (6) மாயமான், (7) லட்சியவாதி, (8) சூர்ய-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காந்தம், (9) காஞ்சனையின் கனவு, (10) பவானி ஆகிய பத்து நாவல்களும், சூடாமணியின் (1) நீயே என் உலகம் (2) செந்தாழை, (3) உயர்வு உள்ளத்திலே, (4) வாழ்த்துவோம், (5) புன்னகைப் பூங்கொத்து ஆகிய ஐந்து நாவல்களும் அண்ணன்-தங்கை உறவைச் சித்திரிக்கின்றன. சமூகவியலார் ஆலன் டி. ராஸ் இந்தியாவில் நடத்திய ஆய்வில் தாய்-மகன் உறவுக்கு அடுத்தபடியாக இவ்வுறவே மிகுதியாகக் காணப்படுகின்றது என்பார். நூற்றைம்பத்தேழு பேர்களுள் தொண்ணூறு பேர் தமது உடன்பிறந்தாளிடம் பாசம் காட்டுபவர்களாகவும் ஒருவரே உடன்பிறந்தாளை வெறுப்பதாகவும் அவரது ஆய்வு காட்டுகின்றது (Aileen D. Ross, 1973, p. 137).

தன் தங்கையை ஏமாற்றிய காதலனைக் கொலை செய்யவும் துணியும் ஆனந்தனை 'அடுத்த வீடு' என்ற நாவலும், நொண்டியான தன் தங்கையிடம் மிகவும் பாசம் கொண்டு அவளுக்காகவே வாழ்ந்து வரும் கிரிதரனை 'அரக்கு மாளிகை' நாவலும் காட்டுகின்றன. தங்கைக்கும் அவள் கணவனுக்கும் இடையே தோன்றும் மனவேறுபாட்டைத் தீர்ப்பதற்காகப் பாடுபடுகின்ற மோகனசுந்தரத்தை 'நாயக்கர் மக்கள்' நாவல் காட்டுகின்றது. தன் கணவனை விட்டு வந்த தங்கைக்கு அறிவுரை கூறித் திருத்தும் அண்ணனை 'ஸ்ரீமதி மைதிலி' நாவல் காட்டுகின்றது.

'மாயமான்' நாவல், தந்தையற்ற தன் தங்கை வசந்தாவின்மீது மிக்க பாசம்கொண்டு தன் குழந்தையாகவே வளர்த்துவரும் நடராஜனைச் சித்திரிக்கின்றது. அவன் மனைவியும் அதற்குத் துணைநிற்கின்றாள். நடராஜனைப் போன்றே வசந்தாவின் இரண்டாவது அண்ணனான தியாகராஜனும் தங்கையின்மீது கொண்ட அன்பினால் அவளைப் படிக்கவைக்கின்றான். ஆனால் தியாகராஜன் திருமணமானவுடன் மனைவியின்பேச்சைக் கேட்டுத் தங்கையை வெறுக்கின்றான். நோயுற்ற தங்கையை இலவச மருத்துவமனையில் சேர்க்க அண்ணனுக்குப் பரிந்துரை செய்கின்றான். வசந்தாவின் அண்ணன்மார்களுள் நடராஜன் தன் தங்கையிடம் கொண்டிருந்த அன்பு அவன் திருமணத்திற்குப் பின்னரும் மாறவில்லை. நடராஜனின் திருமணம் வசந்தாவின் இளவயதிலேயே நடைபெற்றதால், நடராஜனின் மனைவி, வசந்தாவிற்குத் தாய் போன்று விளங்குகின்றாள்; வசந்தாவிடம் மிக்க அன்பு கொண்டவளாகக் காணப்படுகின்றாள். தியாகராஜன் வசந்தாவிடம் கொண்டிருந்த அன்பு அவன் திருமணத்திற்குப்பின் மாறிவிடுகின்றது. எனவே, அண்ணனின் திருமணம் அண்ணன்-தங்கை உறவினைப் பாதிக்கின்றது என்று உணரமுடிகின்றது.

தந்தையற்ற தங்கை கீதாவிற்குத் தந்தையாய் நின்று மணமுடிக்க வேண்டியது அண்ணனின் கடமை என்பதை உணர்ந்து அவள் திருமணத்திற்காகப் பாடுபடும் சேதுவை லக்ஷ்மி 'லட்சியவாதி' நாவலில் படைத்திருக்கின்றார்.

'சூர்யகாந்தம்' நாவல், சிற்றன்னை தன்னைக் கொடுமைப்படுத்தினாலும் தியாகராஜன் சிற்றன்னை மகளான தன் தங்கையை வெறுக்கவில்லை. அவன் செல்வந்தனானபின் தன் தங்கையரைக் காப்பாற்றித் திருமணம் செய்துவைக்கின்றான் என

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அண்ணன்-தங்கை உறவைச் சித்திரிக்கின்றது. தன் தங்கை கண வனுடன் வாழ மறுத்துவருகின்ற காலத்து அவளை ஏற்று ஆதரிக்கும் பொறுப்பும் அண்ணனுக்கு உண்டு; அன்பாக விளங்கிய அண்ணன்-தங்கை உறவு திருமணத்திற்குப் பின்னர் மாறிவிடுகின்றது; கணவனற்ற தங்கையின் சொத்துக்களையெல்லாம் பாழாக்கி, அவளையும் அவள் குழந்தைகளையும் காப்பாற்ற மனமின்றி அவர்கள் ஆதரவில் நிம்மதியாக வாழ விரும்புகின்றான் அண்ணன் என்ற கருத்துக்களும் இந்நாவலின்வழி பெறப்படுகின்றன.

தான் ஏழையானாலும் திருமணமான தங்கைக்குத் தன் வருவாயில் பரிசளிக்க விரும்பும் அண்ணனைக் 'காஞ்சனையின் கனவு' நாவலில் லக்ஷ்மி படைத்துக்காட்டியுள்ளார். கணவனை இழந்த தங்கையைத் தன்னுடன் அழைத்து வந்து காப்பாற்றும் பொறுப்புடைய அண்ணனை லக்ஷ்மியின் 'மிதிலா விலாஸ்' 'பவானி' எனும் இருநாவல்களும் படைத்துக்காட்டுகின்றன. கணவனை இழந்த தங்கையையும் அவள் மகனையும் காப்பாற்றும் பொறுப்பினை ஏற்கும் அண்ணனைச் சூடாமணியின் 'நீயே என் உலகம்' நாவல் சித்திரிக்கின்றது. அண்ணன் மனைவியும் அன்புடைய வளாகவே காணப்படுகின்றாள். ஆனால் தங்கை தங்கம் ஒரு 'பொஸஸிவ் மதரா'க இருப்பதால் தன் மகனை வேறுபாடு இல்லாமல் வளர்க்கும் அண்ணன் மீதும், அவன் மனைவிமீதும் அவளுக்கு ஐயம் ஏற்பட்டு, அவர்களை விட்டுத் தனித்து வாழ முற்படுவதால் அண்ணன்-தங்கை உறவு பாதிக்கப்படுகின்றது.

'அண்ணன் நொண்டி' என்பதைக் காரணம் காட்டும் பிள்ளைவீட்டாரிடம் சென்று வாதாடி தன் தங்கையை மணக்க வைக்கின்றான் நொண்டி அண்ணன் வீசு. தன் அண்ணனை நொண்டி என்பதால் மீண்டும் அவர்கள் பெண் கேட்டு வரும் பொழுது அப்பையனை மணக்க மறுக்கின்றாள் தங்கை உமா என்று அண்ணன்-தங்கையின் பாசமிக்க உறவைச் சூடாமணியின் 'செந்தாழை' நாவல் சித்திரிக்கின்றது. நடுத்தரக் குடும்பத்தில் பிறந்தும் ஆடம்பர வாழ்வை விரும்பும் தந்தையின் போக்கைக் கண்டு வருந்தி தங்கைகளுக்கு எவ்வாறு மணமுடிப்பது எனத் திகைத்து நிற்கும் அண்ணனை 'வாழ்த்துவோம்' நாவலில் சூடாமணி காட்டுகின்றார்.

'உயர்வு உள்ளத்திலே' நாவலில், சூடாமணி, இளம்வயதிலேயே விதவையாகி ஆண்துணையின்றி வாழ இயலாத பண்பினளான கௌரியை அவள் அண்ணன், தன் பெற்றோரின் விருப்பத்தையும் மீறி அவளை மணக்க முன்வந்தவருக்கு மணமுடித்துக் கொடுக்கின்றார்; அவளுடைய குழந்தையையும் தானே வளர்க்கின்றார் என அண்ணன்-தங்கை உறவைச் சித்திரிக்கின்றார். உடற்குறையினால் திருமணமாகாத தன் தங்கையின் நிலைக்கு வருந்தி, பொறுப்பற்ற தந்தையிடம் வாதாடும் அண்ணனைப் 'புன்னகைப் பூங்கொத்து' நாவலில் சூடாமணி சித்திரிக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இனிமையான அண்ணன்-தங்கை உறவினைக் கீழாக்கிப் பாழ்படுத்தும் அண்ணன்மாரும் லக்ஷ்மியின் நாவல்களில் காணப்படுகின்றனர். 'நாயக்கர் மக்கள்' நாவலில் தன் செல்வ சுகத்துக்காகவே தன் தங்கையை மூன்றாம் தாரமாக ஒரு கிழவனுக்கு மணமுடித்து அவன் இறந்தபின்னர் அவள் சொத்துக்களையெல்லாம் தன்வயமாக்கிக் கொள்ளும் அண்ணனை லக்ஷ்மி சித்திரிக்கின்றார். 'பண்ணையார் மகள்' நாவலில் இளம் வயதில் விதவையான தங்கை தீயவழியில் செல்வது தனக்குப் பயன்தருகின்றது. என்பதை உணர்ந்து தங்கையின் தவறுகளையெல்லாம் கண்டிக்காது, அவள் தொடர்பு கொண்டிருந்த ஆடவன் குடும்பத்தையே அழிக்க அவளுக்குத் துணைபுரியும் அண்ணனை லக்ஷ்மி படைத்திருக்கின்றார்.

தன் தங்கையின் வாழ்க்கைக்காகப் பாடுபடும் சகோதரர்களை மிகுதியாக லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இவ்விரு படைப்பாளிகளும் படைத்துள்ளனர்; அண்ணனை வெறுக்கும் தங்கையரை இருவரும் படைக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. அண்ணன் மனைவியால் அண்ணன்-தங்கை உறவு பாதிக்கப்படுவதை லக்ஷ்மி காட்டுகின்றார். சூடாமணியின் கதைகளில் அண்ணனின் மனைவியும் அன்புடையவளாகவே காணப்படுகின்றாள்.

சூடாமணி சித்திரிக்கும் முற்போக்கான அண்ணனை லக்ஷ்மி சித்திரிக்கவில்லை. விதவை மறுமணத்திற்கு ஆதரவு தரும் அண்ணனைச் சூடாமணி மட்டுமே சித்திரிக்கின்றார். லக்ஷ்மியின் நாவல்களில், பழமை மிகுதி. காலத்தால் லக்ஷ்மிக்குப் பிந்தியவரான சூடாமணியின் நாவல்களில் முற்போக்குக் கருத்துக்கள் இருப்பதற்குக் கால வேறுபாடு காரணம் எனக் கருதமுடிகின்றது.

3. 6. 1. 2. 3. அக்காள்-தங்கை உறவு

பழங்காலத்தில் சிறுவயதிலேயே பெண்களுக்குத் திருமணம் நடைபெற்று விடுவதால் சகோதரிகள் நீண்டகாலம் சேர்ந்து இருக்க வாய்ப்பில்லை. திருமணத்திற்குப் பின்னர் குடும்பத்தில் நடக்கும் விழாக்களுக்கு வரும்பொழுதும் உறவினர்களைக் காண வரும் பொழுதும் சகோதரிகள் சந்திப்பது வழக்கமாகக் காணப்பட்டது (Aileen D. Ross. 1973, pp. 165-166). இருவரும் பிரிந்து தனித்தனிக் குடும்பங்களுக்குச் சென்றுவிடுவதால் இவர்களிடையே சிக்கல் எழக்காரணமில்லை.

ஆனால் காலப்போக்கில் பெண்களின் திருமண வயது மாறியதால் சகோதரிகள் நீண்ட காலம் வீட்டில் சேர்ந்து இருக்கும் சூழல் ஏற்பட்டது. தாயின் இறப்பு மூத்த சகோதரிக்குக் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தும் இன்றியமையா இடத்தைத் தந்து விடுகின்றது (Aileen D. Ross, 1973, p. 111). இந்நிலையில் தாய்க்கும் மகளுக்கும் இடையே காணப்படும் உறவுநிலை தமக்கைக்கும் தங்கைக்கும் இடையே காணப்படுகின்றது.

கூட்டுக் குடும்பமின்றித் தனிக்குடும்ப அமைப்பில் வாழும் அக்காள்-தங்கையரிடையே இணையான உரிமை காணப்படு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றது. இருவரிடையேயும் ஆழமான பிணைப்பு நிலவுகின்றது (Aileen D. Ross, 1973, p. 166).

அக்காள்-தங்கை உறவினைப் பற்றி லக்ஷ்மியின் (1) அடுத்த வீடு, (2) சூர்யகாந்தம் ஆகிய இரு நாவல்களும், சூடாமணியின் (1) மானிட அம்சம், (2) மனத்துக்கினியவள், (3) உயர்வு உள்ளத்திலே, (4) வாழ்த்துவோம், (5) புன்னகைப் பூங்கொத்து (6) மகளின் கைகள் ஆகிய ஆறு நாவல்களும் சித்திரிக்கின்றன.

'அடுத்த வீடு' நாவலில் லக்ஷ்மி, ஏழையை மணந்துகொண்ட தன் தங்கையிடம், ''பணம் என்பது இல்லாமல் ஒரு நிமிஷம் காலம் தள்ளமுடியாது,'' என்று சவால் விடும் செல்வச் செருக்குக் கொண்ட அக்காள் ஜகதாவைப் படைத்திருக்கின்றார். 'அப்பவும் நான் உன் வீட்டு வாசற்படியில் வந்து நிற்க மாட்டேன்' எனத் தங்கை எதிர் சவால் விடுவதால் அக்காள்-தங்கை இருவருக்கு மிடையே பகை மூள்கின்றது (ப. 16-17). தங்கையின் மகப்பேற்று உதவிக்காக அவள் வீட்டிற்கு ஜகதா வந்தபோதும் தங்கையின் கணவனால் பகை மேலும் வளர்கின்றது; ஜகதாவும், பங்கஜமும் ஒருவருக்கொருவர் எவ்விதத் தொடர்பும் இன்றியே வாழ்கின்றனர். தங்கையுடன் பகைமைகொண்டாலும் ஜகதாவின் அடிமனதில் தங்கையிடம் பாசம் இருந்தது என்பதைப் பங்கஜம் இறந்த நேரத்தில் வெளிப்பட்ட ஜகதாவின் கண்ணீரும், தங்கை மகளிடம், ''உன்னைப் போலச் சிறு பெண்ணா இருக்கையிலே பங்கஜத்தை என் குழந்தை போல வளர்த்து வந்திருக்கின்றேன்.'' (ப. 149) என்ற ஜகதாவின் கூற்றும் புலப்படுத்துகின்றன. எனினும், தமக்கையினது செல்வச் செருக்கும், தங்கையினது சுயமதிப்பும் அக்காள்-தங்கை உறவைப் பாதிக்கின்றன என்பதை லக்ஷ்மி இந்நாவலில் காட்டுகின்றார். அதே நாவலில் தோழியர் போல் பழகும் இந்திராணி-அருணாவையும் லக்ஷ்மி படைத்திருக்கின்றார்.

லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்' நாவலிலும்பாதிக்கப்பட்ட அக்காள்-தங்கை உறவையே காணமுடிகின்றது. பொறுமை, பொறுப்புணர்ச்சி, தியாக மனப்பான்மை பலவும்கொண்ட விஜயா வறுமையில் வாடும் தன் குடும்பத்திற்காக வேலைக்குப் போகின்றாள்; தங்கை மோகனாவைக் கல்லூரியில் சேர்த்துப் படிக்க வைப்பதற்காக உழைக்கும் விஜயாவின்மீது அவளுக்குப் பாசம் ஏதும் கிடையாது. மோகனா திருமணமாகிச் சென்ற பிறகே அக்காளிடம் அன்புகொண்டவளாகக் காணப்படுகின்றாள்.

லக்ஷ்மி தன் நாவல்களில் பாதிக்கப்பட்டுள்ள அக்காள்-தங்கை உறவையே பெரும்பான்மையாகச் சித்திரிக்கின்றார். ஒற்றுமையாக வாழும் அக்காள்-தங்கையரைச் சூடாமணியின் நாவல்கள் சித்திரிக்கின்றன.

'மானிட அம்சம்' நாவலில் கலப்புத் திருமணம் செய்துகொள்வதற்கு அக்காளின் துணையை நாடும் அபிராமி, அக்காளின் கணவன் அவளை வீட்டைவிட்டு விரட்டும்பொழுது அக்காவிற்கு உறுதுணையாய் நின்று அவளுடைய துயரத்திற்கு வடி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

காலாய் நிற்கின்றாள். அக்காளும் தங்கையும் தோழியராய் பழகுகின்ற நிலையைச் சூடாமணி சித்திரிக்கின்றார்

'மனத்துக்கினியவள்' நாவலில் உடற்குறையுற்ற அக்காளிடம் அன்பு காட்டிப் பழகும் தங்கை ராதாவைச் சூடாமணி சித்திரிக்கின்றார்.; தோழிகளாகப் பழகும் அக்காள்-தங்கையரை 'உயர்வு உள்ளத்திலே' நாவலும், வரதட்சிணை கொடுக்கக் கூடாது என்ற குறிக்கோளையுடைய தந்தையை வெறுக்கும் அக்காள் சகுந்தலாவை, அவளுடைய குற்றங்குறைகளுடன் விரும்பும் அகிலாவை 'வாழ்த்துவோம்' நாவலும் மனவேறுபாடு கொண்ட அக்காள் - அக்காளின் கணவனுடன் வந்து வாழ்ந்த 'சிறிது நாட்களிலேயே அவர்களை ஒன்றுபடுத்தும் வாணியைப் புன்னகைப் பூங்கொத்து' நாவலும், செல்வக் குடும்பத்துப் பெண்ணாக இருந்தபோதிலும் ஏழையைக் காதலித்து மணந்து கொண்ட சௌம்யாவை அவள் தந்தை வெறுத்தபோதிலும், வெறுக்காத தங்கை மந்தாகினியை 'மகளின் கைகள்' நாவலும் சித்திரிக்கின்றன.

லக்ஷ்மி, சூடாமணி இருவருமே அக்காள்-தங்கை பாத்திரப் படைப்பில் முரண் எனும் உத்தியைக் கையாள்கின்றனர்.

சிறிதளவு அழகும் நல்ல பண்புகளும் கொண்ட விஜயாவிற்கு நிறைந்த அழகும் தீயபண்புகளும் கொண்ட மோகனா தங்கை, (சூர்யகாந்தம்); பணச் செருக்குக் கொண்ட ஜகதாவிற்கு அன்பு வடிவான தங்கை பங்கஜம் (அடுத்த வீடு) என்று பாத்திரப் படைப்பில் முரண் உத்தியைக் கையாண்டு பாத்திரத்தின் பண்புகளை விளக்குகின்றார் லக்ஷ்மி.

சூடாமணியும் முரண் உத்தியைத் தம் நாவல்களில் அக்காள்-தங்கை பாத்திரப் படைப்பிற்குக் கையாள்கின்றார். பழமையில் ஈடுபாடு கொண்ட சாரதாவிற்குப் புதுமையில் மோகம் கொண்ட அபிராமியையும் ஆடம்பர வாழ்வில் நாட்டம் கொண்ட சகுந்தலாவிற்கு எளிய வாழ்வை நாடும் அகிலாவையும், 'தான்' எனும் நினைப்பே மிகுதியாகக் கொண்டிருக்கும் அக்கா சைலஜாவிற்கு எல்லாரிடமும் அன்பு செலுத்தும் வாணியையும், தந்தையின் பாசத்தைப் பெரிதாக எண்ணாது தன் காதலையே பெரிதாக எண்ணி வாழும் சௌம்யாவிற்குத் தந்தையே உலகம் என வாழும் மந்தாகினியையும் தங்கைகளாகப் படைத்து முரண்பட்ட பாத்திரப் படைப்புகளைச் சூடாமணி காட்டுகின்றார்.

முரண் எனும் உத்தியை இரு படைப்பாளிகளும் கையாண்டாலும் பாத்திரச் சித்திரிப்பில் இருவருக்கும் இடையே வேறுபாடு காணப்படுகின்றது.

நல்ல பண்பு, தீய பண்பு என்னும் இரண்டிற்கும் இடையே ஏற்படும் மோதலை லக்ஷ்மி தம் நாவல்களில் பாத்திரங்களின்வழி காட்டுகின்றார். இரு பாத்திரங்களுக்கு இடையே ஏற்படும் மோதலால் உறவு பாதிக்கப்படுவதாகச் சித்திரிக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இருவேறு நல்ல பண்புகளுக்கு இடையே உள்ள முரண்பாடுகளைச் சூடாமணி தம் நாவல்களில் பாத்திரங்களின்வழி சித்திரிக்கின்றார்; எனினும் இரு பாத்திரங்களுக்கிடையே மோதல் ஏற்படுவதாகப் படைக்கவில்லை; இருவேறுபட்ட பண்புகள் அக்காள் தங்கையரின் உறவைப் பாதிப்பதாகக் காட்டப்படவில்லை. இங்குப் பாத்திரப் படைப்பின் விளைவை ஆழமாக்க முரண் உத்தி பயன்படுகின்றது (Maren Elwood, 1955, p. 139) எனும் கொள்கைக்கு ஏற்ப பாத்திர முரண் காணப்படுகின்றது. தமது ஆறு நாவல்களுள் நான்கு நாவல்களில் முரண் உத்தியைப் பயன்படுத்தும் சூடாமணி, அந்நாவல்களில் தலைமைமாந்தராகவும் துணைமாந்தராகவும் அக்காள் தங்கையரைப் படைத்து அவ்விருவரிடையே உள்ள முரண்பட்ட பண்புகளைத் தெளிவாகக் காட்டுகின்றார். நல்ல நாவலாசிரியருக்கு முரண் ஒரு மந்திரக்கோல் போல் பயன் தரவல்லது (Maren Elwood, 1955, p. 149) என்ற கூற்று சூடாமணிக்குப் பொருந்தி வருகின்றது. லக்ஷ்மியின் நாவல்களில் அக்காள்-தங்கை சித்திரிப்பு ஆழமானதாக அமையவில்லை.

ஆலன் டி ராஸ் இந்திய இலக்கியத்தில் மிகுதியாகச் சித்திரிக்கப்படாத அக்காள்-தங்கை உறவினைப்பற்றிப் பேட்டியாளர்களும் மிகக் குறைவான செய்திகளையே தந்ததாகக் கூறி இவ்வுறவு மேலும் ஆய்தற்குரியது என்றும் கூறுகின்றார்; அவருடைய ஆய்வில் நூற்றைம்பத்தேழு தகவலாளிகளுள் ஐவரே இவ்வுறவில் அன்புடையவராகக் காணப்பட்டனர் என்றும் கூறுகின்றார் (Aileen D. Ross, 1973, pp. 165-166).

லக்ஷ்மி தம் பன்னிரண்டு நாவல்களில் இரண்டு நாவல்களில் மட்டுமே அக்கா-தங்கை உறவைச் சித்திரிக்கின்றார். சூடாமணி தம் பதினெட்டு நாவல்களில் ஆறு நாவல்களில் மட்டுமே இவ்வுறவைச் சித்திரிப்பது ஆலன் டி ராஸ் கருத்தினை அரண் செய்கின்றது என்று கருத முடிகின்றது.

குடும்பத்தின் மூத்த பெண்ணான லக்ஷ்மி பல தங்கையருடன் பிறந்தவர்; நீண்ட காலமாக வெளிநாட்டிலேயே வாழ்ந்ததனால் அக்காள்-தங்கை உறவின் ஆழத்தைப் புலப்படுத்தவில்லை என்றும், குடும்பத்தின் மூன்றாவது பெண்ணாகப் பிறந்து ஒரே தங்கையைக் கொண்டுள்ள சூடாமணி இவ்வுறவின் நெருக்கத்தை மிகுதியாகச் சித்திரிக்கின்றார் என்றும் இவ்விருவர்தம் குடும்பப்பின்னணி துணைகொண்டு கருத முடிகின்றது.

இரு படைப்பாளிகளின் உடன்பிறந்தார் உறவுபற்றிய சித்திரிப்பிலும் பாதிக்கப்பட்ட உறவினைவிட, பாதிக்கப்படாத உறவுச் சித்திரிப்பே மிகுதியாகக் காணப்படுகின்றது. உடன் பிறந்தார் உறவு, பாதிக்கப்படாத நிலையில்தான் நடப்பியலில் காணப்படு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றது என்பது ஆய்வாளருடைய கள ஆய்விலிருந்தும் தெரிய வருகின்றது.*

3. 6. 1. 3. 0. *தாயின் உடன்பிறந்தோர் உறவு*

இங்குத் தாயின் உடன்பிறந்தோர் என்பது தாயின் சகோதரிகளையும் சகோதரர்களையும் குறிக்கும். ஒரு பெண்ணின் தாய் இறந்துவிட்டால், தாயின் சகோதரி அவளை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்கின்றாள்; தந்தை இறந்தால், தாயின் சகோதரன் தந்தைக்குரிய கடமைகளை நிறைவேற்றுகின்றான். எனவே, ஒரு பெண்ணுக்குத் தாயின் உடன்பிறந்தார் உறவு இன்றியமையாத உறவாக விளங்குகின்றது. தாயின் உடன்பிறந்தார் உறவுகளைப் பின்வருமாறு இருவகைப்படுத்தலாம் :

1) தாயின் சகோதரிகளுடன் உறவு
2) தாயின் சகோதரர்களுடன் உறவு

3. 6. 1. 3. 1. *தாயின் சகோதரிகளுடன் உறவு*

ஒரு பெண் தன் தாயின் சகோதரிகளுடன் கொண்டுள்ள உறவுத் தொடர்பினை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு', 'சூர்யகாந்தம்' ஆகிய இரு நாவல்கள் சித்திரிக்கின்றன.

'அடுத்த வீடு' நாவலில் தங்கையுடன் பகை கொண்டிருந்தாலும் தங்கை இறந்த நேரத்தில் அவளது கைக்குழந்தையைக் கண்ட அக்காள் ஜகதா இரக்கப்பட்டு, தங்கையின் இறுதிவேண்டுகோளுக்கு இணங்கி அவளை வளர்த்து வருகின்றாள். தங்கை ஏழை என்பதை வெளியில் சொல்லக் கூசும் ஜகதா தங்கை மகள் அருணாவிடம் அதனை அடிக்கடி சுட்டிக் காட்டுகின்றாள்; தன்னை வளர்ப்பதால் அருணா தன் பெரியம்மாவிடம் நன்றியுணர்ச்சி கொண்டவளாகக் காணப்படுகின்றாள்; கடமையின் பொருட்டே ஜகதா தன் தங்கை மகளை வளர்க்கின்றாள் என்பதால் இவர்களுக்கிடையே நெருங்கிய உறவு காணப்படவில்லை என லக்ஷ்மி சித்திரிக்கின்றார். இதனின்றும் மாறுபட்ட பெரியம்மாவைச் 'சூர்யகாந்தம்' நாவலில் காணமுடிகின்றது. தங்கை மகள் தமயந்தியை அண்ணி கொடுமைப்படுத்துவதைக் கண்டு பொறுக்க இயலாது, வீட்டிலிருந்து தமயந்தியுடன் வெளியேறி, அவள் வளர்ச்சிக்காகவே இறுதிவரை பாடுபடும் காந்திமதியை இந்நாவலில் லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

இவ்விரண்டு நாவல்களிலும் வரும் பெரியம்மா இருவருக்கும் குழந்தைகள் இல்லை. ஜகதா கணவனை இழந்தவள்; பணக்காரி; செருக்கு மிகுந்தவள்; தங்கையின் வேண்டுகோளுக்காகவும், பிறர் தன் இரக்க குணத்தைப் புகழ வேண்டும் என்பதற்காகவுமே தங்கை மகளை வளர்க்கின்றாள. காந்திமதி கணவனைப் பிரிந்து வந்தவள்; அண்ணன் வீட்டில் வாழ்பவள்; தனக்-

---

* ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியிலிருந்து சகோதரர் சகோதரிகளுக்கிடையே உள்ள உறவில் பாசமிக்க உறவு இருப்பதை ஆடவரில் 47.25 விழுக்காட்டினரும், பெண்களில் 44. 83 விழுக்காட்டினரும் ஏற்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கென எந்த சொத்தும் இல்லாதவள். தங்கையின் குழந்தையிடம் காணப்பட்ட இறந்து போன தங்கையின் சாயலும், அண்ணி-யின் கொடுமையும் அவளுக்கு அக்குழந்தையிடம் ஈடுபாட்-டைக் கொடுக்கின்றன. தங்கையின் ஏனைய குழந்தைகளினால் தன் கௌரவம் பாதிக்கப்படும்பொழுது தங்கையின் மகளை ஜகதா விரட்டிவிடுகின்றாள். உறவைவிடக் குடும்ப கௌரவத்-திற்கே சிறப்பிடம் கொடுக்கின்றாள் ஜகதா. இறுதிவரை தங்கை மகளுக்குத் தாயாகவே காணப்படுகின்றாள் காந்திமதி. சூடாம-ணியின் நாவல்களில் இவ்வுறவுநிலைகள் காணப்படவில்லை.

இரு படைப்பாளிகளுடைய நாவல்களிலும் தாயின் தங்-கையுடன் ஒரு பெண் கொள்ளும் உறவு சித்திரிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

3. 6. 1. 3. 2. *தாயின் சகோதரர்களுடன் உறவு*

இந்தியக் குடும்பங்களை ஆராய்ந்து காணும்பொழுது தாய் மாமன் உறவு என்பது செல்வாக்கு மிகுந்ததாகவும், நெருங்கிய ஒன்றாகவும் காணப்படுகின்றது (Aileen D. Ross, 1973, p.111). தன் உடன்பிறந்தாளின் கணவன் இறந்துவிட்டால் அவளையும் அவள் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அவ-னிடத்தில் தொன்றுதொட்டே காணப்படுகின்றது என்பார் சமூக-வியலறிஞர் (David G.Mandelbaum, 1972. p.71). தந்தையை இழந்த மருமகளைத் தன் குழந்தையாகவே வளர்க்கின்றான் தாய்மாமன். இவ்வுறவினை லக்ஷ்மியின் 1) பவானி, 2) மிதிலா விலாஸ், 3) சூர்யகாந்தம் ஆகிய மூன்று நாவல்களும், சூடா-மணியின் 1) மனத்துக்கினியவள், 2) உயர்வு உள்ளத்திலே, 3) தீயினில் தூசு ஆகிய மூன்று நாவல்களும் சித்திரிக்கின்றன.

'பவானி' என்ற நாவலில், பர்மா குண்டு வீச்சில் பெற்-றோரை இழந்த வனஜாவைத் தன் மனைவியின் எதிர்ப்பிற்-கிடையே வளர்க்கும் அவளுடைய தாய்மாமன், இறுதியில் தன் மகனுக்கே அவளை மணமுடித்து வைப்பதை லக்ஷ்மி சித்திரிக்-கின்றார்.

'மிதிலா விலாஸ்' நாவலில் பெற்றோரை இழந்த தன் மருமகளின் பாதுகாவலனாகப் பசுபதி அய்யர் படைக்கப்பட்டி-ருக்கின்றார். ஆனால் தன்னுடைய செயலை வெறுக்கும் மனை-விக்கு அஞ்சித் தன் அன்பை வெளிக்காட்டாது மருமகளிடம் மனைவியின் கொடுமைக்குத் தனியாக மன்னிப்பு கேட்கின்றார். தன் மகனுக்கு அவளை மணமுடிக்கவேண்டும் என்ற எண்-ணத்தைப் பசுபதி அய்யர் மனைவிக்கு அஞ்சி வெளியிடாமல் இருப்பதை இந்நாவலில் லக்ஷ்மி சுட்டுகின்றார்.

'சூர்யகாந்தம்' எனும் நாவலிலும் பெற்றோரை இழந்த மருமகளை மாமன் சிவானந்தம் காப்பாற்ற, அவன் மனைவி அதனை வெறுத்து மருமகளைக் கொடுமைப்படுத்துகிறாள் என லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மாமன் மருமகளின் பாதுகாவலனாக விளங்குவதும்,* தனக்கு மகன் இருப்பின் திருமண உறவின் வழி மருமகளைத் தன் குடும்பத்தவளாக்குவதில் ஆர்வம் கொண்டவனாக விளங்குவதும் இந்நாவல்களின் வாயிலாக புலப்படுகின்றன.

'சூர்யகாந்தம்' நாவலில் இதற்கு நேர்மாறாக மாமன் பாத்திரத்தைப் படைத்துள்ளார் லக்ஷ்மி. தன் தந்தையின் குடும்பத்தின் குலைவுக்குக் காரணமான நமச்சிவாயம், தங்கை விதவையான பின்னர் அவள் சொத்துக்களையெல்லாம் அழித்து அவள் குடும்பத்தின் துன்பத்திற்குக் காரணமாக விளங்குகின்றான். மருமகள் வேலை பார்த்துச் சம்பாதிக்கும் பணத்தில் உண்டு களிப்பவனாக அவன் காணப்படுகின்றான். இறுதிவரை தங்கையின் மக்கள் வாழ்வில் குழப்பத்தை விளைவிப்பவனாகவே நமச்சிவாயம் படைக்கப்பட்டிருக்கின்றான்.

மாமன்-மருமகளின் பாசமிக்க உறவைச் சூடாமணி விரிவாகச் சித்திரிக்கவில்லை. மருமகளிடத்தில் அன்பு காட்டும் மாமனை 'மனத்துக்கினியவள்' என்ற நாவலிலும், கணவனை இழந்த தன் தங்கைக்கு மறுமணம் செய்வித்துவிட்டு அவள் குழந்தையைத் தனதாக வளர்க்கும் மாமனை 'உயர்வு உள்ளத்திலே' எனும் நாவலிலும், இரண்டாம் திருமணம் செய்துகொண்ட தந்தையின் கவனிப்பற்ற வாசுகியை வளர்த்துவரும் மாமனைத் 'தீயினில் தூசு' என்ற நாவலிலும் சித்திரிக்கின்றார் சூடாமணி. ஆயினும் லக்ஷ்மி தம் நாவல்களில் காட்டும் நெருக்கமான இவ்வுறவுச் சித்திரிப்பைச் சூடாமணி தம் நாவல்களில் விரிவாகக் காட்டவில்லை.

லக்ஷ்மியின் நாவலில் வரும் நான்கு மாமன்மாரில் மூவர் மருமகளிடத்தில் அன்புகொண்டவராகக் காணப்படுகின்றனர். ஆனால் மாமன் மனைவியருக்கு அவ்வன்பு இல்லை; மருமகளைக் கொடுமைப்படுத்துபவராகவே அவர்கள் படைக்கப்பட்டிருக்கின்றனர். சூடாமணியின் நாவல்களில் மருமகளைக் கொடுமைப் படுத்தும் மாமன் மனைவியர் சித்திரிக்கப்படவில்லை. மூன்று நாவல்களில் ஒன்றில் மட்டுமே (உயர்வு உள்ளத்திலே) மாமனின் மனைவி சித்திரிக்கப்படுகின்றாள். ஏனைய இரு நாவல்களில் ஒன்றில் (தீயினில் தூசு) மாமன் மனைவியை இழந்தவராகவும், மற்றொன்றில் (மனத்துக்கினியவள்) மாமனின் மனைவி நாவலில் இடம் பெறாமலும் காணப்படுகின்றனர்.

தன் மருமகளிடத்தில் அன்பு காட்டும் மாமன் மனைவியரையே சமூகவியலறிஞர் காட்டுவது (Aileen D. Ross, 1973, p.167) லக்ஷ்மியின் சித்திரிப்புடன் முரண்படுகின்றது.

---

* ஆய்வாளருடைய கள ஆய்வின்வழி ஆடவரில் 43.75 விழுக்காட்டினரும், பெண்களின் 51.58 விழுக்காட்டினரும் இக்கருத்தினை ஏற்பது தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 6. 1. 4. தந்தையின் உடன்பிறந்தார் உறவு

தந்தையின் உடன்பிறந்தார் என்பது தந்தையின் சகோதரரையும், தந்தையின் சகோதரிகளையும் குறிக்கும். ஒரு பெண்ணின் குடும்ப உறவுகளில் தந்தையின் இடத்தைத் தந்தையின் சகோதரன் பெறுகின்றான்; தந்தையின் சகோதரி தன் உடன்பிறந்தான் மகளைத் தன் குடும்பத்தவளாக எண்ணுகின்றாள். இவ்வுறவினைக் கீழ்க்கண்டவாறு இருவகைப்படுத்தலாம்.

1) தந்தையின் சகோதரிகளுடன் உறவு
2) தந்தையின் சகோதரர்களுடன் உறவு

3. 6. 1. 4. 1. தந்தையின் சகோதரிகளுடன் உறவு

இந்தியக் குடும்பங்களில் மாமன்-மருமகள் உறவைப்போல அத்தை - மருமகள் உறவும் நெருங்கிய உறவாகக் காணப்படுகின்றது (Aileen D. Ross, 1973, p. 168). தந்தையின் உடன்பிறந்தாளே இங்கு அத்தை என்று குறிப்பிடப்படுகின்றாள். இவ்வுறவை லக்ஷ்மியின் (1) பவானி (2) சூர்யகாந்தம், (3) மாயமான், (4) மிதிலா விலாஸ் எனும் நான்கு நாவல்களும், சூடாமணியின் ‘மானிட அம்சம்’ எனும் ஒரு நாவலும் சித்திரிக்கின்றன.

தாயற்ற குழந்தைகளான பவானி (பவானி), சாரதா, அபிராமி (மானிட அம்சம்) ஆகியோர் தம் அத்தையரால் வளர்க்கப்படுவதை லக்ஷ்மியும், சூடாமணியும் சித்திரிக்கின்றனர். இவர்களுள் பவானியின் அத்தை (பவானி) கணவனை இழந்தவள்; தனக்கெனக் குழந்தைகள் அற்றவள் : சூடாமணியின் ‘மானிடஅம்சம்’ காட்டும் சாரதா, அபிராமி ஆகியோரின் விதவை அத்தைக்குக் குழந்தைகள் இருப்பினும் ஒரே ஊரில் வாழும் அண்ணனின் தாயற்ற குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கின்றாள்.

கணவனை இழந்த அத்தையர் தனக்கெனக் குழந்தை இருப்பினும், குழந்தை இல்லாதிருப்பினும் அண்ணன் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பேற்கின்றனர் என்ற உண்மையை இரு படைப்பாளிகளும் காட்டுகின்றனர்; அத்தையின் கணவன் இருந்திருப்பின் அவளுடைய குடும்பம் தனிக் குடும்பமாயிருந்திருக்கும். எனவே, அண்ணன் குடும்பத்தோடு நெருங்கிய உறவு ஏற்பட அத்தையரின் விதவை நிலையும் காரணமாயிருக்கலாம். மேலும் மருமகள் தன் பிறந்த வீட்டைச் சேர்ந்த பெண் என்பதும் அத்தையரின் பாசத்திற்குக் காரணமாகலாம்.

அத்தைக்கு மகனிருப்பின் அவனுக்குத் தன் அண்ணன் மகளை மணமுடித்துக் கொள்ள வேண்டும் என்ற விருப்பம் அத்தைக்கு உண்டு என்பதை லக்ஷ்மியின் ‘மாயமான்’ ‘மிதிலாவிலாஸ்’ என்ற இரண்டு நாவல்கள் சித்திரிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன் தங்கையின் மகளைக் கொடுமைப்படுத்தும் அண்ணனின் இரண்டாம் மனைவியின் குழந்தைகளை இளவயதில் வெறுத்த காந்திமதி பின்னர் அவர்களை விரும்பி ஆதரிப்பதைச் 'சூர்யகாந்தம்' நாவலில் லக்ஷ்மி காட்டுகின்றார்.

எனவே, அத்தை-மருமகள் உறவு மிக நெருங்கிய உறவாக இன்றைய சமூகத்தில் இருக்கின்றது என்ற கருத்து இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படுகிறது.

3. 6. 1. 4 2. *தந்தையின் சகோதரர்களுடன் உறவு*

தந்தையற்ற மகளைக் காப்பாற்றும் பொறுப்பைத் தந்தையின் உடன்பிறந்தோர் ஏற்பது உலக வழக்கு (Aileen D. Ross, 1973, p. 166). இவ்வுறவை லக்ஷ்மி, சூடாமணி ஆகியோரின் நாவல்கள் மிகுதியாகச் சித்திரிக்கவில்லை. லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்', 'ஸ்ரீமதி மைதிலி' எனும் இரு நாவல்கள் மட்டுமே இவ்வுறவைக் காட்டுகின்றன.

அண்ணன் மகளிடம் அன்பு காட்டும் பாலசுந்தரத்தையும், அதனை வெறுக்கும் அவர் மனைவியையும் 'நாயக்கர் மக்க'ளிலும், அண்ணன் மகளிடம் அன்பு காட்டும் ஸ்ரீகாந்தனை 'ஸ்ரீமதி மைதிலி' யிலும் லக்ஷ்மி படைத்துள்ளார். இவ்வுறவு இந்நாவல்களில் விரிவாகச் சித்திரிக்கப்படவில்லை. இவ்வுறவைச் சூடாமணியும் தம் நாவல்களில் காட்டவில்லை.

ஒரு பெண்ணுக்குத் தந்தையின் சகோதரருடன் இருக்கும் உறவுநிலையைப் பற்றி மிகக் குறைந்த செய்திகளே பேட்டியாளர்களிடமிருந்து கிடைத்ததாக ஆலன் டி ராஸ் குறிப்பிடுவதும் (Aileen D. Ross, 1973, p. 167) நாவல்களில் இச்சித்திரிப்புக் குறைவாகக் காணப்படுவதற்குரிய காரணத்தை விளக்குகிறது எனலாம்.

3. 6. 1. 5. *பாட்டன், பாட்டி உறவு*

பாட்டன், பாட்டி எனப்படுபவர் ஒரு பெண்ணுக்குத் தந்தை வழியினராகவும் இருக்கலாம்; தாய் வழியினராகவும் இருக்கலாம். பழைய மரபுகளைப் பின்பற்றும் குடும்பங்களில் பாட்டன், பாட்டியர் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரியவர்களாய், குடும்பத்தின் இன்றியமையாத இடத்தைப் பெற்றவர்களாகக் காணப்படுகின்றனர். (Aileen D.Ross, 1973, p. 138) தம் பேரன் குழந்தைகளை வளர்த்து உருவாக்கும் பொறுப்பினை ஏற்கும் பாட்டன், பாட்டியரை லக்ஷ்மியின் (1) அரக்கு மாளிகை, (2) நாயக்கர் மக்கள், 3) காஞ்சனையின் கனவு எனும் மூன்று நாவல்களும், சூடாமணியின் (1) மனத்துக்கினியவள், (2) இரவுச்சுடர் எனும் இரு நாவல்களும் சித்திரிக்கின்றன.

'அரக்கு மாளிகை' நாவலில் பெற்றோரை இழந்துவிட்ட மஞ்சுளாவைத் தன் வறுமைத் துன்பத்திற்கிடையே காப்பாற்றும் ரகுபதி மஞ்சுளாவின் தாய்வழிப் பாட்டனாகப் படைக்கப்படு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றார். திருமணம் முடித்துக்கொடுக்க முடியாது வருத்தமுறும் அவர், தம் பேத்திக்கு அறிவுரை கூறும் ஆசானாகவும் காணப்படுகின்றார் என லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

'நாயக்கர் மக்கள்' நாவலில், தாயற்ற பேத்தியை மகனுடன் சேர்ந்து வாழும் பாட்டி வளர்ப்பதையும், 'காஞ்சனையின் கனவு' நாவலில் மகள் வழிப்பேத்தி பெற்றோரை இழந்ததால், வளர்க்கும் பொறுப்பை ஏற்று அவளுக்குத் திருமணம், முடித்துக் கொடுக்கும் பாட்டனையும் லக்ஷ்மி படைத்துக் காட்டுகின்றார்.

மகன்வழி அல்லது மகள்வழிப் பேத்தியரை வளர்க்கும் பாட்டன், பாட்டியரை லக்ஷ்மி தம் நாவல்களில் படைத்துள்ளார். சூடாமணி மகன்வழி அல்லது மகள்வழிப் பேத்தியரை வளர்க்கும் பாட்டியரை மட்டும் தம் நாவல்களில் படைத்துள்ளார்.

'மனத்துக்கினியவள்' நாவலில் பேத்தியின் மனநிலை அறிந்த பாட்டியைச் சூடாமணி படைத்துக்காட்டுகின்றார். உடற்குறை காரணமாகத் தந்தையின் பாசத்தை இழந்த லட்சுமி, தன் பாட்டியின் முழு அன்பிற்கும் ஆளாகின்றாள். தன் உடற்குறையை எண்ணி அவள் தன்னிலை இழக்கும் பொழுதெல்லாம் அவளுக்கு ஆறுதல் கூறித் தேற்றுபவளாகவும், அவள் துன்பத்தை மறக்க வழி தேடிக்கொடுப்பவளாகவும் காணப்படுகின்றாள் லட்சுமியின் பாட்டி அலமேலு.

'இரவுச்சுடர்' நாவலில் பாட்டிக்கும் பேத்திக்குமிடையே உள்ள நெருங்கிய உறவைச் சூடாமணி காட்டுகின்றார். தாயின் அறிவு திறம்பியதால் இளம் வயதிலேயே பாட்டியிடம் வளரும் கீதா, பாட்டியின் செல்லப் பேத்தியாக விளங்குகின்றாள்; அவளுடைய தந்தை அதே ஊரில் மறுமணம் செய்து கொண்டு வாழ்ந்திருந்தும், மகளிடம் அன்பு கொண்டவனாக இருந்தும், பாட்டியே அவளை வளர்க்கும் பொறுப்பை ஏற்கின்றாள். இங்குப் பாட்டன் இருப்பினும் பேத்தியின் நலத்தில் அக்கறை அற்றவராக அவர் இருப்பதால் பாட்டன்-பேத்தி உறவு நெருக்கமாகக் காணப்படவில்லை.

இரு படைப்பாளிகளுமே பாட்டன், பாட்டிக்கும் பேத்திக்குமிடையேயுள்ள நெருங்கிய உறவினையே காட்டுகின்றனர். சூடாமணியின் 'இரவுச்சுடர்' நாவலில் வரும் பாட்டி முற்போக்குவாதியாய் பேத்தியின் கலப்புமணத்தை ஆதரிப்பவளாய் காணப்படுகின்றாள். இத்தகுபுரட்சிக் கருத்துடைய பாட்டியை லக்ஷ்மி தம் நாவல்களில் படைக்கவில்லை.

3. 6. 2. 0. புகுந்த வீட்டார் உறவு

ஒரு பெண் திருமணமாகிப் புகுந்த வீட்டிற்கு வரும்பொழுது பல புதிய உறவுகளும் அவளுக்கு ஏற்படுகின்றன. அவள் புகுந்த வீடு கூட்டுக்குடும்பமாயின் புதிய உறவினர்களுடன் வாழவேண்டிய நிலை அவளுக்கு ஏற்படுகின்றது. உறவுகளிடையே சிக்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுவதற்கு இது காரணமாகின்றது. தனிக்குடும்பத்தில் இச்சிக்கல் எழக் காரணமில்லை. ஏனெனில் உறவினர்கள் ஒருவரையொருவர் அடிக்கடி சந்தித்துக் கொள்வதில்லை. பெண்ணின் புகுந்த வீட்டார் உறவுகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1) மாமனார்-மருமகள் உறவு
2) நாத்தனார் உறவு
3) கணவனின் சகோதரர்-மனைவியருடன் உறவு
4) கணவனின் சகோதரர்களுடன் உறவு
5) நாத்தனார் கணவருடன் உறவு

3. 6. 2. 1. *மாமனார்-மருமகள் உறவு*

மரபைப் பின்பற்றும் கூட்டுக்குடும்பங்களில் மாமனார்-மருமகள் உறவு முறை தெளிவற்றதாகக் காணப்படுகின்றது. மருமகள் தாயாகும்பொழுது அவளிடம் மதிப்பும், அன்பும் கொள்ளும் மாமனார் தனித்திருக்கும் மருமகளிடம் மிகுதியாகப் பேசுவதோ பழகுவதோ இல்லை (Aileen D. Ross, 1973, p. 168). மருமகளுக்கும் மாமனாருக்கும் இடையே அன்பு இருப்பது தந்தை-மகள் உறவையும், மாமியார் - மருமகள் உறவையும் பாதிப்பதாகக் காணப்படுகின்றது (Levy, 1949, p. 185). எனவே, மாமனாருக்கும் மருமகளுக்குமிடையே நெருங்கிய உறவு காணப்படுவதில்லை எனலாம்.

மாமனார் - மருமகள் உறவினை லக்ஷ்மியின் 1) மிதிலா விலாஸ், 2) பெண்மனம், 3) மாயமான், 4) மரகதம் ஆகிய நான்கு நாவல்களும் சூடாமணியின் 'சோதனையின் முடிவு' எனும் நாவலும் சித்திரிக்கின்றன.

பசுபதி அய்யர் தம் மூத்த மருமகளிடத்தில் இரக்கம் கொண்டவர் (ப.31) என்பதை 'மிதிலா விலாஸ்' நாவல் காட்டுகின்றது. தம் இரு மருமகள்களிடத்தும் மாறுபட்ட அன்பை உடைய மனைவியின் செயலைக் கண்டும் மனைவிக்கு அஞ்சி வாளாவிருக்கின்றார் பசுபதி அய்யர்.

'பெண்மனம்' நாவலில், ''சந்திரா நாகராஜய்யரைத் தன் மாமனார் என்பதை அறிவாளேயொழிய அவர் முன்கூடத் தாராளமாக வந்ததில்லை,'' (ப.136) என்று மாமனார்-மருமகள் உறவைச் சித்திரிக்கும் லக்ஷ்மி, 'மாயமான்' நாவலிலும், வசந்தாவிற்கும் அவள் மாமனாருக்கும் இடையே இருக்கும் நெருக்கமற்ற உறவைச் சித்திரிக்கின்றார்.

தன் மருமகளை இளைய மனைவி கொடுமைப்படுத்தும்பொழுது அதைக் கண்டு, மரகதத்தின் மாமனாருக்கு வருந்த முடிந்ததேயன்றி மருமகளுக்காகப் பரிந்து பேச முடியவில்லை என்று 'மரகதம்' நாவலில் மாமனார்-மருமகள் உறவை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லக்ஷ்மியின் நான்கு நாவல்களிலும் மாமனார்-மருமகள் உறவு மரியாதைக்குகந்த உறவாகக் காணப்படுகின்றதேயன்றி நெருங்கிய உறவாகக் காணப்படவில்லை.

'சோதனையின் முடிவு' நாவலில் மாமனாருக்கும் மருமகளுக்குமிடையே பாசமிக்க உறவினைச் சூடாமணி சித்திரிக்கின்றார் (ப.66).

மாமனாருக்கும் மருமகளுக்குமிடையில் நெருங்கிய பழக்கம் இல்லாததனால் அவர்களிடையே உறவுச் சிக்கல் எழ வாய்ப்பில்லை. மருமகள் மாமியாரைவிட மாமனாரிடத்தில் அன்பு கொள்வதற்கு இச்சூழல் ஒரு காரணமாகின்றது ஆய்வாளருடைய கள ஆய்வும் இக்கருத்திற்கு அரணாகின்றது. *

3. 6. 2. 2 *நாத்தனார் உறவு*

கணவனின் தமக்கை அல்லது தங்கை இங்கு நாத்தனார் என்று குறிப்பிடப்படுகின்றாள். இலக்கிய வழக்கில் நாத்தூண் நங்கை என்றும் (சிலம்பு, 16:19) பேச்சுவழக்கில் நாத்தனார் என்றும் இவள் குறிப்பிடப்படுகின்றாள்.

வீட்டிற்கு வரும் மருமகளைவிட அவ்வீட்டில் நீண்டகாலம் வாழும் நாத்தனார், அவளைவிட நிலையான இடத்தைப் பெற்று விடுகின்றாள். தன் தாய்க்கு மருமகள் வருவதற்கு முன்னால், தாயின் சலுகைகளையெல்லாம் நாத்தனார் பெற்று விடுகின்றாள் என்று குடும்பத்தில் அவள் பெறும் இடத்தைச் சுட்டுவார், எம்.என். சீனிவாஸ் (M. N. Srinivas, 1942, pp. 185-186).

வீட்டிற்கு மருமகள் வந்தபின்னர் நாத்தனாரின் சிறப்பு குறைகின்றது; எனவே, அவள் தன் அண்ணன்/தம்பி மனைவியிடம் பொறாமை கொண்டு அவளுக்குப் பல கொடுமைகளைச் செய்யத் துணிகின்றாள்; தன் தாயையும் கொடுமை செய்யுமாறு தூண்டுவதால் புதிய மருமகளுக்கு, மாமியாருக்கு அடுத்த சிக்கலான உறவாக நாத்தனார் உறவு அமைந்துவிடுகின்றது (Aileen D Ross, 1973, p. 173).

நாத்தனார்-அண்ணன்/தம்பி மனைவி உறவை லக்ஷ்மியின் (1) ஸ்ரீமதி மைதிலி, (2) மாயமான், (3) பெண்மனம், (4) லட்சியவாதி, (5) சூர்யகாந்தம் எனும் லக்ஷ்மியின் ஐந்து நாவல்களும் (1) உயர்வு உள்ளத்திலே, (2) வாழ்த்துவோம், (3 நீயே என் உலகம், 4) செந்தாழை எனும் சூடாமணியின் நான்கு நாவல்களும் சித்திரிக்கின்றன.

'ஸ்ரீமதி மைதிலி' நாவல் தாயற்ற தம்பிகளைத் தானே வளர்த்துவரும் நாத்தனார் அவர் தம் மனைவியருக்கு மாமியார் உறவுநிலையிலேயே காணப்படுவதைக் காட்டுகின்றது. தம்பியின்

---

* ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாகப் பெண்களில் 38 விழுக்காட்டினர் மாமியாரைவிட மாமனாரிடம் அன்பு செலுத்துவது தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனைவியிடம் பாசம் கொண்டவளான மங்களம் சுற்றி இருப்போரின் தீயவுரையினால் தம்பி மனைவியின் மீது அடாப்பழி சுமத்துகின்றாள். எனினும் தம்பியின் மனைவியான மைதிலி நாத்தனாரிடத்தில் மிக்க அன்பு கொண்டவளாதலால், தன் கணவனை அவள் ஏசுவதையும் கணவனிடம் மறைத்துவிடுகின்றாள். மங்களத்தின் அடாப்பழியினால் கணவனுடன் வீட்டைவிட்டு வெளியேறிச் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த காலத்தும் வறுமையில் வாழும் மங்களத்துக்கு மனவேறுபாடின்றி உதவ முன்வருகின்றாள். தம்பி மனைவிக்கும் நாத்தனாருக்கும் இடையில் அன்பு இருந்தும் மற்றவரின் தூண்டுதலால் இவர்கள் உறவு பாதிக்கப்படுகின்றது என்பதனை லக்ஷ்மி இந்நாவலில் காட்டுகின்றார். இந்நாவலிலேயே முரண்பட்ட நாத்தனார்-தம்பி மனைவி உறவும் காணப்படுகின்றது. மங்களத்தால் விரும்பப்பட்ட மற்றொரு தம்பியின் மனைவி பத்மினி நாத்தனாரின் செல்வத்தில் பங்குகொள்கின்றாள்; மங்களத்தின் கணவன் இறந்தபின் அவளுடைய சொத்துக்களைத் திருடிக்கொண்டு மங்களத்தையே வீட்டைவிட்டு விரட்டிவிடுகின்றாள் என்று பாதிக்கப்பட்ட நாத்தனார்-தம்பியின் மனைவி உறவையும் காட்டுகின்றார் லக்ஷ்மி. இம்முரண்பட்ட உறவின்வழி நாத்தனாரை மதிக்கும் தம்பியின் மனைவி மைதிலியின் பண்பைத் தெளிவுபடுத்துகின்றார் லக்ஷ்மி.

நாத்தனார் தன்னைவிட வயதில் மிகவும் சிறியவளாக இருப்பின் அங்கு நாத்தனார் உறவில் சிக்கல் எழுவதில்லை எனும் உண்மையை லக்ஷ்மியின் 'பெண்மனம்', 'மாயமான்' எனும் நாவல்கள் காட்டுகின்றன. 'மன்னி, மன்னி' என்று சந்திராவைச் சுற்றும் அவள் நாத்தனாரைப் 'பெண்மனம்' நாவலிலும், மதனி வசந்தாவையே சுற்றும் அவள் நாத்தனாரை 'மாயமான்' நாவலிலும் லக்ஷ்மி காட்டுகின்றார்.

நாத்தனாரும் மதனியும் ஒத்த வயதினராக இருக்கும்பொழுது பெரும்பாலும் அவர்கள் உறவில் சிக்கல் எழுவதில்லை.* இருவரும் நெருங்கிய தோழியராகக் காணப்படுகின்றனர். தன் மன எண்ணங்களையெல்லாம் தன் மதனியிடம் கூறும் கீதாவையும், கீதாவிற்கு அவ்வப்போது அறிவுரைகள் கூறும் மதனி கௌரியையும் லக்ஷ்மியின் 'லட்சியவாதி' நாவலும் சூடாமணியின் 'செந்தாழை', 'வாழ்த்துவோம்' நாவல்களும் சித்திரிப்பது இக்கருத்துக்களுக்கு அரணாகின்றது.

ஒத்த வயதுடையவராக இருந்தும் இவ்வுறவு பாதிக்கப்படுவதை லக்ஷ்மியின் 'மாயமான்' நாவல் காட்டுகின்றது. தன் கணவன் அவனுடைய தங்கையிடம் மிக்க அன்புகொண்டிருப்பதை வெறுத்த சரோஜா தன் நாத்தனாரிடம் தன் வெறுப்பைக் காட்டுகின்றாள் என்று நாத்தனார்-அண்ணன் மனைவி உறவுப் பாதிப்பை இந்நாவல் சித்திரிக்கின்றது. இதே நாத்தனாரிடம் நல்ல உறவு கொண்டுள்ள கனகத்தையும் இந்நாவல் சித்திரிக்-

* ஆய்வாளருடைய கள ஆய்விலிருந்து பெண்களில் 40 விழுக்காட்டினர் இக்கருத்தினை ஏற்பது தெரியவருகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கின்றது. சூழலுக்கு ஏற்றவாறு தாயைப் போலவும் தமக்கையைப் போலவும், மதனியைப் போலவும் நடந்து கொள்ளும் மதனியிடம் மிக்க பாசம்கொண்டு விளங்குகின்றாள் நாத்தனார் வசந்தா என லக்ஷ்மி நாத்தனார்-மதனியின் பாசமிக்க உறவினைச் சித்திரிக்கின்றார்.

தம்பியைத் தன் குழந்தையாகவே வளர்க்கும் விதவைத் தமக்கை, தன் தம்பியின் மனைவியை அன்புடன் நடத்துவதை லக்ஷ்மியின் 'லட்சியவாதி' நாவல் காட்டுகின்றது. தம்பியின் மனைவிக்கு அழகு செய்வித்தும், கணவன்-மனைவிக்கு இடையே ஏற்படும் சண்டையைத் தீர்த்துவைத்தும், தம்பியின் மனைவிக்கு அறிவுரை கூறியும் விளங்கும் அன்புடைய நாத்தனாராக சித்திரிக்கப்பட்டுள்ளாள் இந்நாவலில் வரும் பாகீரதி.

ஓர் ஆடவனின் இரண்டாம் மனைவி தன் கணவனின் உறவினர்களை வெறுக்கின்றாள். இவ்வெறுப்பில் நாத்தனாரும் அடங்குகின்றாள். லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்' நாவல் இத்தகைய உறவுச் சிக்கலைச் சித்திரிக்கின்றது. கணவனைப் பிரிந்து வந்த தன் நாத்தனார் காந்திமதியை அவள் மதனி மிகவும் கொடுமைப்படுத்தி வீட்டைவிட்டே விரட்டுவதையும், தன் முயற்சியால் செல்வச் செழிப்புற்ற காந்திமதியிடம் வறுமையில் வாடும் மதனி மன்னிப்பு கேட்டு அவளுடன் வாழ வருவதையும், வந்த பின்னர் மதனி காந்திமதியைக் கொடுமைப்படுத்துவதையும் இந்நாவல் சித்திரிக்கின்றது.

துன்பத்துடன் தன் இல்லத்திற்கு வரும் நாத்தியரை அன்புடன் நடத்தும் அண்ணன் மனைவியரால் இவ்வுறவு பாதிக்கப்படவில்லை என்பதைச் சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே', 'நீயே என் உலகம்' எனும் இரு நாவல்கள் காட்டுகின்றன.

விதவையான நாத்தனாருக்கு தன் கணவன் மறுமணம் செய்ய முன்வந்த பொழுது அதற்குத் துணைநின்றும், நாத்தனாரின் மகளைத் தன் மகளாகவே வளர்த்தும் இனிய உறவை ஏற்படுத்தும் மதனியை 'உயர்வு உள்ளத்திலே' எனும் நாவல் சித்திரிக்கின்றது. 'நீயே என் உலகம்' நாவல் விதவையாக, மகனுடன் தன் இல்லத்திற்கு வரும் நாத்தனார் தங்கத்திடம் இனிமையாகப் பழகி அவள் துன்பத்தைத் துடைக்க முயன்றும், அவள் மனக்கசப்பால் தன்னிடம் குறை கண்ட பொழுது அதனைப் பொருட்படுத்தாது இருக்கும் ஜானகியைச் சித்திரிக்கின்றது. தங்கம் அண்ணனுடன் மனவேறுபாடு கொண்டு வெளியேறிவிடுகிறாள். பின்னர் தங்கத்திற்கும் அவள் மகனுக்கும் மனவேறுபாடு ஏற்படுகின்றது; இருவரும் தனித்து வாழ்கின்றனர்; அதை அறிந்த ஜானகி தன்னிடம் தங்கம் பகைமை பாராட்டியதை மறந்து அவளுக்குத் துணையாகச் சென்று வாழ்கின்றாள். நாத்தனார் மதனியின் பாசமிக்க உறவைச் சூடாமணி இந்நாவலில் சித்திரிக்கின்றார்.

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளின் நாவல்களிலும் காணப்படும் நாத்தனார் உறவுநிலைகளைக் காண்கையில் கீழ்வரும் உண்மைகள் புலப்படுகின்றன :

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3 6. 2. 2. 1. தன் தம்பியரைத் தானே எடுத்து வளர்க்கும் நாத்தனார், தம்பி மனைவியரிடம் பாசம் கொண்டவளாகக் காணப்படுகின்றாள். (ஸ்ரீமதி மைதிலி, லட்சியவாதி).

3. 6. 2. 2. 2. நாத்தனார் தன் அண்ணன் மனைவியைவிட வயதில் மிகவும் சிறியவளாக இருந்தால் உறவுச் சிக்கல் எழுவதில்லை (பெண்மனம், மாயமான்).

3. 6. 2. 2. 3. அண்ணன் தன் தங்கையிடமும் மனைவியிடமும் ஒரே அளவான அன்பைக் காட்டும்பொழுது அங்கு நாத்தனாரால் உறவில் சிக்கல் எழுவதில்லை (லட்சியவாதி, வாழ்த்துவோம், செந்தாழை).

3. 6. 2. 2. 4. அண்ணன் தன் தங்கையைவிட மனைவியிடமும் மிகுதியான அன்புசெலுத்தும்பொழுது அங்கு நாத்தனார் உறவில் சிக்கல் எழுகின்றது. (சூர்யகாந்தம் மாயமான்).

3. 6. 2 2. 5. நாத்தனாரின் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்று அண்ணன் மனைவி அன்பு காட்டினால் அங்கு நாத்தனார் உறவில் சிக்கல் எழுவதில்லை. (உயர்வு உள்ளத்திலே, நீயே என் உலகம்).

நாத்தனார் உறவு நிலையில் சிக்கல்மிக்க உறவு, சிக்கலில்லாத உறவு என்ற இருவகை உறவுகளையும் லக்ஷ்மி தம் நாவல்களில் படைத்துள்ளார். சூடாமணி தம் நாவல்களில் சிக்கலற்ற உறவையே காட்டுகின்றார்.

கூட்டுக் குடும்ப வாழ்க்கையில்தான் நாத்தனார் உறவில் சிக்கல் எழ மிகுதியான வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. லக்ஷ்மியின் நாவல்கள் கூட்டுக்குடும்ப வாழ்வினை மிகுதியாகச் சித்திரிப்பதால் அவருடைய நாவல்களில் நாத்தனார் உறவு மிகுதியாகச் சித்திரிக்கப்படுகின்றது. தனிக்குடும்ப வாழ்வில் நாத்தனார் உறவில் சிக்கல் மிகுதியாக எழ வாய்ப்பில்லை. சூடாமணியின் நாவல்கள் தனிக்குடும்ப வாழ்வினைச் சித்திரிப்பதால் அவருடைய நாவல்களில் நாத்தனார் உறவு மிகுதியாகக் காணப்படவில்லை எனலாம். குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்ட லக்ஷ்மிக்கு இவ்வுறவின் நிலையைக் காட்ட அவர்தம் அனுபவம் துணைசெய்திருக்கலாம்; குடும்ப வாழ்க்கை அனுபவமில்லாத சூடாமணி தம் நாவல்களில் குறிக்கோள் நோக்குடன் இவ்வுறவைப் படைத்திருக்கலாம்.*

3. 6. 2. 3. *கணவனின் சகோதரருடன் உறவு*

கணவனின் உடன்பிறந்தோராகிய அண்ணன் தன் தம்பியின் மனைவியிடமும், தம்பி தன் அண்ணனின் மனைவியிடமும் ஒருவருக்கொருவர் அன்பும் மரியாதையும் கொண்டு விளங்குகின்றனர் (Aileen D. Ross, 1973, p. 174). இவ்வுறவும் கூட்டுக்குடும்ப வாழ்க்கையில்தான் காணப்படுகின்றது.

---

* 25.8.80, 26.8.80, ஆகிய இரு நாட்களிலும் ஆய்வாளர் படைப்பாளிகளுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்துக்கள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணவனின் அண்ணன் கணவனைவிட வயதில் சிறிதே பெரியவனாக இருப்பின் அவனும் தம்பி மனைவியும் பேசுவ-தில்லை என்பதை 'மிதிலா விலாஸ்', 'பெண்மனம்' எனும் நாவல்களில் லக்ஷ்மி காட்டுகின்றார். கணவனின் தம்பி அண்ணனைவிட மிகுந்த அளவு வயது குறைந்தவனாயிருப்பின் அண்ணன் மனைவி தம்பியிடம் பேசுவதுண்டு என்பதனை லக்ஷ்மியின் 'ஸ்ரீமதி மைதிலி' நாவலும், சூடாமணியின் 'செந்தாழை' நாவலும் சித்திரிக்கின்றன. அண்ணனைவிடச் சிறிதளவே தம்பி வயதில் குறைந்தவனாக இருப்பின் அண்ணன் மனைவி தம்பியிடம் பேசுவதில்லை என்ப-தையும் 'ஸ்ரீமதி மைதிலி' நாவலில் லக்ஷ்மி காட்டுகின்றார்.

அண்ணன் மனைவி-தம்பி, தம்பி மனைவி-அண்ணன் இவர்-தம் நெருங்கிய உறவு அவர்தம் கணவன்மார் உள்ளத்தில் பொறாமையைக் கிளப்பி, குடும்ப உறவைக் கெடுத்துவிடும் என்-பதே இவ்வாறு பழகாததற்குக் காரணம் என்பர் ஆலன் டி ராஸ் (Aileen D. Ross, 1973, p. 174).

கூட்டுக் குடும்பவாழ்க்கையைக் காட்டும் லக்ஷ்மியின் மூன்று நாவல்கள் இவ்வுறவைச் சுட்டுகின்றன. சூடாமணியின் 'செந்-தாழை' என்னும் நாவல் தனிக் குடும்பத்தைச் சுட்டினாலும் அண்ணனும் தம்பியும் ஒரே ஊரில் வாழ்வதால் அண்ணன்-மனைவி-தம்பிக்கிடையே தோழமை உறவைச் சித்திரிக்கின்றது.

3. 6. 2. 4. கணவனின் சகோதரர் மனைவியருடன் உறவு

கூட்டுக் குடும்ப வாழ்க்கையில் ஒரு பெண் திருமணமாகிச் செல்லும்பொழுது அக்குடும்பத்துச் சகோதரர்களின் மனைவிய-ரோடு ஒன்றாக வாழவேண்டிய நிலை ஏற்படுகின்றது. சகோ-தரர்களின் மனைவியர் ஒருவருக்கொருவர் பொறாமையும் பகை-மையும் கொண்டு, ஒருவர்மீது ஒருவர் ஐயம்கொண்டு வாழ்வர்; அவர்களிடையில் எப்பொழுதும் புறம் பேசுதலும், வீண்கதைகள் பேசுவதும் நடைபெறும்; திடீரென ஒன்றுசேர்வதும், பிரிவதும் நடைபெறும் என்று இவ்வுறவைப் பற்றிச் சமூகவியல் வல்லுனர் மாண்டல் பாம் கூறுவார் (David G. Mandelbaum, 1972, p.69) இவ்வுறவினை லக்ஷ்மியின் 'பெண்மனம்', 'ஸ்ரீமதி மைதிலி', 'மிதிலா விலாஸ்' எனும் மூன்று நாவல்கள் காட்டுகின்றன.

கூட்டுக் குடும்ப வாழ்வில் புகும் மருமகள்களுக்கு இடையே செல்வ வேறுபாடு இருப்பது உறவுச் சிக்கலுக்கு ஒரு காரண-மாகின்றது. 'பெண்மனம்' நாவலில் ஏழைப்பெண் சந்திரா பணக்காரியான அலமேலுவுக்கு ஓரகத்தியாவதும் அவளிடத்தில் மாமியார் அன்பு காட்டுவதும் அலமேலுவின் உள்ளத்தில் பொறா-மையைக் கிளப்புகின்ற நிலை காட்டப்படுகின்றது.

'ஸ்ரீமதி மைதிலி' நாவலில் செல்வக் குடும்பத்துப் பத்மினி தன் ஓரகத்தி ஏழை மைதிலியை வெறுக்கின்றாள்; மாமியார் நிலையில் உள்ள நாத்தனாரிடம் அவளைப்பற்றி அவதூறு கூறி-விட்டுப் பொறுப்பைத் திறம்படச் செலுத்தும் மைதிலியை வீட்டை-விட்டே துரத்துவதற்குக் காரணமாகிற நிலை சித்திரிக்கப்படு-கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'மிதிலா விலாஸ்' நாவலில் மூத்த மருமகளை மாமியார் வெறுப்பதால் தானும் வெறுக்கும் மைதிலி, வரப்போகும் மருமகளிடம் மாமியார் காட்டும் அன்பைக் கண்டு பொறாமைகொண்டு, தன் கணவனைத் தூண்டி, அவனை மாமியாருக்கு எதிராகப் பேசவிட்டுத் தனிக்குடித்தனம் அமைத்துக்கொள்ளும் நிலை காணப்படுகின்றது.

மாமியார் தன் மருமகள்களிடத்தில் காட்டும் அன்பின் வேறுபாடும், பொதுச் சொத்தில் தன் பங்கு பற்றிய கவலையும்– கணவனிடத்தில் பொய்க்கதைகள் கூறுவதும், மற்றொரு மருமகளுக்கு எதிராக மாமியாரைத் தூண்டுவதும் ஓரகத்தி உறவுச் சிக்கலுக்குக் காரணங்களாகும் என்ற கருத்துக்கு (Aileen D. Ross, 1973, p. 174) லக்ஷ்மி படைத்துக்காட்டும் ஓரகத்தியர் பொருத்தமாகக் காணப்படுகின்றனர்.† சமூகவியலார் கூறாத, மருமகளிடத்தில் உள்ள செல்வ வேறுபாடும் இதற்குக் காரணமாகின்றது என்பது லக்ஷ்மி நாவல்கள்வழி பெறப்படுகின்ற உண்மையாகும். ஆய்வாளருடைய களஆய்வும் இதனை நிறுவுகின்றது.* லக்ஷ்மியின் கதைகளில் கூட்டுக் குடும்பவாழ்க்கை காணப்படுவதால் இவ்வுறவுச் சிக்கல் அவற்றில் அமைந்திருப்பதைக் காட்டுகின்றார். சூடாமணியின் நாவல்கள் தனிக்குடும்ப வாழ்க்கையை மிகுதியாகச் சித்திரிக்கின்றன. அதனால் அங்கு இச்சிக்கல் எழ வாய்ப்பில்லை.

3. 6. 2. 5. *நாத்தனார் கணவருடன் உறவு*

ஒரு பெண் எவ்வாறு கணவனின் உடன்பிறந்தாருடன் பழகுகின்றாளோ அம்முறையிலேயே நாத்தனார் கணவருடன் பழகுகின்றாள். நெருங்கிப் பழகும் இவ்வுறவும் தவறான நோக்கில் பார்க்கப்படுவதால் இவ்வுறவு தவிர்க்கப்படுகின்றது என்பதனை லக்ஷ்மியின் 'ஸ்ரீமதி மைதிலி' நாவல் காட்டுகின்றது. இந்நாவலில் தன் கணவனை எடுத்து வளர்த்த நாத்தனாரின் கணவருடன் களங்கமின்றிப் பழகும் மைதிலி அவருடைய அலுவலக வேலைகளுக்கும் துணைபுரிகின்றாள். ஆனால் வீட்டில் இருப்போர் கண்களுக்கு அது தவறாகப் பட்டதாலும் நாத்தனாருக்கு அவள் மீது ஐயம் ஏற்பட்டதாலும் மைதிலி தன் கணவனுடன் வீட்டைவிட்டு வெளியேறுகின்றாள் என்று லக்ஷ்மி சித்திரிக்கின்றார். இவ்வுறவுச் சிக்கலைச் சூடாமணி தம் நாவல்களில் காட்டவில்லை.

---

† மாமியார்-மருமகள்களிடத்துக் காட்டும் அன்பின் வேறுபாட்டினால் சிக்கல் ஏற்படுகின்றது என்பதனை ஆண்களில் 45 விழுக்காட்டினரும், பெண்களில் 55.77 விழுக்காட்டினரும் ஏற்கின்றனர்.

* ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாகப் பெண்களில் 18.59 விழுக்காட்டினர் இக்கருத்தினை ஏற்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 6. 3. 0. இரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் இந்தியக் குடும்ப உறவுகளின் பொதுவான தன்மை பற்றிய கருத்தொன்று புலப்படுகின்றது. திருமணமாவதற்கு முன் ஒரு பெண் தன் பிறந்த வீட்டில் தந்தை, சகோதரருடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளாள். அதே நேரத்தில் ஓர் ஆடவன் தன் தாய், சகோதரியருடன் நெருங்கிய உறவு கொண்டுள்ளான். இப்போக்கு திருமணமான பின் மாறிவிடுகின்றது. பெண் தன் புகுந்த வீட்டில் மாமியார், நாத்தனார், கணவனுடைய சகோதரரின் மனைவியர் முதலியோருடன் நெருங்கிய உறவு கொள்கின்றாள். இந்நெருங்கிய உறவினை மாமனார், நாத்தனாரின் கணவன், கணவனின் சகோதரர் முதலியோரிடத்து அவள் கொள்வதில்லை. ஆடவனும் திருமணத்திற்குப் பின்னர், தன் மாமனார், மனைவியின் உடன் பிறந்தோர், மனைவியின் சகோதரிகளின் கணவன்மார் முதலியோருடன் நெருங்கிய உறவு கொள்கின்றானேயன்றி மாமியார், மனைவியின் சகோதரியர், மனைவியினுடைய சகோதரரின் மனைவியர் முதலியோருடன் நெருங்கிப் பழகுவதில்லை.

இவ்வமைப்பைக் காணும்பொழுது ஓர் ஆணோ பெண்ணோ தம் பிறந்த வீட்டில் இருக்கும்பொழுது எதிரெதிர் பாலாருடன் பழகுவதில் விருப்பம் உடையவராக இருக்கின்றனர் என்பது புலப்படுகின்றது (தாய்-மகன், தந்தை-மகள், சகோதரன்-சகோதரியர்). புகுந்த வீட்டிற்குச் சென்ற பிறகு இந்நிலை மாறுபடுகின்றது. பெண் தன் பாலாருடன் பழகுவதில் விருப்பம் கொள்கின்றாள். (மாமியார்-மருமகள், நாத்தனார்-அண்ணன்/தம்பி மனைவி, அண்ணன் மனைவி-தம்பி மனைவி); எதிர்பால் உறவினரிடை அதிகமாகப் பழகுவதும் சமுதாயத்தில் தவறாகக் கருதப்படுகின்றது. ஆடவனும் திருமண உறவு கொண்ட வீட்டில் ஒரே பாலாரிடையே பழகுகின்றான். (மாமனார்-மருமகன், மனைவியின் சகோதரர், மனைவியின் சகோதரி கணவர்). எதிர்பால் உறவினரிடைப் பழகுவதைச் சமுதாயம் தவறாகக் கருதும் வழக்கம் காணப்படுகின்றது.

குடும்ப உறவுகளின் பொதுவான நிலையைக் கீழ்க்கண்ட படத்தின் வழி விளக்கலாம் :

பிறந்த வீட்டு உறவு

மகன் — தந்தை
→ தாய்
→ சகோதரியர்
சகோதரர்

மகள் — → தந்தை
தாய்
சகோதரியர்
→ சகோதரர்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமண உறவு கொண்ட வீட்டாருடன் உறவு

கணவன் —
→ மாமனார்
மாமியார்
→ மனைவியின் சகோதரர்
மனைவியின் சகோதரியர்
மனைவியின் சகோதரர் மனைவியர்
→ மனைவியின் சகோதரியரின் கணவன்மார்

மனைவி —
மாமனார்
→ மாமியார்
கணவனின் சகோதரர்
→ கணவனின் சகோதரியர்
→ கணவனின் சகோதரரின் மனைவியர்
கணவனின் சகோதரியரின் கணவன்மார்

(இங்கு → குறி ஒருவரிடையே ஒருவர் கொள்ளும் உறவைக் குறிக்கின்றது.)

3. 6. 4. 0. இரு படைப்பாளிகளுடைய நாவல்களில் காணப்படும் உறவுமுறைகளைப் பின்வருமாறு அட்டவணைப்படுத்தி ஒப்பிட்டுக் காணலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பிறந்த வீட்டு உறவு

உறவுமுறை	பாதிக்கப்பட்ட உறவு				பாதிக்கப்படாத உறவு				மொத்தம்	
	லக்ஷ்மி		சூடாமணி		லக்ஷ்மி		சூடாமணி			
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
1. பிறந்தவீட்டார் உறவு										
தந்தை-மகள் உறவு	8	50.00	8	80.00	6	18.18	10	35.70	32	36.78
2. உடன்பிறந்தார் உறவு										
அக்காள்-தம்பி உறவு	1	6.25	—	—	3	9.09	1	3.60	5	5.75
அண்ணன்-தங்கை உறவு	3	18.75	1	10.00	11	33.34	6	21.43	21	24.13
அக்காள்-தங்கை உறவு	2	12.50	—	—	—	—	6	21.43	8	9.19
3. தாயின் உடன்பிறந்தார் உறவு										
தாயின் சகோதரியுடன் உறவு	1	6.25	—	—	1	3.03	—	—	2	2.30
தாயின் சகோதரருடன் உறவு	1	6.25	—	—	3	9.09	3	10.70	7	8.05
4. தந்தையின் உடன்பிறந்தார் உறவு										
தந்தையின் சகோதரருடன் உறவு	—	—	—	—	2	6.06	—	—	2	2.30
தந்தையின் சகோதரியுடன் உறவு	—	—	1	10.00	4	12.12	—	—	5	5.75
பாட்டன்-பாட்டி உறவு	—	—	—	—	3	9.09	2	7.1	5	5.75
மொத்தம்	16	100.00	10	100.00	33	100.00	28	100.00	87	100.00

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்களின் பிறந்தவீட்டார் உறவு பற்றிய நாவல்கள் கூறும் இப்பட்டியலைக் காணும்பொழுது தந்தை-மகள் உற-வையே இருவரும் மிகுதியாகச் சித்திரிக்கின்றனர் என்பதை உணரமுடிகின்றது (36.78%). தந்தை-மகள் உறவை இருபடைப்-பாளிகளுமே ஒரே எண்ணிக்கை அளவில் சித்திரித்துக் காட்டினா-லும் பாதிக்கப்படாத உறவை லக்ஷ்மியைவிடச் சூடாமணியே மிகுதியாகச் சித்திரித்துள்ளார்.

தந்தை-மகள் உறவினை அடுத்து இரு படைப்பாளிகளு-டைய நாவல்களிலும் அண்ணன்-தங்கை உறவு மிகுதியாகப் படைக்கப்பட்டிருக்கின்றது (24.13%). லக்ஷ்மியைவிடச் சூடாமணி மிகக் குறைவாகவே அண்ணன்-தங்கை உறவைச் சித்திரிக்கின்-றார். ஏனைய உறவுகளை இருவருமே மிகுதியாகப் படைக்க-வில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

திருமண உறவு கொண்ட வீட்டாருடன் உறவு

உறவு முறை	பாதிக்கப்பட்ட உறவு				பாதிக்கப்படாத உறவு				மொத்தம்	
	லக்ஷ்மி		சூடாமணி		லக்ஷ்மி		சூடாமணி			
	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு	எண்	விழுக்காடு
மாமனார்-மருமகள் உறவு	1	14.28	—	—	4	28.56	1	20.00	6	23.08
நாத்தனார் உறவு	3	42.86	—	—	6	42.86	3	60.00	12	46.16
கணவனின் சகோதரர் மனைவியருடன் உறவு	3	42.86	—	—	—	—	—	—	3	11.53
கணவனின் சகோதரருடன் உறவு	—	—	—	—	3	21.43	1	20.00	4	14.38
நாத்தனார் கணவருடன் உறவு	—	—	—	—	1	7.15	—	—	1	3.85
மொத்தம்	7	100.00	—	—	14	100.00	5	100.00	26	100.00

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்வட்டவணையின் வழியாக இரு படைப்பாளிகளுடைய படைப்புக்களிலும் நாத்தனார் உறவுச் சித்திரிப்பு மிகுதியாகக் காணப்படுவதை அறியலாம் (46.16%). லக்ஷ்மி, சூடாமணியை விட மிகுதியாக இவ்வுறவினைச் சித்திரிக்கின்றார். இதற்கடுத்த உறவாக மாமனார்-மருமகள் உறவு காணப்படுகின்றது (23.08%). சூடாமணியைவிட லக்ஷ்மியே இவ்வுறவை மிகுதியாகச் சித்திரிக்கின்றார். இருவரது படைப்புக்களிலும் பாதிக்கப்பட்ட உறவுகளைவிட பாதிக்கப்படாத உறவுகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. இந்தியக் குடும்பங்களிடையே காணப்படும் நெருக்கமான உறவுச் சூழலை இப்படைப்பாளிகளுடைய நாவல்கள் சித்திரிக்கின்றன.

குடும்ப உறவு பற்றிய சித்திரிப்புக்களை இரு படைப்பாளிகளின் நாவல்களிலும் பொதுவாகக் காணும்பொழுது சூடாமணியைவிட லக்ஷ்மியே மிகுதியான உறவுமுறைகளைச் சித்திரிக்கின்றார் எனத்தெரிகின்றது. லக்ஷ்மியின் நாவல்கள் பெரும்பான்மையாகக் கூட்டுக் குடும்பவாழ்வை அடிப்படையாகக் கொண்டுள்ளமையால் குடும்ப உறவுகள் அவற்றில் மிகுதியாகக் காணப்படுகின்றன. சூடாமணியின் நாவல்கள் தனிக் குடும்பத்தையே காட்டுவதால் குடும்ப உறவுகள் அங்கு மிகுதியாகக் காணப்படவில்லை. லக்ஷ்மி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டுள்ளதும், மருத்துவப்பணியில் பலருடன் பழகும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதும், தம்முடைய நாவல்களில் பல்வேறு குடும்ப உறவுகளைச் சித்திரித்துக் காட்டுவதற்கு அவருக்குத் துணை செய்கின்றன. குடும்ப அனுபவமும், தொழில் அனுபவமும் அவருடைய நாவல்களில் குடும்ப உறவுநிலைச் சித்திரிப்பு மிகுதியாக இடம்பெறக் காரணமாகின்றன எனலாம். சூடாமணி உடல்நலக் குறைவினால் திருமணமாகாதவர்; வெளி உலகுடன் மிகுதியான தொடர்பில்லாதவர். எனவே, அவர் அனுபவ அறிவு இன்றிக் கற்பனையின் துணையால் மட்டுமே குடும்ப உறவுகளைச் சித்திரித்துக் காட்டுகின்றார். அவரும் இக்கருத்தினை ஏற்கின்றார்*. படைப்பாளிகளது வாழ்க்கைப் பின்னணியும் அனுபவமும் அவர்தம் படைப்புக்களுக்குத் துணையாய் நிற்கின்றன என்ற உண்மையை இவ்விருவரது வாழ்க்கைப் பின்னணி இவர்களுடைய படைப்புக்களைப் பாதித்திருப்பதன் வாயிலாக உணரமுடிகின்றது.

3.6.5.0. லக்ஷ்மி, சூடாமணி ஆகியோரின் நாவல்களில் குடும்ப உறவுகளைக் காணும்போது பின்வரும் முடிவுகளை உணரலாம் :

குடும்ப வறுமை, தந்தையின் இரண்டாம் திருமணம், தந்தையின் ஒழுக்கக்கேடு, தந்தையின் பொறுப்பற்ற நிலை எனும் இவை தந்தை-மகள் உறவை மகளின் குழந்தைப் பருவத்தில் பாதிக்கின்றன. தந்தையின் பணத்தாசை, குறிக்கோள் எனும் இவை மணப்பருவத்தில் உள்ள மகளின் உறவை மேற்கூறியவற்றோடு பாதிக்கின்றன. திருமணம் முடிந்த பெண்ணுக்குத்

* 25.8.80 அன்று ஆய்வாளர் படைப்பாளியுடன் நடத்திய பேட்டியின்வழி தெரிந்துகொண்ட கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தந்தை அறிவுரை கூறும் ஆசானாகவும், தவறுகளைக் கண்டித்துத் திருத்துபவனாகவும் காணப்படுகின்றான். சூடாமணியின் கதைகளில் தந்தை-மகள் உறவு ஆழமாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. லக்ஷ்மியின் நாவல்களில் இப்போக்குக் காணப்படவில்லை.

உடன்பிறந்தார் உறவுகளில் அக்கா-தம்பி உறவு பாசத்துடன் காணப்படுவதை லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இவ்விரு படைப்பாளிகளும் தம் நாவல்களில் படைத்திருக்கின்றனர். உடன்பிறந்தார் உறவுகளுள் அண்ணன்-தங்கை உறவே இருவருடைய நாவல்களிலும் மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. தங்கையின் நல்வாழ்வுக்காக அண்ணன் எதையும் செய்யத் துணிகின்றான். கணவனை இழந்தோ அல்லது கணவனைப் பிரிந்தோ அக்காளோ தங்கையோ வாழும்பொழுது அவர்களைப் பாதுகாக்கும் பொறுப்பை அவளுடைய அண்ணனோ அல்லது தம்பியோ ஏற்கின்றனர். அண்ணன் தன் தங்கையைக் காப்பாற்றிவருவதை விரும்பாத அண்ணியரையும், தங்கையின் வாழ்வைப் பாழ்படுத்தி அதனால் தனக்குச் செல்வப்பலனைப் பெறவிரும்பும் அண்ணன்மாரையும் லக்ஷ்மி சித்திரிக்கின்றார். இச்சித்திரிப்பு சூடாமணி நாவல்களில் காணப்படவில்லை.

அக்காள்-தங்கைகளுக்குள் ஏற்படும் மோதலையே லக்ஷ்மி மிகுதியாகச் சித்திரிக்கின்றார். ஒற்றுமையான அக்காள்-தங்கையரையே சூடாமணி காட்டுகின்றார். லக்ஷ்மி இரு முரண்பட்ட பாத்திரங்களாக அக்காள், தங்கையைப் படைத்துள்ளார். சூடாமணி பண்பில் முரண்பாடு கொண்ட, ஆனால் ஒருவருக்கொருவர் முரண்பாடு இல்லாத பாத்திரங்களாக அக்காள், தங்கையைப் படைக்கின்றார். தங்கை இறந்துவிட்டால் அவளது குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை அக்காள் ஏற்கின்றாள்.

தாய்மாமன் உறவுநிலைகளைக் காட்டும்போது, தங்கையின் கணவன் இறந்துவிட்டால் அவள் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பைத் தாய்மாமன் ஏற்பதை இவ்விரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். தன் வீட்டில் வளரும் தங்கை மகளைத் தன் மகனுக்கு மணமுடிக்கத் தாய்மாமன் விரும்புகின்ற நிலையை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். தனக்கு மகன் இருப்பின் தன் அண்ணன் அல்லது தம்பி மகளையே அவனுக்கு மணமுடிக்க தந்தையின் உடன் பிறந்தாள் விரும்புகின்றாள்.

ஒரு பெண்ணுடைய பெற்றோர் இறந்து விட்டாலோ அல்லது தாய் இறந்து, தந்தையின் கவனிப்பு அவளுக்கு இல்லையென்றாலோ அவளை வளர்க்கும் பொறுப்பைப் பாட்டன், பாட்டி ஏற்றுக்கொள்கின்றனர்.

புகுந்தவீட்டு உறவுகளுள் ஒரு பெண் தன் மாமனாரிடம் நெருங்கிப் பழகுவது தவறாகக் கருதப்படுகின்றது, நாத்தனார் தன் அண்ணன் மனைவியைவிட வயதில் மிகவும் சிறியவளாகவும் இருந்தால் அவர்களிடையே உறவுச்சிக்கல் எழுவதில்லை. அண்ணன் தன் தங்கையிடமும் மனைவியிடமும் ஒரே அளவான அன்பைக்காட்டும் பொழுது அங்கு நாத்தனார் உறவில் சிக்கல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எழுவதில்லை. அண்ணன் தன் தங்கையைவிட, மனைவியிடம் மிகுதியான அன்பு செலுத்தும்போது அங்கு நாத்தனார் உறவில் சிக்கல் எழுகின்றது. நாத்தியின் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்று அண்ணன் மனைவி அன்பு காட்டினால் அங்கு நாத்தனார் உறவில் சிக்கல் எழுவதில்லை. ஒரு குடும்பத்து மருமகள்களிடையே காணப்படும் செல்வ வேறுபாடும், மாமியார் மருமகள்களுக்கிடையே காட்டும் மாறுபட்ட அன்பும் மருமக்களுக்கு இடையே வெறுப்பை வளர்க்கின்றன. ஒரு பெண் தன் புகுந்த வீட்டில் கணவனின் அண்ணனிடமோ, தம்பியிடமோ, நாத்தனார் கணவரிடமோ நெருங்கிப் பழகுவது சமுதாயத்தால் தவறாக எண்ணப்படுகின்றது.

பெண்கள் பிறந்த வீட்டில் எதிர்ப் பாலாரிடமும் புகுந்த வீட்டில் தன் பாலாரிடமுமே பழகுவது குடும்ப அமைப்பாகச் சமுதாயத்தில் காணப்படுகின்றது. குடும்ப உறவுகளைச் சூடாமணியைவிட லக்ஷ்மியே மிகுதியாகச் சித்திரிக்கின்றார். இதற்கு இவர்களின் வாழ்க்கைப் பின்னணி காரணமாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 7. உழைக்கும் பெண்கள்

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

அலுவலகப் பணியில் ஈடுபடுவோர், வீட்டுப் பணிகளில் ஈடுபடுவோர், சமூகப் பணிகளில் ஈடுபடுவோர் என்று உழைக்கும் பெண்கள் மூவகைப்படுத்தப்பட்டு இவ்வியலில் ஆராயப்படுகின்றனர். குடும்பத்தலைவர் இறப்பு, கணவனின் பிரிவு, உயர்கல்வியில் ஆசை, காப்பவர் இன்மை, குடும்பத் தலைவர் வருவாய் போதாமை, குடும்பக் கவலை, பொழுதுபோக்கு, தாழ்வு மனப்பான்மை, குறிப்பிட்ட தொழில்மீது கொண்ட பற்று ஆகியவை ஒரு பெண் அலுவலை மேற்கொள்ளக் காரணங்களாகக் காணப்படுகின்றன என்ற உண்மை இங்கு ஆராயப்படுகின்றது. அலுவல் மகளுக்குக் குடும்பத்திலும் அலுவலகத்திலும் ஏற்படும் சுமையால் தோன்றும் கடமைக்கூறு மோதலும், ஆடவருடன் பணிபுரிவதனால் ஏற்படும் சிக்கல்களும் ஆராயப்படுகின்றன. அலுவல் மகள் பற்றிய சித்திரிப்பில் சமூகவியலாருக்கும் படைப்பாளிகளுக்கும் இடையேயுள்ள வேறுபாடு ஆராயப்படுகின்றது. படித்த பெண்களும், படிக்காத பெண்களும் பிறர் வீடுகளில் பணிப்பெண்களாகப் பணிபுரியக் காரணமான சூழல்களும் அவர்களுடைய நிலைகளும் கண்டறியப்படுகின்றன. சமூகப் பணியில் ஈடுபடும் பெண்கள் திருமணமானவர்களாகக் காணப்படும் உண்மை புலப்படுத்தப்படுகின்றது. சமூகப்பணியில் சிறந்து விளங்க அப்பெண்களுக்குக் குடும்ப ஆதரவும், செல்வ நிலையும் துணை நிற்கின்றன என்ற உண்மையும் இரு படைப்பாளிகளின் நாவல்களின் வாயிலாக நிறுவப்படுகின்றது

3. 7 உழைக்கும் பெண்கள்

3. 7. 0. 1. பண்டைக் காலத்தில் ஆடவருக்கும் பெண்டிருக்கும் அவரவர் உடல் அமைப்பிற்கேற்பத் தொழில்கள் வகுக்கப்பட்டிருந்தன. ஆடவர் வேட்டையாடுதல், கால்நடைகளை மேய்த்தல், போர்த்தொழில் செய்தல், கடல் கடந்து பொருள் தேடச் செல்லல் போன்ற உடலுழைப்பு மிக்க கடினமான தொழில்களைச் செய்தனர் (Margaret Mead, 1959, p. 439). பெண்கள் பயிர்த் தொழிலோடு குடிசைத் தொழிலையும் மேற்கொண்டிருந்தனர் (A.S. Altekar, 1973, p. 23). ஆதி குடிகளைச் சேர்ந்த பெண்கள் நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்துவந்த-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

னர் (Simon De Beavoir, 1968, p. 68). கைம்பெண்கள் நூல் நூற்றலும் நெசவும் செய்தனர் என்று சங்க இலக்கியம் குறிப்பிடுகின்றது (புறம், 326 : 5; 125 : 1; நற், 353 : 1-2). எனவே, குடும்பம், பொருள் உற்பத்தி செய்யும் இடமாக இருந்தது என்பார் கலாராணி (Kalarani, 1976, p. 58).

3. 7. 0. 2. ஐம்பதுக்கு மேற்பட்ட பெண்பாற் புலவர்கள் சங்கத்தில் இருந்தனர் என்றும், ஔவை அரசியலிலும் ஈடுபட்டிருந்தாள் என்றும் சி. பாலசுப்பிரமணியம் குறிப்பிடுவார் (சி. பாலசுப்பிரமணியம், 1976, p. 8). சோழர் காலத்தில் தமிழகத்தில் இருந்த மருத்துவச் சாலைகளில் பணிபுரிந்த மருத்துவமகளிர் பற்றி, கல்வெட்டுச்செய்தி குறிப்பிடுகின்றது (மா. சந்திரமூர்த்தி, 1973, ப. 110). இவை போன்ற சமூகப்பணிகளில் சிறுபான்மை மகளிரே ஈடுபட்டிருந்தனர். சமூகப்பணி பெரும்பாலும் ஆடவர்க்குரியதாகவே காணப்பட்டது.

3 7. 0 3. தொழிற்புரட்சிக்குப் பின்னர் பெண்கல்வி வளர்ந்தது. பெண் கல்வியின் விரிவாக்கத்தின் பயனாகவும், மக்கள் உடல்நல வாழ்வுச் சேவைகளின் (health services) பயனாகவும், பெண் ஆசிரியைகளும், பெண் மருத்துவர்களும், மருத்துவத் தாதியரும் மிகுதியாகத் தேவைப்பட்டனர். தொடக்க காலத்தில் கிறித்துவப் பெண்கள் பயன்படுத்திக்கொண்ட இவ்வாய்ப்புக்களைப் பின்னர் ஏனைய மதத்துப் பெண்டிரும் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பித்தனர். ஆசிரியப்பணியும், மருத்துவப் பணியும் பிற சமயத்தவராலும் மதிப்பிற்குரிய பணிகளாகக் கருதப்பட்டன (Vina Mazumdar, 1976, p. 54).

3. 7. 0. 4 இந்திய விடுதலைக்குப் பின்னர், ஒருபுறம் பொது ஆட்சித்துறையின் வளர்ச்சியும், பிற பணித்துறைகளின் வளர்ச்சியும் வேலை வாய்ப்புக்களைப் பெருக்கின. மறுபுறம் தொழில்துறை வளர்ச்சி வேலை வாய்ப்பைப் பெருக்கிற்று. பெண்களுக்கு இந்நிலைமை நல்ல வாய்ப்பினைத் தந்தது. படித்த பெண்கள் பலர் பல்வேறு அலுவலகங்களில் பணியாற்றத் தொடங்கினர். இரு உலகப்போர்களின் விளைவாக விலைவாசிகள் ஏறத் தொடங்கின. எனவே, செலவிற்கேற்ற வரவு இல்லாத நிலையில் திண்டாடிய நடுத்தர வர்க்கத்துப் பெண்கள் வருமானம் பற்றாத நிலையில் ஊதியம் தேடும் முயற்சியில் ஈடுபட்டனர் (Kalarani, 1976, p. 2). விடுதலைக்குப் பின்னர் பெண்களுக்கு எல்லாத் துறைகளிலும் சமஉரிமை, சமகல்வி, சமவாய்ப்பு அளிக்கப்பட்டன. ஆண்கள் பணியாற்றும் துறைகளிலும் பெண்கள் பணியாற்றத் தொடங்கினர்.

3. 7. 0. 5. படித்த பெண்கள் இவ்வாறு அலுவலகங்களில் பணியாற்ற, படிக்காத ஏழைப் பெண்கள் தங்களுடைய உணவு, உடை போன்ற அடிப்படைத் தேவைகளுக்காகப் பிற வீடுகளில் பணிப்பெண்களாகப் பணிசெய்யத் தொடங்கினர். படித்த பெண்களும் அலுவலகங்களில் வேலை கிடைக்காமல் வீடுகளில் பணிப்பெண்களாக வேலை பார்க்கத் துணிந்தனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.7.0.6. உழைக்கும் பெண்களை மேற்கூறிய கருத்துக்களின் அடிப்படையில்

1) அலுவலகப் பணியில் ஈடுபடும் பெண்கள்
2) வீட்டுப் பணிகளில் ஈடுபடும் பெண்கள்
3) சமூகப் பணிகளில் ஈடுபடும் பெண்கள்

என மூன்று பிரிவுகளாகப் பகுக்கலாம்: லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் உழைக்கும் பெண்கள் இம்மூன்று பாகுபாடுகளின் வழியே ஆராயப்படுகின்றனர்.

3.7.0.7. உழைக்கும் பெண்களைப்பற்றி லக்ஷ்மியின் (1) அரக்கு மாளிகை, (2) அடுத்த வீடு, (3) காஞ்சனையின் கனவு (4) சூர்யகாந்தம், (5) நாயக்கர் மக்கள், (6) பண்ணையார் மகள் (7) பெண்மனம், (8) பவானி ஆகிய எட்டு நாவல்களும், சூடாமணியின் (1) மனத்துக்கினியவள், (2) மானிட அம்சம், (3) தீயினில் தூசு, (4) உயர்வு உள்ளத்திலே, (5) புன்னகைப் பூங்கொத்து, (6) வாழ்த்துவோம் ஆகிய ஆறு நாவல்களும் குறிப்பிடுகின்றன.

3.7.1.0. *அலுவலகப் பணியில் ஈடுபடும் பெண்கள்*

அலுவலகப் பணி என்பது பள்ளி, மருத்துவ விடுதி, அரசு அலுவலகங்கள் முதலியவற்றில் பணிபுரிதலைக் குறிக்கின்றது. அலுவலகப் பணிகளில் ஈடுபடும் பெண்கள் அப்பணியை மேற்கொள்ள அவர்களுக்கெனச் சில நோக்கங்கள் காணப்படுகின்றன. (Kalarani, 1976, p. 66; Promilla Kapur, 1972, pp. 74-75). இந்நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இரு படைப்பாளிகளின் நாவல்களை ஆராயும்பொழுது, அலுவல்மகளிரின் நோக்கங்களைக் கீழ்க்கண்டவாறு பிரிக்க முடிகின்றது:

1) பொருளுக்காக அலுவல் மேற்கொள்வோர்
2) கவலையை மறக்க அலுவல் மேற்கொள்வோர்
3) பொழுது போக்குக்காக அலுவல் மேற்கொள்வோர்
4) திருமணம் நிச்சயமாகும் வரை அலுவல் மேற்கொள்வோர்
5) தாழ்வு மனப்பான்மையை நீக்க அலுவல் மேற்கொள்வோர்
6) தொழில் மேல் உள்ள பற்றினால் அலுவல் மேற்கொள்வோர்

3.7.1.1. *பொருளுக்காக அலுவல் மேற்கொள்வோர்*

தங்களுடைய அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் போன்றவற்றிற்கும், பிற தேவைகளுக்கும் பெண்கள் பணிபுரிய வேண்டிய நிலை காணப்படுகின்றது. அதற்கான காரணங்களாகப் பின்வருபவை காணப்படுகின்றன :

1) குடும்பத்தலைவர் இறப்பு
2) கணவனின் பிரிவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3) உயர்கல்வி
4) தம்மைக் காப்பார் இன்மை
5) குடும்பத்தலைவர் வருவாய் போதாமை

3. 7. 1. 1. 1. *குடும்பத்தலைவர் இறப்பு*

ஒரு குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யும் தலைவனாக விளங்கும் தந்தை இறக்க நேரிடின் அக்-குடும்பத்துப் பெண் பணியாற்ற வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குடும்பத்தின் அன்றாடத் தேவைகளுக்குரிய பொறுப்பை அப்-பெண் ஏற்கின்றாள். இவ்வாறு பொறுப்பேற்கும் அலுவல் மகளிரை லக்ஷ்மி 'அடுத்த வீடு,' 'சூர்யகாந்தம்' எனும் இரண்டு நாவல்-களிலும், சூடாமணி 'வாழ்த்துவோம்' எனும் நாவலிலும் காட்டு-கின்றனர்.

'அடுத்த வீடு' நாவலில் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்த மஞ்சுளா தாத்தாவின் பாதுகாப்பில் வாழ்வதாக லக்ஷ்மி சித்திரிக்கின்றார். மஞ்சுளா ஒரு பள்ளியில் எழுத்தராகப் பணி-புரிகின்றாள். தாத்தாவிற்கு வேலையில்லையாதலால் மஞ்சுளா-வின் வருமானம் குடும்பத்திற்கு இன்றியமையாத தேவையாகக்-கருதப்படுகின்றது.

'சூர்யகாந்தம்' நாவலில் தந்தையை இழந்த விஜயா மாமனின் பொறுப்பற்ற தன்மையினால் குடும்பச் சொத்துக்கள் அழிந்த நிலையில், ஆண்பிள்ளைகளற்ற அக்குடும்பத்தின் பொறுப்பை ஏற்கவேண்டியவளாகின்றாள்; ஒரு கம்பெனியில் தட்-டெழுத்தராகப் பணியாற்றுகின்றாள்.

'வாழ்த்துவோம்' நாவலில் ஆடம்பர வாழ்வினால் ஏற்பட்ட கடனை அடைக்க வழி தெரியாது தூக்கிட்டுக்கொண்ட தந்தைக்-குப் பின்னர் அக்குடும்பப் பொறுப்பை ஏற்கும் அண்ணனுக்கு உதவியாக மாலதியும் வேலைபார்க்கத் தொடங்குவதைச் சூடா-மணி சித்திரிக்கின்றார்.

3. 7. 1. 1. 2. *கணவனின் பிரிவு*

கணவனின் பாதுகாப்பில் வாழும் பெண், கணவனை ஏதோவொரு காரணத்தால் பிரிந்துவாழ நேரிட்டால் ஆதரவற்ற-வளாகின்றாள். அந்நிலையில் தன்னையும் தன் குழந்தைகளை-யும் காப்பாற்றிக்கொள்ள அப்பெண்ணுக்கு ஓர் அலுவல் தேவைப்-படுகின்றது.

லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவல் கணவனின் பிரிவினால் ஒரு பெண் அலுவல் மகளாவதைச் சித்திரிக்கின்றது. கள்ளக் கையெழுத்திட்டுத் தான் வேலை பார்க்கும் அலுவலகத்தில் பணத்தைக் கையாடிய நாகலிங்கத்திற்கு ஏழு ஆண்டு சிறைத்-தண்டனை கிடைப்பதைப் 'பெண்மனம்' நாவல் சித்திரிக்கின்றது. ஆதரிப்பார் யாருமற்ற நிலையில் நாகலிங்கத்தின் மனைவி ஹேமலதா தன் குழந்தையுடன் அனாதை ஆசிரமத்தை நடத்தி-வரும் திருமதி ஜோசப்பிடம், தனக்கும் தன் குழந்தைக்கும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கணவன் மீண்டும் வரும்வரை ஆதரவளிக்க வேண்டும் எனக் கேட்டு அனாதை ஆசிரமத்தில் குழந்தைகளைக் கவனித்துக்கொள்ளும் ஆயாவாகப் பணிபுரிகின்றாள் என்று இந்நாவலில் லக்ஷ்மி கணவன் பிரிவின் காரணமாக அலுவல் மகளாகும் ஹேமலதாவைப் படைத்திருக்கின்றார்.

கணவனுடன் மனவேறுபாடு கொண்டு தந்தை வீட்டிற்கு வந்த பவானி ஆசிரியைப் பணியை ஏற்றுக்கொள்ள எண்ணுவதை லக்ஷ்மியின் 'பவானி' நாவல் சித்திரிக்கின்றது.

3. 7. 1. 1. 3. *உயர்கல்வி*

ஏழைக்குடும்பத்தில் பிறந்த பெண் உயர்கல்வி கற்க விரும்பினாலும், பண உதவி இல்லாததனால், தன் ஓய்வு நேரத்தில் ஏதாவது அலுவல் பார்த்து, பணம் தேடிக்கொண்டு படிப்பைத் தொடர விரும்புகின்றாள். படிப்பின் மீதிருக்கும் ஆசையும், பிறர் தயவில் வாழவிரும்பாத எண்ணமும் ஒரு பெண் அலுவலை ஏற்றுக் கொள்ளக் காரணங்களாகலாம்.

லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் உயர்கல்வியில் கொண்ட ஆசையினால் அலுவல் பார்த்துக் கொண்டே படிக்கும் அருணாவைச் சித்திரிக்கின்றது. மிக ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்த அருணா பெரியம்மாவால் வளர்க்கப்படுகின்றாள். செல்வச் செருக்குக் கொண்ட பெரியம்மா வெளியுலகில் தன் பெயர் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக அருணாவைத் தான் செல்வசுகத்தில் வளர்ப்பதாகப் பொய் கூறுமாறு கட்டாயப்படுத்துகின்றாள். பெரியம்மாவின் கருணையால் வாழும் தன் அடிமை நிலைமை, தன் பிறந்த வீட்டின் வறுமை ஆகியவற்றால் வருந்திய அருணா ஒரு பத்திரிகையில் பகுதிநேர எழுத்தராகப் பணியாற்றுகின்றாள். உழைப்பினால் உயரவேண்டுமென்ற பிடிவாதத்துடன் படித்துக்கொண்டே ஓய்வுநேரத்தில் வேலை செய்ய முன்வந்துள்ள அருணாவைப் பத்திரிகை நடத்தும் கௌரி பாராட்டுவதாக லக்ஷ்மி சித்திரிக்கின்றார் (ப. 269).

3. 7. 1. 1. 4 *தம்மைக் காப்பார் இன்மை*

ஒரு பெண்ணுக்குப் பெற்றோரோ உடன்பிறந்தோரோ ஆதரிக்க இல்லாத நிலையில் தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்ள அவள் செய்யும் அலுவல் துணைபுரிகின்றது; அவள் தன் வாழ்வின் தேவைகளை அலுவலால் ஈட்டிய பொருள்வழி நிறைவு செய்துகொள்ள முடிகின்றது. தன் அலுவல்வழித் தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும் அலுவல் மகளிரை 'மனத்துக்கினியவள்', 'தீயினில் தூசு' என்னும் இரு நாவல்களில் சூடாமணி படைத்துக்காட்டுகின்றார்.

'மனத்துக்கினியவள்' நாவல் பெற்றோரை இழந்த வித்யா உறவினர் வீட்டில் தங்கி ஒரு கண்ணாடித் தொழிற்சாலையில் வேலை பார்ப்பதைச் சித்திரிக்கின்றது. அங்குள்ள 'போர்மன்'னின் தீய நடத்தையால் வித்யா அங்கிருந்து வெளியேறிப் பின்னர் மருத்துவ மனையில் தாதியாகப் பணிபுரிகின்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

'தீயினில் தூசு' நாவலில் வரும் வாசுகி சிற்றன்னையின் கொடுமையால் தந்தையின் ஆதரவை இழந்து தாய்மாமனின் ஆதரவில் வளர்ந்து பின்னர் மருத்துவமனையில் தாதியாகப் பணியாற்றுகின்றாள்.

3. 7. 1. 1. 5. குடும்பத்தலைவர் வருவாய் போதாமை

குடும்பத்தலைவராகிய தந்தையின் வருவாய் போதாமையால் பெண்கள் குடும்ப வருவாய்ப் பெருக்கத்திற்காக அலுவலுக்குச் செல்லும் நிலையும் உண்டு என்பதைச் சூடாமணியின் 'வாழ்த்துவோம்' நாவல் காட்டுகின்றது. இந்நாவலில் பள்ளி இறுதி வகுப்பை முடித்த அகிலா மேற்படிப்பைத் தொடர விருப்பம் கொண்டவளாக இருந்தாலும் பணப் பற்றாக்குறையைத் தானே உணர்ந்து அலுவல் தேடுகின்றாள். தோழியின் உதவியால் கிடைத்த அலுவலை மேற்கொள்கின்றாள். குடும்பத்தின் பணத் தேவையைத் தந்தையுடன் சேர்ந்து அகிலாவும் நிறைவு செய்கின்றாள்.

3. 7. 1. 2. 0. கவலையை மறக்க அலுவல் மேற்கொள்ளுவோர்

வாழ்க்கையில் கவலைகள் மன அமைதியைக் குலைக்கும்பொழுது, அக்கவலைகளிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் பெண்கள் அலுவலை மேற்கொள்கின்றனர். அலுவலின் காரணமாகப் பலருடன் பழகுவதாலும் அலுவலின் சுமையாலும் தம் கவலையை மறக்கும் சூழல் ஏற்படுவதால் பெண்கள் அலுவலை விரும்பி மேற்கொள்கின்றனர். குடும்ப வறுமையின் காரணமாக இவர்கள் வேலைக்கு வரவில்லை; ஓரளவோ அல்லது நல்ல பண வசதியுடையவராகவோ காணப்படுகின்றனர். இத்தகு பெண்களை லக்ஷ்மியின் 'பெண்மனம்', 'நாயக்கர் மக்கள்' ஆகிய நாவல்களும், சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே' எனும் நாவலும் சித்திரிக்கின்றன.

'பெண்மனம்' நாவலில் சிற்றன்னையின் கொடுமையினின்றும், அவள் தனக்குப் பார்க்கும் வயதான மாப்பிள்ளைகளிடமிருந்தும் தப்புவதற்காகப் பள்ளி ஆசிரியை வேலையை வெறுத்தாலும் தொடர்ந்து பணியாற்றும் சந்திராவை லக்ஷ்மி படைத்திருக்கின்றார்.

'நாயக்கர் மக்கள்' நாவல் தன்னை விட்டுப் பிரிந்து மற்றொரு பெண்ணைத் தேடிச் சென்ற காதலன், மீண்டும் தன்னை நாடி வரும்பொழுது அவனை மணக்க மறுத்த திலகவதி, காதல் தோல்வியால் ஏற்பட்ட கவலையை மறக்க ஆசிரியைப் பணியை மேற்கொள்வதைச் சித்திரிக்கின்றது

'உயர்வு உள்ளத்திலே' நாவல் மணக்க மறுத்த காதலனை எண்ணி வருந்திய ராதாவை அவள் பெற்றோர் மனமாற்றத்திற்காக வேலைக்கு அனுப்புவதைச் சித்திரிக்கின்றது. துணிக்கடையில் விற்பனைப் பெண்ணாகப் பணியாற்றியும் மனஅமைதி பெறாத ராதா தாயின் யோசனையின்பேரில் ஆசிரியைப் பயிற்சி பெற்று பள்ளி ஆசிரியை ஆகின்றாள். இந்நாவல் கண-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வனை இழந்த பரிமளா, கணவனை இழந்த வருத்தத்தை மறக்கவும் கைம்பெண்ணான தனக்கு உலகம் இழைக்கும் கொடுமைகளைக் கண்டு குமுறும் மனதை அமைதிப்படுத்தவும் ஆசிரியைப்பயிற்சி பெற்று ஆசிரியையாகின்றாள் என்று சித்திரிக்கின்றது. குடும்பக் கவலையை மறக்கப் பெண்கள் அலுவல் மேற்கொள்வதைச் 'சமூகவியலறிஞர் பிரமிளா கபூரும் (Promilla Kapur, 1975, p. 20) சுட்டுகின்றார்.

குடும்பக் கவலையால் ஏற்படும் மனவெழுச்சியைத் தவிர்க்கப் பெண்களுக்கு அலுவல் பயன்படுகின்றது; அலுவல் மனவெழுச்சியைத் தவிர்க்கும் பாதுகாப்புத் தடைவழியாக (Safty valve) காணப்படுகின்றது என்பார் கமலா (பொ. நா. கமலா, 1978, ப 32).

3. 7. 1. 3. 0. பொழுதுபோக்குக்காக அலுவல் மேற்கொள்வோர்

பொருளாதார நெருக்கடி இல்லாவிடினும் வீட்டில் பொழுது போகாத பெண்கள் பொழுதுபோக்கிற்காக அலுவல் மேற்கொள்ளுகின்றனர். லக்ஷ்மியின் 'பெண்மனம்,' சூடாமணியின் 'மானிட அம்சம்' ஆகிய நாவல்கள் இத்தகைய பெண்களைச் சித்திரிக்கின்றன.

லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவலில் பெண்கள் பள்ளியில் ஆசிரியையாகப் பணியாற்றும் அம்புஜம் கூற்று மேற்கூறிய கருத்தினை உறுதிப்படுத்துவதாகக் காணப்படுகின்றது. "இப்படிக் கஷ்டப்பட்டு வேலை செய்யாவிட்டால் என்ன என்று எங்கப்பா திட்டுகிறார். அதனால் நான் வேலையைக் கொஞ்சநாளில் ராஜினாமா செய்துவிடப் போகிறேன்," (ப. 4). அம்புஜத்திற்கு வேலை செய்யவேண்டும் என்ற கட்டாயம் இல்லை என்பது இக்கூற்றிலிருந்து புலப்படுகின்றது.

சூடாமணியின் 'மானிட அம்சம்' நாவல் செல்வக் குடும்பத்தைச் சேர்ந்த அபிராமி ஒரு கம்பெனியில் 'ஸ்டெனோவாகப் பணியாற்றுவதைச் சித்திரிக்கின்றது. அபிராமிக்குக் குடும்பக் வேலைகளோ, வேலை பார்த்துத் தீரவேண்டும் என்ற கட்டாய நிலையோ இல்லை.

அம்புஜம், அபிராமி இருவருமே செல்வக் குடும்பத்துப் பெண்கள். அலுவல் பார்க்கவேண்டிய சூழல் அவர்களுக்கு இல்லை உயர்கல்வி கற்ற இருவரும் பொழுதுபோக்கிற்காக அலுவலை மேற்கொள்கின்றனர். அம்புஜம் திருமணமானதும் வேலையை விட்டுவிடுகின்றாள்; அபிராமி திருமணத்திற்குப் பின்னரும் அலுவலை விடவில்லை.

3. 7. 1. 4. 0. திருமணம் நிச்சயமாகும்வரை அலுவல் மேற்கொள்வோர்

சில பெண்கள் தமக்குத் திருமணம் ஆகும் வரை அலுவலை மேற்கொண்டு திருமணம் நிச்சயமானவுடன் அவ்வலுவலை விட்டு விடுகின்றனர். படித்த படிப்பை வீணாக்கிக் கொள்ளாமலும்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாழ்வின் வசதிகளைப் பெருக்கிக் கொள்ளவும், திருமணமாகும் வரை கவலையற்று இருக்கவும் அலுவல் இவர்களுக்குப் பயன் படுகின்றது. இவ்வகைப் பெண்களை லக்ஷ்மியின் 'பெண்மனம்' நாவலும், 'அரக்குமாளிகை' நாவலும் சித்திரிக்கின்றன.

பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றிய ஹேமலதா திரு-மணத்திற்குப் பின் வேலையை விட்டுவிடுகின்றாள் எனப் 'பெண்-மனம்' நாவல் சித்திரிக்கின்றது.

பள்ளி ஆசிரியையாகப் பணியாற்றிய சங்கரி திருமணத்தை ஒரு விடுவிப்பாக (relief) எண்ணித் தனக்குப் பிடிக்காத அவ்-வேலையை மகிழ்ச்சியுடன் விட்டு விடுகின்றாள் என அரக்கு-மாளிகை' நாவல் சித்திரிக்கின்றது. அலுவலை இவர்கள் விடு-வதற்குக் குறிப்பிட்ட காரணம் ஏதும் சுட்டப்படவில்லை.

3. 7. 1. 5. 0. *தாழ்வு மனப்பான்மையை நீக்கிக்கொள்ள அலுவல் மேற்கொள்வோர்*

அழகற்ற தோற்றம், வறுமை, கல்வியின்மை, சொல்லாற்-றலின்மை, சக்தியின்மை, துன்பங்கள், உடல்நலம் இன்மை, திறமையின்மை போன்ற காரணங்களால் தாழ்வு மனப்பான்மை உருவாகின்றது என்பர் உளவியலார் (Robert W. White, Norman F. Watt, 1973, p 144; Gordon, W. Allport, 1961, p. 130).

முடமான காலினால் தாழ்வு மனப்பான்மை கொண்ட தமயந்தியை லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்' நாவல் சித்திரிக்கின்-றது. சிறுவயதிலேயே இளம்பிள்ளை வாதத்தினால் கால் நொண்-டியான தமயந்தி தன் உடற்குறையினால் மனம் குன்றி தாழ்வு மனப்பான்மையை நீக்கிக்கொள்ளும் பொருட்டுத் தலைமை ஆசி-ரியையாகப் பணியாற்றுகின்றாள். ''என் வாழ்க்கையில் யாரிட-மும் பேசவிரும்பாத விஷயம் என் கால் ஊனம். அதை யார் பேச விரும்பினாலும் என் மனம் எப்படி துக்கத்தில் துடிக்கும் என்பதை உங்களால் உணர முடியாது. சிறுவயதிலிருந்தே நான் இதைப்பற்றி எண்ணி எண்ணி உள்ளம் நொந்து போயிருக்கி-றேன். ஆகவே, ஊனம் என்னும் விஷயம் என் விஷயத்தில் ஆறாத ஒரு புண்." (ப. 204) என்று தன்னை மணக்கவிருக்கும் தன் அத்தைமகனிடம் அவள் பேசுவதினின்று அவள் மனதின் தாழ்வு மனப்பான்மை புலப்படுகின்றது. தமயந்தியின் தாழ்வு மனப்-பான்மையைப் போக்கி உலகில் உள்ள ஏனையோரைப் போல் அவ்ளாலும் வாழமுடியும் என்ற துணிவையும் நம்பிக்கையையும் தமயந்திக்குக் கொடுப்பது அவளுடைய அலுவல்தான் என லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

அலுவல் தாழ்வு மனப்பான்மையைப் போக்குகின்றது என்-பதைச் சூடாமணி 'மனத்துக்கினியவள்' நாவலில் சித்திரிக்-கின்றார். விபத்தினால் முதுகெலும்பு ஒடிந்து படுத்த படுக்கை-யாக இருக்கும் லட்சுமியும் தாழ்வு மனப்பான்மை உடையவள்-தான். காலுடன் ஓடி ஆடுபவர்களையெல்லாம் வெறுக்கும் அவள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மனநிலையை அறிந்த அவள் பாட்டி பக்கத்துச் சேரிகளில் வாழும் ஏழைக் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பை அவளுக்குத் தருகின்றாள்.

தமயந்தியைப் போன்று லட்சுமி பள்ளி ஆசிரியையாகப் பணிபுரியவில்லையெனினும் தன் தாழ்வு மனப்பான்மையைப் போக்கிக்கொள்ள ஒரு வேலையைத் தேடிக்கொண்டிருக்கின்றாள் என்பது, தாழ்வு மனப்பான்மையைப் போக்கிக்கொள்ள அலுவல் ஒரு கருவியாகின்றது என்ற கருத்தினை வலியுறுத்துகின்றது.

3.7.1.6.0. *தொழில்மேல் உள்ள பற்றினால் அலுவல் மேற்கொள்வோர்*

சில பெண்களுக்குப் பொருளாதாரத் தேவை இல்லாவிடினும் குறிப்பிட்ட தொழில்மேல் அவர்கள் கொண்டுள்ள பற்று அவர்களை அலுவல் மகளிரர்க்குகின்றது.

செல்வக் குடும்பத்தவளான சீதா மருத்துவத் தொழிலின்மேல் கொண்ட பற்றினால் மருத்துவராகத் தொழில் புரிவதை லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு' நாவலும், செல்வந்தர் வீட்டுப் பெண்ணான வாணி தன் மனத்திற்குப் பிடித்த வேலையாகிய ஆசிரியைத் தொழிலை மேற்கொள்வதைச் சூடாமணியின் 'புன்னகைப் பூங்கொத்து' நாவலும் காட்டுகின்றன.

3.7.1.7.0 *அலுவல் மகளிரின் சமுதாயச் சிக்கல்கள்*

பெண்கள் அலுவல் மகளிராகும்பொழுது அவர்களுக்கென சில சமுதாயச் சிக்கல்கள் தோன்றுகின்றன. தர்க்கீம், ஃபிராய்டு போன்ற அறிஞர்கள், சமுதாயம் பல கட்டுப்பாடுகளை விதித்திருந்தாலும், தனிமனிதனின் தேவைகளும் சமுதாயத்தின் தேவைகளும் வேறுபடுவதால் தனிமனிதனுக்கும் சமுதாயத்திற்கும் இடையே சிக்கல்கள் ஏற்படுகின்றன என்பர் (Lewis A. Coser, 1972, p.29). பண்டைக்காலத்தில் பெண்களுக்கு அச்சம், நாணம், மடம் போன்ற பண்புகள் வற்புறுத்தப்பட்டன (தொல், களவு, 8). சமுதாயம் பெண்மக்களுக்கென விதித்திருக்கும் வரையறைகளை அலுவல்மகளிர் மீறி நடக்கும்பொழுது விதிமீறல் சூழல் (anomie) ஏற்படுகின்றது (Tara Ali Baig, 1976, pp.251-252). இதனால் அலுவல்மகளிருக்கும் சமுதாயத்திற்கும் இடையில் சிக்கல்கள் ஏற்படுகின்றன.

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய படைப்பாளிகளின் நாவல்களை ஆராய்ந்து காண்கின்றபொழுது அலுவல்மகளிர்க்குரிய சமுதாயச் சிக்கல்களாகப் பின்வருபவை காணப்படுகின்றன :

1) கடமைக்கூறு மோதல் (Role conflict)
2) ஆடவருடன் அலுவல் பார்ப்பதால் விளையும் சிக்கல்கள்

3.7.1.7.1. *கடமைக்கூறு மோதல்*

ஒன்றுக்கொன்று முரண்பட்ட கடமைக்கூறுகளை ஒருவர் ஏற்கும்பொழுது எந்தக் கடமைக்கூறுக்குரிய கடமைகளை முடிப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பது எனக் குழப்பம் ஏற்படலாம். இந்நிலையினைக் 'கடமைக்கூறு மோதல்' என்பார் சமூகவியலறிஞர் ஆர். கே. மெர்டன் (R. K. Merton, 1968, p. 385). கடமைக்கூறு மோதல்களை

1) கடமைக்கூறு இடைமோதல் (Inter Role conflict)
2) கடமைக்கூறு உள்மோதல் (Intra Role conflict)

என சமூகவியலார் இருவகைப்படுத்துவர். இரண்டு அல்லது மூன்று கடமைக்கூறுகளை வகிப்பாருக்கு எந்தக் கடமைக்கூறுக்குரிய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது எனச் சிக்கல் நேர்ந்தால் அதனைக் கடமைக்கூறு இடைமோதல் என்றும், ஒரு கடமைக்கூறு நிலையில் இருவர் எதிர்பார்ப்புக்கள் இருவேறு விதமாக அமைந்தாலோ, இரு குழுக்களின் எதிர்பார்ப்புக்கள் இருவேறு விதமாக அமைந்தாலோ எவருடைய எதிர்பார்ப்புகளுக்கேற்பச் செயலாற்றுவது என்ற சிக்கல் நேர்ந்தால் அதனைக் கடமைக்கூறு உள்மோதல் என்றும் விளக்குவர் (Theodore R Sarbin, 1968, p. 498).

மணமான அலுவல்மகளிர்க்கு ஏற்படும் பல சிக்கல்களுள் முதன்மையான சிக்கல் கடமைக்கூறு மோதலாகும். குடும்பப் பெண் கடமைக்கூறு, அலுவல்மகள் கடமைக்கூறு என்ற இருவகைக் கடமைக்கூறுகளை வகிக்கும் அலுவல் மகளிர்க்குக் கடமைக்கூறு மோதல் ஏற்படுவது இயல்பே என சேஷம்மா கூறுகின்றார் (Seshamma, 1969, p. 226). மணமான அலுவல்மகளிர்க்கு ஏற்படும் கடமைக்கூறு மோதல் மணமாகாத அலுவல்மகளிர்க்கும் ஏற்படுகின்றது.

லக்ஷ்மியின் 'அடுத்தவீடு' நாவலில் வரும் மணமாகாத பெண் மஞ்சுளா, பெற்றோரற்றவள்; வயதான தாத்தாவைக் கவனிக்கும் பொறுப்பையும் குடும்பப் பொறுப்பையும் ஏற்று நடத்துகின்றாள். காலையில் எழுந்து வீட்டு வேலைகளை எல்லாம் முடித்து பள்ளிக்கு சென்று வேலைபார்க்கும் மஞ்சுளாவால் குறித்த நேரத்திற்குப் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. அவளுக்குப் பள்ளியிலும் வீட்டில் விட்டுச் சென்ற வேலைகளே நினைவுக்கு வருகின்றன.

குடும்பப்பெண் என்ற முழுமைக் கடமைக்கூறு நிலை (Total Role) பள்ளி எழுத்தர் என்ற செம்பாதிக் கடமைக்கூறு நிலை (Quasi Role) என்ற இருவேறு கடமைக்கூறு நிலைகள் மஞ்சுளாவிடம் காணப்படுகின்றன. இவற்றுள் குடும்பப்பெண்ணின் கடமைகள் வேறு; பள்ளி எழுத்தரின் கடமைகள் வேறு. எந்தக் கடமைக்கூறு நிலைக்கு ஏற்பக்கடமையாற்றுவது என்ற சிக்கல் அவளுக்கு ஏற்படும்போது கடமைக்கூறு இடைமோதல் அங்குத் தோன்றுகின்றது. இருவேறு கடமைக்கூறு நிலைகளிலும் முழுமையாக ஒன்றிச் செயலாற்ற முடியாத நிலையில் மஞ்சுளாவை வேலையைவிட்டு நீக்கிவிடுகின்றனர். எனவே, கடமைக்கூறு இடைமோதலில் தோல்வி அடைகின்ற பாத்திரமாக மஞ்சுளா காணப்படுகின்றாள்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முழுமைப்பங்கு நிலை				செம்பாதிப்பங்கு நிலை
குடும்பப் பெண்	→ ←	பள்ளிஎழுத்தர்	---→	குடும்பப் பெண்

பெரிய நீண்ட சதுரமும் சிறிய நீண்ட சதுரமும் கட்மைக்கூறு நிலைகளைக் குறிக்கின்றன. → ← கடமைக்கூறு இடைமோதலைக் குறிக்கின்றது → மீண்டும் பழைய நிலைக்கு வருவதைக் குறிக்கின்றது.

3. 7 1. 7. 2. ஆடவருடன் அலுவல் பார்ப்பதால் விளையும் சிக்கல்கள்

பெண்களுடன் பணிபுரியும் மகளிர்க்கு ஏற்படாத பல சிக்கல்கள் ஆண்களுடன் பணிபுரியும் மகளிர்க்கு ஏற்படுகின்றன. ஒரு பெண்ணிடம் அலுவல்மகள் தகுதி நிலையைவிடப் பெண்மை என்ற தகுதிநிலையைத்தான் சமுதாயம் எதிர்பார்க்கின்றது (Promilla-Kapur, 1975, p. 64). அலுவலக மேலாளர்கள் தங்கள்கீழ் பணிபுரியும் பெண்களைத் தங்கள் காம இச்சைக்குப் பயன்படுத்திக் கொள்ளத் துணிகின்றனர். பெண்கள் அதற்கு இசையவில்லையெனில் அவர்களை வேலையினின்று வெளியேற்றிவிடுகின்றனர். (Promilla kapur, 1975, p70).

லக்ஷ்மி தம் 'சூர்யகாந்தம்' நாவலில் இவ்வகை அலுவல் சூழலைச் சித்திரித்துள்ளார். வேலைதேடி ஒரு கம்பெனியின் நேர்முகப் பேட்டிக்குச் சென்ற விஜயாவிடம் அக்கம்பெனி மானேஜர் அவளுக்கு வேலை கொடுப்பதாகவும் அதற்கு உதவியாக அவன் அன்று இரவு அவனுடன் திரைப்படத்திற்கு வரவேண்டும் என்றும் கூறுகின்றான் (ப. 213). அவன் தருவதாகச் சொன்ன வேலையை மறுத்துவிட்டு விஜயா வந்துவிடுகின்றாள்.

'மனத்துக்கினியவள்' நாவலில் சூடாமணி, மேலாளரால் துன்பத்துக்கு ஆளாகும் வித்யாவைச் சித்திரிக்கின்றார். ஒரு கண்ணாடித் தொழிற்சாலையில் பணிபுரியும் வித்யாவை அத்தொழிற்சாலையின் 'போர்மன்' கற்பழித்து விடுகின்றான். உற்றாரால் துரத்தப்பட்ட வித்யா பின்னர் மருத்துவத்தாதிப் பயிற்சியை முடித்துப் பணியாற்றுகின்றாள். தவறு அவள்மீது இல்லாவிடினும் பல ஆண்டுகள் கழித்து அவளைப் பார்த்த அவ்வட்டாரப் பெண்கள் அப்பொழுதும் அவள்மீது பழிதூற்றுகின்றனர். இப்பழி வித்யாவோடு மட்டும் நின்றுவிடவில்லை; அவளுக்கு அடைக்கலம் கொடுக்கும் லட்சுமியையும் பாதித்து விடுகின்றது. லட்சுமியின் வீட்டில் உணவு உண்ண வித்யாவின் வட்டார பெண்கள் மறுக்க, லட்சுமியின் வயலில் இறங்கி வேலை செய்ய அவ்வட்டார ஆடவர் மறுக்கின்றனர் (ப. 261). கற்பழிப்புக்கு ஆளான பெண்ணின் சூழலையோ அல்லது அவளை அந்நிலைக்கு ஆளாக்கிய 'போர் மனை'யோ சமுதாயம் எண்ணிப் பார்க்கவில்லை; வித்யாவிடம் சமுதாயம் பெண்மை என்ற தகுதி நிலையைத்தான் எதிர்பார்க்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்கள் தங்களின் அடிப்படைப் பொருளாதாரத் தேவை-களுக்கென வேலைக்கு வருவது ஆடவர்களைக் கேவலமாக எண்ணச் செய்கின்றது. ஆடவர்கள் அவர்களை அலுவல் மகளிராக எண்ணுவதில்லை. ஒரு பெண்ணாக மட்டுமே எண்ணுகின்றனர். இவ்வெண்ணம்தான் ஆடவருடன் பணியாற்றும் பெண்களுக்குச் சிக்கலைத் தோற்றுவிக்கக் காரணமாகின்றது என்பது இந்நா-வல்களினின்று புலப்படுகின்றது.

ஆடவர்கள் பெண்கள் வேலை பார்ப்பதையே மரியாதைக் குறைவானதாக எண்ணும் வழக்கம் இக்கருத்திற்குத் துணை செய்கின்றது. திருமணமாவதற்கு முன்னால் வேலை செய்து கொண்டிருந்த தன் மனைவியைத் திருமணத்திற்குப்பின் வேலை செய்தால் அது தனக்கு மரியாதைக் குறைவு என்று எண்ணி மிகுந்த குழந்தைகளுடனும் குறைந்த வருமானத்துடனும் போராடியும் மனைவியை வேலைக்கு அனுப்பாத கணவனைச் சூடாமணியின் 'வாழ்த்துவோம்' நாவல் காட்டுகின்றது (ப. 46).

ஆடவருடன் எழுந்த சிக்கலால் வித்யா வேலையை விட்டு-விடுகின்றாள்; விஜயா வேலையை ஏற்க மறுக்கின்றாள். இதற்-குக் காரணமாக இருந்த ஆடவரை யாரும் தண்டிப்பதாக நாவல்-களில் குறிப்பிடவில்லை. ஆடவருடன் இணைந்து பெண்கள் பணி-புரியும்பொழுது பாதிக்கப்படுகிறவர்கள் பெண்கள்தாம் என்ற கருத்து இவ்விரு நாவல்களினின்று பெறப்படுகின்றது. அதற்குச் சமுதாயத்தின் ஒருதலைக் கண்ணோட்டமே (partiality) காரணம் எனலாம்.

3. 7. 1. 8. 0. *அலுவல் மகளிர் வாழ்க்கை*

கல்வி ஒரு பெண்ணுக்குத் தன்னுரிமையையும் தன்னுடைய வாழ்க்கைத் துணையைத் தானே தேர்ந்தெடுத்துக்கொள்ளும் துணிவையும் தருகின்றது (Promilla Kapur, 1978, p.138). கல்வி கற்று அலுவல் மேற்கொள்ளும் பெண்கள் தங்கள் வாழ்வினைத் தாங்களே அமைத்துக்கொள்ளத் துணிகின்றனர்.

லக்ஷ்மி தாம் படைத்திருக்கும் பத்து அலுவல் மகளிருள் ஏழு பேர் காதலில் ஈடுபடுவதாகக் காட்டுகின்றார். சூடாமணி தாம் படைத்திருக்கும் எட்டு அலுவல் மகளிருள் ஆறு பேர் காதலில் ஈடுபடுவதாகச் சித்திரிக்கின்றார்.

அலுவலின் அனுபவம் தந்த தன்னம்பிக்கை அலுவல்மகளி-ருக்கு வாழ்க்கையிலும் துணை செய்கிறது. கொலைக்குற்றம் சாட்-டப்பட்ட தன் காதலனை விடுவிக்க முயற்சி எடுக்கின்றாள் விஜயா (அடுத்த வீடு); தன் விருப்பத்திற்கு மாறாகத் தன்னை மணந்து கொண்ட கணவனிடம் துணிந்து தன் வெறுப்பை வெளிப்படுத்தி அவனைத் திருத்துகின்றாள். சந்திரா (பெண்மனம்); தன் கணவன் சிறைக்குச் சென்ற காலத்து மனம் வருந்தாமல் திருமணமான பின் வேலையை விட்டதால் மீண்டுமொரு வேலைதேடித் துணி–

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாக வாழ்கின்றாள் ஹேமலதா (பெண்மனம்); காதலனுக்காகத் தன் வளர்ப்புக் குழந்தையை விட மறுத்துத் தன் அன்பை அவன் புரிந்துகொள்ளுமாறு செய்கின்றாள் வாசுகி (தீயினில் தூசு); தந்தை எதிர்த்தபொழுதும் வெளிநாட்டவனான காதலனைத் துணிவுடன் மணக்கின்றாள் அபிராமி (மானிட அம்சம்). தன் வாழ்வினை ஆராய்ந்து அமைத்துக் கொள்ளும் மனப்பான்மை அலுவல் மகளிருக்கு ஏற்படுவதற்கு அவர்கள் அலுவலினால் பெற்ற உலகநடைமுறை வாழ்க்கைபற்றிய அனுபவமும் காரண-மாகின்றது எனலாம். காதல் திருமணத்திற்குப் பெண்கள் அலுவல் மகளிராக இருக்கின்ற தகுதிநிலையும் ஒரு காரணமாகும் என்ற கருத்தும் இந்நாவல்களினின்று பெறப்படுகின்றது.

3.7.1.9.0 திருமணமான அலுவல்மகளிர் வாழ்வில்தான் மிகுதியான சிக்கல்கள் ஏற்பட வாய்ப்பிருக்கின்றன சமூகவிய-லாரும் திருமணமான அலுவல் மகளிருடைய வாழ்வுச் சிக்கல்-களையே மிகுதியாகக் காட்டுகின்றனர் (Kalarani, 1976. p. 26). திருமணமாகாத அலுவல் மகளிர் வாழ்வில் ஏற்படும் சிக்கல்-களைச் சமூகவியலார் காட்டவில்லை.

சமூகவியலார் போக்கிலிருந்து லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளும் வேறுபடுகின்றனர். இருவருடைய நாவல்-களிலும் திருமணமான அலுவல் மகளிர் சிக்கல் பற்றிய குறிப்-புக்கள் காணப்படவில்லை.

லக்ஷ்மியின் நாவல்களில் திருமணத்திற்கு முன்னர் அலுவல் பார்த்து, திருமணம் நிச்சயமானவுடன் வேலையை விட்டுவிட்ட மகளிரே காணப்படுகின்றனர். கணவன் சிறைக்குச் சென்றதால் தன் குழந்தையையும் தன்னையும் காப்பாற்றிக்கொள்ள அலு-வலை மேற்கொண்ட ஹேமலதாவும் அனாதை ஆசிரமத்தில் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளும் பணியில் ஈடுபட்டதால் அவள் அலுவலில் சிக்கல் எழக் காரணமில்லை.

சூடாமணியின் நாவல்களில் திருமணத்திற்குப் பின்னரும் அலுவலைத் தொடரும் பெண்ணாக அபிராமி (மானிட அம்சம்) மட்டுமே காணப்படுகின்றாள். அவள் பணிபுரியும் அலுவலகச் சூழல் நாவலில் சித்திரிக்கப்படவில்லை. கணவன் மேலாளராக இருக்கும் கம்பெனியிலேயே அபிராமியும் பணிபுரிவதால் அவ-ளுடைய அலுவலக வாழ்வில் சிக்கல் எழவில்லை. மற்ற நாவல்-களில் அலுவல்மகளிரின் திருமணத்திற்குப் பிந்திய வாழ்க்கை-யைச் சூடாமணி காட்டவில்லை. இவ்வாறு அமையும் இவ்-விருவருடைய படைப்புக்களைக் காணும்பொழுது இருவருக்குமே பெண்கள் திருமணமான பிறகும் பணிபுரிவதில் உடன்பாடில்லை என்று கருதத்தோன்றுகின்றது.

திருமணமாகியும் அலுவலை விடாது மருத்துவராகப் பணி-புரியும் லக்ஷ்மி இச்சிக்கலைச் சித்திரிக்காதிருப்பது கருதத்தக்கது*

---

*லக்ஷ்மி 25-8-80 அன்று ஆய்வாளருடன் நடத்திய பேட்டியில், ''என் தொழிலையே எழுதுவதில் எனக்குச் சலிப்பு ஏற்பட்டதால் அதையே பாத்திரமாக வைத்து எழுதத் தோன்றவில்லை,'' என்று கூறினார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

எனவே, இவ்விரு படைப்பாளிகளுக்கும் பெண்கள் பணிபுரிவதற்கான நோக்கங்களைக் கூறுவதுதான் கருத்தாக இருக்கின்றதேயன்றி, அலுவலில் எழும் சிக்கல்களைக் கூறுவது கருத்தாக இல்லை என்பது புலப்படுகின்றது.

இவ்விரு படைப்பாளிகளின் நாவல்கள் காட்டும் அலுவல் மகளிரைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம் :

அலுவல்	லக்ஷ்மி	சூடாமணி
1. பள்ளி எழுத்தர்	1	—
2. மருத்துவத்தாதியர்	—	2
3. பள்ளி ஆசிரியை	6	3
4. மருத்துவர்	1	—
5. பிற அலுவலகப்பணி	2	3
மொத்தம்	10	8

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இவ்விரு படைப்பாளிகளும் படைத்திருக்கின்ற அலுவல்மகளிர் பதினெட்டுப்பேருள் ஒன்பதின்மர் பள்ளி ஆசிரியைகளாகவே காணப்படுகின்றனர். இப் பெண்கள், பெண்கள் பள்ளியிலும், மழலையர் பள்ளியிலுமே பணியாற்றுகின்றவர்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றனர். ஆண்களுடன் இணைந்து பணியாற்றுவதினால் தோன்றும் சிக்கல் நிறைந்த வாழ்வை நீக்கிச் சிக்கல்களின்றி அமைதியான அலுவல் வாழ்வை ஆசிரியப்பணியின் மூலமே பெறமுடியும் என்ற கருத்து இரு படைப்பாளிகளிடத்தும் உள்ளது என இவர்தம் சித்திரிப்புக்களினால் கருதமுடிகின்றது. இதனைக் கலாராணியின் கள-ஆய்வும் ஆதரிக்கின்றது (Kalarani, !976, p.46). குழந்தையரோடு அன்றாடப் பழக்கமும் ஆசிரியத் தொழிலின் ஆக்கப்பணியும் யாருக்குமே இதமாயிருக்கும் என்று சூடாமணி 'உயர்வு உள்ளத்திலே' நாவலில் குறிப்பிடுவது (ப.141) இக்கருத்திற்கு அரண் செய்கின்றது. சூடாமணியின் நாவல்களில் பள்ளி ஆசிரியையரோடு மருத்துவத் தாதியரும் மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். உடலின் நோயைத் தீர்ப்பதில் வல்லவரான மருத்துவத் தாதியரையும், உள்ளத்தின் நோயைத் தீர்ப்பதில் வல்லவரான ஆசிரியைகளையும் தமக்கு மிகவும் பிடித்தவர்களாகக் கூறும் சூடாமணியின் கருத்து ஈண்டுக் கருதத்தக்கது.*

* ஆய்வாளர் சூடாமணிக்குக் கொடுத்த வினாப்பட்டியில் அவர் வெளியிட்ட கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இவ்விருவரும் படைக்கும் பதினெட்டு அலுவல்மகளிருள் ஐவரே அலுவலகங்களில் பணியாற்றுபவராகக் காணப்படுகின்றனர். அலுவலகப்பணி பெண்களின் கற்புக்குப் பாதுகாப்பற்றது என்று இருவரும் தத்தம் நாவலில் காட்டியுள்ளதை இதனுடன் ஒப்பிட்டுக் காணும்பொழுது 'உயிரினும் சிறந்ததாகக் கற்பைப் போற்றும் மரபு' (தொல், களவு, 22) பெண் எழுத்தாளர்களாகிய இவர்களால் பின்பற்றப்படுகின்றது என்று கருதமுடிகின்றது.

லக்ஷ்மி தன்னுடைய பெரும்பான்மையான நாவல்களில் ஒரு மருத்துவரைப் படைப்பதை வழக்கமாகவும், நோக்கமாகவும் கொண்டிருக்கின்றார். அதன் விளைவாக ஒரு பெண் மருத்துவரை இவர் தம் நாவலில் படைத்திருந்தாலும் (காஞ்சனையின் கனவு), அலுவல் மகளிரைச் சுட்டும் எட்டு நாவல்களில் ஒன்றில்தான் மருத்துவராகப் பெண் பணியாற்றுவது சுட்டப்படுகின்றது*.

3. 7. 2 0. *வீட்டுப்பணிகளில் ஈடுபடும் பெண்கள்*

கல்வி கற்ற பெண்கள் அலுவலகத்தில் பணியாற்ற, கல்வி கற்காத பெண்கள் தம் பொருளாதாரத் தேவைக்காகப் பிற வீடுகளில் சமையல் செய்வது, வீட்டை ஒழுங்குபடுத்துவது, நோயாளிகளைக் கவனித்துக் கொள்வது போன்ற பணிகளில் ஈடுபட்டுப் பொருள் ஈட்டி வருகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் மலிந்துள்ள இன்றைய நிலையில் சில நேரங்களில் படித்த பெண்களும் தம் கல்விக்கேற்ற வேலை கிடைக்காமல் உண்ண உணவும், இருக்க இருப்பிடமும் கிடைத்தால் போதும் என்று வீட்டுப் பணிப்பெண்களாக (servant-maids) பணியாற்ற முன்வருகின்றனர்.

வீட்டுப்பணிகளில் ஈடுபடும் பெண்களை லக்ஷ்மி 'அரக்கு மாளிகை', 'அடுத்த வீடு', 'பண்ணையார் மகள்' எனும் மூன்று நாவல்களில் சித்திரிக்கின்றார்.

'அரக்கு மாளிகை' நாவலில் தன்னைக் காப்பவர் யாருமில்லாத நிலையில், பி.ஏ.படித்திருந்தும் வேலை கிடைக்காத மஞ்சுளா நொண்டிப் பெண்ணாய் படுத்த படுக்கையாய் இருக்கும் சந்திராவிற்குப் பணிப்பெண்ணாகப் பணிபுரிய இசைவதை லக்ஷ்மி படைக்கின்றார். அப்பணியில் அவருக்குக் கிட்டிய பொருளாதாரப் பாதுகாப்பும், வீட்டுத்தலைவியின் நல்ல பண்புகளும் மஞ்சுளாவிற்கு அப்பணியின்மேல் ஈடுபாட்டை ஏற்படுத்துகின்றன.

காதலனை நம்பி வீட்டைவிட்டு ஓடிவந்து, அவனால் கைவிடப்பட்டு ஒரு பேராசிரியை வீட்டில் பணிப்பெண்ணாக இருக்கும் இந்திராணியை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் சித்திரிக்கின்றது. பேராசிரியையின் அன்பும், ஈகைப் பண்பும் இந்திராணிக்கு அப்பணியின்மீது ஈடுபாட்டை ஏற்படுத்துகின்றன.

சுலோச்சனா தன் காதலனுக்கு உளவு அறிவதற்காகப் பெற்றோரைவிட்டு ஓடிவந்து பண்ணையார் வீட்டில் பணிப்-

---

*ஆய்வாளர் லக்ஷ்மிக்குக் கொடுத்த வினாப்பட்டியில் அவர் இதனை விளக்குகின்றார். (காண்க : பின்னிணைப்பு, ப v).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்ணாக அமருகின்றாள் என்று லக்ஷ்மியின் 'பண்ணையார் மகள்' குறிப்பிடுகின்றது.

இம்மூவருள் தன்னைக் காப்பாற்றுவாரின்மையால் கல்வித் தகுதிக்கேற்ற வேலை கிடைக்காததாலும் இப்பணிக்கு வருகிறாள் மஞ்சுளா. காதலனால் ஏமாற்றப்பட்டு மீண்டும் வீட்டிற்குத் திரும்பிப்போக முடியாத நிலையில் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள இப்பணியை ஏற்கின்றாள் இந்திராணி. காதலனுக்காகப் பெற்றோரைப் பிரிந்து உளவறிவதற்காகச் சுலோச்சனா பணிப்பெண்ணாக நடிக்கின்றாள்.

இவர்கள் மூவருக்குமே பணக்கார இடத்தில், ஏழைகளுக்கு உதவும் எண்ணம் கொண்ட வீட்டுத் தலைவியரின்கீழ்ப் பணியாற்றுவதனால் இவர்களுக்குப் பொருளாதாரச் சிக்கல் எழவில்லை.

மஞ்சுளாவிற்குப் பணியாற்றவந்த இடத்தில் வீட்டுத்தலைவனின் தம்பியினால் சிக்கல் எழுகின்றது. இந்திராணி, சுலோசனா இருவரும் பெண்கள் மட்டுமே வாழும் இடத்தில் பணிபுரிவதால் இச்சிக்கல்கள் அவர்களுக்கு ஏற்படவில்லை.

புனித தெரசாக் கல்லூரி மாணவியர் வீட்டுப் பணிப்பெண்களைப்பற்றிய களஆய்வில், பொருளாதார தலைவனின் வறுமை அல்லது இறப்பு ஒரு பெண்ணை வீட்டுப் பணிப்பெண்ணாக மாற்றுகின்றது; இல்லத்தலைவியின் கல்வித் தகுதிநிலை உயரும்பொழுது பணிப்பெண்ணின் வருவாயும் உயர்கின்றது; ஒரே வீட்டிலேயே ஒரு பெண் பல ஆண்டுகள் பணிசெய்வதும, அவளுக்கு அங்குக் கிடைக்கும் வருமானத்தைப் பொறுத்தும் செய்யும் பணி அப்பெண்ணுக்கு விரும்பிய பணியாகின்றது ஆகிய கருதுகோள்களைத் துணையாகக் கொள்கின்றனர். (1975, p. 63). இக்கருதுகோள்கள் மஞ்சுளா (அரக்கு மாளிகை), இந்திராணி (அடுத்த வீடு), ஆகிய இருவருக்கும் பொருத்தமாகக் காணப்படுகின்றன. சுலோசனா உளவறிவதற்காகப் பணிப்பெண்ணானதால் இக்கருதுகோள்களை அவளுக்குப் பொருத்த முடியவில்லை.

படித்த பெண்கள் தமக்கேற்ற அலுவலகப்பணி கிட்டாத பொழுது வீட்டுப் பணிப்பெண்களாகின்றனர் என்ற கருத்தினைச் சமூகவியலார் கூறியதாகத் தெரியவில்லை.

3. 7. 3. 0. *சமூகப்பணிகளில் ஈடுபடும் பெண்கள்*

தனக்கென வாழாது பிறருக்கென வாழ்ந்து சமூக சேவைகளில் முனைந்து நிற்கும் பெண்களே இங்குச் சமூகப்பணிகளில் ஈடுபடும் பெண்கள் எனக் குறிப்பிடப்படுகின்றனர். சமுதாய முன்னேற்றமே இவர்களது குறிக்கோளாகக் காணப்படுகின்றது.

'பெண்மனம்', 'அடுத்தவீடு', 'சூர்யகாந்தம்' எனும் லக்ஷ்மியின் நாவல்களும், 'உயர்வு உள்ளத்திலே' எனும் சூடாமணியின் நாவலும் சமூகப்பணியில் ஈடுபடும் பெண்களைக் குறிப்பிடுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேளங்குடி ஆசிரமத்தில் தர்மவைத்தியசாலையும், அனாதை ஆசிரமும் நடத்திவரும் மருத்துவராகிய திருமதி ஜோசப்பைப் 'பெண்மனம்' நாவல் குறிப்பிடுகின்றது. அவருடைய அன்பு நோய், அழுக்கு, வறுமை இத்தனையையும் தாண்டியது. கண-வருடன் சேர்ந்து, ''மனதில் பொங்கிக்கொண்டிருக்கும் அன்பு ஒரே ஒருவருடைய சொத்துமட்டும் அல்ல, எடுக்க எடுக்கக் குறையாதது; மேலும் மேலும் பெருகி ஓடும் சக்தி அதற்கு உண்டு,'' (ப.219) எனும் உண்மையை உணர்ந்து பணியாற்றும் திருமதி. ஜோசப்பின் சமூகப்பணி மக்களால் போற்றப்படுகின்றது.

செல்வக் குடியிலே பிறந்து, செல்வருக்கு வாழ்க்கைப்பட்ட லீலாவதி சிறுவயது முதலே சமூகப்பணியில் ஈடுபட்டதை லக்ஷ்மி-யின் 'சூர்யகாந்தம்' நாவல் சித்திரிக்கின்றது. கணவனின் ஆதர-வும், தொடக்கத்தில் லீலாவதியின் பணியை வெறுத்துப் பின் அவளுடைய சமூகப்பணியால் கவரப்பட்டு அவளைத் தொடரும் மாமனார், மாமியாரின் ஆதரவும் லீலாவதியின் சமூகப்பணி சிறக்க வழிகோலுகின்றன. கணவனுடைய தீய நடத்தையால் வெறுப்புற்று அவனை விட்டுத் தனியே பிரிந்து வந்து பெண்கள் முன்னேற்றத்திற்காகப் பத்திரிகை நடத்தும் கௌரியை 'அடுத்த வீடு' நாவல் சித்திரிக்கின்றது. பெண்ணடிமையை வெறுக்கின்ற கௌரி நேரடியாகச் சமூக சேவையில் இறங்கவில்லை; பத்திரிகை-வழி அத்தொண்டைச் செய்வதை இந்நாவல் சுட்டுகின்றது. செல்வத்திலே வாழ்ந்த விதவை மனோன்மணி காதலில் தோல்-வியுற்று சமூகப் பணியில் ஈடுபடுவதையும் 'அடுத்த வீடு' நாவல் காட்டுகின்றது. வீட்டுக் கடமைகளை குறைக்காமல், அதே-சமயம் நமக்கு அறிவும் செயலும் வசதியும் ஆண்டவன் அளித்-திருப்பது பிறருக்கு உதவவே என்ற வள்ளன்மையோடு சமூக-சேவையில் ஈடுபடும் சாரதாவைச் சூடாமணியின் 'உயர்வு உள்ளத்-திலே' நாவல் குறிப்பிடுகின்றது.

திருமதி. ஜோசப், லீலாவதி, சாரதா மூவரும் திருமணமா-னவர்கள். இவர்கள் கணவன்மாரின் உறுதுணையோடு இப்பணி-யில் ஈடுபடுகின்றனர். கணவனைப் பிரிந்த கௌரியும், கணவனை இழந்த மனோன்மணியும் சமூக சேவையில் ஈடுபடுகின்றனர்.

திருமணமாகாத பெண்கள் யாரும் சமூக சேவையில் ஈடு-பட்டதாக இவ்விரு படைப்பாளிகளும் குறிப்பிடவில்லை; இன்-றைய நாகரிக உலகில் திருமணமாகாத இளம் பெண்கள் சமூகப்-பணியில் மனம் ஒன்றி ஈடுபடமாட்டார்கள் என்று எண்ணித் திருமணமானவர்களையே சமூகப்பணியில் ஈடுபடுவதாக இருவ-ரும் காட்டுகின்றார்களோ என்று கருதத் தோன்றுகின்றது.

திருமணமான பெண்கள் சமூகப்பணி செய்வதற்கு வீட்டுக் கடமைகளில் தவறாமையும், கணவனின் ஆதரவும் தேவை என்பது இப்படைப்பாளிகளின் கருத்தாகக் காணப்படுகின்றது.

3. 7. 4 0. லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் உழைக்கும் பெண்கள் நிலையை ஆராயும்போது பின்வரும் முடிவுகள் புல-னாகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உழைக்கும் பெண்கள் அலுவலகப்பணியில் ஈடுபடுவோர், வீட்டுப்பணியில் ஈடுபடுவோர், சமூகப்பணியில் ஈடுபடுவோர் என்று மூன்று வகைப்படுவர். பொருளுக்காக அலுவலை மேற்கொள்வோர், குடும்பத்தலைவர் இறப்பினாலும், கணவன் பிரிந்து சென்றதனாலும், தன் கல்வியினைத் தொடர்வதற்காகவும், தம்மைக் காப்பவர் இன்மையாலும், குடும்பத்தலைவர் வருவாய் குடும்பத்திற்குப் போதாமையினாலும் அலுவலை மேற்கொள்கின்றனர்.

கவலைகளை மறப்பதற்காக அலுவலை மேற்கொள்வோரை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். செல்வக் குடிப் பெண்கள் பொழுது போக்கிற்காக அலுவலை மேற்கொள்கின்றனர். திருமணமாகும்வரை அலுவல் பார்த்த சில பெண்கள் திருமணம் நிச்சயிக்கப்பட்டவுடன் அலுவலை விட்டுவிடுகின்றனர். உடற்குறையினால் ஏற்பட்ட தாழ்வு மனப்பான்மையைப் போக்கும் மருந்தாக அலுவல் பெண்களுக்குப் பயன்படுகின்றது.

ஆடவருடன் பணியாற்றும் அலுவல் மகளிர்க்கு ஆடவரால் சிக்கல்கள் தோன்றுகின்றன ஒரே அலுவலகத்தில் ஆணும் பெண்ணுமாகப் பணியாற்றும்பொழுது மேலாளர் தன்கீழ் வேலைபார்க்கும் பெண்ணின் கற்பை வேலைக்குப் பரிசாகக் கேட்பதை லக்ஷ்மி குறிப்பிடுகின்றார். அலுவல் மகளிருக்குக் குடும்பத்தில் கருத்துக்கூறு இடைமோதல் ஏற்படுகின்றது கருத்துக்கூறு இடைமோதலில் தோல்வியுற்ற பெண் வேலையை விடுகின்றாள். அலுவல் பெண்களுக்குத் தன்னம்பிக்கையையும், வாழ்வினைத் தீர்மானித்துக்கொள்ளும் துணிவையும் அளித்துள்ளது. மனவெழுச்சிகளுக்கு வெளியீடாகவும் அலுவல் அமைந்துள்ளது.

திருமணமான அலுவல் மகளிர் பற்றிய சித்திரிப்பு இரு படைப்பாளிகளின் நாவல்களிலும் காணப்படாமையினால் அவர்களுக்கு அதில் உடன்பாடில்லை என்ற கருத்துப் புலப்படுகின்றது. இருவரின் நாவல்களும் சித்திரிக்கும் பதினெட்டு அலுவல் மகளிருள் ஒன்பது பேர் பள்ளி ஆசிரியைகளாகக் காணப்படுகின்றனர். இருவரும் சித்திரிக்கும் அலுவல்மகளிர் பதினெட்டுப்பேருள் ஐவரே அலுவலக மகளிராகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர்.

ஆடவருடன் பணியாற்றுவதில் கற்புக்குத் தீங்கு விளைய இடம் உண்டாதலால் இரு படைப்பாளிகளும் அலுவலக மகளிரைக் குறைவாகச் சித்திரித்துள்ளனர் என்று கருதமுடிகின்றது.

பொருளாதாரத் தலைவனான குடும்பத்தலைவன் இறப்பும், தன்னைக் காப்பாற்றுவாரின்மையும் ஒரு பெண்ணைப் பிற வீட்டுப் பணிப்பெண்ணாக மாற்றிவிடுகின்றன. வீட்டுப் பணிப்பெண்களுக்கும் வீட்டில் உள்ள ஆடவரால் கற்புக்குத் தீங்கு விளைகின்றது. வீட்டுத்தலைவியின் நல்ல பண்புகள், நல்ல வருவாய் முதலியவை வீட்டுப் பணிப்பெண்ணைக் கவர்கின்றன.

சமூகப்பணியில் ஈடுபடும் மகளிருக்குக் கணவனின் ஆதரவும் நல்ல செல்வ நிலையும் இருப்பது அவர்களை அத்தொழிலில் விளக்கமுறச் செய்கின்றது. திருமணமாகாத பெண்கள் சமூக சேவைகளில் ஈடுபடுவதை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.8. விதவையர் நிலை

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

இவ்வியல் சமுதாயத்தில் விதவையர் நிலையை விளக்கி, விதவையரை இளம் விதவையர், முதிய விதவையர் என இரு வகைப்படுத்தி ஆராய்கின்றது. இளம் விதவையரில் மறுமணம் செய்பவர் நிலையையும், மறுமணம் செய்யாதவர் நிலையையும், குழந்தை உண்மை, குழந்தை இன்மை என்ற இரு அடிப்படை-களில் ஆராய்கின்றது. இளம்விதவையரின் மறுமணத்திற்கான காரணங்கள் சமூகவியலார் கருத்துக்களோடு ஒப்பிடப்படுகின்றன. இளம் விதவையருடைய வாழ்வில் ஏற்படும் திசைமாற்றம் அவர்-கள் வாழ்க்கையில் பெறும் இடத்தைப் புலனாக்குகின்றது. இளம் விதவையர் மறுமணம் செய்துகொள்ளத் துணிவதற்கு அண்ணன், குழந்தை, மணமகன், உயர்கல்வி, நகரச்சூழல் ஆகியன கார-ணங்களாகக் காணப்படுகின்ற தன்மை விளக்கப்படுகின்றது. இளம்விதவைச் சித்திரிப்பில் லக்ஷ்மி சமுதாய மரபைச் சார்ந்தி-ருக்க, சூடாமணி மரபுமீறிய நிலையைச் சார்ந்திருப்பது ஒப்-பிடப்பட்டுத் தெளிவுபடுத்தப் படுகின்றது. குழந்தையையுடைய முதிய விதவையர் நிலையும், குழந்தைகளற்ற முதிய விதவை-யர் நிலையும் ஒப்பிடப்பட்டு விளக்கப்படுகின்றன. இறுதியில் இவ்வியலில் கண்டறிந்த உண்மைகள் தொகுத்துத் தரப்படு-கின்றன.

3. 8. விதவையர் நிலை

3. 8 0. 1. இந்து சமயம் விதவைகளுக்கு ஒரு புனித-மான இடத்தைக் கொடுத்திருந்தது. விதவைகள் சமுதாயத்தால் ஒதுக்கப்படவில்லை (M. K. Gandhi, 1942, p.57). வேத காலத்-தில் பெண்களுக்குச் சொத்துரிமையும் விதவைகளுக்கு மறுமணம் செய்துகொள்ளும் உரிமையும் அளிக்கப்பட்டிருந்தன. குப்தர்கள் காலத்தில்தான் 'விதவையர் மறுமணம் செய்துகொள்ளக்கூடாது; அவர்கள் எஞ்சிய வாழ்நாட்களைத் தவத்திலும், துறவு வாழ்க்-கையிலுமே செலவிடவேண்டும்' என்ற நிலை ஏற்பட்டது (P. N. Chopra, 1973 p. 65,).

குப்தர்கள் காலத்திற்கு முன்னதாகிய சங்ககாலத்தில் வித-வைகள் மறுமணம் செய்துகொண்டதாகக் குறிப்புக்கள் காணப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படவில்லை. கணவனை இழந்த மகளிர் தீப்பாய்தலும், கைம்மை நோன்பு நோற்றலும் சங்ககால வழக்கமாகக் காணப்பட்டன (புறம், 246). விதவை மறுமணம் செய்யக்கூடாது எனக் கட்டுப்பாடு இருந்ததாகக் குறிப்புக் காணப்படவில்லை. விதவையரின் மேற்சொன்ன வாழ்க்கைமுறை அப்பெண்களின் விருப்பத்திற்கு ஏற்ப அமைந்திருந்தது என அப்பாடல் வழியாகப் புலப்படுகின்றது.

மரபுக் கண்ணோட்டத்தின்படி, ஒரு பெண்ணின் வாழ்க்கையில் எவ்வாறு பிறப்பும் இறப்பும் ஒருமுறைதான் நிகழமுடியுமோ, அதுபோன்றே திருமணமும் நிகழமுடியும் என்றும், ஒரு விதவை தன்னைத்தானே ஒறுத்துக்கொண்டும், துறவு வாழ்வை மேற்கொண்டும் வாழவேண்டும் என்றும் கருதப்பட்டன. மனுநீதி நூல்கள் ஒரு பெண்ணின் கணவன் இறந்துவிட்டால் அவள் மற்றொரு ஆடவன் பெயரை உச்சரிக்கக்கூடாது என வலியுறுத்தின (L. S. S. O' Malley, 1976, p. 146).

இந்துமத விதிகளின்படி விதவை முகத்திரையிட்ட பெண் துறவியாக உலகத்தையே துறக்கவேண்டும்; தலைமுடியைக் களைந்து அணிகலன்களை நீக்கி, எளிமையான ஆடைகளையே உடுக்கவேண்டும்; அவளுடைய வரவு தீய நிமித்தத்தின் அறிகுறி எனக் கருதப்பட்டதால், அவள் குடும்பத்தில் நன்னிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளக்கூடாது; அனைத்துத் துன்பங்களுக்கும் மேலாக அவள் கணவனின் இறப்பு அவள் முற்பிறப்பில் செய்த தீமைகளின் விளைவு என்று கருதப்பட்டது (L. S. S. O'Malley, 1976, p. 148). உலகத்தாரால் காலங்காலமாக இவ்வாறு ஒதுக்கப்படும் விதவையர் நிலை இரங்கத்தக்கதாகக் காணப்படுகின்றது.

3. 8. 0. 2. லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளின் நாவல்களும் விதவையரின் சமுதாய நிலையைச் சித்திரிக்கின்றன. லக்ஷ்மியின் (1) அடுத்த வீடு, (2) நாயக்கர் மக்கள், (3) பவானி, (4) பண்ணையார் மகள், (5) காஞ்சனையின் கனவு, (6) சூர்யகாந்தம், (7) மிதிலா விலாஸ், (8) ஸ்ரீமதி மைதிலி, (9) லட்சியவாதி ஆகிய ஒன்பது நாவல்களும், சூடாமணியின் (1) மனத்துக்கினியவள், (2) நீயே என் உலகம், (3) செந்தாழை, (4) உயர்வு உள்ளத்திலே, (5) அஞ்சன விழிகள் ஆகிய ஐந்து நாவல்களும் விதவையர் நிலையைச் சுட்டுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இப்பதினான்கு நாவல்களினின்றும் விதவையர் நிலையைக் கீழ்க்கண்டவாறு பகுத்துக் காணலாம்.

- விதவை நிலை
  - இளமையில் விதவை
    - மறுமணம் செய்பவர்
      - குழந்தை உண்மை
      - குழந்தை இன்மை
    - மறுமணம் செய்யாதவர்
      - குழந்தை உண்மை
      - குழந்தை இன்மை
  - முதுமையில் விதவை
    - மறுமணம் செய்யாதவர்
      - குழந்தை உண்மை
      - குழந்தை இன்மை

விதவையரை மேற்கூறியவாறு இளமையில் விதவையானவர் என்றும், முதுமையில் விதவையானவர் என்றும் இரண்டாகப் பகுத்துக் காணலாம். விதவையர் மறுமணத்திற்குச் சட்டம் இசைவு தந்ததால் (Hindu Widow Remarriage Act, 1856) இளம் வயதில் விதவையான பெண்களில் சிலர் மறுமணம் செய்து கொண்டனர். மறுமணம் செய்துகொள்ளாமலும் பலர் இருந்தனர். எனவே, இளம் விதவையரை

1) மறுமணம் செய்பவர்

2) மறுமணம் செய்யாதவர்

என்று இரு பிரிவாகப் பிரித்துக் காணமுடிகின்றது. இப்பெண்களுக்குக் குழந்தை இருப்பதும், இல்லாதிருப்பதும் அவர்கள் வாழ்வில் தோன்றும் சிக்கல்களுக்குக் காரணமாகின்றது.

முதுமையில் விதவையான பெண்கள் வாழ்க்கையை வாழ்ந்து அனுபவித்ததாலும், மறுமணத்திற்குரிய வயதைக் கடந்ததனாலும் மறுமணம் செய்துகொள்வதில்லை. வளர்ந்த தம் குழந்தைகளுடனோ, உற்றாருடனோ எஞ்சிய வாழ்நாளைக் கழித்து விடுகின்றனர். அவர்களுடைய குழந்தைகள் அவர்தம் வாழ்வில் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றனர்.

3. 8. 1. 0 *இளமையில் விதவை*

இந்து சமயத்தாரிடை இளம்வயதில் ஒரு பெண் விதவையானால் அவளுடைய வாழ்வு அத்துடன் முடிந்துவிடுகின்றது. சமூகவியலறிஞர் 'சமுதாய மேட்டுக் குடியினரில், ஒரு பெண் திருமணத்தின் வழியாக நிலையான மீறத்தகாத உறவுகளில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நுழைகின்றாள்; மேட்டுக்குடி விதவையர் மறுமணம் செய்துகொள்ளக்கூடாது; அப்பெண்களுக்கு மணவிலக்கும் (divorce) தடை செய்யப்பட்டுள்ளது. இத்தகைய நிலை கீழ்ச்சாதிப் பெண்களுக்கு இல்லை. அவர்கள் மணவிலக்கோ அல்லது மறுமணமோ செய்துகொள்ளும் உரிமை பெற்றவராக உள்ளனர் என்று (David G. Mandelbaum, 1972, p. 223) சாதியின் பெயரால் பெண்கள் இழந்த உரிமைகளையும், அடையும் உரிமைகளையும் காட்டுகின்றார். மேட்டுக்குடிப் பெண்ணாயினும் கீழ்சாதிப்பெண்ணாயினும் ஒரு விதவைக்கு மறுமணம் செய்துகொள்ளும் உரிமை கொடுக்கப்படவேண்டும் என மகாத்மா காந்தி வலியுறுத்துகின்றார். ''ஒரு பெண் இளவயதில் விதவையானால் அவளுக்கு மீண்டும் திருமணம் செய்துகொடுப்பது அவள் பெற்றோரின் கடமை என்று நான் எண்ணுகின்றேன். ஏனைய விதவைகளும் முழுமையான கைம்மை வாழ்வை நடத்த இயலவில்லை என எண்ணினால் அவர்களும் மனைவியை இழந்த ஆடவரைப்போன்று மறுமணம் செய்துகொள்ளும் உரிமையுடையவர்,'' (M. K. Gandhi, 1942, p. 57) என்று விதவையர் மறுமணம் செய்துகொள்வதற்கு உரிமையுடையவர் என வற்புறுத்துகின்றார் மகாத்மா காந்தி.

3. 8. 1. 1. *மறுமணம் செய்பவர்*

விதவை மறுமணத்தை மூன்று காரணங்களுக்காக ஏற்றுக் கொள்ளலாம், என்பார் சமூகவியலறிஞர்.

(1) ஒரு விதவை யாரைச் சார்ந்து வாழ்கின்றாளோ அவருடைய சுமையைக் குறைப்பதற்காகவும்,

(2) இளமையாக இருப்பதால் கட்டாயம் அவள் மறுமணம் செய்து கொண்டுஇழந்த எல்லாவற்றையும் மீண்டும் பெறுவதற்காகவும்

(3) மறுமணம் அவளைக் கீழான ஒழுக்கத்திற்குச் செல்லாமல் தடுப்பதற்காகவும் விதவை மறுமணத்தை ஏற்றுக் கொள்ளலாம் (G. N. Ramu, 1977, p 5). இக்கருத்தைச் சமூகவியலறிஞர் கோரும் ஆதரிக்கின்றார் (M. S. Gore, 1968, p.216).*

விதவையருடைய மறுமணம்பற்றிச் சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே' எனும் நாவல் சித்திரிக்கின்றது.

3. 8 1. 1. 1. *குழந்தை உண்மை*

'உயர்வு உள்ளத்திலே' நாவல் திருமணமாகி இரண்டாண்டுகளில் ஒரு மகளுக்குத் தாயாகிப் பின் விதவையான ஒரு பெண் பெற்றோரின் எதிர்ப்புக்கிடையேயும் அண்ணனின் ஆதரவில் மறுமணம் செய்துகொள்வதைக் குறிப்பிடுகின்றது.

'உயர்வு உள்ளத்திலே' நாவலில் வரும் கௌரி படித்துப் பட்டம் பெற்று வேலை பார்ப்பதற்கோ, உலகில் தனியாக வாழ்-

---

* காண்க : பின்னிணைப்பு 4

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வதற்கோ துணிவற்றவள்; அவள் ஒரு குடும்பப்பெண்ணாய்; மனைவியாய், தாயாய், வீட்டுக்கு விளக்காய் வாழப் பிறந்தவள், இன்னொன்றுடன் ஒட்டிக்கொண்டுதான் அவளால் வாழமுடியும் (ப. 109). இப்பண்புகள் அவளுடைய மறுமணத்திற்குக் காரணங்களாகின்றன. ''பாதுகாப்புத் தேவை, பொருளாதார நிலமை, சம்பந்தப்பட்ட பெண்ணின் இயல்பு, இம்மாதிரி எத்தனையோ காரணங்கள். வெறும் உடலிச்சைதான் காரணமாய் இருக்க வேண்டுமென்று கொள்வது தவறு'', (ப. 110) என்று விதவை மறுமணத்திற்குரிய காரணங்களைக் கௌரியின் அண்ணன்வழி கூறும் சூடாமணி, கணவனின் அரவணைப்பு ஒன்றில்தான் தழைக்க முடிகின்ற இயல்புடைய பெண்கள் இளவயதில் கைம்மையுற்றால் மறுமணம் செய்துகொள்வதில் தவறேதும் இல்லை எனச் சுட்டிக்காட்டுகின்றார்.

3. 8. 1 1. 2. *குழந்தை இன்மை*

மறுமணம் செய்துகொள்ளும் விதவையருக்கு முதல் திருமணத்தின் வழி குழந்தை இல்லையெனில் மறுமணத்தின்போது அவர்கள் வாழ்வில் சிக்கல் இல்லையென்றாகிவிடுகின்றது. குழந்தை இன்றி இளம் விதவையான பெண் மறுமணம் செய்து கொள்வதைச் சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே' நாவல் காட்டுகின்றது. இந்நாவலில் திருமணமான சில மாதங்களிலேயே கணவனை இழந்த பரிமளா சித்திரிக்கப்படுகின்றாள். பரிமளா குழந்தைப்பேறு அற்றவள்; விதவையானபின் ஆசிரியைப் பயிற்சிபெற்றுப் பணியாற்ற விரும்புகின்றாள். மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணம் பரிமளாவுக்கு இல்லையாயினும், சமுதாயம் விதவைகளை நடத்தும் முறைகண்டு குமுறி (ப. 145) அக்கொடுமையிலிருந்து தப்பித்துக்கொள்வதற்காகத் தன்னைமணக்க முன்வரும் இளைஞனைத் தன் அண்ணனின் உதவியினால் மணந்துகொள்கின்றாள்.

'உயர்வு உள்ளத்திலே' நாவல் சித்திரிக்கும் கௌரி, பரிமளா ஆகிய இருவருள் கௌரி இளம் விதவைத்தாய்; பரிமளா குழந்தையற்றவள். இருவருமே அண்ணனின் உதவியால் மறுமணம் செய்து கொள்கின்றனர். கௌரியின் மறுமணத்திற்கு அவளுடைய குழந்தை ஒரு தடையாகக் காணப்படவில்லை. ஆனால் அக்குழந்தை ராதா மணப்பருவம் அடையும்பொழுது உண்மையை அறிந்து கொள்கின்றாள்; தாயின் செயலை வெறுக்கின்றாள் (ப. 113).

இங்கு மறுமணம் செய்துகொள்ளும் இரு பெண்களும் தம் குடும்பத்தாருக்குச் சுமையாக இல்லை. எனினும் கௌரி தனித்து வாழமுடியாத இயல்புடையவள்; பரிமளா சமுதாயத்தில் கொடுஞ்செயல்களால் துன்பப்பட்டவள். இவ்வியல்புகளே இவர்களை மறுமணத்திற்குத் தூண்டின எனலாம்.

3. 8. 1. 1. 3. விதவை மறுமணத் தடைக்கு ஆணும் காரணமாகின்றான் என்பதைப், ''பெண்ணை ஆண் தன் உடைமை என்று கருதவில்லையானால், தன் வாழ்நாளுக்குப் பிறகும் மனைவி

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தன் நினைவு ஒன்றுடனேயே தனித்து வாழ வேண்டும் என்று கணவனும், இவள் இன்னொருவனின் மனைவியாய் இருந்தவளாயிற்றே என்ற தயக்க எண்ணத்துடன் வேறு ஆண்கள் நினைப்பதற்கும் இடம் உண்டாகுமா?" (பக். 127—128) என்று சூடாமணி கௌரியின் கணவன் வழி காட்டுகின்றார்.

3. 8. 1. 1. 4. விதவை மறுமணத் தடைக்குப் பழமையைப் போற்றும் மரபும் ஒரு காரணமாகின்றது. 'உயர்வு உள்ளத்திலே' நாவலில், ''கணவனை இழந்து துணையற்று வாடும் பெண்களுக்கு அனுதாபம் காட்டாதது மட்டுமன்றி அத்தகைய ஒருத்தியை எதிரே கண்டாலும் அபசகுணம் என்று மனிதத் தன்மையற்ற குரூரத்துக்குப் பெண்ணை ஆளாக்கி, அவள் தனிவிருப்பம் எப்படி இருந்தாலும் மற்ற எதனோடும் ஒப்புநோக்கி நியாயம் வழங்காமல், அவள்மீது மரபின் பெயரால் கைம்மையை ஒரு நிரந்தரச் சாபக்கேடாகத் திணித்துச் சிறுமைப் படுத்திவைக்கும் சமூகத்தை மீறி ஒரு தனிப்பட்ட, துணிவான, தூய்மைக்குப் பங்கமில்லாத எத்தனையோ இடங்களில் இயல்பாக நடக்கின்ற" (ப.127) ஒன்றாகிய இம்மறுமணம் தவறே அல்ல என்று கௌரியின் கணவன்வழி மறுமணத்தை நியாயப்படுத்துகின்றார் சூடாமணி.

3 8. 1. 1. 5. முகமதிய இனத்தாரிடை இயல்பாகக் காணப்படுகின்ற விதவை மறுமணத்தை இந்து சமயத்தார் எதிர்க்கின்றனர் என்பதையும் 'உயர்வு உள்ளத்திலே' நாவல் குறிப்பிடுகின்றது (ப.125). பல புரட்சிக் கருத்துக்களைத் ணிவாக ஏற்றுக்கொள்ளும் இளைய தலைமுறையினரே விதவை மறுமணத்தை எதிர்ப்பதையும் இந்நாவலில் சூடாமணி சுட்டிக் காட்டுகின்றார் (ப.118-119). விதவை மறுமணம் போன்ற சமுதாயப் புரட்சிக்கு முதலில் எதிர்ப்பு ஏற்படத்தான் செய்யும்; ஆனால் இந்தப் பாதிப்புக்களைக் கண்டு அஞ்சினால் மறுமலர்ச்சி தோன்ற முடியாது என்பதைச் சூடாமணி, ''புரட்சி செய்வது என்றால் பாயசம் குடிப்பது போலவா இருக்கும்? .... முன்னேற்றம் என்பது பின்னால் வருபவர்களுக்குத்தான் ஆனால் அதற்கு வழியமைப்பவர்களோ முதலில் எதிர்ப்பை மீறி நியாயமான புதியதைத் துணிந்து செய்பவர்கள்தான்,'' என இந்நாவலில் குறிப்பிடுகின்றார் (ப.129). 'உயர்வு உள்ளத்திலே' நாவலில் சூடாமணி விதவை மறுமணத்தை நியாயப்படுத்துவதன் வாயிலாக விதவை மறுமணத்தை இவர் ஆதரிக்கின்றார் என்பதை அறிந்துகொள்ள இயலுகின்றது. லக்ஷ்மி விதவை மறுமணத்தைத் தம் நாவல்களில் சித்திரிக்கவில்லை.

3. 8. 1. 2. *மறுமணம் செய்யாதவர்*

கணவன் இறந்த பின்னர் தன் குழந்தையுடன் தனித்து வாழத் துணிவுள்ள இளம் விதவையர் மறுமணம் செய்துகொள்ளாமலே வாழ்கின்றனர். இவர்களுடைய மனஉறுதி இவர்களுக்குத் தனித்து வாழத் துணிவை அளிக்கின்றது. இத்தகைய இளம் விதவையரை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' எனும் நாவலும், சூடாமணியின் 'நீயே என் உலகம்' எனும் நாவலும் சித்திரிக்கின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 8. 1. 2. 1. குழந்தை உண்மை

இளம்வயதிலேயே விதவையாகித் தன் இரு மைந்தர்களுடன், கணவன் விட்டுப்போயிருந்த கொஞ்சம் சொத்துக்களைக் கொண்டு தனிமையில் வாழும் கோதையை 'நாயக்கர் மக்கள்' நாவலில் லக்ஷ்மி படைக்கின்றார். கோதையின் இரு மைந்தர்களும் அவளுடைய தமையன்மார் பொறுப்பில் இருந்ததால் பிள்ளைகளைப்பற்றிய கவலை அவளுக்கு இல்லை. மூத்த மகன் பெரியவனானதும் அவனது பாதுகாப்பில் கோதை வாழத் தொடங்குகின்றாள்.

'நீயே என் உலகம்' நாவலில் வரும் தங்கமும் ஒரே மகனுடன் இளவயதில் விதவையானவள். அண்ணனின் பாதுகாப்பில் வாழும் தங்கத்துக்கோ அவள் அண்ணனுக்கோ அவளுடைய மறுமணத்தைப் பற்றிய எண்ணம் எதுவும் இல்லை. தன் மகனையே உலகமாக எண்ணி வாழும் தங்கத்தைச் சூடாமணி சித்திரிக்கின்றார்.

லக்ஷ்மியால் படைக்கப்படும் கோதையம்மாள் கைம்மையை இயல்பு என எண்ணி வாழ்கின்ருள்; அவள் வாழ்வு சீரான வாழ்வாகக் காணப்படுகின்றது.

சூடாமணியால் படைக்கப்படும் தங்கம் விதவையான பின்னர், தன் வாழ்க்கையையே சிக்கலாக ஆக்கிக் கொள்கின்ருள். அவருடைய துன்ப உணர்வு எல்லோரையும் துன்புறுத்துவதில் நிறைவு அடைகின்றது. தங்கம் தன்னிடமும் தன் மகனிடமும் அன்பைப் பொழியும் அண்ணனைத் துன்புறுத்தித் (ப. 71) தனியே வாழத் தொடங்குகின்றாள் தனக்குப் பாதுகாப்பு தன் மகன் மட்டுமேதான் என்ற எண்ணம் அவளுள் நிரம்பிஉள்ளதால் மகனிடம் மிகுதியான அன்பைச் செலுத்தி, அவ்வன்பை மகனே வெறுக்கும் நிலைக்கு வந்துவிடுகின்றாள். இந்த அன்புவெறி தாயையும் மகனையுமே பிரித்துவிடுகின்றது.

கோதையம்மாளும் (நாயக்கர் மக்கள்), தங்கமும் (நீயே என் உலகம்) இளவயதில் விதவையானாலும் மறுமணம் பற்றிய எண்ணம் இருவரிடமும் காணப்படவில்லை; தனித்து வாழக்கூடிய மனஉறுதி இருவரிடமும் காணப்படுகின்றது. கோதை யாருடைய ஆதரவிலும் இல்லாமல் தனித்தே வாழ்கின்றாள்; தங்கம் சிறிது காலம் அண்ணனுடன் வாழ்ந்தாலும் பின்னர் அண்ணனைப் பிரிந்து தனியே வாழ்கின்றாள். இருவருடைய மனஉறுதியும், வாழ்க்கையில் இருவருக்கும் உள்ள குழந்தைகளாகிய பிடிப்புமே மறுமண எண்ணத்தை இவர்களிடத்துத் தூண்டாமலிருந்தமைக்குக் காரணங்களாகின்றன என உணரமுடிகின்றது.

3. 8. 1. 2. 2. குழந்தை இன்மை

இளம்விதவையரில் குழந்தை அற்றவர்களைப்பற்றி லக்ஷ்மியின் (1) அடுத்த வீடு, (2) நாயக்கர் மக்கள், (3) பவானி, (4) பண்ணையார் மகள், (5) லட்சியவாதி ஆகிய நாவல்கள் காட்டுகின்றன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெரிய பணக்காரனுக்கு மூன்றாம் தாரமாக மணமுடித்துக் கொடுக்கப்பட்ட ஜகதாவை 'அடுத்த வீடு' நாவல் சித்திரிக்கின்றது. ஜகதா மணமுடித்த பத்து ஆண்டுகளில் விதவையாகின்றாள். குழந்தைகளற்ற அவள் மறுமணம் செய்து கொள்ளவில்லை. பணச்செருக்குக் கொண்டு ஆடம்பரமாக வாழ்ந்த ஜகதா பணமெல்லாம் அழிந்த நிலையில் பைத்தியமாகின்றாள் என்று லக்ஷ்மி படைக்கின்றார்.

'அடுத்த வீடு' நாவலிலேயே பதின்மூன்று வயதில் திருமணம் முடிக்கப்பட்டு பதினான்கு வயதில் விதவையான மனோன்மணியையும் படைக்கின்றார் லக்ஷ்மி. அத்தையினால் நகரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட மனோன்மணி நகரக் கவர்ச்சிகளில் மயங்கி விதவைக் கோலத்தைவிட்டு பி. ஏ. முடிக்கின்றாள்; தன்னைத் தவிர உலகில் உள்ள மற்ற எல்லோரும் மகிழ்ச்சியாக வாழ்வதாக எண்ணும் மனோன்மணி, மகிழ்ச்சியுடன் இருக்கும் அனைவரிடமும் பொறாமை கொள்கின்றாள். மனோன்மணியின் சொத்துக்காக அவளை விரும்புவதைப்போல் நடிக்கும் கயவனிடம் காதல் கொண்ட அவள் அவனை மணக்கவும் துணிகின்றாள். இறுதியில் அவன் உண்மை வடிவம் புலப்பட மீண்டும் விதவைக் கோலம் பூண்டு சமூகத்தொண்டு செய்கின்றாள் என லக்ஷ்மி மனோன்மணியின் விதவை வாழ்வைச் சித்திரிக்கின்றார்.

பணத்துக்காகக் கிழவனுக்கு மணமுடிக்கப்பட்ட சூடாமணி திருமணம் முடிந்த இரண்டு மாதங்களிலேயே விதவையாவதை லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்' நாவல் சித்திரிக்கின்றது. சூடாமணியின் காதலன் அவளை மறுமணம் செய்து கொள்ள முன்வரும்பொழுது முதலில் இசைந்து வீட்டைவிட்டு வெளியேறும் அவள் பின்னர் அஞ்சுகின்றாள். "ஊரிலிருந்து கிளம்பும்பொழுது இருந்த திடமனம் இப்பொழுது எனக்கில்லை. நாம் செய்வது தவறு என்று எனக்குத் தோன்றுகின்றது. வாழ்க்கையில் நான் சுகம் காணக்கூடாது என்பது இறைவன் தீர்ப்பு. அதைத் தவிர்க்க நாம் முயற்சிப்பது வீண்," எனச் சூடாமணி கூறுவது அவளது அச்ச உணர்வைப் புலப்படுத்துகின்றது (ப 455).

திருமணமான ஆறாவது மாதத்திலேயே விதவையாகி அண்ணன் இல்லத்திற்கு வந்து அண்ணனின் குழந்தைகளை வளர்ப்பதில் மனநிறைவு கொள்ளும் சிவகாமியை லக்ஷ்மியின் 'பவானி' நாவல் சுட்டுகின்றது.

இளவயதில் விதவையாகித் தன் தம்பிகளையே குழந்தைகளாக வளர்த்து வரும் பாகீரதியை லக்ஷ்மியின் 'லட்சியவாதி' நாவல் சித்திரிக்கின்றது.

இளவயதில் விதவையான பின்னர் பண்ணையாருடன் கள்ள நட்புக் கொண்டு வாழும் ஷண்பகவல்லியைப் 'பண்ணையார் மகள்' எனும் லக்ஷ்மியின் நாவல் குறிப்பிடுகின்றது.

லக்ஷ்மியால் படைக்கப்படும் இளம்விதவையர் அறுவருள் 'பவானி' 'லட்சியவாதி' ஆகிய நாவல்களில் காணப்படும் இரு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விதவையர் மட்டுமே கைம்மை வாழ்வில் சிக்கலற்றவர்களாகக் காணப்படுகின்றனர்; ஏனையோருடைய விதவை வாழ்வில் சிக்கல்கள் காணப்படுகின்றன.

3. 8. 1. 3. கணவனை இழந்த இளம்விதவையர் வாழ்வில் ஒரு 'திசைமாற்றம்' (diversion) ஏற்படவில்லையெனில் அவர்களது வாழ்க்கை சிக்கல் நிறைந்ததாகவே காணப்படுகின்றது. என்ற கருதுகோளின் துணைகொண்டு விதவையர் வாழ்வில் தோன்றும் சிக்கலை ஆராயமுடிகின்றது.

ஒரு பெண்ணுக்குத் தன் வாழ்க்கையில் பிடிப்பு இருக்க வேண்டும்; அவள் வாழ்க்கையின் பற்றுக்கோடாக அப்பிடிப்பு விளங்குகின்றது. இல்லற வாழ்க்கையில் புகுந்த ஒருபெண்ணுக்குக் கணவன் பற்றுக்கோடாக விளங்குகின்றான். கணவனின் இறப்பினால் பற்றுக்கோட்டினை இழந்த மற்றொரு பெண் பற்றுக்கோட்டினைத் தேடுகிறாள். கணவன்மேல் முழுமையாகக் கொண்டிருந்த கருத்து இப்பொழுது திசைமாறுகின்றது. தன் குழந்தைகளை வளர்ப்பதிலோ அல்லது அண்ணன்/தம்பி குழந்தைகளை வளர்ப்பதிலோ நாட்டம் கொள்ளும்பொழுது, வேறு பணிகளில் ஈடுபடும்பொழுதும் அவள் கருத்து 'திசைமாற்றம்' பெறுகின்றது; அவள் கருத்து 'திசைமாற்றம்' பெறுகின்ற பொழுது அவருடைய இழப்பு அவளுக்குப் பெரிதாகத் தோன்றுவதில்லை. இக்கருத்தின் அடிப்படையில் இளம்விதவையரது வாழ்க்கையைஆராய்ந்து காணலாம்.

லக்ஷ்மியின் இரு நாவல்களில் (பவானி, லட்சியவாதி) காணப்படும் இளம் விதவையருள் சிவகாமி (பவானி) தாயற்ற தன் அண்ணன் குழந்தையைத் தனதாகக் கருதி வளர்த்துவருகின்றாள்.

'லட்சியவாதி' நாவலில் பாகீரதி தந்தையற்ற தன் தம்பிகளைப் பாசத்துடன் வளர்த்து வருகின்றாள்; தாயும் நோய்வாய்ப்பட்டதனால் தம்பிகளைத் தாயாக வளர்க்கும் பொறுப்பும் அவளுக்கு ஏற்படுகின்றது. இவ்விரு பெண்களுக்கும் விதவையான பின்னர் குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பு ஏற்படுவதினால் இவர்களது வாழ்வில் திசைமாற்றம் ஏற்படுகின்றது. எனவே, இவர்கள் மறுமணத்தையோ தம் பேரிழப்பையோ பொருட்படுத்தவில்லை என்ற உண்மை புலப்படுகின்றது.

ஏனையோருள் ஜகதா (அடுத்த வீடு) திருமண வாழ்வைப் பத்தாண்டு அனுபவித்தவள்; அதுவே கணவனின் இறப்பிற்குப் பின்னர் அவளுக்கு மறுமணத்தை நாட எண்ணமில்லாததற்குக் காரணமாக இருந்திருக்கலாம். அவளுக்கென்று குழந்தையும் இல்லை; எடுத்து வளர்க்கும் தங்கை மகளிடமும் ஜகதாவிற்குப் பாசம் இல்லை. எனவே, அவரது விதவை வாழ்வில் எந்தத் திசை மாற்றமும் இல்லாதது இறுதியில் அவளைப் பைத்தியமாக்கியிருக்கலாம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இளம்விதவை மனோன்மணிக்குத் (அடுத்த வீடு) தான் வாழும் அத்தை வீட்டுக் குழந்தைகளிடமும் அன்பு இல்லை; மனம் ஒத்த கணவன்-மனைவியரான அத்தை-மாமனது இல்லற வாழ்வைக் கண்டு மனோன்மணி பொறாமை கொள்கின்றாள்; இதற்கு பதின்மூன்று வயதிலேயே அவள் விதவையானது ஒரு காரணமாகின்றது. தனது விதவை நிலையையே எண்ணும் அவளுடைய வாழ்விலும் திசைமாற்றம் ஏதுமில்லை. எனவே, கயவன அசோகனின் போலி அன்பு அவளுக்குத் திசைமாற்றமாக அமைந்துவிடுகின்றது; அவ்அன்பில் ஏமாந்து அசோகனை முழுமையாக நம்பிவிடுகின்றாள்; அவன் தூண்டுதலால் சொந்த வீட்டிலேயே பணம் திருடவும் துணிகின்றாள்; அசோகனால் ஏமாற்றவும் படுகின்றாள். இறுதியில் உண்மையான திசைமாற்றமாகச் சமூகத்தொண்டு அவளுக்குப் புலப்பட்டபொழுது மீண்டும் விதவை வாழ்வை மனோன்மணியால் அமைதியாக ஏற்றுக்கொள்ளமுடிகின்றது.

'நாயக்கர் மக்கள்' நாவலில் சித்திரிக்கப்படும் சூடாமணியும் அண்ணனின் வற்புறுத்தலினால் ஒரு கிழவனின் மனைவியாகி விதவையாகின்றாள். மறுமணத்திற்கு இசைந்து வீட்டைவிட்டு வெளியேறி நிலையற்ற உள்ளத்துடன் மீண்டும் மனம் மாறுவதற்கும் அவளுடைய வாழ்வில் திசைமாற்றம் இன்மையே காரணம் எனலாம்.

ஷண்பகவல்லியின் (பண்ணையார் மகள்) வாழ்விலும் திசைமாற்றம் இல்லை; தீய பண்புகளையுடைய அண்ணனுடன் ஷண்பகவல்லி வாழ்வதால் அவளும் தீயவளாகும் சூழல் ஏற்படுகின்றது. அண்ணன் ஏற்படுத்திக் கொடுத்த பண்ணையாரின் நட்பு அந்த நேரத்தில் அவளுக்குத் திசைமாற்றமாகப் புலப்படுகின்றது; அதனால் விளையக்கூடிய தீமைகளை அவள் எண்ணிப் பார்க்கவில்லை.

'நாயக்கர் மக்கள்' நாவல் சித்திரிக்கும் கோதையம்மாளுக்குத் திசைமாற்றமாகக் குழந்தைகள் இருக்கின்றனர். எனவே, அவளுடைய வாழ்வில் சிக்கல் இல்லை; அவள் பண்பிலும் மாற்றம் ஏற்படவில்லை.

லக்ஷ்மியின் நாவல்களில் சித்திரிக்கப்படும் விதவையர் நிலையோடு சூடாமணியின் நாவல்களில் காணப்படும் விதவையரின் நிலையை ஒப்பிட்டுக் காணலாம்.

சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே' நாவலில் வரும் கௌரியும், பரிமளாவும் மறுமணம் செய்து கொள்கின்றனர். மறுமணம் என்பது அவர்களது வாழ்வில் ஒரு திசைமாற்றமாக இருப்பதால் குழப்பமில்லாத வாழ்வில் இருவரும் ஈடுபடுகின்றனர். எனவே, இவர்கள் இருவரும் இயல்பான பண்பு (normal) உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

'நீயே என் உலகம்' நாவலில் வரும் தங்கம் தன் மகனையே உலகமாக எண்ணி வாழ்வதால் அவளது வாழ்விற்குத் திசைமாற்றமாக அவளது மகன் காணப்படுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூடாமணி படைத்துக்காட்டும் இளம்விவையருடைய வாழ்வில் மறுமணம் அல்லது குழந்தை வளர்ப்பு என்ற திசைமாற்றம் இருப்பது அவர்களை இயல்புடையவர்களாக ஆக்கிவிடுகின்றது எனலாம்

இளம்விதவையர் வாழ்வுநிலைகளை ஒப்பிட்டுக் காணும்பொழுது இளம் விதவையர் வாழ்வு சிக்கலற்றதாக அமைய ஒரு திசைமாற்றம் தேவை என்பது புலப்படுகின்றது. திசைமாற்றம் இல்லையெனில் அவர்களுடைய வாழ்வில் குழப்பம் ஏற்பட்டு அது அவர்களை இயல்பு பண்பு அற்றவர்களாக (abnormal) மாற்றிவிடும் என்ற உண்மை தெளிவாகப் புலப்படுகின்றது.

3. 8 1. 4.0. *மறுமணத்திற்கான காரணங்கள்*

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் இளம் விதவையரின் மறுமணத்தையும், மறுமணம் இன்மையையும் ஒப்பிட்டு ஆராயும்பொழுது, விதவை மறுமணத்திற்கான காரணங்கள் புலப்படுகின்றன. இக்காரணங்களைப் பின்வருமாறு நால்வகைப்படுத்தலாம்.

1) அண்ணன்
2) குழந்தை
3) மணமகன்
4) கல்வியும் நகர சூழலும்

3. 8. 1. 4. 0. *அண்ணன்*

இளம் விதவையர் மறுமணத்திற்கு விதவையரின் அண்ணன்மாரும் காரணமாக விளங்குகின்றனர் என்ற கருத்து இரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் பெறப்படுகின்றது.

சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே' நாவலில் கௌரியின் மறுமணத்தைப் பெற்றோர் எதிர்த்தபொழுதிலும், தங்கையின் பண்பை நன்கு அறிந்த அவளுடைய அண்ணன் எதிர்ப்புக்கிடையேயும் தங்கையின் மறுமணத்தை நடத்திவைக்கின்றான்; இந்நாவலில் வரும் பரிமளாவிற்கும் பெற்றோரின் எதிர்ப்பினை மீறி அவள் அண்ணனே திருமணத்தை நடத்திவைக்கின்றான்.

இரு படைப்பாளிகளின் நாவல்களில் சித்திரிக்கப்படும் அனைத்து இளம் விதவையருள்ளும் ஜகதா (அடுத்த வீடு), மனோன்மணி (அடுத்து வீடு) தவிர ஏனையோருக்கும் அண்ணன் இருக்கின்றனர். ஆனால் அவர்களுக்கு விதவையான தம் தங்கையர்க்கு மறுமணம் முடித்துவைக்கவேண்டும் என்ற எண்ணம் இல்லை. பெரும்பான்மையான விதவையர்க்கும் மறுமணம் செய்துகொள்ளவேண்டும்என்ற எண்ணம் இல்லை. ஆனால் மறுமணம் செய்துகொள்ள விரும்பும் சூடாமணியின் (நாயக்கர்மக்கள்) மறு-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மணத்தைத் தடுத்து நிறுத்துவதற்கு அவள் அண்ணனே காரண-மாகின்றான். மறுமணத்தை நடத்திவைக்கும் அண்ணன்மார் வாழ்க்கையுடன் மறுமணத்தைத் தடுக்கும் அண்ணன் வாழ்க்கை-யினை ஒப்பிட்டுக் காணும்பொழுது தங்கையின் மறுமணத்தை அண்ணன் தடுப்பதற்கான காரணம் புலப்படுகின்றது.

கௌரியின் (உயர்வு உள்ளத்திலே) அண்ணன் நரசிம்மன் அன்பான இல்லற வாழ்க்கையினை உடையவன்; மனைவி, குழந்-தை முதலியோரை மனதார நேசிக்கிறவன்; இல்லற வாழ்வின் இன்பங்களை நன்கு அறிந்தவன். எனவே, கணவனை இழந்து குழந்தையுடன் வந்து நிற்கும் தங்கையின் பேரிழப்பை அவனால் உணர்ந்து கொள்ளமுடிகினறது; இழந்த வாழ்க்கையை எவ்வா-றேனும் அவளுக்கு மீட்டுத் தரவேண்டும் என்ற ஆசை அவளு-டைய மறுமணத்திற்கு வித்திடுகின்றது.

பரிமளாவின் (உயர்வு உள்ளத்திலே) அண்ணன் கண்ண-னும் ஒரு பெண்ணைக் காதலித்து மணக்க இருக்கின்றான்; ஆணும் பெண்ணுமாக இணைந்த வாழ்வின் இன்பத்தைத் தன் காதலியுடன் பேசியே பங்கிட்டுக் கொண்டவன்; எனவே, அவ-னுக்கும் தன் தங்கையின் இழப்பின் கொடுமை தெள்ளெனத் தெளிவாகின்றது.

இவ்வாறு வாழ்க்கையின் இனிமையை நன்கு அறிந்த, அனுபவித்த அண்ணன்மார் தம் தங்கையர் அவ்வினிமையை இழந்தபொழுது அதன் கொடுமையை உணர்ந்து இவ்வினி-மையை மீட்டுத்தர முனைகின்றனர் என்பது இதிலிருந்து புலப்-படுகின்றது.

சூடாமணியின் (நாயக்கர் மக்கள்) அண்ணன் நரசிம்மம் இரக்கமற்றவன். சிறுவயதிலேயே தாத்தா வைத்துச் சென்ற சொத்தில் தங்கையின் பங்கீட்டையும் வலிந்து அவளிடமிருந்து கைப்பற்றியவன். மனைவியைக் கொடுமைப்படுத்தி அவள் இறந்த பின்னரும் தன் ஒரே குழந்தையிடம் அன்பற்றவனாகவே காணப்-படுகின்றான். பெண் கேட்டு வந்த தங்கையின் காதலனுக்குத் தங்கையை மணமுடித்துக் கொடுக்க மறுக்கின்றான். பண ஆசை-கொண்டு கிழவன், நோயாளி எனத் தெரிந்தும் பணக்காரக் கிழவ-னுக்குத் தங்கையை மூன்றாம் தாரமாக மணமுடித்து வைக்கின்-றான். மணவாழ்க்கையின் இன்பங்களை அறியாதவனாக, செல்-வத்தினால் வரும் இன்பத்தை மட்டுமே எண்ணுபவனாக இருப்ப-தால் தங்கை விதவையாகி வந்ததும், குழந்தைகளற்ற தங்கையின் சொத்து தனக்கே கிட்டும் என மகிழ்கின்றானேயன்றி, அவளு-டைய துன்பத்திற்காக வருந்தவில்லை; அண்ணனின் கொடுமை-யான பண்பே சூடாமணிக்கு அச்சத்தை விளைவித்தது. மறு-மணம் செய்து கொள்ளலாம் என்ற ஆசையுடன் தன் காதலனுடன் அவள் புறப்பட்டு வந்தாலும், அண்ணன்மீது கொண்ட அச்சம் அவளைச் அச்செயலினின்று தடுத்துவிடுகின்றது. இங்குத் திருமண வாழ்வின் இன்பத்தை அறியாத அண்ணன், தங்கையின் இழப்பை உணராதவனாகவே இருப்பதால் தங்கையின் மறுமணத்திற்கு ஒருவகையில் தடையாகி விடுகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விதவைத் தங்கையின் மறுமணத்திற்கு அண்ணனின் இல்லற வாழ்க்கை நிலையும் ஒரு காரணமாகின்றது. என்பது இவ்வொப்பீட்டு வாயிலாகப் புலப்படுகின்றது.

3. 8. 1. 4. 2. குழந்தை

இனி இளம்விதவையருடைய குழந்தைகளை வைத்தும் அவர்களுடைய மறுமணத்திற்கான காரணத்தைக் காணலாம்.

குழந்தை இருக்கும் பொழுதே மறுமணம் செய்துகொண்டவளாகக் கௌரி (உயர்வு உள்ளத்திலே) மட்டுமே காணப்படுகின்றாள்.

குழந்தை இருக்கும்பொழுது மறுமணம் செய்துகொள்ளாதவர்களாகத் தங்கம் (நீயே என் உலகம்), கோதையம்மாள் (நாயக்கர் மக்கள்) ஆகியோர் காணப்படுகின்றனர்.

இவர்களுள் கௌரி பெண் குழந்தைக்குத் தாய் தங்கம் கோதையம்மாள் முதலியோருக்கு ஆண் குழந்தைகள் இருக்கின்றனர். ஆண் மக்களுக்குத் தாயான தங்கம், கோதையம்மாள் ஆகியோருக்குச் சமுதாயத்தில் மதிப்பும், மகன் பின்னால் தங்களைக் காப்பாற்றுவான் என்ற நம்பிக்கையும் அவர்களை மறுமண எண்ணத்திலிருந்து தடுத்திருக்கலாம். ஆனால் பெண் மகவுக்குத் தாயான கௌரிக்கு இந்நம்பிக்கை இல்லை. தன் மறுமணத்தை மகள் அறிந்தால் தன்னை வெறுத்து விடுவாளோ என்ற அச்சத்தினால் அவளிடம் உண்மையைக் கூறாது மறைத்துவிடுகின்றாள் (உயர்வு உள்ளத்திலே, ப. 111). தன் மறுமணத்தால் மகளின் மணவாழ்வு தடைப்படுமோ என்ற அச்சமும் அவளுக்கு இருந்திருக்கலாம். மகள் திருமணமாகிப் புகுந்தவீடு சென்ற பின்னர் தனக்கென யாரும் இருக்கமாட்டார்கள் என்ற அச்சமும் அவளை மறுமணத்திற்குத் தூண்டியிருந்திருக்கலாம்.

சமுதாய மதிப்பில் ஆண் குழந்தைக்கும் பெண் குழந்தைக்கும் உள்ள வேறுபாடு விதவைகளின் மறுமணத்திற்கு மற்றொரு காரணமாகின்றது என்பது இதிலிருந்து பெறப்படுகின்றது.

3. 8. 1. 4. 3. *மணமகன்*

இனி, இளம் விதவையருடைய மறுமணத் தூண்டுதலுக்கு அவர்களை மணக்க முன்வரும் ஆடவரும் காரணமாகின்றனர். கௌரியை (உயர்வு உள்ளத்திலே) மணக்க முன்வரும் இராமாமிருதம் பரந்த மனப்பான்மை கொண்டவர்; அறிவுத் திறம் கொண்டவர். கௌரிக்கு ஒரு குழந்தை இருப்பது தெரிந்தும்கூட அவளை மணக்க அவர் விரும்புகின்றார். (ப. 110). தம் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறி, கௌரியை மணந்து கொள்கின்றார். பரிமளாவை (உயர்வு உள்ளத்திலே) மணக்க விரும்பும் ஸ்ரீதரும் அவள் நிலை உணர்ந்தே மணந்து கொள்ளத் துணிகின்றான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தம் பெற்றோரின் எதிர்ப்பையும் மீறித் தன் தங்கை பரிமளாவிற்கு மறுமணம் செய்துவைக்கத் துடிக்கும்அவள் அண்ணன் கண்ணன் (உயர்வு உள்ளத்திலே) முன்பு கௌரியின் மறுமணத்தைச் ''சாதாரணமான, சராசரியான, விமரிசனத்துக்கு இடமில்லாத, பிணைப்பைத்தான் நான் அமைதியாய் ஏற்கமுடியும்'' (ப. 118) என்று வெறுத்தவன். தன் இளம் தங்கை விதவையானபொழுது அவளுக்கு மறுவாழ்வு கிடைக்காதா என ஏங்கி, தங்கைக்கு மறுவாழ்வு கொடுக்க முன்வந்த ஸ்ரீதரை மனித தெய்வமாகக் கருதத் தொடங்குகின்றான்.

சமுதாயத்தில் ஆடவர் திருமணமாகாத பெண்ணை மணமுடிக்க விரும்புகின்றனரேயன்றி விதவைப் பெண்ணை மணந்து கொள்ள எவரும் துணிவதில்லை.* எனவே, விதவையரை மணமுடித்துக்கொள்ளும் இராமாமிருதம், ஸ்ரீதர் ஆகியோர் விதிவிலக்கு இனத்தைச் சேர்ந்தவர்கள் எனலாம் அவர்களுடைய பரந்த மனப்பான்மையும் விதவையரை இரக்கத்துடன் அணுகும் முறையும் விதவையரை அவர்கள் மணந்துகொள்ளக் காரணமாகின்றன.

3. 8. 1. 4. 4. கல்வியும் நகரச்சூழலும்

இளம்விதவையர் மறுமணம் செய்துகொள்ள முனைவதற்கு அவர்கள் வாழும் இடங்களும், அவர்கள் பெற்ற கல்வியும் காரணங்களாகின்றன எனலாம்.

இருபடைப்பாளிகளின் நாவல்களில் சித்திரிக்கப்படும் இளம் விதவையருள் கௌரி, பரிமளா (உயர்வு உள்ளத்திலே) ஆகிய இருவர் மட்டுமே நகரப் பின்னணியில் வாழ்பவர்; உயர்கல்வி கற்றவர். ஏனையோர் கிராமத்தில் வாழ்பவர்கள்; கல்வி அற்றவர்.

புதுமைக் கருத்துக்களும், முற்போக்குக் கருத்துகளும், மற்றவருடைய வாழ்வில் தலையிடாத நாகரிகமும் உடைய நகர வாழ்க்கை சூடாமணியின் நாவல் மாந்தர்களான கௌரி, பரிமளா ஆகியோரின் மறுமணத்திற்குக் காரணமாக இருந்திருக்கலாம்.

மற்ற பெண்களுள் மனோன்மணி (அடுத்த வீடு) கிராமத்திலிருந்து நகரத்திற்கு வந்தவள். நகர வாழ்க்கைமுறையும் கல்லூரி படிப்பும் அவளை மறுமணத்தைப்பற்றிச் சிந்திக்கத் தூண்டுகின்றன.

ஏனையோர் கிராமங்களிலேயே வாழ்வதாலும், குறைந்த கல்வியறிவு உடையவர்களாதலாலும் புதுமையை ஏற்றுக்கொள்ள முடியாத, மரபை மீறாத பண்புடையவர்களாகக் காணப்படுகின்-

---

* ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டியின் வாயிலாகக் கண்டறிந்த கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றனர். எனவே, ஒரு பெண்ணின் வாழ்விடமும் அவளுடைய உயர் கல்வியும் அவளிடத்தில் தோன்றும் புதுமைகளுக்குக் காரணமாகின்றன என்று கருத முடிகின்றது. ஆய்வாளருடைய களஆய்வு முடிவும் ஈண்டு ஒப்பு உணரத்தக்கது.T

இளம்விதவையர் வாழ்க்கையைச் சித்திரிக்கும் லக்ஷ்மி, அவர்களுடைய மறுமணத்தைப்பற்றிப் பேசவில்லை. 'அடுத்த வீடு' எனும் நாவல் தவிர, ஏனையவற்றில் விதவைப் பெண்களுக்கு மறுமணத்தில் நாட்டம் இருப்பதாகவோ அதற்குரிய துணிவு இருப்பதாகவோ சித்திரிக்கவில்லை. 'அடுத்த வீடு' நாவலிலும் மறுமணம்பற்றிக் குறிப்பிட்டு இறுதியில் அதனை நிறைவேறாத மறுமணமாகவே முடித்துவிடுகின்றார். 'நாயக்கர் மக்கள்' நாவலில் மறுமணத்திற்கு இசைவு தரும் சூடாமணி இறுதியில் மறுத்து விடுவதாகவே காட்டுகின்றார். தம் நாவல்களில் விதவையர் மறுமணம்பற்றி லக்ஷ்மி படைக்காததற்கு அந்நாவல்கள் எழுந்த சமுதாய நிலை காரணமாயிருந்திருக்கலாம். விதவை மறுமணம் பற்றிய அக்கால எண்ணத்தினை, ஏதோ நடந்தது நடந்து விட்டது. விதிசெய்த சதி என்று மன அமைதி அடைந்து, எஞ்சிய நாட்களைப் பொதுஜன சேவையிலும் கோயில் குளம் சுற்றிப் பார்ப்பதிலும் கழிப்பதை விட்டுவிட்டு "கல்யாணமாமே, கல்யாணம். உலகம் வரவர மிகவும் கெட்டுவிட்டிருக்கிறது." (ப.311) என்று 'அடுத்த வீடு' நாவலில் மனோன்மணியின் மறுமணச் செய்தியை அறிந்த பெண்கள் பேசுவதின்வழி உணரமுடிகின்றது. படைப்பாளி லக்ஷ்மியும் இக்கருத்தினை ஆதரிக்கின்றார்.*

''விதவையின் மறுமணத்தைப் பல இனத்தார் அனுமதித்தாலும், மறுமணம் செய்துகொண்ட விதவையையும் அவள் கணவனையும் அவர்கள் விரும்புவதில்லை; மறுமணம் செய்துகொண்ட பெண்ணையும் 'காமக்கிழத்தி' (Concubine) நிலையினின்று சிறிது மேலாக மட்டும் வைத்துக் காண்கின்றார்கள். விதவை மறுமணத்தைக் கைவிட பல இனத்தாரும் துணிவதற்கு இது காரணமாகின்றது என்ற சமூகவியலார் கருத்தும் (L. S. S. O' Molley, 1976, p. 150) லக்ஷ்மியின் சித்திரிப்பின்மைக்கு அரணாகின்றது.

மறுமண எண்ணத்தைக் கைவிட்ட மனோன்மணி (அடுத்த வீடு) விதவைக் கோலம் பூண்டு சமூகத்தொண்டு செய்தும், திருவாசக வகுப்பு நடத்தியும் வருகின்றாள் என லக்ஷ்மி சித்திரிப்பது விதவைகளைப்பற்றிய அக்காலச் சமுதாயக் கண்ணோட்டத்தைப் புலப்படுத்துகின்றது.

T ஆய்வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டிகளின் வாயிலாக 73 விழுக்காட்டினர் இக்கருத்தினை ஏற்கின்றனர் என்பது தெரியவருகின்றது

* 25.8.80 அன்று ஆய்வாளர் லக்ஷ்மியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூடாமணி படைக்கும் இளம்விதவைப் பாத்திரப்படைப்பு மாறுபட்டதாகக் காணப்படுகின்றது. விதவையர் விரும்பினால் மறுமணம் செய்துகொள்ளச் சமுதாயமும் அனுமதிக்கவேண்டும் என்ற கருத்தைச் சூடாமணி தம் நாவலில் வலியுறுத்துகின்றார். விதவை மறுமணம் சட்டத்தால் நடைமுறைக்குக் கொண்டு வரப்படினும் அது நேற்றைய சிக்கல் அல்ல. கல்வி பெறுவதிலும், பணிபுரிவதிலும் விதவையர் முன்னேற்றம் அடைந்துள்ளார்களேயன்றி, சமுதாய வரவேற்பு இன்றும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. தீர்வு காணும் வரையில் எந்தச் சிக்கலும் அது எத்தனை பழமையானதானாலும் இன்றையச் சிக்கல்தான். நேற்றையச் சிக்கல் அல்ல (ப. 153) என்று 'உயர்வு உள்ளத்திலே' நாவலில் விதவை மறுமணம் இன்றளவும் முழுமையாகத் தீர்வு காணாத சிக்கலாகவே காணப்படுகின்றது என்ற கருத்தைச் சூடாமணி வலியுறுத்துகின்றார். மறுமணம் விரும்பிய பெண்களுக்கு அது நடைபெறவேண்டும்; சிக்கலாகத் தோன்றும் இது பழகப் பழக சிக்கலாகத் தோன்றாது மறைந்துவிடும்; பல விதவையர் மறுமணம் செய்துகொண்டு இனிமையான வாழ்வை நடத்திவருகின்றனர் என்பன சூடாமணியின் கருத்துக்களாகக் காணப்படுகின்றன.*

இளம்விதவையர் பாத்திரப் படைப்புக்களைப் படைப்பாளிகளின் நாவல்கள் வழி அட்டவணைப்படுத்திக் காணலாம்:

இளம்விதவையர் பாத்திரப் படைப்பு

லக்ஷ்மி	சூடாமணி
7	3

எண்ணிக்கையில் மிகுதியானவரை லக்ஷ்மி படைத்தாலும் அவர்கள் சமுதாய மரபுகளை மீறாதவர்களாகக் காணப்படுகின்றனர்; அவர்களுள் இருவர் மரபுநிலையை மீற முயற்சித்தாலும் இறுதியில் மரபுநிலைக்குக் கட்டுப்படுகின்றனர். சூடாமணியின் நாவல்கள் சித்திரிகதும் இளம்விதவையர் மூவருள் இருவர் சமுதாய மரபுகளை மீறியவராகக் காணப்படுகின்றனர். இவ்வேறுபாட்டிற்கு இவ்விரு படைப்பாளிகளின் விதவை மறுமணம் பற்றிய கொள்கை காரணமாகின்றது. இவ்வேறுபாட்டினைக் கீழ்வரும் வரைபடத்தின்வழி விளக்கலாம்.

*24. 8. 80 அன்று ஆய்வாளர் சூடாமணியுடன் நடத்திய பேட்டியில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் விதவை பாத்திரப் படைப்பு



லக்ஷ்மியின் நாவல்களில் விதவைப் பாத்திரப்படைப்பு மரபு நிலைக்குள் ஆழ்ந்திருக்க, சூடாமணியின் நாவல்களில் விதவைப் பாத்திரப்படைப்பு மரபு மீறிய நிலைக்கு வந்துவிடுகின்றது.

இதனைக் காணும்பொழுது லக்ஷ்மியின் நாவல்கள் மரபுக் கண்ணோட்டத்திலேயே செல்கின்றன என்பதையும், சூடாமணியின் நாவல்கள் மரபுமீறிச் செல்கின்றன என்பதையும் உணர முடிகின்றது.

3. 8. 2. 0. முதுமையில் விதவை

3. 8. 2. 1. மறுமணம் செய்யாதவர்

இங்கு முதுமை என்பது இளவயதினைக் கடந்த நிலையைக் குறிப்பிடுகின்றது. முதுமையில் விதவையாகின்ற பெண்கள் மறுமணத்தைப் பற்றி எண்ணுவதில்லை. இவர்கள் வளர்ந்த மகனின் பாதுகாப்பிலோ அல்லது உற்றாரின் பாதுகாப்பிலோ வாழ்கின்றனர். முதுமையில் விதவையாகின்ற பெண்களின் நிலையைக் குழந்தைப் பேற்றின் அடிப்படையில் பின்வருமாறு இரு வகைப்படுத்தலாம்.

1) குழந்தை உண்மை
2) குழந்தை இன்மை

3. 8. 2. 1. 1. குழந்தை உண்மை

ஒரு பெண் கணவனை இழந்து வித்வையாகும் பொழுது தன் மகனின் அன்பைத் தனக்கே உரிமை ஆக்கிக்கொள்வதில் விருப்பம் கொண்டு முன்பைவிட மிகுதியாக அவனைச் சார்ந்து வாழத்தொடங்குகின்றாள் (Aileen D. Ross 1973, p. 148). வயதில் சிறியவனாக மகன் இருப்பின் தாயே அவனைக் காப்பாற்ற

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இல்லாததனால், தன் தங்கை மகனைச் சார்ந்து, அவனாலும் வேண்டிய நிலை ஏற்படுகின்றது. குழந்தையை உடைய முதிய-விதவையர் நிலையை லக்ஷ்மியின் (1) பவானி, (2) பண்ணையார் மகள், (3) காஞ்சனையின் கனவு, (4) சூர்ய காந்தம், (5) மிதிலா-விலாஸ், (6) ஸ்ரீமதி மைதிலி, (7) லட்சிய வாதி ஆகிய நாவல்-களும், சூடாமணியின் (1) செந்தாழை, (2) மனத்துக்கினியவள் ஆகிய நாவல்களும் சித்திரிக்கின்றன.

விதவையான பின்னர் மகன் - மருமகள் குடும்பத்துடன் சேர்ந்து வாழும் பெண் மகன்-மருமகள் அன்புக்கு ஒரு பாலமாக அமைவதை 'பவானி', 'லட்சியவாதி' ஆகிய நாவல்களில் லக்ஷ்மி-யும், 'செந்தாழை' நாவலில் சூடாமணியும் சித்திரிக்கின்றார்கள்.

மகன் மீது கொண்ட மிகுதியான அன்பினால் மருமகள் மீது பொறாமை கொண்டு அவர்கள் வாழ்வின் குலைவுக்குக் காரண-மாக அவர்களுடன் இணைந்து வாழும் விதவைத் தாயார் அமைந்து விடுகின்ற நிலையை 'பண்ணையார் மகள்', 'காஞ்-சனையின் கனவு' ஆகிய நாவல்களில் லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

கணவன் உயிரோடு இருக்கையில் தம் செல்வச்செருக்கால் மற்றவரை மதிக்காது வாழ்ந்த விதவைத்தாயார் கணவனின் இறப்பிற்குப் பின்னர் தம் செயலற்ற தன்மையினாலும், பிற-ரைச் சார்ந்து வாழவேண்டிய நிலையினாலும் மனம் வருந்தி நல்லவர்களாவதை 'ஸ்ரீமதி மைதிலி', 'மிதிலா விலாஸ்' ஆகிய லக்ஷ்மியின் நாவல்கள் காட்டுகின்றன.

தன் பேத்தி, பேரன்மார்களை வளர்க்கும் பொறுப்பேற்று, அதில் மகிழ்ச்சியடையும் விதவையரைச் சூடாமணியின் 'மனத்-துக்கினியவள்' சுட்டுகின்றது.

விதவை நிலை ஒரு பெண்ணின் உள்ளத்தில் அன்பு, பொறா-மை முதலிய உணர்வுகளைத் தோற்றுவித்து அவர்களுடைய மன-மாற்றத்திற்கு ஒரு காரணமாகின்றது என்பது இவ்விதவையர் சித்திரிப்பினின்று பெறப்படுகின்றது.

3. 8. 2. 1. 2. குழந்தை இன்மை

குழந்தை அற்ற முதிய விதவை தன்னைக் காப்பாற்ற யாருமே இல்லாததனால் சொத்து இருந்தும் துன்பமடைய வேண்டிய நிலை ஏற்படுகின்றது என்பதனை 'அடுத்த வீடு' நாவலில் லக்ஷ்மி சித்திரிக்கின்றார். இந்நாவலில் படைக்கப்படும் மகனற்ற விதவையான பெரியநாயகி தன் சொத்தினைத் தன் இளைய சகோதரியின் மகன் சதாசிவத்திற்குக் கடனாகக் கொடுத்து உதவி அவன் பாதுகாப்பிலேயே வாழ்கின்றாள். அவள் அவன் வீட்டு வேலைக்காரி போல் பணியாற்றியும் சதாசிவம் அவளை வெறுக்கின்றான். பெரியநாயகியிடம் தான்பட்ட கடனை அடைத்து அவளை வீட்டைவிட்டு விரட்டிவிடுகின்றான். இவ்-வாறு பணம் இருந்தும் தனக்கென ஒரு மகன் அல்லது மகள்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தூத்தப்படும் இழிநிலைக்கு உள்ளாகும் விதவையை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்.

இந்தியச் சமுதாயத்தில் பெண்கள் குழந்தைப் பருவத்தில் பெற்றோராலும் இளமைப் பருவத்தில் கணவனாலும், விதவை நிலையில் பிள்ளைகளாலும் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள் என்று நீதி நூல்கள் கூறுகின்றனவேயன்றி, தனித்து வாழும் உரிமைக்குத் தகுதியானவர்கள் என்று அவர்களைக் குறிப்பிடவில்லை (B.G. Gokhale, 1962, p. 128). சமுதாயத்தில் விதவை நிலை அடைந்த பெண்கள் மகனுடன் வாழ்வதே இயல்பாகக் காணப்படுகின்றது.

ஒரு விதவைத்தாய் திருமணமான மகளுடன் போய் வாழ்வதை எந்த நாவலிலும் சித்திரிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

3. 8. 3. 0. இரு படைப்பாளிகளின் விதவையர் படைப்புக்களில் லக்ஷ்மி பதினான்கு விதவையர் நிலைகளைப் படைத்துக் காட்ட, சூடாமணி ஐந்து விதவையர் நிலைகளைப் படைத்துள்ளார். லக்ஷ்மி படைத்துள்ள விதவையர், மரபுக் கண்ணோட்டத்தின்படி இளம் வயதில் விதவையானால் பெற்றோர் அண்ணன் தம்பி ஆதரவிலும், முதிய வயதில் விதவையானால் மகன் ஆதரவிலும் வாழ்கின்றனர்.

சூடாமணி படைத்துள்ள விதவையர் இளம்வயதில் விதவையானால் மறுமணம் புரிந்துகொண்டோ அல்லது அண்ணன் ஆதரவிலோ இருந்தும், முதிய வயதில் விதவையானால் மகன் ஆதரவிலும் வாழ்கின்றனர்.

குழந்தையற்ற முதிய விதவையரை லக்ஷ்மி சித்திரிக்கின்றார்; சூடாமணி நாவல்களில் இச்சித்திரிப்பு இல்லை.

விதவை மறுமணத்தைச் சூடாமணி சித்திரிக்கின்றார்; லக்ஷ்மியின் நாவல்களில் விதவை மறுமணம் சித்திரிக்கப்படவில்லை.

3. 8. 4. 0. இனி மனைவியை இழந்த கணவன் நிலையுடன் கணவனை இழந்த விதவையர் நிலையை ஒப்பிட்டுக் காணலாம்.

ஆடவர் மறுமணம் செய்துகொள்வதற்குக் குழந்தை வளர்ப்பும் ஒரு காரணமாகின்றது (காண்க, 3. 1. 2. 1). தனித்து நின்று குழந்தையை வளர்க்கும் பொறுப்பிற்கு அவர்கள் அஞ்சுவதாலும், ஆணின் பெரும்பான்மை நேரம் வெளியிலேயே கழிந்துவிடுவதாலும் குழந்தை வளர்ப்பு அவர்களுக்கு ஒரு சுமையாகி, அச்சுமையைத் தனியே தாங்கவியலாது அதனை ஏற்க ஒருவாழ்க்கைத் துணையைத் தேடுகின்றனர்.

பெண்கள் கணவனை இழந்த நிலையிலும் குழந்தையை வளர்க்கும் பொறுப்பைத்துணிவுடன் ஏற்றுக்கொள்கின்றனர்; தன் பொறுப்பிலோ அன்றி மற்றவர் பொறுப்பிலோ குழந்தையை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வைத்து வளர்த்து விடுகின்றனர்; விதவையர் மறுமணம் செய்யத்-துணியும் நிலையிலும் குழந்தை என்ன சொல்லுமோ என அஞ்சு-கின்றனர். குழந்தைகளின் மனநிலைக்கும் வாழ்க்கை வளத்திற்-கும் சிறப்பிடம் கொடுத்து வாழும் நிலையை விதவைப் பெண்-களிடம் காணமுடிகின்றது.

மனைவியை இழந்த கணவன், கணவனை இழந்த மனைவி என்ற இருவருடைய குழந்தை வளர்ப்பை ஒப்பிட்டுக் காணும் பொழுது குழந்தை வளர்ப்பில் ஆணைவிடப் பெண்ணே துணி-வுடன் பொறுப்பை ஏற்கின்றாள் என்ற உண்மை புலப்படுகின்றது.

3. 8. 5. 0. படைப்பாளிகளின் சித்திரிப்புக்களோடு விதவை மறுமணத்தில் சமுதாயத்தில் நிகழக்கூடிய சாத்தியக் கூறுகளை-யும்காணலாம்.

1) மனைவியை இழந்த ஆடவன் கணவனை இழந்த வித-வையை மணக்க முன்வரலாம். ஏனெனில் இருவரும் திருமணத் தகுதியில் ஒரே நிலையில் இருப்பவர்கள். எங்கோ ஒரோவழி இவ்வகைத் திருமணம் நடைபெறினும் நாவல்கள் மிகுதியாக இதனைச் சித்திரிப்பதில்லை.

மனைவியை இழந்த ஆடவன் கணவனை இழந்த வித-வையை மணப்பது பற்றி, ''ஆணின் மறுமணம் சமுதாயத்தால் இயல்பாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆனால் பெண்ணின் மறு மணத்தைச் சமுதாயம் இன்னமும் இயல்பாக ஏற்கத் தயங்குவதால் விதவையை மணந்துகொண்ட ஆடவன் ஒவ்வொரு நேரத்திலும் அவளின் முந்தைய இல்லற வாழ்வை எண்ணிப்பார்க்கலாம், அது அவன் மனதில் சிக்கலை ஏற்படுத்தி அவர்களின் இல்லற வாழ்வின் அமைதியைக் குலைத்துவிட வாய்ப்புக்கள் இருப்பதால் அவ்வ-கைத் திருமணமே தவறு என்பேன்'' என்கிறார் லக்ஷ்மி.*

2) மனைவியை இழந்த ஆடவன் கணவனை இழந்த வித-வையை மறுமணம் செய்துகொண்டதாகக் கதைகளில் வரினும் அங்கு இருவரின் முந்தைய திருமண உறவின் விளைவாகப் பிறந்த குழந்தைகள் இணைந்து வாழ்வதைக் காட்டுவதில்லை. தன் கண-வனின் முந்தைய திருமணத்தின் வழி பிறந்த குழந்தைகளைத் தனதாக ஏற்றுவாழப் பெண்கள் முன்வரினும் ஆண்கள் தம் மனை-வியின் முந்தைய திருமண விளைவின் பயனான குழந்தைகளைத் தமதாக ஏற்றுக்கொள்ள விரும்புவதில்லை. இது சமுதாய வழக்-காகக் காணப்படுகின்றது. ஆடவரின் மனநிலையே இத்தகைய திருமணங்கள் நடைபெறாமைக்குக் காரணமாகக் காணப்படுகின்-றது. நாவல்களில் இத்திருமணங்களின் சித்திரிப்பின்மைக்கு இதுவே காரணம் எனலாம். சமுதாயத்தில் சிறுபான்மையாக நிக-ழக்கூடிய இவ்வகைச் சாத்தியக் கூறுகள் இரு படைப்பாளிகளும் சித்திரிக்கவில்லை.

---

*25.4.80 அன்று ஆய்வாளர் படைப்பாளியுடன் நடத்திய பேட்டி-யில் வெளியான கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இளம்விதவையின் மறுமணத்தைச் சூடாமணி ஆதரிக்கின்றார். லக்ஷ்மி விதவை மறுமணத்தைத் தம் நாவல்களில் சித்திரிக்கவில்லை. இளம்விதவையர் வாழ்வில் திசைமாற்றம் ஏற்படவில்லையெனில் அவர்களுடைய வாழ்க்கை, சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுவதை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர் இளம்விதவையருடைய வாழ்வில் திசைமாற்றமாக மறுமணம், குழந்தை வளர்ப்பு, சமூகத்தொண்டு முதலியன காணப்படுகின்றன. அண்ணன்மாரின் இன்பமான இல்லற வாழ்க்கை இளம்விதவையருடைய மறுமணத்திற்கு ஒரு தூண்டுகோலாகக் காணப்படுவதை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். சமுதாய மதிப்பில் ஆண்குழந்தைக்கும் பெண்குழந்தைக்கும் உள்ள வேறுபாடு விதவைத் தாயின் மறுமணத்திற்குத் தூண்டுகோலாகின்றது. என்பதைச் சூடாமணியின் நாவல்கள்வழி உணரமுடிகின்றது. இதனை லக்ஷ்மி தம் நாவல்களில் சித்திரிக்கவில்லை. விதவையரின் மறுமணத்திற்கு மணமகனின் மனநிலையும் காரணமாவதைச் சூடாமணி சித்திரிக்க; லக்ஷ்மி இதனைச் சித்திரிக்கவில்லை. நகரச் சூழலும், உயர்கல்வியும் ஒரு விதவையின் மறுமணத்தைத் தூண்டுகின்றன என்பதை இரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் அறியமுடிகின்றது. இளம்விதவையர் பாத்திரப்படைப்பில் லக்ஷ்மி சமுதாய மரபை மீறாதவராகக் காணப்பட, சூடாமணியின் பாத்திரப்படைப்பு மரபை மீறியதாகக் காணப்படுகின்றது.

முதுமையில் விதவையான பெண்கள் மகன்/அண்ணன்/தம்பி ஆதரவில் வாழ்கின்றனர் என்பதை இரு படைப்பாளிகளும் சித்திரிக்கின்றனர். காப்பவர் இல்லாத முதிய விதவையர் நிலை சமுதாயத்தில் இரங்கத்தக்கதாயிருப்பதை லக்ஷ்மி படைத்திருக்கின்றார்; சூடாமணியின் நாவலில் இச்சித்திரிப்புக் காணப்படவில்லை.

விதவை பாத்திரப்படைப்பில் இருபடைப்பாளிகளும் வேறுபடுவதற்கு இவர்தம் விதவைபற்றிய கொள்கைகளின் வேறுபாடு காரணம் எனக் கண்டறியப்படுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.9. விலை மகளிர்

(இவ்வியலின் ஆய்வுச் சுருக்கம்)

இவ்வியலில் விலைமகளிர் பற்றிய சமூகவியலார் கருத்துக்கள், விலைமகளிர் விடுதி, விலைமகளிர் பண்பு, பெண்கள் விலைமகளிராதற்குரிய காரணங்கள், பரத்தமையில் ஆடவர் பங்கு என்பன ஆராயப்படுகின்றன. விலைமகள் விடுதியின் வெளித்தோற்றம் கலைக்கூடமாகக் காணப்பட, உள்ளே அருவெறுக்கத்தக்க வாழ்க்கை காணப்படும் நிலையை லக்ஷ்மி சித்திரிக்கும் நிலை காட்டப்படுகின்றது. விலைமகள் விடுதிக்குள் அறியாமையால் அகப்பட்டுக் கொண்ட பெண்களின் நிலை இரு படைப்பாளிகளின் நாவல்கள் வழி விளக்கப்படுகின்றது; விலைமகள் விடுதியை நடத்தும் பெண்களின் கொடும் பண்பும் விளக்கப்படுகின்றது. நாவல்களில் பெண்கள் விலைமகளிராவதற்குக் காட்டப்படும் காரணங்கள் சமூகவியலார் கூறும் காரணங்களுடன் ஒப்பிடப்பட்டு ஆராயப்படுகின்றன. சமூகவியலார் கூறி படைப்பாளிகள் சித்திரிக்காத காரணங்கள், படைப்பாளிகள் சித்திரித்து சமூகவியலார் காட்டாத காரணங்கள் என்பன வேறுபடுத்திக் காட்டப்பட்டு ஆராயப்படுகின்றன. பரத்தமைத் தொழிலின் வளர்ச்சிக்கு ஆடவர் உறுதுணையாக விளங்கும் பாங்கு, சமூகவியலார் கூறும் கருத்துக்களோடு ஒப்பிடப்பட்டு ஆராயப்படுகின்றது. சமூகவியலார் சமுதாய அடிப்படையில் பெண்கள் விலைமகளிராதற்குப் பல காரணங்களைக் கூறினாலும், பெண்கள் விலைமகளிராதற்கு அப்பெண்களின் மனநிலையே முக்கியக் காரணமாகக் காணப்படுகின்றது என்ற உண்மை படைப்பாளிகளின் நாவல்வழி நிறுவப்படுகின்றது.

3. 9. *விலை மகளிர்*

3. 9. 0. 1. மனிதனின் கட்டுப்பாடற்ற உணர்வு பாலுணர்வு. அதனைக் குடும்பம், திருமணம் என்ற கட்டுக்களில், சமுதாயம் கட்டுப்படுத்தவும் ஒழுங்குபடுத்தவும் முயல்கின்றது; அப்பொழுது உலகில் தொன்றுதொட்டே இருந்துவரும் பரத்தமை ஏதோ ஒரு வடிவத்தில் தன்னை வெளிக்காட்டிக் கொள்கின்றது. பரத்தமை, தொடர்புடைய தனிமனிதனின் ஒழுக்கத்தை மட்டுமல்லாது அவனுடைய குடும்ப வாழ்க்கையையும், அவன் சாதியையுமே பாதிக்கின்றது; எனவே, சமுதாயத்தால் ஏற்றுக்கொள்ளப் படாததாகவே காணப்படுகின்றது (G. R. Madan, 1976, p.200) ''எப்பொழுது திருமணம் நாகரிகத்தின் விளைபொருளாகின்றதோ

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

அப்பொழுதே பரத்தமை அதன் துணை விளைபொருளாகின்றது," என்பர் சமூகவியலறிஞர் (S. D. Panekar and Kamala Rao, 1967, p. 1).

தொழில் வளர்ச்சி, விரைவான நகரப் பண்பாக்கம், குடும்ப, சமுதாயக் கட்டுப்பாட்டின் குறைவு, ஒழுக்க போதனைக் குறைவு அலுவலில் ஆணும் பெண்ணும் இணைந்து செயலாற்றும் நிலை, திரைப்பட நாடக, நடன அரங்குகள் போன்ற பொழுதுபோக்குகள், குடிப்பழக்கம். காலங்கடந்த திருமணம் போன்றவை பரத்தமையின் வளர்ச்சிக்குத் துணையாகின்றன (G.R. Madan, 1976, p. 201).

3. 9. 0.2. ஆடவருள் சிலர் இணைவிழைவு எழுச்சியின் (sex urge) காரணமாகத் திருமணத்திற்கு முன்னரோ அல்லது பின்னரோ ஒரு பெண்ணை நாடுவதுண்டு; இவ்வெழுச்சியைத் தீர்க்கும் மனைவியல்லாத பெண்ணே சமுதாயத்தில் விலைமகள் எனப்படுகின்றாள். இணைவிழைவு எழுச்சி அடங்கிய பின்னர் இருவருக்கும் இடையே எவ்வித உறவும் இல்லை.

ஒரு பெண் தன் காதலனுடன் கொள்ளும் முறையற்ற உடலுறவு வேறு; இப்பரத்தமை உறவு வேறு. பரத்தமை உறவில் அன்பிற்கு இடமில்லை. சமூகவியலறிஞர் ஜியாஃப்ரே "பரத்தமை என்பது தொடர்ந்தோ இடையிடையிலோ நிகழ்கின்ற பணத்தை மட்டும் கருதிய கவர்ச்சியூட்டும் பண்பாகிய வரையற்ற உடலுறவு," (Geoffrey. 1935, p. 553) என்பார். பரத்தமையைத் தன் தொழிலாகக் கொண்டு ஒழுக்கத்தை ஒரு பொருட்டாகக் கருதாது, தன் பெண்மையை விலைபேசி 'எப்படியும் வாழலாம்' என்று வாழ்கின்ற பெண்ணே விலைமகள் என்று குறிக்கப்படுகின்றாள்.

3. 9. 0. 3. விலைமகளிரைப்பற்றி லக்ஷ்மியின் (1) சூர்யகாந்தம், (2) அடுத்த வீடு, (3) காஞ்சனையின் கனவு, (4) பண்ணையார் மகள் ஆகிய நாவல்களும், சூடாமணியின் (1) மானிட அம்சம், (2) தீயினில் தூசு, (3) மங்கை ஆகிய நாவல்களும் கூறுகின்றன. விலைமகளிர் விடுதி; பெண்கள் விலைமகளிராதற்குரிய காரணங்கள்; பரத்தமையில் ஆடவர் பங்கு; என்ற மூன்று பாகுபாடுகளின் கீழ் இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களில் இடம்பெறும் விலைமகளிரைப் பற்றி இவ்வியல் ஆராய்கின்றது.

3. 9. 1. 0. *விலைமகளிர் விடுதி*

3. 9. 1. 1. ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில்தான் விலைமகளிர் விடுதிகள் தோன்றின (R. D. K. Jayakar, 1968, p. 101). மகளிரைப் பொருள் முதலாக்கி (Capital) நடத்தப்பெறும் இத்தொழில், நடத்துபவருக்கு நல்ல வருவாயைத் தருகின்றது. லக்ஷ்மி 'அடுத்த வீடு' நாவலில், "பார்வதியின் தாயாருக்கு என்னால் எவ்வளவோ லாபம் ஏற்பட்டது," (ப. 433) எனத் தொழிலில் ஏற்படும் பொருள் வரவை ஒரு விலைமகள் கூறுவதாகச் சித்திரிக்கின்றார்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3: 9. 1. 2. விலைமகளிர் விடுதியை நடத்துபவர் பெண்களாகவே காணப்படுகின்றனர். மூப்பு, உடல் நலமின்மை காரணமாகப் பரத்தமைத் தொழிலை விட்டவரே இவ்விடுதித் தலைவியராக உள்ளனர். இவர்களைப் பெண்தரகர்கள் (Procurers) என்றும், இவர்களுக்குப் பெண்களை அழைத்து வந்து துணை செய்பவர்களைக் காமத்தரகர் (pimp) என்றும் சமூகவியலார் குறிப்பிடுவர் (G. R. Madan, 1976, pp. 206-207). லக்ஷ்மியின் 'அடுத்த வீடு, நாவலும், சூடாமணியின் 'மானிட அம்சம்' நாவலும் இவ்விருவகையினரையும் சித்திரிக்கின்றன.

3. 9 1. 3. விலைமகளிர் விடுதியை நடத்தும் பெண்கள் தங்களிடம் அகப்படும் பெண்களை எப்படியும் தம் தொழிலில் இழுத்துவிடப் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றனர். விலைமகளிர்விடுதி எனத் தெரியாமல் அங்கு அகப்பட்டுக்கொண்ட இந்திராணியைப் பணியவைக்க விலை மகளிர் விடுதித் தலைவி அவளைக் கொடுமைப் படுத்துவதை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் சித்திரிக்கின்றது. (ப. 434).

'மானிட அம்சம்' நாவலில் வழி தெரியாது வழிகேட்டு வரும் பெண்களையும் விலைமகளிர் விடுதித் தலைவியர் ஏமாற்றி அழைத்து வந்துவிடுவதைச்சூடாமணி சித்திரிக்கின்றார்; இந்நாவலில் விலைமகள் வாழ்வினால் கிடைக்கும் சுகபோகங்களை அவர்களுக்குக் கூறி ஆசைகாட்டித் தங்களிடமே அப்பெண்களை வைத்துக்கொள்ள விடுதித் தலைவியர் பல்வேறு முயற்சிகளில் ஈடுபடுகின்றனர் என்பதையும் சூடாமணி குறிப்பிடுகின்றார் (ப. 277)

3. 9. 1. 4. 'அடுத்த வீடு' நாவலில் விலைமகளிர் விடுதிக்குள் அகப்பட்டுக் கொள்ளும் பெண்கள் முதலில் இத்தொழிலை வெறுத்து எதிர்த்தாலும் பின்னால் உடலில் உணர்ச்சியும், மனதில் நம்பிக்கையும் நாசமாகி, அடங்கி வாழ வேண்டிய நிலைக்கு வந்து விடுகின்றனர் (ப. 434) என்பதையும், அப்பெண்களை மரணத்தைத் தவிர வேறு யாராலும் அவ்விடத்திலிருந்து மீட்டுச் செல்ல முடியாது என்பதையும் லக்ஷ்மி விளக்குகின்றார் (ப.435).

3. 9. 1. 5. லக்ஷ்மி விலைமகளிர் விடுதியை 'நடனம், நாடகம், சங்கீதம் என்று வெளிப்பார்வைக்கு ஒரு கலைப்போர்வையையும், உள்ளே ஆபாசமான வாழ்க்கையையும் கொண்டது (ப. 433) என்று 'அடுத்த வீடு' நாவலில் உணர்த்துகின்றார். ஆடவரைத் தம்பால் கவர்ந்திழுக்கவும், உலகத்தின் கண்களுக்குத் தம் தொழிலின் உண்மையை மறைக்கவும் இவர்களுக்குக் கலை துணை செய்கின்றது.

3. 9. 2. 0. *பெண்கள் விலைமகளிராவதற்குரிய காரணங்கள்*

சமூகவியலறிஞர் ஜி. ஆர். மதன் பெண்கள் விலைமகளிராதற்குக் கீழ்க்காணும் பத்துக் காரணங்களைக் குறிப்பிடுகின்றார்,

1) பொருளாதார நிலை (Economic Factor)
2) கற்புநெறி தவறிய பெண்மையைத் தாழ்வாகக் கருதும் சமுதாய நிலை (Social values against unchastity)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3) மனமுதிர்வுக் குறை (Mental deficiency)
4) அறியாமை (ignorance)
5) மகிழ்ச்சியற்ற மணவாழ்க்கை உறவுகள் (Unhappy marital relations)
6) கட்டுப்பாடற்ற பாலுணர்வில் விருப்பம் (inordinate sex desire)
7) புதிய அனுபவங்களில் ஆசை (Desire for new experiences)
8) தன்னல நோக்கங்கள் (vested interests)
9) விதவை மறுமண மறுப்பு (Restriction on widow remarriage)
10) தேவதாசி அமைப்பு (Devadasi System)

(G. R. Madan, 1976, p. 201).

சமூகவியலறிஞர்களான பணிக்கரும் கமலாராவும் இணைந்து பம்பாய் நகரில் விலைமகளிர்பற்றி நடத்திய ஆய்வில் பெண்கள் விலைமகளிராவதற்கு இருபத்தாறு காரணங்களைக் குறிப்பிடுகின்றனர். இக்காரணங்களை அவர்கள் கீழ்க்கண்டவாறு ஆறு பிரிவுகளாகப் பகுக்கின்றனர்.

1) பெற்றோர் அல்லது கணவன் இறப்பு
2) வறுமை, பெற்றோர் அல்லது கணவனால் கைவிடப்படுதல்
3) பெற்றோர், கணவன் அல்லது உறவினர்களின் கொடுமையான நடத்தை
4) கடத்தப்படுதல், ஏமாற்றப்படுதல், கீழான ஒழுக்கமுடையோரின் செல்வாக்கு
5) பாலுணர்வு வேட்கை, முறையற்ற தாய்மைநிலை, முறையற்ற பாலுணர்வுத் தொடர்பு, கற்பழிக்கப்படுதல்
6) இன்பவாழ்வில் நாட்டம், புதிய அனுபவங்களில் விருப்பம், திருமணத்தில் வெறுப்பு, அறியாமை, கீழான ஒழுக்கநிலை, பழிவாங்குவதில் விருப்பம்.

(S.D. Panekar and Kamala Rao, 1967, p.4).

சமூகவியலறிஞர்கள் குறிப்பிடுகின்ற காரணங்களுள் லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளுடைய நாவல்கள் சித்திரிக்கும் விலைமகள் பாத்திரப் படைப்பில் பெண்கள் விலைமகளிராதற்குரிய காரணங்களை ஒருங்கிணைத்துக் காணலாம்.

சமூகவியலார், ''ஒரு பெண் விலைமகளாவதற்கு எப்பொழுதும் ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் இருக்கும் என்பர் (G.R. Madan, 1976, p.203), இக்கூற்றிற்கேற்ப இவ்விரு படைப்பாளிக-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ளின் நாவல்களில் காணப்படும் விலைமகளிர் தாம் அத்தொழிலை மேற்கொள்ள ஒன்றிற்கு மேற்பட்ட காரணங்கள் காணப்படுகின்றன.

3.9.2.1. தந்தை இறப்பு, பொருளாதார நிலை, கீழான ஒழுக்க நிலை

தந்தை இறப்பும், அதனால் ஏற்படும் பொருளாதாரப்பாதிப்பும் ஒரு பெண்ணின் வாழ்க்கைச் சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. பாதிக்கப்பட்டபெண், தீய ஒழுக்கத்தில் நாட்டம் கொண்டவளானால், சூழல் அவளை விலைமகளாக்கிவிடுகின்றது. தந்தை இறப்பு, பொருளாதாரப் பாதிப்பு, கீழான ஒழுக்க நிலை ஆகியவற்றினால் ஒரு பெண் விலைமகளாவதை லக்ஷ்மியின் 'சூர்யகாந்தம்' நாவல் சித்திரிக்கின்றது.

'சூர்யகாந்தம்' நாவலில் இளவயதில் தந்தையை இழந்தமாயா, தன் தாயின் துணையுடன் தன் வளமான வாழ்விற்கு உறுதுணையாகப் பரத்தமையை மேற்கொள்கின்றாள். பெண்மையின் எழிலில் மயங்கி, நிலை தடுமாறிப் போகும் சில மனிதர்களின் பலவீனத்தைப் பயன்படுத்திக்கொண்டு தங்கள் காரியங்களைச்சாதித்துக்கொள்ள மாயாவும் அவள் தாயும் ஒருபொழுதும் தயங்காத நிலையை லக்ஷ்மி சித்திரிக்கின்றார். (ப. 283) பல ஆடவர்களுடன் தொடர்பு கொண்டு செல்வத்தைச் சேர்ப்பதில் கருத்தாகக் காணப்படுகின்றாள் மாயா. "விலைமகள் தொழில் இளம் பெண்களுக்கு மகிழ்ச்சியான துன்பமற்ற வாழ்க்கையைத் தருவதோடு நம்பிக்கைகளையும், ஆசைகளையும் நிறைவேற்றும் ஒன்றாகவும் காணப்படுகின்றது." (T. Bennet Chandra Kumar, 1978, p. 56) என்பதற்கேற்ப மாயா விலைமகள் வாழ்வில் மயங்கி ஈடுபடுகின்றாள்.

பெண்கள் பரத்தையராதற்குரிய காரணங்களாகச் சுட்டப்படும் தந்தை இறப்பு, பொருளாதார நிலை, கீழான ஒழுக்கநிலை ஆகிய மூன்றனுள் தந்தை இறப்பு, பொருளாதார நிலை ஆகிய இரண்டும் லக்ஷ்மியின் மற்றொரு நாவலான 'அரக்கு மாளிகை'யிலும் காணப்படுகின்றன. இந்நாவலில் சித்திரிக்கப்படும் மஞ்சுளாவோ பெற்றோரை இழந்து, காப்பாற்றுவாரின்றி ஒரு வீட்டில் பணிப்பெண்ணாகப் பணியாற்றுகின்றாள். எனினும், அவ்வீட்டின் தலைவனும் மற்ற ஆடவர்களும் அவளுடைய கற்பினைக் கவரத் துணியும் பொழுதெல்லாம் அவர்களுடன் போராடிக் கற்பைக் காப்பாற்றிக் கொள்கின்றாள்.

பொருளாதார நிலையிலும், துணையின்றி வாழும் நிலையிலும் 'சூர்யகாந்தம்' காட்டும் மாயாவைவிட 'அரக்கு மாளிகை' காட்டும் மஞ்சுளா மிகுதியாகத் துன்பப்படுகிறாள்; அந்நிலையிலும் மஞ்சுளா விலைமகளாகத் துணியவில்லை. எனவே, மாயா விலைமகளாவதற்கு அவளுடைய தாயின் நடத்தையும், மாயாவின் கீழான ஒழுக்க நிலையுமே இன்றியமையாத காரணங்களாக அமைந்துள்ளன என்பது புலனாகின்றது. பொருளாதாரப்பாதிப்பும், தந்தை இறப்பும் ஒரு பெண்ணை விலைமகளாக்க

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

முடியாது; அப்பெண்ணின் தாயின் கீழான ஒழுக்க நிலையும், அதன் விளைவான அவளுடைய கீழான ஒழுக்கமுமே இதற்குக் காரணங்களாகின்றன, என்ற உண்மையும் இங்கு புலனாகின்றது.

3. 9. 2. 2. *பெற்றோர் இறப்பு, கட்டுப்பாடற்ற பாலுணர்வு அனுபவத்தில் ஆர்வம், பழிவாங்குவதில் விருப்பம், திருமணத்தில் வெறுப்பு, தீயோர் தொடர்பு, புதிய அனுபவங்களில் ஆசை, கீழான ஒழுக்க நிலை*

பெற்றோர் இறப்பின் காரணமாக ஏற்படும் பொறுப்பற்ற சூழலில் ஒரு பெண் பாலுணர்வு அனுபவங்களில் மிக்க ஆர்வம் கொண்டு கட்டுப்பாடற்ற வாழ்க்கையை மேற்கொள்கின்றாள்; அதில் தடையாகத் தலையிடுவோரைப் பழிவாங்கத் துணிகின்றாள்; திருமணம் என்ற கட்டுப்பாட்டை வெறுக்கின்றாள்; கீழான ஒழுக்கத்தினால் ஏற்படும் தீயோர் தொடர்பு அவளைப் பல புதிய அனுபவங்களுக்கு அழைத்துச் சென்று விடுகின்றது. பின்னர் அவற்றினின்று மீள முடியாதவளாகி விடுகின்றாள். இத்தகு பெண்ணைச் சூடாமணி 'தீயினில் தூசு' நாவலில் சித்திரிக்கின்றார்.

'தீயினில் தூசு' நாவலில் பெற்றோர் இறப்பினால் கட்டுப்பாடற்ற வாழ்வினை ஏற்கும் அருணா விலைமகளாவதைச் சூடாமணி சித்திரிக்கின்றார். பள்ளிப் பருவத்திலேயே பல ஆடவருடன் சுற்றும் அருணாவை அவள் அக்காளின் மூத்தாள் மகள் வாசுகி கடிந்துரைக்கின்றாள்; வாசுகியை வெறுத்த அருணா அவளைத் துன்புறுத்த எண்ணுகின்றாள்; வாசுகிக்கு நிச்சயித்திருந்த மணமகனிடம் நெருங்கிப் பழகி அவனைத் தன்வயமாக்கி வாசுகியின் திருமணத்தை நிறுத்தி விடுகின்றாள்; வாசுகியைத் தன் அக்காள் வீட்டைவிட்டு விரட்டுவதற்குக் காரணமாகின்றாள். வாசுகியின் காதலனிடமும் சென்று அவனையும் தன் வயப்படுத்த முயற்சி செய்கின்றாள். திருமணத்தை வெறுத்த அருணா. தன்னுடன் தொடர்பு கொண்டுள்ள சில தீயோருடன் சேர்ந்து திருடுதல் போன்ற புதிய அனுபவங்களிலும் ஈடுபடுகின்றாள். முறையற்ற ஒழுக்கத்தினால் தாயாகின்றாள் அருணா. அதன் பின்னர்தான் அவளுக்கு உலக ஆசைகள் திடீரெனக் கவர்ச்சி இழந்து போகின்றன; விலைமகளான அவளிடம் பின்னர் இன்ப நுகர்வில் ஏற்படும் ஆசையைவிடத் தாய்மைப்பண்புதான் மேலோங்கி நிற்கின்றது எனச் சூடாமணி சித்திரிக்கின்றார் (ப. 170).

3. 9. 2. 3. *ஏமாற்றப்படுதல், அறியாமை, கற்புநெறி தவறிய பெண்மையைத் தாழ்வாகக் கருதும் சமுதாய நிலை*

உலகத்தைப்பற்றிப் புரிந்துகொள்ளாத பெண் மிக எளிமையாகப் பிறரால் ஏமாற்றப்படுகின்றாள்; அதன் விளைவாக அவள் கற்பினை இழக்க நேர்ந்தால் சமுதாய மதிப்பு அவளுக்குக் கிடைப்பதில்லை. சமுதாயத்துடன் இணைந்து வாழமுடியாத அப்பெண்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வேறுவழியின்றி விலைமகளாகின்றாள். இத்தகு பெண்ணை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு' நாவல் சித்திரிக்கின்றது.

'அடுத்த வீடு' நாவலில் படைக்கப்படும் கிராமத்துப் பெண் கோமதி உலக அனுபவம் இல்லாதவள்; காதலனை நம்பி கிராமத்தைவிட்டு ஓடிவந்துவிடுகின்றாள். காதலனிடம் கற்பினை இழந்த கோமதி அவனாலேயே விலைமகளிர் விடுதியில் தள்ளப்படுகின்றாள்; கற்புநெறி தவறிய தன்னை உலகம் ஏற்காது என்பதனை உணர்ந்த கோமதி வேறுவழியின்றி விலைமகளிர் விடுதியிலேயே விலைமகளாக வாழத் தொடங்குகின்றாள் (ப.432).

பணக்காரக் காதலன் ஏழையான தன்னை மணந்துகொள்ள மாட்டான் என்பதை அறிந்திராத கிராமத்துப் பெண் இந்திராணி காதலனை நம்பி வீட்டைவிட்டு ஓடிவந்து விடுகின்றாள். அவளை ஏமாற்றும் அவள் காதலன் விலை மகளிர் விடுதியைத் தன் உறவினர் வீடு என்று ஏமாற்றி அவளை அங்கு விட்டுவிட்டுச் சென்றுவிடுகின்றான். விலை மகளிர் விடுதியில் அகப்பட்டுக் கொண்ட இந்திராணி தன் நிலையை உணர்ந்ததும் அங்கிருந்து தப்பித்துச் சென்று விடுவதை லக்ஷ்மி 'அடுத்த வீடு' நாவலில் சித்திரிக்கின்றார்.

வழியறியாது வழிகேட்டு வந்த நிலையில் மயக்க மருந்து கலந்த பாலைக் கொடுத்து ஏமாற்றி விலைமகளிர் விடுதியில் அடைக்கப்படும் நகரத்துப்பெண் சாரதாவைச் சூடாமணி 'மானிட அம்சம்' நாவலில் சித்திரிக்கின்றார்.

அறியாமை, ஏமாற்றப்படல் ஆகியவை இன்றியமையாக் காரணங்களாக அமைய விலைமகளிர் விடுதிக்கு வந்த மூவருள் கோமதி (அடுத்த வீடு). இந்திராணி (அடுத்த வீடு) இருவரும் கிராமத்துப்பெண்கள். அவர்களுள் கோமதி கற்பை இழந்தவள் எனவே, அவளால் மீண்டும் தன் கிராமத்திற்குச் செல்ல இயலவில்லை. அவளுக்கு உலகில் தனித்து வாழத் துணிவும் இல்லை; வேறு வழியின்றிப் பரத்தமைத் தொழிலில் ஈடுபடுகின்றாள். இந்திராணி கிராமத்துப் பெண்ணாயினும் காதலனிடம் கற்பினை இழக்காதவள்; விலைமகளிர் விடுதியிலிருந்து தப்பித்துவிட்டால் உலகில் கற்புடன் வாழமுடியும் என்ற துணிவு அவள் உள்ளத்தில் இருப்பதால் விலை மகளிர் விடுதியிலிருந்து வெளியேறிவிடுகின்றாள்.

சாரதா (மானிட அம்சம்) நகரத்துப் பெண்ணாயினும் உடல்சோர்வினால் ஏற்பட்ட அறியாமை அவள் ஏமாறுவதற்குக் காரணமாகின்றது. திருமணமான சாரதா அத்தைமகனின் குடிவெறிக்குக் கற்பை இரையாக்கியவள். கணவனால் விரட்டப்பட்டாலும் ஏதேனும் அலுவலை ஏற்று வாழ்க்கை நடத்தலாம் என்ற நம்பிக்கை சாரதாவிற்கு இருக்கின்றது. எனவே, விலைமகளிர் விடுதியை வெறுத்துத் தப்பி ஓடிவிடுகின்றாள்.

அறியாமையிலும், ஏமாற்றப்படுவதினாலும் விலைமகளிர் விடுதிக்குள் அகப்பட்டுக்கொள்ளும் கோமதி, இந்திராணி 'அடுத்த வீடு),சாரதா (மானிட அம்சம்) ஆகியோருள் இந்திராணியும் சார-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாவும் விலைமகளிர் விடுதியிலிருந்து தப்பிவிடுகின்றனர்; கோமதி விலைமகளிர் விடுதியிலிருந்து தப்ப முயற்சி செய்யாமல் விலைமகளாக வாழ்கின்றாள். கற்பினை இழக்காத இந்திராணிக்கும் சூழலின் காரணமாகக் கற்பினை இழந்த சாரதாவிற்கும் விலைமகளிர் விடுதியிலிருந்து தப்பி விட்டால் உலகில் தனித்து வாழ முடியும் என்ற துணிவு இருக்கின்றது; காதலனிடம் தெரிந்தே கற்பினை இழந்த கோமதிக்கு அத்துணிவு இல்லை; எனவே, கோமதி கற்புநிலை வழுவிய தன்னைச் சமுதாயம் ஒதுக்கிவிடும் என அஞ்சி விலைமகளிர் விடுதியிலேயே தங்கிவிடுகின்றாள் என்ற கருத்து இவ்வொப்பீட்டின்வழி புலப்படுகின்றது. ''அறியாமை, ஏமாற்றப்படல் என்பன ஒரு பெண் விலைமகளாவதற்குரிய காரணங்களாயினும் சமுதாயம் கற்பினை இழந்த தனக்குத் தர இருக்கும் மதிப்பின்மை குறித்த அச்சமும், மனத்துணிவின்மையும் அப்பெண்ணை விலைமகளிர் விடுதியிலிருந்து வெளியேற விடாமல் தடைசெய்து விடுகின்றன.'' என்பது இவ்விரு படைப்பாளிகளின் பாத்திரப் படைப்பின் ஒப்பீடுகளினின்றும் பெறப்படுகின்றது கற்புநெறி தவறிய பெண்ணாயினும் அவளுக்கு உலகில் தனித்து வாழத் துணிவு இருப்பின் அவள் விலைமகளாக மாறமாட்டாள் என்ற உண்மை சூடாமணியின் நாவலில் வலியுறுத்தப்படுகின்றது.

3. 9. 2. 4. *மகிழ்ச்சியற்ற மணவாழ்க்கை உறவுகள்*

கணவனின் முறையற்ற நடவடிக்கைகளினால் ஏற்படும் மகிழ்ச்சியற்ற மணவாழ்வு மனைவியை விலைமகளாக்கிவிடுகின்றது என்பர் சமூகவியலார் (G.R. Madan, 1976, p.204).

கணவன் கொடுமை, மாமியார் கொடுமை ஆகியவற்றால் துன்புறும் மனைவியரை லக்ஷ்மியின் 'அடுத்த வீடு', 'பண்ணையார் மகள்' 'பவானி', 'மிதிலா விலாஸ்' ஆகிய நாவல்கள் சித்திரிக்கின்றன. சூடாமணியின் 'விடிவை நோக்கி' நாவல் உடற்பசி கொண்டு அலையும் கணவனால் கொடுமைப்படுத்தப்படும் மனைவியையும் 'மானிட அம்சம்' நாவல் தான் பரத்தனாயிருத்தலால் தன் மனைவியின்மீதும் ஐயம்கொண்டு அவளைக் கொடுமைப்படுத்தும் கணவனையும் சித்திரிக்கின்றன.

லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரும் தத்தம் நாவல்களில் மகிழ்ச்சியற்ற மணவாழ்க்கை உறவுகளைச் சித்திரித்தாலும் அவற்றை ஒரு பெண் விலைமகளாவதற்குரிய காரணங்களாகப் படைக்கவில்லை.

''இவ்விரு படைப்பாளிகளும் பெண்களாக இருப்பதனால் பெண்களின் ஒழுக்கத்தை வலியுறுத்த, பெண்களின் ஒழுக்கம் சிறந்ததாக இருக்குமாயின் அவர்களுடைய மணவாழ்வு மிகக் கொடுமையானதாக இருப்பினும் அவர்களை அது விலைமகளிராக்காது என்ற கருத்தைத் தம் நாவல்களில் வலியுறுத்த விரும்புகின்றனர்,'' என்பது இங்குப் புலனாகின்றது. பெண்களின் மகிழ்ச்சியற்ற மணவாழ்க்கை அவர்களை விலைமகளிராக்குகின்றது எனும் சமூகவியலார் கருத்து இவ்விரு படைப்பாளிகளின் கருத்துடன் வேறுபடுகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 9. 2. 5. *தேவதாசி அமைப்பு*

இந்துக் கடவுளர்களுக்கு என்று அர்ப்பணிக்கப்பட்ட ஒரு பெண் திருமணம் செய்துகொள்ளக்கூடாது என்ற சமுதாய வழக்கம் நாளடைவில் அவளைப் பரத்தமை வாழ்க்கைக்கு அழைத்துச் சென்றுவிடுகின்றது (G. R. Madan, 1976, p 205). தேவதாசிகள் என்போர் கடவுள் பெயரைச் சொல்லிப் பரத்தமைத் தொழில் புரிபவர் (S. D. Panekar and Kamala Rao, 1967, p. 4). எனவே, தேவதாசியரும் விலைமகளிருள் ஒரு பிரிவினராகக் கருதப்படுகின்றனர்.

தேவதாசிகளே, 'வைப்பா'கவும் (concubine) இருக்கின்றனர். 'வைப்பாக உள்ள தேவதாசி தான் தொடர்புகொண்டுள்ள ஆடவனைத் தவிர வேறு யாரையும் நாடுவதில்லை. அவனுக்குச் சட்டப்படி உரிமையற்ற மனைவியாக (illegal wife) வாழ்கின்றாள்.

தேவதாசி, ஆடவன் ஒருவனின் 'வைப்பாக' இருந்து மனைவிக்குரிய ஒழுக்கத்தோடு வாழ்ந்தாலும், அவளைத் துணிந்து சட்டப்படி மனைவியாக ஏற்க அவன் இசைவதில்லை. ''ஒரு மனைவிதான் இல்லத்தின் தலைவியாகவும் குழந்தைக்குத் தாயாகவும் இருக்கமுடியும்; ஆனால் 'வைப்பு' இணைவிழைவு எழுச்சியின் நுகர் பொருளாகவும், மனிதனின் விளையாட்டுப் பொருளாகவும் தான் இருக்கமுடியும். உலகத்தின் மிகச் சிறந்த இன்பங்களை அவள்மேல் அவன் பொழிந்தாலும், சமுதாய நோக்கில் உண்மையில் அவள் வீட்டோடு இருக்கும் ஓர் அடிமைதான்.'' (Andre Deutch, 1966, p 194) என்றகூற்றின்வழி 'வைப்புப் பற்றிய சமுதாய மதிப்பீடு புலப்படுகின்றது.

ஆடவன் ஒருவனின் மனைவியாகவே வாழும் தேவதாசியை லக்ஷ்மியின் 'காஞ்சனையின் கனவு', 'பண்ணையார் மகள்' ஆகிய இரு நாவல்களும், சூடாமணியின் 'மங்கை' நாவலும் குறிப்பிடுகின்றன.

'காஞ்சனையின் கனவு' நாவலில் தன் தாயைப்போல வாழ விரும்பாது தன்னை விரும்பும் புஷ்பநாதனை மணந்துகொண்டு வாழ்க்கை நடத்த விரும்பும் பானுமதியை லக்ஷ்மி சித்திரிக்கின்றார். 'பண்ணையார் மகள்' நாவலிலும் தன்னைக் காதலிக்கும் ரங்கதுரையை மணந்துகொண்டு வாழ விரும்பும் சுலோச்சனாவை லக்ஷ்மி சித்திரிக்கின்றார். ஆனால் புஷ்பநாதனும் (காஞ்சனையின் கனவு), ரங்கதுரையும் (பண்ணையார் மகள்) தேவதாசி குலப்பெண்களைக் காதலித்தாலும் அவர்களை மணந்துகொள்ள முன்வரவில்லை. தம்முடைய குலப் பெருமைக்கேற்ற பெண்களையே மணக்க எண்ணுகின்றனர்.

சூடாமணி, 'மங்கை' நாவலில் தேவதாசி குலப்பெண்ணைச் சித்திரிக்கின்றார். தனக்கு இருந்த ஏராளமான கோவில் நிலம், சொத்து எல்லாவற்றையும், உதறித் தள்ளிவிட்டுத் தன் அந்தணர் குலக் காதலனுடன் ஓடிவந்துவிடுகின்றாள் தேவதாசி குல நப்பின்னை. அவள் மகள் மங்கை தன் தாயின் குலத்தை வெறுக்கிறாள்; தந்தையின் குலத்தை விரும்புகின்றாள். தன் தந்தையின் உயர்ந்த குலப் பெருமையை தான் பெறுவதற்குக் கல்வி ஒன்று-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தான் வழி என்று எண்ணுகின்றாள். அதற்காக அவள் போராடு-கின்றாள்.

சமுதாயத்தில் சாதியமைப்பில் கீழ்நிலையில் உள்ளவர்கள், மேல்நிலையில் உள்ளவர்களின் பண்பாட்டையும் வாழ்க்கை முறை-களையும் பின்பற்ற விழைவதனை மேல்நிலை ஆக்கம் (Sanskriti-zation) என்பர் சமூகவியலார் (M. N. Srinivas, 1966, p. 6). * லக்ஷ்மி சூடாமணி ஆகியோரின் நாவல்களில் இந்த மேல்நிலையாக்கத்தினைத் தேவதாசியர் பாத்திரப்படைப்புக்களில் காணமுடிகின்றது. தேவதாசி குலப்பெண் தன் குலவழக்கத்தை வெறுத்துப் பிற குலப்-பெண்கள்போல் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்பு-வதை லக்ஷ்மியின் நாவல்களும் (காஞ்சனையின் கனவு, பண்ணை-யார் மகள்), தேவதாசி குலப்பெண் தன் குலத்தையே வெறுத்து, தன்னை உயர்குலத்தவளாக ஆக்கிக்கொள்ள விழைவதைச் சூடா-மணியின் நாவலும் (மங்கை) சித்திரிக்கின்றன.

இவ்விரு படைப்பாளிகளின் தேவதாசி குலப்பாத்திரச் சித்தி-ரிப்பின் வேறுபாட்டிற்கு இவர்களுடைய நாவல்கள் எழுதப்பட்ட காலச்சூழல் காரணம் எனலாம். லக்ஷ்மியின் 'காஞ்சனையின்-கனவு' நாவல், 1946-ஆம் ஆண்டும், 'பண்ணையார்மகள்' நாவல் 1955-ஆம் ஆண்டும் எழுதப்பட்டவை. அக்காலச்சூழலில் தேவ்தாசி குலப்பெண்கள் தம் குலவழக்கத்தை வெறுத்து ஆடவன் ஒருவனை மணந்து வாழ விரும்பினர். சூடாமணியின் 'மங்கை' நாவல் 1963-ஆம் ஆண்டு எழுதப்பட்டது. இக்காலச் சூழலில் தேவதாசி குலப் பெண்கள் தம் குலத்தையே வெறுக்கத் தொடங்கிவிட்டனர். எனவே, இவ்விரு படைப்பாளிகளின் நாவல்கள் எழுதப்பட்ட காலத்தின் சூழல் இவர்தம் நாவல்களில் வெளிப்படுகின்றது.†

சமூகவியலார் கூறுவது போன்று தேவதாசி அமைப்பும் பரத்தமைத் தொழில் வளர்வதற்கு ஒரு காரணமாயினும் இவ்விரு படைப்பாளிகளும் அதனைச் சித்திரிக்கவில்லை. ''தேவதாசி குலப் பெண்கள் பரத்தமைத் தொழிலை வெறுத்து உயர்குலப் பெண்-களைப்போல் வாழ விரும்புகின்றனர் என்ற உண்மை இவ்விருவர் தம் நாவல்களின் வழி புலனாகின்றது.''

3. 9. 2. 6. *விதவை மறுமண மறுப்பு*

விதவை மறுமணம் சட்டத்தால் ஏற்கக்கூடியதாக இருப்-பினும் சமுதாயத்தால் இன்றும் முழுமையாக ஏற்றுக்கொள்ளப்-படாத நிலையில், விதவை மறுமணத்திற்குரிய மறுப்புக்களும், பரத்தமைத் தொழில் வளர்வதற்குக் காரணங்களாகின்றன. சமு-

---

* இக்கோட்பாட்டைத் தமிழாக்கம் செய்து தமிழ் இலக்கியக்-கோட்பாட்டில் இணைத்துக் காண்கின்றார் முத்துச்சண்முகனார் (தமிழ் இலக்கிய க்கோட்பாடுகள், 1974, பக். 62-63).

† ஆய்வாளர் படைப்பாளிகளுடன் முறையே 25. 8. 80, 26. 8. 80 ஆகிய நாட்களில் நடத்திய பேட்டி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாயத்தில் நிலவும் சில கட்டுப்பாடுகளினால் மறுமணம்செய்து கொள்ள முடியாத விதவைகள் தங்களையும் தங்கள் குழந்தைகளையும் காப்பாற்றிக்கொள்ள இத்தொழிலை மேற்கொள்கின்றனர் (G. R. Madan, 1976, p. 205)

லக்ஷ்மியின் 'பண்ணையார் மகள்' நாவல், ஒருவிதவை மற்றொருவனுடன் முறையற்ற உறவுகொண்டு வாழ்வதைச்சித்திரிக்கின்றது. இந்நாவல் சித்திரிக்கும் ஷண்பகவல்லி இளம்விதவை; விதவையான பின்னர் அவ்வூர்ப் பண்ணையாருடன் உறவு கொண்டு வாழ்கின்றாள். வெளிப்பார்வைக்குச் சிவப்பழமாகவும், உள்ளே பண்ணையாரின் காதலியாகவும் வாழ்ந்த ஷண்பகவல்லி பண்ணையாரின் மனைவியை வீட்டைவிட்டு விரட்டும் அளவு பண்ணையாரிடம் செல்வாக்குப் பெற்றிருந்தாள் என லக்ஷ்மி குறிப்பிடுகின்றார். தனக்கும் பண்ணையாருக்கும் பிறந்த குழந்தைகளைக் கொலைசெய்யத் துணியும் அளவு கொடியவளாக ஷண்பகவல்லி இந்நாவலில் சித்திரிக்கப்படுகின்றாள்.

லக்ஷ்மியின் 'நாயக்கர்மக்கள்', 'அடுத்தவீடு' ஆகிய நாவல்களும், சூடாமணியின் 'உயர்வு உள்ளத்திலே', 'நீயே என் உலகம்' ஆகிய நாவல்களும் இளம் விதவையரைக் குறிப்பிட்டாலும் அவர்கள் பரத்தையராக மாறியதாகச் சித்திரிக்கவில்லை. எனவே. இங்கும் ஒரு விதவைப்பெண் விலைமகளாவதற்கு அவளுடைய கீழான பண்புதான் காரணமேயன்றி அவளுடைய விதவைநிலை காரணமன்று என்பது இவ்விரு படைப்பாளிகளின் கருத்தாகத் தோன்றுகின்றது.

மனமுதிர்வுக் குறை, தன்னல நோக்கங்கள், கற்பழிக்கப்படுதல், ஆகியவைகளும் ஒருபெண் விலைமகளாவதற்குரிய காரணங்கள் எனச் சமூக இயலார் கூறினும் அவற்றை இவ்விரு படைப்பாளிகளும் சித்திரிக்கவில்லை.

3. 9. 3. 0. பரத்தமையில் ஆடவர் பங்கு

பொதுவாக, சமுதாயத்தில் ஆடவனே ஆளுமைத் தன்மை உடையவனாகவும், குடும்பத்தின் பொருளாதாரத் தலைவனாகவும் இருப்பதால் சமுதாயம் அவனுடைய சில செயல்களைப் பொறுத்துக்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கின்றது. அவனுடைய ஒழுக்கத்தை வலியுறுத்தாத சமுதாயம், பெண்ணுக்குக் கற்பை மிகவும் வலியுறுத்துகின்றது. ஆனால் எந்த ஒரு சமுதாயத்தில் ஆணின் ஒழுக்கம் போற்றப்படுகின்றதோ அந்தச் சமுதாயத்தில்தான் பெண்ணின் ஒழுக்கம் பாதுகாக்கப்படும். சங்க காலத்திலேயே,

> ''எவ்வழி நல்லவர் ஆடவர்
>
> அவ்வழி நல்லை வாழிய நிலனே'' (புறம், 187:3-4)

என இக்கருத்து வற்புறுத்தப்பட்டு வந்துள்ளது. இந்நிலையில் பெண்ணின் பரத்தமைக்கு ஆணின் ஒழுக்கக்கேடும் ஒரு காரணமாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பரத்தமையில் ஈடுபடும் ஆடவரைச் சமூகவியல் அறிஞர், 1) திருமணமாகாத ஆடவர் 2) திருமணமான ஆடவர் 3) மனைவியை இழந்த ஆடவர் அல்லது பிரிந்த ஆடவர் என மூன்று பிரிவினராகப் பிரிக்கின்றனர் (G R. Madan, 1976, p.201).

3. 9. 3. 1. திருமணமாகாத ஆடவர் தம் இணைவிழைவு எழுச்சியை வேண்டும்பொழுது தணித்துக்கொள்ளச் சமுதாயப் பழக்கவழக்கங்கள் இடம் கொடுப்பதில்லை; எனவே அவர்கள் மறைமுகமாக விலைமகளை நாடிச் செல்கின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் சமுதாயம் விதித்துள்ள மாறுபட்ட ஒழுக்க விதிகளும் திருமணமாகாத ஆடவரைப் பரத்தமைக்கு அழைத்துச் செல்கின்றன (G R. Madan, 1976, p.201).

லக்ஷ்மியின் 'நாயக்கர் மக்கள்', 'பெண்மனம்' ஆகிய நாவல்களும் சூடாமணியின் 'தீயினில் தூசு' நாவலும் திருமணமாவதற்கு முன்னரே இணைவிழைவு எழுச்சியின் காரணமாகவும், விலைமகளின் அழகில் மயங்கியும் விலைமகளிருடன் உறவுகொள்ளும் திருமணமாகாத ஆடவரைக் குறிப்பிடுகின்றன.

3. 9. 3. 2. திருமணமான ஆடவர் பாலுறவில் புதிய அனுபவங்களைப் பெறவும், அவ்வுறவினால் கணவன் - மனைவியர்க்கு இடையில் எழும் மனவேறுபாட்டினாலும், மகிழ்ச்சியான மணவாழ்க்கையுடையவராயினும் ஒரே நிலையான மண உறவிலிருந்து தப்புவதற்காகவும் பரத்தையரை நாடுகின்றனர் (G.R.Madan, 1976 p.201).

'மானிட அம்சம்' எனும் சூடாமணியின் நாவல் திருமணமான சிதம்பரம் புதிய புதிய பரத்தையரை நாடுவதைச் (ப.280) சித்திரிக்கின்றது. அவனது அடங்காத, உடற்பசியும், புதிய அனுபவங்களைப் பெறவிரும்பும் வேட்கையும் இதற்குக் காரணங்களாக அமைகின்றன. எனினும், குழந்தை பெறமுடியாத தன்னுடைய இயலாமையால் ஏற்பட்ட தாழ்வுமனப்பான்மையை மனைவி அல்லது பரத்தையர் தொடர்பினால் போக்கிக்கொள்கின்றான். இது உளவியல் அடிப்படையில் தோன்றியது எனக்கூறலாம்.* இக்கருத்தினைச் சமூகவியலார் கூறியதாகத் தெரியவில்லை.

திருமணமான ஆடவர் பரத்தையரை நாடுவதற்கு மனைவியினுடைய அழகின்மையும் காரணம் என லக்ஷ்மி 'மிதிலா விலாஸ்' நாவலில் காட்டுகின்றார்.

3. 9. 3. 3. மனைவியை இழந்த ஆடவர் அல்லது பிரிந்த ஆடவர் (widower or divorcee) பரத்தமையை நாடுவதற்குத் தன் தனிமைக்குத் தேவையான துணையும், திருமண வாழ்க்கையில் பழகியிருந்த பாலுறவின் தேவையும் காரணங்களாக அமைகின்றன (G. R. Madan, 1976, p. 201).

---

* 12. 5. 80 அன்று ஆய்வாளர் மதுரை இராஜாஜி மருத்துவமனை உளவியல் அறிஞர் ராலின் சின்னையனுடன் நடத்திய பேட்டி.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சூடாமணியின் 'மானிட அம்சம்', 'தீயினில்தூசு' ஆகிய இரு நாவல்களும் மனைவியை இழந்த ஆடவர் பரத்தையரை நாடுவதைச் சித்திரிக்கின்றன.

லக்ஷ்மியின் நாவல்களில் மனைவியை இழந்தவர்களில் பெரும்பான்மையோர் மறுமணம் செய்துகொண்டவராகவும், அல்லது மனக்கட்டுப்பாடு கொண்டவராகவும் காணப்படுவதால் பரத்தையர் நாட்டம் உடைய கதைமாந்தர் அவருடைய நாவல்களில் காணப்படவில்லை.

ஆடவர் திருமணமாவதற்கு முந்திய நிலை, திருமணத்திற்குப் பிந்தைய நிலை, மனைவியை இழந்தநிலை என்ற மூன்று நிலைகளிலும் தம் உடல் தேவைகளுக்காகப் பெண்களை நாடுகின்றனர் என்ற கருத்து இருபடைப்பாளிகளின் நாவல்களினின்று பெறப்படுகின்றது. எனவே, பரத்தையர் தொழிலின் வளர்ச்சிக்கு ஆடவரும் காரணமாகின்றனர் என்பது தெளிவாகின்றது. இது நம் சமுதாய அமைப்பில் காணப்படும் குறைபாடு எனலாம்.

3. 9. 4. 0. விலைமகளிர் பற்றி லக்ஷ்மி ஐந்து நாவல்களில் (அடுத்த வீடு, காஞ்சனையின் கனவு, சூர்யகாந்தம், பண்ணையார் மகள், பெண் மனம்) குறிப்பிடுகின்றார். விலை மகளிர் வாழ்க்கை பற்றிய கருத்துக்களை 'அடுத்த வீடு', 'சூர்யகாந்தம்' நாவல்களிலும், தேவதாசியர் வாழ்க்கையினைக் 'காஞ்சனையின் கனவு', 'பண்ணையார் மகள்' நாவல்களிலும், விலைமகளிர் பற்றிய சில குறிப்புகளைப் 'பெண்மனம்' நாவலிலும் லக்ஷ்மி சித்திரித்துக்காட்டுகின்றார். 'காஞ்சனையின் கனவு' 'பண்ணையார் மகள்' ஆகிய நாவல்களில் தேவதாசியர் மனைவியராக வாழ விரும்புவதைக் குறிப்பிடுகின்றார் இந்நாவல்களில் தேவதாசியர், கதையின் துணை மாந்தராக வந்து கதையை நடத்திச் செல்ல உதவுகின்றனர். 'சூர்யகாந்தம்' நாவலிலும் விலைமகள் மாயாவின் படைப்பு, கதையை நடத்தத் துணைபுரிகின்றது 'அடுத்த வீடு' 'பெண் மனம்' ஆகிய நாவல்களில் விலைமகளிர் வாழ்வு ஒரு சிறு நிகழ்ச்சியாகக் காணப்படுகின்றதேயன்றி, கதைப் போக்கிற்குத் துணைபுரிவதாக அமையவில்லை.

சூடாமணி, விலைமகளிர்பற்றி மூன்று நாவல்களில் (மானிட அம்சம், தீயினில் தூசு, மங்கை) சித்திரிக்கின்றார். இவற்றுள் 'மானிட அம்சம்' விலைமகள் நடத்தும் வாழ்வினைச் சித்திரிக்கின்றது. 'தீயினில் தூசு' நாவல் நல்ல குலத்தில் பிறந்த ஒரு பெண் விலைமகளாவதைச் சித்திரிக்கின்றது. விலைமகளும் தாயானால் விலைமகள் பண்புகளை விட்டுவிடுவாள் என்ற கருத்து கதையின் துணைக் கருவாகக் காணப்படுகின்றது. 'மங்கை' நாவல், தேவதாசி குல இளைய தலைமுறையினர் தம் மேல்நிலையாக்கத்திற்கு முயலுவதைக் கருவாகக் கொண்டு காணப்படுகின்றது. இங்கு தேவதாசியர் வாழ்வு விரிவாகச் சித்திரிக்கப்படாவிடினும், தேவதாசி குல இளைய உள்ளங்களில் சமுதாய ஒதுக்கலின் காரணமாக ஏற்படும் பாதிப்பு சித்திரிக்கப்படுகின்றது.

ஒரு பெண் விலைமகளாவதற்குச் சமுதாயம் காரணமாயினும் அது வெளித்தோற்றம்தான். அப்பெண்ணின் மனமும் அதற்கு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இசைவு தந்தால்தான் அவளால் விலைமகளாக வாழமுடியும். அவ்வாறு மனஇசைவு இல்லாத பெண்கள், வாழ்க்கையில் எத்தகைய துன்பங்களையும் தாங்க முயற்சி செய்வார்களேயன்றி விலைமகளிராக மாறத்துணியமாட்டார்கள் என்பது இவ்விருபடைப்பாளிகளின் நாவல்களினின்று பெறப்படும் கருத்தாகக் காணப்படுகின்றது.

வறுமை, பெற்றோர் இறப்பு, மகிழ்ச்சியற்ற மணவாழ்க்கை ஆகியவை ஒரு பெண்ணை விலைமகளாக்கும் காரணங்களாகச் சமுதாயத்தில் காணப்படுகின்றன. ஆனால் மேற்கூறிய துன்பங்களால் வாடும் அனைத்துப் பெண்களும் விலைமகளிராவதில்லை என்பதை மஞ்சுளா (அரக்கு மாளிகை), பங்கஜம் (அடுத்த வீடு), சாரதா (மானிட அம்சம்) முதலிய பாத்திரங்களின்வழி இவ்விருபடைப்பாளிகளும் காட்டுகின்றனர். தந்தை இறப்பினால் விலைமகளான மாயாவின் (சூர்யகாந்தம்) பண ஆசையையும், செல்வக் குடும்பத்துப் பெண்ணாக இருந்தும் விலைமகளாக வாழ்ந்த அருணாவின் (தீயினில் தூசு) இன்பவாழ்வு நாட்டத்தையும் மஞ்சுளாவோடு ஒப்பிட்டுக் காண்கையில் 'பெண்கள் மனநிலையே அவர்கள் விலைமகளிராகக் காரணமாகின்றது' என்ற கருத்து தெளிவாகப் புலப்படுகின்றது. பெண்கள் விலைமகளிராவதற்குரிய பல காரணங்களுள் பெண்களின் தீய மன ஒழுக்கமும் ஒன்று எனச் சமூகவியலார் கூறுகின்றனர். (S. D. Panekar and Kamala Rao, 1967 pp. 86-87). ஆனால் பெண்ணின் தீயமன ஒழுக்கமே அவள் விலைமகள் ஆவதற்கு அடிப்படைக்காரணமாகின்றது என்ற கருத்தினை இவ்விரு படைப்பாளிகளின் நாவல்கள் வலியுறுத்துகின்றன.

சிற்சில சமயங்களில் விலைமகளிராக வாழப்பெண்கள் வற்புறுத்தப்படும் பொழுது அவர்கள் மனநிலைக்கு மாறாகவே இத்தொழிலில் ஈடுபடவும் வேண்டியுள்ளது; இந்நிலையில் அவர்கள் மன இசைவுடன் இத்தொழிலில் ஈடுபடுகின்றனர் எனச் சுட்டமுடியாது. எனவே, சமுதாயமும் இதற்குக் காரணமாகின்றது என்று கூறலாம். ஆனால் இத்தகு வற்புறுத்தல்கள் இன்றி ஒரு பெண் விலைமகளானால் அதற்கு அவள் மன இசைவுதான் காரணமாகின்றது எனலாம் என்று லக்ஷ்மி கூறுகின்றார்.*

'சிவப்பு விளக்குப் பகுதி' எனப்படும் விலைமகளிர் விடுதியில் வாழும் பெண்கள் வெளியே வந்து வாழ விரும்புவது இல்லை. அவர்களுக்கு அவ்வாழ்வில் ஒரு பற்று இருப்பதே இதற்குக் காரணமாகின்றது என்று பெண்கள் விலைமகளிராவதற்குரிய காரணத்தைச் சூடாமணி விளக்குகின்றார்.

சமூகவியலார் பெண்கள் விலைமகளிராவதற்குரிய பல காரணங்களைக் காட்டுகின்றனர். இக்காரணங்கள் வாயிலாகப் பெண்கள் விலைமகளிராகச் சமுதாயம்தான் காரணம் என வலியுறுத்துகின்றனர். இவ்விரு படைப்பாளிகளும் சமூகவியலார்

---

* ஆய்வாளர் படைப்பாளிகளுக்குக் கொடுத்த வினாப்பட்டிகள் வாயிலாகக் கண்டறிந்த கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கூறும் காரணங்கள் தோன்றுகின்ற வாழ்க்கைச் சூழலைத் தம் நாவல்களில் படைக்கின்றனர். ஆயினும் அவைதாம் பெண்கள் விலைமகளாகக் காரணங்கள் என்று சுட்டவில்லை. இத்தகு வாழ்க்கைச் சூழலிலும் சில பெண்களைத் தவிர ஏனைய பெண்கள் தம் கற்பைப் பாதுகாத்தே வாழ்கின்றனர் என்று காட்டுகின்றன. பெண்ணின் மனநிலைதான் அவள் விலைமகளாக மாறக் காரணமேயன்றி, சமுதாயம் அதற்குக் காரணமாகாது என்ற கருத்தை இவ்விரு படைப்பாளிகளும் தத்தம் நாவல்களில் வலியுறுத்துவது, பெண்கள் விலைமகளாகச் சமுதாயம்தான் காரணம், அவள் மனநிலை ஓரளவுதான் அதற்குக் காரணமாகின்றது எனக் கூறும் சமூகவியலாருடன் முரண்படுகின்றது.

3 9. 5. 0. லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவருடைய நாவல்களிலிருந்தும் விலைமகளிர் பற்றிக் கீழ்க்கண்ட முடிவுகள் பெறப்படுகின்றன:

ஒரு பெண் விலைமகளாக ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் உள்ளன என்ற கருத்து இவ்விருவர் தம் நாவல்களினின்றும் பெறப்படுகின்றது.

விலைமகளிர் விடுதிக்குள் அகப்பட்டுக்கொண்ட பெண்கள் எளிதில் தப்பஇயலாது; விலைமகளிர் விடுதித் தலைவி ஒரு பெண்ணைத் தன் தொழிலுக்கு இழுத்துக்கொள்ள எல்லாக் கொடுமைகளையும் செய்யத் துணிவாள் ஆகிய கருத்துக்கள் இவ்விருவர் நாவல்களிலிருந்தும் பெறப்படுகின்றன.

தந்தை இறப்பும், அதன் காரணமாக ஏற்படும் பொருளாதார நிலையும் ஒரு பெண விலைமகளாவதற்குரிய காரணமாயினும், அப்பெண்ணின் கீழான ஒழுக்கமே அவள் விலைமகளாவதற்கு முதற்காரணமாகின்றது என்ற உண்மை லக்ஷ்மியின் நாவல் வாயிலாகப் பெறப்படுகின்றது; இக்கருத்தைச் சூடாமணி தம் நாவல்களில் புலப்படுத்தவில்லை.

பெற்றோர் இறப்பினால் ஏற்படும் கட்டுப்பாடற்ற வாழ்க்கையும், அதனால் ஏற்படும் தீயோரின் நட்பு, பாலுணர்வு வேட்கை, பழிவாங்குவதில் விருப்பம், திருமணத்தில் வெறுப்பு, புதிய அனுபவங்களில் ஆசை, கீழான ஒழுக்க நிலை ஆகியவையும் ஒரு பெண் விலைமகளாவதற்குரிய காரணங்கள் என்ற கருத்து சூடாமணியின் நாவல்வழி புலனாகின்றது. லக்ஷ்மியின் நாவல்களில் இக்கருத்துப்புலப்படவில்லை. விலைமகள் தாய்மை அடையும்பொழுது அவளிடம் தாய்மைப்பண்புதான் மேலோங்கி நிற்கும்; விலைமகள் பண்பு அழிந்துவிடும் என்ற உண்மை சூடாமணியின் நாவல்வழி பெறப்படுகின்றது.

ஏமாற்றப்படுதல், அறியாமை ஆகியவை ஒரு பெண் விலைமகளாவதற்குக் காரணங்களாகக் காணப்படினும் கற்புநெறி தவறிய பெண்ணைச் சமுதாயம் தாழ்வாகக் கருதுவதுதான் அவள் விலைமகளாகக் காரணமாகின்றது என்ற கருத்து இவ்விரு படைப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாளிகளின் நாவல்களினின்றும் பெறப்படுகின்றது. கற்புநெறி தவறிய பெண்ணாக இருந்தாலும் அவளுக்கு உலகில் தனித்து வாழத் துணிவு இருப்பின் அவள் விலைமகளாக மாறமாட்டாள் என்ற உண்மை சூடாமணியின் நாவலில் வலியுறுத்தப்படுகின்றது.

தேவதாசி குலப்பெண்கள் பரத்தமைத் தொழிலை வெறுத்து மேல்நிலை ஆக்கம்பெற விழைகின்றனர் என்ற உண்மை இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களினின்றும் பெறப்படுகின்றது.

இரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் விதவையர் சித்திரிப்பினின்று மறுமணம் செய்துகொள்ள முடியாத விதவையர் அனைவரும் விலைமகளிராக மாறுவதில்லை: ஒரு விதவையின் தீய ஒழுக்கமே அவள் விலைமகளாகக் காரணமாகின்றது ஆகிய கருத்துக்கள் பெறப்படுகின்றன.

பரத்தமைத் தொழில் வளர்வதற்கு ஆடவரும் துணைபுரிகின்றனர் என்ற உண்மை இவ்விருவர் தம் நாவல்களினின்று அறியப்படுகின்றது.

ஒரு பெண் விலைமகளாவதற்குச் சமூகவியலார் கூறும் காரணங்களுள் பலவற்றை இவ்விருவரும் தத்தம் நாவல்களில் சித்திரிக்கவில்லை. பெண்ணின் மகிழ்ச்சியற்ற மணவாழ்க்கை இவ்விரு படைப்பாளிகளின் நாவல்களில் சித்திரிக்கப்பட்டாலும் சமூகவியலார் கூறுவது போன்று பெண் விலைமகளாக மாற அது ஒரு காரணம் என்ற கருத்து இங்குப் புலப்படவில்லை

சமூகவியலார் ஒரு பெண் விலைமகளாகக் கூறும் பல காரணங்களுள் அவள் மனநிலையும் ஒன்று என்று குறிப்பிட, இவ்விரு படைப்பாளிகளும் ஒரு பெண் விலைமகளாக அவள் மனநிலைதான் முதன்மைக் காரணம் என்று வலியுறுத்துகின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. ஆய்வு முடிவுரை

4. 0. 1. லக்ஷ்மி, சூடாமணி ஆகியோரின் சமூக நாவல்களில் சமுதாயச் சித்திரிப்பு எவ்வாறு காணப்படுகின்றது என்பதை அறிய சமுதாயவியல் திறனாய்வு இந்தஆய்வுரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது. சமூகவியல் ஆய்வாளர்கள் சமுதாயம் பற்றிய உண்மைகளைத் தங்களுக்குக் கிடைத்த தரவுகளின் வழி புலப்படுத்துகின்றனர் (Robert K. Merton, 1968, p. 29) இவர்கள் சமுதாயத்தைச் சித்திரிக்கும் சமூக நாவல்களைத் தம் ஆய்வுத் தரவுகளாக எடுத்துக் கொள்வதில்லை. சமூக நாவல் படைப்பாளிகள் சமுதாய நிகழ்ச்சிகளைத் தம் இலக்கியப் படைப்புக்களில் தம்கற்பனைகளையும் கலந்து காட்ட முற்படுகின்றார்கள். சமுதாய-நிகழ்ச்சி எது, கற்பனை எது என்று கண்டறிவதற்கு நமக்கு வழிமுறைகள் தேவை. இல்லை என்றால் முறைகளை உருவாக்க வேண்டும். இவ்வாறு இரண்டையும் பிரித்தறியாது இலக்கியம் கூறுவதுதான் முறை, சமூகம் - சமூக அமைப்பு என்று ஆராயப்புகுவது திருந்திய ஆய்வுமுறையாகாது. அந்த இலக்கியம் காட்டும் சமூகம் என்று வேண்டுமானால் கூறுவது பொருந்தும். இதனால் இலக்கியத்தைச் சமுதாயத்தோடும் சமூக வியலோடும் தொடர்புபடுத்தி ஆய்கின்றவர்களுக்குத் தனிப்பட்ட சில சிக்கல்கள் அணுகுமுறைகளில் தோன்றுகின்றன. இந்த ஆய்வு அவ்வாறு தோன்றும் சிக்கல்களையும், சிக்கல்களை விடுவிக்கும் தீர்வுகளையும் எடுத்துக்கூறும் நோக்கம் உடையது.

4. 0. 2. சமூகவியல் மனித ஒழுகலாறு தொடர்புடையது. தனி மனிதனையும் மனிதசமுதாயத்தையும் ஆராய்வதையே சமூகவியல் தலையாய குறிக்கோளாகக்கொண்டுள்ளது. எனவே, சமூக-அறிவியல் துறைகள் (Social sciences) பலவற்றுள்ளும் இலக்கியத்துடன் மிக நெருங்கிய தொடர்புடையது சமூகவியலேயாகும் (Francis E. Merrill, 1962, p. 570) .

புனைகதை மனித உறவுகளில் ஏற்படும் சிக்கல்களைச் சித்திரிக்கின்றது. சமுதாய சம்பிரதாயங்களிலிருந்தும், நெறிகளிலிருந்தும் தனிமனிதன் பிறழ்கின்றபொழுது புனைகதை தோன்றுகின்றது;பிறழ்ச்சிக்கான காரணங்களை ஆராய்கின்றது. புனைகதை சமுதாய மாற்றத்தை, மாறும் சமுதாயத்தின் நிலையைக் காட்டும் வரலாற்றுச் சான்றாகவும் விளங்குகின்றது. எனவே, புனைகதைகள் சிறப்பாக நாவல்கள் சமகால சான்றாக வரலாற்றாசிரியர்களாலும், சமூகவியலாசிரியர்களாலும் போற்றப்படல் வேண்டும் (கா.சிவத்தம்பி 1978,ப.20).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. 0. 3. எழுத்தாளன் ஒரு சமூகப்பிராணி. சமுதாயத்தில் அனைத்துக் காலங்களிலும் முரண்பாடுகளும், போராட்டங்களும் இயக்கங்களும் இடைவிடாது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; இவற்றிற்கிடையே வாழும் எழுத்தாளன் தான் கண்டு, கேட்டு, உணர்ந்தவற்றை இலக்கியமாக்கும்பொழுது அவன் சமூக நாவலாசிரியனாகின்றான். சமுதாயத்தில் காணப்படும் சிக்கல்களைச் சமூக நாவலாசிரியன் நாவலுக்குக் கருவாகக் கொண்டு எழுதுகின்றான்; அச்சிக்கல்களே சமூகவியலறிஞனுக்கு ஆய்வுப்பொருளாகின்றன. எனவே, *சமுதாயத்தைப் படம் பிடித்துக்காட்டுவதில் சமூக நாவலாசிரியனும் சமூகவியல் அறிஞனும் ஒன்றுபடுகின்றனர்.*

4. 0. 4. இலக்கியத் திறனாய்வாளர் கைலாசபதி எழுத்தாளர்களைக் கீழ்க்கண்டவாறு மூவகைப்படுத்துகின்றார்:

1. சமுதாயச் சிக்கல்களையும், முரண்பாடுகளையும் துன்ப துயரங்களையும் எதிர்நோக்காதவராய், அவற்றுடன் தொடர்பு கொள்ளாமல், இன்பமூட்டுவதையே எழுத்தின் தலையாய நோக்கமாய்க் கொண்டு அதற்கியைய கற்பனை நிகழ்ச்சிகளையும், கதைகளையும், உணர்ச்சிகளையும் இலக்கியமாக்குகின்ற எழுத்தாளர்கள் முதற்பிரிவினர்.

2. சமுதாயச் சிக்கல்களைச் சுட்டிக்காட்டுவதுடன் நிறைவு பெறுகின்றவர்கள் இரண்டாம் பிரிவினர். காலப்போக்கில் சமுதாயம் திருந்தும் என்ற நம்பிக்கை இவர்களுக்குண்டு.

3. சமுதாயத்தை நுணுக்கமாகப் பிரதிபலிக்கின்றவர்கள் மூன்றாம் பிரிவினர். சமுதாயத்தை மாற்றி அமைக்கும் பணியில் பங்கு பெறுவதுடன் அப்பணி வெற்றி பெறுவதற்குரிய மாற்றங்களை இலக்கியப்பொருளாகத் துணிந்து ஏற்றுக்கொள்வதும்இன்றையத் தேவை என இவர்கள் வற்புறுத்துகின்றனர் (க. கைலாசபதி, 1979, பக். 25-30).

க. கைலாசபதி வகைப்படுத்தும் மூவகை எழுத்தாளர்களின் படைப்புக்களை மூவகைப்படுத்தலாம். முதற்பிரிவு எழுத்தாளர்கள் பொழுதுபோக்கையே நோக்கமாகக் கொண்டு எழுதுவதால் இவர்தம் படைப்புக்களைப் பொழுதுபோக்கு இலக்கியம் (Entertaining Literature) எனலாம். இரண்டாம் பிரிவு எழுத்தாளர்கள் சிக்கலை மட்டும் விளக்குவதால் இவர்தம் படைப்புக்களை விளக்க இலக்கியம் (Descriptive Literature) எனலாம். மூன்றாம் பிரிவு எழுத்தாளர்கள் சிக்கலை விளக்கி, அதனைத் தீர்க்கும் முறைகளையும் கூறுவதால் இவர்தம் படைப்புக்களை விதி இலக்கியம் (Prescriptive Literature) எனலாம்.

4. 0. 5 சமுதாயத்தை ஆராயும் சமூகவியலாரையும் இரண்டு வகைகளாகப் பிரித்துக் காணலாம். முதல்வகை, பொழுதுபோக்கு இலக்கிய ஆசிரியர்களுக்கு நேரான சமூகவியலாரைக் காணமுடியாது. மற்ற இருவகையினருக்கும் நேரான சமூகவியலாரைக் காணமுடிகின்றது. சமுதாயத்தில் காணப்படும் சிக்கலை மட்டும் விளக்கிச் செல்லும் சமூகவியல் ஆய்வாளரை விளக்கமுறைச் சமூகவியலறிஞர் (Descriptive Sociologist) எனலாம். சமுதாயத்தில்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

உள்ள சிக்கலைக் காட்டுவதோடு அமையாது, அச்சிக்கலைத் தீர்க்கும் முறைகளையும் தம் ஆய்விலிருந்து எடுத்துக்காட்டி முடிவு கூறுகின்ற சமூகவியல் ஆய்வாளரை விதிமுறைச் சமூகவிய-லறிஞர் (Prescriptive Sociologist) எனலாம். எனவே, முதல்வகை பொழுதுபோக்கு எழுத்தாளர், பொழுதுபோக்கு இலக்கியம் போன்று சமூகவியலில் ஒரு பாகுபாட்டிற்கு இடமில்லை. விளக்க-முறை எழுத்தாளர்களை விளக்கமுறை சமூகவியலறிஞரோடுஒப்-பிட்டுக் காணலாம். விதிமுறை எழுத்தாளர்களை விதிமுறைச் சமூகவியலறிஞரோடு ஒப்பிட்டுக் காணலாம். இம்முறையில் எழுத்-தாளர்களுக்கும், சமூகவியலறிஞர்களுக்கும் இடையே காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளை அறியலாம். ஓர் எழுத்தாளரை விளக்க முறை எழுத்தாளர், விதிமுறை எழுத்தாளர் என வகைப்படுத்த அவர்கள் எடுத்துக்கொள்ளும் ஒவ்வொரு சிக்கலையும் வைத்துத்-தான் காணவேண்டும். ஆனால் பொதுவாக எழுத்தாளர்களின் படைப்புக்களைக் காண்கையில் பெரும்பான்மை சிக்கல்களை அவர்கள் எவ்வாறு கையாளுகின்றார்கள் என்பதைக் கொண்டு பொதுவாக வகைப்படுத்தலாம். இவ் ஆய்வுக்கு எடுத்துக்கொள்-ளப்பட்ட லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரண்டு படைப்பாளிகளும் பெரும்பாலும் சிக்கல்களை விளக்கி அதனைத் தீர்க்கும் முறை-களையும் தத்தம் நாவல்களில் சித்திரிக்கின்றனர். எனவே, இவர்-களை விதிமுறை எழுத்தாளர்கள் எனலாம். ஒப்பீட்டிற்கு எடுத்-துக்கொள்ளப்பட்ட சமூகவியலறிஞர்கள் பெரும்பாலும் சிக்கல்-களைத் தீர்க்கும் முறைகளைச் சுட்டுகின்றனர். எனவே, விதி-முறை எழுத்தாளர்களை விதிமுறைச் சமூகவியலறிஞர்களுடன் ஒப்பிடும் போக்கு இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

4. 1. 0. இனி ஆய்வுமுறையைக் காண்போம். இங்கு லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இரு படைப்பாளிகளின் சமூக நாவல்களில் காணப்படும் சிக்கல்கள் முதற்கண் விளக்கப்படுகின்றன. சமூகவிய-லாரும்[1] சமூக நாவல் படைப்பாளிகளும்[2] அச்சிக்கல்களை அணுகும் முறைகளும் அடுத்து விளக்கப்படுகின்றன.[3] இவற்றோடு ஆய்-

1. ஆய்வாளர் தம் ஆய்வில் மிகுதியாகச் சுட்டிக்காட்டுகின்ற இந்-திய சமுதாயத்தை ஆராய்ந்த Aileen D. Ross, David G. Mandel-baum, M S Gore, Margaret Cormack, G. R. Madan, Promilla Kapur ஆகியோரின் சமுகவியல் நூற்களின் கருத்த்துக்களே இங்கு ஒப்பிடப்படுகின்றன.

2. படைப்பாளிகள் என்ற சொல் லக்ஷ்மி, சூடாமணி ஆகிய இருவரை மட்டுமே இங்கு குறிக்கின்றது.

3. சமூகவியலார் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள் பல வற்-றைக் கூறுகின்றனர். இந்த ஆய்வு லக்ஷ்மி, சூடாமணி ஆகிய-இரு படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படும் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களை மட்டும் ஆராய்கின்றது, இவர்கள் தத்தம் நாவல்களில் படைத்துக்காட்டும் சிக்கல்களுள் சமூகவியலார் கூறாத-தன எவை என்று ஆராய்ந்து காணும் போக்கினை இந்த ஆய்வு மேற்கொள்கின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

வாளர் கள ஆய்வில் கண்ட முடிவுகள் இறுதியில் ஒப்பிடப்படுகின்றன.

4. 1. 1. *காதல்*

காதல் என்ற சிக்கலைச் சமூகவியலார் விரிவாக விளக்குகின்றனர். காதலின் வளர்ச்சி, காதலில் தோன்றும் சிக்கல்கள், காதல் பற்றிய சமுதாயக் கருத்துக்கள் யாவும் தரவுகளின் துணையுடன் விளக்கப்படுகின்றன.

4. 1. 1. 1. செல்வ வேறுபாடு, சாதி வேறுபாடு ஆகியவை காதலின் வெற்றிக்குத் தடையாவதைச் சமூகவியலார் மிகுதியாக குறிப்பிடுகின்றனர். ஆனால் செல்வ வேறுபாட்டுடன் மேலும் பல காரணங்கள் காதலிக்குத் தடையாகவிளங்குவதைச் சமுதாயத்தில் காணமுடிகின்றது.

காதலின் வெற்றிக்குத் தடைகளாகச் செல்வ வேறுபாடு, சாதி வேறுபாடு, இரு குடும்பங்களுக்கிடையேயுள்ள பகைமை, காதலன் காதலியிடம் கொள்ளும் ஐயம், காதலனின் மனமாற்றம், காதலியின் விதவைத் தாயின் மறுமணம், காதலியின் குடும்பத்திற்கு ஏற்படும் அவப்பெயர், விதவையின் மீது கொள்ளும் காதல் ஆகியவை படைப்பாளிகளின் நாவல்களில் காணப்படுகின்றன. (காண்க: 3. 1. 1. 1. 1. 2. 1. 2).

கள ஆய்விலிருந்து காதலின் வெற்றிக்குப் பெற்றோரின் எதிர்ப்பு, சாதி வேறுபாடு, வறுமை, சமுதாயம் ஆகியவை தடைகளாகக் காணப்படுவது புலனாகின்றது.

சமூக ஆய்வாளர் தனக்கு விருப்பமான துறையில். தனக்கு விருப்பமான முறையில் பலவேறுபட்ட கருத்துக்களை ஆய்வுசெய்கின்றான் (Robert K. Morton, 1968, p. 103). சமூக ஆய்வாளன் சமுதாயத்தில் தான் தகவலாளிகளாகக்கொள்ளும் ஒரு குறிப்பிட்ட அளவு தரவுகளின்வழி புலப்படும் கருத்துக்களைக்கொண்டுசமுதாயத்தை அறிவியல் முறையில் அளவிடுகின்றான் (Francis E. Merrile, 1962, p. 571) அத்தரவுகளை மீறிக்காணப்படும் சிலபல சூழல்களும் சமுதாயத்தில் உள்ளன. இச்சூழல்கள் சமூகநாவல் படைப்பாளிகளால் இலக்கியமாக்கப்படுகின்றன.

4. 1. 1. 2 கலப்புக் காதல் வெவ்வேறு இனத்தாரிடையேயும், வெவ்வேறு நாட்டாரிடையேயும், வெவ்வேறு சமயத்தாரிடையேயும் தோன்றுவதைச் சமூகவியலார் சுட்டுகின்றனர். கலப்புக் காதல் தோன்றுவதற்கான சூழல்கள், சமுதாயத்தில் கலப்புக் காதல் பெறுமிடம் ஆகியவற்றைச் சமூகவியல்வழி அறிந்து கொள்ளமுடிகின்றது. மரபு மாற்றத்தின் விளைவாகக் கலப்புக் காதல் பெரும்பான்மையான பெற்றோரால் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை என்ற உண்மையையும் சமூகவியல் புலப்படுத்துகின்றது. ஆனால் பெற்றோர் கலப்புக் காதலை ஏற்றுக்கொள்வதற்கும் கொள்ளாததற்கும் உரிய காரணங்களை விளக்கிக் கூறவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலப்புக் காதல் பற்றிய சமூகவியலார் கருத்துக்கள் சமூக நாவல்களில் காணப்படுகின்றன. மரபு மாற்றத்தைப் பெற்றோர் ஏற்றுக்கொள்வதற்கும், மறுப்பதற்கும் அவர்களுடைய கல்வி நிலை, வாழும் பின்னணி ஆகியவை காரணங்களாகின்றன என்ற நுட்பமான கருத்து சமூக நாவல்கள் வாயிலாகப் புலனாகின்றன (காண்க : 3. 1. 1. 1. 1 2.2.). கள ஆய்விலும் கலப்புக் காதலுக்குப் பெற்றோர் எதிர்ப்பு இருப்பது புலனாகின்றது. ஆனால்அதற்கான காரணங்கள் சுட்டப்பெறவில்லை.

4. 1. 2. திருமணம்

திருமணம் பெற்றோரால் நிச்சயிக்கப்படும் மரபுத் திருமணமாகவும், மணமக்கள் தாமே விரும்பி மணந்துகொள்ளும் காதல் திருமணமாகவும் விளங்குவதைச் சமூகவியலார் குறிப்பிடுகின்றனர்.

4. 1. 2. 1. மரபுத்திருமணத்திற்கு வரதட்சிணை ஒரு பெரும் தடையாக விளங்குவதைச் சமூகவியலார் விரிவாக விளக்குகின்றார். சட்டத்தினாலும் தடை செய்யமுடியாத வரதட்சிணை பற்றிய கருத்துக்களைத் திருமணமான, திருமணமாகாத ஆடவர், பெண்டிர் ஆகியோரின் கருத்துக்களைக் கேட்டு விழுக்காடு (%) அளவின்வழி புலப்படுத்துகின்றனர். ஆடவருள் சிலர் துணிவாக வரதட்சிணை பெற்றுக்கொள்ள மறுக்கின்றனர்; பெற்றோர் பெண்களின் திருமணத்தைப்பற்றிக் கவலைப்படாமல் அவர்களுக்கு மேற்கல்வி அளிக்க முயற்சி செய்கின்றனர்; பெண்களுள் பலர் வரதட்சிணை கொடுத்து மணக்கமாட்டோம் என உறுதிமொழி எடுத்துக் கொள்கின்றனர் எனச் சமுதாயத்தில் மிக ஆழமாகப் பதிந்துவிட்ட இப்பழக்கத்தைக் களைவது முயற்சி அளவில் தான் இருக்கின்றது என்று சமூகவியலார் கூறுகின்றனர். வரதட்சிணைப் பழக்கத்தைப்பற்றிச் சமூகவியலார் விரிவாக ஆராய்ந்தாலும் இக்கொடுமையைப் போக்க இவர்கள் கூறும் தீர்வு என்ன என்பது தெளிவாகப் புலப்படவில்லை.

வரதட்சிணைக் கொடுமை படைப்பாளிகளின் நாவல்களில் பெரும்பான்மையாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது. வரதட்சிணைக்கொடுமையைப் போக்க ஒரு வழி காணுவது இன்றியமையாத்தேவை என்ற கருத்தினை லக்ஷ்மியின் நாவல்கள் புலப்படுத்துகின்றன. சூடாமணியின் நாவல்கள் வரதட்சிணைக் கொடுமையைப்புலப்படுத்துவதோடு அதற்கு ஒரு தீர்வினையும் தருகின்றன (காண்க : 3. 2. 1. 1. 2. 1). ஆய்வாளருடைய கள ஆய்வினின்றும் தகவலாளிகளுள் பெரும்பான்மையோர் படைப்பாளி கூறும் தீர்வினை ஏற்றுக்கொள்கின்றனர் என்பது தெரியவருகின்றது. எனவே, சமூக நாவல் படைப்பாளிகள் சமுதாயச் சிக்கலைக் காட்டுவதுடன் அச்சிக்கலுக்கான தீர்வையும் கூறுகின்றனர் என்ற கருத்து இங்கு தெளிவாகின்றது.

4. 1. 2. 2. மரபுத் திருமணத்தில் மணமக்களின் விருப்பமின்றி நடத்தப் பெறும் திருமணம் பற்றிய சமூக ஆய்வு இருப்பதாகப் புலப்படவில்லை. பெற்றோரின் வற்புறுத்தலினால் நடை-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெறும் இவ்வகைத் திருமணத்தின் ஆழமான விளைவுகள் பற்றிய சித்திரிப்புக்கள் சமூக நாவல்களில் காணப்படுகின்றன (காண்க: 3. 2. 1. 1. 1. 2). குடும்பத்தின் அமைதியையே அழித்துவிடும் இவ்வகைத் திருமணங்களைப்பற்றி சமூகவியலாரின் ஆய்வு வளர்ந்ததால் குடும்ப அமைப்புப்பற்றி மேலும் பல கருத்துக்கள் புதிதாகத் தோன்றலாம்.

4. 1. 2. 3. ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட அவளுடைய வறுமை காரணமாகின்றது எனச் சமூகவியலார் குறிப்பிடுகின்றனர்.

ஆடவனின் மறுமணத்திற்குரிய காரணங்களையும், மறுமண இல்லறவாழ்வு பெரும்பாலும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்படுவதற்குரிய காரணங்களையும் சமூக நாவல்கள் சித்திரிக்கின்றன (காண்க: 3. 2. 1. 2). ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படுவதற்கு வறுமை, பகட்டான வாழ்வில் அவள் கொள்ளும் நாட்டம், காதல் ஆகியவைகள் காரணங்களாவதைச் சமூக நாவல்கள் குறிப்பிடுகின்றன. சமூக நாவல் படைப்பாளிகள் சமுதாயத்தை உற்று அறியும் அறிவின் துணையினால் திருமணத்தின் அனைத்து வகைகளையும் சித்திரித்துக்காட்டுகின்றனர் என்ற கருத்து இவ்வேறுபாட்டினின்றும் புலனாகின்றது.

கள ஆய்வும் பெரும்பான்மையான மறுமண இல்லறவாழ்வு, சிக்கல்கள் நிரம்பியனவாக விளங்குவதை உறுதிப்படுத்துகின்றது. ஆடவனின் மறுமணத்திற்குச் சமூகவியலார் சமூக நாவல் படைப்பாளிகள் ஆகியோர் குறிப்பிடும் காரணங்களுடன் ஒரு பெண்ணின் சொத்தும் காரணமாவது கள ஆய்வின்வழி தெரிய வருகின்றது. ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படுவதற்கும் சமூகவியலார், சமூக நாவல் படைப்பாளிகள் ஆகியோர் குறிப்பிடும் காரணங்களுடன் மேலும் சில காரணங்கள் கள ஆய்வின்வழி தெரியவருகின்றது (காண்க, பட்டியல் 1).

4. 1. 2. 4. மரபு மீறிய திருமணமாகிய காதல் திருமணத்தைச் சமூகவியலார் சித்திரிக்கின்றனர். காதல் திருமணம் நிறைவேறுதற்குத் தடையாகக் காணப்படுபவைகளைக் குறிப்பிடும் சமூகவியலார், காதல் திருமண இல்லறவாழ்வு பற்றி மிகுதியாகக் கூறியதாகத் தெரியவில்லை. இல்லற வாழ்வின் நிலையை விளக்கும் சமூகவியலார் அது மரபுத் திருமண இல்லற வாழ்வா அல்லது மரபு மீறிய திருமண இல்லற வாழ்வா என்று பகுத்துக் கூறியதாகப் புலப்படவில்லை.

சமூக நாவல்களில் காதல் திருமண வாழ்வும், மரபுத் திருமண வாழ்வும் சித்திரிக்கப்படுகின்றன. அவற்றிலிருந்து காதல் திருமணம் தோல்வி அடைவதற்குரிய காரணங்களும், மரபுத் திருமணம் வெற்றி அடைவதற்குரிய காரணங்களும் புலப்படுகின்றன. மேலும் இவ்விருவகைத் திருமணங்களிலும் இல்லறவாழ்வில் குறிப்பிடத்தக்க வேறுபாடு காணப்படவில்லை என்ற கருத்தும் தெரியவருகின்றது (காண்க: 3. 1. 1. 1. 1. 2 1. 1.).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள ஆய்வில் தகவலாளிகளுள் பெரும்பான்மையோர் காதல்-திருமணத்தின் தோல்விக்கு உடற்கவர்ச்சியின் அடிப்படையில் தோன்றுகின்ற காதல்தான் காரணமாகின்றது என்ற சமூக நாவல்-களின் கருத்தை ஏற்றுக்கொள்வது சமூக நாவல்கள் புலப்படுத்தும் கருத்திற்கு அரணாகின்றது.

4. 1. 3. கணவன்-மனைவி உறவு

ஒரு குடும்பத்தில் கணவனும், மனைவியும் பெறும் பங்கின்-அள்வினை (Role) சமூகவியலார் குறிப்பிடுகின்றனர். முந்தைய-கூட்டுக் குடும்ப அமைப்பிலிருந்து தற்காலத் தனிக் குடும்ப-அமைப்பு வேறுபட்டிருக்கும் நிலையைக் காட்டி, அதன்வழி கண-வன், மனைவி ஆகிய இருவருக்கிடையேயுள்ள உறவு நிலையின் வேறுபாடுகளைத் தரவுகளின் வாயிலாகச் சமூகவியலார் புலப்-படுத்துகின்றனர்.

ஒரு குடும்பத்தில் கணவன்; மனைவி பெறும் பங்கினை லக்ஷ்மி, சூடாமணி ஆகியோரின் சமூக நாவல்கள் சித்திரிக்கின்-றன. அத்துடன் கணவன் - மனைவி உறவுப் பாதிப்பிற்கான காரணங்களையும், அவற்றைப் போக்குதற்கான வழிமுறைகளை-யும் இவர்தம் நாவல்கள் குறிப்பிடுகின்றன (காண்க : 3. 3 1. 1.).

கள ஆய்விலும் தகவலாளிகள் கணவன் - மனைவி உறவுப் பாதிப்பிற்கான காரணங்களாகச் சமூக நாவல் படைப்பாளிகள் குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்கின்றனர்.

சமூகவியலார் குடும்ப அமைப்புநிலையில் (கூட்டுக்குடும்பம், தனிக்குடும்பம் என்ற நிலை) கணவன் - மனைவி உறவுப் பாதிப்-பிற்கான காரணங்களைக் காட்ட, சமூக நாவல்கள் கணவன், மனைவி ஆகியோரின் பண்புகள், செயல்கள் ஆகியவையும் கண-வன் - மனைவி உறவுப் பாதிப்பிற்கான காரணங்கள் எவை எனச் சித்திரிக்கின்றன. சமூக நாவல்களின் சித்திரிப்பில் சமூக அமைப்பு, தனி மனித உளவியல் ஆகிய இரண்டின் பிணைப்பில் கணவன்-மனைவி உறவுநிலை சித்திரிக்கப்படுகின்றது. சமூகவியலில் சமூக அமைப்பு மட்டுமே கணவன் - மனைவி உறவுநிலையை ஆராயத் துணைபுரிகின்றது.

4. 1. 4. தாய்மனம்

தாய்க்கும் குழந்தைக்கும் இடையேயுள்ள உறவு சமூகவிய-லாரால் விளக்கப்படுகின்றது. மகனின் திருமணம் முடிந்த பின்னர் ஏற்படும் மாமியார் - மருமகள் உறவுப் பாதிப்பு, தாயின் தீய ஒழுக்-கத்தினால் அவளிடம் மகன் கொள்ளும் வெறுப்பு, மனைவியின் தூண்டுதலினால் மகன் தாயைப் பிரிந்து தனியே செல்வது ஆகிய-வற்றைத் தாயின் மனப்பாதிப்புக்களுக்கான காரணங்களாகச் சமூகவியலார் குறிப்பிடுகின்றனர். மாற்றாந்தாயார் செய்யும் கொடுமைகள் பற்றியும் சமூக ஆய்வு காணப்படுகிறது. ஆனால் மாற்றாந்தாய் கொடுமைக்காரியாக மாறுவதற்குரிய காரணங்கள் யாவை என்ற முறையில் சமூக ஆய்வு நடைபெற்றதாகப் புலப்பட-வில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தாயின் மனப்பாதிப்புகளுக்குச் சமூகவியலார் கூறும் காரணங்களுடன் கணவனின் இறப்பு, கணவனின் கொடுமை, குழந்தையின் இறப்பு, அவளின் குலச்சிறுமை, அவளது மறுமணம், குடும்ப வறுமை, அவள் மகன்மீது காட்டும் மிகுதியான அன்பு தாய் பாலுறவுமீது கொள்ளும் வெறுப்பு ஆகியவைகளும் காரணங்களாவதைச் சமூக நாவல்கள் சித்திரிக்கின்றன (காண்க:3. 4.- 1. 1.). தாயின் குடும்ப வாழ்வில் ஏற்படும் ஏதேனும் ஒரு குறை அவள் உள்ளத்தில் சிக்கல் எழக்காரணமாகின்றது என்ற அடிப்படைக் கருத்து இதன்வழி பெறப்படுகின்றது. மாற்றாந்தாயார் கொடுமைக்காரியராக விளங்குவதற்குரிய காரணங்களும் சமூக் நாவல்களில் விளக்கப்படுகின்றன. (காண்க: 3. 4. 3.1). சமூக நாவல் படைப்பாளிகளின் சமுதாயக் கண்ணோட்டத்தின் விரிவு இங்குப் புலனாகின்றது.

4. 1.5 *மாமியார் மருமகள் உறவு*

மாமியார்-மருமகள் உறவுநிலையைப் பெரும்பான்மையான சமூகவியலார் குறிப்பிடுகின்றனர். மாமியார்-மருமகள் உறவுச்சிக்கலுக்கான காரணங்களை விளக்கும் சமூகவியலார் தனிக் குடும்பத்தைவிடக் கூட்டுக்குடும்பத்தில் தான் மாமியார்-மருமகள்உறவு பாதிக்கப்படுகின்றது எனும் கருத்தையும் சுட்டிக்காட்டினர்.

சமூகவியலார் கருத்துக்கள் சமூக நாவல்களிலும் முழுமையாகக் காணப்படுகின்றன. ஆடவனின் நலைமையில் குடும்பம் நடக்கும்பொழுது மாமியார்-மருமகள் உறவு பாதிக்கப்படுவதில்லை; பெண்ணின் தலைமையில் குடும்பம் நடக்கும்பொழுது மாமியார்-மருமகள் உறவு பாதிக்கப்படுகின்றது என்ற கருத்துக்களைச் சித்திரித்து, பெண்ணின் ஆதிக்கமே ஒரு குடும்பத்தில் மாமியார் - மருமகள் உறவுச்சிக்கல் எழக் காரணம் என்ற உண்மையைச் சமூக நாவல்கள் நிறுவுகின்றன (காண்க : 3. 5. 1. 3. 1).

தகவலாளிகளுள் பெண்களில் பெரும்பான்மையோர் தம் குடும்ப உறவுநிலைபற்றி வெளியிடத் தயங்கினர். எனவே, மாமியார் - மருமகள் உறவு பற்றிய கள ஆய்வு முடிவை முடிந்த முடிவாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

குடும்ப அமைப்பில் ஏற்படும் மாற்றமே மாமியார்-மருமகள் உறவுச் சிக்கலுக்குக் காரணம் எனக் கூறும் சமூகவியலார், சமூக நாவல் படைப்பாளிகள் கூறுவது போன்ற நுட்பமான காரணங்களைக் கூறவில்லை.

4. 1. 6. *குடும்ப உறவுகள்*

சமூகவியலார் தந்தை - மகளுக்கிடையே நிலவும் பாசமிக்க உறவுநிலையைக் காட்டுகின்றனரேயன்றி அவர்களுக்கிடையேயுள்ள பாதிக்கப்பட்ட உறவுநிலையையோ அதற்கான காரணங்களையோ குறிப்பிட்டதாகத் தெரியவில்லை. உடன்பிறந்தார் உறவுகள், கணவன் வீட்டு உறவுகள் என்று உறவுகள் பலவற்றையும் சமூகவியல் விளக்குகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சமூக நாவல் படைப்பாளிகள், குடும்ப நிகழ்ச்சிகளின் வழி-யாகப் பெண்ணின் குடும்ப உறவுகளைச் சித்திரிக்கின்றனர். தந்தை - மகள் உறவு பாதிக்கப்படுவதற்கான காரணங்களையும் (காண்க : 3. 6. 1. 1), சமூக நாவல்கள் சித்திரிக்கின்றன. நாத்-தனார் உறவு பெரும்பான்மையாகச் சிக்கல் நிறைந்த உறவாகவே காணப்படுகின்றது என சமூகவியலார் காட்ட, நாத்தனார் உற-வில் சிக்கல் ஏற்படுவதற்கும், சிக்கல் ஏற்படாமைக்கும் உரிய காரணங்களைச் சமூக நாவல்கள் விளக்குகின்றன (காண்க : 3. 6. 2. 2.). குடும்ப உறவுகள் பற்றிய தெளிவான கருத்து சமூக நாவல்-களில் பெறப்படுகின்றது. (காண்க : 3. 6. 3. 0).

கள ஆய்வில் தந்தை-மகள் பாசமிக்க உறவே குறிப்பிடப்-படுகின்றது. நாத்தனார் உறவைச் சிக்கலற்ற உறவு எனப்பெரும்-பான்மையான தகவலாளிகள் குறிப்பிடுகின்றனர் சிக்கல் தோன்று-வதற்கான காரணங்களைத் தகவலாளிகள் குறிப்பிடவில்லை.

4. 1. 7 *உழைக்கும் பெண்கள்*

உழைக்கும் பெண்களுள் அலுவல் மகளிர் பற்றிய சமூக-வியல் ஆய்வுகள் மிகுதியாகக் காணப்படுகின்றன. அலுவல் மக-ளிருளும் திருமணமான அலுவல்மகளிர் பற்றிய சமூகவியல் ஆய்வு-களே மிகுதியாக நடத்தப்பெற்றுள்ளன. வரதட்சிணை போன்ற-சமுதாயக் குறைகளினால் பெண்களின் திருமண வயது கூடிக்-கொண்டு போகும் இந்நாளில் திருமணமாகா அலுவல் மகளிரின்-எண்ணிக்கையும் மிகுதியாகக் காணப்படுகின்றது. சமூகவியலார் திருமணமான அலுவல்மகளிருக்கு ஏற்படும் சிக்கல்களை ஆராய்-வதுபோன்று திருமணமாகா அலுவல் மகளிருக்கு ஏற்படும் சிக்கல்-களை ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. ஊதியத்திற்காகப் பிற-வீடுகளில் பணிபுரியும் பெண்களும் உழைக்கும் பெண்களே. இப்-பெண்களின் வாழ்வில் தோன்றும் சிக்கல்கள் பற்றியும் சமூகவியல் ஆய்வுகள் மிகுதியாகக் காணப்படவில்லை. நாட்டுக்கான சமூகப்-பணிகளில் ஈடுபடும் பெண்களைப் பற்றிய சமூகவியல் ஆய்வும் இருப்பதாகப் புலப்படவில்லை.

சமூக நாவல் படைப்பாளிகளின் நாவல்களில் திருமணமா-காத அலுவல் மகளிர் பற்றிய சித்திரிப்புக்கள்தாம் மிகுதியாகக்-காணப்படுகின்றன. அவற்றின் வழி அப்பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்கள் புலப்படுகின்றன (காண்க: 3. 7. 1. 7.). வீட்டுப் பணி-களில் பெண்கள் ஈடுபடுவதற்கான காரணங்களும் விளக்கப்படுகின்-றன (காண்க: 3. 7. 2. 0). சமூகப் பணிகளில் பெண்கள் ஈடுபடுவ-தற்குரிய சூழல் சித்திரிக்கப்படுகின்றது. திருமணமாகாத இளம் பெண்கள் சமூகப்பணிகளில் பெரும்பான்மையாக ஈடுபடுவதில்லை என்ற குறிப்பிடத்தக்க கருத்து சமூக நாவல்களிலிருந்து அறியப்-படுகின்றது (காண்க: 3. 7. 3. 0.).

4. 1. 8. *விதவையர் நிலை*

விதவையர் நிலை பற்றிக் குறிப்பிடும் சமூகவியலார் வித-வையர் மறுமணம் பற்றியே மிகுதியாக ஆய்வு நடத்தியிருக்கின்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

றனர். சமூகவியலார் விதவையர் மறுமணம்பற்றித் தகவலாளி-களின் கருத்துக்களைப் பெற்று, மறுமணம் தேவை, தேவை-யில்லை எனும் கருத்துக்களைத் தொகுத்துத் தருகின்றனர். விதவையர் மறுமணத்திற்குரிய அனைத்துச் சூழல்களையும் சமூகவிய-லார் ஆராய்ந்ததாகத் தெரியவில்லை. இளம்விதவையர் பற்றிய ஆய்வில் மிகுதியாக ஈடுபடும் சமூகவியலார் முதிய விதவையர் நிலைபற்றி ஆய்ந்ததாகப் புலப்படவில்லை.

விதவை மறுமணத்தின் இன்றியமையாமையைச் சமூகவிய-லாரைப் போன்று சமூக நாவல் படைப்பாளிகளும் வலியுறுத்து-கின்றனர். ஒரு விதவையின் மறுமணத்திற்கு அவள் அண்ணனின் இல்லற வாழ்வு, அவள் குழந்தை, அவள் பெற்ற உயர்கல்வி, அவள் வாழும் இடப்பின்னணி ஆகியவை காரணங்களாகலாம் என்ற கருத்துக்கள் சமூக நாவல்களின் வழி பெறப்படுகின்றன (காண்க : 3. 8. 1. 4). விதவைகளின் அமைதியான வாழ்விற்கு அவர்களுக்கு ஒரு திசைமாற்றம் (Diversion) தேவை; திசைமாற்றம் இல்லையெனில் அவர்களுடைய வாழ்வில் ஏதேனும் குழப்பம் ஏற்-படுகின்றது; அக்குழப்பம் அவர்களை இயல்புப் பண்பு அற்றவர்-களாக (abnormal) மாற்றிவிடுகின்றது எனும் கருத்துக்களும் (காண்க : 3. 8. 1. 3) சமூக நாவல்கள் வழி பெறப்படுகின்றன. முதிய விதவையர் நிலை பற்றியும் சமூக நாவல்கள் சித்திரிக்கின்-றன (காண்க : 3. 8. 2. 0). இக்கருத்துக்கள் சமூகவியலார் ஆய்வு-களில் புலப்படவில்லை.

கள ஆய்வில் விதவை மறுமணத்தை ஆதரிக்கும் பெரும்-பான்மையான தகவலாளிகள் அதற்குரிய காரணமாகச் சூழலைக் குறிப்பிடுகின்றனர்.

4. 1. 9. *விலைமகளிர்*

ஒரு பெண் விலைமகளாக மாற அவள் குடும்ப நிலையும் சமுதாயமும் காரணங்கள் எனச் சமூகவியலார் குறிப்பிடுகின்றனர்.

ஒரு பெண் விலைமகளாக மாற சமூகவியலார் கூறும் காரணங்கள் மட்டுமே அடிப்படை எனக் கூறவியலாது; அவள் அவ்வாறு மாற அவள் மனநிலை தான் முதற்காரணம்; குடும்ப-நிலை, சமுதாயம் ஆகியவை துணைக்காரணங்கள்தாம் என்ப-தைச் சமூக நாவல்கள் சித்திரிக்கின்றன (காண்க; 3. 9. 4. 0).

கள ஆய்வில் பெண்கள் விலைமகளிராக மாற அவர்தம் மனநிலையும் சமுதாயமும் காரணங்களாகின்றன எனப் பெரும்-பான்மைத் தகவலாளிகள் குறிப்பிடுகின்றனர்

சமூகவியலார் குறிப்பிடும் சூழல்கள் பெரும்பான்மையான பெண்களின் வாழ்வில் தோன்றுபவைதாம்; எனினும், அச்சூழல்-களில் வாழும் அனைத்துப் பெண்களும் விலைமகளிராக மாறுவ-தில்லை. அவ்வாறு ஒருசிலர் விலைமகளிராவதற்கு அப்பெண்கள் மனத்தூண்டுதல்தான் அடிப்படை காரணமாகின்றது. உறுதி-யற்ற உள்ளம், தேவையற்ற அச்சம் ஆகியவைதான் ஒரு பெண்ணை விலைமகளாக்குகின்றன என்ற கருத்தைச் சமூக நாவல்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கள்வழி அறிகின்றபொழுது, விலைமகளிர் பற்றிய ஆய்வைச் சமூகவியலார் மேலும் விரிவாக நடத்தலாம்; அதன் வழி பல புதிய உண்மைகள் வெளிவரலாம் என்ற எண்ணம் எழுகின்றது. ஏனெனில் பாதுகாப்பு இல்லங்களில் (Rescue homes) வாழும் விலைமகளிர் அங்கு வாழ்வதை வெறுத்து மீண்டும் விலைமகள் வாழ்வையே விரும்புவது இதற்கு நல்லதொரு சான்றாகின்றது. இளம் குற்றவாளிகளைப் பற்றிய சமூகவியல் ஆய்வு, ஒருவன் குற்றமிழைக்க அவனது சூழல் மட்டும் காரணமாகாது; அதற்கு அவனது பண்பும் காரணமாகின்றது என்று குறிப்பிடுவதும் இக்கருத்துக்கு அரணாகின்றது. (Francis E.Merrill,, 1962, p.574).

4. 2. 0 இலக்கியத்தில் சமுதாயத் தாக்கமும், சமுதாயத்தில் இலக்கியத் தாக்கமும் ஒன்றையொன்று தழுவியவை. இலக்கியம் சமுதாய நிகழ்வுகளின் காரணங்களால் ஏற்பட்ட விளைவுமட்டுமல்ல; அது சமூக விளைவுகளுக்கும் காரணமாகின்றது (Wilbur Scott, 1979, p. 126) என்ற கூற்று, இலக்கியத்திற்கும் சமுதாயத்திற்கும் உள்ள நெருங்கிய தொடர்பைத் தெளிவாக்குகின்றது. சமுதாயத்தை விரிந்த கண்ணோட்டத்துடன் நாவல்களில் சித்திரிக்கும் படைப்பாளிகள், இலக்கியம் சமூகத் தரவுகளின் சிறப்பிடத்தைப் பெற பல புதிய முறைகளைப் பின்பற்றலாம். நாவலில் தான் சித்திரிக்கவிருக்கும் நிகழ்ச்சிகளைப் பற்றிய உண்மைகளை அறிய படைப்பாளி கள ஆய்வு மேற்கொள்ளலாம்; சமூகவியலார் சமுதாயத்தைப்பற்றி உருவாக்கும் புதிய கொள்கைகளை (theories) அறிந்துகொண்டு அவற்றின் அடிப்படையில் நாவலை எழுத முற்படலாம். சமுதாய மாற்றத்திற்கு ஒரு காரணமாக விளங்கும் படைப்பாளிகள் சமூகவியலையும் கற்றுத் தம்படைப்புக்களை உருவாக்கினால் இவர்தம் படைப்புக்கள் யதார்த்தம் நிறைந்து விளங்கலாம் சமூக ஆவணங்களின் சிறப்பையும் அடையலாம். எனவே, இலக்கியப் படைப்பாளிகள் தம் இலக்கியத்தில் உண்மையையும் கற்பனையையும் பிரித்தறிதற்குரிய வழி முறைகளைக் கண்டுபிடிக்கவேண்டியது இன்றியமையாதது என்பது தெளிவாகின்றது.

சமூகவியலாரும் சமூக நாவல்களைப் படித்துணர்ந்தால் அவர்கள் அணுகாத பல புதிய சிக்கல்களைப் படைப்பாளிகள் அணுகியுள்ளதை அறியலாம்; சமூகவியல் ஆய்வும் புதிய கோணங்களில் மேன்மேலும் வளரலாம் இலக்கியத்தில் காணப்படும் கற்பனைகளை நீக்கிவிட்டு சிக்கல்களை மட்டும் சமூகவியலார் எடுத்துக்கொண்டால் பல புதிய கொள்கைகளை அவர்கள் உருவாக்கலாம்.

ஒவ்வொரு வட்டாரமொழி பற்றியும் ஆய்வு மேற்கொள்ளப்படுவது போன்று ஒவ்வொரு வட்டார சமூக ஆய்வும் மேற்கொள்ளப்பட்டால் நாட்டில் பல்வேறு பகுதிகள் பற்றிய சமூகவியல் ஆய்வும் முழுமை பெறலாம்.

4. 3. 0. பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்களைச் சமூகவியலார் குறிப்பிடுவதற்கும், சமூக நாவல் படைப்பாளிகள் சித்திரிப்பதற்கும் ஆய்வாளருடைய களஆய்விற்கும் இடையேயுள்ள வேறுபாடுகளைக் கீழ்க்காணும் அட்டவணை விளக்குகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பட்டியல் I

சிக்கல்கள்	சமூகவியல்	சமூக நாவல்	ஆய்வாளரின் களஆய்வு
1) காதல்			
1. 1. காதலின் வெற்றிக்குத் தடை	1. இரு குடும்பங்களுக்கிடையேயுள்ள செல்வ வேறுபாடு 2. சாதி வேறுபாடு	1. இரு குடும்பங்களுக்கிடையேயுள்ள செல்வ வேறுபாடு 2. சாதி வேறுபாடு 3. குடும்பப் பகைமை 4. ஐயம் 5. காதலனின் மனமாற்றம் 6. காதலியின் விதவைத் தாயின் மறுமணம் 7. காதலியின் குடும்ப அவப்பெயர் 8. விதவையின் மீது கொள்ளும் காதல்	1. பெற்றோரின்எதிர்ப்பு 2. சாதி 3. வறுமை 4. சமுதாயம்
1.2. கலப்புக்காதல் வெற்றி பெறாமைக்குக் காரணம்	பெற்றோர் மரபினை மீறத் தயங்குகின்றனர்	பெற்றோர் வாழும் பின்னணி கலப்புக் காதலை ஏற்பதற்கும் மறுப்பதற்கும் காரணமாகின்றது.	பெற்றோரின் எதிர்ப்பு
2) திருமணம்			
2.1. வரதட்சிணை ஒழிப்பிற்கான தீர்வு	கூறப்படவில்லை	கூறப்படுகின்றது	பெரும்பான்மையோர் குறிப்பிடவில்லை. சமூக நாவல்கள் கூறும் தீர்வினை ஏற்றுக் கொள்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2.2. மணமக்கள் விருப்பமின்றி நடைபெறும் திருமணம்	குறிப்பிடப்படவில்லை	குறிப்பிடுகின்றது	வினாப்பட்டியலில் இடம் பெறவில்லை.
2. 3. ஆடவன் மறுமணம் செய்து கொள்வதற்குரிய காரணங்கள்	காரணங்கள் குறிப்பிடவில்லை.	1. குழந்தை வளர்ப்பு 2. ஆடவனின் இல்லற இன்ப நாட்டம் 3. முதல் மனைவியின் உடல் நோய் 4. முதல் மனைவிக்கு மகப்பேறின்மை 5. காதல்	1. குழந்தை வளர்ப்பு 2. ஆடவனின் இல்லற இன்ப நாட்டம் 3. முதல் மனைவிக்கு மகப்பேறின்மை 4. முதல் மனைவியின் உடல் நோய் 5. காதல் 6. ஒரு பெண்ணின் சொத்து
2. 4. பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட இசைவதற்குக் காரணங்கள்	வறுமை	1. வறுமை 2. பகட்டான வாழ்வில் நாட்டம் 3. காதல்	1. வறுமை 2. பகட்டான வாழ்வில் நாட்டம் 3. காதல் 4. பொருத்தமான மணமகன் கிட்டாமை 5 மூத்தமனைவி தமக்கையென்றால் அவளின் குழந்தைகளை வளர்க்க
2. 5. ஆடவனின் மறுமண இல்லற வாழ்வுச் சிக்கல்	குறிப்பிடவில்லை	அமைதியற்ற வாழ்வு எனச் சித்திரிக்கின்றனர்.	அமைதியற்ற வாழ்வு என்பதனைத் தகவலாளிகளுள் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3) **கணவன் - மனைவி உறவு** கணவன்-மனைவி உறவு பாதிப்பிற்கான காரணங்கள்	குடும்ப வாழ்வில் கணவன் மனைவி பெறும் பங்கு குறிப்பிடப்படுகின்றதே-யன்றி உறவுப் பாதிப்பிற்-கான காரணங்கள் குறிப்-பிடப்படவில்லை.	குடும்பவாழ்வில் கணவன்-மனைவி பெறும் பங்குடன் அவர்களின் உறவுப் பாதிப்பிற்கான காரணங்களும் குறிப்பிடப்படுகின்றன	உறவுப் பாதிப்பிற்குச் சமூக நாவல்கள் குறிப்-பிடும் காரணங்களைத் தகவலாளிகள் ஏற்கின்-றனர்.
4) **தாய்மனம்** தாய்மனப் பாதிப்பிற்-கான காரணங்கள்	1. மாமியார்-மருமகள் உறவு பாதிப்பு 2. தாயின் தீய ஒழுக்கம் காரணமாக மகன் கொள்ளும் வெறுப்பு 3. மருமகளின் தனிக் குடும்ப ஆசை	1. மாமியார்-மருமகள் உறவு பாதிப்பு 2. தாயின் தீயஒழுக்கம் காரணமாக மகன் கொள்ளும் வெறுப்பு 3. கணவனின் இறப்பு 4. கணவனின் கொடுமை 5. குழந்தையின் இறப்பு 6. தாயின் குலச்சிறுமை 7. தாயின் மறுமணம் 8. குடும்ப வறுமை 9. தாய் மகன்மீது காட்-டும் மிகுதியான அன்பு 10. தாய் பாலுறவுமீது கொள்ளும் வெறுப்பு	வினாப்பட்டியில் இடம் பெறவில்லை.
5) ***மாமியார் - மருமகள் உறவு*** மாமியார்-மருமகள் உறவு நிலை	பாதிக்கப்பட்ட நிலை	1. அன்புமிக்க உறவு 2. பாதிக்கப்பட்ட உறவு. பெண்ணின் தலைமை-யில் குடும்பம் நடப்பது உறவு பாதிப்பதற்குக் காரணம் எனக் குறிப்பி-டுகின்றன.	பாதிக்கப்பட்ட உறவு என ஆடவரும் பெண்டி-ரும் குறிப்பிடுகின்றனர். பெண்கள் பாதிக்கப்பட்ட உறவு நிலையை ஒத்துக் கொள்ள மறுக்கின்றனர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6) குடும்ப உறவுகள்

6. 1. தந்தை-மகள் உறவு	பாசமிக்க உறவு.	1. பாசமிக்க உறவு 2. பாதிக்கப்பட்ட உறவு	பாசமிக்க உறவு
6. 2. உடன்பிறந்தார் உறவு	பாசமிக்க உறவு	பாசமிக்க உறவு	பாசமிக்க உறவு
6.3 தாயின் உடன் பிறந்தார் உறவு			
6.3.1 தாயின் சகோதரிகளுடன் உறவு	விளக்கமாகக் கூறப்படவில்லை	மிகுதியான சித்திரிப்பு இல்லை.	பெரும்பான்மையோர் விடை தரவில்லை.
6.3.2 தாயின் சகோதரர்களுடன் உறவு	பொறுப்பு நிறைந்த உறவு	1. பொறுப்பு நிறைந்த உறவு 2. பொறுப்பற்ற உறவு	சமூக நாவல்களின் கருத்துக்களை ஏற்கின்றனர்.
6.3.3 தந்தையின் உடன்பிறந்தார் உறவு	விளக்கமாகக் கூறப்படவில்லை	விளக்கமாக சித்திரிக்கப்படவில்லை.	வினாப்பட்டியில் இடம் பெறவில்லை.
6.3.4 நாத்தனார் உறவு	பெரும்பான்மையாகச் சிக்கல் நிறைந்த உறவு	1. சிக்கல் மிகுந்த உறவு 2. சிக்கல் அற்ற உறவு	பெரும்பான்மை சிக்கலற்ற உறவு
6.3.5. மாமனார்-மருமகள் உறவு நிலை	நெருக்கமற்ற உறவு	நெருக்கமற்ற உறவு	பாசமிக்க உறவு
6.3 6. நாத்தனார் கணவர், கணவனின் சகோதரருடன் உறவு நிலை	நெருக்கமற்ற உறவு	நெருக்கமற்ற உறவு	நெருக்கமற்ற உறவு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

7) உழைக்கும் பெண்கள்			
7.1. அலுவல் மகளிர்	திருமணமான அலுவல் மகளிர் பற்றிய ஆய்வு மிகுதி. திருமணமாகாத அலுவல் மகளிர் பற்றிய ஆய்வு குறைவு	திருமணமான அலுவல் மகளிர் பற்றிய சித்திரிப்பு இல்லை; திருமணமாகா அலுவல் மகளிர் பற்றிய சித்திரிப்பு மிகுதி.	வினாப்பட்டியில் இடம் பெறவில்லை.
7.2. வீட்டுப் பணிப்பெண்கள். சமூகப் பணிப் பெண்கள்	விரிவாகக் குறிப்பிடவில்லை.	பணியில் ஈடுபடுவதற்குரிய சூழல்களும், காரணங்களும் சித்திரிக்கப் படுகின்றன.	வினாப்பட்டியில் இடம் பெறவில்லை.
8) விதவையர் நிலை			
மறுமணம்	தேவை, தேவை இல்லை என்பது பற்றிய ஆய்வுக் கருத்துக்கள் தொகுத்துத் தரப்படுகின்றன.	1. மறுமணத்திற்கான காரணங்கள், சூழல்கள், விளக்கப்படுகின்றன. 2. விதவையர் வாழ்வில் திசைமாற்றம் தேவை என்பதைக் குறிப்பிடுகின்றன.	மறுமணம் தேவை என்பதைக் கூறுவதுடன் அது விதவையின் சூழலைப் பொறுத்தது என்றும் குறிப்பிடுகின்றனர்.
9) விலை மகளிர்			
ஒரு பெண் விலைமகள் ஆவதற்குரிய காரணங்கள்	சமுதாயம்	மனநிலை முதற்காரணம், சமுதாயம் துணைக்காரணம்.	சமுதாயமும் மனநிலையும் காரணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. 4. 0. சமுதாயத்துடன் கலை கொள்ளும் உறவு மிக இன்றியமையாதது எனும் மரபுடன் சமூகவியல் திறனாய்வு தொடங்குகின்றது; இவ்வுறவினைக் கண்டு பிடிப்பது (இனம் கண்டுகொள்வது) கலைப் படைப்பில் அழகுணர்வைத் தோற்றுவிப்பதுடன் ஆழப்படுத்தவும் செய்கின்றது. கலை வெற்றிடத்தில் உருவாவது இல்லை; யாரோ ஒருசாதாரண மனிதனால் கலை படைக்கப்படுவதில்லை; சமுதாயத்தில் ஓர் இன்றியமையா அங்கத்தினனாகிப் பின்னிப் பிணைந்து காலத்தாலும், இடத்தாலும் நிலைபேறு பெறும் ஒருவனால் அது படைக்கப்படுகின்றது. எனவே, சமூகவியல் திறனாய்வாளன் சமுதாயச் சூழலையும், அதற்கேற்ப படைப்பாளன் எத்தகைய தூண்டுதலுக்கு இலக்காகின்றான் என்பதையும் புரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுபவனாக அமைகின்றான் (Wilber Scott, 1971, p. 123).

இலக்கியம் ஒரு காலக்கண்ணாடி. அது சமுதாயத்தின் எதிரொளியாகவும், ஒளிமுறியாகவும் (Reflection and Refraction) விளங்குகின்றது. அவ்வக் காலச் சமுதாயத்தைச் சித்திரித்துக்காட்டும் வரலாற்று சமூக ஆவணங்களுள் இலக்கியத்தையும் ஒன்றாகக் கொள்ளலாம். படைப்பாளிகளின் இலக்கியங்களில் கற்பனையை நீக்கிவிட்டால் எஞ்சியிருப்பன உண்மைகளே. வரலாற்று நாவல்களுக்குச் சான்றாதாரங்களாகச் செப்பேடு, கல்வெட்டு முதலியன இருப்பதால் வரலாற்று நாவல்களில் வரலாற்றின் அளவினையும், கற்பனையின் அளவினையும் எளிதாகப் பகுக்கமுடிகின்றது.

சமூக நாவல்களில் கற்பனையினையும், உண்மையினையும் பிரித்துக்காண தக்க வழிமுறைகள் இல்லை. இலக்கிய ஆய்வாளர்கள் இலக்கியங்களில் கற்பனை எது, உண்மை எது என அறிய வழிமுறைகளைக் கண்டுபிடிக்கவேண்டும். சமூகவியலறிஞருக்குச் சமூக நாவல்களைப் படித்துத்தான் சமுதாயத்தைஅறிந்துகொள்ளமுடியம் என்ற தேவை இல்லை. தரவுகளின் வழி அவர்களால் சமுதாயத்தை அறிந்து கொள்ளமுடியும். சமூகவியலறிஞர்களுக்கு உண்மையான தரவுகள்தாம் தேவை; கற்பனை தேவை இல்லை. சமூக நாவல்களில் கற்பனை கலந்திருப்பதால் அவற்றை உண்மைத் தரவுகளெனக் கொள்ளமுடியாது. படைப்பாளி இலக்கியச்சுவைக்குத்தான் முதலிடம் அளிப்பான். இலக்கியச் சுவைக்குக் கற்பனை அவனுக்குத் துணைபுரிகின்றது. எனவே, இலக்கியத்திலிருந்து கற்பனையைப் பிரித்தறிய வழிமுறைகளைக் கண்டுபிடிக்க வேண்டியது இன்றியமையாத் தேவையாகின்றது. இதைக்கண்டுணர்ந்தால் சமூக நாவல்கள் சிறப்பான சமூகத்தரவுகளாக விளங்க முடியும்.

தற்காலச் சமூக நாவல்களில் சித்திரிக்கப்படும் நிகழ்ச்சிகளில் கற்பனையின் அளவினையும் உண்மையின் அளவினையும் பிரித்தறியக் களஆய்விற்குப் பயன்படும் தகவலாளிகள் ஓரளவு உறுதுணையாக விளங்குகின்றனர். எனவே, கற்பனையினை நீக்கி உண்மையினை அறிய களஆய்வினை மேற்கொள்வது ஒரு முறை எனலாம். அந்த முறையே இவ் ஆய்வில் கையாளப்படுகின்றது.

நாவல்களில் எந்தச் சாதியில், எந்தப் பகுதியில் சிக்கல்கள் சித்திரிக்கப்படுகின்றனவோ, அந்தச் சாதியில், அந்தப் பகுதி-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லேயே கள ஆய்வு நடத்தப்பெறவேண்டும். ஆனால் லக்ஷ்மி, சூடாமணி ஆகியோரின் நாவல்களில் பெரும்பான்மையான பாத்திரங்களின் சாதி குறிப்பிடப்படவில்லை. எனவே, ஆய்வாளர் கள ஆய்வும் பொதுவான போக்கிலேயே நடத்தப்பெற்றது.

சமூக நாவல்கள் நடப்பியலை ஒட்டிச் செல்கின்றனவா என்பதைச் சமூகவியலார் கருத்துக்களோடு மட்டுமின்றி நடப்பியல் கருத்துக்களோடும் ஒப்பிட்டு ஆய்வது இன்றியமையாத் தேவையாகின்றது. நடப்பியலைக் கண்டறிய களஆய்வு துணைபுரிகின்றது. நடப்பியலில் காணப்படும் சிக்கல்களுடன் சமூக நாவல்களில் சித்திரிக்கப்படும் சிக்கல்கள் எந்த அளவிற்கு ஒத்துச் செல்கின்றன; வேறுபடுகின்றன என்பதைக் கீழ்க்கண்ட அட்டவணை விளக்குகின்றது:

பட்டியல் 2

	சிக்கல்கள்	சமூக நாவல்கள்	ஆய்வாளரின் கள ஆய்வு
1.	மரபுத் திருமணத்தை விரும்புபவர்	46.2*	51.75
2.	மரபுமீறிய திருமணத்தை விரும்புபவர்	53.8	44 84
3.	தன்னை மணக்கவிருக்கும் ஆடவனிடம் நல்ல பண்புகளை விரும்பும் பெண்கள்	75.00	75.79
4.	தன்னை மணக்கவிருக்கும் பெண்ணிடம் நல்ல பண்புகளை விரும்பும் ஆடவர்கள்	37.50	35.00
5,	தன்னை மணக்கவிருக்கும் பெண்ணிடம் அழகினை எதிர்பார்க்கும் ஆடவர்கள்	62.50	11.76
6.	கலப்புத் திருமணத்தை ஆதரிப்பவர்கள்	23.51	23.84
7.	உடற்குறை திருமணத்திற்குத் தடை	70.50	68.37
8.	வரதட்சிணை கொண்டு வராததற்காக மாமியார் மருமகளைக் கொடுமைப் படுத்துவது இல்லை.	40.00	65.73
9.	காதல் தோல்வி பழிவாங்கும் உணர்ச்சியைத்தோற்றுவிக்கின்றது.	40.00	29.23
10.	இளம் விதவையர்க்கு மறுமணம் தேவை	20.00	38.35
11.	ஆடவனின் மறுமணத்திற்குக் காரணங்கள்:		
i	மூத்த மனைவிக்கு மகப்பேறின்மை	9.00	36.00
ii	மனைவியின் உடல்நோய்	9.00	8.26
iii	காதல்	9.00	8 90
iv	இல்லற இன்ப நாட்டம்	18.00	17.61

* எண்கள் விழுக்காடாகத் தரப்பட்டுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	சிக்கல்கள்	சமூக நாவல்கள்	ஆய்வாளரின் களஆய்வு
12.	ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட இசைவதற்குக் காரணம்:		
i.	வறுமை	27.30	53.70
ii.	பகட்டான வாழ்வில் நாட்டம்	9.00	7.00
13.	மறுமணம் செய்துகொள்ளும் ஆடவனின் இல்லற வாழ்வு அமைதியற்றது	63.63	66.50
14.	மறுமணம்செய்து கொள்ளும் ஆடவன் மூத்த மனைவியின் குழந்தைகளிடம் அன்பு செலுத்த அஞ்சுகின்றான்.	45.45	44.00
15.	மாமியார்-மருமகள் உறவு பாதிக்கப்பட்ட உறவாகவே காணப்படுகின்றது.*	76.92	35.88
16.	நாத்தனார் உறவு சிக்கலற்றது	81.80	79.40
17.	கணவரின் சகோதரர் மனைவியருடன் உள்ள உறவு சிக்கலற்றது	—	40.46
18.	சகோதரியின் குழந்தைகளை அவள் சகோதரன் பொறுப்பேற்று வளர்க்கின்றார்	66.60	69.50
19.	மாமனார் மருமகளிடம் நெருங்கிப் பழகுவதில்லை	80.00	27.80
20.	மாற்றாந்தாய் தன் மூத்தாள் குழந்தைகளைக் கொடுமைப்படுத்துகின்றாள்	71.42	69.60

4. 4. 2. லக்ஷ்மி, சூடாமணி ஆகியோரின் நாவல்கள் நடப்பியலை ஒட்டிச் செல்கின்றனவா, செல்லவில்லையா என்பதனை மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிடப்படும் சிக்கல்களை வகைப்படுத்துவதன்வழி அறிந்து கொள்ளலாம்.

அட்டவணை குறிப்பிடும் சிக்கல்களை இருவகைப்படுத்தலாம். அவை :

1) நாவல்களும் நடப்பியலும் ஒட்டிச்செல்லும் சிக்கல்கள்
2) நாவல்களும் நடப்பியலும் முரண்படும் சிக்கல்கள்

4. 4. 2. 1. நாவல்களும் நடப்பியலும் ஒட்டிச்செல்லும் சிக்கல்கள்

1. தன்னை மணக்கவிருக்கும் ஆடவனிடம் நல்ல பண்புகளை விரும்பும் பெண்கள் (3).

*மாமியார்-மருமகள் உறவு பற்றிய உண்மைக் கருத்துக்களைக் கூறத் தகவலாளிகளில் பலர் தயங்கியதாலும் மறுத்தமையாலும் கள ஆய்வுத் தகவலை முழுமையாக ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. கலப்புத் திருமணத்தை ஆதரிப்பவர்கள் (6).

3 உடற்குறை திருமணத்திற்குத் தடை (7).

4. ஆடவனின் மறுமணத்திற்கு மனைவியின் உடல்நோய் காரணமாகின்றது (11.2).

5. ஆடவனின் மறுமணத்திற்குக் காதல் காரணமாகின்றது (11.3).

6 ஆடவனின் மறுமணத்திற்கு இல்லற இன்பநாட்டம் காரணமாகின்றது (11.4).

7. ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட அவள் பகட்டான வாழ்வில் கொள்ளும் நாட்டம் காரணமாகின்றது (12 2).

8. மறுமணம் செய்துகொள்ளும் ஆடவனின் இல்லறவாழ்வு அமைதியற்றுக் காணப்படுகின்றது (13).

9. மறுமணம் செய்துகொள்ளும் ஆடவன் மூத்த மனைவியின் குழந்தைகளிடம் அன்புசெலுத்த அஞ்சுகின்றான் (14).

10 நாத்தனார் உறவு சிக்கலற்றது (16)

11. சகோதரியின் குழந்தைகளை அவள் சகோதரன் பொறுப்பேற்று வளர்க்கின்றான் (18)

12. மாற்றாந்தாய் தன் மூத்தாள் குழந்தைகளைக் கொடுமைப் படுத்துகின்றாள் (20)

4. 4. 2. 2. நாவல்களும் நடப்பியலும் முரண்படும் சிக்கல்கள்

1. மரபுத் திருமணம் (1. 2).

2. காதல் திருமணம் (9).

3. ஆடவர் தன்னை மணக்கவிருக்கும் பெண்ணிடம் நற்பண்புகளைவிட அழகை எதிர்பார்க்கின்றனர் (5)

4. வரதட்சிணை கொண்டு வராததற்காக மாமியார், மருமகளைக் கொடுமைப்படுத்துவதில்லை (8).

5 காதல் தோல்வி பழிவாங்கும் உணர்ச்சியைத் தோற்றுவிக்கின்றது. (9).

6. இளம் விதவையர்க்கு மறுமணம் தேவை. (10)

7. ஆடவனின் மறுமணத்திற்கு, மூத்த மனைவிக்கு மகப்பேறின்மை காரணமாகின்றது (14)

8. ஒரு பெண் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்பட அவள் வறுமை காரணமாகின்றது. (12.1).

9. கணவரின் சகோதரர் மனைவியருடன் கொள்ளும் உறவு சிக்கலற்றது (40).

10. மாமனார் மருமகளிடம் நெருங்கிப் பழகுவதில்லை (19)

நாவல்களும் நடப்பியலும் முரண்படும் பத்துச் சிக்கல்களுள் மிகுதியான மாறுபாடு உடையனவாக எட்டுச் சிக்கல்கள் காணப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

படுகின்றன. மரபுத் திருமணம், காதல் திருமணம் என்ற சிக்கல்களில் வேறுபாடு 10 விழுக்காடுகளுக்கும் குறைவாகவே காணப்படுகின்றது, ஏனைய சிக்கல்களில் இளம் விதவையர் மறுமணம் தேவை என்ற கருத்து நாவல்களில் குறைந்தும் நடப்பியலில் மிகுந்தும் காணப்படுவதற்குக் காலவேறுபாடு காரணம் எனலாம்.* கணவரின் சகோதரர் மனைவியருடன் உள்ள உறவு சிக்கலற்றது என்ற கருத்து நாவல்களில் இடம் பெறவில்லை. நடப்பியலில் 40 விழுக்காட்டினர் சிக்கலற்ற உறவை ஆதரிக்கின்றனர். கணவரின் சகோதரர் மனைவியருடன் உள்ள உறவு சிக்கல் மிகுந்தது எனக் காட்டும் நாவல்கள் கூட்டுக் குடும்ப வாழ்வைச் சித்திரிப்பனகள ஆய்வுத் தகவலாளிகள் தனிக்குடும்ப வாழ்வினை நடத்துவதால் அவர்களுக்கு இவ்வுறவு சிக்கலற்ற உறவாக அமைந்திருக்கலாம். எனவே, குடும்ப அமைப்பு இவ்வேறுபாட்டிற்குக் காரணம் எனலாம். மாமனார் மருமகள் நெருங்கிப் பழகுவதில்லை என்ற கருத்து நாவல்களில் மிகுதியாகக் காணப்பட, நடப்பியலில் குறைந்து காணப்படுகின்றது. கூட்டுக் குடும்பம், தனிக் குடும்பம் என்ற வேறுபாட்டையே இதற்கும் காரணமாகக் கூறலாம். மேலும் இன்றைய மருமகள்களின் கல்வியறிவும் இதற்குக் காரணம் எனலாம்.

எஞ்சி இருக்கும் ஐந்து சிக்கல்கள் முரண்பட்டவையாய் காணப்படுகின்றன. மொத்தச் சிக்கல்கள் இருபத்திரண்டில் ஐந்து சிக்கல்கள் தாம் முரண்பட்டனவாகக் காணப்படுவதால் நாவல்கள் நடப்பியல் சிக்கல்களையே சித்திரிக்கின்றன என்பது புலனாகின்றது. எனவே, லக்ஷ்மி, சூடாமணி ஆகியோரின் நாவல்கள் பெரும்பாலும் நடப்பியலையே சித்திரிக்கின்றன என்று கருத முடிகின்றன.

* நாவல்கள் 1974-ஆம் ஆண்டிற்குள் எழுதப்பட்டவை: கள ஆய்வு 1980-ஆம் ஆண்டு நடத்தப்பட்டது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு 1

படைப்பாளிகளுக்கு ஆய்வாளர் விடுத்த வினாப்பட்டிகள்

(அ) ஆய்வாளர் லக்ஷ்மிக்கு அனுப்பிய வினாப்பட்டி

1. 0. காதல்

1. 1. தங்கள் நாவலான 'அரக்கு மாளிகை'யில் வீட்டு-வேலைக்கென வந்த பெண் அவ்வீட்டுத் தலைவனை மணக்கின்-றாள் என்று தாங்கள் சித்திரிப்பது நடப்பியலுக்குப் பொருந்தும் என எண்ணுகிறீர்களா ?

விடை : ஏன் பொருந்தாது ? எங்கள் ஊரில் கண்ணால் கண்ட நிகழ்ச்சியைத்தான் நான் கதையாக எழுதினேன். எங்கள் ஊர் ஜமீன்தார் அவ்வூரில் மோர் விற்ற பெண்ணை மணந்து கொண்டார். நாவல்களில் காணப்படுவதைவிட உண்மை புதுமை-யாகக் காணப்படும் (Truth is stranger than a fiction). ஆனால் வாழ்க்கையில் இவ்வுண்மை பொதுவாகச் செயல்படாது. இயல்-பல்லாத நிகழ்ச்சிகளைக் கற்பனையில் எழுதியுள்ளேன். ஆனால் இது நடந்த நிகழ்ச்சியே.

1. 2 இருவேறு சாதியினரிடைத் தோன்றும் காதல் வெற்றி பெற்றதாகத் தங்களின் எந்த நாவலும் சித்திரிக்கவில்லையே, ஏன் ? இருவேறு சாதியினரிடைத் தோன்றும் காதலில் தங்களுக்கு நம்பிக்கை இல்லையா ? 1974-க்குப் பின்னர் எழுதிய நாவல்களில் இக்காதலை ஆதரித்திருக்கிறீர்களா ?

விடை : நான் கதை எழுதிய காலத்தில் கலப்புத் திருமணம் என்பது மிகவும் சிக்கல் நிறைந்ததாகக் காணப்பட்டது. தன் சாதி-யில்லாத பெண்ணை ஒருவன் மணம் செய்து கொண்டால் அவனைச் சாதியைவிட்டே விலக்கிவிடுவார்கள். கலப்புத் திருமணம் ஒரு குற்-றம் மிகுந்த செயல் என்றே கருதப்பட்டது. எனவே, அக்காலச் சூழலுக்கேற்ப எழுதினேன். 1974க்குப் பிறகு எழுதிய 'வைரமூக்-குத்தி' எனும் நாவலில் கலப்புத் திருமணத்தின் வெற்றியைச் சித்-திரித்துள்ளேன். ஆனால் என் அனுபவத்தில் கலப்புத் திருமணம் தோல்வியடைவதையே கண்டிருக்கிறேன். எனவே, கலப்புத் திரு-மணத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை என்றுதான் கூறுவேன்.

1. 3. ஃப்ராய்டிசக் கொள்கைகளைக் கருவாகக் கொண்டு-நாவல்கள் பல எழுந்துள்ளன; பல எழுத்தாளர்கள் கையாண்டி-ருக்கின்ற மகளுக்கு தந்தைமீது ஏற்படும் காதல் (Electra Complex)

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மகனுக்குத் தாய்மீது ஏற்படும் காதல் (Oedipus Complex) போன்ற காதல் நிலைகளைத் தங்கள் நாவல்களில் காணமுடிவதில்லை ஏனெனில் பெண் எழுத்தாளர்களும் இவ்வகைக் காதலைத் தம்-கதைகளில் சித்திரிக்கின்றனர். தாங்கள் சித்திரிக்காததற்குக் காரணம்?

விடை : என்னுடைய 'பட்டமரம் துளிர்க்கும்' என்ற குறு-நாவலில் (1974க்குப்பின் வந்தது) இவ்வகைக் காதலைச் சித்திரித்-துள்ளேன் அப்பாவிற்குப் பெண் மீது அதிக அன்பு, அம்மாவிற்குப்-பிள்ளை மீது அதிக அன்பு. ஆனால் இதை ஓர் ஆணுக்கும் பெண்-ணுக்கும் இடையே தோன்றும் காதலாகக் காட்டவில்லை. பொது-வாக sex என்பது என்னைப் பொறுத்தவரை புனிதமானது. எனவே என்னுடைய எந்த நாவல்களிலும் நான் Pathology of sex-ஐச் சித்திரிக்கமாட்டேன். அது எனக்குப் பிடிக்காது

1. 4 காதலில் தோல்வியுற்றவர் தன்னால் காதலிக்கப்பட்ட-வரைப் பழிவாங்கத் துணிவர் என்ற கருத்து தங்களது "லட்சிய-வாதி', 'நாயக்கர் மக்கள்' ஆகிய நாவல்களில் காணப்படுகின்றது. ஆனால் இவ்வினாவை என்னுடைய தகவலாளிகளில் 67.6% மறுத்-திருக்கின்றனர். இது பற்றிய தங்கள் கருத்து என்ன?

விடை : நான் என்ன, ஷேக்ஸ்பியரே இச்சிக்கலைச் சித்தி-ரித்துள்ளாரே! காதலில் தோல்வியுற்ற பெண்ணுக்குக் கொலை செய்யவும் ஆத்திரம் வரும் இது பற்றிய செய்திகளைத் தினத்-தாளிலும் நாம் படிக்கிறோமே.

1. 5. தங்கள் நாவல்களில் காதலின் தோல்வியைவிட, காத-லின் வெற்றிதான் மிகுதியாகச் சித்திரிக்கப்பட்டிருக்கின்றது, நடப்-பியலுக்கு இது பொருந்துமா?

விடை: மங்களகரமான முடிவுதான் எனக்குப்பிடிக்கும். வாச-கர்களும் அதனையே விரும்புகின்றார்கள். நான் எழுதிவரும் கதை-களை மங்களமாகவே முடிக்கும்படி நாள்தோறும் வாசகர்கள் எனக்-குக் கடிதம் எழுதுகின்றார்கள். வாசகர்கள் எண்ணங்களைப் பிரதி-பலிப்பதுதான் எனக்கு விருப்பம். பொதுவாக என்கதைகளே 'சுபத்தில்' தான் முடியும். என்னுடைய அடிமனதிலும் எனக்குச் சுப முடிவுதான் பிடிக்கும்.

2. 0. *திருமணம்*

2. 1. தங்களுடைய நாவல்களில் விதவை மறுமணம் நடை பெறும் சித்திரிப்பே காணப்படவில்லை. விதவையரைத் திருமணம் வரை அழைத்துச் சென்று, திருமணம் தடைபடுவதாகக் காட்டுகி-றீர்கள் (நாயக்கர் மக்கள், அடுத்தவீடு). காரணம் என்ன? விதவை மறுமணத்தில் தங்களுக்கு உடன்பாடு இல்லையா ?

விடை : இக்கேள்விக்கும் கலப்புக்காதலுக்கு நான் சொன்ன பதிலைத்தான் சொல்ல வேண்டும் அக்காலச் சமுதா-யத்தில் விதவை மறுமணம் எல்லாம் புகழ் பெற்றதாகக் காணப்-படவில்லை. இன்றைய எழுத்தாளர்களில் சாண்டில்யன், துமிலன்,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நான் எல்லோரும் நீண்ட காலமாக எழுதிவருகிறவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றோம். எங்களுக்கு புரட்சி என்பதில் நம்பிக்கையில்லை. எங்களது சுற்றுப்புறச் சூழல்களில் எவற்றைக் காண்கின்றோமோ அவற்றைச் சிறிது கற்பனை சேர்த்து எழுது-கின்றோம். பெண்களில் சிலரே விதவை மறுமணத்திற்குத் தயாரா-யில்லை. 1954-1955-இல் இங்கு மருத்துவராகப் பணியாற்றிய பொழுது நான் ஒரு ஆசிரியர் பயிற்சிப்பள்ளிக்குச் சென்றேன் அங்கு 10 வயதில் விதவையானவர்களிலிருந்து பல விதவையர் இருந்தார்கள். நான் ஒரு பெண்ணிடம் 'நீ மறுமணம் செய்து கொள்ளக்கூடாதா?' என்று கேட்டபொழுது, 'நான் கல்யாணம் செய்துகொண்டால் என் அண்ணன் தூக்குப் போட்டுக்கொண்டு செத்துவிடுவான்' என்றாள். இத்தனைக்கும் திருமணத்தன்றே அவள் கணவன் மணமேடையிலேயே வாந்தி எடுத்து இறந்து விட்டானாம். அந்தக்காலத்தில் பெண்களுக்குத் துணிச்சலுமில்லை; விருப்பமுமில்லை. 90% ஆண்களுக்கு Superiority Complex இருக்-கிறது. மேனாட்டு நாகரிகத்தைப் பின்பற்ற விரும்பும் நமக்கு, நமது பழைய சம்பிரதாயங்களை விடவும் மனது இல்லை இது தான் உண்மை நிலை. ஓர் ஆண் ஒரு விதவையை மணந்து கொண்டாலும் அவளுக்கு உரிய இடத்தைத் தரமாட்டான். அப்படி விதவையை மணந்து கொள்கின்றவர்களும் தன்னல நோக்கத்திற்-குத்தான் மணந்து கொள்கிறார்கள் என்பேன். இன்னும் விதவை மறுமணம் நம்நாட்டில் வெற்றிபெறவில்லை.

2 2. 'பவானி' எனும் நாவலில் தாங்கள் ஒரு பெண் முதல் மனைவியை இழந்த, 9 வயது பெண்ணை உடைய ஒருவனைக் காதலித்து மணந்துகொள்வதாகச் சித்திரிக்கின்றீர்கள். ஒரு பெண் காதலித்து ஒருவனுக்கு இரண்டாம் மனைவியாக விரும்புவது நடக்குமா? நடந்த நிகழ்ச்சியா?

விடை: இது நடந்த நிகழ்ச்சிதான். இதயநோய் நிபுண-ரான கிரிஸ்டோபர்பெர்னாண்டு (Christopher Fernand) மனைவியை விவாகரத்து பண்ணிவிட்டார். அவருக்கு உள்ள புகழைக் கண்டு மயங்கிய பதினாறு வயதுப் பெண் அவரைக் காதலித்து மணந்து கொண்டாள். அறிவு பூர்வமான துணை வேண்டும் என எண்ணும் பெண்கள் தன்னைவிட வயதில் மிகவும் மூத்தவரையே விரும்பி-மணப்பது என் அனுபவத்தில் கண்ட உண்மை. நடந்த நிகழ்ச்சி-யும், கிரிஸ்டோபர் பெர்னாண்டு வாழ்க்கை நிகழ்ச்சியும் கலந்து உருவானதுதான் 'பவானி' கதை.

2. 3. தங்கள் நாவல்களில் வரதட்சிணை பற்றிக் குறிப்பிடும் தாங்கள் வரதட்சிணையை ஒழிக்க என்ன செய்யலாம் என்பது போன்ற கருத்துக்களைக் கூறவில்லையே, ஏன்?

விடை: நான் கதை எழுதிய காலத்தில் இப்பொழுது போன்று வரதட்சிணைக் கொடுமை மிகுதியாக இல்லை எனலாம். வரதட்சிணையினால் அன்றும் குடும்பங்களில் சண்டை நடந்தது. ஆனால் சண்டை போட்டுக் கொண்டே அவர்கள் இன்னும்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

தொடர்ந்து வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள். தினமணி கதிர் இதழில் நான் எழுதி வருகிற 'மங்களாவின் கணவன்' என்ற கதையில் வரதட்சிணைக் கொடுமையை எழுதுகிறேன். திருமணம் செய்து கொள்கின்ற ஆண் தானாக வரதட்சிணை வாங்கமாட்-டேன் என முன்வந்தாலொழிய சமுதாயத்தில் வரதட்சிணைக்-கொடுமை ஒழியாது.

2. 4 காதல் திருமணம் நம் நாட்டில் வெற்றி பெற்றுள்-ளதா? உடற்கவர்ச்சியின் அடிப்படையில் நடந்த காதல் திருமணம் கவர்ச்சி குறைந்து நடப்பியல் வாழ்விற்கு வரும்பொழுது தோல்வி அடைகின்றது என்பது என் கருத்து. இதுபற்றிய தங்கள் கருத்து?

விடை : உங்கள் கருத்தை நான் ஏற்றுக்கொள்கின்றேன். கவர்ச்சி மட்டும்தான் காதல் திருமணத்திற்கு அடிப்படையாக இருக்கிறது பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் தம்பதி-யருக்குப் பக்கபலம் இருக்கிறது. காதல் திருமணத்தில் இது-இல்லை. காதல் திருமணம் 75% கோளாறாகத்தான் இருக்கிறது. எனக்குத் தெரிந்த இடத்தில் பாங்க் ஆபீசராக இருந்த பெண், அந்த பாங்க் பியூனின் கட்டுமஸ்தான உடலழகைக் கண்டு காதல் கொண்டாள் பெற்றோரின் எதிர்ப்புக்கிடையே திருமணமும் செய்து கொண்டாள். இப்பொழுது பியூன் அவளைக் கொடுமைப் படுத்த, துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றாள். கணவன் – மனை-விக்கு இடையே தினமும் பூசல்தான். பெற்றோரால் நிச்சயிக்கப்-பட்ட திருமணத்தில் கணவன்-மனைவிக்கு இடையே பூசல் ஏற்-பட்டாலும் உடனே தீர்ந்து விடுகிறது. இது அப்படி இல்லை.

2. 5. பின் ஏன் தங்கள் நாவல்களில் காதல் திருமணத்தை மிகுதியாகச் சித்திரித்துள்ளீர்கள் ?

விடை : என் இளம் பருவத்தில் எழுதிய கதைகளிளெல்லாம் காதல், காதலின் வெற்றி எனச் சித்திரிப்பேன். என் வயது காரணமாக எழுந்த கற்பனையில்தான் அக்கதைகள் எழுதப்பட்டன எனலாம். தற்பொழுது நான் எழுதும் கதைகளில் காதல் திருமணத்தை வலியுறுத்தவில்லை.

3. 0. *தாய்மனம்*

3. 1. மாற்றாந்தாய் என்றாலே கொடுமைக்காரி என்ற கருத்து தங்கள் நாவல்களைப் படித்ததும் புலப்படுகின்றது. தாங்-கள் அவ்வாறு சித்திரிப்பதற்குக் காரணம் என்ன?

விடை : Step-motherly attitude' என்ற தொடர் வழக்கில் உண்டே; எங்கள் குடும்பத்திலேயே இத்தகைய கொடுமைகளை நான் பார்த்திருக்கிறேன். பெண்கள் இரண்டாம் மனைவியாக வாழ்க்கைப்படும் பொழுது அவர்களுக்குத் தாழ்வு மனப்-பான்மை ஏற்படுகின்றது. தன் மூத்தாள் குழந்தைகளைக் கொடு-மைப்படுத்துவதன்வழி அவள் உயர் மனப்பான்மை அடைந்து விடுவதாக எண்ணுகிறாள். எங்கள் குடும்பத்துப் பெண் ஒருத்தி-அழகாக இருப்பாள்-வயதான ஒருவருக்கு இரண்டாம் தாரமாகக்

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கொடுத்தார்கள். அதன் பயனாக அடிக்கடி அவளுக்கு ஹிஸ்டீரியா வரும். இரண்டாம் தாரமாக வாழ்க்கைப்படும் பெண்கள் தாக்கப்பட்ட மனநிலையுடையவர்களாக இருப்பதுதான் இதற்குக் காரணம் எனலாம்.

4. 0. *மாமியார்-மருமகள் உறவு*

4.1. கூட்டுக்குடும்ப வாழ்க்கையையே நாவல்களில் தாங்கள் மிகுதியாகச் சித்திரிப்பது ஏன்? தங்கள் குடும்ப அமைப்பு அவ்வாறானதா?

விடை : என் குடும்பம் கூட்டுக்குடும்பம் இல்லை. என் உறவினர் பலரது குடும்பம் கூட்டுக் குடும்பமே. இந்தக் காலத்தில் கூட்டுக் குடும்ப வாழ்க்கை காணப்படவில்லை. திருமணமானவுடன் தனிக்குடித்தனம்தான் வேண்டும் என்கிறார்கள். மாமியார் துணை வேண்டாம் என்கிறார்கள். நான் கதை எழுதிய காலத்தில் இந்த மைலாப்பூர் வட்டாரத்தில் பெரும்பான்மையான வீடுகளில் கூட்டுக் குடும்பங்கள்தான் இருந்தன. நான் மருத்துவம் பார்த்த பல வீடுகளும் கூட்டுக்குடும்பங்களை உடையன. எனவே, அந்த பிரதிபலிப்பு என் கதைகளில் காணப்படுகின்றது.

4. 2. மாமியார் என்றாலே கொடுமைக்காரிதானா? தங்கள் நாவல்களில் வரும் எல்லா மாமியார்களுமே கொடுமைக்காரிகளாகக் காணப்படுகின்றனர். இந்தச் சித்திரிப்பு அனுபவத்தின் சாயலா ?

விடை : ஆமாம். ஆனால் எனக்கு மாமியார் இல்லை. மற்ற உறவினர் நிலைகளைப் பார்த்திருக்கிறேன். என்னுடைய நாவல்களில் 'பெண்மனத்'தில் நல்ல மாமியாரைச் சித்திரித்துள்ளேன். பொதுவாகப் படித்த மாமியாரே மருமகளைக் கொடுமைப்படுத்துகிறாள் மாமியார்களுக்கு இது பிறவிக்குணம் எனலாம். எங்கள் காலத்தில் மாமியார், மருமகள் தவறு செய்தால் தோசைக் கல்லில் கையை வைத்துத் தேய்ப்பாள்; இந்த கொடுமை 1981-லும் நடக்கிறது. தன் பிள்ளையை மருமகள் மாற்றிவிட்டாள் என்ற எண்ணம் தான் வெறுப்புக்கு ஆரம்பமாகிறது. 'மிதிலாவிலாஸ்' நாவலில் நான் சித்திரித்துள்ள தர்மாம்பாள் இந்த வட்டாரத்தில் நான் பார்த்துப் பழகிய ஒரு மாமிதான். நான் இந்தக் கதை எழுதத்தொடங்கிய பின்னர்பல மாமிகள் நான் அவர்களைத்தான் சித்திரித்துள்ளதாக எண்ணி என்னிடம் பேசமாட்டார்கள்.

5. 0. *கணவன்-மனைவி உறவு*

5. 1. பணக்காரக் குடும்பங்களில் கணவர் மனைவிக்கு அடங்கியவராகக் காணப்படுகின்றார் என்பது தங்கள் நாவல் காட்டும் நிலை. இச்சித்திரிப்பிற்குக் காரணம் என்ன ?

விடை : இதுவும் இந்த மைலாப்பூர் வட்டாரத்தில் நான் பார்த்ததுதான். கணவர் பெரிய வக்கீல். கோர்ட்டே அவரைக் கண்டு நடுங்குமாம். ஆனால் அவர் வீட்டில் மனைவியைக் கண்டு நடுங்குவார். என் உறவினர் வீட்டிலும் மனைவிக்கு அடங்கிய கணவர் உண்டு. என் வாழ்க்கையில் கண்ட நிகழ்ச்சிகள்தான் கதை நிகழ்ச்சிகளாக உருவாகியுள்ளன.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. 2 தங்கள் நாவல்களில் கணவனை விட்டு மனைவி பிரிந்து தனியே வாழ்வதாகக் காணப்படுகின்றது. கணவன் தவறு செய்தால் மனைவி அவனை விட்டு விலகித் தனியே வந்துவிட-லாமா? சமுதாயம் ஏற்குமா?

விடை; ஏன் ஏற்காது? கணவனுடைய கொடுமையைத்-தாங்கிக்கொண்டு ஏன் அவள் அந்த வீட்டில் வாழவேண்டும்? தனியே வாழ அவளுக்குத் துணிவு இருந்தால் தனியாக வாழ-லாமே! கபாலீசுவரர் குளக்கரைக்கு ஒரு மாலைப் பொழுது வந்து-பாருங்கள். மைலாப்பூர் வீடுகளில் வேலை செய்யும் பெண்கள் அங்கு சந்திப்பார்கள். அனைவரும் கணவனாலோ, மகனாலோ விரட்டப்பட்டவர்கள்தான். படிக்காத அந்தப் பெண்கள் தங்களுக்-குத் தெரிந்த சமையல் தொழில் செய்து பிழைக்கவில்லையா? எனக்குத் தெரிந்த பெண் எழுத்தாளர் ஒருவர் கணவனை விட்டுப் பிரிந்து தனியாக டெல்லியில் வாழ்கின்றார். நான் பார்க்கும் இடங்-களில் நடந்ததைத்தான் எழுதினேன்.

6. 0. *உழைக்கும் பெண்கள்*

6. 1. மணமான பெண்கள் அலுவல் புரிவது பற்றிய சித்தி-ரிப்பு தங்கள் நாவல்களில் காணப்படவில்லையே? தங்களுக்கு அதில் உடன்பாடு இல்லையா?

விடை ; அக்காலத்தில் மணமான பெண்கள் மிகுதியாக வேலை பார்க்கவில்லை. நானும் எழுதவில்லை. 1974-க்குப் பிறகு நான் எழுதிய 'மீண்டும் வசந்தம்'. 'கடைசிவரை யாரோ' எனும் நாவல்களில் இச்சிக்கலைச் சித்திரித்துள்ளேன். என்னைப் பொறுத்-தவரை "house wife is greater than a working woman".

6. 2. தாங்கள் மருத்துவராயிருந்தும் இவ்வாறு சொல்வது வியப்பிற்குரியதாகயிருக்கிறது! தங்கள் நாவல்களில் பெண் மருத்து-வர் வாழ்க்கை பற்றிய சித்திரிப்பு காணப்படவில்லை. தங்களது சொந்த அனுபவமே பயன்படலாமே!

விடை : என் தொழிலையே எழுதுவதில் ஒரு சலிப்பு ஏற்-படும் என்பதால் அதையேகேரக்டர்ஆக எழுதத் தோன்றவில்லை. ஆனால் என் வேலைக்கு ஒரு மரியாதை கொடுக்க எல்லாக் கதை-களிலும் ஒரு மருத்துவரைச் சித்திரிப்பேன். என்னுடைய சொந்தத் தொழில் கடமையாக இருந்ததால், சள்ளை பிடித்த வேலையாக மருத்துவர் வேலையை நினைத்ததால் அதை எழுதவில்லை. அத-னாலேயே மருத்துவர் கேரக்டர் போட மனதில் வரவில்லை என்று எண்ணுகின்றேன்.

6. 3. தங்களுடைய நாவல்களில் காணப்படும் அலுவல் மகளிருள் பலர் பள்ளி ஆசிரியையாகப் பணிபுரிய, ஒருவர் மட்-டும்தான் ஆண்களுடன் பணிபுரிவதாகச் சித்திரிக்கப்பட்டுள்ளது. பெண்கள் ஆண்களுடன் பணியாற்றுவது பற்றித் தங்கள் கருத்து என்ன?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடை : அந்தக் காலத்தில் பெண்கள் மருத்துவத்தாதி, ஆசிரியை, மருத்துவர் என்ற பணிகளில் மட்டுமே ஈடுபட்டனர். ஆண்களுடன் சேர்ந்து அலுவலகத்தில் பணியாற்றும் பெண்கள் மிகக்குறைவு. ஆண்களுடன் சேர்ந்து பணியாற்றும்பொழுது பல சிக்கல்கள் பெண்களுக்கு ஏற்பட வாய்ப்பு உண்டு. அதில் எனக்கு அவ்வளவு விருப்பம் இல்லை.

7.0. *விலைமகளிர்*

7. 1. சமூகவியலார் ஒரு பெண் விலைமகளாகப் பல காரணங்களைக் கூறுகின்றனர். எனினும் பெண்ணின் மனநிலைதான் அவள் விலைமகளாவதற்குக் காரணம் என்ற கருத்து பற்றி என்ன எண்ணுகிறீர்கள் ?

விடை : முழுமையாக மனநிலைதான் காரணம் என்று சொல்லமுடியாது. இன்றைய நிலையில் விலைவாசி ஏற்றத்தில் ஒரு பெண்ணின் குடும்பம் வறுமையில் வாடும்பொழுது எப்படியாவது தன் குடும்பத்தைக் காப்பாற்ற அவள் எண்ணுகின்றாள்; நாள் முழுவதும் அவள் வேலை செய்தால் அவளுக்குக் கூலி 3 ரூபாய் கிடைக்கின்றது. அவள் பரத்தமையில் ஈடுபட்டால் சில மணி நேரங்களுக்கு குறைந்தது 10 ரூபாய் கிடைக்கிறது. இந்நிலையில் குடும்ப வறுமையும் பெண் விலைமகளாகக் காரணமாகும் என்று கூறலாம். ஒரு பெண் வற்புறுத்தலினாலும் விலைமகளாக மாறலாம். மற்றவர்களால் ஏமாற்றப்பட்டு, போதை பொருள்களின் மயக்கத்தில் உள்ள ஒரு பெண்ணின் பெண்மையை அழித்து, அதைப் புகைப்படம் எடுத்து, அந்தப் பெண்ணிற்குப் போதை தெளிந்தபின் அந்தப் புகைப்படத்தைக் காட்டி அவளைத் தாங்கள் விரும்பிய மனிதருடனெல்லாம் உறவுகொள்ளச் செய்த கூட்டம் ஒன்று சமீபத்தில் சென்னையில் பிடிபட்டது. அச்சத்தினால் தன் பெற்றோரிடம் இதனை மறைத்துவந்த பெண், பல கொடுமைகளுக்குப் பின்னர் பெற்றோரிடம் கூற உண்மை வெளிவந்தது. இங்கு பெண்ணின் மனநிலை காரணம் அல்ல; இக்காலப் பெண்களுக்கு இருக்கும் திரைப்பட மோகம், திரைப்பட நடிகர்களைக் காண வேண்டும் என்ற வெறிதான் காரணம். இவையெல்லாம் தங்களை எங்கு அழைத்துச் சென்று விடுகின்றது என்று அறியாத நிலையிலே இப்பெண்கள் கற்பழிக்கப்படுகின்றனர். சமுதாயமும் ஓரளவு இதற்குக் காரணமாகின்றது.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(ஆ) ஆய்வாளர் சூடாமணிக்கு அனுப்பிய வினாப்பட்டி

1.0. *காதல்*

1. 1. 'தந்தை வடிவம்' நாவலில் தந்தைமீது மகள் கொள்ளும் காதலை (Electra Complex) சித்திரிக்கின்றீர்கள். ஃபிராய்டிசக் கோட்பாடுகள் இந்திய சமுதாயப் பழக்கங்களுக்குப் பொருந்தி வருமா?

விடை : இது ஒரு தனிப்பட்ட மனப்பான்மை, தந்தை மீது மகள் கொண்டிருக்கும் மிகுதியான அன்பு, தந்தை இறந்த பின்னரும் தந்தைபோல் இருக்கும் ஒருவரிடம் செல்கின்றது. நான் உளவியல் படித்தவளல்ல. எனக்கு அதில் விருப்பமும் இல்லை.

1. 2. தங்களுடைய கதைகளில் காதல் சித்திரிப்பு ஒரு குறிக்கோளுடனேயே அமைந்துள்ளது. நடப்பியலுக்கு அது பொருந்துமா?

விடை : உண்மையான காதலை நான் வரவேற்கிறேன். என்னுடைய ஆரம்பக் காலக் கதைகளில், ஒன்றை மீண்டும் மீண்டும் வலியுறுத்தி எழுதுதல் மிகைபட எழுதுதல் போன்ற குறைபாடுகள் உண்டு. பின்னர் இப்போக்கு மாறிவிட்டது.

2. 0. *திருமணம்*

2. 1. விதவை மறுமணத்தைத் தங்கள் நாவலில் வலியுறுத்துகின்றீர்களே- உண்மையிலேயே விதவை மறுமணத்தில் தங்களுக்கு உடன்பாடு உண்டா ?

விடை: என் நாவலில் சித்திரிக்கப்படும் விதவை மறுமணம் நடந்த நிகழ்ச்சி. இது உலகத்தில் கண்முன் நடப்பது, கேட்பதுதான். விதவைகளை மறுமணம் செய்துகொள்ளச் சமுதாயம் அனுமதிக்க வேண்டும்; ஆடவர் முன்வரவேண்டும். மனைவியை இழந்த ஆடவர் குழந்தை வளர்ப்பு என்ற போர்வையில் மறுமணம் செய்துகொள்ளும்பொழுது, கணவன் இறந்தபின்னர் குழந்தையை வளர்க்கப் பாடுபடும் விதவைப் பெண் ஏன் மறுமணம் செய்து கொள்ளக்கூடாது? சமுதாயம் மாறவேண்டும்; சமுதாயத்தின் அடிப்படை எண்ணம் மாறவேண்டும்.

2. 2. கலப்புத் திருமணத்தை விரிவாகத் தாங்கள் சித்திரிப்பதன் நோக்கம் யாது?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடை : இதற்கெனத் தனி நோக்கம் இல்லை. கலப்புத் திருமணம் நடைபெறுவதில் தடையேதும் இல்லை. வெவ்வேறு மதத்தைச் சார்ந்த இருவர் மணந்து கொள்ளும் பொழுதுதான் அவர்களுடைய குழந்தைகள் இரண்டு மதங்களையும் உணர்ந்து வளருவர். ஒவ்வொரு குழந்தையிடமும் 'தனித்தன்மை' வளர-வேண்டும். இது மிக அவசியமும்கூட. பழக்கம் என்பது நாமாக ஏற்படுத்திக்கொண்டது தானே? பழக்க வழக்கங்களில் வேறுபாடு இருந்தாலும் உண்மையான அன்பு இருவரிடமும் இருந்தால் மனம் ஒன்றுபட்டு வாழ்வதில் கஷ்டம் எதுவும் இருக்காது. கலப்-புத் திருமணம் செய்துகொண்ட பலர் மிக மகிழ்ச்சியான குடும்ப வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். என் உறவினரில் பலர் கலப்-புத் திருமணம் (அதாவது சாதி, மொழி, பண்பாடு என எல்லாவற்-றிலும் வேறுபட்டவர்களை) செய்துகொண்டவர்கள்தான். அனை-வருடைய இல்லற வாழ்க்கையும் மகிழ்ச்சியாகத்தான் இருக்கின்-றது. அவர்களது குழந்தைகளிடமும் 'எம்மதமும் சம்மதம்' என்ற மனப்பான்மை நிறைந்திருக்கின்றது.

2. 3. 'வாழ்த்துவோம்' நாவலில் வரதட்சிணை ஒழிப்புக்-கென் ஒரு தீர்வு கூறுகின்றீர்களே. நடைமுறைக்கு அது பொருந்-துமா? சமுதாயத்தில் வேரூன்றி இருக்கும் வரதட்சிணைப் பழக்-கத்தை இம்முறையில் ஒழிக்க முடியுமா? பெண்களுக்குத் திரும-ணம் நடைபெறுவது மேலும் சிக்கலாகிவிடாதா?

விடை: 'வாழ்த்துவோம்' நாவலில் வரதட்சிணை பற்றி-நான் கூறிய கருத்து நாள்தோறும் செய்தித் தாள்களில் வரதட்-சிணைக் கொடுமை பற்றி நான்படித்த செய்திகளின் விளைவுதான். வரதட்சிணைக்கு எதிர்ப்பு வேண்டும் என்பதால் இக்கதையை எழுத ஆரம்பித்தேன். ஆண்களுக்கும் பெண்களுக்கும் சுயசிந்தனை-வேண்டும்; தன் விருப்பப்படியும் செயல்பட வேண்டும்; பெற்றோர் பேச்சை எல்லாவற்றிற்கும் கேட்கக்கூடாது. வரதட்சிணை கொடுத்-துத் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்று ஒவ்வொரு பெண்ணும், வரதட்சிணை வாங்கித் திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று ஒவ்வொரு ஆணும் உறுதி கொண்டால் இடை-யில் பெற்றோரால் என்னசெய்யமுடியும்? வரதட்சிணைக் கொடுமை நம் சமுதாயத்திலிருந்து ஒழியாது என்ற எண்ணம்கூடாது; மாற-வேண்டும் என்ற நம்பிக்கையும் எண்ணமும் தேவை. சமுதாயம் என்பது எது? நாம்தானே? ஒவ்வொரு பையனுக்கும் பெண் பல தியாகங்களைச் செய்தே தன்னை அவனுக்குக் கொடுத்திருக்கின்-றாள் என்ற எண்ணம் வேண்டும். சமுதாயத்தின் அங்கமான ஒவ்-வொருவரும் இதனை மனதில் கொண்டால் கட்டாயம் வரதட்சி-ணைக் கொடுமை ஒழிந்துவிடும் என்பேன்.

2. 4. மணமக்கள் இசைவின்றிப் பெற்றோர் வற்புறுத்த-லால் நடைபெறும் திருமணம் பற்றிய சித்திரிப்பு தங்கள் நாவல்-களில் காணப்படவில்லை; அவ்வகைத் திருமணம் சமுதாயத்தில் நடைபெறுகிறதல்லவா?

விடை : சமுதாயத்தில் நடைபெறலாம்: ஆனால் ஆடவ-னும் பெண்ணும் மனம் ஒத்து செய்துகொள்ளும் திருமணம்தான் மகிழ்ச்சியுடன் இருக்கமுடியும் என்பது என் கருத்து.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2.5. ஆடவனின் மறுமணம்பற்றிக் குறிப்பிடும் நாவல்களில் மாற்றாந்தாய் பற்றிய சித்திரிப்பு இல்லையே, ஏன்?

விடை : அது எனக்கு ஒரு side issue தான். ஒரு குறிப்பிட்ட சிக்கலைக் கூற விரும்பும் நான் கதைப்போக்கில் வரும் இந்நிகழ்ச்சிகளுக்குச் சிறப்புத்தருவதில்லை. மாற்றாந்தாய் கொடுமை பற்றிப் பேசுவதல்ல என் நோக்கம். தந்தை செய்துகொண்ட மறுமணத்தால் மகளின் வாழ்க்கை பாதிக்கப்பட்டது; பாதிப்பின் விளைவு என்ன என்பதைத்தான் கதைக்கருவாகக் கொண்டிருப்பேன்.

2.6. காதல் திருமணம் வெற்றிபெற பல தடைகள்-சான்றாக செல்வ வேறுபாடு, சாதிவேறுபாடு போன்றவை - இருக்க, காதல் மயக்கம் (infatuation) ஒன்றுதான் தடை என குறிப்பிடுகிறீர்களே, மற்றவை தடைகளில்லையா?

விடை : நான் முன்னரே சொன்னபடி உண்மையான காதல் எல்லாத் தடைகளையும் மீறித் திருமணத்தில் முடியும். காதல் மயக்கம் காதலே இல்லாததால் தடையாகின்றது.

2.7. தங்கள் நாவல்களில் மனைவியை இழந்த ஆடவர் மறுமணம் செய்துகொள்வதைவிட, மறுமணம் செய்துகொள்ளாமல் மனைவியின் நினைவிலேயே வாழ்கின்றனர் என்ற போக்கு காணப்படுகின்றது. நடப்பியலில் நாம் அவ்வாறு காணமுடியாது இல்லையா? தாங்கள் இவ்விதம் சித்திரிப்பதற்குக் காரணம் ஏதும் உண்டா?

விடை : இதற்கென என்ன காரணத்தைக் கூற இயலும்? குழந்தை வளர்ப்புக்குஎன ஒரு ஆடவன் மறுமணம் செய்து கொண்டான் என்றால் அது அவனுக்கு ஒரு excuse தான். இதற்காகத் திருமணம் செய்து கொண்ட ஆடவரில் எத்தனைபேர் இளையமனைவியுடன் சேர்ந்துகொண்டு தன் முதல் மனைவி குழந்தைகளை வெறுக்கின்றனர்? ஆடவர்கள் மறுமணம் செய்து கொள்வதற்கு உண்மையான காரணம் இல்லற இன்பத்தில் அவர்களுக்கு இருக்கும் இன்பம் தான் என்று கூறுவேன். சரி, குழந்தை வளர்ப்பு என்று காரணம் காட்டி மறுமணம் செய்துகொள்ளும் ஆடவர், அதே காரணத்திற்காக விதவைப் பெண்களுக்கு ஏன் மறுமணம் செய்துகொடுக்க முன்வரவில்லை? மனைவி எப்படி கணவன் நினைவிலேயே அவன் இறந்த பின்னர் வாழ்கின்றாளோ, அவ்வாறே கணவனும் மனைவியின் இறப்பிற்குப் பின் ஏன் வாழக்கூடாது?

3.0. *தாய்மனம்*

3.1. உருவமற்றுப் பிறக்கும் குழந்தையைத் தாய் கொன்று விடுவதுபோல் 'பிஞ்சுமுகம்' நாவலில் குறிப்பிடுகின்றீர்கள். உண்மையில் தாயின் மனம் அதற்கு ஒப்புமா? இது நடந்த நிகழ்ச்சியா? கற்பனையா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விடை : இது முற்றிலும் கற்பனைதான். தன் குழந்தை பெரியவனாகி உலகில் படும் கஷ்டங்களைக் காண விரும்பாத தாய் அவன் இறப்பதே மேல் என்று எண்ணமாட்டாளா? அவளுக்கு ஒரு வாய்ப்பு கிடைக்கும்பொழுது குழந்தையின் இறப்-பிற்கு அவள் காரணமாகின்றாள். தாயின் கருணை உள்ளத்தைக் காட்டத்தான் இவ்வாறு எழுதினேன்.

3. 2. ஒரு பெண்ணின் பாலுறவுச் சிக்கல் அவள் தாய்மை-யைப் பாதிக்குமா? 'இரவுச்சுடர்' நாவலில் முழுமையாக உளவி-யல் முறையில் இச்சிக்கலைக் கையாண்டிருக்கின்றீர்கள். தங்கள் கருத்து என்ன?

விடை : 'இரவுச்சுடர்' நாவலில் காணப்படும் யாமினி பாத்திரப்படைப்பு நடந்த நிகழ்ச்சியுடன் கற்பனையும் கலந்து உருவாக்கப்பட்டதுதான். பத்துமாதம் சுமந்து பெற்ற குழந்தை-யைத் தாயே விரும்பாத நிலையை நான் கண்டிருக்கின்றேன். இதை அடிப்படையாக வைத்துக் கொண்டுதான் 'இரவுச்சுடர்' நாவலை எழுதினேன். இதற்கென நான் சைக்காலஜி படிக்க வில்லை.

4. 0. *மாமியார்-மருமகள் உறவு*

4. 1. மாமியார்-மருமகள் உறவுச்சிக்கலைத் தாங்கள் சித்-திரிக்காததற்குத் தாங்கள் திருமணமாகதவர் என்பதுதான் கார-ணமா?

விடை : அப்படி ஒன்றும் இல்லை; என்னுடைய கதைகள் பெரும்பாலும் தனிப்பட்டவர்களின் மனநிலையைத்தான் ஆராயும் போக்கினைக் கொண்டவை. எனவே நான் இத்தகைய உறவுச் சிக்கலை பொருளாக எடுக்கவில்லை என்றுதான் கூறவேண்டும்.

4. 2. கூட்டுக்குடும்ப வாழ்க்கையின் சித்திரிப்பு தங்கள் நாவல்களில் இல்லை. காரணம்?

விடை : மேற்சொன்ன விடைதான் இதற்கும். என் அக்கா முதலில் கூட்டுக் குடும்பமாக இருந்து பின்னால் தனிக்குடும்ப வாழ்க்கையை அமைத்துக்கொண்டாள். கூட்டுக்குடும்ப அமைப்பை நான் கண்டிருக்கின்றேன். ஆனால் கூட்டுக் குடும்பத்தைச் சுற்றி எழுவதல்ல என் கதைகள்.

5. 0. *கணவன் – மனைவி உறவு*

5. 1. தங்கள் நாவல்களில் பெரும்பாலும் சிக்கலில்லாத திரு-மண வாழ்வு சித்திரிக்கப்பட்டிருப்பதற்குக் காரணம் யாது?

விடை : சிக்கலில்லாத திருமண வாழ்வை நான் ரசிக்கின்-றேன். என் குடும்ப உறுப்பினர்களிடையில் எந்தச் சிக்கலையும் நான் கண்டிராததின் பிரதிபலிப்பாகவும் என் கதைகள் இருந்-திருக்கலாம்.

5. 2. கணவனின் கொடுமையிலிருந்து தப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் கணவனைப் பிரிந்து குழந்தையுடன் மனைவி சென்றுவிடுவதாக 'விடிவைநோக்கி' நாவலில் சித்திரிப்பது நடப்-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பியலுக்குப் பொருந்துமா? கணவனோடு இருந்து கணவனைத்-திருத்தாது ஒரு மனைவி அவ்வாறு சென்றுவிடலாமா?

விடை : ஏன் கூடாது? அந்தக் காலத்தில் வேண்டுமானால் மனைவி கணவனைப் பிரிந்தால் தனித்து வாழமுடியாது என்ற கருத்து நிலவிவந்தது. இப்பொழுது காலம் மாறிவிட்டது. கண-வன் கொடுமைக்காரனாக விளங்கினால் அவனது கொடுமையைச் சகித்துக்கொண்டு மனைவி ஏன் அவனுடன் வாழவேண்டும். திருந்தவேண்டும் என்றால் முன்னாலேயே திருந்தி இருக்கலாமே? கடைசி நிலைதான் கணவனை விட்டுப் பிரிவது

5 3. 'மானிட அம்சம்' நாவலில் தன் கணவனின் பொய்-முகத்தைக் கண்ட ஒரு பெண் கணவனை வெறுத்துத் தன் மங்கல-நாணைக் கழற்றிவிடுவதாகச் சித்திரிப்பது சிந்தனைக்குரியதல்-லவா?

விடை : அந்தக் கருத்தைப் பலர் எதிர்த்தனர். ஆனால் என் வரை அவளது செயல் சரியானதுதான் என்பேன். திருமணத்தின் புனிதமே கணவனுடைய செயலால் அழிந்த பிறகு, கணவனால் கட்டப்பட்ட மங்கல நாணுக்கு என்ன பொருள்? கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் உண்மையாய் நடந்து கொள்ள வேண்டும். இவ்வுறவு வெறும் உடலுறவு தொடர்புடைய துதான் எனக் கணவன் எண்ணினால் மனைவியரெல்லாம் 'மானிட அம்சம்' சாரதாவாக மாறவேண்டும்.

6. 0. *குடும்ப உறவுகள்*

6. 1. தங்கள் கதைகளில் தாய்-மகள் உறவைவிடத் தந்தை-மகள் உறவே மிகுதியாகச் சித்திரிக்கப்படுவதற்குத் தங்கள் சொந்த வாழ்க்கைதான் பின்னணி எனலாமா 7

விடை : அப்படியெல்லாம் ஒன்றும் இல்லை. என் தாயிட-மும் நான் அன்பாகத்தான் இருந்தேன். தந்தை மகனைவிட மகளைச் செல்லத்துடன் வளர்ப்பது உலகவழக்கம் இல்லையா? அதன் அடிப்படையில்தான் இவ்வுறவைச் சித்திரித்திருப்பேன்.

6. 2 குடும்ப உறவுகளைத் தங்கள் நாவல் மிகுதியாகச் சித்திரிக்காததற்குக் காரணம் என்ன?

விடை : எனது secluded life காரணமாயிருக்கலாம். என்-னுடைய limited life ம் ஒரு காரணமாகலாம். குடும்ப உறவுகளை என் முதல் நாவலாகிய 'மனத்துக்கினியவளி'ல் சித்திரித்துள்ளேன்

7. 0. *விலைமகளிர்*

7. 1. 'மங்கை' நாவலில் படைக்கப்படும் மங்கை பாத்திரம் தங்களுக்கு தெரிந்தவர்களுள் யாரேனும் ஒருவருடைய சித்தி-ரிப்பா ?

விடை : நான் கேள்விப்பட்ட ஒரு நிகழ்ச்சிதான் இக்கதை-யின் கருவிற்குக் காரணம். படிப்பின் முக்கியத்துவத்தைக் காட்டு-வதற்குத்தான் இக்கதையை எழுதினேன். பொதுவாக அந்தண-

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ரிடம் படிப்பும் ஏழ்மையும் இணைந்திருக்கின்றன எனலாம். என் கதைப்பாத்திரம் 'மங்கை' படித்துவிட்டால் தந்தையின் ஜாதி ஆகிவிடலாம் என்று எண்ணுகிறாளேயன்றி, தன் ஏழ்மை நிலையை எண்ணிப் பார்க்கவில்லை

7. 2. சமூகவியலார் ஒரு பெண் விலைமகளாவதற்குப் பல காரணங்களைக் கூறுகின்றனர். எனினும் ஒருபெண் விலைமகளா-வதற்கு அவள் மனநிலைதான் அடிப்படை காரணம்; மற்றவை துணைக்காரணங்களே என்ற கருத்து பற்றித் தாங்கள் நினைப்பது என்ன?

விடை : நான் முழுமையாக ஏற்றுக்கொள்கின்றேன். ஒரு பெண்ணிற்கு வயிறு வளர்க்க வழி இதுவாக இருக்க முடியாது. Inclination இருப்பதால்தான் இந்தத் தொலுக்கு வருகிறார்கள். சான்றாக, 'சிகப்பு விளக்கு' பகுதிப் பெண்களின் பேட்டியைப் பாருங்கள். அவர்கள் தங்கள் தொழிலிலிருந்து வெளியேவர இஷ்டப்படவில்லை. ஒருவேளை அத்தொழிலிலேயே பழக்கப்-பட்ட காரணமாகவும் இருக்கலாம். எப்படியிருந்தாலும் அவர்-களுக்கு inclination இருக்கிறது என்பதை மறைக்க முடியாது என நினைக்கின்றேன்.

8. 0. *உழைக்கும் பெண்கள்*

8. 1. தங்கள் நாவல்களில் மணமான பெண்கள் அலுவல் மகளிராவது போன்ற சித்திரிப்பு இல்லையே? ஏன்? அது தங்-களுக்கு உடன்பாடு இல்லையா?

விடை : அப்படி ஒன்றும் இல்லை. எத்தனையோ திரு-மணமான பெண்கள் குடும்பத்தையும் பார்த்துக்கொண்டு, வேலை-யையும், பார்ப்பதைக் கண்டு நான் பாராட்டியிருக்கின்றேன். என்-னுடைய சிறுகதைகளில் திருமணமான அலுவல் மகளிரைச் சித்தி-ரித்திருக்கின்றேன். நாவல்களில் அவர்களைச் சித்திரிக்க வாய்ப்பு இல்லாமல் போயிருக்கலாம்; அவ்வளவுதான்.

8. 2. தங்களுடைய நாவல்களில் மருத்துவத்தாதி, பள்ளி ஆசிரியை படைப்புக்கள் மிகுதியாக இருக்கக் குறிப்பிடத்தக்க காரணம் ஏதும் உண்டா?

விடை : என் மனத்திற்குப் பிடித்தவை இவ்விரு வேலை-களும்தான். மனநோயைத் தீர்த்து வைத்தியம் பார்ப்பது ஆசிரி-யையின் கடமையாகின்றது; உடல் நோயைத் தீர்த்து வைத்தியம் பார்ப்பது நர்ஸின் கடமையாகின்றது. எனவே, சிறந்த தொழில்-கள் என நான் கருதுபவை இவ்விரண்டு தொழில்களைத்தான்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு 2

பிற தகவலாளர்களுக்கு ஆய்வாளர் விடுத்த வினாப்பட்டி

திருமதி இர. சித்திரலேகா, எம். ஏ.,
ஆய்வு மாணவி,
மதுரை காமராசர் பல்கலைக் கழகம்,
மதுரை-21,

அன்புடையீர்,

வணக்கம். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தில் ஆய்வு மாணவியான நான் என் ஆய்வுக்காக (லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்) இந்த வினாப்பட்டியைத் தங்களுக்கு அனுப்புகிறேன்.

தாங்கள் அளிக்கும் தகவல் என் ஆய்வுக்கு முதன்மையான தகவல்களானபடியால், தங்கள் ஒத்துழைப்பின் துணைகொண்டு பெண்களின் வாழ்க்கைச் சிக்கலை அறிய விரும்புகின்றேன்.

தாங்கள் இத்துடன் இணைக்கப்பெற்றுள்ள வினாப்பட்டியை அன்புகூர்ந்து நிரப்பி உதவுமாறு வேண்டுகிறேன். இதில் தாங்கள் குறிப்பிடும் தகவல்கள் என்னால் இரகசியமாகப் பாதுகாக்கப்படும் என உறுதியளிக்கின்றேன்.

மிக்க நன்றி.

இவண்,
அன்புடன்,

பல்கலைநகர்,
16-8-80.

இர. சித்திரலேகா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

லக்ஷ்மி, சூடாமணி நாவல்களில் காணப்படும்
பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்

"பெண்களின் வாழ்க்கைச் சிக்கல்கள்"

வினாப்பட்டி

குறிப்பு : வினாப்பட்டியை நிரப்பும் முறை

(1) 1. விவரங்கள் தேவைப்படுகின்ற வினாக்களுக்கு, அந்தந்த வினாவுக்கு அடியில் தகவலை எழுதி நிரப்ப வேண்டுகிறேன். தங்கள் கருத்தைத் தயங்காமல், வெளிப்படையாக எழுத வேண்டுகிறேன்.

2. ஆம்/இல்லை என்ற வினாக்களில் தங்கள் கருத்துக்குப் பொருத்தமில்லாத ஒன்றை அடித்து விடுக.

3. பல விடைகள் தரப்பட்டுள்ள பிற வினாக்களிலும் தங்களுக்குப் பொருத்தமில்லாத விடைப் பகுதிகளை அடித்து விடுக.

4. தங்கள் வாழ்க்கை அனுபவங்களில் உட்படாத வினாக்களை விட்டு விடுக.

5. விடைகளைத் தாளில் எழுதும் பொழுது சுருக்கமாகத் தெளிவாக எழுதவும்.

6. காரணங்களையோ, சம்பவங்களையோ குறிப்பிடும் பொழுது சுருக்கமாகத் தெளிவாகக் குறிப்பிடவும்.

7. தாங்கள் நிரப்பிய வினாப்பட்டியை நேரில் என்னிடமே தந்து விடுக.

(2) தகவலாளர் ஆகிய தங்களைப் பற்றிய விவரங்கள்:

1. பெயர் :
2. வயது :
3. மதம் :
4. சாதி :
5. பிறந்த ஊர், தாலுகா, மாவட்டம் :
6. கல்வித் தகுதி :
7. தொழில் தகுதி :
8. திருமணத் தகுதி நிலை : திருமணமாகாதவர்/திருமணமானவர்/விதவை/மறுமணம் புரிந்தவர்/கணவனைப் பிரிந்து இருப்பவர்/விவாகரத்து ஆனவர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 1. திருமணம் :

3. 1. 1. தாங்கள் காதல் திருமணத்தை விரும்புகிறீர்களா? பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை விரும்புகிறீர்களா?

1. பெற்றோரின் அனுமதியின்றியும் காதல் திருமணம்
2. பெற்றோரின் அனுமதியுடன் காதல் திருமணம்
3. பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம்
அதற்கான காரணத்தைக் கூறவும்.

3. 1. 2. தாங்கள் மணக்க விரும்பும் ஆடவனிடம் கீழ்க்கண்ட எப் பண்புகள் (qualities) இருக்க வேண்டும் என விரும்புகிறீர்கள்? தரம் பிரித்துக் கூறவும்,

1. நல்ல பண்பு (good character)
2. உயர் கல்வி (well educated)
3. நல்ல வேலை (good job)
4. தோற்றம் (Personal appearance)
5. சம உரிமை கொடுத்தல் (Equality)

3. 1. 3. தாங்கள் மணக்க விரும்பும் பெண்ணிடம் கீழ்க்கண்ட எப்பண்புகள் (qualities) இருக்கவேண்டும் என விரும்புகி றீர்கள்? தரம் பிரித்துக் கூறவும்.

1. நல்ல பண்பு (good character)
2. உயர்கல்வி (well educated)
3. நல்ல வேலை (good job)
4. தோற்றம் (personal appearance)
5. குடும்பத்தை நடத்திச் செல்லும் பாங்கு
6. கணவருடைய குடும்பத்தாருடன் இணைந்துசெல்லும் போக்கு

3. 1. 4 திருமணம் ஒரே சாதியினரிடையேதான் நடைபெற வேண்டும் என விரும்புகிறீர்களா? அல்லது; வேறு சாதியினருடனும் நடைபெறலாம் என எண்ணுகிறீர்களா?

1. ஒரே சாதியினருடன்
2. ஒரே சாதியினருடன்தான் நடைபெற வேண்டும்
3. வேறு சாதியினருடன்
4. வேறுசாதியினருடன்தான் நடைபெற வேண்டும்
5. ஏன்?

3. 1. 5. தங்கள் கணவனை / மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் குடும்பத்தில் முக்கிய பொறுப்பேற்பவர் யார்?

1. தந்தை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. தாய்
3. தந்தையும் தாயும்

3. 1. 6. தங்களை மணக்கவிரும்பும் ஆடவனிடம் தங்கள் தந்தை எதிர்பார்க்கும் பண்புகள் யாவை? வரிசைப்படுத்தவும்.
ஆடவனின் அழகு/செல்வம்/வேலை/நல்லபண்பு/குடும்ப நிலை

3. 1. 7. தாங்கள் மணக்க விரும்பும் பெண்ணிடம் தங்கள் தாய் எதிர்பார்க்கும் பண்புகள் யாவை? வரிசைப்படுத்தவும்.
பெண்ணின் அழகு/வேலை/நல்லபண்பு/பெண்ணிற்குக் கொடுக்கும் வரதட்சிணையும் சீர்வரிசையும்/பெண் குடும்பத்தை நடத்திச்செல்லும் பாங்கு.

3. 2. 0. *உடற்குறை :*

3. 2. 1. பெண்ணின்/ஆணின் உடற்குறை அவள் / அவன் திருமணத்திற்குத் தடையாகுமா?
ஆம்/இல்லை
அதற்கான காரணத்தைக் கூறவும்.

3. 2. 2. பணக்கார ஆடவனின்/பெண்ணின் உடற்குறை அவன்/அவள் திருமணத்திற்குத் தடையாவதில்லை என்ற கருத்தை ஏற்றுக்கொள்கிறீர்களா?
ஆம்/இல்லை
அதற்கான காரணத்தைக் கூறவும்.

3. 2. 3. உடற்குறையுடைய ஆணை/பெண்ணை, மணமகனாக/மணமகளாக எந்நிலையில் ஏற்றுக்கொள்வீர்கள்?
1. பணக்கார உறவினனாக/உறவினளாக இருந்தால்
2. நல்ல வேலை பார்க்கும் உறவினனாக/உறவினளாக இருந்தால்
3. பணக்கார அந்நியனாக/அந்நியளாக இருந்தால்
4. நல்ல வேலை பார்க்கும் அந்நியனாக/அந்நியளாக இருந்தால்
5. காதலுக்குரியவனாக/காதலுக்குரியவளாக இருந்தால்
6. இரக்கத்திற்குரியவனாக / இரக்கத்திற்குரியவளாக இருந்தால்

3. 2. 4. உடற்குறையுடைய பெண்ணை/ஆணைத் தங்கள் மகனுக்கு/மகளுக்கு மணமகள்/மணமகனாக ஏற்பீர்களா?
ஆம்/இல்லை
அதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

4. 1. *வரதட்சிணை :*

4. 1. 1. வரதட்சிணை வாங்க/கொடுக்க விரும்புகிறீர்களா?
ஆம்/இல்லை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4\. 1. 2. தங்கள் குடும்பத்தில் வரதட்சிணை பெறுவதை/கொடுப்பதை விரும்பியவர், விரும்புகின்றவர் யார்?

தந்தை/தாய்/சகோதரன்/சகோதரி/மணமகன்/மணமகள்

4\. 1. 3. கேட்ட வரதட்சிணையைக் கொடுக்காததனால் மருமகளின் வீட்டைச் சுட்டி ஏசியும், மருமகளைக் கொடுமைப்படுத்தியும் நடக்கும் சம்பவங்கள் தங்கள் அனுபவத்தில் நடந்ததுண்டா?

ஆம்/இல்லை

4\. 1. 4. வரதட்சிணை வாங்காத பையனைக் குறையுடையவன் என்று பேசும் வழக்கம் உண்டு என்ற கருத்தை ஏற்கிறீர்களா?

ஆம்/இல்லை

4\. 1. 5. வரதட்சிணை கொடுக்க மறுத்தால் அப்பெண்ணிற்குத் திருமணம் நிகழாது என்ற கருத்தை ஏற்பீர்களா?

ஆம்/இல்லை

4\. 1. 6. வரதட்சிணை முறையை ஒழிக்க வரதட்சிணை தர மறுக்கும் பெண்ணின் பெற்றோர் ஒரு சங்கம் அமைத்து வரதட்சிணை வாங்காதவருக்கே தம் மகளை மணமுடித்துக் கொடுப்பதாக உறுதி கூறி இருந்தால் ஆண்பிள்ளைகளை மட்டும் வைத்துக்கொண்டு பெற்றோரால் என்ன செய்ய முடியும்?' என்று வரதட்சிணை ஒழிப்புக்குக் கூறப்படும் கருத்து நடைமுறைக்கு ஒத்து வருமா?

ஒத்து வரும் / ஒத்து வராது/உறுதியாகக் கூறமுடியாது / முதலில் பொருந்தாது எனினும் காலப்போக்கில் பொருந்திவிடும்/முதலில் பொருந்தினாலும் காலப்போக்கில் பொருந்தாது போய்விடும்.

அதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

4\. 1. 7. வரதட்சிணை முறையை ஒழிக்கத் தாங்கள் கூறும் காரணங்களைக் குறிப்பிடவும்.

1.
2.
3.
4.
5.

5\. 1. *காதல் திருமணம்*

5\. 1. 1. கீழ்க்காணும் எவ்வகைப் பெண்ணைத் தாங்கள் மணக்க விரும்புகிறீர்கள்?

திருமணமாகாத பெண் / திருமணமாகிக் கணவனைப் பிரிந்த பெண் / விதவைப் பெண்

அதற்கான காரணத்தைக் கூறவும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. 1. 2. காதல் திருமணம் சிக்கலின்றி நடைபெறும் என்று நம்புகிறீர்களா ?

ஆம்/இல்லை.

5. 1. 3. காதல் திருமணம் நிறைவேற எதனை முக்கியத் தடையாகக் கருதுகிறீர்கள்?

பெற்றோரின் எதிர்ப்பு/சாதி/ குடும்ப வறுமை/சமுதாயம்

5. 1. 4. காதல் திருமண வாழ்வு சிக்கலற்றது என்ற கருத்தை ஏற்பீர்களா?

ஆம்/இல்லை.

அதற்கான காரணத்தைக் கூறவும்.

5. 1. 5. காதல் திருமணத்திற்கு உடல் கவர்ச்சிதான் அடிப்படை; கவர்ச்சி மாறினால் காதல் திருமணம் தோல்வியடைகின்றது. பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தில் இச்சிக்கல் இல்லை; எனவே அது வெற்றியடைகிறது என்பார் கருத்தை ஏற்பீர்களா?

ஆம்/இல்லை.

அதற்குரிய காரணத்தைக் குறிப்பிடவும்.

5. 1. 6. காதல் தோல்வியால் பழி வாங்கும் உணர்ச்சி ஏற்படுவதுண்டா

ஆம்/இல்லை

6. 1. *மறுமணம்*

6. 1. 1. விதவை மறுமணத்தை ஆதரிக்கிறீர்களா?

ஆம்/இல்லை/ சூழலைப் பொறுத்தது.

அதற்கான காரணங்களைக் குறிப்பிடவும்.

6. 1. 2. விதவை மறுமணத்திற்குக் கிராமங்களை விட நகரச்சூழலும் கல்வியுமே பெண்களை இசையவைக்கக் காரணமாகின்றன என்ற கருத்தை ஏற்பீர்களா?

ஆம்/இல்லை.

'இல்லை'யெனில் காரணத்தைக் குறிப்பிடவும்.

6. 1. 3. முதல் மனைவி இறந்த பிறகு ஆடவர் மறுமணம் செய்து கொள்வதற்குரிய காரணமாகத் தங்கள்/தங்கள் உறவினர்/ தெரிந்தவர் குடும்பத்தில் காணப்படுவதைக் கீழ்க்கண்டவற்றிலிருந்து குறிப்பிடவும்:

மூத்த மனைவியின் குழந்தைகளை வளர்க்க / இல்லற இன்பநாட்டத்திற்காக / மூத்த மனைவிக்குக் குழந்தை இன்மையால் / காதல் / ஒரு பெண்ணின் அழகு.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

6. 1. 4. முதல் மனைவி உயிருடன் இருக்கும்பொழுது ஆடவன் மறுமணம் செய்து கொள்வதற்கு உரிய காரணமாகத் தங்கள் / தங்கள் உறவினர் / தெரிந்தவர் / குடும்பத்தில் காணப்படுவதைக் கீழ்க்கண்டவற்றிலிருந்து குறிப்பிடுக.

ஒரு பெண்ணின் அழகு/மூத்த மனைவிக்குக் குழந்தைகள் இன்மை/மூத்த மனைவியின் உடல் நோய்/காதல்.

தங்கள்/தங்கள் உறவினர்/தெரிந்தவர் குடும்பத்தில்

6. 1. 5. ஒரு பெண் இரண்டாம் மனைவியாகச் சம்மதிப்பதற்குக் கீழ்க்கண்டவற்றுள் எதனைக் காரணமாகக் கருதுகிறீர்.

குடும்ப வறுமை / காதல் / பகட்டான வாழ்வில் நாட்டம்/ பொருத்தமான மணமகன் கிட்டாமை / மூத்த மனைவி தமக்கையாக இருப்பின் அவளது குழந்தைகளை வளர்க்க.

6. 1. 6. மனைவி இருக்கும் பொழுதோ / மனைவி இறந்த பிறகோ மற்றொரு பெண்ணை மணந்து கொள்ளும் ஆடவனின் வாழ்க்கையில் நிம்மதி இருப்பதில்லை என்ற கருத்தை ஏற்பீர்களா?

ஆம்/இல்லை.

அதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

6. 1. 7. மறுமணம் செய்து கொண்ட ஆடவன் தன் மூத்த மனைவி-யின் குழந்தைகளிடம் அன்பு செலுத்த அஞ்சுகிறான்/ செலுத்துவதில்லை எனலாமா?

ஆம்/இல்லை

அதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்,

7. 1. *குடும்பங்களும் உறவுகளும்:*

7. 1. 1. தாங்கள் கூட்டுக்குடும்ப வாழ்க்கையை விரும்புகிறீர்களா? தனிக் குடும்ப வாழ்க்கையை விரும்புகிறீர்களா?

கூட்டுக்குடும்பம் / தனிக்குடும்பம் / தனிப்பட்ட கருத்து இல்லை. ஏன்?

7. 1. 2. தங்கள் குடும்பத்தில் கீழ்க்கண்ட உறவுகளுள் எந்த உறவு அன்பு நிறைந்த உறவாகக் காணப்படுகின்றது?

1. அண்ணன்-தம்பியர்க்கிடையேயுள்ள உறவு
2. அக்கா-தங்கையர்க்கிடையேயுள்ள உறவு
3. சகோதர-சகோதரியர்க்கிடையேயுள்ள உறவு

7. 1. 3. தங்கள் பிறந்த வீட்டில் தங்களால் மிகுதியாக விரும்பப்-படுகின்றவர் யார்? வரிசைப்படுத்தவும்.

தந்தை/தாய்/பாட்டன்/பாட்டி/அண்ணன்/தம்பி/அக்கா/ தங்கை

8. 1. *மாமியார்-மருமகள் உறவு:*

8. 1. 1. தாங்கள் திருமணம் செய்து கொண்ட வீட்டில் தங்களால் மிகுதியாக விரும்பப்படுகின்றவர்கள் யார்? வரிசைப்-படுத்தவும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

1. கணவனின் / மனைவியின் தந்தை
2. கணவனின் / மனைவியின் தாய்
3. கணவனின் / மனைவியின் சகோதரன்
4. கணவனின் / மனைவியின் சகோதரி
5. கணவனின் / மனைவியின் சகோதரியின் கணவன்
6. கணவனின் / மனைவியின் சகோதரனின் மனைவி

8. 1. 2. தங்கள் வீட்டில் யார் ஆதிக்கம் நிலவுகின்றது?
கணவன்/மனைவி/மாமியார்/மாமனார்/நாத்தனார்/கண-வரின் சகோதரன் ஆதிக்கம்.

8. 1. 3. தங்கள் வீட்டில் மருமகள்/மாமியார் உறவுநிலை எவ்வாறு உள்ளது?
மாமியார் கொடுமை / மருமகள் கொடுமை / இருவருமே கொடுமை/இருவரிடையே அன்பு.

8. 1. 4. தங்கள் குடும்பத்தில் மாமியாரின் கொடுமையால் மரு-மகள் வீட்டைவிட்டு வெளியேறுவதுண்டா?
ஆம்/இல்லை/இருக்கலாம்.

8. 1. 5. 'மகனின் அன்பில் பங்கிட வந்தவள் மருமகள், என மாமி-யார் கருதுவதாலேயே இருவருக்குமிடையே மனவேறு-பாடு தோன்றுகின்றது எனலாமா?
ஆம்/இல்லை.

8. 1. 6. மாமியாரால் தங்களுக்கும் தங்கள் கணவருக்கும் இடையே சிக்கல் எழுந்ததுண்டா?
உண்டு/இல்லை.
'உண்டு' எனில் சம்பவத்தைக் குறிப்பிடவும்.

8. 1. 7. கூட்டுக் குடும்பத்தில்தான் மாமியார்-மருமகள் உறவு மோதல் நிகழ்கின்றது என்ற கருத்து
சரி/தவறு/உறுதியாகக் கூறமுடியாது.
ஏன்?

8. 1. 8. தனிக்குடும்பத்தில் மாமியார்-மருமகள் உறவுச் சிக்கல் எழுவதில்லை எனலாமா?
சரி/தவறு/உறுதியாகக் கூறமுடியாது.
ஏன்?

8. 1. 9. குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்தும் மகன் தாயின் பேச்சைக் கேட்டே குடும்பத்தை நடத்துவதுதான் மாமி-யார் மருமகள் சிக்கலுக்குக் காரணமாகிறது எனலாமா?
சரி/தவறு/உறுதியாகக் கூறமுடியாது.
ஏன்?

8. 1. 10. திருமணமானதும் பெண்களுக்கு எழும் 'தனிக்குடித்தன' ஆசையே மாமியார்-மருமகள் உறவுச்சிக்கலுக்குக் காரணமாகிறது எனலாமா?

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சரி/தவறு/உறுதியாகக் கூறமுடியாது.

ஏன்?

8. 1. 11. பல மருமகள்கள் இருக்கும் குடும்பத்தில் மாமியார் அவர்களிடம் பாரபட்சமாக நடந்துகொள்வதுண்டு எனக் கூறலாமா?

கூறலாம்/கூறமுடியாது.

9. 1. *நாத்தனார் உறவு:*

9. 1. 1. நாத்தனார். என்பவர் கொடுமைக்காரி என்ற பொதுவான கருத்தைத் தாங்கள் ஏற்கின்றீர்களா?

ஆம்/இல்லை.

9. 1. 2. தங்களுக்கும் தங்கள் நாத்தனாருக்கும் இடையேயுள்ள உறவு எவ்வாறு இருக்கிறது?

அன்புடன்/அதிகாரத்துடன் /பொறாமையுடன்/ வெறுப்புடன்.

9. 1. 3. ஒத்த வயதுடைய நாத்தனார்-மதினி உறவு அன்புடன் இருக்கும் எனலாமா?

ஆம்/இல்லை.

10. 1. *ஓரகத்தி உறவு:*

10.1.1. தங்களுக்கும் தங்கள் ஓரகத்திக்கும் (கணவனின் சகோதரரின் மனைவி) உள்ள உறவுநிலை.

மனக்கசப்புடன்/அன்புடன் / மனக்கசப்பும் அன்பும் கலந்த நிலை/தொடர்பேயின்றி இருக்கிறது.

10.1.2. ஓரகத்திகளுக்கிடையேயுள்ள மனவேறுபாட்டிற்குக் காரணம்.

1. இருவர் குடும்பத்திற்கிடையேயுள்ள செல்வ வேறுபாடு
2. பொதுச் சொத்தின் அனுபவ உரிமை
3. இருவரின் கணவன்மார்களின் வேலை
4. இருவரின் கணவன்மார்களுக்குக் குடும்பத்தில் கொடுக்கப்படும் மதிப்பு

11. 1. *கணவன் மனைவி உறவு:*

11. 1. 1. கணவன்-மனைவி உறவில் ஏற்படும் சிக்கலுக்குக் கீழ்க்கண்ட காரணங்களை வரிசைப்படுத்தவும்.

1. மனைவியின் செருக்கு
2. கணவனின் நடத்தை
3. கணவன்-மனைவி பாலுறவில் (Sex) ஏற்படும் சிக்கல்
4. மற்றவர் குறுக்கீடு

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. பெண்/ஆண் குடும்ப வறுமை
6. மனைவியின் ஒழுக்கம்

11.1.2. கணவனின் கொடுமையால் மனைவி குழந்தையுடன் வீட்டைவிட்டு வெளியேறலாமா?
ஆம்/கூடாது.
ஏன்?

11.1.3. தாங்கள் பிறந்த வீட்டிற்குச் செல்வதற்குக் குடும்பத்தில் யாருடைய அனுமதியைப் பெறவேண்டும்?
மாமியார்/மாமனார்/நாத்தனார்/கணவர்/கணவரின் சகோ-தரர்/வேறு யாராவது இருப்பின் குறிப்பிடவும்.

12. 1. மாற்றாந்தாய் தன் மூத்தாள் மகனை/மகளைக்கொடுமைப்-படுத்துவது உலக இயல்பு.
சரி/தவறு.

13. 1. கணவனை இழந்த / பிரிந்த சகோதரியின் மகன் / மகள் பொறுப்பைத் தாய்மாமன் ஏற்றுக்கொள்கிறான் என்ற கருத்து பொருத்தமுடையதா?
ஆம்/இல்லை.

14. 1. தாங்கள் மாமனாரிடம் சகஜமாகப் பழகுவீர்களா?
ஆம்/இல்லை.
ஏன்?

15. 1. தாங்கள் தந்தையை அதிகமாக நேசிக்கிறீர்களா? தாயை அதிகமாக நேசிக்கிறீர்களா?
தந்தை/தாய்/இருவரையும்.
ஏன்?

16. 1. *சமுதாயம் :*

16.1. 1. தாங்கள் அலுவல் மகள் எனில் எப்பணியை விரும்புவீர்-கள்/விரும்புகிறீர்கள்?
ஏன்?

16.1.2. ஆண்களுடன் பணியாற்றுவதை விரும்புகிறீர்களா? பெண்களுடன் பணியாற்றுவதை விரும்புகிறீர்களா?
ஆண்களுடன்/பெண்களுடன்/இருவருடனும்.
அதற்கான காரணத்தைக் குறிப்பிடவும்.

16.1.3. தாங்கள் அலுவல் மகளானால் குடும்பத்தையும், அலு-வலையும் திறம்பட நடத்திச் செல்கிறீர்களா?
ஆம்/இல்லை.

16.1.4. தங்கள் அலுவலால் குடும்பத்திலோ, அலுவலகத்திலோ குழப்பம் வந்ததுண்டா?
உண்டு/இல்லை
குழப்பம் தந்த சம்பவத்தைக் குறிப்பிடவும்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

17.1. பெண்கள் விலைமகளாக குடும்ப வறுமை காரணம் என்ற கருத்தை ஏற்றுக் கொள்வீர்களா?
ஆம்/இல்லை

17.1.1. பெண்கள் விலைமகளாகச் சமுதாயம் காரணம் என்பது வெளித்தோற்றம்தான். பெண்களின் மனநிலைதான் அதற்குக் காரணம் என்ற கருத்து ஏற்புடையதா?

சமுதாயம் காரணம்/மனநிலை காரணம்/சமுதாயமும் மனநிலையும் காரணம்.

வேறு காரணங்கள் இருப்பின் குறிப்பிடவும்.

தகவலாளர்கள் அளித்த விடைகள்

ஆய்வாளர் கள ஆய்விற்கெனத் தகவலாளர்களுக்குக் கொடுத்த இருநூற்றைம்பது வினாப்பட்டிகளுக்கு ஆடவரில் ஐம்பத்தேழு பேரும், பெண்களில் எழுபது பேரும் விடை அளித்துள்ளனர். எனவே, ஆய்வாளர் கைக்குக் கிடைத்த நூற்றியிருபத்தேழு வினாப்பட்டிகளைக் கொண்டு இங்கு விடைகள் தரப்படுகின்றன.

1. ஆடவர்

3.1. திருமணம் :

3. 1. 1. 1.	பெற்றோரின் அனுமதியின்றியும் காதல்திருமணத்தை விரும்புகின்றவர்கள்	:	10.50	சதவீதம்
2.	பெற்றோரின் அனுமதியுடன் காதல் திருமணத்தைவிரும்புகின்றவர்கள்	:	42.00	”
3.	பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணத்தை விரும்புகின்றவர்கள்	:	42.00	”
4.	விடை தராதோர்	:	5.50	”
3. 1. 3. 1.	நல்ல பண்பு	:	35.00	”
2.	உயர்கல்வி	:	3.56	”
3.	நல்லவேலை	:	1.76	”
4.	தோற்றம்	:	1.76	”

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

				சதவீதம்
	5.	குடும்பத்தை நடத்திச் செல்லும் பாங்கு	: 3.50	"
	6.	கணவரின் குடும்பத்தாருடன் இணைந்து செல்லுதல்	: 8.55	"
	7.	அனைத்துப் பண்புகளும் தேவை	: 2.86	"
	8.	விடை தராதோர்	: 42.00	"
3. 1. 4.	1.	ஒரே சாதியினருடன் திருமணம் நடைபெற வேண்டும்	: 38.50	"
	2	ஒரே சாதியினருடன்தான் திருமணம் நடைபெற வேண்டும்	: 24.50	"
	3.	வேறு சாதியினருடன் திருமணம் நடைபெறவேண்டும்	: 29.75	"
	4.	வேறு சாதியினருடன்தான் திருமணம் நடைபெறவேண்டும்	: 7.25	"

3. 1. 5. *மனைவியைத் தேர்ந்தெடுப்பதில் முக்கிய பொறுப்பு வகிப்பவர்:*

	1.	தந்தை	: 14.00	"
	2.	தாய்	: 19.25	"
	3.	இருவரும்	: 56.00	"
	4.	நான்தான்	: 5.25	"
	5.	தமக்கை	: 1.75	"
	6.	விடை தராதோர்	: 3.75	"
3. 1. 7.	1.	பெண்ணின் அழகு	: 21.00	"
	2.	பெண்ணின் வேலை	: 5.25	"
	3.	பெண்ணின் நல்ல பண்பு	: 35.00	"
	4.	வரதட்சிணையும் சீர்வரிசையும்	: 8.75	"
	5.	குடும்பத்தை நடத்தும் பாங்கு	: 22.75	"
	6.	விடை தராதோர்	: 7.00	"

3. 2. 0. *உடற்குறை:*

3. 2. 1.	1.	ஆம்	: 75.25	"
	2.	இல்லை	: 22.75	"
	3.	விடை தராதோர்	: 1.75	"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3. 2. 2.	1.	ஆம்	:	70.00	சதவீதம்
	2.	இல்லை	:	21.00	„
	3.	விடை தராதோர்	:	8.75	„
3. 2. 3.	1.	பணக்கார உறவினளாக இருந்தால்	:	14.00	„
	2.	நல்ல வேலை பார்க்கும் உறவினளாக இருந்தால்	:	3.50	„
	3.	பணக்கார அந்நியளாக இருந்தால்	:	—	
	4.	நல்ல வேலை பார்க்கும் அந்நியளாக இருந்தால்	:	1.75	„
	5.	காதலுக்குரியவளாக இருந்தால்	:	28.00	„
	6.	இரக்கத்திற்குரியவளாக இருந்தால்	:	38.30	„
	7.	விடை தராதோர்	:	14.00	„
3. 2. 4.	1.	ஆம்	:	26.50	„
	2.	இல்லை	:	38.50	„
	3.	அவர்கள் விருப்பம்	:	1.75	„
	4.	விடை தராதோர்	:	33.25	„
4. 1.		*வரதட்சிணை :*			
4. 1. 1	1.	ஆம்	:	30.00	„
	2.	இல்லை	:	59.50	„
	3.	விடை தராதோர்	:	10·50	„
4. 1. 2.	1.	தந்தை	:	22.75	„
	2.	தாய்	:	10.50	„
	3.	சகோதரன்	:	3.50	„
	4.	சகோதரி	:	10.50	„
	5.	மணமகன்	:	7.00	„
	6.	பாட்டி	:	1.75	„
	7.	ஒருவருமில்லை	:	21.25	„
	8.	விடை தராதோர்	;	22.75	„
4. 1. 3.	1.	ஆம்	:	22.75	„
	2.	இல்லை	:	64.75	„
	3.	விடை தராதோர்	:	12.50	„

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

4. 1. 4.	1.	ஆம்	:	29.75	சதவீதம்
	2.	இல்லை	:	57.75	„
	3.	விடை தராதோர்	:	12.50	„
4. 1. 5.	1.	ஆம்	:	29.75	„
	2.	இல்லை	:	58.00	„
	3.	விடை தராதோர்	:	12.25	„
4. 1. 6.	1.	ஒத்து வரும்	:	8.75	„
	2.	ஒத்து வராது	:	10.50	„
	3.	காலப்போக்கில் பொருந்தும்	:	49.00	„
	4.	காலப்போக்கில் பொருந்தாது	:	12.50	„
	5.	உறுதியாகக் கூறமுடியாது	:	—	
	6.	விடை தராதோர்	:	19.25	„
5. 1.		*காதல் திருமணம்:*			
5. 1. 1.	1.	திருமணமாகாத பெண்	:	80.50	„
	2.	திருமணமாகிக் கணவனைப் பிரிந்த பெண்	:	7.00	„
	3.	விதவைப் பெண்		—	„
	4.	விடை தராதோர்	:	12.50	„
5. 1. 2.	1.	ஆம்	:	14.00	„
	2.	இல்லை	:	77.00	„
	3.	விடை தராதோர்	:	9.00	„
5. 1. 3.	1.	பெற்றோர் எதிர்ப்பு	:	47.25	„
	2.	சாதி	:	21.00	„
	3.	குடும்ப வறுமை	:	5.25	„
	4.	சமுதாயம்	:	19.24	„
	5.	அனைத்தும்	:	1.76	„
	6.	விடை தராதோர்	:	3.50	„
5. 1. 4.	1.	ஆம்	:	36.75	„
	2.	இல்லை	:	54.25	„
	3.	விடை தராதோர்	:	8.75	„
5. 1. 5	1.	ஆம்	:	45.50	„
	2.	இல்லை	:	45 50	„
	3.	விடை தராதோர்	:	9.00	„
5. 1. 6.	1.	ஆம்	:	22.75	„
	2.	இல்லை	:	64.75	„

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	3. விடை தராதோர்	:	12.50 சதவீதம்
6. 1.	*மறுமணம் :*		
6. 1. 1.	1. ஆம்	:	42.00 "
	2. இல்லை	:	7.00 "
	3. சூழலைப் பொறுத்தது	:	47.50 "
	4. விடை தராதோர்	:	3.50 "
6. 1. 2.	1. ஆம்	:	79.00 "
	2 இல்லை	:	15.75 "
	3. விடை தராதோர்	:	5.25 "
6. 1. 3.	1. மூத்த மனைவியின் குழந்தை-களை வளர்க்க	:	45.50 "
	2. இல்லற இன்ப நாட்டம்	:	19.50 "
	3. மூத்த மனைவிக்குக் குழந்தை இன்மை	:	7.00 "
	4. காதல்	:	1.70 "
	5. ஒரு பெண்ணின் அழகு	:	3.50 "
	6 அனைத்துக் காரணங்களும்	:	7.00 "
	7. விடை தராதோர்	:	15.75 "
6. 1. 4.	1. ஒரு பெண்ணின் அழகு	:	17.50 "
	2. மூத்த மனைவிக்குக் குழந்தை இன்மை	:	42.00 "
	3. மூத்த மனைவியின் உடல்-நோய்	:	12.25 "
	4. காதல்	:	3.50 "
	5. சொத்துக்காக*	:	3.50 "
	6. விடை தராதோர்	:	21.00 "
6. 1. 5.	1. குடும்ப வறுமை	:	49.00 "
	2. காதல்	:	8.75 "
	3. பகட்டான வாழ்க்கையில் நாட்டம்	:	7.00 "
	4. பொருத்தமான மணமகன் கிட்டாமை	:	3.50 "

---

* ஆய்வாளர் வினாப்பட்டியில் கொடுக்காது தகவலாளரே கொடுத்த காரணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	5.	மூத்த மனைவி தமக்கையாக இருப்பின் அவளது குழந்தையை வளர்க்க	:	15.75	சதவீதம்
	6.	அனைத்துக் காரணங்களும்	:	1.75	”
	7.	காதல் தவிர மற்றவை	:	1.75	”
	8.	விடை தராதோர்	:	12 50	”
6. 1. 6.	1.	ஆம்	:	47.50	”
	2.	இல்லை	:	38.50	”
	3.	விடை தராதோர்	:	14.00	”
6. 1. 7.	1.	ஆம்	:	44.00	”
	2.	இல்லை	:	40.25	”
	3.	விடை தராதோர்	:	15.75	”
7. 1.		*குடும்பங்களும் உறவுகளும்:*			
7. 1. 1.	1.	கூட்டுக் குடும்ப வாழ்க்கை	:	45.50	”
	2.	தனிக்குடும்ப வாழ்க்கை	:	33.25	”
	3.	தனிப்பட்ட கருத்து இல்லை	:	10.75	”
	4.	விடை தராதோர்	:	10.50	”
7. 1. 2.	1.	அண்ணன்-தம்பி உறவு	:	38.50	”
	2.	அக்கா-தங்கை உறவு	:	3.50	”
	3.	சகோதர-சகோதரியர் உறவு	:	47.25	”
	4.	விடை தராதோர்	:	10.75	”
7 1. 3.	1.	தந்தை	:	28.00	”
	2.	தாய்	:	42.00	”
	3.	பாட்டன்-பாட்டி	:	1.75	”
	4.	அண்ணன்	:	1.75	”
	5.	தம்பி	:	3.50	”
	6.	அக்கா	:	1.75	”
	7.	தங்கை	:	3.50	”
	8.	அனைத்தும்	:	12.25	”
	9.	விடை தராதோர்	:	5.25	”
8. 1.		*மாமியார்-மருமகள் உறவு:*			
8. 1. 1.	1.	மனைவியின் தந்தை	:	17.50	”
	2.	மனைவியின் தாய்	:	10.00	”

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	3. மனைவியின் சகோதரன்	:	24.50	சதவீதம்
	4. மனைவியின் சகோதரி	:	10.50	"
	5. மனைவியின் சகோதரியின் கணவர்	:	25.25	"
	6. மனைவியின் சகோதரனின் மனைவி	:	8.75	"
	7. ஒருவரும் இல்லை	:	1.75	"
	8. எல்லோரும்	:	1.75	"
8.1.2.	1. கணவன்	:	35.00	"
	2. மனைவி	:	14.00	"
	3. மாமியார்	:	14.00	"
	4. மாமனார்	:	31.50	"
	5. நாத்தனார்	:	5.25	"
	6. கணவனின் சகோதரன்	:	—	"
8.1.3.	1. மாமியார் கொடுமை	:	17.50	"
	2. மருமகள் கொடுமை	:	26.75	"
	3. இருவருமே கொடுமை	:	10.50	"
	4. இருவரிடையே அன்பு	:	33.25	"
	5. விடை தராதோர்	:	12.50	"
8.1.4.	1. ஆம்	:	12.25	"
	2. இல்லை	:	30.50	"
	3. இருக்கலாம்	:	10.50	"
	4. இடைப்பட்டவர் காரணமாயிருப்பதால் மருமகளின் வெளிநடப்பு*	:	3.50	"
	5. விடை தராதோர்	:	43.00	"
8.1.5.	1. ஆம்	:	7.00	"
	2. இல்லை	:	15.75	"
	3. விடை தராதோர்	:	77.00	"
8.1.7.	1. சரி	:	24.75	"
	2. தவறு	:	10.50	"
	3. உறுதியாகக் கூறமுடியாது	:	24.50	"
	4. விடை தராதோர்	:	40.25	"

* ஆய்வாளர் வினாப்பட்டியில் கொடுக்காது தகவலாளர் தானே கொடுத்த தகவல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. 1. 9.	1.	சரி	:	19.25	சதவீதம்
	2.	தவறு	:	21.00	"
	3.	உறுதியாகக் கூறமுடியாது	:	29.75	"
	4.	விடை தராதோர்	:	29.75	"
8.1.10.	1.	சரி	:	33.25	"
	2.	தவறு	:	19.75	"
	3.	உறுதியாகக் கூறமுடியாது	:	16.00	"
	4.	விடை தராதோர்	:	31.00	"
8.1.11.	1.	கூறலாம்	:	45.50	"
	2.	கூறமுடியாது	:	19.25	"
	3.	விடை தராதோர்	:	35.50	"
11. 1.		**கணவன்-மனைவி உறவு :**			
11.1.1.	1.	மனைவியின் செருக்கு	:	17.50	"
	2.	கணவனின் நடத்தை	:	7.00	"
	3.	பாலுறவுச் சிக்கல்	:	15.75	"
	4.	மற்றவர் குறுக்கீடு	:	15.75	"
	5.	வறுமை	:	5.50	"
	6.	மனைவியின் ஒழுக்கம்	:	19.25	"
	7.	விடை தராதோர்	:	19.25	"
11.1.2.	1.	ஆம்	:	16.00	"
	2.	கூடாது	:	63.00	"
	3.	விடை தராதோர்	:	21.00	"
12. 1.	1.	சரி	:	38.50	"
	2.	தவறு	:	21.00	"
	3.	விடை தராதோர்	:	40.50	"
13. 1.	1.	ஆம்	:	43.75	"
	2.	இல்லை	:	21.00	"
	3.	விடை தராதோர்	:	35.00	"
14. 1.	1.	ஆம்	:	63.00	"
	2.	இல்லை	:	5.50	"
	3.	விடை தராதோர்	:	31.50	"
15. 1.	1.	தந்தை	:	7.00	"
	2.	தாய்	:	19.50	"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	3. இருவரும்	:	52.50	சதவீதம்
	4. விடை தராதோர்	:	21.00	"
17. 1.	1. ஆம்	:	47.50	"
	2. இல்லை	:	31.50	"
	3. விடை தராதோர்	:	21.00	"
17. 1. 1.	1. சமுதாயம் காரணம்	:	22.75	"
	2. மனநிலை காரணம்	:	31.75	"
	3. சமுதாயமும் மனநிலையும்	:	38.50	"
	4. விடை தராதோர்	:	17.00	"

2 பெண்டிர்

3. 1. *திருமணம் :*

3. 1. 1.	1. பெற்றோரின் அனுமதியின்றியும் காதல் திருமணம்	:	5.72	"
	2. பெற்றோரின் அனுமதியுடன் காதல் திருமணம்	:	31.46	"
	3. பெற்றோரால் நிச்சயிக்கப்பட்ட திருமணம்	:	61.49	"
	4. விடை தராதோர்	:	1.43	"
3. 1. 2.	1. நல்ல பண்பு	:	75.79	"
	2. உயர் கல்வி	:	2.86	"
	3. நல்ல வேலை	:	2.86	"
	4. தோற்றம்	:	1.43	"
	5. சம உரிமை	:	7.15	"
	6. அனைத்தும் தேவை	:	2.86	"
	7. விடை தராதோர்	:	1.43	"
3. 1. 4.	1. ஒரேசாதியினருடன் திருமணம்	:	54.34	"
	2. ஒரே சாதியினருடன்தான் திருமணம்	:	21.45	"
	3. வேறு சாதியினருடன் திருமணம்	:	10.01	"
	4. வேறு சாதியினருடன் தான் திருமணம்	:	4.29	"
	5. விடை தராதோர்	:	1.43	"

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.1.5.1.	தந்தை	:	11.44 சதவீதம்
2.	தாய்	:	10.61 "
3.	இருவரும்	:	65.78 "
4.	தமக்கை	:	1.43 "
5.	நானே	:	2.86 "
6.	விடை தராதோர்	:	7.15 "
3.1.6.1.	ஆடவனின் அழகு	:	1.43 "
2.	ஆடவனின் செல்வம்	:	4.29 "
3.	ஆடவனின் வேலை	:	18.75 "
4.	ஆடவனின் நல்ல பண்பு	:	58.36 "
5.	ஆடவனின் குடும்ப நிலை	:	8.58 "
6.	விடை தராதோர்	:	8.58 "
3.2.0.	உடற்குறை:		
3.2.1.1.	ஆம்	:	61.49 "
2.	இல்லை	:	31.36 "
3.	விடை தராதோர்	:	7.15 "
3.2.2.1.	ஆம்	:	60.06 "
2.	இல்லை	:	30.03 "
3.	ஓரளவு	:	1.33 "
4.	விடை தராதோர்	:	8.58 "
3.2.3.1.	பணக்கார உறவினனாக இருந்தால்	:	8.58 "
2.	நல்ல வேலை பார்க்கும் உறவினனாக இருந்தால்	:	5.72 "
3.	பணக்கார அந்நியனாக இருந்தால்	:	11.34 "
4.	நல்ல வேலை பார்க்கும் அந்நியனாக இருந்தால்	:	2.86 "
5.	காதலுக்குரியவனாக இருந்தால்	:	35.75 "
6.	இரக்கத்திற்குரியவனாக இருந்தால்	:	14.30 "
7.	விடை தராதோர்	:	21.45 "

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

3.2.4. 1.	ஆம்	: 17.06	சதவீதம்
2.	இல்லை	: 50.05	”
3.	விடை தராதோர்	: 32.89	”
4. 1.	*வரதட்சிணை:*		
4.1.1. 1.	ஆம்	: 8.48	”
2.	இல்லை	: 90.09	”
3.	விடை தராதோர்	: 1.43	”
4.1.2. 1.	தந்தை	: 12.87	”
2.	தாய்	: 7.15	”
3.	சகோதரன்	: 7.28	”
4.	சகோதரி	: 1.43	”
5.	மணமகன்	: 4.79	”
6.	மணமகள்	; 3.06	”
7.	அனைவரும்	: 4.79	”
8.	ஒருவருமில்லை	: 30.03	”
4.1.3. 1.	ஆம்	: 18.49	”
2.	இல்லை	: 67.21	”
3.	விடை தராதோர்	: 14.30	”
4.1.4. 1.	ஆம்	: 30.00	”
2.	இல்லை	: 65.71	”
3.	விடை தராதோர்	; 4.29	”
4.1.5. 1.	ஆம்	: 52.91	”
2.	இல்லை	: 40.04	”
	விடை தராதோர்	: 7.05	”
4.1.6. 1.	ஒத்து வரும்	: 7.05	”
2.	ஒத்து வராது	: 28.04	”
3.	உறுதியாகக் கூற முடியாது	: 4·29	”
4.	முதலில் பொருந்தாது எனினும் காலப்போக்கில் பொருந்தும்	: 40.60	”
5.	முதலில் பொருந்தினாலும் காலப்போக்கில் பொருந்தாது	: 20.02	ர

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

5. 1.	காதல் திருமணம்			
5. 1. 1. 1.	ஆம்	:	15.46	சதவீதம்
2.	இல்லை	:	75.95	”
3.	விடை தராதோர்	:	8·59	”
5. 1. 2. 1.	ஆம்	:	15.46	”
2.	இல்லை	:	75.95	”
3.	விடை தராதோர்	:	8.58	”
5. 1. 3. 1.	பெற்றோரின் எதிர்ப்பு	:	34.32	”
2.	சாதி	:	20.02	”
3.	குடும்ப வறுமை	:	5.72	”
4.	சமுதாயம்	:	25.74	”
5.	விடை தராதோர்	:	14.20	”
5. 1. 4. 1.	ஆம்	:	12.87	”
2.	இல்லை	:	68.64	”
3.	விடை தாராதோர்	:	18.49	”
5. 1. 5. 1.	ஆம்	:	32.89	”
2.	இல்லை	:	52.91	”
3·	விடை தராதோர்	:	14.30	.
5. 1. 6 1.	ஆம்	:	25.74	”
1.	இல்லை	:	41.47	”
3.	விடை தராதோர்	:	32.79	”
6. 1.	மறுமணம் :			
6. 1. 1. 1.	ஆம்	:	35.71	”
2.	இல்லை	:	11.42	”
3.	சூழலைப் பொறுத்தது	:	45.71	”
4.	விடை தராதோர்	:	7.15	”
6. 1. 2. 1.	ஆம்	:	67.21	”
2.	இல்லை	:	20.02	”
3.	விடை தராதோர்	:	12.77	”
6. 1. 3. 1.	மூத்த மனைவியின் குழந்தைகளை வளர்க்க	:	41.47	”
2.	இல்லற இன்ப நாட்டம்	:	15.73	”

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	3. மூத்த மனைவிக்குக் குழந்தை இன்மை	:	8.58	சதவீதம்
	4. ஒரு பெண்ணின் அழகு	:	—	
	5. அனைத்துக் காரணங்களும்	:	7.05	”
	6. விடை தராதோர்	;	27.17	”
6.1.4.	1. ஒரு பெண்ணின் அழகு	:	25.74	”
	2. மூத்த மனைவிக்குக் குழந்தை இன்மை	:	30.00	”
	3. மூத்த மனைவியின் உடல்நோய்	:	4.28	”
	4. காதல்	:	14.30	”
	5. அனைத்துக் காரணங்களும்	:	2.85	”
	6. விடை தராதோர்	:	22.83	”
6.1.5.	1. குடும்ப வறுமை	:	57.14	”
	2. காதல்	:	11.44	”
	3. பகட்டான வாழ்வில் நாட்டம்	:	7.14	”
	4. பொருத்தமான மணமகன் கிட்டாமை	:	7.14	”
	5. மூத்த மனைவி தமக்கையாக இருப்பின் அவளது குழந்தைகளை வளர்க்க	:	10.00	”
	6. அனைத்துக் காரணங்களும்	:	7.14	”
6.1.6.	1. ஆம்	:	45.76	”
	2. இல்லை	:	28.60	”
	3. விடை தராதோர்	:	25.64	”
6.1.7.	1. ஆம்	:	44.33	”
	2. இல்லை	:	31.46	”
	3. விடை தராதோர்	:	24.21	”

7. 1. குடும்பங்களும் உறவுகளும்:

7.1.1.	1. கூட்டுக் குடும்பம்	:	28.57	”
	2. தனிக் குடும்பம்	:	47.14	”

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

	3.	தனிப்பட்ட கருத்து இல்லை	:	11.43	சதவீதம்
	4.	இரண்டும் தேவை	:	1.42	”
	5.	விடை தராதோர்	:	11.43	”
7. 1. 2.	1.	அண்ணன்-தம்பி உறவு	:	7.15	”
	2.	அக்காள்-தங்கை உறவு	:	28.60	”
	3.	சகோதர-சகோதரி உறவு	:	44.33	”
	4.	எல்லோரிடமும்அன்பானஉறவு	:	5.72	”
	5.	ஒருவரிடையேயும் அன்பான உறவு இல்லை	:	1.43	”
	6.	விடை தராதோர்	:	12.77	”
7. 1. 3.	1.	எல்லோரும்	:	11.43	”
	2.	தந்தை	:	32.85	”
	3.	தாய்	:	30.00	”
	4.	பாட்டன்-பாட்டி	:	1.43	”
	5.	அண்ணன்	:	5.72	”
	6.	தம்பி	:	4.28	”
	7.	அக்காள்	:	1.43	”
	8.	தங்கை	:	2.85	”
	9.	விடை தராதோர்	:	10.00	”
8. 1.		*மாமியார்-மருமகள் உறவு:*			
8. 1. 1.	1.	கணவனின் தந்தை	:	38.09	”
	2.	கணவனின் தாய்	:	33.32	”
	3.	கணவனின் சகோதரன்	:	2.38	”
	4.	கணவனின் சகோதரி	:	2.38	”
	5.	சகோதரியின் கணவன்	:	9.53	”
	6.	சகோதரனின் மனைவி	:	2.38	”
	7.	அனைவரும்	:	11.91	”
8. 1. 2.	1.	நான்	:	2.39	”
	2.	எல்லோரும்	:	2.39	”
	3.	கணவன்	:	69.02	”
	4.	மனைவி	:	4.76	”
	5.	மாமியார்	:	2.39	”
	6.	மாமனார்	:	11.90	”
	7.	நாத்தனார்	:	2.39	”
	8.	கணவரின் சகோதரன்	:	4.76	”

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. 1. 3.	1. மாமியார் கொடுமை	:	2.38	சதவீதம்
	2. மருமகள் கொடுமை		—	
	3. இருவருமே கொடுமை	:	7.14	”
	4. இருவரிடையே அன்பு	:	80.92	
	5. நடுநிலைமை*	:	4.76	”
	6. விடை தராதோர்	:	4 76	”
8. 1. 4.	1. ஆம்	:	2.86	”
	2. இல்லை	:	61.49	”
	3. இருக்கலாம்	:	1 33	”
	4. விடை தராதோர்	:	34.32	”
8. 1. 5.	1. ஆம்	:	38 51	”
	2. இல்லை	:	21.45	”
	3. விடை தராதோர்	:	40 04	”
8. 1. 6.	1. உண்டு	:	19.04	”
	2. இல்லை	:	80 95	”
8. 1. 7.	1. சரி	:	28 60	”
	2. தவறு	:	17 16	”
	3. உறுதியாகக் கூற முடியாது	:	28.60	”
	4. விடை தராதோர்	:	25.74	”
8. 1. 8.	1. சரி	:	25.74	”
	2. தவறு	:	12 87	”
	3. உறுதியாகக் கூறமுடியாது	:	30 03	”
	4. விடை தராதோர்	:	31.46	“
8. 1. 9.	1. சரி	:	28 60	”
	2. தவறு	:	11.14	”
	3. உறுதியாகக் கூற முடியாது	:	28.60	”
	4. விடை தராதோர்	:	31.46	”
8. 1. 10	1. சரி	:	22.88	”
	2 தவறு	:	21.45	”
	3. உறுதியாகக் கூறமுடியாது.	:	21.45	”
	4. விடை தராதோர்	:	34.32	”

* ஆய்வாளர் வினாப்பட்டியில் கொடுக்காது தகவலாளர் தானே கொடுத்த காரணம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

8. 1. 11	1.	கூறலாம்	:	55.77	சதவீதம்
	2.	கூறமுடியாது	:	11.44	"
	3.	விடை தராதோர்	:	32.89	"
9. 1.		நாத்தனார் உறவு			
9. 1. 1.	1.	ஆம்	:	8.58	"
	2.	இல்லை	:	60.06	"
	3.	விடை தராதோர்	:	31.46	"
9. 1. 2.	1.	அன்புடன்	:	71.40	"
	2.	அதிகாரத்துடன்	:	7.14	"
	3.	பொறாமையுடன்	:	2.39	"
	4.	வெறுப்புடன்	:	4.76	"
	5	ஒட்டாத நிலை*	:	2.39	"
	6.	நடுநிலைமை*	:	2 39	"
	7.	விடை தராதோர்	:	9.52	"
9. 1. 3.	1.	ஆம்	:	40.00	"
	2.	இல்லை	:	20.00	"
	3.	விடை தராதோர்	:	40.00	"
10. 1.		ஓரகத்தி உறவு:			
10.1.1.	1.	மனக்கசப்புடன்	:	2.38	"
	2.	அன்புடன்	:	40.46	"
	3.	மனக்கசப்பும் அன்பும்	:	9.52	"
	4.	தொடர்பேயின்றி	:	16.66	"
	5.	விடை தராதோர்	:	30.94	"
10.1.2.	1.	இருவர் குடும்ப செல்வ வேறுபாடு	:	18.59	"
	2.	பொதுச் சொத்து	:	8.52	"
	3.	கணவன்மார்களின் வேலை	:	11.44	"
	4.	கணவன்மார்களுக்குக் குடும்பத்தில் கொடுக்கப்படும் மதிப்பு	:	—	"
	5.	விடை தராதோர்	:	61.45	"

* ஆய்வாளர் வினாப்பட்டியில் தராது தகவலாளர்களே கொடுத்த தகவல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

11. 1.		கணவன்-மனைவி உறவு :		
11.1.1.	1.	மனைவியின் செருக்கு	:	15.73 சதவீதம்
	2.	கணவனின் நடத்தை	:	9.34 "
	3.	கணவன்-மனைவி பாலுறவுச் சிக்கல்	:	2.86 "
	4.	மற்றவர் குறுக்கீடு	:	11.44 "
	5.	குடும்ப வறுமை	:	2.86 "
	6.	மனைவியின் ஒழுக்கம்	:	15.73 "
	7.	விடை தராதோர்	:	42.04 "
11.1.2.	1.	ஆம்	:	21.45 "
	2.	கூடாது	;	45.76 "
	3.	விடை தராதோர்	:	32.39 "
11.1.3.	1.	மாமியார்	:	2.39 "
	2.	மாமனார்	:	2.39 "
	3.	நாத்தனார்	:	— "
	4.	கணவர்	:	92.82 "
	5.	கணவனின் சகோதரர்	:	— "
	6.	ஒருவரின் அனுமதியும் தேவையில்லை*	:	2.39 "
12.1.	1.	சரி	:	48.62 "
	2.	தவறு	:	20.02 "
	3.	விடை தராதோர்	:	31.46 "
13.1.	1.	ஆம்	:	51.58 "
	2.	இல்லை	:	20.02 "
	3.	விடை தராதோர்	:	28.40 "
14.1.	1.	ஆம்	:	44.23 "
	2.	இல்லை	:	17.16 "
	3.	விடை தராதோர்	:	38.61 "
15.1.	1.	தந்தை	:	11.44 "
	2.	தாய்	:	18.59 "
	3.	இருவரையும்	:	52.91 "
	4.	விடை தராதோர்	:	17.16 "

* ஆய்வாளர் வினாப்பட்டியில் கொடுக்காது தகவலாளிகளே கொடுத்த தகவல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

16.1.		சமுதாயம்			
16.1.1.		ஒருவரும் விடை தரவில்லை.			
16.1.2.	1.	ஆண்களுடன்	:	12.87	சதவீதம்
	2.	பெண்களுடன்	:	18.49	"
	3.	இருவருடனும்	:	35.75	"
	4.	யாருடனாயினும்*	:	2.86	"
	5.	விடை தராதோர்	:	30.03	"
16.1.3.	1.	ஆம்	:	68.00	"
	2.	இல்லை	:	10.00	"
	3.	விடை தராதோர்	:	22.00	"
16.1.4.	1.	உண்டு	:	16.00	"
	2.	இல்லை	:	58.00	"
	3.	விடை தராதோர்	:	26.00	"
17. 1.	1.	ஆம்	:	42.90	"
	2.	இல்லை	:	40.04	"
	3.	விடை தராதோர்	:	17.16	"
17.1.1.	1.	சமுதாயம்	:	7.15	"
	2.	மனநிலை	:	15.73	"
	3.	சமுதாயமும் மனநிலையும்	:	57.10	"
	4.	பொருளாதாரம்	:	1.43	"
	5.	விடை தராதோர்	:	18.59	"

* ஆய்வாளார் வினாப்பட்டியில் கொடுக்காது தகவலாளி-களே கொடுத்த தகவல்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆய்வாளருடைய கள ஆய்வு அனுபவங்கள்

தகவலாளிகளுள் பெண்கள் வினாப்பட்டிகளைக் கையில் வாங்கவே தயங்கினர். வினாப்பட்டியில் உள்ள வினாக்கள் யாவும் பெண்களின் வாழ்க்கைச் சூழல்களைக் குறிப்பிடுவனவாக இருப்பது அவர்களின் தயக்கத்திற்குக் காரணம் எனக் குறிப்-பிட்டனர். தம்முடைய வாழ்க்கைச் சிக்கல்கள் மற்றவர்களுக்குத் தெரியக்கூடாது என்று பெண்கள் நினைக்கின்றனர். ஆய்வாளர் பெண்களிடம் வினாப்பட்டியின் இன்றியமையாமையை எடுத்துக் கூறியும், ''எங்க வீட்டு ஆம்புளைங்களுக்கு இதெல்லாம் நாங்க எழுதினோம்னு தெரிஞ்சாலே எங்களைத் திட்டுவாங்க'' என்று மறுத்து விட்டனர்.

படித்த பெண்களிலும் பலர் முதலில் வினாப்பட்டியை நிரப்ப மறுத்துவிட்டனர். அவர்களுள் சிலர் ''நாங்கள் பெயரைக் குறிப்பிடமாட்டோம்'' என்று கூறியே நிரப்பித் தந்தனர். படித்த பெண்களே மாமியார்-மருமகள் உறவுநிலை, நாத்தனார் உறவு நிலை, ஓரகத்தி உறவுநிலை முதலியவற்றைக் குறிப்பிட மறுத்து விட்டனர். ஆய்வாளர் அவர்களை மீண்டும் மீண்டும் அணுகிக் கேட்டபின்னர் சிலர்தான் அவற்றை நிரப்பினர்.

சில தகவலாளிகளுள் பெண்கள் நிரப்பவேண்டிய வினாப் பகுதிகளையும் அவர்களைக் கேட்காமலே அவர்களின் கணவன்-மாரே நிரப்பித் தந்தமை குறிப்பிடத்தக்கது.

படித்த பெண்களிலும் சிலர், ''என் மாமியாருக்கும் எனக்கும் இடையேயுள்ள உறவுநிலை அன்பானதாக இல்லை; எனினும் அதனை எழுத்துவடிவாகக் குறிப்பிட நான் விரும்ப வில்லை'' எனக் கூறி உண்மையான விடைகளை எழுத மறுத்து விட்டனர். எனவே, பெண்கள் தம் புகுந்தவீட்டு உறவுகளைப் பற்றிக் குறிப்பிடும் தகவல்களை முழுமையாக ஆய்வாளரால் ஏற்றுக்கொள்ள இயலவில்லை.

ஆய்வாளர் ஆண்களிடம் வினாப்பட்டிகளைக் கொடுக்கும் போது இத்தகு சிக்கல்கள் எழவில்லை.

ஆய்வாளர், தகவலாளிகள் வினாப்பட்டிகளை நிரப்பித் தருவதற்கு இரண்டு வார காலம் தந்திருந்தும் வினாப்பட்டிகள் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக் கொடுக்கப்படவில்லை. ஆய்-வாளர் தகவலாளிகளுக்குக் கொடுத்த இருநூற்றிருபத்தைந்து வினாப்பட்டிகளில் நூற்றிஇருபத்தேழு வினாப்பட்டிகளே மீண்டு வந்தன.

படித்தவர்களிடையேயும், வினாப்பட்டி ஆய்வாளருக்கு எத்-துணை அளவு இன்றியமையாதது என்பதைப் புரிந்துகொள்ளும் மனப்பான்மை மிகுதியாகக் காணப்படவில்லை என்பது ஆய்வாள-ரின் கள ஆய்வு அனுபவத்தினின்று புலப்படும் உண்மை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பின்னிணைப்பு 4

துணை நூற்பட்டியல்

(அ) தமிழ்

1. நூல்கள்

அகிலன், 1970. வளரும் தமிழ் இலக்கியம். ரா. ராஜதுரை (ப ஆ.) சென்னை : கிருஸ்துவ இலக்கியச் சங்கம் வெளியீடு.

… … …, 1972. கதைக்கலை. சென்னை : பாரி புத்தகப் பண்ணை.
அருள்சாமி, மு. சு., 1974. விடுதலைக்குப்பின் நாவல் வரலாற்றில் மகளிர் பங்கு, ந. சஞ்சீவி (பொ. ப. ஆ.) இந்திய விடுதலையும் தமிழ் இலக்கியமும், சென்னை : சென்னைப் பல்கலைக்கழக வெளியீடு.

அறவாணன், க.ப., 1973. ஆராய்ச்சித் தமிழ். சென்னை : தமிழ்க் கோட்டம்.

இரத்தினம், கா. பொ. (ப. ஆ.), 1966. எழுத்தாளர் கல்கி. சென்னை : பழனியப்பா பிரதர்ஸ்.

இராதாகிருஷ்ணன், 1978. நா. பா. நாவல்களில் ஒரு பார்வை. சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

இராமலிங்கம், மா., 1972. நாவல் இலக்கியம். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

… … …, 1973. இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

… … …, 1973. புனைகதை வளம். சென்னை : தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்.

… … …, 1974. அகிலனின் கலையும் கருத்தும். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

... ..., 1967. நீயே என் உலகம். சென்னை : மல்லிகைப் பதிப்பகம்.

... ..., 1971. வாழ்த்துவோம். சென்னை : பாரி புத்தகப் பண்ணை.

... ..., 1972. உள்ளக்கடல். சென்னை : கலைமகள் காரியாலயம்.

... ..., 1974. இரவுச்சுடர், நாகப்பட்டினம் : இமயப் பதிப்பகம்.

... ..., 1974. மானிட அம்சம். நாகப்பட்டினம் : இமயப் பதிப்பகம்.

செந்தில்நாதன், 1973. இந்துச் சட்டம். சென்னை : தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்.

செல்லப்பா, சி. சு., 1974. தமிழ் இலக்கிய விமர்சனம். சென்னை : எழுத்து பிரசுரம்.

... ..., 1974. தமிழ் சிறுகதை பிறக்கிறது. சென்னை : எழுத்து பிரசுரம்.

செல்வராசன், சில்லையூர்., 1967. ஈழத்தில் தமிழ் நாவல் வளர்ச்சி. சென்னை : அருள் நிலையம்.

தட்சிணாமூர்த்தி, பி., 1979. நாவல் ஆய்வு. நெல்லை : இலஞ் சியார் பதிப்பகம்.

தமிழண்ணல், எம். எஸ். இலக்குமணன், 1977. ஆய்வியல் அறிமுகம். மதுரை : மீனாட்சி புத்தக நிலையம்.

தமிழண்ணல், 1973. ஒப்பிலக்கிய அறிமுகம். மதுரை : மீனாட்சி புத்தக நிலையம்.

தூரன், பெ., 1968. மனமும் அதன் விளக்கமும். சென்னை : பாரிநிலையம்.

நச்சினார்க்கினியர் (உ.ஆ.), 1966. தொல்காப்பியம் — பொருளதிகாரம். சென்னை : கழக வெளியீடு.

பன்னிரண்டாவது கருத்தரங்கு ஆய்வுக்கோவை. இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் வெளியீடு, 1980. அண்ணாமலை நகர்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பாக்கியமுத்து, தி. (ப.ஆ.), 1972. இன்றையத் தமிழ் இலக்கியத்தில் மனிதன். சென்னை : கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்.

... ..., 1974. விடுதலைக்குப் பின் தமிழ் நாவல்கள். சென்னை: கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்.

... ..., 1976. தமிழ் நாவல்களில் மனித விமோசனம். சென்னை : கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்.

... ., 1977. இலக்கியத்தில் பெண்கள். சென்னை : கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்.

... ..., 1978. தமிழ் நாவல்களில் குடும்ப சக்தி சமுதாய மாற்றம், சென்னை : கிறிஸ்தவ இலக்கிய சங்கம்.

... ..., 1979. நூறாண்டு தமிழ் நாவல் தரும் செய்தி. சென்னை : கிறிஸ்தவ இலக்கிய சங்கம்.

பாலச்சந்திரன், சு , 1976. இலக்கியத் திறனாய்வு. சென்னை: அணியகம்.

பேஜ், ஜேம்ஸ் டி , அ.பெசண்ட் கிரிப்பர் ராஜ் (மொ. பெ. ஆ.), 1965. பிறழ்நிலை உளவியல். சென்னை : தமிழ் வெளியீட்டுக் கழகம்.

மணிமாறன், பா.அ.மா., 1979. இந்திரா பார்த்தசாரதி : ஒரு மதிப்பீடு. மதுரை : விஜய் பப்ளிகேஷன்ஸ்.

முத்துச்சண்முகன், 1976. தமிழ் இலக்கியக் கோட்பாடுகள். மதுரை : சர்வோதய இலக்கியப்பண்ணை.

முத்துச்சண்முகன், சு. வேங்கடராமன், 1976. ஆய்வுக் கட்டுரை எழுதும் முறை, மதுரை : சர்வோதய இலக்கியப் பண்ணை (வி.உ.).

முத்தையா, கண. (தொ.ஆ.), 1966. தமிழ் நாவல்கள், சென்னை: தமிழ்ப்புத்தகாலயம்.

முத்துச்சண்முகன், இராம. பெரியகருப்பன் (ப.ஆ.), 1976. அகிலன் கருத்தரங்க ஆய்வுரைகள். மதுரை: மதுரைப் பல்கலைக் கழகம்

முருகரத்தனம், மீனாட்சி, 1976. கல்கியின் சிறுகதைக் கலை. மதுரை: சர்வோதய இலக்கியப் பண்ணை (வி.உ.).

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மெர்சி,பியூலா, தா.எ., 1974. இருபதில் சிறுகதைகள், சென்னை : சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம்.

மோகன், இரா., 1978 கு.ப.ராஜகோபாலன் சிறுகதைகள், மதுரை; சர்வோதய இலக்கியப்பண்ணை.

... ... 1972 டாக்டர் மு. வ. வின் நாவல்கள் மதுரை : சர்வோதய இலக்கியப்பண்ணை

ரஸ்ஸல், பெர்ட்ராண்டு, 1965. திருமண முறைகள். கோ. மாதவன் (மொ. பெ.ஆ). சென்னை: பழனியப்பா பிரதர்ஸ்.

லக்ஷ்மி, 1953. பவானி. சென்னை: இன்ப நிலையம்.

... ..., 1958. சூர்யகாந்தம். சென்னை : இன்பநிலையம்.

... ..., (1960-66 வரை வந்தது). அரக்கு மாளிகை. சென்னை: ஆனந்தவிகடன்.

... ..., 1968. பெண்மனம் சென்னை: இன்ப நிலையம்.

... ..., 1968. மரகதம், சென்னை : இன்ப நிலையம்.

...., 1968. ஸ்ரீமதி மைதிலி. சென்னை: இன்ப நிலையம்.

... ..., 1969. மிதிலா விலாஸ். சென்னை: இன்ப நிலையம்.

... ..., 1974. பண்ணையார் மகள். சென்னை: இன்ப நிலையம்.

... ..., 1977. நாயக்கர் மக்கள். சென்னை: பூங்கொடி பதிப்பகம்.

... ..., 1977. மாயமான். சென்னை: பூங்கொடி பதிப்பகம்.

...., 1967. காஞ்சனையின் கனவு. சென்னை: இன்ப நிலையம்

... ..., 1967. லட்சியவாதி. சென்னை: இன்ப நிலையம்.

... ... 1979. அடுத்த வீடு. சென்னை: பூங்கொடி பதிப்பகம்.

வானமாமலை, நா. (ப.ஆ.) 1977. தமிழ் நாவல்கள் ஒரு மதிப்பீடு. சென்னை. : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

விசுவநாதன், ஈ.சா., 1976. ஆய்வு நெறிமுறைகள். சென்னை : க்ரியா.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

விமலா பருக்கி, ரேணு சக்கரவர்த்தி, 1976. கம்யூனிசமும் பெண்களும், எஸ். நாராயணன் (மொ. பெ. ஆ.). சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.

வீராசாமி தா.வே., 1973. தமிழ்நாவல் முன்னோட்டம். கோயம்புத்தூர் : மணிமேகலை வெளியீடு.

... ..., 1977. கல்கி அகிலன் படைப்புக்கலை. சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

... ..., 1978. தமிழில் சமூக நாவல்கள், சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

... ..., 1979. தமிழ் நாவல் வகைகள். சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

வேங்கடராமன், சு., 1977. அகிலன் சிறுகதைகள் ஒரு திறனாய்வு. சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.

வையாபுரிப்பிள்ளை, எஸ். (தொ.ஆ.), 1967. சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), சென்னை : பாரி நிலையம்.

... ..., 1967. குறுந்தொகை, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்), சென்னை : பாரி நிலையம்.

... ., 1967. நற்றிணை, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்). சென்னை : பாரி நிலையம்.

... ..., 1967. புறநானூறு, சங்க இலக்கியம் (பாட்டும் தொகையும்). சென்னை : பாரி நிலையம்.

ஜகந்நாதன், கி. வா., 1966. தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும். சென்னை : தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்.

ஜீவானந்தம், ப., 1975. புதுமைப் பெண். சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.

ஸ்ரீதேவி, 1963. இந்தியப் பெண் குலத்தின் முன்னேற்றம். எஸ். சங்கரன் (மொ.பெ.ஆ.). புதுடில்லி : தென்மொழிகள் புத்தக வெளியீட்டு நிறுவனம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

2. இதழ்கள்

அனுத்தமா, அக். 1979. 'தமிழ் நாவலும் பெண்கள் பங்கும்', தீபம்.

ஆனந்தவிகடன். 23.12.79. பொன்விழா இதழ்-15.

இராம்னாத் சரஸ்வதி, 1968. இலக்கியம் படைக்கும் பெண் எழுத்தாளர்கள். தமிழ் உறவு ஆண்டுமலர். சென்னை.

குங்குமம், 15.1.78 & 22.1.78. - சந்திப்பு நடிகை லக்ஷ்மி & எழுத்தாளர் லக்ஷ்மி.

கோமகள் 1962. 'தமிழ் எழுத்துலகில் பெண்கள்', பாரதி - மாநாட்டு மலர். சென்னை: தமிழ் எழுத்தாளர் சங்கம், டிசம்பர் 30.

சிவத்தம்பி, கா., ஜுலை, 1971. 'கணிகை' ஆராய்ச்சி.

"தாரா", ஜுன், 1979. 'எழுத்தாளர்கள் எங்கே போகிறார்கள்' தீபம்.

நடராஜன், தி.சு.' ஜுன், 1973. 'தி ஜானகிராமன் நாவல்கள்', ஆராய்ச்சி

வானமாமலை, நா., ஜனவரி, 1970 'ஃபிராய்டிஸம்', தாமரை.

லக்ஷ்மி, 'சம்பாதிக்க மட்டுமே நினைத்தால் கடத்தல் வியாபாரம் செய்து கூட சம்பாதிக்கலாம். 1.10.1980. துக்ளக்.

... ..., 'கெட்டுப் போன பெண்களைப்பற்றி நான் எழுத மாட்டேன்', கல்கி. 1 7.1976.

... ..., 'பெண் எழுத்தாளர் பேட்டி', மங்கை.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

(ஆ) ஆங்கிலம்

1. நூல்கள்

Allport, Gordon, W,, 1961. Pattern and Growth In personality: London : Harvard University.

Altekar, A. S., 1973. The position of women in Hindu Civilization. Delhi : Motilal Banarsidas publishers.

Anderson, Durston, Poole, 1971. Thesis and Assignment writing. New Delhi : Wiley Eastern Private Limited.

Aubert, Vilhelm, 1969. Elements of Sociology. London: Heinemann Educational Books Limited.

Baig, Tara Ali, 1976. Indian Woman Power. New Delhi : S. Chand & Co.

Baber, Rachel, 1965. Sigmund Freud for Everybody. New York : Popular Library Publication.

Balasubramaniyan, C., 1976. The Status of Woman In Tamil Nadu During Sangam Age. Madras : University of Madras.

Balse, Mayah, 1976. The Indian Female : Attitude Towards Sex. New Delhi : Chetana Publications.

Barnhent Clarence, L. (Ed.), 1955. Electra Complex. : The American College Dictionary. New York : Random House.

Basu, Aparna, 1976. Indian Women From Purdah to Modernity. New Delhi : Vikas Publishing House.

Beavoir, Simon De., 1968. In : M. Parshley (ed,), The Second Sex. New York : The Modern Library.

Bhatia, H.R., 1972. Abnormal Psychology. New Delhi : Oxford & IBM Publishing Co.

Bhatia, Hansraj, 1976. General Psychology. New Delhi : Oxford and IBH Publishing Co.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Boay, G.D., 1958. Some Fundamentals of Psychology. Madras : Gunalaya.

Bottomore, T.B., 1971. Sociology. London : George Allan & Unwin Ltd.

Brown, Roger, 1971. Social Psychology. New York : Macmillan Company.

Caplon, Theodre, 1970. The Sociology of Work. Allahabad : Central Book Depot.

Chandra Kumar, Bennet T., 1978. Sociology of Prostitution. Trivandrum : Kerala Historical Society.

Cnattopadhyay, Kamaladevi, 1939. The Awakening of Indian Women. Madras : Everyman's Press.

Clark, T.W., 1970. The Novel in India. London : George Allen & Unwin Ltd., Ruskin House.

Cormack Margaret, 1961. She who Rides a Peacock. Bombay: Asia Publishing House.

... ..., 1961. The Hindu Woman. Bombay: Asia Publishing House.

Coser, Lewis, A. (ed.), 1972. Sociology Through Literature. New Jersey: Prentice Hall.

Cousins, M.E., 1922. Awakening of Asian Womanhood. Madras: Ganes and Company; 1947. Indian Womanhood Today. Allahabad : Kitabistan. (Rev.ed)

Daiches, David, 1967. The Novel and the Modern World. London : The University of Chicago Press.

Das, Frieda, M , 1932. Purdah, the Status of Indian Women. New York : The Vanguard Press, Inc.

Dasgupta, Kalpana (ed.), 1976. Women on the Indian Scene. New Delhi : Abhinav Publications.

Desai, N., 1963. Woman in Modern India. Bombay : Vora and Co.Publishers Pvt. Ltd.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

De Souza, Alfred (ed.), 1975. Woman in Contemporary India. Delhi: Indian Social Institute.

Deutch, Andre, 1966. In: Ruth and Edward Brecher (eds.), An Analysis of Human Sexual Response. London: George Allen & Unwin Ltd.

Deutsch, Helena, 1947. A. Psychology of Women. Girlhood Vol.I. London: Research Books Ltd.

... ..., 1947.B, The Psychology of Women. Motherhood Vol II, London: Research Books Ltd.

Devanandan, P.H., 1966. Changing Pattern of Family in India. Bombay: Christian Institute,

Dhandayudham, R., 1977, A Study of the Sociological Novels in Tamil. University of Madras.

Dhavamony' Mariasusai' 1971. Love of God According to Saiva Siddhanta. London: Oxford University Press.

Dasman Singh. and Panos D. Hardis, (eds.), 1978. The Family in Asia. New Delhi: Vikas Publishing House Pvt. Ltd.

Dube, S C. (ed.), 1977. India Since Independence, Social Report in India 1947-1972. New York: Vikas Publishing House Pvt Ltd.

Dubois, Abbe J.A., 1928. Hindu Manners, Customs and Ceremonies. Oxford: Clarendon Press.

Edel, Leon, 1965. The Psychological Novel. 1900-1950. Ludhiana: Lyll Book Depot.

Ellis, Have lock, 1942. Studies in the Psychology of Sex, Vol. I, II. New York: Random House.

Elwood, Maren, 1955. Characters Make Your Story. Boston: The Writer, Inc.

Freud, Sigmund, 1933. New Introductory Lectures on Psycho-Analysis. New York: WW. Norton & Company, Inc. Publishers.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

... ..., 1971. The Complete Introductory Lectures on Psycho-analysis. London: George Allen & Unwin Ltd.

Fernandez, Marilyn, 1974. In: Rev. S.J. Jose Muricban (ed.), The Impact of Women's Employment on Family Size. Trivandrum: Kerala Sociological Society.

Fodor. N. and F. Gaynor, 1958. Father Fixation (Freud Dictionary of Psycho-analysis). Greenwich: Fawcett Publication, Inc.

Friedman, Alan, 1966. The Turn of the Novel. London: Oxford University Press.

Fuller, Edmund, 1958. Man in Modern Fiction. New York: Random House.

Gandhi, Mohandas Karamchand, 1942. Women and Social Injustice. Ahmedabad: Navajivan Publishing House.

... ..., 1958. Women. Ahmedabad: Navjivan.

... ..., 1964. Role of Women. In: Anand T. Hingorani (ed). Bombay: Bharatiya Vidhya Bhavan.

Geoffrey, May 1935. Prostitution. In: Encyclopaedia of Social Sciences, Vol. VII.

Ghurye, G.S., 1950. Caste and Class in India. Bombay: Popular Book Depot.

Gokhale, B.G., 1962. Ancient India: History and Culture. Bombay: Asia Publishing House.

Goldmann, Lucien, 1975. Towards a Sociology of the Novel. Sheridan (Tr.), London: Tavistock Publications.

Goldthorpe, J.E., 1969. An Introduction to Sociology. London: Cambridge University Press.

Gore, M.S., 1968. Urbanization And Family Change. Bombay: Popular Prakasham.

Gray, Hesther, 1943. Indian Women and the West. London: Zenith Press.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Gupte, S.V. and G.M. Divekar, 1976. Hindu Law of Marriage. Bombay : W.M. Tripathi Private Limited.

Guy, Roche, 1972. A General Introduction to Sociology : A Theoretical Perspective. London : Macmillan.

Halperin, John (ed.), 1974. The Theory of the Novel. London : Oxford University Press.

Harris, C.C., 1968. The Family. London : George Allen and Unwin Ltd.

Harvey, W.J., 1966. Character and the Novel. London : Chatto & Windus.

Hate, C A, 1948. Hindu Woman and her future. Bombay : New Book Co.

... ..., 1969. Changing Status of Woman. Bombay : Allied Publishers Pvt. Ltd.

Helgard, E. R., R.C. Atkinson, R L. Atbinson, 1979 Introduction to Psychology. New Delhi : Oxford IBA Publishing Co.

Hudson, W.H, 1978. An Introduction to The Study of Literature. New Delhi : Kalyani Publishers.

Irene Clatemont De Castillajo, 1973. Knowing Woman. London : Hodder And Stoughton.

Jayakar, R B. K., 1968 Prostitution. In : Encyclopeadia of Social Work in India, Vol. II. Publications Divisions, India.

James, Williams, 1918. The Principles of Psychology. Vol. I. New York : Dover Publications.

Joseph Warren, Beach, 1960. The Twentieth Century Novel: Studies in Technique. Ludhiana : Lyall Book Depot.

Kala Rani, 1976. Role conflict In Working Women. New Delhi : Chetana Publications.

Kannan, C.T., 1963 Inter-caste and Inter-community Marriages in India. Bombay : Allied Publishers.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Kapadia, K. M., 1966. Marriage and Family in India. Bombay : Oxford University Press.

Kaplan, Charles, 1969. Critical Approaches to The Short Story. New York. Hoet, Rinehart and Winston Inc.

Kapur, Promilla, 1970. Marriage and the working Women in India. Delhi : Vikas Publications.

... ., 1972. The Changing Role and Status of Women. In : The Indian Family in the Change and Challenge of the Seventies. New Delhi : Sterling Publishers.

... ..., 1975. The Changing Status of the Working Woman in India. Delhi : Vikas Publishing House Pvt. Ltd.

... ..., 1976. Studies of Urban Women in India. In : Giri Raj Gupta (ed.), Family And Social Change in Modern India. Delhi : Vikas Publishing House.

... ..., 1978. Women in Modern India In : Man Singh Das and Panos D. Bardis (eds.), The Family in Asia. Delhi : Vikas Publishing House.

Karve, Irawati, 1965. Kinship Organization in India. Bombay : Asia Publishing House.

Keating, P. J. ,1971. The Working Classes in Victorian Fiction. London : Routledge & Kegan Paul.

Kettle, Arnold, 1972. The Nineteenth Century Novel. London: Heinemann Educational Books Ltd.

Kephart, W.M., 1961. The Family, Society and The Individual' Boston : Pennsylvania Houghton Mifflin Company.

Khrapchenko, M., 1977. The Writer's Creative Individuality and the Development of Literature. Moscow: Progress Publishers.

Krishnamurthy, J., 1969. In: D.Rajagopal (ed.), Thought and Love. London: Victor Gollancy Ltd.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Kumar, K. Shiv, and Keith Mckean (eds.), 1968. Critical Approaches to Fiction. New York: Mc Graw-Hill Book Company.

Landis, Judson T., and Mary G. Landis, 1958. Personal Adjus: ment, Marriage and family Living, Englewood Cliffs N J: Prentice-Hall Inc.

Levy, 1949. Family Revolution in Modern China. Cambridge. Harvard University Press.

Lilian, R. Furst and peter N. Serine, 1971. Naturalism. London: Methuen & Co.Ltd.

Loganayagy, Nannithamby, 1969. Women in Modern Tamil Literature. Kulalumpur: University of Malaya.

Lubbock, P, 1969 Craft of Fiction. London: Jonathan Cape.

Mackenzie, Norman (ed.), 1966. A Guide to the Socia. Sciences. New York: The New American Library.

Maciver, R.M. & N.Charles Page, 1950. Society. London: Macmillan & Co. Ltd.

Madan, G.R, 1976. Indian Social Problems, Vol.I. Bombay: Allied Publishers Pvt.Ltd.

Mandelbaum, David G. 1972. Society in India. Bombay Popular Prakasham.

Marion, Hilliard, 1960. A Woman Doctor Looks at Love and Life. New York: Perma Books.

Marx, Engels, 1976. On Literature and Art. Moscow: Progress Publishers.

Mathur, A S. and B.L. Gupta, 1965. Prostitutes and Prostitution. Agra: Ram Prasad and sons.

Mazumdar, Vina, 1976. The Social Reform Movement From Ranade to Nehru, (Indian Women Purdah to Modernity), New Delhi: Vikas Publishing House.

Mckinley Gilbert Donald, 1964. Social Class and Family Life. London: Collier-Macmillan Limited.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Saro, S.B., 1944. The Solution of the Woman Problem. Lahore: Dewan's Publications.

Sastri, Heramba Chatterjee, 1972 The Social Background of the Forms of Marriage in Ancient Iadıa, Vol. I. Calcutta : Sanskrit Pustak Bhandar

Scott, Wilbur, 1974. Five Approaches of Literary Criticism. London : Coolier Macmillan Publishers.

Sen Gupta, P., 1960. Women Workers of India. Bombay : Asia Publishing House.

Sen Gupta, Padmini, 1974. The Story of Women of India. New Delhi : Indian Book Company.

Seshamma, N, V., Changing Role & Status of Indian Womanhood, In : N. B. Sen (ed.), Progress of Women Education in Free India. New Delhi : New Book Society of India.

Shastri, Shakuntala Rao, 1953. Women in the Sacred Laws. Bombay : Bharatiya Vidya Bhavan, Champally.

Sheen, F. J., 1952. The World's First Love. New York : MacGraw-Hill Book Company Inc.

Shri Devi, S., 1969. Gandhi and the Emancipation of Indian Women. Hydrabad : Gandhi Sahitya Pracharalayan..

Shridharani, Krishnalal, 1941. My India, My America. New York : Duell, Sloan & Pearce Inc.

Sinha, S. N. and N.K. Bose, 1933. History of Prostitution in India Culcutta :, The Bengal Social Hygenie Association.

Sorokin,, P. 1950. Aetruistic Love : A study of American Good Neighbors and Christian Saints. Boston : Becon Press.

Srinivasa Iyengar, K. R. (ed.), 1973. Indian Literature Since Independence. New Delhi ; Sahitya Academi.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Srinivas, M. N.. 1942. Marriage and Family in Mysore. Bombay : New Book Co.

Srinivas, M.N. 1966. Social Change in Modern India. Berkeley and Los Angeles : University of California Press.

Srivatsa, Chaya, 1975 Understand Your Mother-in-law. In Woman's Era, (June Second).

Stekel, Wilhalm, 1967. Frigidity in Woman in Relation to Her Love Life. New York: Washington Square Press Inc.

Stepens, John, 1972. Seven Approaches to the Novel. London: George G.Harrap & Co. Ltd.

Stewart, Piaxwell S. (ed.), 1956. Problems of Family Life and How to Meet Them. New York: Harper & Brothers Publishers.

Subrahmanian, N., 1980. Historical Research Methodology. Madurai: Ennes Publications.

Swinden, Patrick, 1973. Unofficial Selves. London: The Macmillan Press Ltd.

Tagore, Rabindranath, 1920. The Indian Ideal of Marriage. In: Herman Keyserling (ed.), The Book of Marriage. NewYork: Blue Ribbon Books.

Thomas, P., 1964. Indian Women Through the Ages. Bombay Asia.

Toynbee, Arnold, 1971. Surviving the Future. London: Oxford University Press.

Venkataraman, Radha, 1975. The Much Maligned Mother-in-law. In: Woman's Era. August (First).

Vivekananda, Swami, 1963. Women in India. Madras: Sri Ramakrishna Matt.

Waller, W. and R.Hill, 1951. The Family. New York: Dryden Press.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Warren, Rane & Wellock, 1949. Theory of Literat ure. London Harcourt & Co.

West, Paul,1967. The Modern Novel, Vol.I,II. London: Hutchinson University Library.

Williams, James, 1918. The Principles of Psychology, Vol.I. New York: Dover Publications.

White, Robert W. & Norman F. Watt, 1973 The Abnormal Personality. New York: The Ronald Press Company

Young, Pauline V, 1975 Scientific Social Surveys and Research New Delhi: Prentice-Hall of India Private Limited.

2 இதழ்கள்

Chattopadhyaya, Kamaladevi, 1968. Women in India. Indian and Foreign Review, Aug. 15; 13-16.

Chettur, Usha, 1966. The Indian Girl 1966 - Her Problems of work and marriage. Yojana, Feb 6; 14-15.

Desai, I.P.. 1955. "An Analysis" in symposium on Caste and Family. Sociological Bulletin IV, Sept.; 97-117.

Dvivedi, Kumkum, 1977. The Bachelor Girls. Eve's Weekly: The Working Women — A Special Issue, Oct 8-14.

Hill, Reuben, 1955. A Critique of Contemporary Marriage and Family Research. Social Forces XXIII, 268-277.

Kapadia, K M., 1954. Changing Patterns of Hindu Marriage and Family. Sociological Bulletin, III, March; 61-87.

... ..., 1959. The Family in Transition. Sociological Bulletin, VIII, Sept.; 94.

Nimkoff, M.F., 1959. Some Problems Concerning Research on the Changing Family in India. Sociological Bulletine VIII, Sept.; 32-38.

Ranganayagi, 1958. Can We Prevent Prostitution? Social Welfare, April:

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Rev.Dr.Jose Murickan, S.J.(ed.), 1975. Kerala Sociologist. Trivandrum: Kerala Sociological Society.

Ross, Aileen D., 1955. An Approach in the Symposium on Caste and joint Family. Sociological Bulletin, IV, Sept.; 85-96.

Sengupta, Padmini, 1959. Working Women of India. Yojana, Jan.26; 15.

Stuart, Auerbach, 1980. Dying for a Dowry. Sunday Standard, May 4.

Wallis, Hellen, 1969. The Role of Women in Changing Society Community Development Journal, Jan.; 24-26.

3. அகராதி கலைக்களஞ்சியம் முதலியன

Abram, S.M.H., 1951. A Glossary of Literary Terms, New York : Holt, Renehart and Winston, Inc.

Benton, William (Publisher), 1952. The Major Works of Sigmund Freud. Encyclopedia Britannica, Inc. The University of Chicago.

Benton, William, 1973. Psychology Abnormal - The Mother. Encyclopedia, Britannica, Vol.18. Chicago.

Chamber's Encyclopedia, 1959. London : George Newness Ltd. Vol. II.

Chidambaranathan, A. (ed.)r 1965. English-Tamil Dictionary. University of Madras. (ed.)

Chopra, P. N., 1973. The Gazetteer of India, Vol. II. Ministry of Education and Social welfare.

Cuddon, J. A. 1977. A Dictionary of Literary Terms. New Delhi : Indian Book Company.

Encyclopedia Americana, 1957. New York : American Corporation.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Encyclopedia Britannica, Vol. I, 1952. The University of Chicago.

Encyclopedia of Social Sciences, Vol. XI-XII, 1935. New York - Macmillan and Free Press.

Encyclopedia of Social Work in India, Vol. II, 1968. Publications Divisions India Ltd.

Flower, Roger (Ed.), 1973 A Dictionary of modern Critical Terms. London: Routledge & Kegan Paul Ltd.

Gagnon, John H., 1963. Prostitution. Encyclopedia of Social Sciences, Vol. II. New York: Macmillan and Free Press.

Mead, Margaret, 1959. Women Position in Society. Encyclopedia of Social Sciences, Vol. XV. New York: The Macmillan Company.

Seligman, R. A. & Edwin (eds.), 1959 Encyclopedia of Social Sciences. New York: The Macmillan Company.

Shaw Harry, 1972. Dictionary of Literary Terms. New York: McGraw-Hill Book Company.

Stern, Bernard J., 1959. Women, Position in Society. Encyclopedia of Social Sciences, Vol.XV. New York: The Macmillan Company.

Thomas Walls, William, 1973. Dowry. Encyclopedia Britannica, Vol.I. Chicago: The University of Chicago.

Zaoz, Arthur, 1951. Occupation. Encyclopedia of Social Sciences, Vol.XI-XII. New York: The Macmillan Company.

4. ஆய்வேடுகள் (பதிப்பிக்கப்படாதவை)

கமலா, பெ.நா., 1978. இதழ்ச் சிறுகதைகளில் அலுவல் மகளிர் சிக்கல்கள் - ஒரு திறனாய்வு, மதுரைப் பல்கலைக்கழக எம்.ஃபில். பட்ட ஆய்வேடு. மதுரை: மதுரைப் பல்கலைக்கழகம்.

சிவக்கண்ணன், அ., 1980. மு.வ.நாவல்களில் சமுதாயச் சிக்கல்கள். மதுரை காமராசர் பல்கலைக்கழக பிஎச்.டி.பட்ட ஆய்வேடு. மதுரை: மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

நாவல்கள் அகர நிரல்

அஞ்சன விழிகள். 30, 34, 56, 57, 82, 178, 234.

அரக்கு மாளிகை. 11, 25, 27, 29, 34, 37, 59, 71, 72, 80-82, 84, 87, 103, 116-18, 125, 149, 178, 187-88, 198, 217, 222, 229-30, 258, 267.

அடுத்தவீடு. 11, 24, 34, 41-44, 47, 49, 53, 59, 63, 65 6, 72, 77, 86, 113, 125, 138, 142, 153-4, 165-7, 176, 177, 187-88, 192, 194, 217-9, 224, 226, 229, 240-3, 246-7, 250, 255-6, 260-1, 264, 266-7, 292, 300-1, 324, 329.

ஆழ்கடல் 11, 12, 30, 34, 37-40 46, 107-9, 138, 142,

இரவுச்சுடர் 11, 30, 34, 47-9, 80, 83 87, 118, 126, 137, 142, 147, 150, 179, 184-6, 198-9, 301

உயர்வு உள்ளத்திலே 11, 30, 34, 41-3, 46, 55, 77-8, 95, 126, 134, 138, 142, 147, 187-9, 192, 195-6, 201, 203-4, 217, 220, 228, 230-1, 134, 236-8, 242-6, 248, 264.

உள்ளக் கடல் 11, 30

காஞ்சனையின் கனவு 11, 27-9, 34, 37-43, 73, 112, 125, 127, 131, 136, 142-3, 150, 153-4, 157, 159, 163-4, 188-9, 198-9, 217, 223, 229, 234, 250, 255, 262-3, 266.

சூரியகாந்தம் 11, 27, 34-5, 45, 59, 63-4, 66, 76-7, 80-5, 88-9, 111, 113, 116-8, 125, 140, 148, 150, 187-8, 191-2, 194-8, 201, 203-4, 217-8, 222, 225, 230-1, 234, 250, 255, 258, 266-7.

செந்தாமரை 11, 63, 65, 71, 74, 138, 142-3, 153-4, 169, 188-9, 101-2, 104-5, 134, 250,

சோதனையின் முடிவு, 11, 30, 200-1,

தந்தை வடிவம், 11, 30,34, 53-4, 178, 183, 185-6

தீயினில் தூசு 11, 30, 34, 53, 63, 67, 80-2, 84, 88, 102-3, 126, 136-7, 140, 146, 148, 150, 178, 195-6, 217, 219-20, 227, 255, 259, 265-7.

நாயக்கர் மக்கள் 11, 27, 29, 34-6, 41, 43-4, 56, 63-6, 78-82, 84, 87, 111-12, 116-8, 125, 135, 138, 146, 153-4, 166, 168, 178, 182, 184, 187-8, 190, 198-9, 217, 220, 234, 238-40, 242-5, 247, 264-5, 292.

நீயே என் உலகம் 11, 30, 34, 78-9, 125-6, 128, 135, 145, 150, 188-9, 201, 203-4, 234, 238-9, 242, 245, 264,

பண்ணையார் மகள் 11, 27, 34, 37-9, 44, 63, 67, 113-4, 125, 130, 136, 144, 146, 150, 153-4, 161-4, 179, 190, 217, 229-30, 234, 239-40, 242, 250, 255, 261-4, 266.

பவானி 11, 27, 34, 37-40, 67, 82, 94, 105, 109-10, 125, 132, 145, 148, 150, 153-4, 156-9, 163-4, 178, 184-5, 188-9, 195, 197, 217, 219. 234, 239-41, 250. 261.

பிஞ்சுமுகம் 11, 30, 31, 34, 47-9, 126, 132, 138, 142.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

புன்னகைப் பூங்கொத்து 11, 30, 34, 37-40, 75-7, 106-7, 177, 181, 184-5, 188-9, 191-2, 217, 223,

பெண்மனம் 17, 27, 29, 34, 47-9, 51-2, 63, 67-8, 72, 78, 80-4, 88, 102-3, 109-10, 125, 138, 142, 148, 153-4, 163-7, 178, 187, 200-2, 204-5, 217-8, 220-2, 226-7, 230-1, 265-6, 295,

மகளின் கைகள் 30-1, 34, 41, 46, 178, 182-6, 191, 192

மங்கை 30, 126, 133, 176-7, 255, 262-3, 266, 302,

மரகதம் 11, 27, 34, 77-82, 84, 88, 106, 125, 134, 147-8, 150 153-4, 166, 168, 181, 200.

மனத்துக்கினியவள் 11, 30, 34-5, 45-6, 53-4, 76-7, 109, 138, 142, 179, 191-2, 195-6, 198-9, 217, 219, 222, 225, 234, 250

மாயமான் 11, 27, 34, 63-4, 107-9, 138, 142-3, 187-8, 197, 200-2, 204.

மானிட அம்சம் 11, 30, 34, 47-9, 53-4, 63, 67, 82, 109, 113-4, 178, 182, 184, 191, 197, 217, 221, 227, 255-6, 260-1, 265-7, 302

மிதிலாவிலாஸ் 11, 27-9, 34-5, 45, 53, 63-4, 66, 73, 78-82, 84, 88, 103-4, 109-10, 125, 138, 142, 149, 153-4, 156-8, 160-1, 163-4, 181, 187, 189, 195, 197, 200, 205-6, 234, 250, 261, 265, 295.

ஸ்ரீமதி மைதிலி 11, 27-8, 63-6, 69, 71, 73, 106-7, 138, 142, 187-8, 198, 201, 204-6, 234, 250.

லட்சியவாதி 11, 27, 34, 37-40, 51-2, 55, 64-6, 73, 109, 111, 138, 142-3, 153-4, 163-4, 177, 187-8, 201-4, 234, 239-41, 250, 292

வாழ்த்துவோம் 11, 12, 30, 70-4, 183, 188-9, 191-2, 201-2, 204, 217-8, 220, 226, 299.

விடிவை நோக்கி 11, 30-1, 63, 65, 80, 83, 85, 113-5, 126, 130-1, 144, 150, 261, 301

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

ஆசிரியர் அகர நிரல்

இராஜம் கிருஷ்ணன் 9
கமலா. பெ. ந. 221
கலாராவ் 257
கலாராணி 216, 228
கல்கி 10, 26
குறுந்தொகை 33
சந்திரமூர்த்தி, மா 216
சிலப்பதிகாரம் 201
சீனிவாஸ், எம்.எஸ் 158,201
ஜெயலஷ்மி 29
சேஷம்மா 224
தர்க்கீம் 223
தொல்காப்பியம் 33, 223, 229
நற்றிணை 216
பணிக்கர் 257
பாலசுப்பிரமணியம், சி. 216
புறநானூறு 216, 234, 264
மகாத்மாகாந்தி 236
முத்துச்சண்முகனார் 263
மோகன் இரா. 33-4
ராலின் சின்னையன் 19, 129, 133, 265
வெங்கடராமன், சு. 33-4
ஃபிராய்டு 223

Aileen D. Ross 47-8 63, 69, 73, 75, 93-4, 100, 111, 118, 127-9, 139, 152, 155, 157, 160-1, 165, 171, 175-6, 184-5, 188, 193, 195-8, 200-1, 204-6, 249, 272
Allport Gordon, W 222
Altekar, A.S. 62,215
Andre Deutch 262
Atbinson, R.L. 119
Atkinson, R.C. 119
Bennet Chandrakumar, T. 258
Bertrand Russel 33
Bottomore 174
Chaya Srivatsa 157
Chopra, P.N. 233
David Mandelbaum 64-5, 70-1 127, 187, 195, 205, 236, 272
Francis E. Merrill 270, 273, 280
Gandhi, M.K. 233, 236
Gokhale, B.G. 251
Gore, M.S. 62, 75, 100, 155, 157, 236, 272
Goeffrey 255
Harris, C.C. 174
Helene Deutsch 124-5, 137, 141

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

Jayakar, R.B.K. 255

Kalarani 216-7, 227-8

Kapadia 61

Krishnalal Sridharni 125

Levy 200

Lewis A Coser 223

Madan, G R. 254-7, 261-2, 264-5, 272

O, Malley, L.S.S. 234, 247

Mansingh Das 50

Maren Elwood 193

Margaret Carmock 51, 101, 104, 124-5, 153, 155, 176, 181, 272

Margaret mead 215

Mariasusai Dhavamani 32-3

Marilyn Fernandez 93-4

Merton, R.K. 224, 270, 273

Norman F. watt 222

Panikar and Kamala Rao 255, 257, 262, 267

Promilla Kapur 62, 100-1, 217, 221, 225-6, 272

Radha Venkataraman 153, 155

Ramu G.N. 236

Robert W. White 222

Seshamma 224

Simon De Beavoir 216

Sorokin, P. 32, 44

Srinivas M.N. 158, 201, 263

Tara Ali Baig 233

Theodore R. Sarbin 100, 224

Vina Mazumdar 216

Wilbur Scott 280, 286

William Thomas walls 69

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பொருள் அகர நிரல்

அகப்போராட்டம் 108, 129

அறியாமை 257, 259-60, 268

ஆசிரியர் கருத்தாய்வு 10

ஆடவனின் மறுமணம் 94, 113

இணை விழைவு எழுச்சி 255, 262, 265

இருமனக் காதல் 32, 34, 57, 59

இயல்பு பண்பு அற்றவர் 243, 279

இயல்பான பண்பு 242

இயல்புக்காதல் 32, 35, 52, 59

இலக்கியத்தாக்கம் 280

ஈர்ப்பு 91, 99

உடமைப்பண்பு 152

உடற்காதல் 33

உடற்கூற்று நிபுணர் 75

உயர்காதல் 32, 35, 52, 55, 57-9

உயிர்க்காதல் 33

விறஉனரிடையே தோன்றும் இயல்புக்காதல் 35

உறவு இல்லாதவரிடையே தோன்றும் இயல்புக்காதல் 35, 37

உளப்போராட்டம் 135

உளவியல் 107, 121, 124, 129, 133, 137, 140, 142, 171, 183, 265

உளவியலார் 119, 124, 129, 133, 141, 183, 222

ஒப்பாய்வு 10

ஒருதலைக் கண்ணோட்டம் 77, 78

ஒருமனக்காதல் 32, 34, 55, 57-9

ஓரினக்காதல் 37

கட்டமைப்பு 142-9, 180

கடமைக்கூறு மோதல் 215, 223-4

கட்டாயத் திருமணம் 67

கடமைக்கூறு இடைமோதல் 224-5

கடமைக்கூறு உள்மோதல் 224

கலப்புக்காதல் 32, 37, 47, 49, 52, 60

கலப்புத் திருமணம் 61, 93-4, 99, 133, 165, 167, 169, 170, 172, 191, 298-99

களஆய்வு 39, 50, 54, 65, 70, 73, 77, 86, 93, 160, 185, 196, 201-2, 206, 228, 247

காதல் திருமணம் 62, 93, 98, 227, 300

காமக்கிழத்தி 247

காமத்தரகர் 256

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

குழந்தை வளர்ப்பு 82-3, 85-6. 91, 98, 178, 251, 253, 300

கூட்டுக் குடும்பம் 36, 104, 152, 154-5, 157,160, 162, 164-5, 169-72, 174, 184, 190, 199, 200 204-6, 212.

கைம்மை நோன்பு 233

கொள்கைகள் 280

சமுதாயத்தாக்கம் 280

சமுதாயமதிப்பு 259

சமூகஆவணங்கள் 280, 286

சிறுபிள்ளைக் காதல் 33

செம்பாகம் 170, 186

செம்பாதிக் கடமைக்கூறுநிலை 224

செவிலித்தாய் 140, 141

தடைபட்டு நிறைவேறும்

காதல் 37, 41

தடையின்றி நிறைவேறும்

காதல் 37

தந்தை மகள் காதல் 183

தற்காதல் 125

தன்முனைப்பு 105-7, 120, 122

தன்னல நோக்கங்கள் 257, 264

தன்னொருப்பு மனநிலை 125

தனிக்குடும்பம் 36, 104, 152, 154–5, 165. 167-73, 184, 197, 200, 204, 206, 212

திசைமாற்றம் 233, 241-43, 253, 279

திருமணச்சந்தை 72, 76

தீப்பாய்தல் 234

தீராச்சிக்கல்கள் 100-1, 112, 123

தீர்ந்துவிடும் சிக்கல் 100-1, 120, 122-23

தொழில் வளர்ச்சி 255

தேவை 90, 99, 103, 223, 243

நகரப்பண்பாக்கம் 255

நிறைவேறாக் காதல் 32, 35-7 43, 46-7, 51, 58

நிறைவேறும் காதல் 32, 35-7, 47, 57-8

நிறைவேறாத் திருமணம் 64, 68

நிறைவேறும் திருமணம் 64

நோவில்லாச் சாக்காடு 133

பாதுகாப்பு இல்லங்கள் 280

பாலுறவு 33, 115, 118-9, 121, 123-4, 136-7, 147, 151, 171, 183, 257, 265

பிறந்த வீட்டார் உறவு 174, 175

புகுந்த வீட்டார் உறவு 174, 175, 199

பெண் துறவு 234

பெண்ணின் மறுமணம் 95, 134

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

பெண்தரகர்கள் 256

பெற்றதாய் 124, 126

பொருளாதாரம் 64-67, 98, 113, 125, 176-7 218, 223, 226, 229-30, 232, 256, 258

பொருள்முதல் 255

பொழுதுபோக்கு இலக்கியம் 271-2

போலிக்காதல் 44-6, 58, 60

மகளுக்குத் தந்தை மீது ஏற்படும் காதல் 291, 298

மகனுக்குத் தாய் மீது ஏற்படும் காதல் 292

மணமக்களின் இசைவு பெற்ற திருமணம் 64

மணமக்களின் இசைவு பெறாத திருமணம் 67-8, 109, 120

மணவிலக்கு 236

மரபுத்திருமணம் 61, 63, 96-9

மரபு மீறிய திருமணம் 61, 63, 92, 94 96-9

மனமுதிர்வுக் குறை 257, 264

மறுமணம் 61, 63, 80-96. 98-9, 134, 147, 151, 178, 199, 203, 233-49, 251-3, 266, 259

மனுநீதி 234

மாற்றாந்தாய் 68. 88, 94, 99, 124, 126, 141-3, 149-50, 169-70,

முதல் திருமணம் 61, 63, 93

முழுமைக் கடமைக் கூறுநிலை 224

முழுமைக்காதல் 33

மேல்நிலையாக்கம் 134,263,266,
யதார்த்தம் 280

வரதட்சிணை 64-5, 68-74, 80, 84, 98, 176, 183

வளர்ப்புத்தாய் 124, 126, 140-1, 148. 151.

வயது ஏற்றத்தாழ்வு மிக்க காதல் 33

விதவை 83-4, 136, 147, 161, 179, 187, 190, 196-7, 203, 233-53, 263-4, 269

விதவைக் காதல் 44, 58, 60

விதவை மறுமணம் 41-2, 78 93-4, 190, 232, 236-8, 243, 245-8, 251, 253, 263

விதவை மறுமணச் சட்டம் 235, 263, 298

விதி இலக்கியம் 271

விதிமீறல் சூழல் 223

விதிமுறைச் சமூகவியலறிஞர்
விலைமகளிர் விடுதி 254-6, 260-1, 267-8

விளக்கமுறை இலக்கியம் 271

விளக்கமுறைச் சமூகவியலறிஞர் 271-2

வேறு இனக்காதல் 32, 48, 60,

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

கலைச்சொற்கள்

அகப்போராட்டம்	—	Internal conflict
அறியாமை	—	Ignorance
இணைவிழைவு எழுச்சி	—	Sex urge
இயல்பான பண்பு	—	Normal
இயல்புப்பண்பு அற்றவர்	—	Abnormal
ஈர்ப்புச் சக்தி	—	Attraction
உடல்நல வாழ்வுச்சேவை	—	Health Service
உடமைப் பண்பு	—	Possessive Nature
உரிமைகள்	—	Rights
உரிமையற்ற மனைவி	—	Illegal wife
உத்தி	—	Technique
எதிர்பார்ப்புக்கள்	—	Expectations
எதிர்ப்பாலார்	—	Opposite sex
ஒருமை	—	Oneness
ஒருதலைக் கண்ணோட்டம்	—	Partiality
கணவனையுடைய தாய்	—	Wife-mother
கணவன்-மனைவி உரிமை	—	Conjugal right
கட்டமைப்பு	—	Structure
கடமைகள்	—	Duties
கடமைக்கூறு மோதல்	—	Role conflict
கடமைக்கூறு இடைமோதல்	—	Inter role conflict
கடமைக்கூறு உள்மோதல்	—	Intra role conflict
கட்டுப்பாடற்ற பாலுணர்வில் விருப்பம்	—	Inordinate sex desire
கற்புநெறி தவறிய பெண்மையைத் தாழ்வாகக் கருதும் சமுதாயநிலை	—	Social values against unchastity
காதல் மயக்கம்	—	Infatuation
காமக்கிழத்தி	—	Concubine
காமத்தரகர்	—	Pimp
குழந்தைத் திருமணம்	—	Child marriage
கூட்டுக்குடும்பஅமைப்புமுறை	—	Joint family system
கூட்டுக் குடும்பம்	—	Joint family
கொள்கைகள்	—	Theories

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

சலுகைகள்	—	Privilege
செம்பாதிக் கடமைக் கூறுநிலை	—	Quasi role
செயல்முறை இலக்கியம்	—	Applied literature
செயல்முறைச் சமூகவியல் அறிஞர்	—	Applied sociologist
தந்தை-மகள் காதல்	—	Electra complex
தற்காதல்	—	Narcissism
தன்னொறுப்பு மனநிலை	—	Masochism
தன்னல நோக்கங்கள்	—	Vested interests
தனிக்குடும்பம்	—	Nuclear family
திசைமாற்றம்	—	Diversion
தேவதாசி அமைப்பு	—	Devadasi System
தேவை	—	Necessity
தொழிற்புரட்சி	—	Industrial Revoluation
நோவில்லாச் சாக்காடு	—	Ethnasia
பருவகாலம்	—	Adolescence
பாதுகாப்பு இல்லங்கள்	—	Rescue homes
பாதுகாப்புத் தடைவழி	—	Safety valve
பாலுணர்ச்சி உந்துதல்	—	Libido
புதிய அனுபவங்களில் ஆசை	—	Desire for new experiments
பூப்பு எய்தும் பருவம்	—	Puberty
பெண்தரகர்கள்	—	Procurers
பொருளாதார நிலை	—	Economic factor
பொருள் முதல்	—	Capital
பொழுதுபோக்கு இலக்கியம்	—	Entertaining Literature
மகிழ்ச்சியற்ற மணவாழ்க்கை உறவுகள்	—	Unhappy marital relations
மணவிலக்கு	—	Divorce
மனமுதிர்வுக் குறை	—	Mental deficiency
மனைவியைப் பிரிந்த ஆடவர்	—	Divorcee
மனைவியை இழந்த ஆடவர்	—	Widower
மாற்றாந்தாய்	—	Step-Mother
மிகுதியான பாதுகாப்பு தரும் தாய்	—	Over protective mother
முரண்பட்ட மூளை நோய்	—	Schizophrenia
முழுமைக் கடமைக்கூறுநிலை	—	Total role

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

மேல்நிலையாக்கம்	—	Sanskritization
வளர்ப்புத்தாய்	—	Adoptive mother
விடுவிப்பு	—	Relief
விதவை மறுமணமறுப்பு	—	Restriction on widow remarriage
விதவை மறுமணச் சட்டம்	—	Hindu widow Remarriage Act
விதிமீறல் சூழல்	—	Anomie
விளக்குமுறை இலக்கியம்	—	Descriptive literature
விளக்குமுறைச் சமூகவியல் அறிஞர்	—	Descriptive sociologist
வினாப்பட்டி	—	Questionnaire
வீட்டுப் பணிப்பெண்	—	Servant-maid
வைப்பு	—	Concubine
விதிஇலக்கியம்	—	Prescriptive Literature

पुस्तकालय
पुस्तकालय
गुरुकुल कांगड़ी विश्वविद्यालय
6745

Forwarded free of cost and with
the compliments of the dept. of
education Govt. of India,
New Delhi.

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

GURUKUL KANGRI LIBRARY
Accession
Class on
Cat on
Tag etc.
Checked
Any Other

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar

Digitized by Arya Samaj Foundation Chennai and eGangotri

இந்நூலாசிரியரைப் பற்றி . . .

குற்றாலம் ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரியில் 23 ஆண்டு காலமாகத் தமிழ்த்துறைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். இக்கால இலக்கிய ஆய்வில் மிகுந்த ஈடுபாடு உடையவர். இலக்கியங்களைப் புதிய கண்ணோட்டத்தில் அணுக வேண்டும் என்ற கொள்கையுடையவர். சமூகவியல், உளவியல் ஆகியவற்றின் துணையுடன்தான் இக்கால இலக்கியங்கள் அணுகப் படவேண்டும் என்பதில் ஆழ்ந்த நம்பிக்கை இவருக்கு இருப்பதால், முதுகலைத் தமிழ் பயிலும் மாணவியருக்கு சமூகவியல், உளவியல் எனும் இரு பாடங்களையும் பாடத்திட்டத்தில் புகுத்தினார். அஞ்சல்வழிக் கல்வியில் முதுகலைப் பட்டமும் (சமூகவியல்) அதற்கெனப் பயின்றார். பல ஆய்வு மாணவியருக்கு வழிகாட்டியாகப் பணியாற்றி வருகின்றார்.

பரணி ○ மதுரை

CC-0. In Public Domain. Gurukul Kangri Collection, Haridwar